T. 2312

உ

செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ சம்பந்த சரணைய சுவாமிகள்

அருளிச்செய்த

கந்தபுராணைச் சுருக்கம்

[அருஞ்சொற்பொருளுடன்]

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகள்

264-வது ஆண்டு நினைவு வெளியீடு

10—6—1952

*

இரண்டாம் பதிப்பு

ஸ்ரீ காசி மடம் : : திருப்பனந்தாள்

1952

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு

உ

செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள்

அருளிச்செய்த

கந்தபுராணச் சுருக்கம்

[அரும்பதவுரையுடன்]

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

அவர்களுடைய ஆணையின் வண்ணம்

ஸ்ரீ காசி மடம் இளவரசு

வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

அவர்களால் வெளியிடப்பெற்றது

கலைமகள் ஆசிரியர்

வித்துவான் கி. வா. ஜகந்நாதன் M. A., அவர்கள்

ஆராய்ச்சியுரையும், குறிப்புரையும்

தணிகைமணி

இராவ்பகதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A., அவர்கள்

ஆராய்ச்சி முன்னுரையும், சிற்சிராய்ச்சியும்

அடங்கியது.

பதிப்பாசிரியர் :

வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்

திருச்சிராப்பள்ளி

நந்தன-வைகாசித் திங்கள் 28-ம் நாள்

உரிமைப்பதிவு] ⁂ [ஜூன் - 1952

1945 - முதற் பதிப்பு
1953 - இரண்டாம் பதிப்பு

உ

சிவமயம்

அருள் பெறும் வழி

—— o ——

"வற்ரு அருள்சேர் குமரேசன்
வண்காதை தன்னைச்
சொற்ருரும் ஆராய்ந் திடுவாரும்
துகளு ருமே
கற்ருருங் கற்பான் முயல்வாரும்
கசிந்து கேட்கல்
உற்ருரும் வீடு நெறிப்பாலின்
உறுவர் அன்றே"

—வள்ளியம்மை திருமணப்படலம்
—கந்தபுராணம்

திருச்சிற்றம்பலம் யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி.

உ

செந்திலாண்டவன் துணை

பதிப்புரை

—o—

"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே"

—கந்தர் அலங்காரம்

"சைவ சமயமே சமயம்" என்ற தாயுமான சுவாமிகள் திருவாக்கின்படி இவ்வுலகத்துச் சமயங்கள் யாவற்றிலும் சைவ சமயமே தலைசிறந்த சமயமாகும். இச்சைவ சமயத்தின் உயரிய பண்புகளை உலகினுக்கு எடுத்துக்காட்டுவன சைவத்திருமுறைகளும் சைவப் புராணங்களுமே யாகும். அப்புராணங்களுள் இறைவனின் முச்சுடர் விழிகளென இப்புவியின்கண்விளங்குவன பெரியபுராணம், திருவிளையாடற் புராணம்,* கந்தபுராணம் என்ற மூன்றுமாம். இவற்றுள், முருகக்கடவுளின் கருணைப் பெருக்கினை உலகினுக்குவாரி வழங்கும் கந்தபுராணத்தின் வழி நூலாக விளங்குவது ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள் அவர்கள் இயற்றியருளிய கந்தபுராணச் சுருக்கம் ஆகும்.

ஸ்ரீ முருகக்கடவுளிடம் வழி வழித் தொண்டு பூணும் அடியவர்கள் பெரிதும் விரும்பிப் போற்றும் நூல்கள், ஸ்ரீ கச்சியப்ப

---

* திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடாக 1950-ல் பெரிய புராணமும், 1951-ல் திருவிளையாடற் புராணமும் வெளிவந்துள்ளன. அன்றியும் சைவத்திருமுறைகள் 12-ம் ஸ்ரீ காசிமடத்து வெளியீடுகளாக வெளிவந்துள்ளன.

சிவாசாரிய சுவாமிகள் அருளிய கந்தபுராணமும், ஸ்ரீ சம்பந்த சரணுலய சுவாமிகள் இயற்றிய கந்தபுராணச் சுருக்கமும், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வழங்கியருளிய குட்டிக் கந்தபுராண மாகிய கந்தர் கலிவெண்பாவும்[1] ஆகும்.

பெருங்கடலாக 10346–பாக்களில் பரந்து கிடக்கும் கந்த புராணத்தின் பருப்பொருளினைச் செவ்வன் ஆடியிற் செறித்து இனிது விளக்குமா போல் 1048-பாக்களால் அமையப் பெற்ற இக்கந்தபுராணச் சுருக்கம் பக்திச் சுவையினைப் புகட்டுவதோடு படிப்பதற்கு எளிதாய், சொல் நயம், பொருள் நயம் பா நயம் பொருந்தி, இலக்கண நுட்பங்களுடன் திகழ்வது; ஆங்காங்கே கந்தபுராண ஆசிரியரின் சொற்பொருள்களைப் பொன்னேபோல் போற்றிச் செல்வது; நாடோறும் பாராயணம் செய்வதற்குரிய முத்தி நூலாக விளங்குவது. இத்தகைய கந்தபுராணச் சுருக்கம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடாக ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகள் 264-ஆம் ஆண்டு தினைவு நாளாகிய இந் நன்னாளில் இரண் டாம் பதிப்பாக வெளிவருகின்றது.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் அருளாட்சி நடாத்தி வரும் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள் நந்திதி தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்க நாளும் வழங்கியருளும் அருட்கொடைகள் அனைத்தையும் உலகம் நன்கு அறியும். இது காறும் சுமார் 17-லட்சம் ரூபாய்களுக்கு மேல் 104—வகையான பேரறங்கள் வழங்கியுள்ளார்கள். "செவ்வேல் ஒருவனது பெருங்காதை உரைப்போர் கேட்போர், முன்னெலாம் புரிந்த வினை அனைத்தும் தீர்த்து முத்திதரும்" என்ற உண்மையை விளக்க ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் இந்நூலினை இரண்டாம் முறையாக வெளியிட ஆணை வழங்கி யருளினார்கள். அவர்களுக்குச் சைவ உலகம் பெரிதும் கடப்பாடு கொண்டுள்ள தாகும்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களுடைய பேரறச் செயல்கள் அனைத்திலும் ஈடுபாடுற்று, அவர்கள் திருவுளக் குறிப்

1 இஃது உரையுடனும் ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புடனும் ஸ்ரீ காசி மடத்து வெளியீடாக வந்துள்ளது.

பின் வழியே ஒழுகி அறம்பல வளர்க்கும் ஸ்ரீ காசிமடத்து இளவரசு-வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இந்நூலினை அன்புடன் வெளியிட்டமைக்குத் தமிழகம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

இப்பதிப்பு 26—5—45-ல் உயர்திரு. வித்துவான் கி. வா. ஜகந்நாதன் எம். ஏ. அவர்களால் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருவுளப்பாங்கின்படி வெளியிடப் பெற்ற முதற் பதிப்பினையே பெரும்பாலும் தழுவி அமைந்துள்ளது; செய்யுட்கள் அனைத்தும் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து படிக்கும் வண்ணம் ஓசைகெடா நிலையில் சந்தி பிரித்துக் குறியீடுகள் இட்டு அமைக்கப் பெற்றுள்ளது. இதனுள், இன்றியமையாச் சிற்சில குறிப்புரைகளும், விளக்கங்களும், உட்கருத்துக்களும், பாடபேதங்களும் ஆங்காங்கே சேர்க்கப்பெற்றுள்ளன; செய்யுள் முதற்குறிப்பகராதி ஒன்றும் நூலாசிரியர் கால ஆராய்ச்சிக் குறிப்பு ஒன்றும் இணைக்கப்பெற்றுள்ளன. சென்னை தணிகைமணி இராவ்பகதூர் திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ., அவர்கள் எழுதிய ஆராய்ச்சி முன்னுரையும், நூலைப் பற்றிய சிற்றுராய்ச்சியும் புதிதாக இடம் பெற்றுள்ளன.

இந்நூல் நல்ல முறையில் அமைவதற்கு உறுதுணையாக இருந்த, இந்நூல் முதற்பதிப்பின் பதிப்பாசிரியரும் குறிப்புரையாசிரியருமாகிய உயர்திரு வித்துவான் கி. வா. ஜகந்நாதன் எம். ஏ., அவர்கட்கும், தமது அரிய கருத்துக்களை அவ்வப்போது உதவி இப் பதிப்பினை அழகுபடுத்திய திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தலைமையாசிரியர் உயர்திரு. வித்துவான் கே. எம். வேங்கடராமையா எம். ஏ., பி. ஓ. எல்., அவர்கட்கும், அச்சுப்பிரதிகளை உடனிருந்து ஒப்பு நோக்கிய எனது நண்பர் திருவாளர் வித்துவான் கோ. இரத்தினம் பிள்ளை அவர்கட்கும், ஆராய்ச்சி முன்னுரையும் சிற்றுராய்ச்சியும் எழுதி வழங்கிய உயர்திரு. தணிகைமணி இராவ்பகதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ., அவர்கட்கும் என் நன்றி என்றும் உரியதாகும்.

சைவமுடன் தமிழ் வளர்க்கும் அருட்பெருங் கடலாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களும், அவர்கள் ஆணைவழி நின்

மெழுகும் இளவரசு ஸ்ரீமத் சுவாமிகள் அவர்களும் அடியேனை ஒரு பொருளாகக் கருதி இச் சிரிய சிவபுண்ணியப் பணியில் ஈடு படுத்தியருளிய பெருங்கருணைப் பெருக்கினைப் பெரிதும் போற்று கின்றேன். அவர்கள் திவ்ய திருவடி மலர்களை அடியவன் என்றும் வந்தித்து வழிபடுகின்றேன்.

வாழ்த்து

"வான்முகில் வழாது பெய்க ; மலிவளஞ் சுரக்க மன்னன் ;
கோன்முறை அறங்கள் ஓங்க ; குறைவிலா(து) உயிர்கள் வாழ்க ;
நான்மறை அறங்கள் ஓங்க ; நற்றவம் வேள்வி மல்க ;
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்"

—கந்தபுராணம்

வரகநகர்
திருச்சிராப்பள்ளி
10—6—1952

இங்ஙனம்

தி. பட்டுச்சாமி ஓதுவார்

முதற் பதிப்பின்

முன்னுரை

—o—

வேதவியாஸரால் அருளிச் செய்யப்பெற்றுச் சூதபுராணி கரால் நைமிசாரணிய முனிவருக்குத் திருவாய் மலர்ந்தருளப் பெற்றனவாகிய **மகா புராணங்கள் பதினெட்டு.** இவற்றுள் அளவினுல் பெரியது **ஸ்காந்தம்**; சற்றேறக்குறைய லக்ஷம் கிரந்தம் உடையது அது. பலவகையான உபாக்கியானங்களும், உபதேசங்களும் நிரம்பிக் கடல்போலப் பரந்திருக்கும் அதன் பெருமை, "எந்தப் பொருளும் கந்தப்புராணத்திலே" என்ற பழமொழியளவிலும் வந்திருக்கிறது. அது சனற்குமார சங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விஷ்ணுசங்கிதை, சங்கரசங்கிதை, சூரசங்கிதை என்ற ஆறு பிரிவுகளை உடையது. இவ்வாறினுள் **சங்கரசங்கிதை** என்பது பன்னிரண்டு கண்டங் களால் ஆகியது. அவற்றுள் முதற் கண்டத்தின் பெயர் **சிவ ரகசிய கண்டம்** என்பது.

சிவரகசியகண்டம் ஏழு காண்டங்கள் அடங்கியது. சம்பவ காண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம் என்னும் முதல் ஆறு காண்டங் களையும் தமிழில் இனிய செய்யுட்களால் **ஸ்ரீ கச்சியப்பசிவா சாரியார்** இயற்றினர். அதுவே **கந்தபுராணம்** என்ற காவிய மாகும். ஏழாவதாகிய உபதேச காண்டத்தைக் கோனேரியப்ப முதலியாரென்னும் புலவர் தனியே தமிழ்ச் செய்யுளுருவத்தில் இயற்றியிருக்கிறார்.

ஸ்ரீ கச்சியப்பசிவாசாரியார் இயற்றிய கந்தபுராணம் சொற் பொருள் நயமும் பக்திச்சுவையும் மிகுந்ததாக இருத்தலின் தமிழ்ப் புலவர்களாலும் முருகன் அடியார்களாலும் சிறப்பாகப் போற்றப்பெற்று வருகின்றது. பலர் அதனைப் பாராயணம் செய்து வருகிறார்கள். அது ஆறு காண்டங்களும் 141– படலங் களும் 10,346 செய்யுட்களும் கொண்டது. முருகக் கடவுளுடைய

திருவவதாரம் முதல் வள்ளியம்மை திருமணம் இறுதியாக அப்பெருமானுடைய இனிய சரித்திரத்தை விரிவாகச் சொல்வது. இடையிடையே பல கிளைக் கதைகளை உடையது.

கந்தபுராணச் சுருக்கமென்பது, அப்புராணத்திலுள்ள வரலாறுகளைச் சுருக்கி 1048 செய்யுட்களில், திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த **ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகளால்** இயற்றப்பெற்றது. கந்தபுராணத்தில் உள்ள விரிவான வருணனைகளையும், சில உபாக்கியானங்களையும் விலக்கிவிட்டு அதில் விரிவாகச் சொல்லப்பெற்ற வரலாறுகளைச் சுருக்கமாக அமைத்துச் செய்யப்பட்ட இந்நூல் முருகக்கடவுள் திவ்விய சரித்திரத்தை விரைவில் தெளிந்து கொள்பவர்களுக்கு உரியதாக விளங்குகின்றது. படலப்பிரிவை விலக்கி ஒவ்வொரு காண்டத்திற்கும் ஒவ்வொரு பிரிவாக வைத்து ஆறு பகுதிகளாக இந்நூல் இயன்றுள்ளது. "தொகுத்தல் வகுத்தல் தொகைவிரி மொழி பெயர்ப்பு" என்ற நான்கு வகையான யாப்புக்களுள் தொகுத்தல் என்னும் வகையைச் சார்ந்தது இது.

இந்நூலின் மூலம் யாழ்ப்பாணத்துநல்லூர் **ஸ்ரீ ஆறுமுக நாவலர்** அவர்களுடைய வித்தியாநுபாலன யந்திரசாலையில் முதல் முதலில் அச்சியற்றப் பெற்று வெளியாகியிருக்கிறது, பிறகு, காஞ்சீபுரம் மகாவித்துவான் **ஸ்ரீ சபாபதி முதலியாரவர்கள்** இயற்றிய பொழிப்புரையும், **திரு. வி. உலகநாத முதலியாரவர்கள்** எழுதிய விருத்தியும் அடங்கிய உரைப்பதிப்பொன்று (1925) வெளியாகியுள்ளது.

சிறந்த செந்தமிழ்ச்சுவை பயின்ற இந்நூலைக் குறிப்புரையுடன் வெளியிடவேண்டுமென்ற தம் திருவுள்ளக் கருத்தைத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர்களாகிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள்** குறிப்பித்தார்கள். அவர்கள் திருவுள்ளக் கருத்தின்படி இந்நூல் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மகேசுவர பூஜைத்தினமாகிய இன்று வெளியாகிறது.

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்** நிறுவிய திருத்தொண்டை வழி வழியே செய்துவரும் பனசைக் காசி மடத்திலிருந்து அத்தருமபுர

ஆதினத்தைச் சார்ந்த மற்றொரு மெய்ஞ்ஞானப் பெரியார் இயற்றிய நூல் வெளிவருதல் இயைபுடைய செய்லேயாகும். இத்தகைய அரிய நூல்களை வெளியிடும் விஷயத்தில் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள்** அவர்கள் காட்டிவரும் ஊக்கம் தமிழ் நாட்டாரால் மிகவும் பாராட்டற்குரியது. சென்ற வருஷம் அவர்களுடைய கட்டளையின்படி உரையுடன் 'அபிராமி அந்தாதி' வெளியானதை அன்பர்கள் அறிவார்கள்.

இந்த நூலைப் பதிப்பித்தற்குரிய அவகாசம் மிகச் சுருங்கியதாக அமைந்தது. காகிதம் பெறுதல், அச்சிடுதல் முதலிய பல துறைகளிலும் இடர்ப்பாடுகள் பல நேரும் இக்காலத்தில் ஸ்ரீ ஷண்முகநாதன் திருவருளால் தான் இது நிறைவேறிய தென்று சொல்லவேண்டும். புத்தகம் இந்த உருவத்தில் வருவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு உபகாரம் செய்த மயிலப்பூர் அல்லயன்ஸ் கம்பெனியார்பால் மிக்க நன்றி பாராட்டுகிறேன். மிகக் குறுகிய காலத்துக்குள் விரைவாகவும் அழகாகவும் இதனை அச்சிட்டுத் தந்த இராயப்பேட்டை, சாது அச்சுக்கூடத்தாரின் உதவியையும் நான் மறவேன்.

காசி மடாலயம் அன்னமும் கல்வியும் வழங்கிப் புகழ்பெற்று விளங்குவது. ஞானமும் புலமையும் ஒருங்கே படைத்த பெரியார்களைத் தலைவர்களாகப் பெறும் பாக்கியம் உடையது. இப்போது மடாலயத் தலைமை தாங்கி விளங்கும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள்** அவர்கள் தமிழ்க் கலாசாலை நிறுவியும், அறிஞரைக் கொண்டு பல பிரசங்கங்களைச் செய்வித்தும், நல்ல நூல்களை வெளியிடுவித்தும் தமிழும் சைவமும் தழைத்தினிதோங்கச் செய்து வருகிறார்கள். அவர்களுடைய பல தருமச் செயல்கள் இப்புத்தகத்தின் இறுதியில் காணலாகும்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் இன்னும் இத்தகைய அருந்தொண்டுகள் பலவற்றைச் செய்துகொண்டு பல்லாண்டு பல்லாண்டு திகழ்ந்து ஓங்கவேண்டுமென்று ஸ்ரீ செந்திலாண்டவன் திருவடிகளைப் பரவுகின்றேன்.

சென்னை
26-5-1945

இங்ஙனம்
கி. வா. ஜகந்நாதன்
கலைமகள் ஆசிரியர்

கந்தபுராணச் சுருக்கம்

ஆராய்ச்சியுரை

—o—

I

இந்த நூலின் ஆசிரியராகிய **ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள்** தம்முடைய இளமையிலேயே சிவபக்தி மிக்கவராய்த் திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தைச் சார்ந்து, ஆண்டுள்ள அடியார்களோடும் துறவியர்களோடும் பழகி வந்தனர். இவருடைய ஒழுக்கத்தையும் பக்திச் சிறப்பையும் உணர்ந்த அவர்கள் அக்காலத்தில் அவ்வாதீனத்தில் ஆரும் பட்டத்தில் ஞானதேசிகராக எழுந்தருளியிருந்த **ஸ்ரீ-ல-ஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக சுவாமிகளின்** கருணைத் திருப்பார்வைக்கு இவரை இலக்காகச் செய்தனர். அக்காலத்தில் இவர் இலக்கண இலக்கியங்களும், சித்தாந்த நூல்களும் ஓதிக் கைவந்தனர். அவ்வாதீனத்தைச் சார்ந்த **ஸ்ரீ வெள்ளியம்பலவாணத் தம்பிரான்** என்ற புலமைப் பெரியார்பால் பாடம் கேட்டார்.

அப்பால் ஞானசிரிய மூர்த்தியாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ திருஞான சம்பந்ததேசிக சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெற்று விரத முனிவராகி நிட்டை புரிந்து ஒழுகினர். தம்முடைய ஞானசிரியரிடம் இணையருத அன்பு பூண்டவர் இவர் என்பதற்கு இவருடைய திருநாமமாகிய '**சம்பந்த சரணாலயர்**' என்பதும் ஒரு சான்று.

இவர் புலமையாலும் ஒழுக்கத்தாலும் ஞானத்தாலும் சிறந்து விளங்கியமையின் இவருடைய புகழ் தமிழ்நாட்டிலும் மைசூர் முதலிய பிரதேசங்களிலும் பரவியது. அவ்வத் தேசத்திலிருந்து தருமபுர ஆதீனத்தில் எழுந்தருளியிருந்த ஞானசிரியரைத் தரிசிக்க வருவாரெல்லாம் இவருடைய பெருமையையும் உணர்ந்து பாராட்டிச் சென்றார்கள். அங்ஙனம் சென்றவர்கள் வாயிலாக இப்பெரியாரின் சிறப்பை உணர்ந்து அக்காலத்தில்

மைசூரை ஆண்டிருந்த மன்னர்பிரான் இவரைத் தரிசித்து இவருடன் பழகவேண்டுமென்னும் அவா நிரம்பியவராஞர். தமிழ் நூல்களில் ஓரளவு அறிவுடையவர் அவ்வரசர். அவர் தம் கருத்தைச் சுவாமிகளுக்குத் தக்கார் வாயிலாக விண்ணப்பித்துக் கொள்ள இவர் தம் ஞாஞசிரியரிடம் விடைபெற்று மைசூருக்கு எழுந்தருளினர்.

சுவாமிகளுடைய துறவுக் கோலத்தில் அரசர் உள்ளம் ஈடுபட்டது. இவருடைய சம்பாஷணையிலும் இயல்புகளிலும் தனிச்சிறப்பைக் கண்டு தெய்வமெனப் போற்றினர். சிலகாலம் தம்முடனே இருக்கவேண்டுமென்று பிரார்த்திக்க அங்ஙனமே சுவாமிகள் அங்கே இருந்தார்.

சுவாமிகள் அவ்வாறு இருந்த காலத்தில் நாளுக்கு நாள் சுவாமிகளின் தவ ஒழுக்கச் சிறப்பும், ஞானசீல நலமும், தமிழ்ப் புலமையும் அரசருக்குப் புலனுயின. தமக்கு என்று ஒன்றும் வேண்டாராகிப் பிக்ஷை எடுத்து உண்ணலையே மேற்கொண்டிருந்த இவருடைய வைராக்கியம் மன்னருக்குப் பெரு வியப்பை உண்டாக்கியது.

அப்பால் அவ்வரசர் முருகக் கடவுளின் திவ்ய சரித்திரத்தை சுவாமிகள்பால் கேட்டார். கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் இயற்றிய கந்தபுராணத்திற் சிலசில பகுதிகளை சுவாமிகள் இடையிடையே எடுத்துச்சொல்லி அப்பெருமான் திருவருள் விளையாடல்களைப் பிரசங்கித்தார். அரசர் மனமுருகி நின்றார். பிறகு, "இந்தப் புராணம் விரிவாக இருக்கிறது. முருகக் கடவுள் சரித்திரத்தைத் தொடர்ச்சியாக இதில் உள்ளபடியே சுருக்கமாகச் சொல்லும் நூல் ஒன்று இருந்தால் எம்போலியருக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். அத்தகைய நூலைத் தேவரீரே இயற்றியருள வேண்டும்" என்று சுவாமிகளை வேண்டிக் கொண்டார். "இதுவும் திருவருட் செயலே" என்று மகிழ்ந்து சுவாமிகள் இக்கந்தபுராணச் சுருக்கத்தைப் பாடி நிறைவுறுத்தினர். அரசருடன் திருச்செந்தூர் அடைந்து செந்திலாண்டவன் சந்நிதியிலே இதனை அரங்கேற்றி வந்தார்.

மைசூர் அரசர் மகிழ்ந்து சுவாமிகளுக்குக் காணிக்கையாகப் பொன்னும் மணியும் வழங்கினர். அவற்றை ஸ்வாமிகள், "இவை குருமூர்த்தியின் திருவடிகளுக்கு ஆகுக!" என்று வைத்தார். அரசர் மீட்டும் ஒருமுறை பொன்னும் மணியும் அளிக்க அவற்றை, "இவை சிவபெருமானுக் காகுக" என்று வைத்தார். அரசர் மூன்றும் முறையும் அங்ஙனமே சமர்ப்பிக் கையில், "இவை அடியார்களுக்கு ஆகுக" என்று வைத்தார். சுவாமிகளின் வைராக்கியச் சிறப்பை உணர்ந்த மன்னர் பெரு வியப்பை அடைந்தனர்.

வேந்தர் சுவாமிகளைச் சிவிகையில் எழுந்தருளச் செய்து நகர்வலஞ் செய்விக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டு இவர் பால் தெரிவித்தார். இப்பெரியார், "குருமூர்த்திகளுடைய திருவுள்ளக் கருத்தறியாமல் இது செய்யோம்" என்று கூறவே அரசர் தம் விருப்பத்தைத் தருமபுர ஆதீனத் தலைவர் அவர்களுக் குத்தெரிவித்து அவர்களுடைய உடம்பாடு பெற்றுப் பிறகு சிறப் பாக இவரை நகர்வலஞ் செய்வித்துக் கண்டு களித்து இன் புற்றார்.

சுவாமிகளால் அரசர் தருமையாதீனத்தின் பெருமையை யும் வரலாற்றையும் அங்கே எழுந்தருளியுள்ள ஞானதேசிக மூர்த்திகளின் சிறப்பையும் உணர்ந்துகொண்டார். "அவ்வா தீனத்தில் உள்ளார் என்ன செய்து கொண்டிருப்பார்கள்" என்று மன்னர் ஒரு முறை கேட்கவே, ஸ்ரீ சம்பந்தசரணாலயர் அதற்கு விடையாகப் பின்வரும் செய்யுளைக் கூறினர்:

"ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி கேள்வியல்லல்
ஓய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ர காசன்மெய்த் தொண்டர்களே."

அரசர், "இத்தகைய பெருமையுடன் விளங்கும் ஆதீனத் தைப் பூலோக கைலாசம் என்றுதான் சொல்லவேண்டும்" என்றெண்ணிப் பல பொருள்களைத் தருமபுரத்தில் எழுந்தருளி யிருந்த குருமூர்த்திகளுக்குப் பாதகாணிக்கையாக விடுத்தார்.

அன்றியும் ஆண்டுதோறும் நல்ல இலக்கணங்களுடைய பசுக்களை அவ்வர்தினத்துக்கு வழங்கி வந்தார்.

சிலகாலம் மைசூரில் இருந்த ஸ்ரீ சம்பந்த சரணாலய ஸ்வாமிகள் பிறகு பல சிவஸ்தலங்களைத் தரிசித்துத் தருமபுரத்தை அடைந்து குருதரிசனம் செய்துகொண்டு வாழ்ந்து வந்தார். தம் ஞானகுரியராகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ திருஞான சம்பந்த தேசிகர் மீது இவர் இயற்றிய சிகாரத்தின மாலை என்ற பிரபந்தம் ஒன்று உண்டு.

II

கந்தபுராணச் சுருக்கத்தால் இவ்வாசிரியருடைய இயல்புகள் சில விளங்குகின்றன. தம்முடைய குருபீடமாகிய திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதினத்தில் இவருக்கு இருந்த பக்தி அளவற்றது. அவ்வாதின முதல்வராகிய குருஞான சம்பந்தருடைய குரு, கமலஞானப்பிரகாசர் என்பவர். 'அடியார்களுடைய மும்மல இருளைப் போக்கும் ஞானமாகிய கிரணங்களையுடைய ஞானபானு அப்பெருமான். அந்த ஞானக் கதிரோனது சந்நிதியில் அன்புடையாருடைய இருதய தாமரைகள் மலர்கின்றன, வீணை குதர்க்க வாதம் செய்பவர்களுடைய புன்மதியாகிய நிலவு மங்கிப் போகின்றது' (பாயிரம்–8) என்று அவருடைய பெருமையை இவர் பாராட்டுகிறார். குருமூர்த்தியை, "கருணை மழை பொழியுமிரு கடைக்கணாளன், பார்புகழும் ஞானசம்பந்த னெந்தை பரமன்" என்று துதிக்கிறார். அவருடைய திருவருளால் தாம் இந்நூலைப் பாடியதாகச் சொல்கிறார். "இவ்வளவு பெரிய நூலைச் சுருக்கிச் சுவை குன்றுமல் சொல்வதற்குரிய தகுதி என்பால் இல்லை. எனக்கும் இக்கதைக்கும் எத்தனையோ தூரம். தனக்கிணதானே யான சம்பந்தன் கமலை வேந்தன், கனக்கவே யென்பாலன் பாற் கருணைவைத்திடுதலாலே, உனற்கருங் காந்தந் தன்னை உரைத்தனன் சுருக்கி" (பாயிரம்–14) என்பது இவருடைய விநயத்தையும் குருபக்தியையும் புலப்படுத்துகிறது. சூரியோதயத்தை வருணிக்கும்போது ஓரிடத்தில், "எங்கள் குருமூர்த்திக்கு முன்னே வந்தவர்களுடைய

ஆணவப் படலம் கெட்டு ஓடுவது போல இருள் அகன்றது" என்று பாடுகின்றார்,

" கந்த மாமலர்ப் பொதும்பர்சூழ் கமலமா நகர்வாழ்
எந்தை ஞானசம் பந்தனே சிகன்றனே எதிர்ந்தார்
பந்த ஆணவப் படலம்விண் டிரிந்திடும் படிபோல்
அந்த ரம்புவி மறைத்தபே ரிருளகன் றதுவே" (யுத்த-64)

இறுதியில்,

" மெத்தும் இன்ப வியாபகம் ஆகிய
முத்தி தந்தனை ஆட்கொண்ட முன்னவன்
பத்தர் மொய்த்தசம் பந்தன் கமலைவாழ்
அத்தன் வாழி " (தக்ஷ-227)

என்று வாழ்த்துகின்றார்.

இந்த நூலுக்கு முதல் நூலாகிய கந்த புராணத்தின்பாலும் அதனை இயற்றிய கச்சியப்ப சிவாசாரியாரிடத்தும் இவருக்குள்ள நன்மதிப்பை, கச்சியப்ப சிவாசாரியாருடைய துதியாக உள்ள செய்யுளால் அறியலாகும். கந்த புராணத்தை, " சலதியமுதினைநிகர் செந்தமிழ் ", " அன்புறு தமிழ் " என்று புகழ்கிறார். கச்சியப்பரை அருட்கொண்டல் என்கிறார்.

இந்த நூலைப் பாடி நிறைவேற்றியபொழுது இப்பெரியார் மிக்க இன்பத்தை அடைந்திருக்கவேண்டும். இதனை, " கந்தப் புராணச் சுருக்கமும் நிறைந்தது களிப்பால் " (தக்ஷ-224) என்ற அடி குறிப்பிக்கின்றது. இந்நூல் செந்திலாண்டவன் திருச்சந்நிதானத்தில் அரங்கேற்றப்பெற்ற தென்பதை,

" சிரு லாவிய செந்தில் நகரிடை
ஏரி னேடரங் கேற்றிய(து) இந்த நூல் " (தக்ஷ-228)

என்பதனால் உணரலாம்.

முருகக் கடவுள்பால் இப்பெரியாருக்கு உள்ள அன்பு இந்த நூலைப் பாடியதனாலேயே விளங்கும். இடையிடையே அப் பெருமானுக்கும் தமக்கும் உள்ள அன்புத் தொடர்பைச் சில வகையான குறிப்புக்களால் இவர் புலப்படுத்துகிறார்.

"தூவடிவேற் குமரேசன் அடிய னேன்புன் சொல்லினுக்கும்
இரங்கியருள் சுரக்கும் பெம்மான்" (பாயி-5)
"நம்மை அளித்திடு கந்தனே". (உற்-63)
"பிணியான தறுத்தெனை ஆளுமருட் பெருமான்" (உற்-95)
"எமை யாளுடைய செவ்வேள்" (உற்-122)
"என்னையா ளுடைய செவ்வேள்" (மகேந்-1)
"எமை யாளுடைய வள்ளல்" (யுத்-304)

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சமணரோடு வாது செய்த செய்தியை ஓரிடத்தில் உவமையாக எடுத்து ஆளுகிறார். ஆகாயத்தில் நட்சத்திரக் கூட்டங்களுக்கிடையே சந்திரன் உதயமான செய்தியை, "மதுரையைப் போன்ற வானத்தில் இருள் நிரம்பிய மேகங்கள் சமணரைப் போலிருக்க, சிவனடியாரைப் போலத் தாரகைக் குலம் விளங்க, அக்கினிபோன்ற செவ் வானத்தினிடையே திருஞானசம்பந்தர் இட்டு வேகாமல் இருந்த ஏட்டைப்போலப் பிறைச்சந்திரன் ஒளிவிட்டது" (யுத்த-186) என்று வருணிக்கின்றார்.

குருலிங்க சங்கம பக்தியிலே தலைசிறந்த ஆசிரியர் சைவ சித்தாந்த நுண்பொருள்களிற் சிலவற்றை ஏற்ற இடங்களிலே புலப்படுத்திச் செல்கிறார்.

பரமசிவம் ஆனந்த மயமாகி எங்கும் வியாபகமுள்ளதாகி எல்லாவற்றிற்கும் மேலான பொருளாய் இருப்ப தென்பதும் (பாயி-2), சிவபெருமானே கருணையினால் ஆசிரியராக ஏழுந் தருள்வாரென்பதும் (பாயி-9), ஆணவமலம் நீங்கப் பெற்றார் இன்புறுவ ரென்பதும் (யுத்த-94), முத்தியாவது இன்ப வியாபகமாக இருப்பதென்பதும் (தக்ஷ-227), சிவாகமத்தால் உணர்த்தப் படுவன பதிபசுபாசம் என்னும் மூன்றும் (உற்-8) என்பதும், சிவபிரானுடைய திருவருளே சக்தி வடிவமாக இருப்பதென்பதும் (பாயி-2,3), அச்சக்தியே ஞான மயமாகி ஐந்தொழிலுக்கும் ஆதாரமாகியுள்ளது என்பதும் (பாயி-3) பிறவும் இவர் உணர்த்தும் சித்தாந்த நூற் செய்திகள்.

பஞ்சாட்சரம், திருநீறு என்பவற்றையும் (தக்ஷ 226), சிவனடியார்களையும் (தக்ஷ-226, 227), சமயாசாரியர்களையும் (பாயி-7) வாழ்த்துகின்றார்.

கதைப் போக்கில் சிவபரத்துவத்தை விளக்கும் பல செய்திகள் இதில் உள்ளன. அவை யெல்லாம் மூல நூலிலும் காணப் படுவன.

ஏற்ற இடங்களில் அரிய நீதிகளை எடுத்துக் காட்டுதல் காவியப் ஆசிரியர்களுடைய மரபு. விதி வலிது என்பதை இவர் பல இடங்களில் பல வகையாகப் புலப்படுத்துகிறார்.

தவத்திற் சிறந்த காசிப முனிவர் மாயையின் உருவத்தைக் கண்டு காமநதியூடே மூழ்கினர். அது விதியின் பயன் என்று கூறுவாராகி ஆசிரியர்,

" முன்னைவினை யாலிடர்செய் காமநதி யூடே
மூழ்கின னியாரெனினும் முன்னைவினை போமோ "
(அசுர-3) என்கிறார்."

பானுகோபன் தேவலோகத்தின்மேல் படையெடுத்து வருகிறான். இந்திரனும் இந்திராணியும் தேவலோகத்தை விட்டுப் போய்விட்டார்கள். அவர்களுடைய இள மைந்தனாகிய சயந்தன், அசுரன் படையெடுத்து வருவதைக் கேட்டுத் துணையின்றி நிற்கும் தன் நிலைமையை நினைந்து வருந்துகிறான். கடைசியில் விதியை எண்ணி அவன் சண்டைக்கு எழுகிறான்.

" தந்தையும் இல்லை பெற்ற தாயிலை குரவ னனை
எந்தையும் இல்லை செய்வ தென்னென இதயத் துன்னி
முந்தையில் விதியை யாரே முடித்திட வல்லார் ஈண்டு
வந்தது வருக வென்னு வானவ ரோடும் போனான் (அசுர-133)

இங்கே ஆசிரியர் விதியின் வலிமையை நன்கு புகுத்தியிருக்கிறார்.

சிங்கமுகன் சூரனுக்கு அறிவுரை கூறுகின்றான். சூரன் கேட்கவில்லை; சினம் கொள்கிறான். அப்போது சிங்கமுகன்,

" சற்றுநம் மொழியுட் கொண்டிலன் அந்தோ
தலையினில் விதியையார் தவிர்த்திட வல்லார் " (மகேந்-103)

என்று விதியின் பெருமையை நினைக்கிறான்.

தக்கனுடைய ஆணைக்கு அடங்கித் தேவர் சிவபிரானைப் புறக்கணித்த செயலுக்கும் விதிதான் காரணமாக நிற்கின்றது.

"என்சொல் கேணிதை என் சொல் கேள்எம(து)
ஈசன் மேன்மை அறிந்துமப்
பொன்செ யஞ்சடை யாணை யெள்ளிய
புல்லர் பட்டது கண்டுநீள்
கொன்செ யுந்துயர் மாய வாழ்வு
குறித்தி தற்கும் இசைந்தனர்
மின்செய் வானவர் ஆத லால்வினை
வெல்ல வல்லவர் இல்லையே!" (தக்ஷ-54)

அைச்சருடைய இயல்பு (மகேந்-87), வீரருடைய இயல்பு (யுத்த-109) முதலியவற்றை அங்கங்கே இப்பெரியார் குறிப்பித்துள்ளார்.

காவியங்களில் விரிவாக உள்ள வருணனைகளை இவர் அமைக்கவில்லை. சுருங்கிய நூலில் அவற்றிற்கு இடம் இல்லையன்றே? ஆயினும் சில இடங்களில் சூரியோதயத்தையும் (யுத்த-1,63,203), சூரியாஸ்தமனத்தையும் (யுத்த-185. தேவ-15), சந்திரோதயத்தையும் (யுத்த-117, 186) அழகாகவும் சுருக்கமாகவும் வருணித்திருக்கிறார்.

சொற்பொருள் அணிகளும் வழியெதுகை முதலிய தொடை நயங்களும் விரவ இந்நூற் செய்யுட்கள் அமைந்திருக்கின்றன.

"கன்னற் சிலேவே டணைவிடுத்து" (உற்ப-49) என்பதில் மன்மதனை என்ற பொருளோடு, இடத்திற்கு ஏற்ப வேடனை என்ற பொருளும் தொனிக்கின்றது. முதிய உருவங்கொண்டு வந்த முருகவேளைக் குறவருக் கரசன், "நீர் விரும்பியது யாது?" என்று கேட்க, அவர்,

"இவ்வரை யிற்குமரி, திதற வாடுற வந்தனம்" (தக்ஷ-191) என்று கூறுகிறார். இக்கூற்றில், 'இம்மலையிலுள்ள அழியாத தீர்த்தத்தில் பாவம் போக நீராட வந்தோம்' என்ற பொரு

ளோடு, 'இங்குள்ள வள்ளியென்னும் கன்னியிடம் துன்பமற அளவளாவ வந்தோம்' என்ற பொருளும் தொனிக்கின்றது. விநாயகக் கடவுளுடைய வணக்கத்தில் (பாயி–4) பல மரங்களின் பெயர்கள் தொனிக்கின்றன.

" பெரியோன் காதை சிறியோமிங் கறிய " (புரா–6)
" சிறுமான் செங்கைப் பெருமான் " (உற்ப–10)
" விலங்கலிடை விலங்காப்புள் விலங்கு மோகம் " (உற்ப-21)
" எண்ணிலா னெண்ணுவான் " (யுத்த–151)
" குன்றுருப்பரங் குன்ற மடைந்தார் " (தேவ–7)
" இடம்பு ரிந்தவள் வலம்புரி யாகி " (தக்ஷ–31)
" பணியான் பதம் பணிந்து " (தக்ஷ–126)

முதலிய பகுதிகளில் முரணணி வந்துள்ளது.

ஒருவரையோ ஒரு பொருளையோ குறிக்கும்போது நேரே குறிக்காமல் ஒன்றனைடு ஒன்று தொடர்புடையவற்றை ஒரு தொடராக்கிக் குறித்த பொருளைப் புலப்படுத்துவது ஒரு வகையான சமற்காரம். வீரவாகுதேவரை,

" பங்கமிலா நீடுலகை மூடு மல்லின்
பகைவனவன் பகைவனவன் பகைவ னுனென் " (பாயி-6)

என்று இவ்வாசிரியர் சமற்காரம்படக் குறிக்கின்றார். வேறோரிடத்தில் அவரையே,

" ஆனைதன் பின்னவன் பின்னவன் " (யுத்த–161)

என்பர். பானுகோபனை,

" மான்மகன் மகன்மகன் மகன் ', (யுத்த–221)

என்பதும் இவ்வகையைச் சார்ந்ததே.

" காற்கமலந் தலைக்கமலம் பொருந்தத் தாங்கிக்
கைக்கமலங் குவித்தருந்துங் கமலந் தீர்வாம் "

என்பதில் கமலம் என்ற சொல்மாத்திரம் நான்கு முறை அடுக்கி வந்தது.

" பூவடியாம் இருபோதும் மூன்று போதும் " (பாயி–5)

என்பதில் போது என்ற சொல் இருமுறை வந்தது. இவை சொற்பின் வருநிலையணி.

பலவகையான மடக்குகள் அமைந்த செய்யுட்கள் பல உண்டு. அவற்றுட் சில வருமாறு.

" தொண்டைவள நாட்டுளது தொண்டைச் செவ்வாய்" (புரா 1)
" இன்னலா னவை நவைகள் " (புரா–7)
" மலர் விதிக்கும் விதிக்கு முறை " (உற்ப–11)
" இப்படியிப் படிவானத் திருந்து " (உற்ப–12)
" இருந்தவரா யிருந்தவர்கள் " (உற்ப–24)
" விடையை யுதவி விடையை யிழிந்து " (உற்ப–49)
" நரசிங்கக் குட்டிதலைக் குட்டி யுதைத்து " (உற்ப–90)
" இல்லை யில்லைநிதி " (அசுர-22)
" எரிமுக னிதுதெரிந் தெரிமுக னுகியே " (யுத்த-155)
" பல்ல வங்களாற் பல்ல வம்புரிந்து " (யுத்த-218)
" கண்டானிது மண்டா றிரு கண்டானுடை வள்ளல்" (யுத்த 320)
" மற்றவ் வேலையில் வேலையில் வேலை " (தேவ-3)
" கந்தரங் கடுத்த கந்தரக் கடவுள் " (தக்ஷ-9)
" பன்னி யன்னவன் பன்னியங் கிருந்தனள் " (தக்ஷ-30)
" மாலை சேர்குழன் மாலை நோக்கினர் மாலை
எய்தினர் மாதவர் " (தக்ஷ-83)

உற்ப-16, 51, 57, 80, 83; மகேந்-48; யுத்த-110, 286, 302; தேவ-9; தக்ஷ-26, 68, 97, 140, 159, 178, 208 முதலிய செய்யுட் களையும் பார்க்க.

உலக வழக்கில் வழங்கும் சிலவற்றை ஆசிரியர் ஆண்டிருக் கிறார். தம்மால் முடிப்பதற்கரிய ஒரு செயலைப்பற்றிப் பேசும் போது, "எனக்கும் இதற்கும் எவ்வளவோ தூரம்" என்று சொல்வது உலக வழக்கு. இதனை,

"எனக்குமிக் கதைக்கும் நாடின்
எத்தனை தூரம் ஆமால்" (பாயி-14)

என்பதில் அமைத்திருக்கிறார். ஏதேனும் ஒன்றிற் பயிற்சி யுடையாரென்பதை, " அவருக்கு அது வரும் " என்று குறிப்பது வழக்கு. இந்நூலில்.

"வருமோ வேதமென, வருமென்ன" (உற்ப-89)

என்பதில் அது வந்துள்ளது. பெருங் கூட்ட மென்பதை " எள் போட்டால் எள் விழாது " என்று சொல்வது வழக்கு.

" எள்ளிடம்புரை வெள்ளிடை யின்றியே
வெய்ய தானவர் சூழ்தர " (மகேந்–33)

என்பதில் இவ்வழக்கை ஆசிரியர் ஆண்டுள்ளார்.

இவருடைய வாக்கில் பல புது வகையான சொற்பிரயோகங்களைக் காணலாம். அதன்பின் என்பதை 'அதுபின்' (புரா–6; உற்ப–91; அசுர-61; மகேந்–16, 45; தக்ஷ–195) என்று பல இடங்களிலும் ஆள்வர். வீழ் என்னும் பொருளில் வீள் (மகேந்-18) என்பதும், வீழ்ந்த என்னும் பொருளில் வீண்ட (யுத்த–105) என்பதும் வந்துள்ளன. குளிர்ச்சியைக் குளிர்மை (உற்ப-163) என்றும், காற்றை மாருதி (யுத்த–300) என்றும், தோழியை நண்பி (தக்ஷ–198) என்றும் சில இடங்களிற் குறிப்பர். துவள் என்பதனடியாகத் துவளம் என்ற தொழிற் பெயரையும் (தேவ-29) கொல் என்பதன் அடியாகக் கோறு (அசுர–140) என்னும் தொழிற் பெயரையும் இவர் அமைத்து வழங்குகிறார். 'உந்து' என்ற சொல்லைப் பல இடங்களில் உயர்ந்த என்னும் பொருளில் உபயோகிக்கிறார். அற்றம், ஆனவர், ஈடு, குயிற்றல், கொன், தற்று, மெத்தும் முதலிய சொற்களை அடிக்கடி இவர் வாக்கில் காணலாம்.

கந்தபுராணத்தில் வரும் சொற்கள் பலவற்றை அப்படியப் படியே அவ்வவ்விடங்களில் இவர் எடுத்தாண்டிருக்கிறார். விரிந்திருக்கும் அப்புராணக் கதையைச் சுருக்கிச் சொல்லும்போது செறிவுடைய சொற்களை வழங்குதல் இன்றியமையாதது. இவ்வாசிரியருடைய செய்யுட்கள் பொருட் செறிவும் இன்னோசையும் உடையன. பல சந்தங்களையும் வழியெதுகை முதலிய தொடை நயங்களையும் உடைமையால் இச்செய்யுட்கள் ஓசை நயத்திற் சிறந்து விளங்குகின்றன. அவசியமில்லாத எதனையும் இந்நூலிற் காணல் அரிது. மூலக் கதைப்போக்கு அம்முறையே அமையும்படி வைத்து, கந்த புராணத்திலுள்ள பதினாயிரம் பாடல்களையும் படித்து உணரத்தக்க பொருளை 1048 பாட்டல்களால் எளிதில் உணரும்படி வைத்த இவ்வாசிரியருடைய நன்முயற்சி தமிழ் பயில்வோருக்குப் பேருபகாரமாக விளங்குவதாகும்.

சென்னை
26—5—1945

இங்ஙனம்
கி. வா. ஜகந்நாதன்
கலைமகள் ஆசிரியர்

திருத்தணிகேசன் துணை

ஆராய்ச்சி முன்னுரை

—o—

கந்த புராணச் சுருக்கத்துக்கு ஓர் ஆராய்ச்சி உரை எழுதுமாறு முருகவேளின் திருவருளில் திளைத்துக் களிக்கும் பெருமான் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கட்டளை யிட்டருளினர்கள்.

'கலக்குண் டாகு புவிதனில்
எனக்குண் டாகு பணிவிடை
கணக்குண் டாதல் திருவுளம் அறியாதோ!'

என்னும் அருணகிரியார் திருவாக்கும் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் அப்பர் திருவாக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் அருட்டிறமும் ஒரு வகையான ஊக்கத்தைத் தர, என்ன செய்வது, எவ்வாறு செய்வது என ஒன்றும் தோன்றுமலே அவர்கள் இட்ட அறப் பணியைச் சிரமேற் கொண்டேன். கந்த புராணச் சுருக்கத்தின் 1945 ஆண்டுப் பதிப்பில் உள்ள ஆராய்ச்சிக்குறிப்பு உரைகளுக்கு மேல் நாம் என்ன எழுத வல்லோம் என்ற அச்சம் ஒரு பால் போராடிற்று. அங்ஙனம் போராடி மயங்கும் பொழுது இறை வன் ஒரு வழி காட்டினர். அருணகிரியார்

"மயுர வாகன தேவா வானோர் பெருமாளே!
உனது காவிய நூலா ராய்வேன்
இடர்படா தருள் வாழ்வே நீயே தரவேணும்"

எனக் கூறி உள்ளாரே; நாம் ஏன் இப்புராணத்தின் சிற் றாராய்ச்சி என்று ஒன்று ஆய்ந்தெழுதலாகாது! என்னும் எண்ணம் தோன்றிற்று. அவ்வெண்ணம், கந்த புராணம்—தக்ஷ காண்டம்—வள்ளியம்மை திருமணப் படலம், 266-ல்,

"வற்ரு அருள்சேர் குமரேசன் வண்காதை தன்னைச்
சொற்ரூரும் ஆராய்ந் தீடுவாரும் துகளுறுமே
கற்ரூருங் கற்பான் முயல்வாருங் கசிந்து கேட்கல்
உற்ரூரும் வீடு நெறிப்பாலின் உறுவ ரன்றே!"

எனவரும் அருமைச் செய்யுளால் பலப்பட்டது.

அங்ஙனம் ஓர் ஆராய்ச்சி எழுதலாமா என்று ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகளைக்கேட்க, அவர்களும் ஆசி தந்து அங்ஙனமே

எழுதலாம் என அருள் கூர்ந்து தெரிவித்தார்கள். இதுவே இந் நூலின் இறுதியில் உள்ள சிற்றுராய்ச்சியின் வரலாறு. இந்நூலில் உள்ள விஷயங்களைத் தேடிக்காண இச் சிற்றுராய்ச்சி மிக்க உதவி தருவதாகும்; கந்த புராணத்தில் உள்ள விஷயங்களைத் தேடி எடுப்பதற்கும் உதவுவதாகும். இந்தச் சிற்றுராய்ச்சியிற் கூறப்படாத ஒரு சில விஷயங்களே இவ்வாராய்ச்சி முன்னுரை கூறுவதாகும். இந்நூலாசிரியரது வரலாற்றை வித்வான் கி. வா. ஜகந்நாதன் M. A., அவர்கள் எழுதி உள்ளாராதலின் இப் புராணத்தின் ஆசிரியரைப் பற்றிப் புராணத்தினின்றே அறியக் கூடிய சிற்சில விஷயமட்டுமே ஈண்டுக் குறிப்பிடுகின்றேன்.

I நூலாசிரியர்: ஸ்ரீ சம்பந்த சரணாலயரது குருபக்தி

இவர் தமது ஞானாசிரியராம் ஸ்ரீ ஞான சம்பந்த தேசிகரிடத்து அளவற்ற பக்தி பூண்டவர்: அவரைச் 'சைவ சிகாமணி' (பாயி-9) என்றும், 'கருணை மழை பொழியுமிரு கடைக்கணாளன், பார் புகழு ஞான சம்பந்தன், எந்தை பரமன் (பாயி-9) என்றும், 'கமலை வேந்தன்' (பாயி-9) என்றும் 'முத்தி தந்து என்னை ஆட்கொண்ட முன்னவன், பத்தர் மொய்த்த சம்பந்தன் (தக்ஷ-227) என்றும், 'தனக்கிணை தானே யான சம்பந்தன் (பாயி-14) என்றும் பலபடப் பாராட்டியுள்ளார். 'சூரியன் உதிக்க இருள் எவ்வாறு அகன்ற தென்றுல் எந்தை ஞான சம்பந்தனை எதிர்ந்தாரது ஆணவ இருள் அகன்று போவது போல' என்று ஓர் அரிய, இனிய, அழகிய உபமானத்தாலும் (யுத்த-64) தமது குருநாதரது பெருமையை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

II நூலாசிரியரது கடவுட் பக்தி

இவர் சிவ பக்தி நிறைந்த செல்வர் என்பது நூலின் ஈற்றிற் கூறியுள்ள வாழ்த்துச் செய்யுளில் (தக்ஷ-226) ஐந்தெழுத்து, திருநீறு, சைவக்குலம் இவை வாழிய எனக் கூறிய வாழ்த்தால் நன்கு புலப்படுகின்றது. 'அடியனேன் புன்சொல்லினுக்கும் இரங்கியருள் சுரக்கும் பெம்மான்' (பாயி-5), 'நம்மை அளித்திடு கந்தன்' (உற்ப-63), 'பிணியான தறுத்தெனை யாளுமருட் பெரு மான்' (உற்ப-95), 'என்னை ஆளுடைய செவ்வேள்' (மகேந்-1) என வருவனவற்றுல் முருகவேளே இவரை ஆட்கொண்ட தெய்வமாகும் என்பது நாம் எளிதில் உணரக் கிடக்கின்றது.

III நூலாசிரியரின் குண விசேடம்

எனது குருநாதன் சம்பந்தன் என்பாற் கருணை வைத்திடு தலாலே, உன்னுதற்கரிதான அருமை வாய்ந்த கந்த புராணத் தைச் சுருக்கி உரைத்தேனே ஒழிய மற்றபடி 'எனக்கும் இக் கதைக்கும் நாடின் எத்தனை தூரமாமால் (பாயி–14) என இவர் கூறும் அருமை அவை அடக்கப் பா அடியால், ஓதி அடங்கிய பெருமான் இவர் என்பது நன்கு விளங்குகின்றது.

IV நூலாசிரியரது கவித்திறம்

கல்வியிற் பெரிய கம்பரே முதலிற் கந்த புராணம் பாட எண்ணினரென்றும், அப்புராணத்தை முன்னரே கச்சியப்பர் பாடியுள்ளார் எனக் கேட்டுக் 'கந்த புராணம் என்னுங் கடலைக் கச்சியப்பர் என்னும் சுருவா கலக்கிற்று' என்று கூறிக், கந்த புராணம் தாம் பாடுவதற் கிலாமையால் இராமாயணத்தைப் பாடினரென்றும் ஆன்றோர் கூறுவர். அத்துணைப் பெருமை வாய்ந்த கந்த புராணத்தைத் தமது பத்தித் திறத்தால், முக்கிய மானபொருள் ஒன்றையும் விடாமலும், சந்தர்ப்பத்துக்கு ஏற்ற விருத்தப்பா நடையிற் பாடல்களை அமைத்தும், கச்சியப்பரது திருவாக்கைப்போல எளிமையும், தூய்மையும், இலக்கண நுட் பங்களும் பிறங்க, உயரிய, அழகிய நடையிற் சுருக்கி இந்நூலை ஆசிரியர் அமைத்துள்ளார். இவ் வமைப்பு நூலாசிரியரது கவித் திறமையையும், அவருக்குத் தமிழ்க் கடவுளின் திருவருள் நிரம்பி யுள்ள பான்மையையும் வெளிப்படுத்துகின்றது. கந்தபுராண ஆசிரியரது சொல்லையும் பொருளையும் எங்ஙனம் இவர் ஆங்காங் குத் தழுவியுள்ளார் என்பது சிற்றுராய்ச்சியில் உள்ள ஒப்புமைப் பகுதியிற் (தலைப்பு-7) காண விளங்கும்.

நூலாசிரியரது பாடல்களின் சொல்லழகும் பொருளழகும் சிற்றுராய்ச்சியில் 'அருமை அடிகள்' என்னுந் தலைப்பிற் (4) கண்டு களிக்கலாகும்.

எடுத்துக்காட்டாக, ஒருதாரணம் காட்டுவோம்: பானு கோபன் மடிந்தான் எனக் கூறவந்தவர் 'மான்மகன் மகன்மகன் மகன் மடிந்திட (யுத்த–221) என்கின்றார். மால்மகன்–பிரமன், பிரமன் மகன்–காசிபர், காசிபர் மகன் சூரன், சூரன் மகன்–பானு கோபன் எனப் பொருள்கண்டு இன்புறுகின்றோம்.

பதினாயிரத்து முந்நூற்று நாற்பத்தாறு செய்யுள்கள் கொண்ட கந்தபுராணத்தை ஏறக்குறைய பத்துக்கு ஒன்றுகக் காண்டந்தோறும் சுருக்கி 1048—பாடல்களில் அடக்கி உள்ள ஆசிரியரது கவித்திறம் சிற்றுராய்ச்சியிற் (தலைப்பு-8) பெறப்படும்.

நூலை நூற்பெயருடன் 'பொங்கு கந்த புராணச் சுருக்கநூல்' (பாயி-1) என மங்கலமாகத் துவக்கி, அங்ஙனமே மங்கலமாக நூற்பெயருடன் 'கந்தப்புராணச் சுருக்கமும் நிறைந்தது களிப்பால்' (தகூ—224) என முடித்த நற்பண்பும் ஆய்ந்து மகிழத் தக்கதாம்.

V நூலால் அறியக்கிடக்கும் பிற விஷயங்கள்

(1) சேய்ஞலூர் (உற்ப—157), திருச்செந்தில் (உற்ப—165), ஏமகூடம் (கதிர்காமம்—யுத்த—3), திருப்பரங்குன்றம் (தேவ-3-4), திருத்தணிகை (தகூ—215) என்னுந் தலங்களில் உள்ள முருக ஞலயங்கள் தேவதச்சனுல் நிருமிக்கப்பட்டன.

(2) சூரசம்மாரத்துக்கு முன்பே பேர் பெற்றிருந்த தலங்க ளெனக் கூறப்பட்டன :— கேதாரம், காசி, ஸ்ரீசைலம், திரு வேங்கடம், காளத்தி, திருவாலங்காடு, காஞ்சி, திருவண்ணுமலை, திருவெண்ணெய்நல்லூர், திருமுதுகுன்றம் (விருத்தாசலம்), தில்லை (சிதம்பரம்), சீகாழி, திருவிடைமருதூர், மயிலாடுதுறை (மாயூரம்), திருப்பறியலூர், திருவாரூர், திருப்பரங்குன்றம், குற்றுலம் (முதலில் திருமால் பதி), திருவெண்காடு, பொதிய மலை, வள்ளிமலை.

(3) காஞ்சியின் பெருமை : 'தடமாட நெடுவீதித் தமிழ் சேர் காஞ்சி', 'இன்னபரி சென்ன எழில் அன்ன மேய இறை யாலும் எவராலும் இயம்ப ஒண்ணு அந்நகரின் வளர்பெருமை சொல்ணு லென்னுல் அடங்குமோ? அடங்காதால்' (புராண—1,2) என்னும் அருமைத் திருவாக்கால் அறியக் கிடக்கின்றது.

(4) நூல் அரங்கேற்றம் : முருகவேள் மகிழவும், பாரி னோர் புகழவும், மகா புனிதம் தங்கும் திருச்செந்திலில் இந்நூல் சிறப்புடன் அரங்கேற்றப்பட்டது என்பதற்கு—

'சீரு லாவிய செந்தி னகரிடை
ஏரி னேடரங் கேற்றிய திந்த நூல்' (தகூ—228)

எனவரும் ஆசிரியர் திருவாக்கே சான்றுகும்.

VI. கந்த புராண பாராயணம்

வடமொழி ஸ்காந்தம் பால் என்னூல், கச்சியப்பர் அருளிய **கந்த புராணம் - தயிர்** : அதினின்றும் கடைந்தெடுக்கப்பட்ட **கந்த புராணச் சுருக்கம் - வெண்ணெய்** ; குமரகுருபரசுவாமிகள் திருவாய் மலர்ந்த கந்தர் கலிவெண்பாவின் பிற்பகுதி அவ்வெண்ணெயினின்றும் காய்ச்சி எடுக்கப்பட்ட நெய் யாகும். **கந்த புராணம்** முருகவேளின் லீலைகளின் முழு உருவப் படம் என்னூல், **கந்த புராணச் சுருக்கம்** ஒரு சிற்றுருவப் படமாகும் ; கந்தர் கலி வெண்பாவின் பிற்பகுதி சின்னஞ்சிறு உருவப் படமாகும். இம்மூன்று நூலும் முருகவேளின் அடியார்களுக்கு இறைவன் அளித்துள்ள பெரு நிதிகளாகும்.

ஆண்டுக் கொருமுறை கந்த புராணத்தையும், திங்களுக்கு (மாதத்துக்கு) ஒரு முறை கந்த புராணச் சுருக்கத்தையும், நாள் தோறும் கந்தர் கலி வெண்பாவையும் பாராயணஞ் செய்து முடிக்க இயலுமாதலின், அங்ஙனம் ஒரு அநுட்டானத்தை முருகவேளின் உண்மை அடியார்கள் மேற்கொள்வார்களாயின் அதன் பயன் யாவரே உரைக்க வல்லார் ?

'செவ்வேல் ஒருவனது பெருங்காதை உரைப்போர், கேட்போர் முன்னெலாம் புரிந்த வினை யனைத்தும் தீர்த்து முத்தி தரும்' (புராண–7)–எனவரும் ஆசிரியரின் கூற்றின் உண்மையை விளக்கச் சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டி இறைவன் இவ்வுலகுக்கு அனுப்பியுள்ள நம்பியாவார்–திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர்–ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள். அவர்கள் இந்நூலை இரண்டாம் முறை அச்சேற்றி உலகுக்கு அளிக்கும் கருணைத் திறத்தை யாரே எடுத்துரைக்க வல்லேன் ! அவரது அருட்டிறத்தை அவரது திருநாமமாகிய "அருள்நந்தி" என்பதே நன்கு விளக்குகின்றது. 'அருணந்தி' என்னும் அருமைச் சொற்றொடர் இக் கந்த புராணச் சுருக்கத்திலும் இரண்டு இடங்களில் பிரயோகிக்கப்பட்டுள. அவையும் கண்டு மகிழத் தக்கன:—

(1) "துப்பார் அருணந்தி தடுத்துவிடத்
தோகைக்கொரு பாகனை அன்பொடுகண்டு" உற்ப–97

(2) "அன்பாக வேகாண வில்லாது பன்னுள்
அருணந்தி தலைவாச லதின்மேவு நாளில்" அசுர–111

இதனினின்றும், கயிலையில் இறைவனது திருவருளைப்பெறத் தேவர்கள் அருணந்தியின் தலைவாசலிற் காத்திருந்ததுபோல, ஈண்டு நமது பனசை–அருணந்தி தலைவாசலில் நாம் காத்திருந்து அவர் அநுக்கிரகம் கிடைக்கப்பெறுவோமாயின் இறைவனது திருவருளைப் பெறலாகும் என்னும் குறிப்பும் நமக்குக் கிடைக்கின்றது. "சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனி எதிர் காலத்தின் சிறப்பும்"—அருணந்தி யெம்பெருமான் திருப்பனசையில் எழுந்தருளப்பெற்ற பேறதனால்–எற்றைக்கும் திருவருளுடையோம்–என நாம் அருணந்தி சுவாமிகளின் ஆட்சியையும் அறப்பணிகளையும் வியந்து, அவரது ஆட்சி பல்லாண்டு வாழ்க என வாழ்த்தித் திருத்தணிகை எம்பெருமான் திருவருள் அங்ஙனே கூடவேண்டி அவரது திருவடிக் கமலங்களைப் போற்றுவோமாக!

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகளுடைய பேரறச்செயல்களில் உளமுவந்து ஈடுபட்டு அவர்களது திருக்குறிப்பின் வழியே நின்று பல அறப்பணிகளுக்கும் உற்ற துணையாய் நின்றொழுகும் தவச்சீலர் ஸ்ரீ காசிமடத்து இளவரசு — வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கும் தமிழ் உலகு மிக்க கடமைப்பட்டதாகும்.

1. இப்பாரி லுள்ளார் இடரொழிந் தின்பமுறத்
துப்பார் அருணந்தித் தூயவனை—மைப்பாவு
கண்ணிலகு வள்ளி கணவர் அனுப்பியுள்ளார்
எண்ணிலிதற் கையமிலை யே.

2. துப்பார் அருணந்தி தோன்றிலரேல் ஆய்வுமிகும்
இப்பாரில் சைவம் எழுவதெங்கே?—மெய்ப்பார்ந்த
சத்தாந் தமிழ்தான் தழைத்தலெங்கே? சைவநெறிச்
சித்தாந்தத் தேர்ச்சியெங்கே? செப்பு.

3. வாழி தமிழ்நாடு வாழி தமிழ்நூல்கள்
வாழிநற் சைவ மடங்களெலாம்—வாழி
அறப்பணிக ளேசெய் அருணந்திச் சாமி
குறப்பெண்ணின் கொண்கனருள் கொண்டு.

292, லிங்க செட்டி தெரு
சென்னை
9—5—1952

இங்ஙனம்
தணிகை மணி
வ. சு. செங்கல்வராய பிள்ளை

ஸ்ரீ சம்பந்த சரணலய சுவாமிகள்

—o—

[வித்துவான், தி. பட்டுச்சாமி ஓதுவார்]

ஸ்ரீ சம்பந்த சரணலய சுவாமிகள் தென்பாண்டி நாட்டின் கண்ணே பரம்பரைச் சுத்த சைவ வேளாளர் மரபில் தோன்றிய வர் ஆவர்.

இந்நூல்-பாயிரம்-விநாயகக் கடவுள் வணக்கத்துள், முன் னொருகாலத்துத் திருநெல்வேலியில் ஒரு சோகியிடத்து மூங்கிற் புதரில் சிவபெருமான் தோன்றினர் என்ற வரலாற்றை உள் ளடக்கி, "கா வேயில் முன்னுதித்த அரசு" என்று குறிப்பதால் இவர் முன்னர் நாட்டுப் பற்றைக் குறிப்பாகக் காட்டுகின்றார் ஆகவே, ஸ்ரீ சம்பந்த சரணலய சுவாமிகள் பிறந்த ஊர் திருநெல் வேலிப் பதியாகலாம் என ஒரு சிலர் ஊகிக்கின்றனர்.

இவர், திருநெல்வேலி சிந்துபூந்துறையில் தருமையாதீன மடாலயத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வெள்ளி யம்பல வாணத் தம்பிரான் சுவாமிகள்[1] அவர்களிடம் வடமொழி, தென் மொழி, ஆகிய இருமொழிகளையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவர்; திருக் கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்து ஆறுவது பட்டத்தில் வீற்றிருந்தருளிய ஸ்ரீ-ல-ஸ்ரீ திருஞான சம்பந்த தேசிக பரமாசார்ய சுவாமிகள் அவர்களிடம் சைவ சந்நியாசமும் ஞானோபதேசமும் பெற்று, அவர்பால் நீங்காத அன்பு பூண்டு ஒழுகி அதனால், சம்பந்த சரணலயர் என்ற பெயரையும் பெற்றவர். இவரது இயற் பெயர் நாளடைவில் மறைந்து சிறப்புப்பெயரே வழங்கலாயிற்று.

---

1. இவர்கள் திருவாருரில் தோன்றியவர்கள்; ஸ்ரீ ஆதிகுமர குருபர சுவாமிகளிடம் வடமொழி தென்மொழிகளைப் பயின்றவர்கள்; தருமையாதீனத்து 5-வது குருமூர்த்தியாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ ஞான சம்பந்த தேசிகரிடம் சைவ சந்நியாசமும் ஞானோபதேசமும் பெற்றவர்கள்; முத்தி நிச்சயப்பேருரை கண்டவர்கள்.

மைசூர் மன்னர் 'பெட்ட தசாமராஜ உடையார் II' என்பவர் சுவாமிகள் அவர்களைப்பார்த்து, "இவர் ஒரு அண்டங் காக்கையோ" என நகைத்துக் கூறவும், சுவாமிகள் அதனை வெகு சாதுரியமாக மறுத்து, "அது நான் அல்ல ; நீவீரே யாவீர்" (அண்டம்—உலகத்தை; காக்கை—காவல் புரிபவர்) எனப்புகன்றார் என வரலாறு ஒன்று கூறுவதனால், சுவாமிகள் கரிய நிறமும் கம்பீரத் தோற்றமும் நுண்ணறிவும் பெற்று விளங்கியவர் என அறியலாம்.

சுவாமிகளது கல்வி, அறிவு, ஒழுக்கம் தவநிலை இவற்றுள் ஈடுபட்ட மைசூர் மன்னர் சுவாமிகள்பால் பெரிதும் அன்பு பூண்டு தன் சமஸ்தானத்தில் பலகாலம் வைத்திருந்து பெருமதிப்புச் செய்து போற்றினர்.

சுவாமிகள் முற்றும் துறந்த முனிபுங்கவர் ஆதலால், எப்போதும் மாதுகரி பிட்சை* எடுத்தே உண்பார்; தமக்கென ஒரு பற்றுமின்றித் திகழ்ந்தவர்.

சுவாமிகள் காலம்

ஸ்ரீ வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளிடம் ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகளும், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும் கல்வி பயின்றனர் என்றும், தருமையாதீனத்து ஆறுவது பட்டம் ஸ்ரீ-ல-ஸ்ரீ திருஞான சம்பந்த தேசிகரிடம் ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகளும், நெல்லிப்பதி அறச்சாலை மடத்துத் தமிழாகர முனிவரும் ஞானோபதேசம் பெற்றனர் என்றும் வரலாற்றால் அறியக் கிடக்கின்றன.

சிவப்பிரகாச சுவாமிகள் **பிரபுலிங்க லீலை** என்னும் நூலை கி. பி. 1652-ல் இயற்றினர் என்பதும், தமிழாகர முனிவர் **பிராயச் சித்த சமுச்சயம்** என்னும் நூலை, கொல்லம் ஆண்டு 808 (கி. பி. 1633) ஆங்கீரச மாசி பௌர்ணமி அன்று இயற்றினர் என்பதும் அவ்வந் நூல்களினின்றும் தெரியவருகின்றன.

ஆகவே, ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள் காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி ஆகும்.

---

* இது சைவ சந்நியாசிகளுக்குரிய பிட்சைகளுள் ஒன்று; பிறரை வாதியாமல் பலரிடம் சிறுகச் சிறுக அன்னம் வாங்கிப் புசிப்பது.

செந்திலாண்டவன் துணை

உள்ளுறை

—o—

	நூலின் உட்பிரிவு		பக்கம்
1.	பாயிரம்	...	1
	விநாயகர் காப்பு	...	,,
	கடவுள் வணக்கம்	...	,,
	நூல் வந்த வழி	...	6
	அவையடக்கம்	...	,,
2.	புராண வரலாறு	...	8
3.	உற்பத்தி காண்டம்	...	16
4.	அசுர காண்டம்	...	64
5.	மகேந்திர காண்டம்	...	114
6.	யுத்த காண்டம்	...	141
	முதனாட் பானுகோபன் யுத்தம்	...	,,
	இரண்டாநாட் சூரபன்மன் யுத்தம்	...	155
	மூன்றுநாள் பகல் பானுகோபன் யுத்தம்	...	173
	மூன்றுநாள் இரவு இரணியன் யுத்தம்	...	180
	நாலாநாள் பகல் அக்கினிமுகாசுரன் வதை	...	185
	மூவாயிரம் பிள்ளைகள் வதை	...	191
	நாலாநாள் இரவு தருமகோபன் வதை	...	195
	ஐந்தாநாள் பானுகோபன் வதை	...	198
	ஆறுநாள் சிங்கமுகாசுரன் வதை	...	206
	ஏழாநாள் முதல் பத்தாநாள் வரை சூரபன்மன் வதை	...	226
7.	தேவ காண்டம்	...	241
8.	தக்ஷ காண்டம்	...	253
	சிற்றுரையாய்ச்சி	...	325
	செய்யுள் முதற்குறிப்பகராதி	...	361

செந்திலாண்டவன் துணை

முருகக் கடவுள் துதி

—o—

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்;
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே. 1

முருகனே! செந்தி முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே!—ஒருகைமுகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். 2

—பதினோராந் திருமுறை.

மூவிரு முகங்கள் போற்றி;
முகம்பொழி கருணை போற்றி;
ஏவருந் துதிக்க நின்ற
இராறுதோள் போற்றி; காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி; அன்னன்
சேவலும் மயிலும் போற்றி;
திருக்கைவேல் போற்றி போற்றி. 3

புன்னெறி அதனிற் செல்லும்
போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து
நவையறு காட்சி நல்கி
என்னையும் அடிய னாக்கி
இருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல்!
பாதபங் கயங்கள் போற்றி. 4

நண்ணினர்க் கினியாய் ஓலம்! ஞானநா யகனே ஓலம்!
பண்ணவர்க் கிறையே ஓலம்! பரஞ்சுடர் முதலே ஓலம்!
எண்ணுதற் கரியாய் ஓலம்! யாவரையும் படைத்தாய் ஓலம்!
கண்ணுதற் பெருமான் நல்கு கடவுளே ஓலம் ஓலம்! 5

தேவர்கள் தேவே ஓலம்! சிறந்தசிற் பரனே ஓலம்!
மேவலர்க் கிடியே ஓலம்! வேற்படை விமலா ஓலம்!
பாவலர்க் கெளியாய் ஓலம்! பன்னிரு புயத்தாய் ஓலம்!
மூவரு மாகி நின்ற மூர்த்தியே ஓலம் ஓலம்! 6

—கந்த புராணம்.

பன்னிரு கரத்தாய்! போற்றி;
பசும்பொன்மா மயிலாய்! போற்றி;
முன்னிய கருணை ஆறு
முகப்பரம் பொருளே! போற்றி;
கன்னியர் இருவர் நீங்காக்
கருணைவா ரிதியே! போற்றி;
என்னிரு கண்ணே! கண்ணுள்
இருக்குமா மணியே! போற்றி. 7

—திருச்செந்தூர்ப் புராணம்.

பேரா தரிக்கும் அடியவர்தம்
பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும்பிள்ளாப்
பெருமான் என்னும் பேராளா!
சேரா நிருதர் குலகலகா!
சேவற் கொடியாய்! திருச்செந்தூர்த்
தேவா! தேவர் சிறைமீட்ட
செல்வா! என்(று)உன் திருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடன்அப்
பா!வா வாஎன்(று) உணப்போற்றப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாரா(து) இருக்க வழக்குண்டோ?
வடிவேல் முருகா! வருகவே!
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா! வருகவே. 8

—திருச்செந்தூர்ப்பிள்ளைத் தமிழ்.

உ

செந்திலாண்டவன் துணை

வாழ்த்து

—o—

"ஆறிரு தடந்தோள் வாழ்க ;
அறுமுகம் வாழ்க ; வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க ;
குக்குடம் வாழ்க ; செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க ;
யானைதன் அணங்கு வாழ்க ;
மாறிலா வள்ளி வாழ்க ;
வாழ்கசீர் அடியார் எல்லாம்"

— கந்தபுராணம்

———

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

கந்தபுராணச் சுருக்கம்

பாயிரம்

விநாயகர் காப்பு

(கலிவிருத்தம்)

பொங்கு கந்த புராணச் சுருக்கநூல்
இங்கி சைத்திட இன்பொடு முற்றுவான்
மங்கை பாலகன் மாதங்க மாமுகப்
புங்க வன்துணைப் பொற்பதம் போற்றுவாம். 1

கடவுள் வணக்கம்

சிவபெருமான்

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

சீர்கொண்ட ஆனந்த மாகி யெங்கும்
செறிவாகிப் பரமாகித் திரம தாகி
ஏர்கொண்ட கருணைதிரு வுருவ மாகி
எழில்கொண்ட மலைமகளோ யிடத்திற் கொண்டோன்

---

1. பொங்கு - புகழ் விளங்குகின்ற. இன்பொடு முற்றுவான் - இடையூறின்றி மேன்மையுடன் நிறைவேறும் பொருட்டு. மங்கை - உமை. மாதங்க மா முகப் புங்கவன் - யானைமுகக் கடவுளாகிய விநாயகர். பொன் - பொலிவு; அழகுமாம்.

2. எங்கும் செறிவு ஆகி - (இடையீடின்றி) எங்கும் நிறைந்த (பரிபூரணப்) பொருளாகி; "அங்கிங் கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி," "பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே" (தாயுமானசுவாமிகள் பாடல்). பரம் ஆகி - (எக்கடவுளர்க்கும்) மேலான பொருளாகி. திரமது ஆகி - நிலைபெற்ற பொருளாகி; அது: பகுதிப்பொருள் விகுதி. ஏர் - அழகு. கருணை திருவுருவம் ஆகி - திருவ

கந்தபுராணச் சுருக்கம்

கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த ஞதிக்
கடவுளர்வந் தடிபரவுங் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியன்அவன் அடியைத் தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம். 2

சிவசத்தி;

மாற்கரிய செம்பதத்தோன் தேவி யாகி
வல்வினையே னெனதாவிக் காவி யாகி
மேற்கருணைத் திருவுருவ முடையா ளாகி
வித்தகமா யைந்தொழிற்கும் வித்தாய் நின்ற
சேற்கருங்கட் டளவகைக் களபக் கொங்கைச்
சிற்பரையிங் கெமையாளும் உமையாள் செம்பொற்
காற்கமலந் தலைக்கமலம் பொருந்தத் தாங்கிக்
கைக்கமலங் குவித்தருந்துங் கமலந் தீர்வாம். 3

ருளே திருமேனியாகப் பெற்று. கருணை திருவுருவம் ஆகி எழில்கொண்ட மலை மகள் என உமாதேவியாருக்கு ஏற்றி உரைப்பினும் அமையும். சிவபெருமானுடைய திருவருளே சத்தி என்பது சாத்திரத் துணிபு; '' அருளது சத்தியாகும் அரன்றனக்கு '' **(சிவஞான சித்தியார்)**; '' கருணைத் திருவுருவ முடையா ளாகி '' **(கந்தபுராணச் சுருக்கம் - கடவுள் வாழ்த்து-3)** இடம் - இடதுபாகம். முகுந்தன் - திருமால். தாழாத பெருங்கதி - மோட்ச வீடு. தாழாத பெருங்கதி என்றதனால் மற்றைய தேவர்களது கதி தாழ்வுடைத்து என்பது தானே பெறப்படும்.

3. மாற்கரிய - திருமால் காணுதற்கு அரிய. வித்தகமாய்-ஞானமே ஆகி. ஐந்தொழில் - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்கள். சத்தியே சிவத்தின் ஐந்தொழிற்கும் காரணம் என்பதை, '' பரந்தபரா பரையாதி பரன திச்சை பரஞானங் கிரியைபர போக ரூபம், தருங்கருணை உருவாகி விசுத்தா சுத்தத் தனுகரண புவனபோ கங்கள் தாங்க, விரிந்தஉபா தானங்கள் மேவி ஒன்றுய் விமலமாய் ஐந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்(து), அரந்தைகெட மணிமன்றுள் ஆடல் காணும் அன்னை யருட் பாதமலர் சென்னி வைப்பாம் '' எனவரும் **சிவப்பிரகாசத்தால் அறி**யலாம். சேல் - சேல்மீன(ப் போன்ற). தவளநகை - முல்லையரும்பு போன்ற பற்கள். களபம் - கலவைச் சந்தனம். சிற்பரை - சிற்சத்தி. காற்கமலம் - திருவடியாகிய தாமரை. தலைக்கு அமலம் பொருந்த - சிரசுக்குத் தூய்மை உண்டாகும்படி. அமலம் பொருந்தத் தலைக்குத் தாங்கி எனக்கூட்டி, (யாம்) மலத்தினின்றும் நீங்கித் தூய்மை அடையும்படி சிரத்தில் குட்டிக்கொண்டு எனப்பொருள் கொள்ளலுமாம். தலைக்கு: உருபுமயக்கம், கைக்கமலம் - கையாகிய தாமரை. அரும் துங்கம் மலம் தீர்வாம் - தூய்மை இல்லாத ஆணவ மலத்தினின்றும் நீக்கமடைவாம். அரும் - அருமை; இஃது இன்மைமேற்று: இச்செய்யுளின் ஈற்றடி **சொற்பின்வருநிலையணி** ஆகும்.

விநாயகக் கடவுள்

மாவேலை ஆலமதை அடக்கித் தன்னுள்
மண்டுலக மண்டமெலாம் வளர்ந்து தானேர்
காவேயின் முன்னுதித்த அரசிற் றோன்றிக்
கடம்புபுனை குருந்தினுக்குத் துணைய தாகித்
தூவேதந் தலைகாண்டற் கரிய தாகித்
துன்பமுறு பிறவியெனுந் துகள்சேர் வெய்யில
ஆவேனைத் தன்னடியா ணிழலிற் சேர்த்த
அத்திதனைப் பத்திசெய்து முத்தி சேர்வாம். 4

முருகக் கடவுள்

தேவர்குலப் பெருங்கமலம் இடுக்க ணுன
திமிரமகன் றளியோடு சிறந்து வாழ
மாவலிசேர் அவுணர்குலக் குவளை வாடி
மண்ணினிடைச் சுருங்கியிட வந்த பானு
தூவடிவேற் சுமதேசன் அடிய னேன்புன்
சொல்லினுக்கும் இரங்கியருள் சுரக்கும் பெம்மான்
பூவடியாம் இருபோதும் மூன்று போதும்
பூசைபுரிந் தன்பினெடு புகழ்ந்து வாழ்வாம். 5

---

4. மா வேலை - பெரிய கடலில் (எழுந்த). ஆலம் - விஷம். கா வேயில் முன் உதித்த அரசில் - சோலையிலுள்ள மூங்கிற்புதரிடத்து முன் ஒரு காலத்தில் தோன்றிய சிவபெருமானிடத்தே. வேய் - மூங்கில். திருநெல்வேலியில் ஒரு மூங்கிற்புதரில் சிவபெருமான் தோன்றினர் என்பது புராணவரலாறு. கடம்பு புனை குருந்தினுக்கு - கடப்ப மாலையைத்தரித்த முருகக்கடவுளுக்கு. துணை - சகோதரன். தூ - தூய்மை. தலை - திருமுடி. துகள் - குற்றம். வெய்யில் ஆவேனை - வெய்யிலில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் அடியேனை. அத்திதனை - யானைமுகமுடைய விநாயகக்கடவுளுக்கு; அத்திதனை: உருபுமயக்கம்.

இச்செய்யுளில் மா, வேல், ஆலம், வேய், அரசு, கடம்பு, குருந்து, அத்தி என்னும் மரப் பெயர்கள் ஒருங்கு தொனித்தன; இவற்றுள் வேயும், கடம்பும் மரங்களையே குறித்து நின்றன.

5. தேவர்குலப் பெருங்கமலம் - தேவர்குலமாகிய பெரிய தாமரை. திமிரம் - இருள். அளியோடு - கருணையாகிய வண்டுகளோடு. அளி-வண்டு. மா வலி - மிகுந்த வலிமை. அவுணர் குலக்குவளை - அசுரர் குலமாகிய குவளை மலர்கள். பானு - சூரியன். பானுவாகிய குமரேசன் என்க. பூவடியாம் இரு போதும் - பொலிவுபெற்ற இரண்டு திருவடியாகிய தாமரைகளையும். போது - மலர், வேளை.

வீரவாகு தேவர்

பொங்குகிரி களிற்றலைமை யோதும் போது
பொற்புடைய பொற்கிரிமுன் னிற்கு மாபோல்
தங்குதிறற் புகழ்வீரர் தம்மை யெண்ணில்
தானேமுன் னெண்ணவருந் தலைமை யாளன்
பங்கமிலா நீடுலகை மூடும் அல்லின்
பகைவனவன் பகைவனவன் பகைவ னுஞ்சேன்
மங்கலிலாப் புகழ்வீர வாகு வாய
வரிசிலைக்கைக் குரிசிலையாம் வணங்கல் செய்வாம். 6

சைவசமயாசாரியர்கள்

வெங்குருவிற் சற்குருவாய் உதித்துக் கூடல்
மீனவன்மேல் வினைதீர்த்தோன் விரைத்தாள் போற்றி ;
துங்கமுறும் அலைகடலிற் சிலைய தான
தோணியில்வந் தவன்பாத தூளி போற்றி ;
எங்கள்பிரான் றனிஇருளிற் பரவை வாசற்
கேவல்கொண்டோன் பதப்பதும விருதாள் போற்றி ;
புங்கவர்சூழ் திருவாத வூரில் வந்த
புண்ணியனார் இணையடிகள் போற்றி போற்றி. 7

ஞானப்பிரகாச தேசிகர்

கடியதிரி மலவிருளைக் கடிய ஞான
கரமுதவ எதிர்செறிந்து கண்டோர் தங்கள்
வடிவுடைய இதயசரோ ருகங்க ளெல்லாம்
மலரஅவ மதிநிலவு மழுங்கித் தாழப்

---

6. பொற்பு - அழகு. பொற்கிரி - மேருமலை. அல் - இருள். அல்லியின் பகைவன் - சூரியன்; அவன் பகைவன் - பானுகோபன்: இவன் சூரபன்மாவின் மகன். அவன் பகைவனுனென் - வீரவாகுதேவர்; இவர் நவவீரரில் முதன்மையான வீரர். வரிசிலை - நீண்டவில்; கட்டமைந்த வில்லுமாம். குரிசில் - பெருமையிற் சிறந்தோன்; இறைவனுமாம். வீரவாகுவாய குரிசிலை என்க.

7. வெங்குரு - சீகாழி. சற்குரு - ஞானகுரு. கூடல் - மதுரை. மீனவன் - (கூன்) பாண்டியன். வினைதீர்த்தோன் - வெப்புநோயை நீக்கியருளிய திருஞானசம்பந்தர். விரை - வாசனை. சிலையதான தோணி - கற்றூணிலை தெப்பம். தோணியில் வந்தவன் - கல்லாகிய தோணியில் மிதந்துவந்து கரையேறிய திருநாவுக்கரசர். எங்கள் பிரான் - சிவபெருமான். பரவை - பரவையார். பரவை வாசற்கு ஏவல்கொண்டோன் - சுந்தரர். பதம் - அன்று அலர்ந்த செவ்வி; பக்குவம். பதுமம் - தாமரை. புங்கவர் - தேவர்கள். திருவாதவூரில் வந்த புண்ணியனார் - மாணிக்கவாசகர்.

தாதவிழ்பூம் பொழிற்காஞ்சிக் குவட்டி லேறிச்
சலதியமு திந்நிகர்செந் தமிழ தான
காதன்மழை பொழிந்தஅருட் கொண்ட லான
கச்சியப்பன் இருபாதம் உச்சி வைப்பாம். 10

நூல்வந்தவழி

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

நன்புவி யிடத்து மிக்க
நைமிச வனத்து வாழுந்
துன்பில்சீர் முனிவர் கேட்பச்
சூதனங் குரைத்த காந்தம்
இன்புறு கச்சி யப்பன்
இயம்பினன் தமிழால்; அன்னான்
அன்புறு தமிழைப் போற்றி
அறிந்தவா சுருக்கிச் சொல்கேன். 11

அவையடக்கம்

கருக்கடல் முருக்கி முத்திக்
கரைதரு காந்த நூலைச்
சுருக்கவே கல்வி யில்லாத்
தொண்டனேன் துணிந்த வாறு

---

10. இச்செய்யுள் கச்சியப்ப சிவாசாரியாரை மேகமாக உருவகம் செய்துள்ளது. போதம் - ஞானம். காந்தப் புகழ்க் கடலில் - வடமொழியிலுள்ள ஸ்காந்தபுராணமாகிய புகழ் நிறைந்த கடலில். பிறவி எனும் வெம்மை: "பிறவியெனுந் துன்சேர் வெய்யில்" (4) என்றார் முன்னும். காஞ்சிக் குவட்டில் - காஞ்சிபுரமாகிய மலையின்மேல். சலதி அமுதினிகர் - நிருப்பாற் கடலில் தோன்றிய அமிர்தத்தை ஒத்த. காதல் செந்தமிழ் என்க. மழை - கந்தபுராணமாகிய மழையை. கச்சியப்பன் - கச்சியப்ப சிவாசாரியர். இவர் காஞ்சிக் குமரகோட்டத்து அருச்சகருள் ஒருவர்; ஆதிசைவ மரபினர்; முருகள் அருள் பெற்றவர்; வடமொழி தென்மொழிகளில் வல்லவர்; கந்த புராணம் பாடிய ஆசிரியர். இவர் காலம் கி. பி. பதினேராம் நூற்றாண்டின் இறுதி என்பது பலர் கருத்து.

11. நேமி சம்பந்தம் நைமிசம் என்பர். நேமி - சக்கரம். நைமிசம் - வட்டமாக முடியப்பட்ட தருப்பை உருண்டுசென்று ஒய்ந்தவிடம். சூதன் - சூதமுனிவர். காந்தம் - ஸ்காந்தபுராணம். அன்னான் அன்புறுதமிழ் - கச்சியப்ப சிவாசாரியர் அன்புகொண்டு இயற்றிய கந்தபுராணம். அறிந்தவா - (யான்) அறிந்தமட்டில். சொல்கேன் - சொல்லுகிறேன்.

திருக்கில்வான் முழுதும் இங்கோர்
செங்கையில் அடக்கு வேனென்(று)
உருக்கர மில்லான் எண்ணும்
ஊக்கமே போன்ற தன்றே. 12

அத்தமுஞ் சொல்லுஞ் சொல்லும்
ஆதிமா தாத லானும்
மெத்திய வனப்பு வேலோன்
வியல்கதை யுறுத லானும்
பித்தனேன் தனது பாட்டிற்
பிழைகள்வந் திடினுந் தீர்த்திட்(டு)
உத்தமர் கொள்வ ரென்னும்
உரத்தினு லுரைக்க லுற்றேன். 13

தனக்கிணை தானே யான
சம்பந்தன் கமலை வேந்தன்
கனக்கவே என்பால் அன்பாற்
கருணைவைத் திடுத லாலே
உனற்கருங் காந்தந் தன்னை
உரைத்தனன் சுருக்கி ; அல்லால்
எனக்குமிக் கதைக்கும் நாடில்
எத்தனை தூர மாமால். 14

ஆகச் செய்யுள்—14

---

12. கருக்கடல் - பிறவிக்கடல். முருக்கி - வற்றச்செய்து. தொண்ட னேன் - தொண்டு ஒன்றையே உடையேன். திருக்கு இல் - குற்றமில்லாத. வான் - ஆகாயம். உருகரம் இல்லான் - உருவத்தில் கை ஒன்றும் இல்லாதவன். ஊக்கம் - மனவெழுச்சி; உற்சாகம்.

13. அத்தமும் சொல்லும் - சொற்பொருளும் சொல்லும். சொல்லும் - (வேதங்களால் புகழ்ந்து) சொல்லப்படுகின்ற. ஆதி - சிவபெருமான். மாது - உமாதேவியார். அத்தமும் சொல்லும் முறையே ஆதியும் மாதும் என்க ; "சொல் வடிவாய்நீன் விடம்பிரியா இமையப் பாவை, தன்னையுஞ்சொற் பொருளான உன்னையுமே" (திருவிளையாடற் புராணம் - இடைக் காடன் 10). மெத்திய வனப்பு - மிக்க அழகினையுடைய. உரம் - துணிவு.

14. சம்பந்தன் - குருஞான சம்பந்த தேசிகர். சம்பந்தன் ஆகிய கமலை வேந்தன் என்க. கனக்கவே - மிகுதியான. உனற்கு - நீனைத்தற்கு. அல்லால் - அவர் கருணை இல்லாவிட்டால். எனக்கும் - என் கல்வித் திறத்திற்கும். "எனக்கும் இதற்கும் எத்தனை தூரம்" என்பது உலக வழக்கு.

வ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

புராண வரலாறு

—o—

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

விரிகின்ற கடற்புனலுண் டிருண்டு மின்னி
விண்மூடி வருங்கருமைக் கொண்மூ வீறி
எரிகின்ற ஒளித்தாவம் ஒளிப்ப வோங்கும்
எழில்நந்தி வரைஉம்பர் இம்பர் வாழச்
சொரிகின்ற வெள்ளமிகு பாலி சூழ்ந்த
தொண்டைவள நாட்டுளது தொண்டைச் செவ்வாய்ச்
சரிகின்ற வனைத்தளிர்க்கைம் மடவார் மேவும்
தடமாட நெடுவீதித் தமிழ்சேர் காஞ்சி. 1

இன்னபரி சென்னஎழில் அன்ன மேய
இறையாலும் எவராலும் இயம்ப வொண்ணு
அந்நகரின் வளர்பெருமை சொன்னுல் என்னுல்
அடங்குமோ? அடங்காதால்; அதன்கண் முன்னுள்

---

1. கொண்மூ - மேகம். வீறி -மிகுந்து.ஒளி-வெய்யில். தாவம்-வெப்பம். நந்திவரை - நந்திமலையின்மேல். உம்பர் - விண்ணவர். இம்பர் - மண்ணவர். பாலி - பாலாறு, முன்னொருகாலத்தில் நந்திமலையில் எழுந்தருளியிருந்த வசிட்டமுனிவரது காமதேனு, இடபதேவரைக்கண்டு காமுற்று, அதனுல் பால்வற்றி நிற்க, அதனையறிந்த வசிட்டர் ஒருதருப்பையினுல் கன்று ஒன்று உண்டாக்கி விடுக்க, காமதேனு அக்கன்றைக் கண்டு பால் சுரக்க, அப்பாலே நதியாக வந்தமையின் **பாலாறு** எனப் பெயர் பெற்றது. தொண்டை - கோவைக் கனி. தட மாடம் - விலாசமான வீடுகள் நிறைந்த. காஞ்சி-காஞ்சிமாநகரம்.

2. அன்னம் மேய இறை - பிரமதேவன். எவராலும்-மற்றுமுள்ள எவர்களாலும். ஒண்ணு - ஒண்ணுது. பெருமை - இங்குச்சிவபெருமானே உமை, பிரமன், திருமால், இந்திரன், சந்திரன் முதலியோர் வழிபட்டதும், வேதமே மாமரமாக விளங்குவதும் பல சிவத்தலங்கள் திகழ்வதுமான பெருமை. பொன் - இலக்குமி. அவிரும் - விளங்குகின்ற. பொன் அவிரும் திருமார்பன் - திருமால். கமடமாகி - ஆமை வடிவுகொண்டு. புரம் - திரிபுரம். கச்சபாலயம் - இது திருமால் கூர்மாவதாரத்தில் சிவபெருமானைப் பூசித்துப் பேறுபெற்ற சிவத்தலம்; கச்சபம் - ஆமை. கச்சப + ஆலயம் - கச்சபாலயம்.

பொன்னவிரும் திருமார்பன் கமட மாகிப்
புரங்கடிந்த கடவுளடி போற்றி வாழ்ந்த
கன்னலஞ்சேர் கச்சபா லயம்என் றோதும்
காமஆ லயமொன்று நண்ணிற் றன்றே. 2

அனையசின கரமதனில் மதனை வென்ற
அமலனிரு கமலமல ரடிகள் போற்றிப்
புனையுறுங் குழாய்மௌலிக் கடவுள் தந்த
போதனுறு போதுவளர் போத மேவும்
முனிவர்பலர் அடைந்தவன்செம் பதங்கள் தாழ்ந்து
முண்டகமேல் முதல்வ! ஒரு மூதூர்க் கானந்
தனியினிதி யாங்கள்தவம் புரிந்து வாழச்
சாற்றுகென அனையான் இத் தன்மை செய்வான். 3

ஒருதருப்பை எடுத்துவளைத் தவனி மீதில்
உருட்டியிது நின்றவனத் துறைதிர் என்ன
அருமுனிவ ரெல்லோரும் பின்னர் ஏக
அதுசென்று துன்றியவோ ரடவி யூடே
மருவிஅவண் நின்றிடஅங் கிருந்தா ரன்ன
வனம்நைமி சாரணிய வனம்என் றுகப்
பொருவில்புகழ் மாதவரோர் வேள்வி யாங்கே
புரிந்தமலம் பொருந்தியினி திருந்த போது. 4

சூதமுனி சதறிந்து வரலு நேர்போய்த்
தொழுதனரந் கிழுதனலிற் றோய்ந்தா லொப்ப
மேதகுமன் புளமுருக முகமன் கூறி
வீறுதம தாச்சிரம மேவச் சேர்த்திச்

---

3. சினகரம் - கோயில். மதன் - காமன். மதனைவென்ற அமலன் - சிவ பெருமான். குழாய் மௌலிக் கடவுள் தந்த போதன் - பிரமதேவன். உறும் போது - இருக்குங்காலத்தில். போதம் - ஞானம். முனிவர் - முனிவர். அவன் - அப்பிரமதேவனது. முண்டகம் - தாமரை. கானம் - வனம். தவம் புரிந்து வாழக் கானந்தனைச் சாற்றுக என என்க.

4. அவனி - பூமி. துன்றிய - நெருங்கிய; சேர்ந்த. ஓர் அடவியூடே மருவி - ஒருவனத்துள் பொருந்தி. அவண் - அவ்விடம். அன்னவனம் - அந்த வனம். அமலம் பொருந்தி மலநீக்கத்தைப் பெற்று.

5. இழுது - நெய். அன்பு உளம் - அன்பினாலே உள்ளம். முகமன் - உபசாரவார்த்தைகள். வீறு - விளங்குகின்ற. மணி - மாணிக்கம். துலங்

சோதிமணிப் பெரும்பீட மொன்று நாப்பண்
துலங்குறவிட் டதன்மீது துகளி லாவம்
மாதவனீ இனிதிருத்தி அருத்தி யோடு
வல்லியிலர்க் கியமுதல வழங்கி னரால். 5

மற்றதுபின் பின்னனெடுஞ் சடிலச் சென்னி
மன்னியமா தவரனீயான் மருங்கு வைகிப்
பற்றலர்தம் புரமெரிய நகைத்த செவ்வாய்ப்
பாலவிழித் தனிக்கடவுள் பால னான
செற்றநெடுங் கதிர்வேற்கைப் பெரியோன் காதை
சிறியோம்இங் கறியவுரை செய்வா யென்னக்
கொற்றமுனி அதுவினவி விழிகள் வெள்ளம்
கொள்ளஅவ ரோடின்ன கூற லுற்றான். 6

ஒன்னலார் சோரிகுடித் தொளிருஞ் செவ்வேல்
ஒருவனது பெருங்காதை உரைப்போர் கேட்போர்
முன்னெலாம் புரிந்தவினை யனைத்துந் தீர்த்து
முத்திதரும் அதுகேட்ப முயன்றீர் மன்னோ ;
பின்னலான் மறைந்தபிடர் முனிவீர் ! நீவிர்
பெருங்காத லொடுகேண்மின் பேசு கேனென்(று)
இன்னலா னவைநவைகள் எவையும் போக்கும்
ஏதமில்சீர்ச் சூதமுனி இயம்ப லுற்றான். 7

குற இட்டு - விளங்கும்படி அமைத்து. அருத்தி - ஆர்வம். வல்லியில் - வரை வில். முதல என்றதனால் பாத்திய ஆசமனங்களும் கொள்க.

6. மற்றதுபின் - அதன்பிறகு; மற்று: அசைநிலை. பின்னல் நெடுஞ்சடிலம் - பின்னலாகிய நீண்ட சடை, அனீயான் - சூதமுனிவர். பற்றலர்தம் புரம் - திரிபுரம். பாலவிழி - நெற்றிக்கண். செற்றம் - கோபம்; இங்கு வீரம். கொற்றமுனி - ஐம்புலனீ வென்று நின்ற சூதமுனிவர். அது வினவி - நைமிசாரணிய முனிவர்கள் சொன்ன வார்த்தையைக்கேட்டு.

7. ஒன்னலர்-பகைவராகிய அசுரர். சோரி - இரத்தம். காதை - நடந்த வற்றையே கூறும் வரலாறு: காதை நீர்த்து முத்தி தரும் என்க. பின்னல் - பின்னியசடை. பேசுகேன் - சொல்லுகிறேன். இன்னலானவை - துன்பங்கள். நவைகள் - காமம் வெகுளி, மயக்கம் முதலிய குற்றங்கள், போக்கும் - நீக்கிய. செவ்வேல் பெருங்கதை உரைப்போர் கேட்போர் முத்தியடைவர் என்பதை, "கருக்கடல் முருக்கி முத்திக் கரைதரு காந்தநூல்" எனவரும் இந்நூல் அவையடக்கத்தானும் அறியலாம்.

மூற்காலத் தரன்புகன்ற மறைக ளியாவும்
முதல்முடிவு தடுமாற முனிவர் தேவர்
நற்காருந் தரையிருந்த மாக்க ளெல்லாம்.
நல்லறிவு நீங்கிமயல் நண்ணி ஞராய்
அற்காள கண்டகீயும் மறந்து வீறும்
அறமாற்றி மறம்ஆற்ற ஆற்றல் மாயோன்
விற்காமர் நெடும்புருவ வாணி கேள்வன்
விண்ணவர்சூழ் தரக்கயிலே மேவி னாரால். 8

விண்ணவர்கள் மகுடமுடி தடவுஞ் செந்தாள்
விறல்நந்தி தேவரொடு விமலன் பாலியாம்
நண்ணியது புகன்றருள வேண்டு மென்ன
நம்பனெதிர் அடைந்திறைஞ்சி நவிற்ற லோடும்
தண்ணருள்எம் பெருமான்இங் கவரை வல்லே
தருதியென மீண்டுநெடுஞ் சார்ங்க பாணிக்
கண்ணன்முதல் இமையவரை விடுப்ப நாதன்
கழுமுழுது பணிந்தின்பங் கலந்து நின்றார். 9

நின்றுபுகழ் மால்முதல்வா னவரை நோக்கி
நிமலன்நும தரசுபுரி நெறிக ளெல்லாம்
நன்றுபெற நடந்தனவோ என்ன மாயோன்
நாத!உன தின்னருளின் நடந்த இந்நாள் ;

---

8. நல் காரும் - (காலமழை பெய்யும்) நல்ல மேகங்களும்; நற்கு ஆரும் எனப்பிரித்து நன்மை நிறைந்த எனப் பொருள் கொள்ளலுமாம், எல்லாம் - மற்ற எல்லாம். மயல் - மயக்கம். அல் காள கண்டன் - சிவபெருமான். அல் - இரவு; காளம் - விஷம். வீறும் - மேன்மையுள்ள. அறம் மாற்றி மறம் ஆற்ற - தருமத்தை நீக்கி அதர்மத்தைச் செய்ய(க்கண்ட). ஆற்றல் - (கோக்குந் தொழிலில்) வல்லமையுள்ள. காமர் - விருப்பம்; அழகுமாம். வாணிகேள்வன் - பிரமதேவன்.

9. விறல் - வலிமை; வெற்றியுமாம். நந்தி - திருநந்திதேவர்; இவர் சிலாதர முனிவரின் புதல்வர்; தவஞ்செய்து கயிலை காக்கும் பேறு பெற்றவர்; இரண்டாஞ் சம்புவாக விளங்கியவர். விமலன்பால் - சிவபெருமானிடம். நவிற்றலோடும் - (தேவர்களது வருகையைச்) சொன்னவுடன். வல்லே - விரைவில். சார்ங்க பாணிக் கண்ணன் - சாரங்கம் என்னும் வில்லை ஏந்திய கையையுடைய திருமால்.

10. நாத - இறைவனே: விளி. தென்றற்கன்று - இளந்தென்றல். மறம் - பாவச்செயல்கள். படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலும்

இன்றுமெமக் களித்தருள்வ தொன்றுண் டன்ன(து)
இயம்புவன்அம் புவிமாந்தர் எவருந் தென்றற்
கன்றுலவுங் குளிர்சோலைக் கயிலை மேய
கடவுள் ! நினை மறந்துமற்ங் கருதி னரால். 10

நற்போதம் அவர்படைத்து நினது பாதம்
நணுகும்வகை யருள்சிறிது நல்கு வாயென்(று)
அற்போடு மொழிந்திடலும் ஓழியாச் சீர்த்தி
அருளாளன் ஒருகலையோ டவனி மேல்நீ
பொற்போடு வியாதன்என உதித்து வேதப்
புகழ்க்கடலை நான்குவகை புரிந்தி யாரும
கற்போலுந் திரண்டபுயப் புயலே ! இன்பக்
கதியடையும் படிபுகறி கடிதின் மாதோ. 11

ஓங்குமறை யுணர்ந்துமுளந் தேரு தாரும
உணராரும் ஐயமகன் றுய்யு மாறு
பாங்குறும்ஒன் பதிற்றிரட்டிப் புராணம் உண்டு ;
பண்டுநாம் நந்தியொடு பகர்ந்தாம் அன்னான்
தாங்குபுகழ் படைத்தசனற் குமரன் என்னும்
தவமேவு முனிதனக்குச் சாற்றி னனல் ;
வாங்குதிரைக் கட்லுடுத்த புடவி மீது
மற்றவன்பாற் கேட்டினிது வாழ்தி யென்றான். 12

இப்பணியை அப்பணியும் பணிசேர் சென்னி
இறையருள முடிமேற்கொண் டிறைஞ்சி யாங்கே
கைப்பதுமங் குவித்துவிடை கொண்டு நீங்கிக்
கடிதுதன திடத்தடைந்து கடைந்த வேற்கண்

சிவபெருமான் திருவருளின் வழியே நடைபெறுவன ஆதலால், "நாத! உனது இன்னருளின் நடந்த" என்றார்.

11. நல் போதம் - நல்லறிவு. "அவனருளாலே அவன்றாள் வணங்கி" (திருவாசகம்-சிவபுராணம்) என்று கூறுதலால், "நினது பாதம் நணுகும் வகை அருள் சிறிது நல்குவாய்" என்றார். வியாதன் - வியாசன். நான்கு வகை - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வகை. புகறி - சொல்லுவாயாக. யாரும் இன்பக் கதி அடையும்படி என்க.

12. மறை - மறைந்த (இரகசியப்) பொருளையுடையது; வேதம். உணராரும் - வேதத்தைத் தெரிந்து கொள்ளாதவர்களும். புராணம் - பழைய வரலாறு. வாங்கு திரை - வளைந்த அலைகள். புடவி - பூமி.

கோங்கலர்மென் முலைபாகத் திறைக்கீ ரைந்து
கொலைத்திகிரிப் படையோற்கு நான்கு கோலப்
பூங்கமலத் தவிசிருந்தோற் கிரண்டு செந்தீப்
புகழ்த்தபனற் கோரொன்றுப் பொலிந்த வன்றே. 15

புரமூன்றும் எரிக்களித்தோற் போற்றுஞ் சைவம்
பொருவில்சிர்ப் பவிடியமே பொற்பு மிக்க
வரமாரு மார்க்கண்ட மிலிங்கங் காந்தம்
வராகமே வாமனமே மச்சங் கூர்மம்
பிரமாண்டம் இவைகள்சிவ புராணம்; மாயோன்
பெருங்காதை காருடநா ரதமே விண்டாங்(கு)
அருண்மேவு பாகவத மாகு மென்ப;
அயன்காதை பதுமமே பிரம மாமால். 16

கூறுபிரம கைவர்த்தம் இரவி காதை;
கொடுந்தழலின் கதைஆக்கி நேய மாமென்(று);
ஊறில்பரன் கதைபத்திற் பத்தர் போற்றும்
உயர்குமரன் கதைசுருக்கி உரைத்தான் என்ப;

வருக்கு உபதேசித்தனர் என்ற வரலாற்றை இங்கு நோக்குக. இதனை, "நாதனு ருள்பெறு நந்தி தன்திடக், கோதிலா துணர்சனற் குமரன் கூறிட, வாதரா யணமுனி வகுப்ப வோர்ந்துணர், சூதனே நியதுமூ வாறு தொல் கதை" எனவரும் **கந்தபுராணச்** செய்யுளால் அறியலாம். வேணியையும் பாகத்தையும் உடைய இறை; சிவபெருமான். கோங்கு அலர் - கோங்கின் அரும்பினையொத்து வளருகின்ற. திகிரிப்படையோன் - திருமால். செந்தீ - அக்கினிதேவன். தபனன் - சூரியன். செந்திக்கு ஒன்று, தபனனுக்கு ஒன்று எனக்கொள்க.

16. அறிந்தோன் - அறிந்தோனை: விகாரவாலணையும் பெயர். வரம் - மேன்மை. சிவபுராணங்கள் சைவம், பவிடியம், மார்க்கண்டேயம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம் என்னும் பத்து; திருமாலுக்குரிய புராணங்கள் காருடம், நாரதம், விஷ்ணுபுராணம், பாகவதம் என்னும் நான்கு; பிரமனுக்குரிய புராணங்கள் பதும புராணம், பிரம புராணம் என்னும் இரண்டு.

17. இரவி காதை - சூரியனுக்குரிய புராணம்; அது பிரமகைவர்த்தம். அக்கினிக்குரிய புராணம் ஆக்கினேயம். என்று - என்று புராண அடைவுகளைக் கூறிவிட்டு. குமரன் கதை சுருக்கி உரைத்தான்-கந்தபுராணத்தைச் சுருக்கிச் சொன்னான். வாதராயணன்: இது பாதராயணன் என்பதன் திரிபு. வியாசர் வதரி (பதரி) வனத்தில் இருந்தமையின், இப்பெயர் பெற்றார். மாணிக்கன் - இங்குச் சூதமுனிவர். மாணிக்கன் என்று உரைத்தான் என்ப எனமுடிக்க.

மாறில்புகழ் வதரிகமா வனத்து வைகி
வாதரா யணனெகி மறைகள் யாவும்
வீறுபெற நான்குகில புரிந்த வாற்ருல்
வியாதன்எனும் பெயர்படைத்தோன் வியன்மா ணக்கன். 17

வளங்குலவு மலையரையன் மகளாய் அம்மை
வளர்ந்தசெயல் முதலாக மன்னுஞ் செவ்வேள்
விளங்குசுர ரரசளித்த கொம்பி னேடும்
வேடர்குலக் கொடியோடும் வேழக் கூற்றின்
களங்கமில்செக் கர்த்தவிசி லிருந்த தீருக்
கவின்முனிவன் தொகையாகக் கழற லோடும்
உளங்குளிர்ந்து முனிவோர்கள் விரிவால் எங்கட்(கு)
உரைத்தருள வேண்டுமென உரைக்க லுற்ருன். 18

ஆகச் செய்யுள் 32

---

18. சுரர் அரசு - இந்திரன். சுரர் அரசு அளித்த கொம்பு-தேவயானையம்மை. வேடர் குலக்கொடி - வள்ளியம்மை. வேழக்கூற்று - சிங்கம். செக்கர் - செம்மை. தவிசு - சிங்காதனம். முனிவோர்கள் - நைமிசாரணிய முனிவர்கள்.

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

முதலாவது

உற்பத்தி காண்டம்

—o—

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

திருமருவு கயிலைமிசைக் கனக மான
சினகரஞ்சேர் மண்டபத்துச் சிறந்த சீயப்
பொருவிலெழில் அணைமீது கணைமீன் நாட்டப்
பூவையொடு புரமெரித்தோன் பொருந்து போதில்
முருகுமலர்க் குழலுமையாள் எழுந்து நாதன்
முண்டகத்தா ளிணைவணங்கி முன்னு நின்று
குருகுவளைக் குலநெருங்கு கரங்கள் கூப்பிக்
குமுதவாய் திறந்தினைய கூற லுற்றாள். 1

இற்றைவரை வரைவளைத்த கரத்தோய்! நின்னை
எண்ணுதக்கன்மகள் என்னும் நாமம்
பெற்றனன்; மே லதுபரிப்ப வெருவி னேனைப்
பெயரகல அருடியெனப் பேச லோடும்

---

1. கனகம் - பொன்மயம். சினகரம் - கோயில். சீயம் - சிங்கம். சீயப் பொருவு இல் எழில் அணை - ஒப்பில்லாத அழகினையுடைய சிங்காதனம். கணை மீன் நாட்டம் - அம்பையும் சேல்மீனையும் ஒத்த கண்கள், பூவை - உமா தேவியார்; உவமையாகுபெயர். முருகு - வாசனை. முன்னுநின்று - முன்பாக நின்று. குருகு வளைக்குலம் - சங்காலாகிய வளையல்கள். குமுதமாய் - செவ்வல்லி மலர்போன்ற சிவந்த வாய்.

2. இற்றைவரை - இதுவரையில். வரை வளைத்த - மேருமலையை வில்லாக வளைத்த. எண்ணுதை - (உள்ளன்போடு) நினைக்காத. தக்கன் சிவபெருமானுக்கு ஆகுதி அளிக்காமல் நிந்தனையோடு யாகம் செய்தவன் ஆதலின், "நின்னை எண்ணுத தக்கன்" என்றார். தக்கன் மகள் - தாக்ஷாயணி. பரிப்ப - தாங்க. தற்று பொழில் - நெருங்கிய சோலைகள் (சூழ்ந்த). மணத்தும் - (உன்னைத்) திருமணம் செய்து கொள்ளுகிறோம். என - என்று (சிவபெருமான்) கூற. விடை கொடு - விடை பெற்றுக்கொண்டு. இம மலை - இமயமலை.

தற்றுபொழில் இமயநெடுஞ் சைல வேந்தன்
தன்மகளாய் உனைப்பெறுவான் தவஞ்செய் கின்றுன் ;
மற்றவன்பால் வளர்ந்திடுதி ; வந்தி யாம்பின்
மணத்துமென விடைகொ(டு)இம மலையிற் சேர்ந்தாள். 2

அங்கொருபூந் தடத்தினிடைக் கமல மீதில்
அமலநா யகிகுழவி யாகி மேவ
மங்கைதனே யாண்டுதவம் புரிந்து நின்ற
மலையரையன் கண்டெடுத்து மகிழ்ந்து வான்றேய்
துங்கமனைக் கொடுபோகி மேனே யான
துணைவிகரத் தளிப்பஅவள் தொழுது வாங்கிப்
பங்கமற வளர்த்தனளே யாண்டு செல்லப்
பரனையுற அம்மைதவம் பண்ண எண்ணி. 3

வென்றியுறு தந்தையொடும் இந்த வாறு
விளம்புதலும் மலையரையன் விளம்பு வான்: நீ
இன்றுதவம் புரிந்திடவே பொருதுன் மேனி
இளம்பருவம் இதுதவிர்தி யென்ன அன்னை
மன்றலுறு கொன்றைமுடிப் பரமன் காப்பன் ;
மறுத்தறையேல் எனவிசைந்து மாத ரோடு
குன்றிலொரு பாங்கர்தவச் சாலை யூடு
கோதில்தவம் புரிந்திருப்பக் குயிற்றி னனல். 4

செல்லாரும் பொழில்இமயத் தரனைச் சேரத்
திருந்துதவம் புரிந்துமையாள் இருந்த காலை
எல்லாருந் தழல்நுதற்கட் பெருமான் விண்ணோர்
எல்லாரும் பரவவர மீந்த வாற்றல்

---

3. அமலநாயகி - உமையம்மை. ஆண்டு - அங்கே. துங்கம் - தூய்மை, மேனை - மலையரசன் மனைவி. மேனையான துணைவி - மேனை என்னும் பெயருள்ள (தன்) மனைவி. பரனை உற - சிவபெருமானே மீண்டும் அடைய.

4. உன் மேனி பொருது, இது இளம்பருவம் என்க. தவிர்தி - இந்த எண்ணத்தை விட்டுவிடுவாயாக. என்ன - என்று (மலையரசன்) சொல்ல. மன்றல் - வாசனை. மறுத்து அறையேல் என - (நீங்கள் என் விருப்பத்தை) மறுத்துச்சொல்லற்க என்று (உமை)கூற. இசைந்து - (மலையரசன்) இணங்கி. குயிற்றினன் - அமைத்தான்.

5. செல் - மேகம். எல் ஆரும் - ஒளிமிகுந்த. வில் - ஒளி. மகேந்திர மூதூர் - விரமகேந்திரபுரி; இது தென்றிசைக்கடல் நடுவில் அமைந்திருந்த

வில்லாருங் கனகநெடு மாட நீடு
வீதிமகேந் திரமூதூர் மீது வெம்மை
அல்லார்ருங் கடுவனைய தகுவர் சூழ
அரசுபுரிந் திருஞ்சூரன் அமர்ந்தா னன்றே. 5

சொற்றருமக் காலத்தின் ஞாலத் தின்பால்
தொல்லைமறைப் பொருளினைமுன் சோதி பாங்கர்ப்
பெற்றசன காதிமுதல் முனிவர் நால்வர்
பெருந்தவங்கள் பலபுரிந்து பின்னும் முன்னும்
வெற்றிநெடுங் கயிலையெனுஞ் சைல மேவி
வீறுமெழில் நந்திவிட விடஞ்சேர் கண்டக்
கொற்றவன்றன் அடிவணங்கி முடிமேற் செங்கைக்
கோகனதங் குவித்தினைய கூற லுற்றார். 6

அருமறையின் பலபொருள்தேர்ந் திந்நாள் காறும்
அடியரேம் புந்திவிரிந் தலைந்த தீண்டுப்
பொருவிடையோய் ! அறிவடங்கி யாங்க ளுய்யப்
புரிந்தருள வேண்டுமெனப் புகற லோடுங்
கருமறலி யுரங்கிழித்த பதுமச் செந்தாட்
கருணைநெடுங் கடலிருமின் ; காமர் நன்னூல்
மருளுறுநும் முணர்வொடுங்க உரைப்பா மென்ன
மன்னுமவன் திருத்தாள்முன் னிருந்தார் மன்னே. 7

சங்கரன்முன் அவரிருப்ப நந்தி தன்னைத்
தந்திதனை யுரித்தகரத் தலைவன் நோக்கிப்
புங்கவர்கள் எவர்வரினும் விடுவா யல்லை ;
போர்மதவேள் வரில்விடுதி ; போதி யென்ன

நகரம். அல்-கருமை. கடு அனைய தகுவர்-ஆலகாலவிஷம் போன்ற அசுரர்கள். சூரன் - சூரபன்மன்.

6. சொற்றரும் - சொல்லுகின்ற. தொல்லை - பழமையாகிய. சனகாதி முதல் முனிவர் நால்வர் - சனகர் முதலிய முதன்மை பெற்ற நான்கு முனிவர்கள்; அவர்கள் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்போர். ஞாலத்தின்பால் தவங்கள் புரிந்து என்க. பின்னும் - அதன்மேலும். முன்னும்-(யாவரும்) நினைக்கின்ற. கோகனதம் - கோகனகம் - செந்தாமரை.

7. புந்தி - அறிவு. புரிந்தருளவேண்டும் - விரும்பித் திருவருள் செய்ய வேண்டும். கரு மறலி உரம் கிழித்த - கருமைநிறமுள்ள யமனது மார்பைத் திருவடியால் உதைத்துக் கிழித்த. நன்னூல் - இங்கு வேதப்பொருளாகிய சிவாகமம். உணர்வு ஒடுங்க நன்னூல் உரைப்பாம் என்க.

அங்கவன்ஏ கினன்முனிவர் மகிழ்ந்து கேட்ப
ஆகமத்தின் பொருள்மூன்றும் ஆதி யோத
இங்கெமது புந்திவிரி வொடுங்க ஞானம்
இறைவ!புகன் றருள்வாயென் றியம்பி னாரால். 8

என்றிடலும் நகைத்தருளி யாது மாங்கே
இசைத்திலன்அப் பொருளிருப்ப திவ்வா றென்று
துன்றுநெடுஞ் சடைமுனிவர்க் குணர்த்து மாற்றூல்
துலங்குமொரு கரம்உரத்தில் தோயச் சேர்த்தி
மூன்றகுவர் புரமெரித்த பரமன் ஞான
முத்திரையாங் குறிகாட்டி மூனிவ ரேபோல்
ஒன்றிருநுண் கணப்பொழுதி யோக மாகி
உறைந்தனன்அங் கவர்அருள்பெற் றுய்யு மாறே.[1] 9

பிள்ளேச்சந் திரமவுலிச் சிறுமான் செங்கைப்
பெருமான்இவ் வாறிருப்பப் பெருமை சான்ற
உள்ளத்தன் பினராம்நற் றவருந் தத்தம்
உணர்வொடுங்கி ஞானமுணர்ந் துறும்பே ரின்ப

---

8. சங்கரன்-சுகத்தைச் செய்பவன்; சிவபெருமான். நந்தி தன்னேநோக்கி என்க. புங்கவர்கள் - தேவர்கள். மதவேள் - மன்மதன். ஆகமம் - சிவாகமம்; இதில், ஆ - சிவஞானம்; க - மோட்சம்; ம - மலநாசம்; ஆகவே, ஆன்மாக்களுக்கு மலநாசத்தைப் பண்ணி, சிவஞானத்தை உதிப்பித்து, மோட்சத்தைத் தரும் நூல் என்பது திரண்டபொருள். ஆகமத்தின் பொருள் மூன்று - பதி, பசு, பாசம் என்னும் மூன்று. பதி - சிவம். பசு - ஆன்மா. பாசம் - மலம். ஆதி - சிவபெருமான். ஞானம் - ஞானோபதேசம்.

9. உரத்தில் - திருமார்பில். தகுவர் - அசுரர். ஞானமுத்திரையாம் குறி காட்டி. - சின்முத்திரையாகிய திருக்கரக் குறிப்பைக் காட்டி. சித்+முத்திரை - சின்முத்திரை. சித் - ஞானம். முனிவரே போல் - (மௌனத்தையுடைய) முனிவர்களேப் போல.

10. பிள்ளேச் சந்திர மவுலி - இளம்பிறைச் சந்திரனே அணிந்த சடாமகுடம். ஓர் இறைப்போது - ஒரு கணப்பொழுது. அள்ளல் - சேறு. புடவி - பூமி. சிவபெருமான் மோனநிலேயில் இருந்த ஒருகண நேரம் மக்களுக்கும் தேவர்களுக்கும் பல யுகங்களாக அமைந்தது. சிவபெருமானுக்கு ஒருகண நேரம் தேவர்களுக்குப் பல யுகங்கள் என்பதனே, ''கோடிவிதி மாளிற் குலாவுகம லக்கண்ணன், ஓடி வடவா லுறங்குமே - நாடியே - அக்கண்ணர் கோடி அழியில் அருணகிரி, நக்கனருள் சற்றே நகும்'' எனவரும் அருணகிரி யந்தாதியால் அறிக. பா - ம்—1. றுய்யு மாறு.

வெள்ளத்துட் படிந்துசெய லொன்று மின்றி
மேவினர்;ஓ ரிறைப்போது விமலற் காய(து)
அள்ளற்றெண் டிரையுடுத்த புடவி மாக்கட்(கு)
அமரர்தமக் கெண்ணிலுக மாயிற் றம்மா. 10

விரிபதுமத் திருமருமப் பெருமா ளுதி
விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் வேந்த ளுகிப்
பொருவில்அவ ருயிர்க்குயிராய் உணர்வு நல்கும்
பொருவிடையோன் உமையோடு பொருந்த லின்றி
அருமுனிவர் பொருட்டாக யோகி போல
அமர்தலால் அனைவோரும் அரிவை மார்தோள்
மருவிமுயங் குதலின்றி யிருந்தார் ; கஞ்ச
மலர்விதிக்கும் விதிக்குமுறை மாறிற் றன்றே. 11

இப்படியிப் படிவானத் திருந்து வாழும்
எவ்வுயிரு முறுங்காலத் திருணஞ் சேய்க்கும்
துப்பவுணர் பெருந்தகையாஞ் சூரன் செய்யும்
துயரினுல் உயர்துறக்கந் துறந்து நீங்கிக்
கைப்படுவெங் குலிசநெடும் படையான் முன்னம்
கனவரைகள் இறகறுத்த கடவுள் தோல
மைப்பொலியும் நயன அயி ராணி யோடும்
வானவரோ டும்புவியில் மருவி னுனல். 12

வெள்ளிவரை யடைந்தரனை வணங்கு மாறு
வேலையலா திருந்திடலும் வேலை நஞ்சம்
கொள்ளும்அடல் மிடறுடையோன் குனித்த செம்பொற்
கோதண்ட வேதண்டங் கூடி யாங்கே

---

11. விரி பதுமத் திரு மருமப் பெருமான் - மலர்ந்த செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் பொருந்திய மார்பையுடைய திருமால். அரிவைமார் - மாதர்கள். கஞ்சமலர் விதிக்கும் - தாமரை மலர்மேலிருக்கும் பிரமனுக்கும். விதிக்கும் முறை - சிருஷ்டி செய்யும் முறைமை. இங்கு, "அவன் அன்றி ஓரணுவும் அசையாது" என்ற பழமொழி நோக்கற்பாலது.

12. இப்படி - இவ்வாறு, இவ்வுலகம். படியிலும் வானத்திலும் இருந்து வாழும் உயிர் என்க, இருள் நஞ்சு ஏய்க்கும் - கறுத்த விஷம்போன்ற. துப்பு - வலி. அவுணர் பெருந்தகையாம் சூரன் - அசுரர் தலைவனுகிய சூரபன்மன். குலிச நெடும்படையால் - வச்சிராயுதத்தால். கடவுள் - இந்திரன். அயிராணி - இந்திராணி.

கள்ளுகுதார்ச் சயந்தனெடுங் கடவு ளோரைக்
காரவுணன் சிறைபுரிந்த கடுஞ்சொற் கேட்டுத்
தள்ளுமதற் கரியதுயர் கொண்டு நாதன்
தாட்கமல மலர்நினைந்து தவம்பு ரிந்தான். 13

புரிந்திடலும் இறைதவள விடைமேல் தோன்றிப்
பொருவில்தவத் திளைத்தனீ புந்தி தன்னில்
விரும்பியதே தெனஅறியான் போன்று கேட்ப
வெஞ்சூர்க்காய்ந் தெமையாள வேண்டு மென்னத்
திருந்தலனுல் வருந்தலெலாந் தக்கன் வேள்வி
சேர்ந்திருந்த தீமையெனச் செப்பி நந்தம்
உரந்திகழு மகனொருவன் அவுணர்ச் சாடி
உமைப்புரப்பா னெனஅருளால் உரைத்துப் போனுன். 14

ஆங்கமலன் நீங்குதலும் அமரர் கோமான்
ஆகுலமு மின்பமுங்கொண் டனைய வெற்பில்
தாங்குபுகழ் அயிராணி யென்னு நாமத்
தன்மனைவி பொன்மனைவி தன்பால் வைத்துத்
தேங்கமழுங் கமலநிதிப் பொகுட்டின் மன்னும்
சென்னிநான் குடையானைச் சேர்ந்து தாழ்ந்து
திங்குபெறு சூர்புரியுந் துயரும் நாதன்
செப்பியதும் அவனெடு செப்பி னுனுல். 15

---

13. அரனை வணங்குமாறு வேலையலாது இருந்திடலும் - சிவபெருமானை வணங்குவதற்கு ஏற்ற சமயம் இல்லாமல் இருந்தமையாலே. குனித்த-வளைந்த. செம்பொற் கோதண்டம் வேதண்டம் - வில்லாகிய செம்பொன் மலை; மேரு. வேதண்டம் - மலை. சயந்தன் - இந்திரன் மகன். மன்மதன் தவிர ஏனை யோரை உள்ளே விடப்படாதென்று சிவபெருமான் நந்தியெம்பெருமானுக்குக் கட்டளையிட்டமையால், இந்திரனை நந்திதேவர் தடுக்க, அவன் மேருவை அடைந்தனன் என்பதாம்.

14. தவளவிடை - வெண்ணிறம் பொருந்திய இடப வாகனம். தவத்து இளைத்தனீ - தவத்தினுல் நீ இளைப்பை அடைந்தாய். சூர்க்காய்ந்து - சூரபன்மனை அழித்து. திருந்தலனுல்-பகைவனுகிய சூரபன்மனுல். உரம்-வன்மை. உரம் திகழும் நந்தம் மகன் என்க. அவுணர்ச்சாடி - அசுரர்களையெல்லாம் அழித்து. உமை - உம்மை. புரப்பான் - இரட்சிப்பான்.

15. ஆகுலம் - துக்கம்; இது தக்கன் வேள்வியிற் கலந்து கொண்ட தீமையை நீனைந்து எழுந்தது ஆகும். பொன் - வியாழபகவான்; தேவகுரு. இந்திரன் தன் மனைவியைப் பிருகஸ்பதியின் மனைவியிடத்து ஒப்புவித்தான் என்க. பொகுட்டு - கர்ணிகை. நாதன் - சிவபெருமான்.

போயமரர்க் கிறையுரைத்த வாறு தேர்ந்து
புகுந்தபடி முகுந்தனுக்குப் புகல வெண்ணித்
தூயகம லத்திருந்து திருந்து வேதன்
சுரர்குழுவும் மகவானுஞ் சூழ வேகி
மாயனுடன் அரன்யோகத் திருந்த வாறும்
வானவர்கள் தானவரால் வருந்து மாறும்
மேயபல வுங்கூற அரியும் ஓர்ந்து
விதிபதும முகநோக்கி விளம்ப லுற்றான். 16

எம்பெருமான் முனிவோர்கட் காக யோகம்
இருந்திடுதல் தவிர்ந்தருளி இமய வெற்பில்
அம்பிகையை மணம்புரிந்தோர் சுதனை நல்க
அரன்பால்மா னினைவிடுகென் றறைத லோடும்
உம்பர்பெருங் குழுவோடும் மகவா னுடனும்
ஒளிதருபா ரதிகேள்வன் உவந்து மீண்டு
செம்பதும வகத்தினிதுற்(று) அகத்து வேளைச்
சிந்தனைசெய் திடஅவனுஞ் சேர்ந்தான் அன்றே. 17

வந்தமதன் றனைநோக்கி ஏகன் யோகம்
மருவுதல்விட் டுமையவளை மருவு மாறுன்
கந்தமலர் சிந்திவரு வாய்என் றோதக்
கரங்கொ(டு)இரு செவிமூடி அரன்பே ரோதி
அந்தமிலா ஐயனைச்சென் றெய்ய அஞ்சி
அநேகவிதம் மறுத்தறைய அலரோன் சீறி
இந்தமொழி மறுத்திடிற்சுள் அறைவோ மென்ன
இசைந்தனன்இவ் வாசகமங் கிசைக்க லுற்றான். 18

---

16. அமரர்க்கு இறை - இந்திரன். முகுந்தன் - திருமால். மகவான் - இந்திரன். விதி - பிரமன்.

17. சுதனை - குமாரனை. ஒளிதரு - புகழ்மிக்க. பாரதி - சரசுவதி. பாரதி கேள்வன் - பிரமதேவன். வேளை - மன்மதனை.

18. ஏகன் - சிவபெருமான். மருவுமாறு - சேருமாறு. கந்தமலர் சிந்தி - வாசனை நிறைந்த மலர்களாகிய அம்புகளை எய்து. தகுதியில்லாத வார்த்தையைக்கேட்டால் வரும் குற்றம் நீக்கற் பொருட்டுச் சிவநாமங் கூறுவது முறைமை ஆதலால், மன்மதன் செவியை இரு கரங்களால் மூடிச் சிவநாமத்தைச் சொல்லிப் பலவிதமாகப் பிரமன் கூறியதை மறுத்துக் கூறினன் என்க. சுள் - சாபம். இசைந்தனன் - (மன்மதன்) ஒப்புக்கொண்டு: முற்றெச்சம்.

கண்டுமதன் இறைஞ்சவர லென்கொல் என்று
காரணங்கேட் டணிமேலை வாசல் தன்னுல்
அண்டர்பிரான் மொழிப்படிபோ கென்னப் போந்தாங்(கு)
அரணெயிதிர் கண்டாங்கே அயர்ந்து வீழ்ந்தான். 21

பின்னிரதி தேற்றஎழீஇப் பொருவான் நிற்பப்
பிரமன்முத லோர்மதன்செய் பெற்றி காண்பான்
அன்னகிரிக் காருபுடைபோய் மருவி னுர்வேள்
ஐங்கணைவிட் டான்; அவைசென் றரன்பால் மேவ
வன்னிவிழி திறப்பமதன் இறப்பத் தேவி
வருந்துமது தெரிந்தமரர் வருந்தி நாதன்
பொன்னடிகின் றேத்துதலு மியோகம் நீங்கிப்
புந்திதனில் நந்திதனைச் சிந்தை செய்தான். 22

அண்ணல்நினைந் திடஅறிந்து நந்தி யேகி
அடிதொழுது நின்றிடநீ அலரோ னுதி
விண்ணவரைத் தருதியெனத் தருத லோடும்
வேண்டியதே தெனஉமையை விமல! நீவேட்(டு)
எண்ணில்புகழ்க் குமரனைத்தந் தருள்வா யென்ன
இசைந்தவரை விடுத்(து)இரதிக் கிமய மாதை
வண்ணமணம் புரிந்துனது கணவன் ஆவி
வழங்குதுமே கெனஇமய வரையிற் சேர்ந்தாள். 23

இன்னமொழி மொழிந்தருளிப் பின்னர் ஈசன்
இட்டமுடன் நிட்டையனுட் டித்து வாழும்
என்னவுரைத் தருள்மேவுஞ் சனக னுதி
இருந்தவராய் இருந்தவர்கள் ஏக வோதிக்

என்கொல் - நீ வந்தகாரியம் என்ன. மேலை வாசல் தன்னுல் - மேற்கு வாசலால். அயர்ந்து - மயங்கி.

22. எழீஇ - எழுந்து. பொருவான் நிற்ப - (மறுபடி) போர் செய்வதற்காக நிற்க. வன்னி விழி - அக்கினியாகிய நெற்றிக்கண்ணீ. மன்மதன் இறக்க, அதுகண்டு இரதிதேவி வருந்தினுள்; அதனைக்கண்டு தேவர்கள் வருந்திச் சிவபெருமானைத் துதித்தனர்; அப்போது சிவபெருமான் யோகத்தினின்றும் நீங்கினுன் என்க.

23. அண்ணல் - சிவபெருமான். தருதி - அழைத்து வருக. வேண்டியது ஏது - நீங்கள் விரும்பியது யாது. உமையை - உமாதேவியை. வேட்டு - மணந்து. இசைந்து - (அதற்கு) உடன்பட்டு. ஆவி - உயிர்.

கன்னிதவங் காணமுது மறையோன் போலக்
கௌரிபா லுறவெழுந்து கரங்கள் கூப்பி
அன்னவள்நின் றிடுதலுமோர் தவிசின் மேவி
அருந்தவம்நீ புரிந்திடலே தறைதி யென்றான். 24

என்றிடலும் விசையையுமை பரனைச் சேர்தற்
கிச்சித்தா ளெனப்பரனை இகழ்ந்து கூற
நின்றவுமை சினம்புரிந்து போதி போதி;
நீதியிலா வேதிய! நீ யென்ன உன்னை
இன்றுமணந் திடஅணைந்தே னென்று கூற
இடர்சூழ்கி இணையறுதா ளிணைகள் நோவக்
குன்றிலொரு புடைபோக விடையின் மீது
குழகனுய் எதிர்காட்சி கொடுத்தான் அன்றே. 25

நாயகனும் பரம்பரனை யெதிர்கண்(டு) அம்மை
நாணமொடு பணிந்துகர நளினங் கூப்பிப்
பேயனையேன் உனையறியா துரைத்த வெஞ்சொற்
பிழைபொறுக்க வேண்டுமெனப் பேச லோடும்
தூயநதிச் சடைக்கடவுள் அவைகள் எம்மைத்
துதித்தனவாக் கொண்டோம்; நீ சோரேல்; உன்னை
நேயமொடு நாளைமணம் புரியச் சேர்தும்;
நீயரிய தவம்புரிதல் நீங்கு கென்றான். 26

---

24. இட்டமுடன்-(உங்கள்) இஷ்டப்படி. இருந்தவராய் இருந்தவர்கள்-பெரிய தவத்தின்ராகி வீற்றிருந்தவர்கள்; **மடக்குஅணி.** கன்னி-பார்வதி. கௌரி - பார்வதி. கரங்கள் கூப்பியது பார்வதி தேவியாரின் செயல். புரிந்திடல் ஏது - செய்வதற்குக் காரணம் யாது.

25. விசையை - பார்வதி தேவியாரின் தோழி. பார்வதி தேவியார் சிவபெருமானை மணப்பதற்கு விரும்பினர் என்று விசையை கூற, கிழப்பிராமண வேடம் பூண்டுவந்த சிவபெருமான் சிவன் பித்தன்; பூதப்படையன்; அன்றியும் உணவு, ஆடை, அணி முதலியவற்றில் மிக இழிவுடையன் என்று இகழ்ந்து கூறினர் என்க. குழகனுய் - இளைய திருவுருவம் உடையவனாகி.

26. கரநளினம் - கைகளாகிய தாமரைகளை. பேய் அனையேன் - பேயை யொத்த நான். சோரேல் - தளர்ச்சியை அடையாதே. சேர்தும் - வருவோம். "உன்னை நாம் நாளைக்குத் திருமணம் புரிந்துகொள்ள வருவோம்! உன் தவத்தை விடுக" என்று சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளினர் என்க.

பொன்முருங்கு கனகவரை குனித்தோ னின்ன
புகன்றகலச் சிலவர்இது பொருப்பன் முன்போய்
நின்முருங்கு மொழிந்திடலும் உவகை யென்னும்
நெடுங்கடலி னிடைப்படிந்து நிமலி பால்வந்(து)
என்முயே வருகவென மனையிற் சேர்த்தான் ;
இறைவனுயர் கயிலையடைந் திலங்கு மோரேழ்
பின்முழ்செஞ் சடைமுனிவர் தம்மை யுன்னப்
பிஞ்ஞகன்முன் அடைந்திறைஞ்சல் பெற்று நின்முர்.27

(கலிவிருத்தம்)

அன்ன மாதவரை ஆதி தெரிந்தே
மன்னு கின்றஇம வான்மக ளாகும்
மின்னினைத் தரவி ஞவுதி ரென்னப்
பொன்னு லாவுமிம யக்கிரி புக்கார். 28

மாத வங்கொள் இம வான்எதிர் கொண்டே
ஆத னங்கள்மிசை அன்பொ டிருத்தி
ஏது வெஃகியிவ ணெய்திய தென்ன
ஆதி யோதிய தறைந்தனர் அன்றே. 29

கூறுதற் கிசைவு கொண்டது கண்டே
ஆறு லாவுசடை யண்ணல நண்ணி

---

27. பொன் தாங்கு - பொலிவு பொருந்திய. கனகவரை குனித்தோன் - மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமான். சிலவர் - ஏவலாளர். இது மொழிந்திடலும் என்க. நிமலை-பார்வதி. ஓர் ஏழ் பின்தாம் செஞ்சடை முனிவர் - பின்புறத்தில் தொங்கும் ஒப்பற்ற சடையினையுடைய ஏழு முனிவர்; அவர் காசிபர், அத்திரி, பரத்துவாசர், விசுவாமித்திரர், கௌதமர், ஜமதக்கினி, வசிட்டர் என்போர். பிஞ்ஞகன் முன் அடைந்து - சிவபெருமான் முன்னே (ஏழு முனிவரும்) வந்து. இறைஞ்சல் பெற்று - சிவபெருமானை வணங்குதலாகிய புண்ணியச் செயலைப்பெற்று; வணங்கியென்றபடி.

28. ஆதி – சிவபிரான். தர வினவுதிர் என்ன – நமக்குத் திருமணஞ் செய்து கொடுக்கும்படி அந்த இமவானிடத்தில் கேளுங்கள் என்று கூற. புக்கார் – (ஏழு முனிவர்களும்) சென்றார்கள்.

29. மாதவம் கொள் – பெரிய தவப் பயனைக்கொண்ட. எதிர்கொண்டு – ஏழு முனிவர்களையும் வரவேற்று. வெஃகி – விரும்பி. ஆதி ஓதியது – சிவபெருமான் கட்டளையிட்ட வார்த்தையை.

30. தாங்கள் எடுத்துச் சொன்னகாரியத்திற்கு மலையரசன் சம்மதித்ததைத் தெரிந்துகொண்டு என்க. இயைவு - இணக்கம்; வீறு தத்தம் இடை – மேன்மை பொருந்திய தங்கள் தங்கள் இடம்.

மாறி லாதஇம வான்இயை வோதி
வீறு தத்தமிடை மேவினர் அன்றே. 30

ஈது நின்றிட இமக்கிரி மன்னன்
காத லோடமரர் கம்மிய னீக்கொண்(டு)
ஓதிமக் கிரியி லூர்புனை வித்தே
ஆதி முன்புற அணைந்து பணிந்து. 31

ஒன்று பங்குனியில் உத்திர மாகும்
இன்று நன்றுபொழு(து) என்திரு மாதை
மன்றல் செய்யவரு வாயென முன்போ
வென்றி தன்னெடுபின் மேவுது மென்றான். 32

நார வேணியரன் நந்தியை நோக்கிச்
சீரு லாவிய சிறப்புடை மன்றற்
கியாரை யுந்தருதி யென்றலும் யாரும்
சேர நந்தியிறை சிந்தனை செய்தான். 33

உன்ன அக்கினி யுருத்திர ராதி
மன்னு ருத்திரர்கள் மால்முதல் விண்ணோர்
துன்னு மாமுனிவர் துன்று கணங்கள்
மின்னுறுங் கயிலை வெற்பிடை வந்தார். 34

வந்து நந்தியுறு வாயிலின் நண்ண
முந்து நந்தியரன் முன்பு விடுப்ப

---

31. அமரர் கம்மியன் – தேவ தச்சன்; அவன் விசுவகன்மன் என் போன். ஓது இமக்கிரியில் என்க. ஊர் புனைவித்து – தன் நகரத்தைத் திரு மணத்துக்குரிய அலங்காரம் செய்வித்து.

32. உத்திரம் – உத்திர நட்சத்திரம். இன்று பொழுது நன்று என்க. மன்றல் – திருமணம். என – என்று (இமவான்) கூற. வென்றி தன்னெடு – வெற்றியுள்ள சிவ கணங்களுடன்.

33. நாரம் – நீர்; இங்குக் கங்கை. யாரையும் தருதி – எல்லோரையும் அழைத்து வருவாயாக. சேர – வந்து சேருமாறு. நந்தி இறை – நந்தியெம் பெருமான்.

34. உன்ன – (நந்திதேவர்) நினைத்தவளவில். அக்கினி யுருத்திரர் – காலாக்கினி ருத்திரர்: ஆதி என்றதனால் கூஷ்மாண்டர், ஆடகேசர், வீரபத்திரர் முதலியோரையுங்கொள்க. கணங்கள் – சிவகணங்கள். மின் உறும் – ஒளி பொருந்திய; உமாதேவியார் திருவவதாரம் செய்திருந்த எனினுமாம்.

எந்தை தாளிணை இறைஞ்சினர் சூழ்ந்தார் ;
அந்த வேலைஅல ரோன்இது செய்வான். 35

ஆசிலா மகுட மாதி கலன்கள்
ஈசன் அங்கணிய் இன்பொடு நல்க
மாசிலா முதல்வன் மற்றிது கொண்டாம்
நேச மோடென நெடுங்கரம் வைத்தான். 36

வைத்து மெய்ப்பணிகள் வண்பணி யாக
நித்தன் அன்பொடு நிறைந்து தரித்தே
மொய்த்தி யாவரு முரண்கொடு சூழ
வித்த கன்திரு விடைப்புற முற்றான். 37

ஏற தேறினன் எழிற்கயி லாய
வீறு கின்றதிரு வெற்பை யகன்றே
ஊறி லும்பரோ டுருத்திரர் சூழ
மாறி லாஇம வரைப்புடை யுற்றான். 38

வேத மேவுதிரு வீதியில் நண்ணிக்
காதன் மாதர்நனி கண்டு மயங்கக்
கோதி லாதஇம வானுறு கோயில்
மாத வங்கொள்தலை வாயிலில் வந்தான். 39

---

35. நந்தி உறு வாயிலில்–நந்திதேவர் இருக்கும் முதற்கோபுரவாசலில். இறைஞ்சினர் வணங்கி : முற்றெச்சம். அந்த வேலை – அச்சமயத்தினில். அல ரோன் – பிரமதேவன்.

36. கலன்கள் – ஆபரணங்கள். பிரமதேவன், சிவபெருமான் அணிதற் குரிய ஆபரணங்களை எடுத்து அளிக்க, அவற்றைத் தாம் தொடுதல்மாத்திரம் செய்தார் என்க.

37. மெய்ப்பணிகள் – திருமேனியில் அணிந்திருந்த நாகாபரணங்கள். வண் பணி ஆக – (பொன்னும் மணியாலும் ஆகிய) வளமுள்ள அணிகள் ஆகும்படி. முரண் – வலிமை. வித்தகன் – ஞானவடிவாகிய சிவபெருமான். திரு விடைப்புறம் உற்றான் – அழகிய இடபவாகனத்தின் மீது எழுந்தருளினான்.

38. ஏறு – இடபம். வீறுகின்ற – விளங்கிக்கொண்டிருக்கும். வீறுகின்ற கயிலாய வெற்பு என்க. ஊறு இல் - துன்பம் இல்லாத. உருத்திரர் - ஏகாதச ருத்திரர்கள்.

39. வேதம் மேவும் - வேதவோசைநிறைந்த. கோயில் - அரண்மனை. தலைவாயில் - முதற் கோபுரவாசல்.

ஏங்கு ருவிடை இழிந்தவ ணிற்பப்
பாங்கு மேனையெதிர் பால்கொடு வந்தே
ஓங்கு தாளிணை யுவந்து விளக்கித்
தீங்கில் நாணமொடு சென்றனள் அன்றே. 40

ஆறு லாவுசடை யண்ணல் அதற்பின்
ஊறில் யாவரும் உவந்தயல் சூழ
மாறிலா தவது வைக்களம் நண்ணி
வீறு சிங்கவணை மீதுறு போது. 41

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

தென்பால் வடபால் உயர்ந்திழியத்
தெரிந்து தேவர் வருந்துதலால்
துன்பா சகன்ற குறுமுனியைத்
தொலையா மலயந் தனில்ஏவ
முன்பா னதுபோற் படியிருப்ப
முனிவர் அமரர் முகமலர்ந்தார் ;
அன்பாய் அரம்பை யர்கள்சூழ
அரன்பால் வந்தாள் அம்பிகையே. 42

வந்து பரணிப் பணிந்திடலும்
வள்ளல் தவிசின் இருத்தியென
எந்தை யோடும் உமையிருப்ப
இமவான் அடைந்தங் கெழில்மணிவி

---

40. ஏங்கு உரு - துயர் அடையாத; இளையாத எனினுமாம். பாங்கு மேனை - பண்பு (கற்பு) உடைய இமவான் மனைவியாகிய மேனை. மேனை சிவபெருமான் திருவடியைப் பாலினால் விளக்கிச் சென்றாள் என்க. தீங்கு இல் நாணமொடு என்க.

41. யாவரும் - உருத்திரர்கள் முதலாகிய எல்லாரும். வதுவைக் களம் - கலியாண மண்டபம். சிங்க அணை - சிங்காதனம்.

42. தேவர் முதலியோர் இமயமலையில் வந்து கூடியதனால் வடபால் தாழ்ந்து தென்பால் உயர்ந்தது என்க. தென்பால் உயர்ந்து வடபால் இழிய எனக் கூட்டுக. துன்பு ஆசு-துன்பமும் குற்றமும்; துன்பந்தருவதாகிய முக்குற்றங்கள் எனினுமாம். குறுமுனி - அகத்தியர். தொலையா மலையம் - எக்காலத்தும் அழியாத பொதியமலை ; "நடுக்கின்றி நிலியரோ வத்தை.....இமயமும் பொதியமும் போன்றே" (புறநானூறு - 2) ஏவ - சென்று இருக்கும்படி சிவபெருமான் கட்டளையிட. முன்பு ஆனதுபோல் படி இருப்ப - (அகத்திய முனிவர் அங்ஙனம் சென்றிருந்தமையால்,) பூமியானது முன்பு அமைந்தது போல ஏற்றத்தாழ்வின்றி இருக்க. அரம்பையர்கள் - தேவமகளிர்.

உந்து கரக நீர்வார்ப்ப
உயர்மாற் கரிய வொளிப்பதத்தைப்
பந்த வினைக ளறவிளக்கிப்
பரிந்து பூசை புரிந்தனனே. 43

பூசை புரிந்து நாரிகரம்
புனிதன் கரத்திற் கொடுத்தரனுக்(கு)
ஆசை பொருந்தும் அம்பிகையை
அளித்தே னென்ன அறைந்திடலும்
ஏசில் இமையோர் புகழ்ந்தார்கள் ;
இருவர் கீத மிசைத்தார்கள் ;
மாசில் கணங்கண் முழவறைந்தார் ;
மடவார் பல்லோர் வாழ்த்தெடுத்தார். 44

அங்கண் இனைய நிகழ்ந்ததற்பின்
அசல வேந்தன் அசலமுலைத்
திங்கண் முகத்தம் பிகைகேள்வன்
திருமுன் கனிபால் கொடுவந்தே
இங்கி தயில வேண்டுமென
இவைகொண் டாமென் றவைதம்மின்
மங்குல் மிடற்றோன் கரந்தொடலும்
மலரோன் சடங்கு தொடங்கினனே. 45

மன்றற் சடங்கு முடிந்ததற்பின்
மாலும் அயனும் மகபதியும்
துன்றுஞ் சுரரும் இமவானும்
சுற்றத் தோரும் மற்றெவரும்

---

43. எந்தை - சிவபெருமான். மணவி - இங்கு மேனை. கரகநீர் - கமண்டல நீரை. ஒளி - பெருமையினையுடைய. "பாதாள மேழினுங்கீழ் சொற் கழிவு பாதமலர்" என்றபடி, திருமாலுக்கும் காண்டற்கரிய திருவடி ஆதலால், "மாற்கரிய வொளிப்பதம்" என்றார். பதத்தை விளக்கி என்க.

44. நாரி கரம் - பார்வதி தேவியாரின் திருக்கரத்தை. ஏசு இல் - இகழ்ச்சி சிறிதும் இல்லாத. இருவர் - தும்புரு நாரதர் என்னும் இருவர்.

45. அங்கண் - அவ்விடத்தில். அசல வேந்தன் - மலையரசன். திருமணம் ஆனமைதோன்ற எம்பெருமானை 'அம்பிகை கேள்வன்' என்றார். கனிபால் - பாலும் பழமும். அயில வேண்டும் - உண்டருள வேண்டும். சடங்கு - திருமணச் சடங்குகள்.

கொன்றை முடித்த நெடுவேணிக்
குழகன் தாளுங் குழகனிடம்
என்றும் பிரியா உமைதாளும்
இணங்கும் அன்பால் வணங்கினரே. 46

ஈது புரிந்து முற்றுதலும்
எமையாள் உமையாள் இருந்தாதை
ஆதி கரமுன் தொடுஞ்சேடம்
அனைவர் தமக்கும் அளித்தனன் ; அப்
போதில் இரதி வந்தெந்தாய் !
போர்வேள் தன்னை அளித்தியெனச்
சோதி மதனை நினைந்திடலும்
சுரர்கள் வெருவத் தோன்றினனால். 47

மருவார் இதழி மதிபொதிந்து
வளர்செஞ் சடில வானவன்அத்
திருமா லளித்த மலர்ப்பகழிச்
சிலையான் வதனந் தெரிந்தருளி
உருவாய் இரதிக் கிருத்தியரோ
ஒழிந்தோர்க் கெல்லா முருவல்லா
தருவாய் இருந்துன் னரசுபுரி
கென்றே அவளோ டவன்விடுத்தான். 48

---

46. துன்றும் சுரரும் - நெருங்கியுள்ள தேவர்களும். மகபதி - இந்திரன். சுற்றத்தோரும் - (மலையரசன்) உறவினரும். வேணிக்குழகன் தாளும் உமை தாளும் வணங் கினர்என்க.

47. முற்றுதலும் - நிறைவேறியவுடன். தாதை - மலையரசன். சேடம் - பிரசாதம். போர்வேள் தன்னை - (நின்னோடு) போர் செய்த மன்மதனை. அளித்தி - உயிர்ப்பித்துத் தருக. சோதி - சிவபெருமான். தேவர்கள், தாங்கள் செய்த குழ்ச்சியினைக் கருதி மன்மதன் இப்போது குறை கூறுவானே என்று அஞ்சினர் ஆதலால், '' சுரர்கள் வெருவ '' என்றார்.

48. இதழி - கொன்றைப்பூ. மலர்ப்பகழிச் சிலையான்-மன்மதன். பகழி-அம்பு. சிலை - வில். மலர்ப்பகழி, மலர்ச்சிலை எனக் கூட்டினும் அமையும் ; மன்மதனுக்கு மலர் வில்லும் ஒன்றுண்டு ; அதனால் அவனுக்குப் ' புட்ப தனுவன் ' என்ற ஒருபெயரும் வழங்குகிறது என்க. இரதிக்கு மட்டும் தோன்றும் உருவுடையவனாக நீ விளங்கி ஏனையோர்களுக்கு அருவமாய்த் திகழ்ந்து உன்னரசைச் செலுத்துக என்க, இருத்தியரோ, அரோ : அசை.

கன்னற் சிலைவே டணைவிடுத்துக்
கௌரி யோடும் விடையேறி
மின்னுங் கயிலை யடைந்தவர்க்கும்
விடையை யுதவி விடையையிழிந்(து)
உன்னற் கரிய அரியணைமேல்
உமையோ டிருப்ப உயிரணைத்தும்
இன்னல் அகல இருங்காம
இன்ப மேவி யிருந்தனவே. 49

பின்னர் ஒருநாள் அரிமுதலாம்
பெருஞ்சி றிமையோர் மேருவின்பால்
மன்னி யிருந்தே எமைவருத்தும்
வலிய சூரன் வலிகெடுப்ப
அன்ன நடைமா தினைமணந்தும்
அரன்ஈந் திலன்மைந் தணையெனவே
உன்னிக் கயிலைப் பரம்பரன்நேர்
உற்று வேண்ட நச்சினரால். 50

வேளை யெரித்த விழியாளன்
வேளை யறிந்து மீளுதற்கு
நாளும் உலவு காலைவிட
நந்தி தனைக்கண் டஞ்சியது

---

49. கன்னல் சிலை - கரும்பாகிய வில்லையுடைய. வேள் + தணை = வேடணை. வில்கொண்டு வேட்டையாடுவான் என்னும் பொருள் தோன்ற 'வேடணை' என்றார். விடையை - உத்தரவை, வாகனத்தை. உன்னற்கு அரிய - இன்ன தன்மையுடைய தென்று வாக்கினால் சொல்லுதற்கே அன்றி, மனத்தினாலும் நினைத்தற்கரிய.

சிவபெருமான் தேவியாரோடு கூடியின்ற பொழுதே எத்தொழிலும் நிறைவேறுமன்றி, நீங்கி இருக்குங் காலத்து யாவும் நிகழா என்பதை, "ஆக மங்கள் எங்கே அறுசமயம் தானெங்கே, யோகங்கள் எங்கே உணர்வெங்கே - பாகத்(து), அருள்வடிவுந் தானுமாய் ஆண்டிடலனேல் அந்தப், பெருவடிவை யாரறிவார் பேசு" என வரும் திருக்களிற்றுப்படியாரினால் அறியலாம்.

50. அன்ன நடை மாது-உமாதேவியார். கயிலைப்பரம்பரன் நேர் உற்று-கயிலாய பதியின் சந்நிதியில் சென்று. நச்சினர் - விருப்பங் கொண்டனர்.

51. வேளை அறிந்து - தக்க சமயத்தைத் தெரிந்துகொண்டு. கால் - காற்று, வாயுதேவன். காலைவிட - வாயுதேவனை அனுப்ப. நந்திவிட - நந்தி தேவர் உள்ளே செல்லும்படி அனுமதிக்க. வரன் - வரம்.

மீள வரலுங் கயிலைதனில்
விண்ணோ ரடைந்து நந்திவிட
ஆளும் பரனைத் தொழுதேத்த
அரனிங் கேது வேண்டுமென. 51

சற்றுந் தகவில் கொடுஞ்சூரன்
தன்னல் இந்நாள் இன்னல்மிக
உற்று வருந்தித் திரிந்திளைத்தோம்;
உன்னைப் போல ஒருசுதனை
வெற்றி பொருந்த அளித்தெமது
விழுமந் துரப்ப வேண்டுமென
அற்றுன் றியசீர்க் களப்பெருமான்
அறுமா முகங்கொண் டாங்கிருந்தான். 52

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

செம்மைகொள் ஆறு முகத்தொ டிருந்தே
தீவிழி யாறினும் ஆறு புலிங்கம்
வெம்மையொ டுந்தர அங்கவை சென்று
வீறுல கத்தும் விரிந்திட அஞ்சிப்
பொம்மல் தருங்கவின் அம்மை யெழுந்து
புலம்பு சிலம்பு பொலன்கழல் மோத
இம்மென ஓடி இருக்கை புகுந்தாள்;
எங்கணு மாகி இரிந்தனர் விண்ணோர். 53

---

52. சுதனை - புதல்வனை. விழுமம் துரப்ப - துன்பத்தை நீக்க. அல் துன்றிய சீர்க்களப்பெருமான் - கருநிறம் பொருந்திய சிறந்த திருக்கழுத்தினையுடைய சிவபெருமான். ஆறு மா முகங்கொண்டு - (தமக்குரிய) ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்னும் ஐந்து திரு முகங்களோடு அதோமுகம் (கீழ் நோக்கிய முகம்) ஒன்றும் சேர ஆறு திருமுகங்களைக்கொண்டு. "பூங்கயிலை வெற்பிற் புனிமலர்ப்பூங் கோதையிடப், பாங்குறையும் முக்கட் பரஞ்சோதி - ஆங்கொருநாள், வெந்தகுவர்க் காற்றுத விண்ணோர் முறைக்கிரங்கி, ஐந்து முகத்தோ டதோமுகமும் - தந்து, திருமுகங்க ளாறுகி" **என்பது கந்தர் கலிவெண்பா;**

53. தீ விழி ஆறினும் - (ஆறு திருமுகங்களிலும் உள்ள) ஆறு நெற்றிக் கண்களினின்றும். புலிங்கம் - நீப்பொறி. வீறு உலகத்தும் - வேறுகிய உலகமெங்கும். வீறு-தனிமை; வேறு. பொம்பல் - வளப்பம்; பொலிவு. பொலன் கழல் சிலம்பு மோத - பொலங்கழலில் சிலம்பு மோதத் தக்கதாக. இம்மென ஓடி - விரைந்து ஓடி. இருக்கை - அந்தப்புரம். இரிந்தனர் - ஓடினர்.

ஓடிய விண்ணவர் கூடினர் வந்தே
உந்திய தானவ ரானவர் தம்மைச்
சாடிய விங்கொரு மைந்தனை யெந்தாய்!
தந்தருள் என்றனை வந்தனை செய்ய
ஈடுறு வெம்மைகொள் அங்கி யளித்தாய்;
எங்ஙன முய்வதி யாமென ஓதப்
பீடுறு மோர்முக மாகி யிருந்து
பெருந்தழல் முன்பு வரும்படி முன்ன. 54

அங்கிலை தன்னில் விரிந்திடு செந்தீ
ஆறு பெரும்பொறி யாகி அரன்றன்
முன்னுற வந்திட அண்ணல் தெரிந்தே
மொய்ம்புள தேயுவை வாயுவை நோக்கி
மன்னிய இப்பொறி தன்னை யெடுத்தே
மங்கலில் கங்கையுள் வைத்திடு மென்றே
இன்னலில் சத்திகொ டுத்திட மாறி
எடுத்துயர் கங்கை அடுத்ததில் வைப்ப. 55

மங்கலில் கங்கையும் அப்பொறி தன்னை
வண்ணமு றுஞ்சர வணமிசை வைப்பப்
பொங்கெழில் ஐயிரு திக்கினு மால்முற்
புங்கவர் நின்று புரந்தனர்; அப்போ(து)

---

54. உந்திய - எங்கணும் பதவியினின்றும் தள்ளிய. தானவர் ஆனவர் - சூரமன்பன் முதலாகிய அசுரர்கள். சாடிய - அழிக்கும் பொருட்டு. செய்ய - செய்தால். ஈடு உறு - வலிமைபொருந்திய. அங்கி - நீப்பொறிகளை. சிவபெருமான் அத்தீப்பொறிகளைத்தன் முன்னல் வரும்படி நினைத்தருளினர் என்க.

55. மொய்ம்பு - வலிமை. தேயுவை - அக்கினிதேவனை. மாறி எடுத்து - அக்கினிதேவனும் வாயுதேவனும் மாறிமாறி எடுத்துச்சென்று. கங்கையை அடுத்து அதனிடத்தில் வைக்க என்க.

56. சரவணமிசை - சரவணப் பொய்கையின்கண்; நீல நிறத்தையுடைய தருப்பை வளர்ந்த பொய்கையின் கண்: (சரவணம்-சரவனம்; சரம்-நாணற் புல்; வனம்-நீர்.) இதனை நக்கீரர் **திருமுருகாற்றுப்படையில்**, "நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை" என்றார். "நிவந்தோங் கிமயத்து நீலப் பைஞ்சுனை" என்பது **பரிபாடல்**. மால் முன் புங்கவர் - திருமால் முதலிய தேவர்கள். ஐயிரு திக்கினும் மால்முன் புங்கவர் நின்று புரந்தனர் - பிரமதேவன் வானிலும், திருமால் பூமியிலும், இந்திரன் முதலிய திக்குப் பாலகர் தத்தமக்குரிய திசைகளிலும் நின்று காத்தனர்; இதனை, "ஆரணன் விண்ணகம் அச்சு

அங்கதில் ஆறு முகத்தொடும் ஈரா(று)
அத்தமொ டுங்கம லத்தி னிடத்திற்
சங்கர னேமுரு கேசன்எனச்சீர்
தங்க இருந்திட அண்டர்கள் கண்டார். 56

பன்னிரு மொய்ம்பு நெடுந்தகை தன்னைப்
பால தருத்தி வளர்த்திட மார்பிற்
பொன்னி யிருத்திய பச்சுரு வத்துப்
புங்கவன் முற்படு புங்கவ ரெல்லாம்
மின்னறு மீனை விடுத்தது கண்டே
வீறிய வாறு சிரூரென மேவ
அன்ன மடந்தையர் அன்னம் உலாவும்
அன்ன தடத்தில் அடைந்து புரந்தார். 57

ஓதிது நின்றிட முன்னர் எழுந்தே
ஓடிய சங்கரி பின்புதி ரும்பிச்
சோதி யிடத்தில் அடைந்தும டங்கல்
சுமந்திடு கின்ற துலங்கணை மேவக்

தன்புவி, வாரணன் முதலிய மாதிரத்துளோர், ஏரண அமரர்கள் எண்டிக் காகியே, சீரணி சரவணஞ் சேர்ந்து போற்றினர்'' எனவரும் **கந்தபுராணச் செய்யுளால்** அறியலாம். ஈராறு அத்தமொடு - பன்னிரண்டு திருக்கரங் களோடும்.

சங்கரனே முருகேசன் என்பதை, ''அருவமும் உருவு மாகி அநாதி யாய்ப் பலவாய் ஒன்றுமாய்ப், பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக், கருணைகூர் முகங்கள் ஆறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே, ஒருதிரு முருகன் வந்தாங்(கு) உதித்தனன் உலகம் உய்ய'' எனவரும் **கந்த புராணச் செய்யுளால்** உணரலாம்.

57. மொய்ம்பு-தோள். பாலது - பால் ; அது : பகுதிப் பொருள் விகுதி. பொன் - இலக்குமி. பச்சு உருவத்துப் புங்கவன் - பச்சை நிறமுள்ள திருமால். மின் அறு மீனை - மின்னுகின்ற ஆறு நட்சத்திரங்களாகிய கார்த்திகை மாதர் களை. பால் அருந்தி வளர்த்திட மீனை விடுத்தது கண்டு என்க. அன்ன மடந் தையர் - அந்தக் கார்த்திகை மாதர்கள்.

58. ஓது இது நின்றிட - சொல்லிய இவ்வரலாறு நிற்க. மடங்கல் - சிங் கம். முன் சிலம்பது உடைந்து அதில் வீழ் கொன் நவ மாமணி என்க. கொன் - பெருமை. நவ மாமணி - நவரத்தினங்கள்: அவை, கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன, சாயை ஏய்தலும் - நிழல் பொருந்துதலும்.

கோதில்சி லம்பது டைந்ததின் முன்வீழ்
கொன்னவ மாமணி அன்னவள் சாயை
ஏய்தலும் ஒன்பது மங்கைய ராகி
எந்தை விளித்திட இன்பொடு வந்தார். 58

வித்தக மங்கையர் எம்பெரு மானே
விருப்பொடு கண்டு கருப்பம தாகச்
சத்திசி னந்து கருப்பய வாதே
தாங்குமின் என்றிட ஏங்கினர் ஆங்கே
மெத்திய மேனி வியர்ப்பில் இலக்கம்
வீரர் உதித்தனர்; ஆரியை சொல்லால்
உத்தம மாதர்கள் பின்பொரு நாளில்
ஒன்பது மைந்தரை அன்பொடு தந்தார். 59

மாசறும் அன்னவர் தம்பெயர் வீர
வாகுவெ னுந்திரு வள்ளல் வகீக்கைக்
கேசவ னும்பர் புகழ்ந்திடு வீர
கேசரி வீரம கேந்திரன் என்போன்
வீசுபு கழ்ப்பெறு வீரம கேசன்
வீரபு ரந்தரன் வீர வரக்கன்
ஆசறு வீரதி வாகரன் வீர
ராந்தகன் வீர மடைந்திடு தீரன். 60

---

59. வித்தகம் - ஞானம். மங்கையர் - இங்கு, ஒன்பது சத்திகள். அவர்கள் மாணிக்க வல்லி, முத்து வல்லி, புட்பராக வல்லி, கோமேதக வல்லி, வைடூரிய வல்லி, வைர வல்லி, மரகத வல்லி, பவள வல்லி, இந்திரநீல வல்லி என்போர். இந்நவசத்திகளும் சிவபெருமானைக் கண்டு விரும்பியவுடன் கருப்பம் அடைந்தனர் என்க. கரு பயவாதே தாங்குமின் - (நீங்கள்) ஈனுமலே (பல காலம்) கருப்பத்தைத் தாங்குவீர்களாக. என்றிட - என்று சபிக்க. வியர்ப்பு - (அச்சத்தினால் வந்த) வேர்வை. இலக்கம் வீரர் - இலட்சம் வீரர்கள். ஆரியை - அம்பிகை. ஒன்பது மைந்தர் - நவவீரர். தந்தார் - (நாபியினிடமாக) ஈன்றார்கள். இந்நவ வீரர்கள் தத்தம் தாய்மார்களின் நிறத்துடன் விளங்கினர்கள்.

60. வகீக்கைக் கேசவன் உம்பர் புகழ்ந்திடு வீரவாகு என்க. வீர அரக்கன் - வீரராட்சசன். வீரதிவாகரன் - வீரமார்த்தாண்டன். மாணிக்கவல்லியிடம் வீரவாகுதேவரும், முத்து வல்லியிடம் வீரகேசரியும், புட்பராக வல்லியிடம் வீரமகேந்திரரும், கோமேதக வல்லியிடம் வீரமகேச்சுரரும், வயிடூரிய வல்லியிடம் வீரபுரந்தரரும், வயிர வல்லியிடம் வீரராட்சச

மற்றவர் தங்களை ஆதி தெரிந்தெம்
மைந்தர்கள் என்றுமை மாதொடு கூறி
நற்றிறல் கொண்ட இலக்கர்க ளோடும்
நந்திரு மைந்தன தேவல்பு ரிந்தே
உற்றிடு வீரென ஓதுபு மாதோ(டு)
உந்துவி டைப்புறம் ஒல்லை புகுந்தே
அற்றம றுஞ்சர வணமத டைந்தான்
ஆசறு வானவ ரானவர் சூழ. 61

மாசிலி மக்கிரி யின்புடை தன்னில்
மன்னு செழுஞ்சர வணமுன மெய்தத்
தேசுறு மன்னதில் வைகிய செவ்வேள்
சிற்பரன் நாரி செறிந்தது கண்டான் ;
பாச மகற்றரன் அம்பிகை யோடுன்
பாலக னீக்கொடு வாவென ஓத
ஆசறு பூவி லிழிந்துற டந்தே
ஆறுரு மைந்தனை அம்மை யெடுத்தாள். 62

அம்மை யெடுத்துழி ஆறுரு மைந்தன்
ஆறுமு கங்களும் ஆறிரு கையும்
செம்மை பொருந்தொரு மேனியு மாகச்
செப்பின யொத்த திருத்தன நின்று

ரும், மரகத வல்லியிடம் வீரமார்த்தாண்டரும், பவள வல்லியிடம் வீரராந்தகரும், இந்திரநீல வல்லியிடம் வீரதீரரும் தோன்றினர்கள் என்க.

61. எம் மைந்தர்கள் - (இவர்கள்) நம்முடைய புத்திரர்கள். நம் திருமைந்தன் என்றது முருகக் கடவுளை. என ஓதுபு - என்று கூறி. விடைப்புறம் - இடப வாகனத்தின் முதுகில். அற்றம் - சோர்வு.

62. இமக்கிரியின் புடைதன்னில் - இமயமலையின் சாரலில். சிற்பரன் நாரி - சிவபெருமானும் உமாதேவியாரும். அரன் அம்பிகையோடு ஓத அம்மை எடுத்தாள் என்க.

63. செப்பு - சிமிழ். பொம்மலுடன் - பொலிவுடன். சிற்பரனைப் பணிவிக்க - சிவபெருமானிடத்தில் கொண்டுவந்து பணியும்படி செய்ய. கந்தன் – சேர்க்கப்பட்டவன் ; முருகன்: இதனை "...அந்த மில்லதோர் மூவிரு வடிவு மொன் றுகிக் கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்" எனவும், "சேயவன் வடிவ மாறுந் திரட்டிநீ ஒன்றுய்ச் செய்தாய், ஆயத னலே கந்த னுமெனும் நாமம் பெற்றான்" எனவும் வரும் கந்தபுராண அடிகளால் அறியலாம். உரம் - திருமார்பு.

பொம்மலு டன்சொரி பாலத ருத்திப்
பொற்புறு சிற்பர னீப்பணி விக்க
நம்மை யளித்திடு கந்தனை அன்பால்
நாதன் எடுத்துர மீதில் அணைத்தே. 63
அந்தரி யோடு விடைப்புடை வைத்தங்(கு)

ஆரல் மடந்தைய ருக்கருள் செய்தான் ;
சுந்தரி மைந்தன் அருந்து முலைப்பால்
துண்ணென முன்னர் சொரிந்தது தன்னில்
சிந்திய தோடுபு கந்தன் வளர்ந்த
செழுஞ்சுனை யூடு செறிந்திட அங்கண்
வெந்திறல் மீனென வாழ்பவர் உண்டே
வீறிய தொல்லுரு மேவினர் மன்னே. 64

கொற்றம துற்ற பராசரன் நல்கும்
கோதகல் ஆறு குமாரரும் அன்னன்
சொற்றிடு சூள்கொடு மீனென வாழும்
துன்ப மகன்றுயர் தொல்லுரு வுற்றே
பெற்ற மிசைக்கிரி மாதொ டிருந்த
பெருந்தகை முன்துதி பேசி வணங்க
அற்றம தற்ற புகழ்கொள் பரங்குன்
றத்திடை நீவிர் அடைந்திடு மென்றான். 65

---

64. ஆரல் மடந்தையர் - கார்த்திகை மாதர். சிவபெருமான், தன்னை வணங்கி நின்ற கார்த்திகை மாதர்களை நோக்கி, நீவிர் கந்தனுக்கு முலைப்பால் கொடுத்துப் பாதுகாத்தமையால், **கார்த்திகேயன்** என்னும் நாமம் அவனுக்கு வழங்கக்கடவது என்றும், உங்களுக்குரிய கார்த்திகை தினத்தில் இவனை வழிபடுவோர்க்குத் தீவினைகளைப்போக்கி முத்தியும் அளித்தருளுவோம் என்றும் அருள்புரிந்தார் என்பார், "**ஆரல் மடந்தையருக்கு அருள்செய்தான்**" என்றார். சுந்தரி - உமாதேவியார். கந்தப் பெருமானுக்கு உமாதேவியார் அருந்திய பாலில் சிந்திய துளிகள் சரவணத்தில் விழ, ஆங்கே சாபத்தினால் மீன் வடிவமாக இருந்த பராசர முனிவருடைய புதல்வர்கள் உண்ணவே, அவர்கள் பழைய வடிவத்தை அடைந்தனர் என்க. ஒடுபு - ஓடி..

65. கொற்றம் - (பஞ்சேந்திரியங்களை அடக்கிச் செய்த தவ) வெற்றி. சூள் - சபதம். பெற்றம் - இடபவாகனம். பரங்குன்றம் - திருப்பரங்குன்றம் ; இது, முருகனது ஆறுபடை வீடுகளில் ஒன்று : மதுரைமாநகர்க்கு அருகிலுள்ளது.

அந்தர மீதுறும் ஆரலை விண்ணோர்
ஆரையும் அன்புடன் அங்கண் விடுத்தே
எந்தை பிரானுயர் வெள்ளி விலங்கல்
இணங்கி யதன்கண் இருந்திடு போதில்
வெந்திறல் கொண்ட இலக்கர்கள் ஒன்பான்
வீரர்கள் கந்தனை வந்தனை செய்தார்;
சுந்தரி மைந்தன் எழுந்தவ ரோடும்
தூவிளை யாடல் தொடங்கினன் அன்றே. 66

மண்ணி லுலாவுறும்; விண்ணி லுலாவும்;
வண்ண அயன்பதம் நண்ணி யுலாவும்;
கண்ணன் இருந்த தலத்தி லுலாவும்;
கண்ணுதல் நண்ணிய கண்ணி லுலாவும்;
எண்ணில் வளம்பெறு மண்புனல் தீகால்
இன்புறு விண்தனில் அண்ட முலாவும்;
பண்ணியல் வீணை இசைத்தினி தாடும்;
பாடும் அரன்தரு பாலகன் அம்மா. 67

நீடு கடல்களை யொன்று படுத்தும்;
நேமி நகத்தை நிலத்தி லழுத்தும்;
ஈடுறு திக்கர வங்களை வெற்பு(டு)
இன்பொடு கட்டி இழுத்திடும்; மாகத்

---

66. ஆரல் மாதர் - கார்த்திகை மாதர். வெள்ளி விலங்கல் - வெள்ளியங் கிரி; கயிலாயமலை. இணங்கி - அடைந்து. இலக்கர்கள் - இலட்சம் வீரர்கள். தூ விளையாடல் - அருட்டிரு விளையாடல்கள்.

67. அயன்பதம் - பிரமலோகம். கண்ணன் இருந்த தலம் - வைகுந்தம். நண்ணிய கண்ணில் - இருக்குமிடத்தில். அண்டம் - அண்டங்கள். பண் இயல் - பண்ணும் இசையும் (பொருந்த). இசைத்து - வாசித்துக்கொண்டு.

68. நேமி நகம் - சக்கரவாளகிரி; இது சக்கரவடிவாக உலகத்தைச் சூழ்ந்திருக்கும் ஒரு மலை ஆகும்; இம்மலை எழுகடலுக்கு அப்பால் விளங்கும் பொன்பூமியை அடுத்துத் திகழ்வது என கந்தபுராணம் — அண்டகோச படலம் கூறும். ஈடு உறு - பெருமை பொருந்திய; வலிமையுடைய எனினு மாம். திக்கு அரவங்கள் - அஷ்ட திசை நாகங்கள். வெற்பு - அஷ்டகுல பர்வதங்களில். மாகத்து ஓடு இருவோரையும் - வானத்தில் செல்லுகின்ற சந்திர சூரியர்களையும். பதம் - இடம். எண்டிசையாளர் - அஷ்டதிக்குப் பாலகர்கள். பிடுங்குபு - பெயர்த்து. பிறழ்ந்திட - (ஒன்றிலொன்று) மாறுபடும்படி.

தோடிரு வோரையும் முன்னியல் பன்றி
ஒருத்தர் பதத்தில் ஒருத்தரை உய்க்கும்;
பீடுறும் எண்டிசை யாளர் பதங்கள்
பிடுங்குபு வல்லே பிறழ்ந்திட வைக்கும். 68

தண்டரு கொண்டல் விசும்பி லுறுங்கோ
தண்டம் வளைத்துயர் தாரகை யெல்லாம்
உண்டை யெனும்படி கொண்டிமை யோர்கள்
உரங்கள் சிரங்களி னூடு தெறிக்கும்;
மண்டிது போல அநேக மியற்ற
மற்ற தியற்றிய வன்மைய ராரென்(று)
அண்டரும் மன்னனும் மேருவின் நின்றும்
அயற்கிது கூற அகன்றனர் அங்கண். 69

(கலிநீலத்துறை)

அந்நே ரத்தினி லன்ன நகத்தை அலைத்தே
முன்னே நின்றெரூர் முகத்தொடும் ஆறு முகத்தோன்
நன்னே யத்துடன் ஆடி யுலாவுதல் நாடி
இன்னே னேயிவை செய்தவ னுமென எண்ணி. 70

வெவ்வேள் ஆகம் எரித்தவன் மைந்தனை வெல்வான்
அவ்வேள் விக்கிறை உம்பர்க ளோடும் அவற்சூழ்ந்(து)
எவ்வேல் தன்னையும் உய்த்தனன் உய்த்தவை யெல்லாம்
செவ்வேள் மீதல ருற்றன ஒத்தன சென்றே. 71

---

69. தண் தரு – குளிர்ச்சியைத் தருகின்ற. விசும்பில் உறும் கோதண்டம் – வான வில்லாகிய இந்திர தனுசு. தாரகை – நட்சத்திரம். உண்டை – (வில்லில் வைத்து அடிக்கும்) வட்டு. தெறிக்கும் – சுண்டுவார். மண்டு – பொருந்திய. இதுபோல – இந்த விநோதம்போல. மன்னன் – இந்திரன். இந்திரனோடு தேவர்களெல்லாம் பிரமதேவனிடத்து முறையிடச்சென்றார்கள் என்க. அயன்+கு = அயற்கு.

70 அன்ன நகத்தை – அந்த மேருமலையை. நல் நேயம் – நல்ல இன்பம். ஆடி உலாவுதல் நாடி – விளையாடல் செய்துகொண்டு உலாவுதலை (த் தேவர்கள்) பார்த்து. இன்னேனே – இவனே; ஏ: தேற்றம். இவை – இத்தகைய விபரீதச்செயல்கள்.

71. வெவ்வேள் ஆகம்-ஆசையை யுண்டாக்கும் மன்மதன் உடலை. வேள் விக்கு இறை – இந்திரன். அவன் – இங்கு முருகக்கடவுள். எவ்வேல் தன்னையும் - பல விதமான ஆயுதங்களையும்; (வேல் – இங்கு ஆயுதப்பொது). அலர்–மலர்.

பிள்ளைத் தண்மதி சூடிய கண்ணுதல் பிள்ளை
உள்ளத் தாலொரு வில்கொடு நற்கணை யொன்றுல்
வெள்ளைத் தந்தியை அட்டனன் ; அட்டபின் விண்ணோர்
வள்ளற் கேழ்கணை உய்த்தவ சத்தை வழங்கி. 72

நாலம் பால்வரு ணன்றணை ஒன்றுறு நான்மைக்
கோலம் பால்இய மன்றணை வென்(று)இரு கோலால்
ஆலம் பாவிய அங்கியை அங்கடல் செய்தான் ;
வாலம் பான்மொழி அந்தரி தந்திடு மைந்தன். 73

குன்ரு னின்றவ ரல்லர் அவன்புடை கூடி
னின்ரூர் யாவரும் ஓடுத லோடு நெடுஞ்சீர்
துன்ரு ருமுக னங்கது கண்டு துரந்தே
முன்ரு னுற்ற களத்திடை வந்தனன் மொய்ம்பால். 74

(தரவு கொச்சகக் கலிப்பா)

மற்றதனை நாரதனு மாமுனிகண்(டு) அண்டர்குரு
உற்றுழிச்சென் ரேதுதலும் உம்பர்கள்தம் வாழ்வெல்லாம்
இற்றதுகொ லெனவஞ்சி எழுந்துகுக னிடத்(து)அடைந்து
பொற்றிருத்தா ளிணைதொழுது புகழ்ந்திணைய புகல்கின்ரூன். 75

அத்த! நினை யறியாமல் அமர்புரிந்த அண்டர்கள்தம்
மெத்துபிழை பொறுத்தெழுப்ப வேண்டுமென வெண்மைநிறத்

72. உள்ளத்தால் ஒரு வில்கொடு – திருவுள்ளத்தால் ஒரு வில்லை உண்டாக்கி அதனைக் கைக்கொண்டு. வெள்ளைத்தந்தியை - வெள்ளையானையாகிய ஐராவதத்தை. விண்ணோர் வள்ளற்கு – இந்திரன்மேல் ; வள்ளற்கு: உருபுமயக்கம். ஏழ்கணை உய்த்து அவசத்தை வழங்கி என்க. அவசம் - மூர்ச்சை.

73. ஒன்று உறு நான்மைக் கோல் அம்பால் – ஐந்து பாணங்களால். கோல் – அம்பு. ஆலம் பாவிய – விடத்தின் தன்மை பொருந்திய. வால் அம்பால் மொழி அந்தரி – தூய பால்போன்ற இனிய மொழியையுடைய உமாதேவியார்.

74. குன்ரு னின்றவர் அல்லர் – உயிர் குறைந்தவர் அல்லாதவர்கள். துன்று ஆறு ஆம் முகன் – மிகுந்த சிறப்புப் பொருந்திய ஆறுமுகக்கடவுள். துரந்து – துரத்தி. மொய்ம்பு - வலிமை.

75. அண்டர்குரு - தேவர்குருவாகிய பிருகஸ்பதி. இற்றது கொல் – முடிந்து போய்விட்டதா. குகன் - முருகேசன்.

76. அத்த - ஐயனே : விளி. மெத்து பிழை – பெரிய குற்றங்களை. வெண்மை நிறத்து அத்தி – ஐராவதம். அத்தியின்மேல் அரசு – இந்திரன். விழுந்தார்கள் – முன்பு இறந்துபட்ட தேவர்கள்.

தத்தியையும் அத்தியின்மேல் அரசையுமற் றிவரையும்
வித்தகனங் கெழுப்புதலும் விழுந்தார்கள் எழுந்தார்கள். 76

உஞ்செழுந்த இமையோர்கள் உயர்குகனென் றுணராதே
வெஞ்சமராற் றினமெனவே மிகநடுங்கி அவனடிதாழ்ந்(து)
அஞ்சலிசெய் தேத்துதலும் அஞ்சலிரென் றருள்கூர்ந்து
குஞ்சரமா முகற்கிசைய குமரவேள் கூறுவான். 77

சேயெனமுன் பெமைக்கருதிச் செருப்புரிந்தீர் ; இனியெமது
தூயவிறல் காணுமெனத் தொல்லுலகம் அண்டமுயிர்
ஆயவெலாந் தனதுருவே அல்லால்வே றில்லையென
நேயவொரு வடிவுகொடு நின்றுன்எம் பெருமானே. 78

அன்பொடுமற் புதத்தோடும் அமரரெல்லாந் தொழுதேத்தக்
கொன்பொலிமுன் னுருவாகிக் குமரவேள் நின்றிடலும்
இன்பொடுநீ விசையாட இவ்விடைவே றுற்றவெலாம்
முன்பெனவைத் தருடியென முகிலூர்தி வேண்டினனுல். 79

மகவேந்தன் வேண்டஉமை மகவேந்தல் தம்பொருட்டால்
மிகவேவே றுற்றவெலாம் வேறின்றி முன்னுளவாம்
தகவேய்க வெனஎவையுஞ் சார்ந்தனஅப் படி ; நவிரப்
பகைவேலோன் குகன்ருள்கள் பணிந்திசைய பகர்கின்றுன். 80

இங்குநிசை யருச்சிக்க வேண்டுமென இசைந்தருளிப்
பொங்குகயி லைக்கொருசார் பொருப்பினிடை விருப்பொடுபோய்

---

77. உஞ்சு–பிழைத்து. வெஞ்சமர்-கொடியபோர். குஞ்சர மா முகற்கு–விநாயகக்கடவுளுக்கு. குஞ்சரம்–குஞ்சத்திசையுடையது; யானை. (குஞ்சம் - தந்தம்.)

78. சேய் என - சிறுபிள்ளை என. செரு - போர். விறல் - வல்லமை. ஒருவடிவு – ஒரு விசுவரூபம்.

79. கொன் - பெருமை. குமரவேள் முன்னுருவாகி - குமாரக்கடவுள் முன்போல பாலசுப்பிரமணியக் கடவுளாக. இவ்விடை-இவ்விடத்தில். முன்பு என - முன்போலாகும்படி. முகிலூர்தி - மேகவாகனனுகிய இந்திரன்.

80. மக வேந்தன் - இந்திரன்: (மகம் - யாகம்). உமை மகவு ஏந்தல் - உமாதேவியின் குமாரராகிய முருகக்கடவுள். தம் பொருட்டால் - அத்தேவர்களுக்காக. தகவு ஏய்க - தகுதிப்படி பொருந்துக. நவிரப் பகை வேலோன் - மலைகளுக்குப் பகைவனுகிய வச்சிராயுதமேந்திய இந்திரன். நவிரம் - மலை.

81. கயிலாயமலை ஊழிகடோறும் உயர்ந்தோங்குகின்றமையால், 'பொங்குகயிலை' என்ருர்: "ஊழிதோ றூழி முற்றும் உயர்பொன் கொடித்

அங்கமரர் பூசனைகொண் டருங்கயிலை மருங்கடைந்தான் ;
தங்குபுகழ்ப் புலவருமத் தனிவரையைத் தணந்தனரால். 81

வீசுபுகழ் ஆறுமுக வித்தகனீ உம்பரெல்லாம்
பூசைபுரிந் திடலாலே பொற்புறுமவ் வெற்பதுதான்
காசில்முரு கற்கிடமாய்க் கந்தவெற்(பு)என் றொருநாமம்
பேசும்வகை பெற்ற(து); இனிப் பெருந்தகரே றியதிசைப்பாம். 82

நாடுபுகழ் நாடுதனில் நாதன்செய் வேள்வியின்மாட்(டு)
ஆடுபிறந் துயிர்கள்தமை அழித்திடலும் அம்மகத்தில்
கூடுமுனி வருஞ்சுரருங் கோதிலருள் நாரதனும்
பீடுடைய கயிலையெனும் பிறங்கல்மிசை உற்றனரால். 83

உற்றபொழு திலக்கமுடன் ஒன்பதுவீ ரருஞ்சூழ
வெற்றிபுனை அருட்குமர வேளிருந்த படிநோக்கி
மற்றிவனங் குறைமுடிக்க வல்லவனென் றெல்லோரும்
கற்றிருத்தா ளிணைவணங்க நம்பெருமான் நவின்றருள்வான். 84

நொந்தணைந்தீர் ; புகுந்தபடி நுவன்றிடுதிர் என்றருளச்
சிந்தைமகிழ்ந் தொருவேள்வி செய்யவொரு செச்சையதில்
வந்தெமையிங் கடைனைய மகந்தணந்து வந்தனம்; அவ்
வெந்தகர்மண் ணுயிர்களொடு வீண்ணுயிர்கொன் றுலவியதே. 85

வெய்யவதன் அடலடக்கி வேள்விமுடித் தடியேங்கள்
உய்யவளித் தருளெனவே உயர்வீர வாகுவைப்பார்த்(து)
ஐய ! அது தனைப்பிடித்திங் கனைதியென அவனேகிக்
கையில்விறற் றகர்பிடித்துக் கந்தனிடை வந்தனனே. 86

தான் மலை'' என்பது **சுந்தரர் தேவாரம்.** புலவர் - தேவர்கள். தணந்தனர் - நீங்கிச் சென்றார்கள்.

82. காசு இல் - குற்றம் இல்லாத. தகர் - ஆட்டுக்கிடாய்.

83. புகழ்நாடுதனில் - தேவலோகத்தில். அம் மகத்தில் - அந்த யாகத்தில். பிறங்கல் - மலை.

84. மற்று : அசை. இவன் - இம் முருகக்கடவுள். நம் பெருமான் - முருகக்கடவுள்.

85. நொந்து-வருந்தி. புகுந்தபடி-இங்கு வந்த காரணத்தை. செச்சை-ஆடு. இங்கு அட ; அட - அழிக்க. மகம் தணந்து - யாகத்தை விட்டு அகன்று. அவ் வெந்தகர் - கொடுமையுள்ள அவ்வாடு.

86. அடல் - வலிமை. அளித்தருள் - பாதுகாத்தருள்வாயாக. ஐய - ஐயா : விளி ; இஃது அன்புபற்றியது. அவன் - வீரவாகு. கந்தனிடை-முருகக் கடவுளிடத்தில்.

அத்தகரைப் பரியாக்கொண் டவர்வேள்வி செயவிடுத்து
வித்தகனும் முருகேசன் விளையாடி யுறுநாளில்
தத்தைமொழிக் கலைமாது தலைவன்உயர் கயிலையடைந்(து)
அத்தனடி பணிந்துபுறத் தணிவாயி லிடையடைந்தான். 87

ஆலயத்தின் முன்பிருந்த அணிமணிக்கோ புரத்தலத்தில்
கோலமுடன் இருந்தருளுங் குமரவேள் கண்டருளி
ஞாலமளித் திடுவோனே நம்முன்வரு கெனவேக்கிச்
சீலமுறப் பணிந்திடுதல் செய்யாமற் பரவுதலும். 88

ஏதுபுரி வாயென்ன யான்படைப்பே னெனவருமோ
வேதமென வருமென்ன வியன்இருக்கு விளம்பென்ன
ஆதியினிற் குடிலையெடுத் தறைகுதலும் அதன்பொருளை
ஓதியபின் னேதென்வே யோதினுன் உமைபாலன். 89

மன்னுகுடி லைப்பொருளை அறியாமல் மயங்குதலும்
கொன்னுடைய நரசிங்கக் குட்டிதலைக் குட்டியுதைத்(து)
இன்னலுறக் கந்தவெற்பிற் சிறையிடுவித் ததிலேகி
அன்னநடை உமைபாலன் ஆவிகள்பன் னுட்படைத்தான். 90

---

87. பரி - வாகனம். அவரை யாகம் செய்யும்படி அனுப்பிவிட்டு என்க. வித்தகனும் - ஞானவடிவினனுகிய. தத்தை - கிளி. கலைமாது தலைவன் - பிரமதேவன். அத்தன் - சிவபெருமான்.

88. கோலம் - அலங்காரம். ஞாலம் அளித்திடுவோனே - உலகத்துயிர்களைப் படைக்கும் பிரமனே. என - என்று (முருகக்கடவுள்) கூற. சீலம் - முறைமை. பிரமதேவன் கீழ்விழுந்து வணங்காமல் நின்றபடியே வணங்கினுன்; "பங்கயா சனத்தினேன் பணிந்திடாது தொழுதலும்" என்பது கந்தபுராணம்.

89. ஏது புரிவாய் - (நீ) எத்தொழிலைச் செய்வாய். வேதம் வருமோ - (உனக்கு) வேதம் தெரியுமா. வரும் என்ன - வரும் என்று (பிரமதேவன்) கூற. வியன் - மேன்மைபொருந்திய. இருக்கு - வேதத்தின் ஒரு சிறு பகுதி. ஆதியினில் - (பிரமன்) ஆரம்பிக்குப்போது. குடிலை - பிரணவம்.

90. கொன் உடைய - அச்சத்தை உடைய. நரசிங்கக் குட்டி தலைக் குட்டி - நரசிங்கமூர்த்தியின் புதல்வனுகிய பிரமதேவன் தலையிலே குட்டி. அதில் - அக் கந்தகிரியில். ஆவிகள் - உயிர்களை. பிரமனைச் சிறை யிடுவித்து முருகக்கடவுள் தாமே உயிர்களைப் படைக்கத் தொடங்கினுர் என்க.

பிரணவம் சிவபெருமானுக்கு இருப்பிடமாகவும், மறைகட்கு முதலாகவும், காசிப்பதியில் இறப்பவர்களுக்குப் பெருமான் உபதேசிக்கும் தாரகப் பொருளாகவும், சண்முகப்பெருமான் திருமுகங்களில் ஒன்றுகவும் விளங்கும் பெருமை வாய்ந்தது என நூல்கள் கூறும்.

அங்கதுபின் னொருநாளில் அண்டரொடும் முனிவரொடும்
செங்கண்மால் கயிலைநெடுஞ் சிலம்படைந்து நந்திவிடச்
சங்கரனைப் பணிந்தயனைச் சண்முகத்தோன் இட்டசிறை
நங்கள்பிரான் தவிர்த்தியென நந்தியொடு நவின்றருள்வான். 91

வென்றியுறு குமரனிடை மேவியாம் விடச்சொன்னோம்
என்றுவிதி சிறைவிடுவித் திங்கணைவா யெனவெதிர்போய்
நின்றிதனைப் புகன்றிடலும் நின்றிடிலிங் குன்றனையும்
இன்றுசிறைபடுத்திடுவேல் என்றிடமீண்டிறைக்குரைத்தான். 92

இந்தமொழி கேட்டுநகைத்(து) ஏறேறிக் குமரனுறு
கந்தமலைப் புகுந்திடலுங் கழல்பணிந்தென் வந்ததென
அந்தணனை விடுத்திடென அதுசெய்யேன் எனச்சினம்போல்
அந்தமிலான் ஓதுதலும் அயன்றனைமுன் புறவுய்த்தான். 93

அந்தணனுக் கருள்புரிந்தே அறுமுகனைக் கவானிடைவைத்(து)
உந்துகுடி லைப்பொருள்நீ யுரைத்தியென உரைத்ததுகேட்(டு)
எந்தைமகிழ்ந் தருங்கயிலை எய்தினன் ; குறுமுனிக்குச்
சுந்தரமூ லப்பொருளைச் சொல்லினன் குமரேசன். 94

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

அணியார்முரு கேசன் வளர்ந்ததடத்(து)
அமுதக்கொடி சுந்தரி யென்றிருவோர்
தணியாதசை யிற்குக னைத்தழுவத்
தவமுற்றது கண்டவர் தங்கணுறப்

---

91. ஆங்கதுபின் - அதன் பிறகு. கயிலைச் சிலம்பு - கயிலாயமலை. நங்கள் பிரான் - எங்கள் இறைவனே : விளி. என - என்று (திருமால்) கூற.

92. விதி சிறை - பிரமனது சிறைவாசத்தை. என - என்று கட்டளையிட்டருள. மீண்டு - திரும்பிவந்து.

93. ஏறு ஏறி-இடபவாகனத்தின்மேல் ஆரோகணித்துக்கொண்டு. என் வந்தது என - இங்கே தாங்கள் எழுந்தருளி வந்ததன் காரணம் யாது என்று முருகக்கடவுள் வினவ. அந்தணனை - பிரமதேவனை. அது என்றது பிரமனைச் சிறைவிடுதலை. அந்தம் இலான் - சிவபெருமான்.

94. கவானிடை வைத்து - துடையினிலே உட்கார வைத்துக்கொண்டு. உந்து குடிலைப்பொருள் - முதலில் ஓதப்பெறும் பிரணவத்தின் பொருளை. உரைத்தது கேட்டு - சிவபெருமான் விரும்பப்படியே முருகக்கடவுள் கூறியதைக்கேட்டு. குறு முனி - அகத்திய முனிவர். சுந்தரமூலப்பொருளை - அழகிய பிரணவப்பொருளை. மந்திரங்களுக்கெல்லாம் பிரணவம் மூலம் ஆதலின் 'மூலம்' என்றார். குமர + ஈசன் = குமரேசன்.

பணியாவெதிர் நிற்ப விரும்பியதென்
பகர்வீரென எம்மை மணத்தியெனப்
பிணியான தறுத்தெனை யாளுமருட்
பெருமான் அவ ரோடிது பேசுவனுல். 95

பேரன்பு பொருந்திய நுங்கள்தமைப்
பின்மன்றல் இயற்றுதும் ; அவ்வளவும்
சீரிந்திரன் வேடர்கள் பான்மகவாய்ச்
சென்றேயிரு மென்றரு ளோடுவிடுத்(து)
ஆருந்தொழு கந்த விலங்கலில்வந்(து)
அணிசேர்கயி லாய மடைந்தரனே(டு)
ஏருந்துமை யாஇ வணங்கிஅவர்க்(கு)
இடையாக இருந்தனன் எம்பெருமான். 96

அப்போதினில் அண்டர்கள் இந்திரன்மால்
அயன்மாகயி லாய மடைந்திடலும்
துப்பாரருள் நந்தி தடுத்துவிடத்
தோகைக்கொரு பாகனை அன்பொடுகண்(டு)
எப்போதும் இடுக்கண் விளைத்திடுசூர்
என்போன்புரி துன்பம் இசைத்திடலும்
மெய்ப்பார்குக னேடவு ணன்றனை நீ
வென்றேவரு கென்று விளம்பினனே. 97

---

95. தடத்து - சரவணப்பொய்கையில். அமுதக்கொடி - அமுதவல்லி. அமுதவல்லி, சுந்தரவல்லி என்னும் பெண்கள் இருவரும் திருமாலின் புதல்வியர்கள்; இவர்களுள், அமுதவல்லி மூத்தவள்; சுந்தரவல்லி இளையவள். நசையின் - விருப்பத்தால். தவம் உற்றது கண்டு - தவம் செய்வதை உணர்ந்து. பணிந்து அவ்விரு மகளிரும் எதிரே நிற்ப என்க. பிணி - பிறவியாகிய நோய்: ஆனது: எழுவாய் உருபு.

96. பின் மன்றல் இயற்றுதும் - பிற்பாடு திருமணம் செய்து கொள்வோம். இந்திரனிடத்திலும் வேடர்களிடத்திலும் முறையே அமுதவல்லியும் சுந்தரவல்லியும் குழந்தைகளாக என்க. ஏர் உந்து உமையாஇ ; ஏர் - அழகு. சிவபெருமானும் உமாதேவியாரும் வீற்றிருக்க, அவர்கள் இடையே முருகக் கடவுள் எழுந்தருளியிருந்தார்: அதனல் சிவபெருமான் (ஸ+உமா+ஸ்கந்தர்=) **ஸோமாஸ்கந்தர்** எனப் பெயர் பெற்றனர்.

97. துப்பு - வலிமை. தடுத்து விட - முதலில் உள்ளே புகாமல் தடுத்துப் பிறகு, இறைவன் திருவுள்ளக் குறிப்புணர்ந்து உள்ளே விட. மெய்ப்பு - உண்மை. குகனேடு விளம்பினன் என்க.

அப்பான்மை புரிந்திடு வேனெனவே
அடல்சேர்பதி னொன்றெ னுருத்திரரை
மெய்ப்பார்பதி னேர்படை யாவருளி
வேலொன்று குகன்கர மீதுகொடுத்(து)
ஒப்பானதி லாத இலக்கர்களோ(டு)
ஒன்பானெனும் உத்தமர் கைத்தலமேல்
துப்பார்பல வெம்படை அங்கருளித்
துணையாக வுறும்படி சொற்றனனே. 98

இத்தன்மை நிகழ்ந்தபின் நூறுடனே
எட்டாகிய பூத வீராசர்தமைச்
சுத்தன்பரி வோடு தெரிந்தருளித்
தொல்பூத விராயிர வெள்ளமுடன்
அத்தம்பதி னொன்றுட னொன்றுடையான்
அடல்சேர்படை யாவுறும் என்றருளி
மெத்துந்திற்ல் கொண்டிடு மோரிரதம்
வேலோனுற நல்கினன் வித்தகனே. 99

இவ்வாறு கொடுத்து மதிச்சடையோன்
ஏகென்ன வலங்கொ(டு) இறைஞ்சுதலும்
செவ்வானுர மீதில் அணைத்தருளிச்
சீர்தங்கிய நாரி திருக்கரமேல்

---

98. அப்பான்மை - அவ்வாறே. பதினொன்று என் உருத்திரர் - மகாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், காபாலி, சௌமியன் என்னும் பதினேரு ருத்திரர். பதினேரு ருத்திரரையும் பதினே ராயுதமாகச் செய்து அளித்தார் என்க. பதினேராயுதங்களாவன: தோமரம் (எறியீட்டு), கொடி, வாள், வச்சிரம், அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டம், வில், மழு என்பன. வேல் - வேலாயுதம்; இது; பஞ்சபூதங்களையும், எல்லா வீரர்களையும், எத்தகைய வரங்கள் பெற்ற வலியவர்களையும், எவ்விதப் பொருள்களையும் அழிக்க வல்லது; ஆயுதங்களுக்கெல்லாம் முதன்மை பெற்றது. ஒன்பான் எனும் உத்தமர் - நவவீரர்கள். துப்பு - வலி.

99. பூத இராசர் - பூதத்தலைவர். சுத்தன் - சிவபெருமான். வெள்ளம் - ஒரெண் ; அஃது அளவு கடந்த எண்ணிக்கை. அத்தம் - கை. அத்தம் பதினொன்றுடன் ஒன்றுடையான் - பன்னிரண்டு திருக்கரங்களையுடைய சண்முகக்கடவுள். படையா உறும் - சேனைகளாக இருங்கள். மெத்தும் திறல் - மிக்க வலி. வித்தகன் சிவபெருமான்.

மைவாழ்வுறு கண்டன் அளித்தருள
மா(து)அன்பில் வயிற்றில் அணைத்திமையோர்
உய்வான்அவு ணப்படை முற்றுமழித்(து)
உறுவாய்இவண் என்ன உரைத்தனளால். 100

ஈதம்மை இசைத்திட லுந்தொழுதே
இருவோரையும் அன்புட னேவிடைகொண்(டு)
ஓதும்புகழ் வேலன் அகன்றுயர்தேர்
உற்றேறுன்பது பேரும் இலக்கர்களும்
ஏதந்தவிர் சாரத மன்னவரும்
இமையோரும் இராயிர,வெள்ளமெனும்
பூதங்களும் எங்கணும் அங்கணுகிப்
புடைசூழ அடைந்தனன் அம்புவிமேல். 101

(கலி விருத்தம்)

பாருலக மீதிலுமை பாலன்வரு போதில்
தாரகன் எனும்பெயர் தரித்ததொரு வெய்யோன்
ஓரரண மானகிர வுஞ்சகிரி கண்டார் ;
வீரமுறு வேலன்அயல் மேவிவரு வீண்ணோர். 102

கண்டனர் வெருண்டனர் கலங்கினர் இடுக்கண்
கொண்டனர் உளங்குலை குலைந்தனர் தளர்ந்தார்
திண்டிறல்கொள் வேலன்இரு சேவடி வணங்கி
அண்டர்புகழ் நாரதன் அறைந்திடுத லுற்றான். 103

---

100. இங்கு, இறைஞ்சியவர் முருகக்கடவுள். செவ்வான் உரமீதில் - செவ்வானம்போன்ற திருமார்பில் ; சிவந்த பெருமையையுடைய திருமார்பில் எனினுமாம். நாரி - உமாதேவியார். மை வாழ்வு உறு - விஷம் பொருந்திய (மை - கறுப்பு ; விஷம்.) மாது அன்பில் - உமாதேவியார் அன்பினுல். உய்வான் - பிழைக்கும்பொருட்டு. அவுணப்படை - அசுரர் சேனையை. உறுவாய் - வரக்கடவை. இவண் - இவ்விடம். அழித்து இவன் உறுவாய் என்க.

101. இருவோரையும் - சிவபெருமானையும் உமாதேவியாரையும். ஒன்பது பேர் - நவவீரர்கள். ஏதம் - இடையூறு. சாரத மன்னவர் - பூதத் தலைவர்.

102. வெய்யோன் - கொடியவன். அரணம் - பாதுகாப்பு. தாரகனது அரணுகிய கிரவுஞ்சகிரி என்க. தாரகன் - தாரகாசுரன் ; இவன், யானைமுக முடையவன். அயல் - அருகில்.

103. இடுக்கண் - துன்பம். திண்டிறல் - வலிமையும் வெற்றியும். அண்டர் - தேவர்.

உற்றகிரி சூரனெ வுஞ்சம்இதி னேர்சார்
மற்றுமிக ரற்றதொரு மாயநக ருடே
சுற்றவுணர் சேனையொடு சூரிளவ லாகும்
வெற்றிபுனை தாரகன் விருப்புடன் இருப்பான். 104

வென்றியுற இன்றிவனை வெல்றிடுவை யாயின்
வன்றிறல்கொள் சூரனை வதைப்பதெளி தென்னத்
துன்றுகதிர் வேலன்முனி சொன்னவை வினவிச்
சென்றிவன தாருயிர் சிதைத்திடுது மென்றான். 105

என்றுபின் அடற்பெறும் எழிற்புயனை வேலோன்
நன்றெரு தெரிந்தினைய நாகமதி னேர்சார்
வென்றியுள மாயநகர் மீதவுண ரோடும்
வன்றிறல்கொள் தாரகன் வயத்தொடு வதிந்தான். 106

அம்புவி அழுந்தவரும் ஆயிரநல் வெள்ளத்(து)
உம்பர்தொழு சாரத ருவர்க்கிறையி னேர்உன்
தம்பியர்க ளோடுமிகு தானவர்க ளோடும்
மொய்ம்பொடு செருப்புரிய முந்துபட ரென்றான். 107

என்னவிது நன்றென இறைஞ்சிமுரு கேசன்
தன்னைவிடை கொண்டினிய தம்பியர்க ளோடும்
மின்னுகதிர் வேலன்அருள் வீ(று)இரத மேறி
மன்னுபடை யோடவுணன் மாயநகர் உற்றான். 108

ஒற்றரிது சொற்றிட வுணர்ந்தவுணர் மன்னன்
செற்றமிக மூளவொரு தேரின்மிசை ஏறித்

---

104. மற்று - வேறு நகரங்கள். மாயநகர் - மாயாபுரி. சுற்று - சூழ்ந்துள்ள. குர் இளவல் - சூரபன்மனுக்குத் தம்பி.

105, கதிர் துன்று - ஒளிபொருந்திய. முனி - நாரத முனிவர். சிதைத் திடுதும் - கொல்லுகின்றோம்.

106. அடற்பெரும் புயனை - வீரவாகுவை. நாகம் - மலை. வயத்தொடு - வலிமையோடு.

107. அழுந்த - (மிகுந்த பாரத்தால்) அழுங்கும்படியாக. சாரதர் - பூதர்கள். சாரதரும் அவர் தலைவரும் என்க. உவர்க்கு இறையினோர் - பூதத் தலைவர். மொய்ம்பு - வலிமை. செரு - போர். படர் - செல்வாயாக.

108. இனிய தம்பியர்கள் - நல்ல தம்பிமார்கள்; அவர்கள், நவவீரர்கள் இலக்கம் வீரர்கள் என்போர். வேலன் அருள் - முருகக்கடவுள் தந்தருளிய. வீறு - பெருமை; வேகம்.

துற்றவனி கங்கள்புடை சுற்றவெதி ருற்றுன் ;
அற்றமறு பூதருமை வர்க்கெதிர் புகுந்தார். 109

தெண்டிரை கடுத்தவிரு சேனையும் எதிர்ந்தே
மண்டுபடை சிந்தியமர் வல்லிபுரி போதில்
சண்டமிகு தானவர்கள் சாரதர்கள் தம்மால்
ஒண்டிறல் இழந்துதொலை வுற்றனர்கள் அன்றே. 110

வாரண முகத்தவுணர் மன்னனிது கண்டே
தேரினும் இறங்கியொரு திண்கதை பிடித்தே
பாரிடர்கள் பாரிடை பதைப்புற வதைப்ப
ஏருறும் இலக்கரும் எதிர்ந்துசமர் செய்தார். 111

போரினில் எதிர்ந்துழி புழைக்கைகொடு சுற்றி
வாரியி லெறிந்தனன் ; எழுந்து[1]பினும் வந்தார் ;
ஏருலவு கோளரி யெதிர்ந்துகணை நூருல்
கோரவவு ணன்றன்மகு டத்தைவிழ வெய்தான். 112

சென்னிமுடி வீழ்தலுமொர் திண்கதை யெறிந்தே
பொன்னிரத மீமிசை புகுந்தன னெதிர்ந்தான் ;
மன்னுகதை பட்டிட மயங்கவது கண்டே
துன்னுவிறல் கொண்டுவளர் தோளினன் எதிர்ந்தான். 113

வந்தெதிர் புகுந்ததிறல் வாகுமிசை வெய்யன்
சுந்தர விறற்கொளொரு சூலமது கைத்தான்

---

109. ஒற்றர் - தூதர். இது சொற்றிட - (வீரவாகு தேவர் போர் புரிய வரும்) இச்செய்தியைக் கூற. செற்றம்-கோபம். துற்ற அனிகங்கள் - நெருங்கிய (தன்) சேனைகள். அற்றம் - சோர்வு.

110. தெண்டிரை கடுத்த - கடலையொத்த. வல்லி - வீரவாக. சண்டம் - கொடுமை. சாரதர்கள் - பூதத்தலைவர்கள். தொலைவு - தோல்வி.

111. வாரண முகத்து அவுணர் மன்னன் - யானை முகத்தையுடைய தாரகாசுரன். கதை - கதாயுதம். பாரிடர்கள் - பூதத்தலைவர்கள்.

112. புழைக்கை - துதிக்கை. வாரியில் - கடலில். கோளரி - வீர கேசரி. கோர அவுணன் - விகாரத்தையுடைய அசுரன் ; தாரகன்.

113. புகுந்தனன் எதிர்ந்தான் - புகுந்து எதிர்த்தான். மயங்க - (வீர கேசரி) மயங்க. விறல் கொண்டு வளர்தோளினன் - வீரவாகுதேவர்.

114. திறல் வாகு - வீரவாகு. வெய்யன் - தாரகாசுரன். கைத்தான் - செலுத்தினன். உரத்தினிடை - மார்பில். ஈசன் மைந்தன் - முருகக்கடவுள் ; அவனுக்கு இளையோன், வீரவாகு தேவர் என்க. பா-ம்—1 எழுந்த.

உந்தெழில் உரத்தினிடை யுற்றிடலும் ஈசன்
மைந்தன் இளை யோன்மிகு வருத்தமொடு நின்றான். 114

மொய்ம்புடைய வாகுமிகு மோகமொடு நின்றேழ்
தம்பியர் எதிர்ந்துடைவ தானது தெரிந்தே
வெம்பதகன் முன்(பு)அணுக வெய்யனும் எதிர்ந்தான் ;
அம்புமழை சிந்தி இரு வோரும்அமர் செய்தார். 115

பொற்சகட மீதிலுறு புல்லன்அது போதில்
விற்சமர் புரிந்திவனி வெல்வதரி தென்றே
கற்பொருவு தோளுடைய காளைமிசை செல்ல
விற்குலவும் உம்பர்கள் விறற்படைகள் விட்டான். 116

விட்டிடலும் அப்படைகள் விட்டருளி வெய்யன்
தொட்டபடை முற்றுமிகு துண்டமது கண்டான் ;
மட்டிலுரு வங்கொடு வளைந்துசம ராடக்
கட்டழகு கொண்டதொரு காளையிது செய்தான். 117

மெத்துமுரு வத்தவுணன் மீதுவிட வீர
பத்திரன் நெடும்படை பரித்திடலும் மாயக்
கொத்தற வுடன்தனிமை கூடியொ ருபாயம்
சித்தமிசை கொண்டுகிர வுஞ்சகிரி சென்று. 118

மற்றதின் ஒளித்திடலும் வாகைபுனை வாகு
சுற்றமொடு தம்பியர்கள் தோல்முன் ஒளித்த

---

115. மொய்ம்புடைய வாகு - வீரவாகு. உடைவதானது - தோல்வியுறுவதை. வெம் பதகன் - கொடிய பாதகனுகிய தாரகாசுரன். மொய்ம் புடைய வாகு அணுக என்க.

116. பொற் சகடம் - பொன்னுற் செய்த தேர். புல்லன் - புன்மைத் தன்மையையுடைய தாரகன். காளை - இங்கு, வீரவாகு : உவமையாகு பெயர். உம்பர்கள் விறற் படைகள் - தேவாஸ்திரங்கள்.

117. அப்படைகள் - அத்தகைய தேவாஸ்திரங்களை. தொட்ட - தொடுத்த. கண்டான் : கண்டவர் வீரவாகுதேவர். மட்டில் உருவங் கொடு - (மாயையினுல்) கணக்கில்லாத பல வடிவங்களை எடுத்துக் கொண்டு: எடுத்தவன், தாரகன். கட்டழகு - மிகுந்த அழகு. காளை - இங்கு, வீரவாகு.

118. வீரபத்திரன் நெடும்படை - வீரபத்திராஸ்திரம். பரித்திடலும் - கையில் எடுத்துத் தாங்கவே. மாயக் கொத்து அற - தாரகன் எடுத்த மாய வடிவங்கள் முழுவதும் அற்றுப் போக. தனிமை கூடி - (தாரகன் முன் போல்) ஒருவடிவாய் நின்று.

பொற்றைபுக ஆண்டுமயல் பூண்டனர் கிடந்தார் ;
அற்றமறு சூரிளவல் அன்னது தெரிந்தான். 119

தெரிந்துமகிழ் வாகியொரு தேரின்மிசை யேறி
அருந்திறல்கொள் தண்டமொ டமர்க்களம் அடைந்தே
விரிந்துசெறி பூதர்மிசை வெங்கணைகள் சிந்த
இரிந்தனர்கள் உம்பரினும் இம்பரினும் அன்னர். 120

நண்ணினைய கண்டுபுகழ் நாரதன் எனும்பேர்ப்
பண்ணவன் இடர்க்கொடு படர்ந்தமரர் செய்த
புண்ணிய முறைந்துழி பொருந்தியடி தாழுஉ
விண்ணவர் மெலிந்திட விகூந்தன விளம்ப. 121

அங்கதை வினவினமை யாளுடைய செவ்வேள்
இங்கவனை நூறுவன் இறைப்பொழுதில் என்றே
துங்கமுறு பூதர்கள் துவன்றிஅயல் சுற்றச்
செங்குருதி தங்கிய செருக்களம் அடைந்தான். 122

சடுசெறி பூதரும் இருந்தகுவர் யாரும்
சாடுசம ராடமிகு தானவர் உடைந்தே
ஓடவது கண்டனன் உருத்தவுணர் மன்னன்
நீடிய கரத்துறு நெடுஞ்சிலை வளைத்தான். 123

---

119. தோல் முகன் - யானைமுகனுகிய தாரகன். (தோல் - யானை.) பொற்றைபுக - கிரவுஞ்ச மலையினுள்ளே செல்ல. (பொற்றை - மலை.) மயல் பூண்டனர் கிடந்தார் - மயக்கத்தை அடைந்து கிடந்தார். அற்றம் - சோர்வு. சூர் இளவல் - சூரபன்மனுக்குத் தம்பியாகிய தாரகன்.

120. தண்டம் - படை. உம்பரினும் – தேவலோகத்திலும். இரிந்தனர் கள் - (புறங்கொடுத்து) ஓடினார்கள்: அன்னர் - அப்பூதப்படைஞர்.

121. நண் இனைய கண்டு - (அங்கே) பொருந்திய காட்சிகளைக் கண்டு. பண்ணவன் - முனிவன். படர்ந்து - சென்று. அமரர் செய்த புண்ணியம் - தேவர் இயற்றிய புண்ணியத்தின் பயனுகிய முருகக் கடவுள். உறைந்த உழி - வீற்றிருக்குமிடத்தில். தாழுஉ - வணங்கி. தேவர்கள் தோல்வியடையும்படி நடந்தவற்றைச் சொல்ல என்க.

122. நூறுவன் - கொல்வேன். இறைப் பொழுது - கணநேரத்தில். துங்கம் – வெற்றி ; பலம். துவன்றி - நெருங்கி, குருதி – இரத்தம்.

123. சடு - பெருமை. தகுவர் - அசுரர். சாடு சமர் ஆட – எதிர்த்துச் சாடும் போரைச்செய்ய. தானவர் உடைந்து - அசுரர்கள் தோல்வியுற்று. உருத்து – கோபித்து. அவுணர் மன்னன் - தாரகன்.

வெங்கணை களும்பல வியன்படையும் நேரே
அங்கணை கணக்குழுவின் அங்கமுற உந்திக்
கங்கைமுடி யானுதவு கந்தன்எதிர் வந்தே
சங்கையில் பவங்குலவு தாரகன் உரைப்பான். 124

மேதகும் அரிக்கும்அலர் மீதிலய னுக்கும்
மாதவள வும்பலிறை வற்கும்அல(து) இந்நாள்
ஆதிபர னுக்கும்எம ருக்கும்அம ராட
ஏதுவிலை வந்தபடி ஏதுமொழி கென்றான். 125

நற்றெழில் புரிந்திடு நதிச்சடில நம்பன்
அற்றமறு வானவர்க ளானவர்கள் தம்மைச்
செற்றமொடு நீவிர்சிறை செய்ததை யுணர்ந்தே
மற்றெமை விடுத்தனன்; நும் வன்மைவிறல் சிந்த. 126

என்றுபல வேலவன் இசைத்தமொழி கேளாக்
குன்றுறழும் மொய்ம்புள கொடுந்தகுவர் மன்னன்
வன்றனு வளைப்பஉமை மைந்தனும் வளைத்தான்
துன்றிரு வருங்கணை சொரிந்தமர் புரிந்தார். 127

கையன்விடு வெங்கணைகள் கந்தன்எதிர் சிந்தும்;
துய்யன்விடு வெங்கணைகள் சூர்துணை யகற்றும்;

---

124. அங்கு அணை கணக்குழுவின் அங்கம் உற உந்தி – அங்கு வந்திருக்கும் பூதக் கூட்டத்தின் உடம்பில் பதியும்படியாக விட்டு. சங்கையில் - அளவில்லாத. பவம் குலவு - பாவம் நிறைந்த; பிறவிகளை அடைந்தனினும் மாம்.

125. அரிக்கும் - திருமாலுக்கும். மா தவள உம்பல் இறைவற்கும் - இந்திரனுக்கும். (தவள உம்பல் - வெள்ளையானை.) அலது - அல்லது. இந்நாள் - இவ்வளவு காலம். அமர் ஆட – போர் செய்ய. வந்தபடி – (நீர்) போர்செய்ய வந்த காரணம், "திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பகை உண்டே அல்லாமல், சிவபெருமானுக்கும் எமக்கும் ஒரு பகையும் இல்லை; அங்ஙனம் இருக்க நீர் போர் செய்ய வந்த காரணம் என்ன" என்றான்.

126. முருகக்கடவுள் தாரகனுக்கு விடை கூறுகின்றார். நற்றெழில் - அருளல் என்னும் தொழில். அற்றம் - சோர்வு. மற்று : அசை. எமை; தன்மைப் பன்மை; இது பெருமிதம் தோன்றநின்றது. நம்பன் நும் வன்மை சிந்த விடுத்தனன் என்க.

127. குன்று உறழும் மொய்ம்பு - மலையை ஒத்த தோள். தகுவர் மன்னன் – தாரகன். வன் தனு – வலிய வில்லை.

வையமிசை யோர்வெருவ வையமிசை நின்றே
வெய்யசமர் இவ்வகை விளைத்தனர் வெகுண்டே. 128

இந்தவகை விற்சமர் இயற்றுமது போதில்
கந்தன புயங்களுள கந்தன்முரு கேசன்
வெந்திறல்கொள் தாரகன் விடுங்கணை விலக்கிச்
சிந்தினனெர் கோடிகணை தீயன்மிசை செல்ல. 129

கோடிகணை பட்டுழி கொதித்ததின் இரட்டி
நீடுகணை விட்டிடலும் நேசமுரு கேசன்
நாடிமிகு கோல்சிதறி நண்ணலன் விடுப்பக்
கூடிவரு வாளிகள் குறைத்தனன் அறுத்தே. 130

கன்னியிடம் நண்ணுமிறை கண்ணில்வரும் அண்ணல்
பின்னரும் இலங்கிரு பெருங்கணை துரந்தே
இன்னல்புரி சூரனிளை யானுடல் இளைப்பக்
கொன்னுறு முகக்கையொடு கோடுகள் அறுத்தான். 131

சந்துறு முகக்கைநெடி தானதன தந்தம்
சிந்தலும் மனத்திடை சினத்தவுணர் செம்மல்
வெந்திறல்கொள் ஆயிரம் விறற்கணை விடுத்தே
கந்தனிர தத்துறு கவின்கொடி அறுத்தான். 132

---

128. கையன் – வஞ்சகனுகிய தாரகன். கையன்: திசைச் சொல். துய்யன் - முருகக் கடவுள். சூர் தூணை - தாரகன். வெங்கணைகள் அகற்றும் - கொடிய கணைகளை அகற்றுவான். வெருவ - அஞ்சும்படி. வையமிசை நின்று - தேர்மேல் இருந்து கொண்டு. வையம் – தேர்; உலகம்.

129. விற்சமர் - விற்போர். கந்து அன புயங்கள் - (வலியை) தூணை யொத்த தோள்கள்; (கந்து - கட்டுத்தறி; தூண்.)

130. கொதித்து - கோபித்து. அதின் இரட்டி - அதைப்போல இரண்டு பங்கு : இரண்டு கோடி. விட்டிடலும் - தாரகன் எய்யவே. கோல் - அம்பு. சிதறி அறுத்துக் குறைத்தனன் என்க.

131. கன்னி இடம் நண்ணும் இறை - உமாதேவியார் இடப்பாகத்தே வீற்றிருக்கும் சிவபெருமான். அவனது கண்ணில் வரும் அண்ணல் - முருகக் கடவுள். சூரன் இளையான் - தாரகன். கொன் - பெருமை. முகக்கை - துதிக்கை. கோடுகள் - கொம்புகளை.

132. சந்து உறு முகக் கை - பூட்டுவாயையுடைய தும்பிக்கை. சந்து - அழகுபாம். தன தந்தம் - தன்னுடைய தந்தங்களும். சினத்து - சினந்து: வலிந்தல் விகாரம். அவுணர் செம்மல் - தாரகன்.

அப்பொழுது வேலவன் அருங்கணிக ளெட்டு
மெய்ப்புற விடுத்தவுணன் விற்றணி யொடித்துத்
துப்புடைய ஆயிர நெடுங்கணை துரந்தே
ஒப்பிலவன் ஏ(று)இரதம் ஒல்லைதுகள் கண்டான். 133

தேரழிய வேறுமொரு தேரின்மிசை ஏறி
வீரமுற மற்றுமொரு விற்றணி யெடுத்தே
சிரிய குகன்றனது தேர்கடவு கால்மேல்
ஆரும்வகை ஆயிரம் அடற்கணை விடுத்தான். 134

மன்னுகணை மேனிபட மாருதம் வருந்த
அன்னது தெரிந்துகுகன் ஆயிரம் நெடுங்கோல்
கொன்னவுணர் மன்னது குளத்தினுள் அழுத்தப்
பொன்னினிர தத்திடை புலம்பினன் விழுந்தான். 135

சோரியொடு சோபமொடு சூரிளவல் வீழ
வீரமுற[1] வன்படைஞர் வேலணி வளைந்தே
போரது புரிந்துழி பொலிந்தகணை தூவிச்
சிரிய குகன்தகுவர் சேணிகள் அறுத்தான். 136

மையல தொழிந்திட எழுந்தவுணர் மன்னன்
செய்யமுரு கன்புடை சிவன்படை செலுத்தக்

---

133. துப்பு - வலி. ஒப்பில் அவன் - ஒப்பில்லாத அத்தாரகன். முருகக் கடவுள் தாரகன் வில்லை ஒடித்துத் தேரையும் பொடியாக்கினர் என்க.

134. தாரகன் வேரூர் தேரின்மேல் ஏறி முருகக்கடவுளுக்குத் தேர்ப் பாகனுக இருந்த வாயுதேவன் மீது ஆயிரங் கணைகளை விட்டான். கடவுதல் - செலுத்துதல். கால் - வாயுதேவன். ''கண்ணுதல்.....அயல்வரு மருத்தினை நோக்கித், தண்ணளி புரியும் அறுமுகத்(து) எந்தை தனிப்பெருந் தேர்மிசை நீபோய்ப், பண்ணெடு முட்கோல் மத்திகை பரித்துப் பாகனுய்த் தூண் டெனப் பணித்தான்'' என்பது கந்தபுராணம் - படையெழு படலம், 1.

135. மாருதம் - வாயுதேவன். குளத்தினுள் அழுத்த - நெற்றியில் அழுந்தும்படி செய்ய. புலம்பினன் - புலம்பிக்கொண்டு: முற்றெச்சம்.

136. சோரி - இரத்தம். சோபம் - சோர்வு; மயக்கம். தகுவர் சேணை - அசுரசேனை.

137. மையல் - மயக்கம். செய்ய முருகன் - செம்மை நிறமுள்ள முருகன்: ''செய்யன் சிவந்த ஆடையன்'' என்பது திருமுருகாற்றுப்படை. சிவன் படை - பாசுபதாஸ்திரத்தை. மலையோடு தாரகன் பல மாயைகளைச் செய்ய என்க.

கைகொடு பிடிப்பவது கண்டுபல மாயை
வெய்யமலை யோடுசெய வேலினை விடுத்தான். 137

வென்றிபுனை எஃகமது விஞ்சைதரு குன்றை
வன்றிறல்கொள் தாரகனை வல்லியில் அழித்தே
ஒன்றுதிறல் வீரரை எழுப்பிஉயர் கங்கை
சென்றதனில் ஆடுபு திரும்பியதை யன்றே. 138

வெந்திறல்கொள் வேலது விசாகனது கைமேல்
வந்தினி திருப்பஅடல் வாகுமுதல் வீரர்
எந்தையெதிர் வந்திட இலங்குமுரு கேசன்
புந்திகள் களிப்பஅவ ருக்கருள் புரிந்தான். 139

மற்றதுபின் உந்துதிறல் வாகுவை விளித்தே
வெற்றியொடு தாரகன் விடுத்துழி பிடித்த
அற்றமில் அரல்படை அவன்கையில் அளித்தான்
தற்றுமிகு தானவர்கள் தங்கள்குல காலன். 140

இறந்தமிகு பூதர்க ளியாரையும் எழுப்பி
நிறைந்தபடை சூழ்தர நிவந்திடு கவந்தப்
பறந்தலை கடந்தடல்கொள் பன்னிரு புயத்தோன்
சிறந்த இம யக்கிரியின் எல்லையது தீர்ந்தான். 141

தென்றிசையின் ஏகியுயர் தேவகிரி நண்ண
வன்றிறல்கொள் ஆதவன் மறைந்தனன்; அவ் வேலைக்

---

138. எஃகம் - வேல். விஞ்சை தரு குன்றை - மாயவித்தைகளைச் செய்த கிரவுஞ்ச கிரியை. குன்றையும் தாரகனையும் என்க. வீரரை - (கிரவுஞ்சகிரியில் அசுரரால் மயங்கி விழுந்த) வீரர்களை. ஆடுபு - நீராடி. திரும்பியதை, ஐ: சாரியை. அன்று, ஏ: அசைகள்.

139. விசாகன் - முருகக்கடவுள். அடல் வாகு - வீரவாகு. எந்தை - முருகக்கடவுள். புந்திகள் - மனங்கள். அவருக்கு - அந்நவ வீரருக்கு.

140. மற்று: அசை. அதுபின் - அதன்பிறகு. தற்றுமிகு - நெருங்கி மிகுந்த. தானவர்கள் தங்கள் குல காலன் - முருகக்கடவுள்: "நிருதரார்க் கொரு காலா! சயசய" என்பது திருப்புகழ். முருகக்கடவுள் வீரவாகுவை அழைத்து, தாரகன் தன்மேல் ஏவப் பற்றிக் கொண்ட பாசுபதாஸ்திரத்தை அளித்தார் என்க.

141. நிவந்திடு கவந்தப் பறந்தலை கடந்து - குவியலாக உயர்ந்திருக்கின்ற உடற்குறைகளையுடைய போர்க்களத்தை விட்டு நீங்கி; (கவந்தம் - தலை நீங்கிய உடல்; பறந்தலை - போர்க்களம்) எல்லையது - எல்லையை.

குன்றுதலி லாவனைய குன்றின்மிசை வென்றிப்
பொன்றிகழும் எஃகமுள புங்கவன் இருந்தான். 142

ஆகிலருள் வேலவனை அவ்வரையின் விண்ணோர்
பூசனை புரிந்தனர் ; புகன்றவிது கிற்க
வீசுபுகழ் உம்பல்முகன் வீடியது கேளா
மாசவுரி என்னுமனை மாதுதுய ருற்றாள். 143

மையுறு தடங்கண்மட மங்கையரொ டேகிச்
செய்யதொரு மின்னனைய செல்வமெனு மாயப்
பொய்யினில் விழுந்துபல புன்மைகள் புரிந்தோன்
மெய்யினில் விழுந்தலறி மெத்துதுய ருற்றாள். 144

அந்தவமை யத்தின்முனம் ஆசூரம் அடைந்த
சுந்தர மிகுந்த அசு ரேந்திரன் வினவி
வந்துதன(து) அத்தன்மடி வானசெயல் கண்டு
வெந்துயர் பொருந்திட விழுந்தலறி னானால். 145

அங்குள கடன்செய்தவ னேத்தகன மாற்றித்
திங்கள்முக வன்னையர்க ளியாருமெரி சேரப்
பொங்குதுயர் கொண்டுசில போரவுண ரோடும்
மங்கலகல் தென்கடல் மகேந்திரம் அடைந்தான். 146

---

142. ஆதவன்-சூரியன். அனைய குன்று-தேவகிரி. எஃகம்-வேல். எஃகம் உள புங்கவன் - முருகக் கடவுள்.

143. உம்பல் முகன் - தாரகன். வீடியது-இறந்தது. மா சவுரி என்னும் மனை மாது – தாரகனுடைய பெருமை பொருந்திய மனைவியாகிய சௌரி என்பவள்.

144. மின் அனைய செல்வம்-மின்னலைப் போன்ற நிலையாமையையுடைய செல்வம். புரிந்தோன் - புரிந்தவனாகிய தாரகன். மெத்து - மிகுந்த.

145. முனம் - முன்னே. ஆசுரம் - ஆசுரபுரி ; இது வட கடலின் நடு விலுள்ள சிங்கமுகா சுரனது தலைநகரம். அசுரேந்திரன் - தாரகாசுரன் மகன். அத்தன் – தந்தை.

146. உள கடன் செய்து - தான் செய்ய வேண்டிய ஈமக் கடன்களைச் செய்து. அவனைத் தகனம் ஆற்றி - தாரகாசுரனைத் தகனம் செய்து. அன்னையர்கள் - தாரகாசுரனுடைய மனைவிமார்கள். மங்கல் புகல் - அழிவில்லாத. மகேந்திரம் - சூரபன்மனுக்குரிய மகேந்திரபுரி. கணவன் இறந்தபோது அவனுடன் உடன்கட்டையேறிய பெண்கள் அசுவமேத யாக பலனை அடைவர் என்று காசிகண்டம் கூறுகிறது.

அந்நகரி லுள்ளவர் அருந்துயர் பொருந்தக்
கொன்னுடைய சூரனுறு கோயிலவை யுற்று
மன்னவன் அடித்துணையின் வல்லியின் விழுந்தே
இன்னலொ டரற்றினன் நிகழ்ந்தன இசைத்தான். 147

தம்பிமடி வானமொழி தன்செவியி லேற
வெம்பினன் அரித்தவிசின் மீமிசை யிருந்தோன்
அம்புவி விழுந்தனன் அரற்றினன் அதற்பின்
மொய்ம்புடைய வேலனெ டமர்க்கெழ முயன்றான். 148

அன்னசெயல் கண்டனன் அமைச்சரில் அமோகன்
முன்னுற அடைந்துசில புந்திகள் மொழிந்தே
மன்னவன் அமர்க்கெழல் மறுத்திட இருந்தே
இன்னல்புரி சூரன்அவண் இன்னதை யியற்றும். 149

மற்றிணையில் வேலவன் மருங்கினில் நெருங்கும்
வெற்றியுறு சேனையை வினவிவரு மாறங்(கு)
ஒற்றரை விடுத்துவிட மொத்தவன் இருந்தான் ;
கொற்றமுரு கேசனது கொள்கையுரை செய்வாம். 150

தேரினெடு வாரிமிசை செங்கதிர் அருக்கன்
ஏரினெ டெழுந்தனன் ; எழுந்தவது மானச்
சாரதர் குலாவவரு சையநிகர் வையம்
வீரநெடு வேலுள விசாகன்இனி துற்றான். 151

---

147. கொன் - பெருமை; அச்சமுமாம். கோயில் அவை - அரண்மனையிலுள்ள ஆத்தான மண்டபத்தை. அரற்றினன் - அழுது.

148. அரித்தவிசு - சிங்காதனம். மீமிசை - மேலே. மொய்ம்பு - வலிமை.

149. புந்திகள் - அறிவுரைகள். அமோகன் என்னும் அமைச்சன் பகைவனுடைய வலிமை முதலியவற்றை ஆராயவேண்டும் என்று கூற, சூரபன்மன் வேகந் தணிந்தான் என்க. மறுத்திட – அமோகன் தடுக்க.

150. மற்று இணை இல் - வேறொருவர் தமக்கு ஒப்பில்லாத. சேனையை வினவி வருமாறு - சேனையின் அளவையும் வலிமையையும் ஆராய்ந்து வரும்படி. ஒற்றர்கள் - தூதர்கள்: இவர்கள் பகன், மயூரன், சேனன், சக்கரவாகன், சுகன் முதலியோர். விடம் ஒத்தவன் - சூரபன்மன். கொள்கை - செய்தி; வரலாறு.

151. வாரிமிசை - கடலிடத்து. அருக்கன் - சூரியன். ஏர் - எழுச்சி. மான - ஒப்ப : உவமவுருபு: சாரதர் - பூதர்கள். சையம் நிகர் வையம் – மலையை ஒத்த தேர். சையம் - சைய மலையுமாம். விசாகன் – முருகக்கடவுள்.

மாருத வலவன்விடு[1] வையமிசை மேவிச்
சீரிலகு வானவர் செழுங்கிரி யகன்றே
வீரமுறு சேணிபுடை மேவுற விறல்கே
தாரகிரி கண்(டு)அது தணந்தருளி னனல்.. 152

கருக்கடல் கடப்பஅருள் காசிநகர் கண்டு
பருப்பதம் எனும்பெயர் பரித்தகிரி கண்டு
விருப்பமுள வேங்கட வியன்குவடு கண்டு
மருக்குல்வு தென்கயிலை வண்சிகரி கண்டு. 153

ஆலவன மாகிய வரும்பதி தெரிந்து
ஞாலமுயர் கச்சியெனும் நன்னகர் தெரிந்து

---

152. மாருத வலவன்-வாயுதேவனுகிய தேர்ப்பாகன். வானவர் செழுங்கிரி-தேவகிரி. கேதாரகிரியைக் கண்டு என்க. கேதாரகிரி-இது, பிருங்கி முனிவர் உமாதேவியாரை நீக்கிச் சிவபெருமானை மாத்திரம் வலஞ் செய்ய, உமாதேவியார் சிவபெருமானை நீங்காதிருக்கும் வண்ணம் இடப்பாகம் பெற வேண்டிப் பூசை செய்தருளிய தலம்.

153. கருக்கடல் - பிறவியாகிய கடல். காசி நகர் – காசி என்னும் க்ஷேத்திரம்: இது, "காசியில் இறக்க முத்தி" என்று விளங்க அறியப்படும் முத்தித் தலம். பருப்பதம் என்னும் பெயர்பரித்த கிரி - ஸ்ரீசைலம்; இது மல்லிகார்ச்சுனம் எனவும் வழங்கப்பெறும். அருச்சுனம்-மருது. மருது மூன்றனுள் இத்தலம் முதல் மருதாகும். இடை மருது சோழ நாட்டிலுள்ளது; புடை மருது பாண்டி நாட்டிலுள்ளது. வேங்கட வியன் குவடு - வேங்கடமலை; இது முருகக்கடவுள் உமாதேவியாருடன் மாங்கனியின் பொருட்டுப் பிணங்கிக் கொண்டு கந்தமாதனத்தினின்று நீங்கிப் பாதலத்துட் சென்று, அங்குள்ள ஒரு குகையின் வழியாகத்தாம் முன்பு எழுந்தருளி வந்த தலம். தென்கயிலை வண்சிகரி - திருக்காளத்திமலை; (சிகரி–மலை.) இங்குச் சிலந்தி, பாம்பு, யானை இம் மூன்றும் இறைவனைப் பூசித்துப்பேறு பெற்ற தலம். இன்னும் கண்ணப்ப நாயனார் முதலியோர் பூசித்துப் பேறு பெற்ற தலமுமாம்.

154. ஆல வனம் - திருவாலங்காடு. இது, காளியினது செருக்கு அழியச் சிவபெருமான் திருநடனம் செய்தருளிய தலம். ஞாலம் - உலகம்; பூமி. கச்சி-காஞ்சிபுரம்; இது பிரளய காலத்திலும் அழிவில்லாமல் திருமால் பிரமன் முதலியதேவர்களுக்கு இருப்பிடமாய் விளங்கும் தலம். அழற்கிரி-திருவண்ணாமலை; இது, பிரம விஷ்ணுக்கள் தாமே பரம்பொருள் என்று ஒருவரோடொருவர் போர்புரிந்தபோது, அவர்கள் இடையில் சிவபெருமான் சோதிவடிவாக நிற்க, அவர்கள் அன்னமாகவும் பன்றியாகவும் அடியும் முடியும் தேடியும் காணமல் வருந்திய காலத்து அவர்களுக்கு அருள்புரிந்த தலம்.

நவநீதக் கோல நகர் - திருவெண்ணெய் நல்லூர். இது சுந்தரமூர்த்தி சுவாமிகளை இறைவன் தடுத்தாட்கொண்டருளிய தலம். முது குன்று -

பா-ம்—1 வலவன்விடுமவ்.

சிலமு(று) அழற்கிரி தெரிந்துநவ நீதக்
கோலநக ரோடுமுது குன்றது தெரிந்து. 154

வல்லிய மிடற்பதன் மகிப்பணி துதிப்பப்
பல்லிய முழங்கஉமை பார்வைகளி கூர
அல்லனைய கண்டமுள அண்ணல்நட மாடும்
செல்லுறு பொழிற்குலவு தில்லைநகர் கண்டு. 155

சீரிணைடு மன்னிவளர் சென்னிவள நாட்டு
வாரிநிகர் காவிரி வடாதுதிசை தன்னில்
ஏரிலகு மண்ணிநதி யின்கரை யடைந்தான் ;
காரிலகு கண்டனது கண்ணில்வரு மண்ணல். 156

அந்தவமை யந்தனில் அருக்கன்மறை வாணன்
கந்தனது போ(து)அமரர் கம்மியனை நோக்கி
இந்தவிடை யொன்றுநகர் இன்றுபுரி கென்றுள்
உந்துமவன் அப்பொழுதில் ஓர்நகர் புரிந்தான். 157

தாரணியின் அப்பதி தனக்கமரர் சேய்ஞ
ஞரென வரும்பெயர் உரைத்தனர் அதன்கண்

விருத்தாசலம் : இது, இறக்கின்ற உயிர்களை உமாதேவியார் தமது திருத் தோடையின் மேல் வலச்செவி மேலாகக் கிடத்தி உத்தரியத்தினுல் வீச, சிவ பெருமான் அஞ்செழுத்தை உபதேசித்து முத்தியிற் சேர்க்கும் தலம்.

155. வல்லியம் மிடல் பதன் - புலியினது வலி பொருந்திய காலை உடையவன்; வியாக்கிரபாத முனிவர். மகிப்பணி - உலகத்தைத் தாங்கும் ஆதிசேடன்; இங்கே அவனது அவதாரமாகிய பதஞ்சலி முனிவர். (மகி - பூமி) அல் அனைய – இருளை யொத்த, செல் – மேகம். தில்லைநகர் – சிதம்பரம். இது, தில்லை என்னும் மரம் அடர்ந்தமையால், இப்பெயர் பெற்றது. பல் இயம்- பலவாத்தியங்கள். ஆன்மாக்கள் மலத்தொடக்கு ஒழிந்து முத்தியடைதற் பொருட்டே உமாதேவியார் ஆனந்தத் திருநடனத்தைக் கண்டு களிக்கின்றுள் என்பார், 'உமை பார்வை களிகூர' என்றார்.

156. சென்னி வளநாடு – சோழ நாடு. சென்னி – சோழன். வாரி - கடல். காவிரி - காவிரிநதி: இதன் பெருமையினை "கோள்நிலை திரிந்து கோடை நீடினும், தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை" என வரும் மணிமேகலை அடிகளால் அறியலாம். வடாது திசை - வட திசை. மண்ணி நதி - காவிரியிலிருந்து பிரிந்து வரும் கிளையாறு : இது பல காலங்களில் பல வழிகளால் ஓடிச்சென்றது.

157. அமரர் கம்மியன் - விசுவகன்மா. இந்த இடை - இவ்விடத்தில். உந்தும் - கடவுளால் தூண்டப் பெற்ற. புரிந்தான் - உண்டாக்கினன்.

ஆருமெழில் வேலவன் அமர்ந்தினி திருந்தான்
சீருல்வு விண்ணிறை செயற்கையை இசைப்பாம். 158

முன்னமொரு வைகலில் முரட்குலிச வேலோன்
இன்னலொடு காழியின் இருந்தபொழு தங்கண்
மன்னுமொரு தெய்வத மருங்(கு)அணிகள் வைத்தான் ;
அன்னது கலன்களீ அளித்ததவண் வந்தே. 159

அண்டர்புகழ் தெய்வதம் அளித்தவணி தம்மில்
கொண்டலின் இருண்டிடு குழற்சசி இடும்பூண்
கண்டவளீ உன்னிமிகு காமமெனும் வெந்நோய்
கொண்டவன் வருந்தியது கூறவரி தம்மா[2]. 160

ஆயதொரு வேலிதனில் ஆதவன் எழுந்தான் ;
தூயமுரு கக்கடவுள் சோதிவடி(வு) அங்கண்
நேயமொடு செய்துமிகு பூசனை நிரப்பி
நாயகன் அளிப்பவொரு நற்படை படைத்தான். 161

வெற்றியனி கஞ்சுலவ வீ(று)இரத மேறி
மற்றிணையி லாதஇடை மாமருது மேன்மை

---

158. சேய்ஞலூர் - இது முருகக்கடவுளால் விரும்பப்பட்ட நல்ல ஊர் என்பது பொருள். சேய் – முருகக்கடவுள். சேய்ஞலூர் என்பது சேய்ஞலூர் எனப் போலியாயிற்று. விண் இறை - இந்திரன்.

159. ஒரு வைகலில் – ஒரு நாளில். முரண் குலிச வேலோன் - வலிமையுடைய வச்சிராயுதன் ; இந்திரன். காழி-சீகாழி: இது, சோழநாட்டிலுள்ள திருப்பதி. தெய்வதம்-வனதேவதை. மருங்கு-இடத்தில். அணிகள், கலங்கள் - ஆபரணங்கள். அன்னது - அவ்வனதேவதை. அவண் - அவ்விடம்.

160. கொண்டல் - மேகம். குழல் - கூந்தல். சசி - இந்திராணி. உன்னி-நினைத்து.

161. சோதிவடிவு அங்கண் நேயமொடு செய்து - அங்கே சிவலிங்கப் பெருமானை அன்போடு தாபித்து. நாயகன் - சிவபெருமான். ஒரு நற்படை-பாசுபதாஸ்திரம். முருகக் கடவுள் சிவபெருமானைப் பூசித்து பாசுபதாத்திரத்தைப் பெற்றுக் கொண்டார் என்க.

162. அணிகம் சுலவ - படை சூழ. இடை மாமருது – திருவிடை மருதூர் : இது சிவபெருமான் தம்மைத்தாமே பூசிக்கப் பெற்றதும், கயிலாயகிரியே மருத மரமாக இருக்கப் பெற்றதுமாகிய தலம். மயிலாடுதுறை - மாயூரம் ; இது, கௌரி மாயூரம் எனவும் வழங்கப் பெறும். பறியலூர் - திருப்பறியலூர் : இஃது அட்ட வீரட்டங்களில் ஒன்று. கமலாலயம்-திருவாரூர்;

பா-ம்—1 தன்னில். 2 கூறலரி தம்மா.

உற்றமயி லாடுதுறை ஒண்பதிய ஹர்கண்(டு)
அற்றமில் வளங்கொள்கம லாலயம் அடைந்தான். 162

அந்தமில் வளங்குலவு மப்பதி தணந்தே
வெந்துயர் தருங்கொடிய பாலிதனில் மேவத்
தந்திமுக வற்கிளவல் சாருதலும் அன்ன
செந்தழல் வனம்குளிர்மை சேர்ந்தது சிறந்தே. 163

பரிந்திடு வளங்கிளர் பரங்கிரியின் மீதே
இருந்திடு பராசரன் இரும்புதல்வர் வந்தே
திருந்தடி வணங்கஅருள் செய்தவர்க ளோடும்
அருந்துதிகொள் செந்திலின் அடற்குமரன் உற்றான். 164

அருந்திறல் பொருந்தமரர் கம்மியனீ அங்கண்
தெரிந்தருளி எஃகமுள சிற்பரனி யாமிங்(கு)
இருந்திடவொ ராலயம் இயற்றிடுதி யென்ன
விரிந்தபுகழ் மந்திரம் வியப்புற விதித்தான். 165

வாங்கமழல் மிடற்புரவி வையம திகந்தே
தேங்கமழ் பொதும்பர்செறி செந்தினக ருட்போய்
ஓங்கமரர் சேனைதொழ ஒண்சினக ரஞ்சேர்ந்(து)
ஆங்குறு மடங்கலணி ஆதனம் அமர்ந்தான். 166

இஃது, இலக்குமி பூசித்துப் பேறு பெற்ற தலம்; பூமாதேவி பூசித்துப் பேறுபெற்ற தலமும் ஆகும். கமல + ஆலயம் = கமலாலயம்.

163. தணந்து – நீங்கி. பாலி – பாலிநிலம். இப்பாலிநிலத்தின் இயல்பைக் கந்தபுராணம் - சூரம்புகு படலத்தில் பரக்கக் காண்க. தந்தி முகவற்கு இளவல் - முருகக் கடவுள். (தந்தி - யானை) குளிர்மை - குளிர்ச்சி.

164. பரங்கிரி - திருப்பரங்குன்றம். பராசரன் இரும் புதல்வர் - பெருமை வாய்ந்த பராச முனிவரின் புதல்வர்கள்; இவர்கள் தத்தன், அனந்தன், நந்தி, சதுர்முகன், சக்கரபாணி, மாலி என்னும் அறுவர்கள். இவர்கள் முன்பு சரவணப் பொய்கையில் தம் தந்தையின் சாபத்தால் மீனாக இருந்து உமாதேவியார் திருத்தனங்களினின்று சிந்திய பாலை உண்டு, தம் பழைய உருவம் பெற்றவர்கள் என்க. அருள் செய்து அவர்களோடும் என்க. செந்தில் - திருச்செந்தூர்.

165. எஃகம் உள சிற்பரன் - முருகக் கடவுள். மந்திரம் – மாளிகை.

166. வாம் கழல் - தாவுகின்ற கால்களையுடைய. புரவி - குதிரை. வையம் – தேர். பொதும்பர் - சோலை. செந்தில் நகர் - திருச்செந்தூர். சினகரம் - கோயில். மடங்கல் அணி ஆதனம் - சிங்காதனம்.

மங்கலமொ டங்கணுறு மாமுருக வள்ளல்
புங்கவர் வணங்குறு புரந்தரனை நோக்கித்
துங்கமுறு நீதியறு சூரன்முதல் வெய்யோர்
இங்குற வுதித்ததுவும் யாவுமுரை யென்றான். 167.

என்றிடலும் இன்னதை இசைத்திடுதி யென்றே
வன்றிறல்கொள் பொன்னெடு மகத்திறை விளம்பச்
சென்றுமுரு கக்கடவுள் சேவடி வணங்கி
நின்றவுணர் வந்ததும் நிகழ்ந்ததும் உரைப்பான். 168

ஆகச் செய்யுள்—200

உற்பத்தி காண்டம்

முற்றிற்று

---

167. அங்கண் - அவ்விடம். புங்கவர் - தேவர்கள். துங்கம் - பலம். வெய்யோர் - கொடியவர்கள்.

168. பொன் - பிரகஸ்பதி (வியாழ பகவான்). மகத்து இறை - இந்திரன். வந்ததும் - பிறந்த வரலாற்றையும்.

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

இரண்டாவது

அசுர காண்டம்

—o—

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

அற்றமறு காசிபன் அளித்தஅறு பான்மேல்
ஆறுபடு கோடிஅவு ணர்க்கரச னுனென்
பெற்றசுர சைப்பெயர் மகட்குயர் மழைக்கோள்
பீடுபெறு மாயவகை பேசுபு தெருட்டி
மற்றதனில் அன்னமயில் வல்லபம் உணர்ந்தே
மாயையென ஓர்பெயர் வழங்கினன் ; அதற்பின்
நற்றிறல்கொள் நந்திமுன் மொழிந்தமொழி உன்னி
நங்கை ! வரு கென்றிவை நவின்றிடுதல் உற்றுரன். 1

மங்குல்புரை மாயன்முதல் வானவர்கள் தம்மால்
வல்லவுணர் எண்ணிலர் மடிந்தனர்கள் மாதோ ;
இங்குன தருங்குலம் உயர்ந்திட நினைந்தே
இன்பமொடு காசிபன் இருந்துழி பொருந்தி

---

1. அற்றம் அறு - (காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூக்) குற்றங் கணையும் நீக்கிய. அறுபான் மேல் ஆறுபடு கோடி - அறுபத்தாறு கோடி. அவுணர்க்கு அரசனுனென் - அசுரேந்திரன் : மழைக்கோள் - சுக்கிரன். மாய வகை பேசுபு தெருட்டி - மாயவித்தை வகைகளைக் கற்பித்துத் தெளிவித்து. அன்ன - அந்த மாயவித்தையில். மயில் - சுரசை : உவமையாகுபெயர். வல்ல பம் - ஆற்றல். நங்கை : விளி. காசிபனுல் பெறப்பட்ட அசுரேந்திரனுடைய மகளாகிய சுரசை என்பவளுக்குச் சுக்கிரன் மாயவித்தைகளைக் கற்பிக்க, அவற்றில் அவள் வல்லளாதலை அறிந்து மாயை என்ற பெயரை இட்டு வழங்கினன்; தேவர்கள் அசுரர்களால் துன்புற வேண்டுமென்று முன்பு, நந்தி தேவர் இட்ட சாபத்தை நினைந்து அவளை அழைத்துப் பின் வருவனவற்றைக் கூறத் தொடங்கினன் என்க.

2. மங்குல் புரை - மேகம் போன்ற நிறமுள்ள. இருந்துழி பொருந்தி - இருக்கும் இடத்திற்குச் சென்று. கலவி செய்து - புணர்ந்து. அன்னவர் - அவ்வசுரர்கள். அச்சீர்மூனி - பெருமை பொருந்திய அக் காசிபன்.

அங்கவனெ டுங்கலவி செய்(து)அவுண ரைத்தந்(து)
அன்னவர் தவஞ்செய விடுத்துவரு கென்னைச்
செங்கனக மானவொரு மேருவட பால்அச்
சீர்முனி தவஞ்செயும் இடந்தனில் அடைந்தாள். 2

மன்னியிடு காசிபன் இருக்கையில் அடைந்தே
வாவியொடு தண்டலையும் மண்டபமும் அங்கண்
கன்னிகடி தேபல வளத்துடன் இயற்றக்
கண்டன னியாவர்? இது கண்டவர்கள் என்றே
உன்னினன் இருந்துழி அவன்றனது நேரே
உற்றிடலும் மற்றவள் உரூபமது கண்டு
முன்னைவினை யாலிடர்செய் காமநதி யூடே
மூழ்கின னியாரெனினும் முன்னைவினை போமோ. 3

ஆயவடன் முன்பணுகி ஊர்பெயர் வினவி
அன்பினெடு கூடியெனை யாளநினை யென்ன
மாயவள் புகன்றிடுவள் : உத்தர தலத்தேன் ;
வண்மையுள கங்கைதனில் வல்லைபடர் கின்றேன் ;
நீயுன தருந்தவம் ஒழிந்திது மொழிந்தாய் ;
நீதிமுறை யல்லவிது ; நில்லென நிகழ்த்திப்
போயினள் ; தொடர்ந்தனன் ; மறைந்தனள் வருந்திப்
பொற்புமுனி தேடுபு புலம்புபு திரிந்தான். 4

தேடிமயல் கொண்டுமுனி வாடுமது போதில்
செம்பரிதி பச்சிம திசைக்கடல் அடைந்தான் ;
நீடுமிருள் வந்ததெழில் மாயைதனை அன்னன்
நினைந்தற அரற்றுதலும் நேர்பட அணைந்தாள் ;

---

3. வாவி - தடாகம். தண்டலை - சோலை. கன்னி - மாயை. கடிதே - விரைவில். கண்டவர்கள் - உண்டாக்கியவர்கள். உன்னினன் இருந்துழி - ஆலோசித்தவனாகி இருந்தபோது. காம நதியூடே - காமமாகிய ஆற்றினிடையே; உருவகம். எத்தன்மை யுடையவர்களே யானாலும் அவர்களைப் பழவினை விட்டுப் போவதில்லை என்பர், "யாரெனினும் முன்னைவினை போமோ" என்றார். இங்கு, "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந் தான்முந் துறும்" என்னும் திருக்குறள் நோக்கற்பாலது.

4. உத்தர தலத்தேன் - யான் வடதேசத்திலுள்ளவன். கங்கைதனில் - கங்காநதியிலே (ஆடும் பொருட்டு). வல்லை - விரைவில். தேடுபு - தேடி. புலம்புபு - புலம்பி.

கூடியெனை யாளென இரந்தடி இறைஞ்சக்
கூறுவளி யான்வடிவு கொண்டபடி கொண்டால்
ஆடல்புரி வேனெனலும் அங்கணெரு புத்தேள்
அங்கமது கொண்டனன் ; அயன்றனது மைந்தன். 5

அங்கவள் இசைந்துமுத லானவொரு சாமத்(து)
அன்பினெடு கூடலும் அருந்திறல்கொள் சூரன்
துங்கமொ டுதிப்பஅவர் அங்கவியர் வின்கண்
துப்புடைய முப்பதெனும் ஆயிரவெள் ளத்தோர்
பொங்கவுணர் வந்தனர் ; இரண்டுபடு சாமப்
போதில்அரி மேனிகொடு புல்லுதலும் வல்லே
சிங்கமுகன் ஆயிர நெடுந்தலைக ளோடும்
சேணிலுறும் அண்டர்கள் திடுக்கிட உதித்தான். 6

அங்கவர்கள் அங்கமிசை பொங்கிய வியர்ப்பின்
அற்றமறு நான்குபதி னாயிரவெள் ளத்தோர்
தங்கியவி றற்றகுவர் வந்தனர்கள் ; மும்மைச்
சாமமதில் மாயையொடு சைவமுனி வோனும்
வெங்கரி யுருக்கொடு புணர்ந்துகளி கூர
வேழமுக மோடும்உயர் தாரகன் உதித்தான் ;
துங்கவெழில் மேனிமிசை வந்தகசி வின்கண்
தோன்றினர்கள் நான்குபதி னாயிரவெள் ளத்தோர். 7

மற்றதுபின் நான்குபடு சாமமது தன்னில்
வன்றகர் உருக்கொடு மகிழ்ச்சியொடு கூட
முற்றுமெழில் பெற்றஅச மாமுகி உதித்தாள் ;
முப்பதெனும் ஆயிரம் முரண்தகுவர் வெள்ளம்

---

5. பரிதி - வட்டவடிவாயுள்ளது; சூரியன். பச்சிம திசை - மேற்குத் திக்கு. அற - (ஆற்றல் முழுவதும்) நீர. அரற்றலும் - கதற. கூறுவள் - மாயை சொல்ல லாயினள். ஆடல்-புணர்தல். புத்தேள் அங்கமது-தேவகீயப் போன்ற உருவம்; அது பகுதிப்பொருள் விகுதி. அயன்தனது மைந்தன் - காசிப முனிவன்.

6. துப்பு - வலி. அரி மேனி – சிங்கவடிவு. சேணில் - வானுலகத்தில். முதலாஞ்சாமத்தில் சூரபன்மனும், இரண்டாஞ் சாமத்தில் சிங்கமுகாசுரனும் பிறந்தார்கள் என்க.

7. விறல் - வலிமை. தகுவர் - அசுரர். சைவமுனிவோன் - காசிபன். கரி - யானை. கசிவின்கண் - வேர்வையில். மூன்றுஞ்சாமத்தில் தாரகாசுரன் பிறந்தான் என்க.

உற்றது வியர்ப்பினில் ; யாளிமுத லாகும்
உந்திய விலங்கின துருக்கள்கொடு கூடப்
பொற்றுதிகொள் ஆறுபதி னாயிரவெள் ளத்தோர்
பொருக்கென உதித்தனர் ; அருக்கனும் உதித்தான். 8

அப்பொழுது தொல்லுருவ மாயவள் பொருந்த
அந்தண்மலர் மீதுறும் அயன்றனது மைந்தன்
மெய்ப்படுத னுதுருவம் மேவினன்;அவ் வேலை
வேலைநிகர் தானையொடு மேவுமொரு சூரன்
துப்பரி முகத்தனெடு தாரகனெ(டு) ஏகித்
தூயமுனி மாயவள் துணைப்பதம் இறைஞ்சி
எப்பரிசி யாம்இனி இயற்றுவ தெனச்சீர்
எய்தியிடு காசிபன் இசைத்திடுதல் உற்றான். 9

மாதவம் எழிற்றொழில் அனைத்தினும் இனித்தால்
மற்றது குயிற்றிடின் மனத்திடை நினைத்த(து)
ஏதையும் அளித்திடும்; இடர்ப்பவம் அறுக்கும்;
இன்பமுறு நற்கதியும் ஈயும் ; இதல் மிக்க(து)
ஓதிடி லியாதுமிலை ; ஆதலின் அனைத்தே
உள்ளமிசை அன்பொடும் உவந்திடுதிர் என்றே
மேதகும் அருந்தவ முயன்றுபுகழ் மேனாள்
மேவிய பெருங்கதை விளம்பிடுதல் உற்றான். 10

---

8. தகர்உருக்கொடு - ஆட்டின் வடிவங்கொண்டு. அசமாமுகி - ஆட்டு முகமுடைய அசமுகி என்னும் பெண். (அசம் - ஆடு.) முரண் - வலி. பொன் துதிகொள் - பொலிவும் புகழும் கொண்ட ; துதிக்கும்படியான பொலிவு பெற்ற எனினுமாம். பொன் + துதி = பொற்றுதி. நான்காஞ்சாமத்தில் அசமுகி என்பவள் பிறந்தாள் என்க.

9. தொல் உருவமாய் - பழைய உருவத்தை உடையவளாகி. அவ்வேலை - அச்சமயத்தில். வேலைநிகர் - கடலை ஒத்த. துப்பு அரி முகத்தன் - வலிமை யுடைய சிங்கமுகாசுரன். தூய முனிவன் துணைப்பதத்தையும் மாயவள் துணைப் பதத்தையும் என்க. எப்பரிசு - எவ்வாறு.

10. இனித்து: இனிது என்பதன் விகாரம். "மாதவம் எழிற்றொழில் அனைத்தினும் இனித்து" என்பதனை, "தவந்தனில் மிக்கதொன்(று) இல்லை ; தாவில்சீர்த், தவந்தனை நேர்வது தானும் இல்லையால், தவந்தனின் அரிய தொன்(று) இல்லை; சாற்றிடில், தவந்தனக்(கு) ஒப்பது தவம தாகுமே" என வரும் **கந்தபுராணம்**-காசிபனுபதேசப்படத்தால் அறியலாம். குயிற்றிடின்- செய்தால். மனத்திடை நினைத்தவைகளையெல்லாம் அளிக்கும்: "வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம், ஈண்டு முயலப் படும்" என்பது திருக்

கொற்றமு(று) எழிற்கடகம் மேவுமறை யோன்நற்
குச்சகன் அளித்தருள் கவுச்சிகன் எனும்பேர்
உற்றிடு புகழ்ச்சுதன் அருந்தவம் இயற்றற்(கு)
உன்னியொரு துன்னுமல ரோடைஅயல் எய்திப்
பற்றலர் புரம்பொடி படுத்தவனீ உள்கிப்
பற்றுமிகும் உண்டிகள் பகர்ந்திடல் இகந்து
குற்றியின் இருந்தனன் அருந்தவம் இயற்றக்
கோகனத மின்தழுவு கொண்டல்அவண் வந்தான். 11

மன்னிய தவம்பயிறல் கண்டுவகை கொண்டு
மாதவன்! நினதுபெயர் மாமிருக கண்டு
யன்என மொழிந்திட எழுந்துதொழ மாயோன்
ஆதியருள் நின்புடையி னுகவென ஓதித்
துன்னுமிமை யோரொடு மறைந்தனன்; அதற்பின்
தூயமுனி தந்தையிடை வந்துதொழு(து)அன்னுன்
பொன்னடி வணங்கலும் எடுத்துநனி புல்லிப்
பொற்புறு தவத்திடை புகுந்தஅுரை என்றான். 12

அம்மொழி வழங்கலும் நிகழ்ந்தசொல இன்புற்(று)
அன்பொ(டு)இனி இல்லறம் அமர்ந்திடுதி யென்ன
வெம்மைநிரை யந்தரு மடந்தையர் துவக்கில்
வீழ்கிலன் எனப்பல விளம்புதலும் அன்னுன்

குறள். பவம் - பிறப்பு. நற்கதி - முத்தி. அணைத்தே - அத்தகையதாகிய தவத்தையே. மேனுள் - முற்காலத்தில். மேல்+நாள் = மேனுள். புகழ்மேவிய பெருங்கதை என்க. பெருங்கதை - மார்க்கண்டேய முனிவர் சரிதம்.

11. கடகம் – ஓர் ஊர், குச்சகன் குமாரன் கௌச்சிகன். பற்றலர் புரம் - திரிபுரம். பற்றலர்புரம் பொடி படுத்தவன் - சிவபெருமான். உண்டிகள் பகர்ந்திடல் இகந்து - உணவுகளையும் பேசுதலையும் ஒழிந்து: ''ஓவிய மவுன முற்றுங் குணவொடும் உறக்கம் நீங்கி'' என்பது கந்தபுராணம் - மார்க்கண்டேயப்படலம். 4. குற்றியின் - கம்பத்தைப்போல, கோகனதமின் - இலக்குமி. (கோகனதம் – தாமரை.) கொண்டல் - திருமால்: உவமையாகுபெயர்.

12. மிருககண்டியன் - ஆ நீண்டு குற்றிபோன்றிருந்து தவஞ்செய்த முனிவன்மேல் விலங்குகள் தம் தினவு போக உராய்ந்து சென்றமையால் இப்பெயர் வந்தது; மிருககண்டியம் - விலங்குகளின் தினவு. ''மேவிய விலங்கு தத்தம் மெய்யகண்டியம் யாவும் போவது கருதி அன்னுன் புரத்திடை உரைத்துப் போமால்'' என்பது கந்தபுராணம் - மார்க்கண்டேயப் படலம். 4. தந்தை - இங்குக் குச்சக முனிவர்.

செம்மையுறு வீடுபெறு நன்னெறியி தாகும் ;
தீதல எனப்பல திறத்தினில் உரைத்தே
இம்மொழி மறுத்தறையல் ; ஆணைநம தென்றான் ;
என்றிட இசைந்தனன் இறைஞ்சினன் இசைப்பான்.13

மனந்தனில் முனிந்திடல் ; மொழிந்தநெறி நிற்பன் ;
மற்றென துரைப்படி மருதவியல் புள்ள
கனந்தரு பெருந்தன மடந்தையுள ளேல்அக்
கன்னியை மணம்புரிதல் கண்டிடுவன் என்ன
வனந்தனில் இருந்தவ முழந்தவன் மகிழ்ந்தே
அன்னகுண மேயுடைய அன்னநடை மாதை
நனந்தலை பொருந்திய பெரும்புவியின் நேடி
நல்குவன் உனக்கெனலும் நற்சுதன் நவிற்றும். 14

ஐயனே இழந்தவர்கள் அன்னையை இழந்தோ
ராதிநவை யாயின அகன்றமட மானர்
வையமிசை உண்டெனில் வரைந்திடுவல் என்ன
வல்லியது செய்வனென வண்கமல மேவும்

---

13. இல்லறம் - இல்வாழ்க்கையில். நிரையம் - நரகம். துவக்கு - கட்டு. அன்னன் – குச்சக முனிவன். இது - இங்கு இல்லறம். மறுத்து அறையல் - மறுத்துக் கூறுதே. ஆணை - சத்தியம். தந்தை சொல் மறுப்போர் நரகடைவர் ; ஆதலால், ''இம்மொழி மறுத்து அறையல்'' என்றார். ''தந்தை சொல் மறுப்பவர்கள் தாயுரை தடுப்போர், அந்தமறு தேசிகர்தம் ஆணையை இகந்தோர், வந்தனைசெய் வேதநெறி மாற்றினர்கள் மாருச், செந்தழல வாயநிரயத்தினிடை சேர்வார்'' என்பது **கந்தபுராணம்** - மார்க்கண்டேயப் படலம், 54. ''தந்தைதாய் பணித்தல் செய்யுந் தவமலால் தவம் வே(று) இல்லை'' என்பது **காசி கண்டத்தின்** அடியாகும்.

14. முனிந்திடல் - கோபித்தலை ஒழிக. மொழிந்த நெறி - இங்கு, இல்லறம், இரும் தவம் உழந்தவன் - குச்சக முனிவன். நனந்தலை - (பாதாளலோகத்திற்கும் சுவர்க்கலோகத்திற்கும்) இடையில். என் சொல்லை மறுக்காமல் நடக்கும் கன்னிகை இருந்தால் அவளைத் திருமணம் செய்துகொள்வேன் என்று மிருகசிண்டிய முனிவர் கூறினர் என்க.

15. ஐயனே - தந்தையை. இழந்தோராதி - இழந்தவர்கள் முதலான. நவை - குற்றம். வரைந்திடுவல் - மணம் செய்து கொள்வேன். அது செய்வன் - அத்தகைய பெண் ஒருத்தியைத் தேடிக் கொணர்தலைச் செய்வேன். சென்னி வள நாடு - சோழ நாடு. உசத்தியன்-இவன் சோழநாட்டு அநாமய வனத்தில் தவஞ்செய்யும் ஒரு முனிவன். அவண் - அநாமயம் என்னும் வனத்திற்கு.

தையல்மிக மன்னிவளர் சென்னிவள நாடு
தன்னிடை அநாமயம் எனத்திகழ் வனத்தில்
மெய்யில(கு)உ சத்தியன் இடத்தினெரு கன்னி
மேயது வினவிஅவண் மேவினன் விருப்பால். 15

அன்பினெடு குச்சக விருந்தவனீ நேர்கண்(டு)
அசத்திய மகன்றிடும் உசத்தியன் வணங்கா
என்புடை அடைந்தபடி என்னபுக லென்ன
என்னெரு மகற்குன(து) எழிற்புதல்வி தன்னீ
இன்பினெடு பேசும்வகை உன்னியிவண் வந்தேன்
என்றிடலும் நன்றென இசைந்துமுனி யோடும்
நன்புபெறும் அவ்விடை இருந்தனன் ; இருந்த
நாளில்நிகழ் வுற்றது நவிற்றிடுதும் மாதோ. 16

வன்றவவு சத்தியன் மகிழ்ந்தமனீ மாதாம்
மங்கலீ விடுப்பஎழின் மாமகள் விருத்தை
சென்றுமட வாரொடு நறும்புனல் படிந்தே
திரும்பும்அமை யத்தின்னனி சீறுமத வேழம்
ஒன்றெதிர் அடைந்திடலும் ஏவரும் வெருக்கொண்(டு)
ஓய்யென இரிந்தனர் ; உரக்கரி விருத்தை
பின்றொடர வோடி ஒரு நீடுபுதல் மூடும்
பீடுபெறு கூவலிடை பெய்வனீ விழுந்தாள். 17

விழுந்தனள் பொருந்துயிர் பிரிந்தனள் கிடந்தாள் ;
வேறுள மடந்தையர் விருத்தைதனீ நேடி
அழுந்துதுய ரத்தினெடு கண்டிலர்க ளாகி
அன்னவள்தன் அன்னீயொ டறைந்திட அரற்றிச்

---

16. அசத்தியம் - பொய். என்புடை - என்னிடம். மகற்கு - மகனுக்கு. பேசும் வகை - மணம் பேசும்படி. உன்னி - நினைத்து. நன்று என்–நல்லது என்று கூறி. நன்பு - நன்மை.

17. மனீ மாதாம் மங்கலீ - மனவி யாகிய மங்கலீ. புனல் படிந்து – ஸ்நானம் செய்து. வெருக்கொண்டு, அச்சங்கொண்டு. ஓய்யென இரிந்தனர் - விரைவில் ஓடிப் போயினர். உரக் கரி - பலத்தையுடைய யானை. ஓடி - (விருத்தை) ஓடி.. கூவலிடை - கிணற்றில். பெய்வனீ – விருத்தை. பெய்வனீ ஓடிக் கூவலிடை விழுந்தாள் என்க.

18. உயிர் பிரிந்தனள் கிடந்தாள் – இறந்து கிடந்தாள், நேடி – தேடி. அரற்றி - (அன்னீ) கதறி. செல்லல் - துன்பம். ஒழிந்திடுதல் அற்ற துயர் உற்றிடலும் - ஒழியாத துயரை அடையவே. ஓதம் – சரம்; அன்பு.

செழுங்கணவ னுடிது புகன்றிடலும் அன்னன்
செல்லல்கொடு சென்றுநனி தேடினன் எடுத்தங்(கு)
ஒழிந்திடுதல் அற்றதுய ருற்றிடலும் இவ்வா(று)
ஓதமிகு குச்சகன் உணர்ந்தவ ணடைந்தான். 18

வந்துசில புந்திசொலி நாளுயிர் ஈவன் ;
மண்டுதயி லத்துடலை வைத்திடுக என்றே
உந்தொரு தடத்தணுகி அந்தகனே உள்ளத்(து)
உன்னினன் அருந்தவ முழந்திடலும் அன்னோன்
முந்தவண் அடைந்தகரி எய்திமுனி தன்னை
மொய்ம்பினொடு பற்றுபு முரண்கொள்பிடர் மீதே
சுந்தர முறக்கடிது கொண்டுவரை யென்னத்
துண்ணென நடந்தது ; வசுந்தரை துளங்க. 19

தடந்திகழ் விலங்கல்கள் பிலந்தனில் அழுந்தத்
தாள்கொடு மிதித்(து)உயர் தருத்திரள் பறித்தே
மடங்கலும் நெடுந்தல மடங்கலும் நடுங்க
வல்லிவரு மும்மத வரைக்களி(று)இவ் வாறே
நடந்தது இருந்தவ நெடுந்தகை தெரிந்தே
நம்மையி தெடுத்ததெவன் ? நாடுதும் எனக்கொண்(டு)
இடந்தருத னு(து)அறிவின் நேடினன் உணர்ந்தான் ;
எவ்வகை யுணர்ந்ததெனில் இவ்வகை உணர்ந்தான். 20

நத்துறு தடம்பல கருன்றிடு கலிங்க
நாடுதனில் நீடுபுகழ் நன்னகரம் ஒன்றுண்(டு)
அத்திரு நகர்ப்பெயர் இலங்(கு)அரிபுரம்சீர்
அப்பதியின் மேவிய அருந்துதிகொள் தேவ

---

19. புந்தி - அறவுரைகள். மண்டு தயிலத்து - நிறைந்த எண்ணெயில். உந்து - (அகை) மீசும். தடத்து - குளத்தை. அந்தகனே - யமனே. உழந்திட லும் - செய்தபோது. முந்து அவண் அடைந்த கரி - முன்னே அங்கு வந்த யானை. முரண் - வலி. வசுந்தரை துளங்க - பூமி நடுங்க.

20. தடம் திகழ் விலங்கல்கள் - விசாலமான மலைகள். பிலம் - பாதாளம். தருத்திரள் - மரக்கூட்டம். மடங்கலும் - சிங்கங்களும். நெடுந்தலம் அடங் லும் - நீண்ட உலகம் முழுவதும். இருந் தவ நெடுந்தகை - மிக்க தவத்தை புடைய குச்சகன். தனது அறிவின் நேடி - தன் ஞான உணர்ச்சியினல் ஆராய்ந்து.

21. நத்து-சங்கு. தடம்-தடாகங்கள். கருன்றிடு-நெருங்கிய. காய்கன்-வணிகன். விழுமம் - துன்பம். வீறு - பெருமை. இரதவாதி - இரசவாதம்

தத்தனெனும் நாய்கன்உத வும்தரும தத்தன்
தன்னையருள் அன்னையொடு தந்தையும் இறப்ப
மெத்துவிழு மத்தினெ(டு) இளைத்துறு தினத்து
மேவினன் ; அவன்புடையோர் வீ(று)இத வாதி. 21

அருந்தவன் எனும்படி அடைந்தவனை நேர்கண்(டு)
அன்பொடு வணங்கினன் அணைந்ததெவ னென்னத்
திருந்துமொரு விஞ்சையுள தென்றுபல மேன்மை
செப்பியொரு பொன்னைவளர் கோடிநிதி செய்வாம் ;
இருந்திடுநி னுதுபொருள் தந்திடின்உன் இல்லை
இல்லைநிதி வைக்குமிடம் என்னும்வகை இன்னே
புரிந்திடுதும் என்றிடலும் ஆடைமனை வீடு
பூணிவை பகர்ந்தெழில் பொருந்(து)அறமும் விற்றான். 22

அன்னபொருள் கொண்டுகர வன்றனை அடைந்தே
அங்கவன்முன் வைத்திட அருங்குகையுள் இட்டு
மன்னுதழல் தூமம்அவன் நேர்நனி துரப்ப
மற்றவன் மயங்கநிதி வண்குகை கரந்தே
பின்னெர்குகை யப்படி இருந்ததது தன்னைப்
பீடுபெற வைத்துயர் பெரும்புகை தணித்தே
இன்னதை இருங்கனலில் வைத்திடுக வென்றான் ;
என்றிடலும் நாய்கனும் எடுத்தழலில் வைத்தான். 23

செய்பவன்; இரசவாதம்-இரும்பு, செம்பு முதலிய லோகங்களை இரசகுளிகையினால் பொன்னாக்கும் ஒரு வித்தை.

22. அருந்தவன் எனும்படி - அரிய தவம் செய்யும் முனிவன் என்று சொல்லும்படியாக. அணைந்தது எவன் என்ன - இங்கே எழுந்தருளியது என்ன காரணம் என்று தருமதத்தன் வினவ. விஞ்சை - வித்தை; இவ்வித்தையின் மேன்மைகளைக் கந்தபுராணம் - மார்க்கண்டேயப்படலம், 121 முதல் 125-ஆம் செய்யுள்வரை காண்க. ஒரு பொன்னைக் கோடி பொன்னாகச் செய்வோம் என்க. உன் இல்லத்தை நிதி வைக்குமிடம் இல்லை என்னும் வகை செய்திடுவோம் என்க. பகர்ந்து - விற்று. அறமும் விற்றான் - தருமத்தின் பொருட்டு வைத்திருந்த சொத்துக்களையும் விற்றான்.

23. கரவன் - கள்ளவேடம் உடையவன். குகை - உருக்குகின்ற லோகங்களை இட்டு நெருப்பில் வைக்கும் ஒரு கருவி. மன்னு தழல் தூமம் அவன் நேர் நனி துரப்ப - இருந்த நெருப்பினது புகையை அவனுக்கு நேரே நன்றாக ஊதிச் செலுத்த. அந்தப்புகையினால் அவன் தடுமாறி நின்றபொழுது முன்வைத்த குகையை எடுத்துக்கொண்டு வேறொரு குகையை வைத்துவிட்டான் என்க. நாய்கன் - வணிகன் ; இங்குத் தருமதத்தன்.

மூப்பகல் மனத்தெமை நினைத்துறைதி நீலி
முன்னொரு மகம்புரிபு முத்தினம் அகன்றால்
இப்புடை அடைந்திடும் என்றவனை வைத்தே
ஏகுதலும் நாய்கனும்அவ் வெல்லையும் இருந்தே
அப்படி றனைப்புவியின் நேடிநனி காணு(து)
அல்லல்கொடு வந்தனன் அருங்குகை எடுப்பக்
கைப்படும் இருங்குகை இரும்புருவ மாகக்
கண்டனன் மிகுந்துயர் கலந்தனன் இறந்தான். 24

நற்றருமம் விற்றதொரு குற்றமது தன்னால்
நாகவுரு நண்ணினன் எனக்கடி துணர்ந்தே
மற்றிவ்வுரு வந்தனை அகற்றுவன் எனுவோர்
வைகல்புரி தன்தவம் வழங்குதலும் வல்லே
வெற்றிகொள் களிற்றுருவம் அற்(று)அமரர் மேனி
மேவுபு புகழ்ந்தெழிலின் விண்ணுலக முற்றால் ;
அற்றமறு பூசுரனும் ஓடையிடை முன்போல்
அருந்தவ முயன்றிடலும் அந்தகன் அடைந்து. 25

விருத்தையுயிர் நல்குதலும் அன்னவள் எழுந்தாள் ;
மெய்த்தவன் மகற்கவளை வீறுவது வைசெய்(து)
அருத்திகொள் வடாதுபுல மேகலும் அவன்சேய்
அவ்பிளைடும் இல்லறம் அமர்ந்துறையும் நாளில்

---

24. மூன்றுநாள் எம்மை நீங்காது இருப்பாயாக; காளியின் முன்னே ஒரு யாகத்தைச் செய்து அந்த மூன்றுநாள் கழிந்தவுடன் இங்கே வருவோம் என்று ஏகினன் இரசவாதி என்க. நீலி - காளி. இப்புடை - இவ்விடத்தை. அவ்வெல்லையும் - அவன் கூறிய மூன்று நாட்களும். படிறனை - வஞ்சகனை. நனி நேடி - நன்றாகத் தேடி. கையிலே உள்ள குகை வேறும் இரும்பு நிறைந்ததாக இருப்பதைக் கண்டு துன்பமுற்று தருமதத்தன் உயிர்நீத்தான் என்க.

25. நாக உரு - யானையின் வடிவம். உணர்ந்தே - உணர்ந்தவன் குச்சக முனிவன். ஒருநாள் தான் புரிந்த தவப்பயனை அந்த யானைக்குத் தத்தம் செய்தான் என்க. அற்று - நீங்கி. எழிலின் - அழகோடு. பூசுரன் - மறையவன்: குச்சகமுனிவன். ஓடையிடை - தடாகத்தில். அந்தகன் - யமன்.

26. விருத்தை - உசத்திய முனிவன் மகள். மகற்கு - இங்கு, மிருகண்டு யருக்கு ; (மகன் + கு = மகற்கு.) வதுவை செய்து - திருமணம் செய்வித்து. அருத்தி - அன்பு. அவன் சேய் - குச்சகமுனிவன் பிள்ளையாகிய மிருகண்டிய முனிவன். முற்கல முனிவர் மகளாகிய மருத்துவதியை மிருகண்டு முனிவன் மணந்துகொண்டான் என்க.

பெருத்திடு வனப்புமிரு கண்(டு) எனவேர்ர் பாலற்
பெற்றுவட திக்கிடை பெயர்ந்திடலும் மன்னே
திருத்தகும் அவன்குமரன் முற்கலன் அளித்த
சேயிழை மருத்துவதி யைவதுவை செய்தான். 26

மண்டெழில்கொள் காசிநகர் உற்றரனை உன்னி
மாதவம் முயன்(று)அமலன் மன்னருளி னுல்மார்க்
கண்டனை அளித்திடலும் அன்னவன் வளர்ந்தே
கண்ணுதல் அருட்கொடுயர் காலனையும் வென்று
திண்டிறல் படைத்தனன் எனச்சொல மறுத்துச்
செல்வமதி கம்மது பெறச்சிவனை நாடி
வண்டவ மியற்றிடுதிர் என்றுகடி(து) ஏவி
வல்லைதனில் முல்லைநகை மாயவள் எழுந்தே. 27

ஏருறும் அருந்தவ ! இருத்தி ;அகல் கின்றேன்
என்றவள் நடந்திடலும் ஏகல்முறை யோவென்(று)
ஆரிடர் பொருந்திஅவள் பின்படர அன்னுள்
அன்பினொடு மைந்தரை அளிப்பது பொருட்டால்
வாரிதி நிலத்திலுனை நண்ணினனி யானோர்
மாயைஎன ஓதினள் மறைந்திடலும் உள்ளம்
சோர்வுற வருந்தவிதி வந்துசில புந்தி
சொல்லிஅ கலத்துயர் துறந்தினி(து) இருந்தான். 28

முன்னென அடங்குதல் தொடங்கினன் ; மடங்கல்
முகத்தனும் அடற்கரி முகத்தனும் உகத்திற்(று)
இன்னலுற ஏழ்கடலும் ஒன்றுபடு மாபோல்
எங்குநிறை தானையும் இலங்குபுடை மேவ

---

27. உற்று-(மிருகண்டு முனிவன்) அடைந்து. அமலன்-சிவபெருமான். மன்-நிலைபெற்ற. எனச் சொல்-என்று (காசிபன் குரபன்மன் முதலியோருக்குச்) சொல்ல. மறுத்து- தவம் புரிதற்கு உடம்படாமல் மறுத்து. செல்வம் அதிகம் - மிகுந்த செல்வம். முல்லைநகை - முல்லையரும்பையொத்த பற்களையுடைய. மாயவள் - மாயை.

28. அருந்தவ இருத்தி- அரிய தவத்தையுடைய முனிவனே ! நீ இருப்பாயாக. ஆர் இடர் - மிக்க துன்பம். ஏதி - பிரமதேவன். பிரமதேவன் காசிபனுக்குச் சில அறிவுரைகளைச் சொல்லிப் போக, அவன் துயரம் நீங்கினன் என்க.

29. முன் என - முன்போல. அடங்குதல் தொடங்கினன் - ஐம்புலன்களையும் அடக்கிக்கொண்டு தவஞ்செய்யத் தொடங்கினன். மடங்கல் முகத்தன்-

ஒன்னலர் நடுங்கவரு சூரனெரு பாலின்
ஒல்லியின் அடைந்திடலும் உந்துபுகர் வந்தே
அந்நிலே மகத்தொழில் இனேத்தென அனேத்தும்
அங்கவன் அறிந்திட அறைந்தனன் மறைந்தான். 29

பண்டென வடாதுபுல மேவிஅசு ரேசன்
பாங்குபுனே மாயைபொருள் ஆங்குற இயற்ற
அண்டர்புகழ் வேள்விபதி னுயிரம தாகும்
ஆண்டுசெய ஆண்டுநமை ஆண்டவன் அடைந்தே
மண்டருள்செ யாதவது கண்(டு)அவுணர் மன்னன்
வானிடை யெழுந்துதசை யானவை அரிந்து
குண்டமதி லாயிர மு(று)ஆண்டுநனி சிந்தக்
குன்றவிலி வந்திலன்; மகத்தெரியில் வீழ்ந்தான். 30

தீயிடை மடிந்தது தெரிந்(து)அரி முகத்தோன்
சென்னிகள் அரிந்துமக வன்னிமிசை சிந்தி
மாய்வுற நினேப்பமறை யோன்உருவ மாகி
வந்துபரன் நொந்திடுவ தென்னெனலும் அன்னன்
ஆயிடை நிகழ்ந்தசொல வீரமுறு சூரன்
அங்குற வெழுப்பிமறை யோன்உரு வகன்(று)ஆ
காயமிசை பெற்றமிசை மாதொடு விளங்கக்
கண்டடி பணிந்(து)அவுணர் காவலன் மகிழ்ந்தான். 31

சிங்கமுகாசுரன். கரிமுகத்தன் - தாரகாசுரன். உகத்து ஈற்று - யுகமுடிவில். இன்னுயிர - உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் துன்பம் அடையும்படி. புடை - பக்கங்களில். ஒருபாலின் - ஒரு பக்கத்தில். ஒல்லியின் - விரைவில். உந்து - (உயர்ந்து) செல்லும். புகர் - சுக்கிரன். மகத்தொழில் இனேத்து - யாக காரியம் இத்தகையது.

30. வடாதுபுலம் - வடதிசை. அசுரேசன் - சூரபன்மன். பொருள் ஆங்குறு - யாகத்திற்கு வேண்டிய பொருள்களெல்லாம் அங்கே அமையும்படியாக, நமை ஆண்டவன் - சிவபெருமான். குண்டமதில் - யாக குண்டத்தில். குன்றவிலி - சிவபெருமான்: மலேயை வில்லாகவுடையவன்; மலேயை இல்லாகவுடையவன் எனினுமாம்.

31. அரிமுகத்தோன் - சிங்கமுகாசுரன். மக வன்னி மிசை - யாகாக்கினியில். பரன் - சிவபெருமான். மறையோன் - அந்தணன். பரன் மறையோன் உருவமாகி வந்து என்க. ஆயிடை - அப்போது. நிகழ்ந்த - நடந்தவற்றை. சூரனே எழுப்பி என்க. சிவபெருமான் தேவ கங்கையைத் திருவுள்ளத்தில் நினேந்தருள, கங்கை வந்து செந்நியினேயுடைய யாக குண்டத்தில், பாய்ந்தனள்; அதனால் சூரபன்மன் உயிர்பெற்று எழுந்தான் என்பதாம்.

இன்னருள்அ ரன்புகல்வன் : இங்கெமை நீங்கந்தே
எண்ணில்பகல் நற்றவம் இயற்றினீ ; மனத்தில்
உன்னியது கேளென உரைத்திட உரைப்பான் :
உந்துபுவி கொண்டபல அண்டம்அர சாள
மன்னியழி யாமலுற யாவரையும் வென்றே
வாழ்வுற வெனப்பல வரங்கள(து) இரப்பக்
கன்னியொரு பாலுடைய கண்ணுதல் வினவிக்
கண்டுதொழு சூரனெடு கட்டுரைசெய் கிற்பான். 32

மண்ணதனில் ஆயிரம தாகிவளர் கோடி
மண்டுபுக முண்டமுள மற்றவை தமக்குள்[1]
எண்ணிலகும் ஆயிரவொ ரெட்டளவை நூறே(டு)
எட்டுகம் இருந்தர(சு)இ யற்றிடுதி என்றே
தண்ணளியி னோடருளி நெஞ்சினும் விரைந்தே
சாரும்ஒரு தேரும்ஒரு சக்கரமும் நல்கிப்
பண்ணவர்கள் அஞ்சுமொரு சிங்கமும் அளித்துப்
பன்மையுறு வல்மைகொள் படைக்கலமும் நல்கி. 33

வேறுபதி னாயிர முடன்தழுவு கோடி
வெள்ளமுறு தந்திமிகு வெந்திறல்கொள் தேர்கள்
பேறுறு பரித்திரள் கடற்றகுவர் சேனை
பிஞ்ஞகன் அளிப்பவது பின்னர்அரன் முன்னர்ச்
சீறரி முகத்தனெடு தாரகன் வணங்கத்
தீரமுறு சூரனென வீரம தளித்து
வீறுநம தானதொரு சத்தியல(து) உம்மை
வெல்லுமவர் யாரென விளம்பிஅக லுற்றான். 34

---

32. அரன் புகல்வன் - சிவபெருமான் திருவாய் மொழிந்தருளலானர். பகல் - காலம். இரப்ப - வேண்ட. கட்டுரை - ஏற்ற வார்த்தை.

33. பிருதிவி தத்துவத்தில் ஆயிரங்கோடி அண்டங்கள் உள்ளன; அவற்றுள் ஆயிரத்தெட்டு அண்டங்களோ நூற்றெட்டு யுகம் அரசாள்வாயாக என்க. ஒரு தேரையும், ஒரு சக்கரத்தையும். ஒரு சிங்கத்தையும் அருளி என்க. தேர் - இஃது இந்திர ஞாலத்தேர் என்னும் பெயரை உடையது. பண்ணவர்கள் - தேவர்கள். பன்மை உறு - பற்பல.

34. பதினாயிரங்கோடி வெள்ளம் யானைகள் என்க. பேறு உறு பரித்திரள் - பெறுதற்கரிய பேருக அடைகின்ற குதிரைக் கூட்டங்கள். கடல் தருவர் சேனை - கடல்போன்ற அசுரப்படை வீரர்களையும். பிஞ்ஞகன் - சிவபெருமான். சிங்கமுகாசுரனும் தாரகாசுரனும் வந்து வணங்க, அவர்களுக்கும் சூரபன்மனுக்குப்போல வீரத்தை வழங்கினர் என்க. பா-ம்—1 தனக்குள்.

கண்ணுதல் அகன்றிட அகன்றபடை யோடுங்
காசிப னிடத்தவுணர் காவலன் அடைந்தே
உண்ணய மொடும்பணிய அங்கவன் உரைப்பான் :
உங்கள்குரு வெள்ளியிடை உற்றிடுதிர் என்ன
வண்ணமு(று) அவன்பதம் அடைந்துபுகர் நேரே
வந்திடவும் வந்தடியில் வந்தனை புரிந்தான் ;
நண்ணியிடு தேசிகனும் ஆசிபல பேசி
நஞ்சனைய சூரனெடு நன்மனை புகுந்தான். 35

மற்றொரு பெருந்தவி(சு) அளித்ததில் இருத்தி
வந்ததெவன் என்றிடலும் அன்னவுணர் மன்னன்
வெற்றிபுரி வேள்விய தியற்றியது முக்கண்
வித்தகன் அடைந்துபுகழ் மெத்திய வரங்கள்
நற்றிறல் அளித்ததும் ஒளித்ததும் அதற்பின்
நன்குபெறு தந்தையிடை நண்ணியதும் அன்னன்
சொற்றதும் உரைத்(து)இனி இயற்றுநெறி எந்தாய் !
சொல்கவென மல்குபுகர் சூரனெடு கூறும். 36

ஆவியென ஒன்றிலை ; அருந்தனையும் மித்தை ;
அண்ணல்உரு வங்கடொறும் அங்கடவி னத்துள்
மேவிய வியோமமென மேவியழி வின்முன்
விண்ணென விருப்பன்;வினை புண்ணிய முயன்றுல்

---

35. அகன்ற - பரந்த. அவுணர் காவலன் - சூரபன்மன். நயம் - அன்பு. வெள்ளி – சுக்கிராசாரியார். அவன் பதம் அடைந்து - சுக்கிரன் வாழும் இடத்தை அணுகி. புகர் - சுக்கிரன். தேசிகன் - குரு.

36. தவிசு - ஆதனம். அன்னவுணர் மன்னன் - அந்தச் சூரபன்மன். வரங்களும் திறனும் அளித்ததும் என்க. ஒளித்ததும் - சிவபெருமான் மறைந்தருளியதும். தந்தையிடை - காசிபனிடம். புகர் - சுக்கிரன்.

37. இச்செய்யுள் மாயாவாத நெறியின் போதனையைப் புகல்வது. ஆவி என ஒன்று இலை - உயிர் என்று சொல்ல ஒரு பொருளும் உண்மையாக இல்லை. தனையும் மித்தை - பாசம் என்பதும் பொய். குடத்துள் பொருந்திய ஆகாயம்போலச் சரீரந்தோறும் சிவபெருமான் பொருந்தியிருப்பன்; அக்குடம் உடைந்தால் அதில் இருந்த ஆகாயம் முன்னை ஆகாயத்தோடு கலப்பதுபோல, அச்சரீரங்கள் அழிந்தால் சிவமாகவே இருக்கும் என்க. கட இனம் - குடத் தொகுதி. வியோமம்-ஆகாசம். முன் விண் என-பழைய ஆகாயத்தைப்போல, வினை புண்ணியம் முயன்றுல் - பாவத்தையும் புண்ணியத்தையும் செய்தால். அவை சுவது என்னபலன் ; மித்தைதான் என்க. இன்ன அறம் இன்ன மறம் என்ன உளம் உன்னேல் – இவை தருமம் இவை பாவம் என்று மனத்தில் நினை

ஈவதவை யென்னபலன் ? மித்தை;அத னுல்நீ
இன்னஅறம் இன்னமறம் என்னஉளம் உன்னேல்
தேவரை வருத்துதி ; மகத்திறை நுமக்குத்
தெவ்வன்அவ னேச்சிறைசெய்; செய்தியிது; செய்தி. 37

கூடரிய ஆயிரவொ ரெட்டளவை யண்டம்
கூடியவை கண்டுவிறல் கொண்டனே திரும்பி
ஈடுசெறி தேவரொடு தாபதர்கள் இங்குன்
ஏவல தியற்றிட இயற்றுபு விருத்தி
நீடிய கொலைத்தொழில் முதற்பவ மனைத்தும்
நிந்தனே யெனக்கருதல் நீபுரிதி என்றே
நாடுபுகழ் சூரனுடன் இவ்வகை மழைக்கோள்
நல்லன விலக்கிஅவை யல்லன உரைத்தான். 38

அற்றமறும் ஆயிரவொ ரெட்டளவை அண்டத்(து)
அங்கவன் அறிந்திடவொ ரண்டவியல் போர்த்திக்
கொற்றமுற ஏகுதியெ னப்படைகள் மும்மைக்
கோடியுறி யோசனே பரப்பிவர ஏகி

யர்தே. மகத்திறை நுமக்குத் தெவ்வன் - இந்திரன் உங்களுக்குப் பகைவன். சிறை செய் - (அவனைச்) சிறைப்படுத்துவாயாக. செய்தி இது - இதுதான் உனக்கு நான் சொல்லும் காரியம். செய்தி - இவற்றைச் செய்க.

38. ஆயிரத்தெட்டு அண்டங்களைக்கண்டு அவற்றை வென்று வீரத்தைக் கொண்டு மீண்டு, தேவரும் முனிவரும் உன் கட்டளைப்படி ஏவல் புரியும்படி செய்து வீற்றிருப்பாயாக என்க. தாபதர் – தவசிகள். பாவம் – பாவச் செயல். நிந்தனே என - இகழ்ச்சிக்குரிய காரியங்கள் என்று. கருதல் - நினைக்காதே : எதிர்மறை வினைமுற்று. மழைக்கோள் - சுக்கிரன். நல்லன - பதி பசு பாசங்கள் அநாதி நித்தியம், புண்ணிய பாவங்கள் உண்டு, சொர்க்க நரகங்கள் உண்டு, தேவர்களைத் துன்புறுத்துதல் கூடாது என்பவை போன்றன. அவை அல்லன - நல்லவை யல்லாத செயல்களை.

39. அண்ட இயல்பு ஓதி - அண்டகோசத்தின் இலக்கணத்தை உரைத்து: அண்டகோச இலக்கணத்தைக் கந்தபுராணம் - அண்டகோசப்படலத்தில் விரிவாய்க் காண்க. என - என்று (சுக்கிரன்) கூற. உருத்திரன் அனாதிசையோரை - ஈசானன் அல்லாத ஏனைய ஏழு திக்குப் பாலகரையும். பாதலம் இழிந்து அவரை வென்று : அவரை - பாதாளலோகத்திலுள்ளவர்களை. முந்தென - முன்போல. படியின் அணைந்து - பூலோகத்திற்கு வந்து. நத்து உறுகரத்தன் - திருமால். நத்து - சங்கு : அது பாஞ்ச சன்னியம் என்னும் சங்கு. நற்கடல் - பாற்கடல். ஈசான மூர்த்தி சிவ சாரூபம் பெற்றவர் ; ஆதலால், சூரபன்மன் அவரிடம் செல்லுதற்கு அஞ்சிச் செல்லவில்லை என்க.

வெற்றிகொள் உருத்திரன் அலாததிசை யோரை
வென்றிகொடு பாதலமி ழிந்தவரை வென்றே
நற்றுதி பெறும்படியின் மூன்தென அணைந்து
நத்துறு கரத்தனுறு நற்கடல் அடைந்தான். 39

நற்றவுணர் அக்கடல் கலக்குதலும் மாயன்
சாபநவிர் தண்டுவளை சக்கரம் எடுத்து
வெற்றியுவ ணத்தில்மிசை ஏறிநனி சீறி
வீறுகொலை செய்யவுண வெய்யர்எதிர் சென்றே
கொற்றமுகில் என்னமிகு வாளிகள் சொரிந்தே
கோளவுணர் சேனபல கொல்லவது கண்டே
செற்றமொடு தாரகன் அரிக்கெதிர் புகுந்தே
தீயகணை மாரிபல சிந்திஅமர் செய்தான். 40

கண்ணனது போதுகணை மாரிகள் சொரிந்தே
கையனுறு கின்றசக டத்தினை அழிப்ப
எண்ணுமொரு தேரணுகி மாயனுடன் மீதும்
ஏறுவண மீதினுமி ராயிர நெடுங்கோல்
துண்ணென விடுப்பஅர வின்பகை வருந்தத்
துங்கநெடு மால்அளவில் அங்கமது கொண்டே
நண்ணியெதிர் போர்புரிய அன்னபடி கொள்ளா
நாலுதினம் மாலினெடு நற்சமர் புரிந்தான். 41

அப்பொழுது மாயனெரு கோடிகணை விட்டே
அண்டர்பகை வன்தன(து) அருஞ்சகடும் வில்லும்
துப்பொடு துணிப்பவொரு தண்டமது கொண்டு
தூயபுகழ் மாயன்எதிர் சூளிளவல் ஏக

---

40. அவுணர் தற்று - அசுரர் சூழ்ந்து. சாபம் - வில். நவிர் - வாள். தண்டு – கதை. வளை - சங்கு. உவணம் - கருடன். அவுண வெய்யர்-கொடிய அரக்கர். கோள் – கொலை.

41. கண்ணன் - திருமால். கையன் - இங்குத் தாரகன். சகடம் - தேர். கோல் - அம்பு. அரவின் பகை - கருடன். அளவில் அங்கமது கொண்டு - கணக்கில்லாத உருவங்களை எடுத்துக்கொண்டு. அன்னபடி கொள்ளா - (தாரகனும்) அவ்வாறே தானும் பலசரீரங்களை எடுத்துக்கொண்டு.

42. திருமால் ஒருகோடி அம்புகளை விட்டுத் தாரகனுடைய தேரையும் வில்லையும் துண்டு படுத்தினர். சூர் இளவல் - தாரகாசுரன். திரிந்து - மீட்டும். எதிர் செல்ல, சென்றவன் தாரகன். தப்பு இல் திகிரிப் படை - தவறுபடாத சக்கராயுதம். மிடற்றிடை - கழுத்திலே (ஆபரணம் போல.)

மெய்ப்புறு பெருங்கணை திரிந்(து)அரி சொரிந்தான் ;
வீறுகதை கொண்டவை விலக்கியெதிர் செல்லத்
தப்பில்தி கிரிப்படை விடுத்திட விரைந்தே
தானவன் மிடற்றினிடை தங்கியது மாதோ. 42

அங்கவன் மிடற்றினிடை ஆபரண மாகி
ஆழியுற வாழியென வாசிகள் அறைந்தே
பொங்குதிறல் மாயவன் அகந்தனில் வியந்தே
போகவொரு தேரின்மிசை போரவுணன் ஏறித்
துங்கமுறு முன்னெதிரு றக்கடிது புல்லிச்
சூருளம் மகிழ்ந்துபுடை துன்றுபடை யோடும்
செங்கதிர் அருக்கன்முத லானவர் பழிச்சத்
தீதறு துறக்கநகர் சென்(று)அணுகி னனல். 43

அங்கணிது கண்டுசில ஒற்றர்கள் உரைப்ப
அஞ்சியிடர் கொண்டுகுயி லாகிமக வானும்
மங்கையும் அகன்றனர் ; கொடுந்தகுவர் தேடி
மம்மருற வின்னவரை வன்மையொடு பற்றி
வெங்கத மொடுங்கடி(து) அடித்தனர் பிணித்து
வீரமுறு சூரனெதிர் விட்டிடலும் விண்ணோர்
பொங்குபுக ழாசிமுக மன்சொல விடுத்துப்
போகமக லோகமிசை போய்அணுகி னனல். 44

அந்தமக லோகமுத லானவுல கெல்லாம்
அன்பொடு தெரிந்தவண் அமர்ந்தவர் வழுத்தக்
கொந்தலர் நெடுந்தொடைகொள்தானவர்கள் மன்னன்
கோகனத மீதிலுறை கோன்நகரம் நண்ண

---

43. ஆழி ஆபரணமாகி உறஎன்க. முன் எதிர் உற - முன்னவனுகிய சூரபன்மனுக்கு எதிரே செல்ல. புல்லி - தழுவிக் கொண்டு. பழிச்ச - துதிக்க. துறக்க நகர் - அமராவதி.

44. மங்கை – இங்கு. இந்திராணி. தகுவர் – அசுரர். மம்மர் உற – மயக்கத்தை அடைய. கதம் - கோபம். ஆசி முகமன் - ஆசீர்வாதமும் உபசார வார்த்தைகளும். விடுத்து-தேவர்களே விட்டு விட்டு. போக மகலோகமிசை - போகத்தையுடைய மகலோகத்திற்கு.

45. வழுத்த - துதிக்க. கொந்து - கொத்து. கோகனதமீதில் உறை கோன் – பிரமதேவன். அவன் நகரம்: சத்தியலோகம். அந்தணன் - பிரமதேவன். சூரபன்மன் சத்தியலோகம் அடைந்தபோது பிரமதேவன் அவனுக்கு

அந்தணனும் இவ்வகை அறிந்தெதிர் அடைந்தே
ஆசிகள் புகன்றிடலும் அங்கவனை வைத்துச்
செந்திரு விளங்குதிரு மார்புடைய செம்மல்
சேரும்உல கத்தினிடை சேனையொடும் உற்றான். 45

அவ்விடையின் மாயவன் உணர்ந்தெதிர் பொருந்தி
ஆசிகள் உரைத்திட அருத்தியொ(டு) இருத்தி
வெவ்விடை உகைத்தருள் பரம்பொருள் இருக்கும்
வீறுல கடைந்(து)அனிக வெள்ளம திகந்து
தெவ்வர்புகழ் நந்திவிட அந்திநிற மேனித்
தேவனை வணங்கஅருள் செய்தருளி ஏனை
எவ்வமறும் அண்டவகை கண்டரசு செய்தே
இன்பொடுறை கென்னவிடை கொண்டுபுற மெய்தி.46

துங்கமுறு சேனையொடு கூடியதன் மீதே
துன்றுபுகழ் அண்டவகை தோறுமினி தேகிப்
பொங்கவுண ரிற்சிலவர் அங்குற இருத்திப்
பொன்னுலகில் நண்ணஅவன் அன்னையை யளித்த
செங்கணசு ரர்க்கிறைதன் மேன்மைகள் அனைத்தும்
தீதில்புகர் சூரொடு தெருட்டுற விடுத்து
மங்கலில் நயப்பினொடு வந்துதொழ லோடும்
மற்றவ னெடும்புவியின் மன்னவன் அடைந்தான். 47

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

இந்த வேலையிந் திரன்அயன் அமரர்கள்
இலங்குபாற் கடல்மேய
உந்தி பூத்தவன் அனைவருங் குழுமியே
ஓர்ந்துதா னவன்நேரே

ஆசிமொழி கூறியதல்லாமலும் அவன் தம்பிமார்களாகிய சிங்கமுகாசுரனுக்கும் வில்லும் தேரும் பிரமாஸ்திரமும் கொடுத்தான் என்று **கந்த புராணம்** கூறுகின்றது. செந்திரு - இலக்குமி. செம்மல் - திருமால்.

46. அவ்விடையின் - அப்பொழுது. அருத்தி - அன்பு. அனிக வெள்ளமது இகந்து - மிகுதியாகிய படைகளை நீங்கித் தனியாக. தெவ்வர் - பகைவர். அந்திநிற மேனித் தேவனை - சிவபெருமானை. எவ்வம் - குற்றம். அறும் - நீங்கிய.

47. சிலவர் - சிலரை. பொன்னுலகில் - தேவலோகத்தில். அன்னை - மாயை. அசுரர்க்கு இறை - அசுரேந்திரன். அசுரேந்திரன் தன் சிறப்பை

வந்து வாழ்த்துரை சொற்றனர் நிற்றலும்
மற்றவர் தொகையூடே
உந்து சீருடைப் பதினெரு கோடியாம்
உருத்திரர் தமைக்கண்டான். 48

துண்ட மாமதி கடுத்தவாள் எயிற்(று)அடல்
சூரனும் அசுரேசன்
வண்டு லாவரும் இதழியந் தொடையினன்
வடிவுள வலியோரைக்
கண்டி யாவர்? இங் கிவரென அவிர்மதிக்
கவிகைவா னவற்றந்த
தண்டு ழாய்முடி முடிப்பவ னனவன்
தானவ னெடுசாற்றும். 49

முன்ன மோர்பகல் அகந்தையாற் பரமனீ
முளரியந் தவிசும்பர்
மன்னு நான்முகன் அயர்த்தலும் அவன்முழில்
மல்கிய திலை;அற்றூல்
கன்னி பாகனீ மறந்தனம் எனஅவற்
கருதியே பலவைகல்
இன்னல் தீர்தவம் இயற்றிட அடைந்தருள்
புரிந்திலன்; இறையோனே. 50

யெல்லாம் சூரபன்மனுக்குக் கூறி விளக்கும்படி சுக்கிரனை அனுப்பினன் என்க. தெருட்டுற - தெளிவுபடும்படி. அவனெடும் - அசுரேந்திரனுடன். மன்னவன் - சூரபன்மன்.

48. உந்தி பூத்தவன் - திருமால். ஓர்ந்து - ஆலோசித்து. தானவர் - இங்குச் சூரபன்மன். தொகையூடே - கூட்டத்தில். உந்து - பரவிய.

49. துண்ட மா மதி கடுத்த - பிறைச்சந்திரனையொத்த. எயிறு - பல். இதழி அம் தொடையினன் வடிவுள வலியோரைக் கண்டு-கொன்றைமாலையை அணிந்த சிவபெருமானது உருவத்தையுடைய. பலம் பொருந்திய உருத்திரர் களைப் பார்த்து. மதிக் கவிகை வானவன் தந்த - சந்திரனைக் குடையாக வுடைய மன்மதனைப் பெற்ற. தண் துழாய் முடி முடிப்பவன் ஆனவன் - திருமால். ஆனவன் - எழுவாயுருபு.

50. முளரி அம் தவிசு உம்பர் - பதுமாசனத்தின்மேல். மன்னும் - எழுந்தருளிய. அயர்த்தலும் – மறந்தபோது. அவன் தொழில் மல்கிய திலை - அப்பிரமதேவன் செய்யும் படைப்புத் தொழில் மேலே நடைபெறவில்லை. இயற்றிட - (பிரமதேவன்) செய்ய.

மன்னு பற்பகல் அருந்தவஞ் செயப்பரன்
வந்திலன் எனமாழ்கி
அன்ன வாகனன் அழுதனன் : விழியின்நீர்
அலகையாய் எழக்கண்டு
துன்னி டுந்துயர் கொண்(டு)அவண் அயர்ந்திடத்
தொலைவிலா உயிர்க்கெல்லாம்
அன்னை பாகன்அங்(கு) அவனது கனவில்வந்(து)
இனையன அறைகின்றான். 51

இங்கு நீயெமை மறத்தலால் விதித்திடும்
இயல்புனக் கிலதாய(து);
அங்கண் நம்பதத் திருப்பவர் தமைஉன(து)
அகத்தினில் விடுப்பாம்என்(று)
எங்கள் நாயகன் கழறலும் எழுந்தினி(து)
இருந்தனன் ; அதுபோதில்
பொங்கு சீர்ப்பதி னொன்றெனும் உருத்திரர்
விதிநுதற் புடைவந்தார். 52

மன்றல் மாமதுக் கமலவான் தவிசின்மேல்
வதிந்தநான் முகவேதன்
ஒன்று மேவிய பதின்மராய் விளங்கிய
உருத்திரர் தமைநோக்கி
இன்று நீர்இவண் அடைந்ததென் னெனஎம(து)
இறைவன தருளால்உன்
நன்று றுந்தொழில் முடிப்பது பொருட்டினுல்
நண்ணினம் எனச்சொற்றார். 53

---

51. மாழ்கி - மயங்கி. அன்ன வாகனன் - பிரமதேவன். பிரமதேவனது கண்ணீர் பேய் வடிவமாக எழ, அதைக் கண்டு அவன் துயரங் கொண்டான் ; அலகை - பேய். அன்னை பாகன் - சிவபெருமான்.

52. விதித்திடும் இயல்பு - சிருட்டி செய்யும் ஆற்றல். இலதாயது - இல்லாமல் போயிற்று. நம் பதத்து இருப்பவர் தமை - சிவலோகத்தில் இருப்பவர்களை. உனது அகத்தினில் - உன்னிடத்தில் வரும்படி. விதி நுதற் புடை - பிரமதேவனது நெற்றியிலிருந்து.

53. மன்றல் - நறுமணம். வான் - பெருமை. ஒன்று மேவிய பதின்மர்-பதினொருவர். உன் நன்று உறு தொழில் - நன்மை பொருந்திய உனது படைப்புத் தொழில்.

சொற்ற வாசகங் கேட்டலும் மகிழ்ந்துயிர்த்
தொகைஉத வுதிரென்ன
உற்ற சீர்பெறு பதிஞெரு கோடியாம்
உருத்திரர் தமைநல்கிக்
கொற்ற நான்மறை அயன்றனக்(கு) அவன்தொழில்
கொடுத்(து)அகன் றனர்; அன்னூர்
முற்ற ருந்திறல் உருத்திரர் இவரென
மொழிந்தனன் ; முகில்வண்ணன். 54

இன்ன வாசகங் கேசவன் நேசமோ(டு)
இசைத்தலும் இவைகேளாப்
பொன்னு லாம்புகழ் அவுணர்கோன் இமையவர்
புனிவனீ முகநோக்கி
நன்ன லம்பெற யாமிருந் திடஒரு
நகரது புரிகென்னக்
கொன்னு லாம்புகர் எல்லிகூ றிடஅவன்
குமுறுதென் கடல்சேர்ந்தான். 55

ஆங்க தற்கிடை எண்பதி ஞயிரம்
யோசனீ அகலத்தோர்
தீங்கில் நற்பதி வளத்தொடு புரிந்தனன்
திறல்மகேந் திரம்என்றூர்
பாங்கு றும்பெயர் நிறுவினன் ; வடகடல்
படர்ந்தனன் அதின்ஒரூர்
தூங்கு கைக்கரிப் பகைமுகற்(கு) ஆசுரத்
தொன்னகர் புரிந்திட்டான். 56

---

54. உயிர்த்தொகை உதவுதிர் என்ன - உயிர்க் கூட்டங்களைச் சிருட்டி செய்யுங்கள் என்று பிரமதேவன் சொல்ல. நல்கி : நல்கினவர், பதிஞெரு ருத்திரர்கள். முன் தரும் - முன் தந்த. முகில் வண்ணன் - திருமால்.

55. கேசவன் - திருமால். பொன் உலாம் - பொலிவு பொருந்திய. இமையவர் புனிவன் - தேவதச்சனாகிய விசுவகன்மா. கொன் - பெருமை. புகர் எல்லி கூறிட - சுக்கிரன் அந்த நகரத்திற்கு உரிய எல்லைகளை வகுத்துரைக்க. குமுறு - ஒலிக்கின்ற.

56. பதி – நகரம். தென்கடலில் மகேந்திரம் என்ற நகரத்தைச் சூரபன்மனுக்கும், வட கடலில் ஆசுரம் என்ற நகரத்தைச் சிங்கமுகாசுரனுக்கும் அமைத்தான் என்க. தூங்குகை - தொங்கும் துதிக்கை. கரிப்பகை - சிங்கம்.

மற்று முள்ளதெண் டிரைதொறும் இடையிடை
வயங்குதீ வுகடோ றும்
பொற்றெ டிக்கர மங்கல கேசிதன்
புதல்விதந் திடுசூரன்
கொற்ற நால்வகைத் தானைகள் இருந்திடக்
குலவுபல் நகராற்றிக்
கற்று ணர்ந்தசீர்ப் புனைவர்கோன் கதுமெனக்
கருங்கடற் புவிசேர்ந்தான். 57

பின்பு நாவலந் தீவில்மா யாநகர்
பெருங்கரி முகன்வாழ்தற்(கு)
அன்பி னோடுசெய்(து) அவுணனுக் குரைத்திட
அடல்மகேந் திரம்எய்திப்
பொன்பு னைந்தநற் றெண்டிரை நீரினூற்
புலவராட் டிடஆடி
இன்ப வேதனுல் முடிபுனைந்(து) இருந்தனன்;
ஏவருந் தொழுதேத்த. 58

மால வன்றனை விளித்திடும் பொழுதெலாம்
வருகென விடைஈந்து
கோல மாமலர்க் கடவுள்மா முகந்தெரி இக்
குமரர்தம் மொடுநீவந்(து)
ஏலும் அங்கமோ ரைந்தும்நா டொறுமுரைத்(து)
ஏகுதி எனஓதிச்
சில மேவிய அருக்கனை(டு) இனியன
செப்புவன்: திறற்சூரன். 59

57. பொற்றெடி - பொன்னாலாகிய வகையில் அணிந்த. மங்கலகேசி தன் புதல்வி - மாயை. நால்வகைத் தானைகள் - தேர், யானை, குதிரை, காலாள் என்பன. புனைவர்கோன் - விசுவகன்மா. கதுமென - விரைவாக.

58. நாவலந்தீவில் தாரகாசுரன் வாழ மாயாபுரி என்ற நகரை இயற்றினான். பொன் புனைந்த - திருமகள் (தோன்றினமையால்) அலங்கரிக்கப்படுகின்ற. தெண்டிரை - பாற்கடல். "மாவு லாவிய மால்கடற் றெண்புனல்" என்பது கந்தபுராணம்.

59. அழைக்கும்போதெல்லாம் வருக என்று திருமாலுக்கும், நாடோறும் பஞ்சாங்கம் சொல்லிப்போக என்று பிரமனுக்கும் சூரபன்மன் கட்டளையிட்டான் என்க. தெரிஇ - பார்த்து. அங்கம் ஓர் ஐந்து - பஞ்சாங்கம்; அவை திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்பன. அருக்கன் - சூரியன்.

இன்ன வாள்நகர்ப் புறத்துறு புரிசைமீ(து)
ஏகல்நிற் கரிதாகும் ;
பொன்னு லாமணிச் சிகரியுள் நெறிக்கொடு
புகுந்துவான் மிசையேகி
இன்னல் தீர்தரும் இளங்கதிர் நடத்தியே
இவ்வகை திரிவாயென்(று)
அன்ன பின்னரே அவிர்மதிக் கடவுளுக்(கு)
அறைகுவன் அடற்சூரன். 60

வளரு கின்றதுங் குறைவதும் மறைவதும்
மறந்துநீ நிறைவாகிக்
கிளரும் இந்நகர் நாடொறும் வருகெனக்
கிளத்தியே அதுபின்னர்
முளரி வானவற் றெரிந்துநம் பதியினோர்
முன்னின்அங்(கு) அவர்பாலுற்(று)
உளப ணித்திறம் இயற்றுபு தொடிற்குளிர்ந்(து)
உறைகென உரைசெய்தான். 61

கொற்ப கட்டிலுற்(று) எதிர்ந்தவர் உளங்குலை
குலைந்திடப் புவிமாந்தர்
முற்ப கட்டிவந் திடுங்கொடுஞ் சமன்றனை
முகிழ்மலை முலைமாயை

---

60. வாள் - ஒளி. புரிசைமீது - மதிலின்மேல். சிகரியுள் நெறிக்கொடு புகுந்து - கோபுரத்துக்குள் உள்ள வழியாலே புகுந்து சென்று. அன்ன பின்னர் - அதன்பிறகு.

61. சந்திரனே, நீ எப்போதும் நிறைமதியாகவே இங்கே வரவேண்டும் என்க. கிளத்தி - சொல்லி. முளரி வானவன் - அக்கினிதேவன். நம் பதியினோர் முன்னின் - நம்முடைய நகரத்தில் இருப்பவர்கள் உன்னை நினைத்தால். பணித்திறம் இயற்றுபு - பலவகை வேலைகளையும் செய்து. தொடின் குளிர்ந்து உறைக - தொட்டாற் குளிர்ச்சியடைந்து இருப்பாயாக.

62. கொன் பகட்டில் உற்று - அச்சம் தருகின்ற எருமைக்கடாவின் மேல் ஏறிக்கொண்டு. மாந்தர்முன் பகட்டி வந்திடும் ; பகட்டி - தோற்றம் மிக்கு ; பயங்கரத்தை உண்டுபண்ணி. சமன்தனை - யமனை. முகிழ் - தாமரை மொட்டைப் போன்ற. மாயை பொற்பு அகட்டில் - மாயையினது பொலிவை புடைய வயிற்றில். நிற் பகட்டிய - உன்னை வெருட்டுகின்ற ; நிற்ப - உயிரோடு நிற்க ; கட்டிய - கட்டப்பட்டனனுமாம். கழல் தகுவர் உக - வீரக் கழலையுடைய அசுரர்கள் இறக்கும் படியாக.

பொற்ப கட்டில்வந் துதித்தவன் தெரிந்தரும்
பொருகரி பரியாதி
நிற்ப கட்டிய கழற்றகு வர்கள்உகப்
புரிந்திடேல் நீயென்றான். 62

விரித்தி டும்புகழ்ப் பவனனை நோக்கியிவ்
வியனகர் மிசைவாழ்வார்
தரித்தி கழ்ந்திடு தொடைமுத லாயின
தள்ளுதி எனச்சாற்றித்
திருத்தி கழ்ந்திடு வருணனை நாவிமுற்
சிறந்தன பனிநீரிற்
பொருத்தி இந்நகர் எங்களுந் தெளியெனப்
புகன்றனன் ; புகழ்ச்சூரன். 63

நீனி றக்கட மழைசொரி தருகவுள்
நெடியநாற் பெருங்கோட்டு
வானி றக்கரிக் கடவுளை நோக்கிநீ
வானவர் குழுவோடும்
ஏனை மாதிரத் தலைவர்தங் குழுவொடும்
இடுபணி புரிகென்றான் ;
ஊன முற்றிடும் இவைமறுத் திடவெரீ இ
உரைத்தவா(று) ஒழுகுற்றார். 64

மரும லர்த்தொடைப் பதுமகோ மளைமுதல்
மாதரை மணஞ்செய்தே
அரிமு கற்கெழில் விபுதையை மணஞ்செய்வித்(து)
ஆனமா முகத்தோனுக்(கு)

---

63. பவனனை - வாயுதேவனை. தொடை முதலாயின - பூமாலை முதலானவைகளை. தள்ளுதி - கூட்டித் தள்ளுவாயாக. நாவி – கஸ்தூரி. பனிநீர்–வாசனைநீர்.

64. நீல் நிறக் கவுள் கட மழை – நீலநிறமுள்ள கபோல மத நீரை மழை போல. (கவுள்–கபோலம்; கடம் - மதம்.) கோடு – தந்தம். வால் நிறக் கரி – வெள்ளை யானை ; ஐராவதம். கடவுள் - இந்திரன். மாதிரத்தலைவர் – திக்குப் பாலகர். இடு பணி - நான்இட்ட வேலையை. வெரீஇ - வெருவி , பயந்து.

65. மரு – வாசனை தங்கிய. பதுமகோமளை - இவள் விசுவகன்மாவின் மகள். பதுமகோமளை முதல் மாதரை - பதுமகோமளை முதலிய பல மாதர்களை. பலமாதர்கள் என்றது தேவர், அசுரர், காந்தருவர், இன்னரர்,

இருமை பெற்றசீர்ச் சவுரியை மணஞ்செய்வித்(து)
இருவரும் இருகோடி
வீரிவு சேர்படை வெள்ளமோ(டு) அவரவர்
பதிபுக விடுத்தானுல். 65

தண்ட ருந்தொடை இளையவர் அகன்றபின்
தகுவரிற் பலர்தம்மை
மண்டு சிருள நாலிரு திசையினும்
வானகத் துலகத்தும்
ஒண்டி றற்பெறு பாதல வரைப்பினும்
ஒழிந்தபல் லிடந்தோறும்
எண்ட ரும்பெருந் தானையோ டிருந்திட
விடுத்தனன் இருஞ்சூரன். 66

ஏவல் செய்துழல் தேவரை ஒருபகல்
இருங்கடற் பெருமீன்கள்
நீவிர் நாடொறுந் தருதிரென் றுரைத்தலும்
நெடுந்துயர்க் கடல்மூழ்கிப்
பாவ வப்பணி நாடொறும் புரிந்தனர்;
பதுமகோ மளிதன்பாற்
சேவ கத்தனி மைந்தன்வந் துதித்தனன்;
திசையெலாம் இசைவீச. 67

உற்ற மைந்தனை மாயவள் மகன்தெரிந்(து)
உவகையங் கடல்மூழ்கி
வெற்றி சேர்தரும் அவுணர்தங் கிளைக்கெலாம்
வெறுக்கைகள் மிகஈந்தான்;

இயக்கர், நாகர், கிம்புருடர் முதலானவர்களுடைய பெண்களை. விபுதை - இவள், யமனுடைய மகள். இருமை - பெருமை. சவுரி - இவள் சிருதியின் மகள். இருவரும் - சிங்கமுகாசுரனும் தாரகாசுரனும். அவரவர் பதி - இது முறையே ஆசுரபுரியும், மாயாபுரியும் ஆகும்.

66. தண் தரு - குளிர்ச்சியை விளைவிக்கும். இளையவர் - தம்பிமார். தகுவர் - அசுரர். பாதல வரைப்பு - பாதாள லோகம். எண் - பெருமை

67. பாவ அப்பணி - பாவமாகிய மீன் பிடிக்கும் அச் செயலை. சேவகம் - வீரம். இசை - கீர்த்தி.

68. மாயவள் மகன் - மாயையின் புதல்வனுகிய சூரபன்மன். கிளை - சுற்றம். வெறுக்கைகள் - செல்வங்கள். மடந்தையர் - தாதியர்கள். ஏற்ற - ஏற்றிச் சீராட்ட. அற்றம் - குறை.

மற்ற தற்பின்அக் குமரனை மடந்தையர்
வளங்கொள்தொட் டிலில்ஏற்ற
அற்ற மற்றிடுஞ் சிறப்பொடும் அதில்துயின்(று)
அமருநாள் ஒருநாளில். 68

வான கத்தெழும் இரவிதன் கதிர்அவன்
வடிவினிற் படப்பாய்ந்து
தான வன்றனைப் பிடித்துவந் தணிமணித்
தொட்டிலில் தனைசெய்தே
ஈன மற்றவா னவரொடு விதியடைந்(து)
இரப்பவிட் டதனுலே
பானு கோபனுய் வளர்ந்தொரு பகலில்ஐம்
படைகொள்மா லியும்வென்றான். 69

பின்னும் அக்கினி முகத்தனே இரணியன்
பீடுவச் சிரவாகு
என்னும் மைந்தர்கள் பதுமகோ மனைஅகட்
டிடத்துவந் துதித்தார்கள் ;
துன்னு மற்றுள மனிவியர் தங்கள்பால்
தோன்றினர் ; தொகைசொல்லின்
மன்னி டும்புகழ் கொண்டமூ வாயிர
மைந்தர்கள் எனலாமால். 70

அரிமு கன்அதி சூரனை நூறுமைந்
தர்கள்தமை அளித்திட்டான் ;
கரிமு கன்திறல் பெறும்அசு ரேந்திரக்
காவலன் றனைஈன்றான் ;

---

69. இரவிதன் கதிர் அவன் வடிவினில் பட - சூரிய கிரணம் அக்குழந்தையின் உடலில் பட. தான் - அக்குழந்தை. அவன்தனை - அச்சூரியனை. தனை செய்து - கட்டிவைத்து. ஈனம் அற்ற - இகழ்ச்சியில்லாத. விதி - பிரமதேவன். இரப்ப - (சூரியனை விட்டுவிடவேண்டுமென்று) வேண்ட. பானு - சூரியன். அவனைக் கோபித்துப் பிடித்துக் கட்டினமையால் பானுகோபன் என்ற பெயர் வந்தது என்க. ஐம்படை - சங்கு, சக்கரம், வாள், வில், தண்டம் என்பன. மாலியும்-திருமாலியும். இங்குப் பானுகோபனுக்குப் பிரமதேவன் பிரமாஸ்திரத்தையும், சூரியன் மோகனாஸ்திரத்தையும் அளித்துவிட்டுப் புகழ்ந்து சென்றனர் என்று கந்தபுராணம் கூறுகிறது.

70. அக்கினிமுகத்தன் - அக்கினிமுகன். அகட்டிடத்து - வயிற்றில். துன்னும் - பொருந்திய. ஆல் - அசை.

மருவும் இன்னவர்க் கிளையளாம் அசமுகி
வலிதுபோய்த் துருவாசப்
பெரிய வன்றவிப் புணர்ந்துவில் வலனெவர
தாவியைப் பெற்றுளால். 71

அன்ன மைந்தர்கள் இருவரும் தவம்புரிந்(து)
அயன்றரும் வரந்தன்னால்
பின்ன வன்மறி யுருக்கொள முன்னவன்
பெருமுனி வாஞகி
மன்னு மாதவர்க்(கு) அமுதொடு கறியென
மறிதனைச் சமைத்தூட்ட
இன்னல் சேர்ந்திட அவர்குட ரதுகிழித்(து)
இளையவன் வருமாதோ. 72

இன்ன பான்மையின் அளவிலர்க் கிறுதிசெய்(து)
இருந்தனர் ; இது நிற்கப்
பின்னர் ஓர்பகற் சூரனும் அவுணர்கோன்
பெருகெழில் அயிராணி
தன்னை வவ்வியே சிறையிடை மகபதி
தனையிட மனமீதில்
உன்னி மன்னிய தானையந் தலைவரில்
ஒருவனை(டு) உரைசெய்வான். 73

இந்தி ரற்பிடித் தீண்டுமீண் டிடுதியென்(று)
ஏவிஓன் பதுகோடி
பைந்தொ டிக்கரத் தகுவர்தங் குலத்துவெம்
பாவையர் தமைக்கூவி

---

71. அரிமுகன் - சிங்கமுகாசுரன். இன்னவர்க்கு - இவர்களுக்கு. இளையளாம் - தங்கையாகிய. வலிது போய்ப் புணர்ந்து - பலாத்காரமாகக் கூடி.

72. இருவர் - வில்வலன், வாதாபி என்ற இருவர். இவர்கள் தம் தந்தையாகிய துருவச முனிவரை அடைந்து, 'உமது தவத்தை எங்களுக்குக் கொடு; இன்றேல் உம்மை அழிப்போம்' என்றபோது, அவர் வெகுண்டு, 'நீவிர் முனிவர்களுக்கே இடர் செய்வீர் ; பின் அகத்தியரால் இறக்கக்கடவீர்' எனச் சாபமிட்டு மறைந்தார். பின்னர், பிரமனை நோக்கித் தவம் புரிந்தனர் என்பதாம். மறி - ஆடு. மன்னும் மாதவர்க்கு - அங்கே வருகின்ற முனிவர்களுக்கு. அமுது - சோறு. உண்டபிறகு முனிவர்கள் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வாதாபி வெளிப்படுவான் என்க.

73. இறுதி செய்து - கொன்று. இந்திராணியை வவ்வவும், இந்திரனைச் சிறையில் இடவும் சூரபன்மன் எண்ணினான்க.

அந்த மற்றசிர்ச் சசிதனைப் பிடித்திவண்
அடைதிரென்(று) அவண்தூண்டச்
சுந்த ரந்தரு துறக்கவா னுலகினில்
துன்னினுர் அவரெல்லாம். 74

பொங்கு தானையுந் தானையந் தலைவனும்
பொற்றொடித் தளிர்ச்செங்கை
மங்கை மார்களும் வருவன ஒற்றர்போய்
வானநா யகற்(கு)ஓத
அங்கண் ஈதுணர்ந் தருஞ்சசி யொடுங்கரந்(து)
அவனியி னிடைச்சேர்ந்தான் ;
துங்க வெய்யவர் துருவினர் தெரிந்திலர்
சூரன்முன் உரைசெய்தார். 75

ஈது சூரறிந்(து) அமரர்கோன் தூணவியோ(டு)
இருந்துழி அறிந்தெய்தத்
தீதி லொற்றரை விடுத்தனன் ; இந்திரன்
சேயெனுஞ் சயந்தன்தான்
கோதி லாதவை குந்தமுற்(று) இருந்தனன்
குறுகிய இவைகேளா
ஏத மற்றதோர் பொன்னுல(கு) அடைந்ததில்
இருந்தனன் ; அரசாற்றி. 76

மஞ்சு வாகன நாகர்கோன் புகலியாம்
வளமுறு நகர்எய்தி
எஞ்சு றுதவோர் நந்தன வனம்புரிந்(து)
இறைவனீ அருச்சித்தே

---

74. பைந்தொடி - பசிய வளையல்கள் அணிந்த. பாவையர் - பெண்கள் : உவமையாகுபெயர். சசி - இந்திராணி. துறக்க வானுலகு - சுவர்க்கலோகம்.

75. வருவன - வருதலை. வான நாயகற்கு - இந்திரனுக்கு. கரந்து - மறைந்து. துருவினர் தெரிந்திலர் - தேடிக்காணுதவர்களாகி.

76. இந்திர குமாரனுகிய சயந்தன் முன்பு வைகுந்தம் சென்று அங்கே இருந்தவன், இந்திராணியுடன் இந்திரன் மறைந்த செய்தியைக் கேள்விப் பட்டுச் சுவர்க்க லோகத்தை அடைந்து ஆட்சி செய்திருந்தான் என்க.

77. மஞ்சு - மேகம். நாகர் - தேவர். மஞ்சு வாகன நாகர் கோன் - மேக வாகனத்தையுடைய தேவ அரசனுகிய இந்திரன். புகலி - சீகாழி. வஞ்சி யொடு - இந்திராணியுடன். நந்தனவனம் - நந்தவனம் ; பூந் தோட்டம். நேடி - தேடி. கழையதாய் - மூங்கில் உருவத்தை எடுத்துக் கொண்டு.

வஞ்சி யோடுற வொற்றர்கள் நேடியே
வருவதை அறிந்துள்ளத்(து)
அஞ்சி மாதொடுங் கழையதாய்ப் பரமனீ
அருச்சனீ புரிந்துற்றான். 77

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

அந்நாளில் நந்தாத நந்தன வனம்பூவில்
அம்பற்று வாட இமையோர்
மன்னனை இந்திரன் வருந்தா இருந்திட
வணங்கார் புராரி யருளால்
நன்னர் தன்பெரிய விந்தா சலத்தினிடை
நண்ணித் தனது யர்வினுல்
தன்னெடு வேறுநிக ரில்லென்று பொன்வரை
தருக்குற்ற(து) என்று புகல. 78

விந்தஞ் சினந்துவிதி யூர்காறு நீள்வுற
விசும்பூ(டு) அருக்கன் முதலோர்
தந்தம் பொருந்துநெறி இல்லாது மேருவிடை
சல்லாப மோடு மருவும்
அந்தண் கடத்துமுனி தன்னைப் புகழ்ந்திடலும்
அன்னன் அறிந்த ருளியே
உந்தும் பரன்றனீ நினைந்தே தவம்புரிய
உற்றான் உயிர்க்குள் உயிரான். 79

நிற்கேது வேண்டுமென விந்தத்தை வென்றிட
நிருத்தா! பெருத்த விறலின்(று)
எற்கேய வேண்டுமென விந்தா சலத்தடல்
இறுத்தே இருத மலயக்

---

78. பூவில் - பூமியில். அம்பு அற்று வாட - நீர் இல்லாமல் வாடுதலே. வணங்கார்-பகைவர்களுடைய. புராரி-சிவபெருமான். விந்தாசலத்தினிடை-விந்திய மலையினிடத்தில். பொன்வரை -மேருமலே. நாரதன் புகல என்க.

79. விந்தம் - விந்தமலே. விதி ஊர் காறும் நீள் உற-பிரமதேவனுடைய சத்தியலோகம் வரையிலும் உயர்ந்து நிற்க. அருக்கன் - சூரியன். சல்லாபம்-(இனிய) சம்பாஷணே. கடத்து முனி-கும்பமுனி; அகத்தியர். புகழ்ந்திடலும்-துதித்து முறையிடவே. உயிர்க்குள் உயிரான் - உயிர்களுக்குள் உயிராயிருக்கும் பரம்பொருள்; சிவபெருமான். அகத்தியர் தவஞ்செய்வதைக்கண்டு சிவபெருமான் அவருக்கு முன் தோன்றினன் என்க.

கற்கே இருத்தியென ஓர்பொன்னி நன்னதி
கவின்குண்டி கைக்குள் உதவத்
தெற்கே நடந்(து)அரி முகன்தம்பி வென்றியொடு
சேர்மா யவூர்கு றுகினன். 80

கேடற்ற முனிஅங்கண் வருகின்ற செயல்கண்டு
கிரவுஞ்சன் என்னும் அவுணன்
ஈடுற்ற இமையோர்கள் முனிவோர்கள் நனிவாட
எந்நாளும் இன்னல் புரிவான்
கோடுற்ற கிரியாகி அதனூடு சரியொன்று
கொண்(டு)அங்கண் அண்ட அதனுள்
பீடுற் றிடுஞ்சா கரத்தைக் கரங்கொண்ட
பெரியோன் நடந்த ருளினன். 81

சங்கோ லிடுந்தெண் டிரைச்சா கரத்தே
தருக்கோ டெழுந்த விடகேர்
வேங்கோப நிருதர்க்கு நிருபன் புரிந்திட்ட
வியன்மாயை தன்னே உணரான்
அங்கோர் குரோசஞ்செல் பொழுதந்த வழிமாழ்கி
அயலொன்று காண அதன்மீ(து)
எங்கோன் நடந்தான் ; நடந்திட்ட போதங்(கு)
இறந்திட்ட(து) அவ்வ தருமே. 82

---

80. நிற்கு-உனக்கு. நிருத்தா-நடனஞ்செய்யும் ஐயனே. விறல்-வலிமை. விறல் இன்று எற்கு ஏயவேண்டும் என்க. ஏய-பொருந்த. அடல் இறுத்து-கருவத்தைக் குறைத்து. இருத மலியக்கற்கே-எக்காலத்தும் கேடில்லாத பொதிய மலையில். "தொல்லேயா மலியம்" என்பது இந்நூல் உற்பத்திகாண்டம், 42. ஏன - என்று சொல்லி. பொன்னி நல் நதி - காவிரி நதியை. கவின் குண்டி கைக்குள் உதவ - (அகத்தியரது) அழகிய கமண்டலத்துக்குள் இருக்கும்படியாகச் சிவபெருமான் அளிக்க. அரிமுகன் தம்பி - தாரகாசுரன். மாயவூர் - மாயாபுரி.

81. ஈடு - இங்கு மிகுதி. கோடு - சிகரம். சரி - வழி. அண்ட - அணுக. சாகரத்தைக் கரங் கொண்ட பெரியோன் - கடல் நீரைக் கையில் எடுத்து உண்ட அகத்திய முனிவர். (சாகரம் - சகரர்களால் தோண்டப்பட்டது ; கடல்.)

82. சங்கு ஓலிடும் - சங்குகள் முழங்கும். நிருதர்க்கு நிருபன் - அசுர மன்னனுகிய கிரவுஞ்சன். குரோசம் - கூப்பிடு தூரம். மாழ்கி - மறைந்து. அவ்வதரும் இறந்திட்டது - அந்த வழியும் மறைந்து விட்டது.

வீறுன்று கும்பமுனி வல்லே திரிந்துவதி[1]
வேறுன்று கண்டு படரச்
சீறங்கி சுற்றவலி சுற்றஇருள் சுற்றமுகில்
திண்மாரி தூவ முனிவன்
மாறங்கு குருவறிவின் அவுணன் புரிந்திட்ட
மாயந் தெரிந்து வெகுளாப்
பேறங் கரங்குலவு கதைகொண்டு குத்திப்
பெருஞ்சாபம் ஓது வனரோ. 83

நலனுற்ற புலன்அற்ற கொடியோய்! இவ் வடிவாகி
நாடோறும் நண்ணி அதன்மேல்
மலிபெற்ற உமைபெற்ற குமரேசன் வடிவேலின்
மடிவாதி யென்(று)அ வுணர்கோன்
அலலுற்ற முங்கப் புகன்றே அகன்றே
அடல்கொள்விந் தங்கு றுகினன்;
செலவில் கிடந்துகிர வுஞ்சஞ்செய் வஞ்சம்
செயங்கொண்ட திண்டி றலினன். 84

வீறுமவ் வெற்பினெடு தெற்(கு)ஏக எற்குவழி
விடுவாய் எனப்பு கறலும்
மாறுகி விந்தம(து) இகழ்ந்தோத வேதபத
மட்டுங் கரத்தி னையெடாப்
பேறும தன்றலி யழுத்தக் குலைந்தது
பிலத்தூடு போகி யது;வெண்
ணீறுடி அன்பரொடு வன்பெய்தி னுர்நிரைய
நெறிவீழ்தல் காட்டு நிலைபோல். 85

---

83. வீறு - வலிமை. வல்லே - விரைவில். திரிந்து - திரும்பி. வதி - வழி. படர - செல்ல. சீறு அங்கி சுற்ற - வெம்மை வீசுகின்ற அக்கினியானது சுற்றிக் கொள்ள. மாறு அங்கு உரு அறிவின் - மாறுபாட்டை அடையாத அறிவினால். பேறு அம் கரம் - நற்செயலைச் செய்யும் பேறுடைய திருக்கரத்தில். அகத்தியர் கிரவுஞ்ச கிரியைத் தன் தண்டத்தினால் குத்திச் சபிக்கலானார்.

84. நலன் உற்ற புலன் - நல்ல அறிவு. அதன்மேல் - அதன் பிறகு. மடிவு ஆகி - இறந்துபடுவாய். அலல் - அல்லல் - துன்பம். குறுகினன் - அடைந்தான். செலவில் கிடந்து - செல்லும் வழியில் நின்று.

85. அவ்வெற்பினெடு - அந்த விந்தகிரியினோடு. மாறு ஆகி - அகத்திய முனிவர் கூறியதற்கு மாறுபட்டு. வேதபத மட்டும் - பிரமதேவனது உலகம் பா-ம்—1 வழி.

தாதார் மலர்க்கைகொடு வெற்பைப் பிலத்தினிடை
தள்ளிப் படர்ந்த பொழுதில்
வாதாவி வில்வலன் எனும்பேர் படைத்துமிகு
வஞ்சங் குயிற்று கொடியோர்
தீதான தற்றமுனி தன்னைத் தெரிந்துயிர்
செகுப்போம் எனக்க ருதிஅப்
போதாட தாய்இளவ லுறவில் வலன்முனிவர்
போலப் பொலிந்த னனரோ. 86

குன்றத்தை வென்றமுனி முன்பாக இன்பான
கோலஞ் சமைந்த கொடியோன்
சென்(று)அத்த! என்றடி பணிந்(து)இற் கொணர்ந்தமுது
செய்தேக வேண்டும் எனவே
நன்றத் தொழில்புரிவம் எனமூழ்கி வந்தடிசில்
நயமோடு செய்து தகரைப்
பொன்றத் தடிந்துகறி யாகச் சிறப்பொடு
புரிந்தே படைத்த னனரோ. 87

இன்பான அமுதங்(கு) அருந்தா அருந்தவன்
இருந்தான்; இருந்த பொழுதில்
வன்பாவி வாதாவி வருகென்ன முனிவன்றன்
வயிறூ(டு) எழுந்தி ரையவே

வரைக்கும். பிலத்தூடு - பாதலத்துள். நிரையநெறி – நரக கதி. வீந்தமகீ பிலம் போகியது. சிவனடியாருடன் பகை கொண்டவர் நரகில் வீழ்கின்ற நீகீலமையைக் காட்டுவதால், இச் செய்யுள் காட்சி அணி ஆகும்.

86. பிலம் - பாதலம். படர்ந்த பொழுதில் - மேலே செல்லுகின்ற சமயத்தில். குயிற்று - செய்கின்ற. உயிர் செகுப்போம் - கொல்வோம். பொலிந்தனன் - விளங்கினன்.

87. இன்பான கோலம் - இனிய தவ முனிவகீப் போன்ற வடிவம். அத்த - தலீவனே. இல் கொணர்ந்து - தம் இருப்பிடத்திற்கு அழைத்து வந்து. அத் தொழில் புரிவம் என - உண்ணுதலாகிய அக் காரியத்தைச் செய்வேம் என்று அகத்தியர் கூற. நயம் - இனிமை. பொன்றத் தடிந்து - முழுவதும் அறுத்து.

88. அருந்தா - அருந்தி. வருக என்ன – நீ வருவாயாக என்று வில்வலன் அழைக்க. இரைய - சப்திக்க. கொன்பாவு - பெருமை பரவிய. அகடு - வயிறு. அகட்டில் கரம் கொண்டு தடவ என்க. கொண்டல் களத்தன் - சிவபெருமான். கோது ஆவி - பாவமுடைய உயிர்.

கொன்பாவு அகட்டிற் கரங்கொண்(டு) உரங்கொண்ட
கொண்டற் களத்தன் அடிகட்(கு)
அன்பான வன்தடவ வாதாவி கோதாவி
அழிவுற்ற(து) அன்ன பொழுதே. 88

பின்னுன தன்தம்பி படிவான செயல்கண்டு
பெரிதுஞ் சினந்து தகுவன்
முன்னுக மதுகொண்டு முன்னுக வருபோது
முனிஓர் தருப்பை யதனைக்
கொன்னுரும் விடையாளி படையாக விடுபோது
கொடியோனும் முடிவ டையவே
அன்னுர் இடந்தனை அகன்றே நெடுங்கடல்
அயின்ருன் நடந்த ருளினுன். 89

முடிவான கொடியோர்கள் தவமேவு துருவாச
முனிமைந்த ரான முறையால்
படியோர்கள் புகழ்கும்ப முனிபின்பு முனிவோர்கள்
படிவங்கள் கொண்டு தொடரா
இடிபோ லிரைப்பஉயர் கொங்குக் கணித்தாய்
இருந்தோ ரிலிங்க மதனில்
அடியார் மனத்தனை அருச்சனை புரிந்தங்(கு)
அகன்ருன் அவர்க்கொல் பவமே. 90

கொங்குப் பொழிற்குலவு கொங்கிற் பெருந்தவர்கள்
கோமான் இருந்த ருளுநாள்
மங்குற் களத்தனடி சிந்திக்கு நாரதன்
வயற்காழி நண்ண அதனில்

---

89. தகுவன் - வில்வலன். முன் ஆகமது கொண்டு - முன்னுள்ள அசுர உருவத்தை எடுத்துக் கொண்டு. விடையாளி படையாக - பாசுபதாஸ்திரத் மாகக் கருதி. நெடுங்கடல் அயின்ருன் - பெரிய கடலைக் குடித்தவன்; அகத்தியன்.

90. முடிவான கொடியோர்கள் - இறந்து போன வில்வலன் வாதாபி என்பவர்கள். படியோர்கள் - உலகத்தினர். அவ்விருவரும் முனிவர் உருவங்களைக் கொண்டு இடிபோல முழங்கி அகத்திய முனிவரைத் தொடர்ந்தனர் என்க. இரைப்ப - முழங்க. கொங்குக்கு அணித்தாய் இருந்து - கொங்கு நாட்டிற்கு அருகில் ஓரிடத்தில் தங்கி. அடியார் மனத்தனை - சிவபெருமானை. அவர் கொல் பாவம் - வில்வலன் வாதாபிகளைக் கொன்றதனால் உண்டாகிய பிரமகத்தி தோஷத்தை.

தங்குற்ற விண்ணிறை தெரிந்தே எழுந்துமுனி
தாள்மீ திறைஞ்ச இனிதே
இங்குற் றிருந்தனிகொல்? என்னஉன(து) இன்னருளின்
இன்போ டிருந்த னனெஞ். 91

ஒப்பான தற்றபொழில் அப்பான தற்(று)அலர்வ(து)
ஓதக் கடத்து முனிபால்
வைப்பான ஆறுவரின் மெய்ப்பாதி நந்தன
வனந்தான் வளர்ந்தி டுமெனச்
செப்பாய் உபாயமென மெய்ப்பாணி ஐந்துடைய
சீரோனை அர்ச்சி யெனவே
பொய்ப்பாச மற்றமுனி யுரைசெய்ய அவ்வகை
புரிந்தான்; விசும்பு புரிவான். 92

அக்காலை வேழமுகன் வந்தேது வேண்டுமென
அந்தண் கடத்து முனிபால்
மிக்கான குண்டிகை வனத்தைக் கவிழ்த்தருள
வேண்டுங் கணேச! எனவே
மைக்காக மேனிகொடு சென்றுந்து குண்டிகையை
மண்ணிற் கவிழ்க்க அதனில்
புக்காசி லாதிலகு தண்பொன்னி நன்னதி
புறம்போகி ஓடி யதரோ. 93

---

91. கொங்கு - பூந்தாது; வாசனையுமாம். கொங்கில் - கொங்கு நாட்டில். பெருந்தவர்கள் கோமான் - அகத்திய முனிவர். மங்குல் களத்தன் - மேகத்தைப் போன்ற கரிய திருக்கழுத்தையுடைய சிவபெருமான். விண் இறை - இந்திரன்.

92. பொழில் - நந்தவனம். அப்பானது அற்று - தண்ணீர் இல்லாமல். (அப்பு – நீர்.) கடத்து முனிபால் வைப்பு ஆன ஆறுவரின் - அகத்திய முனிவரிடத்தில் இருக்கின்ற காவிரியாறு இங்கே வந்தால். மெய்ப்பு ஆதி நந்தனவனம் - உண்மைப் பொருளாகிய சிவபெருமானுக்குரிய நந்தவனம். செப்பாய் உபாயம் என - காவிரி இங்கே வருவதற்கு உரிய உபாயத்தைச் சொல்லுவாயாக என்று இந்திரன் நாரதரைக் கேட்க. பாணி ஐந்து உடைய சீரோன் - ஐங்கரன்; விநாயகக் கடவுள். விசும்பு புரிவான் - இந்திரன்.

93. வேழ முகன் – விநாயகக் கடவுள். (வேழம் - யானை.) கடத்து முனி - அகத்தியர். குண்டிகை வனத்தை - கமண்டலத்திலுள்ள நீரை. மை - கருமை. காக மேனி - காகத்தின் வடிவு. ஆசு இலாத - குற்றம் இல்லாத. பொன்னி நல் நதி - காவிரி நதி.

அவ்வேலை யோர்சிறுவ னீப்போல அத்திமுக
அத்தன் திரிந்த ருளலும்
மைவேலை தன்னீயொரு கையூ(டு) அடக்குமுனி
வன்முன் வெகுண்டு தொடரா
மெய்வே தனீப்பட வினீப்பத்த னுதுருவம்
மேவிப் பயந்த முனிவற்(கு)
உய்வே தரும்பல வரந்தான் அளித்(து)அவண்
ஒளித்தான் ; மிகுத்த ஒளியான். 94

துதியார் கடத்துமுனி கொங்கைத் தணந்துமிகு
துங்கம் பொருந்து திருமால்
பதியா யிருந்ததொரு சூற்றூலம் உற்றளவில்
பாவங்கொள் பாக வதருள்
கொதியா இகழ்ந்திடலும் அவர்போல் உருக்கொ(டு)அரி
கோயிற் புகுந்(து) அரிதனீப்
புதிதாய் இலிங்கவடி வாகப் புரிந்துபொதி
யத்திற் பொருந்தி னனரோ. 95

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

இதுநிற்க முனம்ஐங் கரப்பிள்ளீ தள்ளும்
எழில் கொண்ட நதிவந்(து) இருங்காழி தன்னில்
பொதுளுற்று மெலிகின்ற நவநந்த னத்திற்
புகுதத் தழைப்பஅர னீப்பூசை செய்தே

---

94. அவ்வேலை - அப்பொழுது. அத்திமுக அத்தன் - விநாயகர். வேலை தன்னீ - கடலை. தொடரா - பிடிக்கும் பொருட்டுப் பின்பற்றி. மெய் வேதனீப் பட இனீப்ப - உடல் வருத்தத்தை அடைய அதனால் அகத்திய முனிவர் சோர்வைப் பெற. தனது - தன்னுடைய. மிகுத்த ஒளியான் - மிக்க புகழையுடைய விநாயகக் கடவுள்.

95. கடத்துமுனி - அகத்தியர். கொங்கை - கொங்கு நாட்டை. குற்றூலம் - திருக்குற்றூலம் ; இஃது ஐவகை மன்றுள் சித்திர சபை ஆகும் - இங்குத் திருமால் இருந்த இடத்தைத் திருமுற்றம் என்பர். பாகவதர் - திருமால் அடியார்கள். கொதியா இகழ்ந்திடலும் - கோபித்து அவமதிக்கவே. அவர்போல் உருக்கொடு - அந்த வைணவர்போல வேடங்கொண்டு. அரி கோயில் புகுந்து - திருமால் கோயிலுக்குள் சென்று. இங்கு, அகத்திய முனிவர் திருமாலைப் பூசிக்கும் பாவனீபோல் திருமுடியின்மேல் கையை வைத்துக் குறுகு குறுகு என்று கூறி அமுத்திச் சிவலிங்கமாக்கினர் என்பதாம்.

96. ஐங்கரப்பிள்ளீ - விநாயகர். தள்ளும் - கவிழ்த்து ஓடச் செய்த. இருங் காழிதன்னில் - பெரிய சீகாழி என்னும் தலத்தில். பொதுளுற்று -

துதியுற்ற மகவான் இருக்கத் திருக்கச்
சூரன்ற னுலே வருந்(து)அமரர் சில்லோர்
கதிருற்ற கனகத் துறக்கந் துறந்தே
காழிப் புறத்திற் கலந்தார்கள் மன்னே. 96

ஆண்டுற்ற தவளக் களிற்றண்ண லீக்கண்(டு)
அவன்அம்பொன் அடிமீதின் அடைவில் பணிந்தே
ஈண்டுற் றிருந்தாய் பிரிந்தெம்மை ; யாமங்(கு)
இகல்கொண்டு வருசூரன் இடும்ஏவ லெல்லாம்
மூண்டுற்ற துயரிற் புரிந்தே மெலிந்தேம் ;
முடியா(து) இனிச்செய்ய முடியா(து)எம் ஐயா !
மாண்டுற்ற விறல்கொண்ட சூர்கெட்டியா மூய்ய
வகையொன்று புரிகென்ன மகவண்ணல் புகலும். 97

துன்றேர் வஞ்சச்செங்கை எழில்மாயை நல்கும்
சூர்மா மகந்தான் தொடங்குற்ற அன்றே
இன்றே இழந்தோம் இரும்பொன்னின் நன்னு(டு)
என்றே நுமக்கங் கிசைத்தேன்; உயர்ந்த
குன்றே யெனுங்கொங்கை உமைபங்கன் நல்கும்
குறைவற்று வளர்வெற்றி கூடுற்று நம்மை
வென்றே பதங்கொண்டு பன்னாளும் அன்னேன்
மிடலோடு படிமீது மிகும்ஏவல் கொண்டான். 98

மிடல்கொண்ட நஞ்சென்ன வெஞ்சூர னுனும்
மீனஞ் சுமந்தே மெலிந்தோம் ;அ தல்லால்
இடர்கொண்ட புன்செய்கை யாவும் புரிந்தோம் ;
இவையன்றி அயிராணி எனுநாம மேவும்

நெருங்கி. நவ நந்தனம் - (இந்திரனுல் செய்யப்பெற்ற) புதிய நந்தவனத் தில். தழைப்ப - அந்த நந்தவனம் தழைத்து விளங்க. மகவான் – இந்திரன். திருக்கு அச்சூரன்தனுலே - மயலே உடைய அந்தச் சூரபன்மனுலே. கனகத் துறக்கம் - பொன்னுலகமாகிய சுவர்க்கலோகத்தை.

97. தவளக் களிற்று அண்ணலே - இந்திரனே. அடைவில் - முறைமைப் படி. இகல் – பகை. மெலிந்தேம் - மெலிவை அடைந்தோம். சூர்கெட்டு யாம் உய்ய என்க. மக வண்ணல் - இந்திரன்.

98. துன்று ஏர் - பொருந்திய அழகை உடைய. பொன்னின் நன்னாடு - பொன்னுலகமாகிய சுவர்க்கத்தை. அன்றே நுமக்கு அங்கு இசைத்தேன் என்க. நல்கும் வெற்றி கூடுற்று என்க. பதங்கொண்டு-நம்முடைய பதவிகளைக் கைக்கொண்டு. மிடல் – வலிமை.

மடமங்கை தனவவ்வி எனையுஞ் சிறைக்கண்
வைப்பான்நி னைந்துந்து வானத்து வஞ்சன்
படையுந்த இவ்வா றுணர்ந்தே கரந்தே
படரோடு மாதோடு பதியைத் தணந்தேன். 99

முந்தே பொருந்துற்ற தீதன்றி ஈதோர்
முரண்மேவு வசைமேவின் முடியா தெனக்கொண்(டு)
இந்தே புரைந்திட்ட முகமங்கை யோடும்
இடர்கொண்ட நுமைவிட்(டு) இரும்பூ தலத்தே
வந்தே கரந்தே வதிந்தே நுதற்கண்
மந்தா கினிச்சென்னி மன்னன் பதத்திற்
செந்தேன் நறும்போது தூவிப் பணிந்தே
சீர்பெற் றிடும்பூசை செய்தே இருந்தேன். 100

துன்பந் தருந்தா னவக்கையர் சொல்லும்
தொழில்செய்து நம்மேன்மை தொலைவுற்ற(து): இனிநாம்
மின்கொண்ட வெள்ளிக் குவட்டின்கண் மேவி
மேவார் புரஞ்செற்ற விமலற்(கு) உரைத்தெம்
புன்கண் தணந்துய்ய வம்மின்கள் என்னப்
பொன்னுடர் மன்னே மகிழ்ந்தார் புகழ்ந்தார்;
இன்பங்கொள் இமையோரை இறையிங்ஙன் உறுமென்(று)
எழின்மேவும் அயிராணி யிடைமேவி னனுல். 101

சீர்கொண்ட அயிராணி கண்டாள் பணிந்தாள்
சேர்வுற்ற தென்னிங்கொ ரெண்ணத்தொ(டு) என்ன
வார்கொண்ட முலைமங்கை! இடரும்ப ரொடுவிண்
மதிகங்கை நதிதங்கு மௌலிப் பிரான்வாழ்

---

99. நாம்-நாமெல்லோரும். மீனம் - மீன். புன் செய்கை - இழி தொழில். அயிராணி - இந்திராணி. வஞ்சன் - சூரபன்மன். படரோடு - துன்பத்தோடு.

100. முந்தே - முன்பே. முரண் - மாறுபாடு. ஈது ஓர்வசை; வசை என்றது இந்திராணியை இழத்தலால் வரும் பழியை. முடியாது - பொறுக்க முடியாது. இந்தே புரைந்திட்ட - சந்திரனையே ஒத்த. மந்தாகினி - கங்கை. மன்னன் - சிவபெருமான்.

101. தானவக்கையர் - அசுரர்களாகிய வஞ்சகர். வெள்ளிக் குவடு - கயிலை மலை. மேவார்புரம் - திரிபுரம். புன்கண் - துன்பம். பொன் நாடர் - தேவர்கள். பொன்னுடர் மகிழ்ந்தார் என்க. மன்னே: அசைநிலை. இறை - சிறிது நேரம்.

ஏர்கொண்ட கயிலைக் கிரிக்(கு)ஏகு கின்றேன்;
இதுகூற வந்தேன் எனஅங் கிசைப்பச்
சூர்கொண்டு மண்மேல் விழுந்தாள் அயர்ந்தாள்;
சுரர்மன்ன னதுகண்டு துண்ணன்(று) எடுத்தான். 102

தன்னூரு விற்கொண்டு தெளிவிப்ப அங்கண்
தளர்துன்பு சிறிதே தணந்தென்னை விட்டுப்
பொன்னூரின் மன்னீ பிரிந்தால் எனைத்தான்
புரப்பாரி யார்? ஆவி போமல்ல(து) உய்யேன்;
உன்னோடு வருவேன் எனநிற்ப ஐயன்
உனையிங்கு அளிப்பான் உளத்தஞ்சல் என்ன
அன்னன் இடத்திற் சிறப்பென்னை யென்றுள்;
அதுகேள் எனஇன்ன(து) அவளோ டுரைப்பான். 103

அல்லோடு நிகர்கண்டன் அருளின்றி முன்னுள்
அரியாதி இமையோர்கள் அடல்மேவும் அவுணர்
கல்லோல மேவுஞ் செழுங்கீர மாரக்
கடலைக் கடைந்திட்ட காலத்தின் ஆலம்
பல்லோரும் இடருற்(று) இறப்பப் பிறப்பப்
பயங்கொண் டிருந்தே பரன்சேர் குவட்டுற்(று)
எல்லாரும் முக்கட் கருங்கண் டனைக்கண்(டு)
எழில்கொண்ட துதிசெய்ய இருநஞ்(சு) அயின்றான். 104

கன்மா(து) இடங்கொண்ட கங்காளன் இன்னும்
கடைமின்கள்; அமு(து)அங்கண் எழுமென்று கழற
முன்மான ஏகிக் கடைந்தார்கள்; உம்பல்
முகத்தானை வழிபாடு முன்னஞ்செய் தில்லார்

---

102. அயிராணி - இந்திராணி. மங்கை: விளி. இடர் - துன்பத்தை யுடைய. உம்பரொடு ஏகுகின்றேன் என்க. சூர்கொண்டு - அச்சத்தை யடைந்து. துண்ணென்று - நடுங்கி.

103. ஊருவில் - தொடையில். தணந்து - நீங்கி. பொன்னூரின் மன் - பொன்னுலக மன்னவன்; சுவர்க்காதிபதி. ஐயன் - அரிஹர புத்திரனுகிய சாத்தா என்பவர். அளிப்பான் - பாதுகாப்பான். அன்னனிடத்தில் - அச்சாத்தாவினிடம்.

104. அல் - இருள். கண்டன் - திருக்கழுத்தையுடைய சிவபெருமான். இமையோர்களும் அவுணரும் என்க. கல்லோலம் - அலைகள். கீரம் ஆர் அக்கடலை - பால் நிறைந்த அந்தக் கடலை; திருப்பாற்கடல். ஆலம் - ஆலகால விடம். பிறப்ப - தோன்ற. இரிந்தே - கெட்டு ஓடி. பரன் சேர் குவடு - கயிலைமலை. இரு நஞ்சு அயின்றான் - கரிய ஆலகால விடத்தை உண்டருளினான்.

பொன்மேரு மத்தங் குலைந்தே கடற்குட்
புகுந்திட்ட(து) அவணீப் புகழ்ந்(து) ஆதரிப்ப
மின்மாக நீள்வெற் பெழுந்திட்ட(து) எழலும்
மிகுமின்(பு) அடைந்தே மிடைந்தே கடைந்தார். 105

கடைகின்ற பொழுதின்ப அமு(து)அங்கண் எழலும்
கண்டண்டர் திண்தான வக்கையர் சூழா
அடைகின்ற அமுதிங் கெமக்கே எமக்கென்(று)
அடலோடு பொரமுன்ன அப்போதில் அப்போர்
கெடவுன்னி எழின்மேவும் உருமாயன் ஒருமோ
கினியாகி வந்(து)இன்ன கேண்மின்கள் என்ஞ
மிடைகின்ற திரைவேலை அமுதோவி யாஞே
வேண்டுற்ற(து)? இவணென்ன வெய்யோர் இசைப்பார். 106

எங்கட்கு நீயென் றுரைத்தார் ; விரைத்தார்
இமையோர்கள் அமு(து)எங்க ளிடமாக என்ஞர் ;
சங்குற்ற கையாணை வெய்யோர்கள் கொண்டோர்
சார்நண்ண என்மேனி தழுவற்கு வல்லார்
இங்குற்று ளார்தம்மில் ஆர்? என்ன அப்போ
தியானென்றி யானென் நிரும்போர் புரிந்தே
மங்குற்(று) ஒழிந்தார்கள்; அவர்தம்மில் இருவோர்
வானேருள் அவர்போல வடிவுற்(று) அடைந்தார். 107

---

105. கல் மாது - பார்வதி. கங்காளன் - முழு என்பை அணிந்த சிவ பெருமான். அமுது அங்கண் எழும் என்க. முன் மான - முன்பு போல. உம்பல் முகத்தானை - விநாயகக் கடவுளை. மேருவாகிய மத்து என்க. அவணீ - விநாயகரை. ஆதரிப்ப - அன்பு செய்ய. மின் மாகம் நீள் வெற்பு - வானளவும் உயர்ந்து மின்னும் மேருமலை. மிடைந்தே - நெருங்கி. தேவர்களும் மற்றை யோரும் விநாயகக்கடவுளை முன்னர் வழிபடாது கடல் கடையத் தொடங்கினமையால் இடையூறு விளைந்தது. ஆகவே, ஒரு தொழில் முட்டின்றி முடிதற்பொருட்டு விநாயக வணக்கம் வேண்டும் என்க.

106. இன்ப அமுது அங்கண் எழலும் என்க. அண்டரும் தானவக் கையரும் சூழ்ந்து என்க. கையர் - வஞ்சகர். பொர முன்ன - தமக்குள் போராட முயல. மாயன் - திருமால். மிடைகின்ற - செறிந்திருக்கின்ற. மோகினி வடிவு கொண்ட திருமால் அமுதமோ நாஞே யாது வேண்டும் என்ஞர் என்க. வெய்யோர் - அசுரர்.

107. அசுரர் மோகினியையும் அமரர் அமுதத்தையும் விரும்பினர்கள். மங்குற்று - அழிந்து. வானேருள் அவர் போல வடிவுற்று - தேவர்களுக்குள்ளே அவர்களைப் போலக் கோலங்கொண்டு.

விண்ணோர்கண் அரிநண்ணி அமுதங் களிப்ப
வெய்யோர்கள் கடிதுண்ண அதுகண்டு விறல்சேர்
தண்ணெவில் மதிசெய்ய கதிர்கண்(டு) அரிக்குத்
தங்கண்கொ(டு) ஓதத் தடச்சட்டு வங்கொண்(டு)
உண்ணெவ முடிதள்ளி அமுதுண்ட நீரால்
உயர்கோளின் நிலைநல்க உவர்நாக மாகி
விண்ணெடு சசிதன்னை என்றாழை முன்சொல்
வெஞ்சத்தி னுல்[1] வான மீதே மறைப்பார். 108

அறைகின்ற இவைநிற்க அமுதம் பகிர்ந்தே
அணிமா துருக்கொண்ட அடல்மாயன் உறலும்
கறைதுன்று கண்டத்தன் அவன்முன்னர் வந்தே
கலவித் தொழில்செய்தல் கருதுற் றழைப்ப
முறையன்(று) எனுமாயன் இசையாது நிற்ப
முரணெ(டு) அவற்பற்ற முன்னிச்செல் போதில்
நறைமன்னு துளவண்ண லோடத் தொடர்ந்தே
நம்பன் பிடித்தோ ரிடத்தெய்தி னுனல். 109

---

108. விண்ணோர்கண் அரி நண்ணி - தேவர்களிடத்தில் திருமால் வந்து. அமுது அங்கு அளிப்ப என்க. வெய்யோர்கள் - அங்கே வந்த இரண்டு அசுரர் களும் தண் ஒவில் மதி செய்ய கதிர் கண்டு - குளிர்ச்சி நீங்குதலில்லாத சந்திரனும் சிவந்த கிரணங்களை உடைய சூரியனும் கண்டு. அரிக்குத் தம் கண் கொடு ஓத - திருமாலுக்குத் தம்முடைய கண்ணால் குறிப்பாகப் புலப் படுத்த. தடச் சட்டுவம் - விசாலமான அகப்பையினால். முடி தள்ளி - தலைகளைத் துணித்து. தலை துண்டுபட்டு வீழ்ந்ததும் செம்பாம்பும் கரும் பாம்புமாக ஆயினர் என்க. அமுதை உண்ட தன்மையால் அவர்களுக்கு நவக்கிரங்களில் இராகு கேது என்ற இரண்டாக இருக்கும் பதவியைத் திருமால் அளித்தார். கோள் - கிரகம். உவர் - வெறுப்பதற்குரிய. நாகம் - பாம்பு. விண் ஒடு சசி தன்னை - வானத்தில் ஒடுகின்ற சந்திரனை. என்றாழை - சூரியனை. வெஞ்சத்தினுல் - தம்மைக் காட்டிக் கொடுத்தார் என்ற கோப வுணர்ச்சியினால்.

செம்பாம்பாகிய ராகு சந்திரனையும் கரும்பாம்பாகிய கேது சூரியனை யும் கிரகண காலங்களில் மறைப்பர் என்பது புராண வரலாறு, இராகு கேது என்ற பெயர் இவர்களுக்கு முன்பு இருந்த பெயரே ஆகும்.

109. பகிர்ந்தே - பங்கிட்டுக் கொடுத்து. கறை துன்று கண்டத்தன் - நீலகண்டன். கலவித் தொழில் - புணர்தல். முரணெடு அவன்பற்ற முன்னி - வலிமையோடு அத்திருமாலைப் பற்ற எண்ணி. நறை - தேன். துளவு அண் ணல் - துளவ மாலையை அணிந்த திருமால்.

பா-ம்—1 வஞ்சத்தினுல்.

எங்கோனும் மாலும் புணர்ந்தார்கள் அப்போ(து)
எழிலோ(டு) உதித்தான் இருங்கொற்ற ஐயன் ;
சங்கோ வெனுங்கந்த ரத்தையல் ! அவன்உன்
றனையாள்வன் என்(று)அச் சயத்தோனை முன்ன
அங்கோர் கணத்தெய்த மனையாளை அனையான்
அரணுக வைத்துந்து திரள்நாக ரோடும்
பொங்கோத வேலைக் கடுக்கொண்ட கண்டப்
புனிதன் பொருப்பிற் பொருக்கென்(று) அடைந்தான். 110

இன்பான கயிலாய சயிலத் தடைந்தே
எம்மானி யோகத் திருக்குந் திறத்தால்
அன்பாக வேகாணல் இல்லாது பன்னாள்
அருணந்தி தலைவாச லதின்மேவும் நாளில்
வன்பாவ வடிவான மறிமா முகத்தாள்
வளர்துன் முகங்கொண்ட மடமாதி னோடும்
பொன்பாவு சசிநற் றவஞ்செய் திருந்த
புகழ்மேவு காழிப் பொழிற்பால் அடைந்தாள். 111

மாணன எழில்கொண்ட இளையோரை நாடி
வலிதே புணர்ந்(து)ஏகும் மறிமா முகத்தாள்
சேணன பொழிலூடு சசியைத் தெரிந்தே
திறல்கொண்ட சூரோடு சேர்த்தற் கழைப்பப்

சிவபெருமானின் நால்வகை சக்திகளுள் திருமாலும் ஒருவர் ஆகும். நால்வகைச் சக்திகள் - உமை, திருமால், காளி, துர்க்கை என்போர் : "அரியலால் தேவி யில்லை ஐயனே யாறு னர்க்கே" என்பது தேவார அடி. "நால்வகைப் பட்ட நண்ணிய சத்தியுள், மாலும் ஆதலின்" என்பது கந்த புராண அடிகள்.

110. ஐயன் - சாத்தன் ; அரிஹர புத்திரன். சங்கை ஒத்த கழுத்தை யுடைய பெண்ணே என்றது இந்திரன் இந்திராணியை விளித்ததை. அச் சயத்தோனை முன்ன - அந்த வெற்றியையுடைய சாத்தாவை நீங்க. மனை யாளை - இந்திராணியை. அரணுக - பாதுகாப்பாக இருக்க. நாகரோடும் - தேவர்களோடும். ஓதம் - குளிர்ச்சி. வேலைக் கடு - கடலில் எழுந்த விடம். பொருப்பு - கயிலை மலை.

111. சயிலம் - மலை. அருள் நந்தி தலைவாசல் - அருளையுடைய நந்தி யெம் பெருமான் காவல் புரியும் முதல் வாசல். மறி முகத்தாள் - அசமுகி. துன்முகங்கொண்ட மடமாது - துன்முகி என்றவள். சசி - இந்திராணி. மறி முகத்தாள் மாதினோடும் அடைந்தாள் என்க.

பூணூர் பெருங்கொங்கை மடவாள் மறுத்தே
புகல்நீதி யல; ஈது போவென் றிசைப்ப
ஏணுன வலியோடு வலிதே பிடித்தே
இடரோடும் அவளோல மிடவே படர்ந்தாள். 112

பாகுற்ற மொழிதன்னே அசமா முகத்தாள்
பற்றிப் படர்ந்திடலும் ஐயன்றன் ஆளாய்
வாகுற்ற சசியைப் புரந்திட்ட வீர
மாகாளர் போகாது நில்லென்று சொல்லிக்
காகத்தை நேரான ஆகத்தி னுள்முன்
கடிதேக அவளுங் கறுத்தே திரும்பி
வாகைப் புயங்கொண்ட வீரன்றன் நேரே
வலியோடும் ஒருசூல வைவேல் விடுத்தாள். 113

வன்புற்ற சூலத்தை வாள்கொண்டு வீரன்
வலியோடும் இருதுண்ட மருவத் துணிப்ப
முன்புற்ற அறிவற்ற மறிவத் திரத்தாள்
முரணுற் றிடுந்துன் முகத்தாள் கரத்தில்
கொன்பெற்ற சூலங்கொண்(டு) அயிராணி தனேஅக்
கொடியாள் நெடுங்கைக் கொடுத்தே எதிர்ந்தே
இன்புற்ற மார்பூடு தைக்கச் செலுத்த
எழில்கொண்ட வாள்கொண் டெறிந்தே துணித்தான். 114

உந்துற்ற ஒருசூலம் இருதுண்ட மாக
ஒருவாத ஒருவெற்(பு) உரத்தோடு கொண்டே
மைந்துற்ற வீரன்றன் நேரே விடுப்ப
வலிகொண்ட வாள்கொண்டு வருகின்ற குன்றம்

---

112. மாண் ஆன - மாட்சிமை உடைய. மறி முகத்தாள் - அசமுகி. சேண் - உயரம். சூரோடு சேர்தற்கு அழைப்ப - சூரபன்மனுடன் சேர்ந் திருப்பதற்காக இந்திராணியை அழைக்க. ஏண் ஆன வலி - மிக்க வலி ; ஏண் – வலிமை.

113. பாகு உற்ற மொழி தன்னே - பாகு போன்ற இனிய வார்த்தை களையுடைய இந்திராணியை. ஐயன்தன் ஆளாய்-சாத்தனுடைய ஏவலாளாகி. வாகு- அழகு. காகத்தை நேரான ஆகத்தினுள் - காக்கையைப் போன்ற கரிய நிறமுடைய அசமுகி. கறுத்து - கோபித்து. சூலம் வை வேல் - கூர்மை யான சூலாயுதம்.

114. வன்பு - வலிமை. துணிப்ப - வெட்ட. மறிவத்திரத்தாள் - அச முகி ; வத்திரம் - வக்த்ரம் - முகம். அக்கொடியாள் - துன்முகி.

சிந்துற்று வீழத் தடிந்திட்ட போதில்
சீர்கொண்ட வாளுஞ் சிதைந்திட்ட தம்மா ;
மூந்துற்ற அயிராணி தன்னைப் பிடித்தே
முன்போல் நடந்தாள் முரண்கொண்ட வெய்யாள். 115

அப்போது மாகாளர் கடிதேகி அவள்தன்
அணியுற்ற அளகத்தை அடலோடு பற்றித்
துப்போடும் உடைவாள் பிடித்தோர் கரத்தைத்
துண்டம் படுத்தித் துலங்குற்ற மாதை
மெய்ப்போடு விடுவித்(து) அடல்துன் முகத்தாள்
வீறுங் கரத்தொன்று வீழத் துணித்துச்
செப்போடு நிகர்கொங்கை யவள்மண்ணில் வீழச்
சீர்கொண்ட தாள்கொண்டு திறலோன் உதைத்தான். 116

கரந்தான் இழந்திட்ட சூர்தங்கை சோரிக்
கடலோடு படிமீது கடிதே வீழுந்தே
வருந்தா அறற்ரு மருண்டாள் உருண்டாள்
வயமுற்ற வுரையங்கண் வரையற்ற சொற்ருள்
அருந்தார் நெருங்குங் குழல்துன் முகத்தாள்
அதுகண்டு பலபுந்தி அறையத் தெளிந்தே
திருந்தார் வணங்குங் கழற்சூரன் நேரே
சேரற்(கு) உளங்கொண்டு தென்பால் நடந்தாள். 117

எண்ணுர் வழுத்துந் திறல்கொண்ட வீரன்
எழில்கொண்ட அயிராணி எனுமா தன்னைத்
தண்ணரும் அருளோடு வதனந் தெரிந்தே
தகுவர்க்கு நெஞ்சூடு சற்றேனும் அஞ்சேல் ;

---

115. மைந்து - வலிமை. ஒருவாத – நீங்காத. உரத்தோடு - வலிமையோடு. வாள் - வீரமாகாளரது வாள். முரண் - வலிமை.

116. அளகத்தை - கூந்தலை. துப்பு - வலிமை. ஒரு கையை வெட்டி என்க. மாதை – இந்திராணியை. மெய்ப்போடு - மேனி குலையாதபடி. கொங்கையவள் - அசமுகி.

117. சூர்தங்கை – அசமுகி. சோரி – இரத்தம். படிமீது - நிலத்தின் மேல். வயமுற்ற உரை (கோபத்தால்) பலமான சொற்களை. தார் - மாலை. திருந்தார் - பகைவர்.

118. எண்ணுர் - பகைவர். வீரன் - வீரமாகாளர். வதனம் தெரிந்தே - முகத்தை நோக்கி. தகுவர்க்கு - அசுரர்களுக்கு. அண்ணல் - தலைவன் ; இந்

கண்ணு யிரங்கொண்ட விண்ணுடர் அண்ணல்
கவினுற்ற உனேமேவு காறும் புரப்பன் ;
பண்ணுரு மொழி! இங்ஙன் உறைகென்று போகப்
பண்டென்ன அவளும் பரிந்தே இருந்தாள். 118

மேவுற்ற இதுதன்னே அருள்நா ரதன்போய்
வெள்ளிப் பொருப்பில் விருப்போடு விண்ணோர்
தேவுற் றுழிச்சென் றுரைப்பக் கலங்கிச்
சேணுற்ற இமையோர்கள் திரளோடு காழிக்
காவுற்று மாகாள னைக்கண்டு புல்லிக்
கவின்மாதி னெடுமேரு வரையிற் கலந்தான் ;
பாவுற்ற படரோடு கரமற்ற மடவார்
பதகேசன் அரசாளும் நகரிற் படர்ந்தார். 119

அங்குற்ற பேர்கண்டு மறிமா முகத்தாள்
அணியுற்ற கரம்ஆர் அறுத்தார்கள் ? என்றே
பொங்குற்ற பலவான எண்ணங்கள் எண்ணப்
பொற்புற்ற சூருற்ற பொற்கோயி லுட்போய்த்
தங்குற்ற அவையிற் புரண்டே புலம்பித்
தகர்போல வதனந் தரித்தாள் அரற்றக்
கொங்குற்ற மாலைப் புயச்சூர் தெரிந்தே
கூ(று)ஆர் கரத்தைக் குறைத்தார்கள் ? என்றான். 120

ஆடான முகமுற்ற கொடியாள் உரைப்பாள்:
அயிராணி புவியூ(டு) அமர்ந்தாள் உனக்கென்(று)
ஈடாக வேபற்றி வருபோது மகவான்
ஏவல் புரிந்தே இருந்திட்ட ஒருவன்

திரன். மேவுகாறும் - அடையும்வரைக்கும். பண் ஆரும் மொழி - பண்ணை ஒத்த மொழியை உடையாய் : விளி. பரிந்தே - அன்புற்று.

119. வெள்ளிப் பொருப்பில் - கயிலாய மலையில். தே - தலைவன். கா - நந்தவனம். பாவுற்ற படரோடு - பரவிய துன்பத்தோடு. கரம் அற்ற மட வார் - அசமுகியும் துன்முகியும். பதகேசன் - பாதகங்களைச் செய்வதில் தலைவனுகிய சூரபன்மன். நகர் - மகேந்திரபுரி.

120. பொங்குற்ற - கோபத்தோடு எழும். தகர்போல வதனம் தரித் தாள் - அசமுகி. கொங்கு - வாசனை. கூறு - சொல்வாயாக.

121. உனக்கு என்று ஈடு ஆகவே - உன்னுடைய இன்ப நுகர்ச்சிக்கு என்று ஒப்பாக எண்ணி ; ஈடு - பெருமையுமாம். மகவான் - இந்திரன். பாடு

பாடாக என்பாணி கொய்தான் எனச்சூர்
பயமுற்ற முகிலூர்தி பணிசெய்யும் அவனே ?
நாடாமல் இவர்கைத் தலத்தைத் துணிப்பான் ;
நன்றென்று விண்ணோர் நடுங்கச் சினந்தான். 121

அப்போது மகனுகி யுறுபானு கோபன்
அடலோ(டு) எழுந்தே அவன்முன் பணிந்தே
மெய்ப்பான மகவானை அயிராணி தன்னை
விண்ணோரை யெல்லாம் விரைந்தே பிடித்திங்(கு)
இப்போதில் இவண்மீள்வன் ; விடுகென்ன அன்னன்
ஏவத்த னுதான இற்பால் அடைந்தான் ;
மைப்பாவு கடுவன்ன சூர்ஒற்ற ரோடு
மலர்வேத னைக்கொண்டு வம்மின்கள் என்றான். 122

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

என்றிட அயனை நாடி ஏகியே கொடுவந்(து) உய்ப்பத்
துன்றுசீர் இவர்தங் கையைத் தொன்மைபோற் புரிதி என்றான்;
மன்றல்சேர் வனச மேலோன் மற்றிவர் கரங்கள் வல்லே
நன்றுற வளர்க என்று நவின்றிட வளர்ந்த அன்றே. 123

அங்கது சூரன் காணூஉ அயன்றனை மகிழ்ந்தே ஊரில்
தங்கையை இருப்பச் செய்து தடங்கொள்துன் முகத்தி னுளைச்
செங்கதிர்ப் பகைவ னேடு சென்றிட விடுத்துப் பின்னர்ப்
பொங்குசீர் ஒற்றர் தம்மோ(டு) இனையன புகல லுற்றான். 124

வெற்றிகொள் அருக்க னுதி விண்ணகந் தன்னில் நாளும்
சுற்றியே திரிவோர் தம்மைத் துண்ணெனக் கொணர்திர் என்ன

ஆக - துன்பம் உண்டாகும்படியாக. பாணி - கையை. முகில் ஊர்தி - இந்திரன். நாடாமல் - மேல் விளைவு இன்னதென்று ஆராயாமல்.

122. மகவானை - இந்திரனையும். அன்னன் ஏவ-சூரபன்மன் விடுக்க. இல் பால் - வீட்டை. மலர்வேதனை - பிரமதேவனை.

123. அயன் - பிரமன். உய்ப்ப - விட. வனச மேலோன் - பிரமதேவன் ; வனசம் - தாமரை.

124. காணூஉ - கண்டு. ஊரில் - தன்னுடைய நகரமாகிய மகேந்திரபுரியில். செங்கதிர்ப் பகைவனேடு - பானுகோபனேடு.

125. அருக்கன் - சூரியன். ஆதி என்றதனால் மற்றைய கிரகங்களையும் கொள்க. துண்ணென - விரைவில் ; அவர்கள் நடுங்க எனலுமாம். இற்றிட - துண்டாகும்படி.

மற்றவர் கொடுவந் துய்ப்ப மறிமுகி கரமோர் வீரன்
இற்றிடத் தடிதல்நோக்கி இருந்த(து)என்? இயம்பு மென்ருன். 125

என்றிட அனையர் சொல்வார் : எங்கணம் பரத்தின் மீது
சென்ற(து)ஈ தறியோம் என்னச் சீறியே சிறையிற் சேர்த்தித்
துன்றிய கால்கள் தம்மைத் துண்ணெனக் கொணர்திர் என்ன
வன்றிறல் தூதர் ஏகி மற்றவர்க் கொடுவந் துய்த்தார். 126

தானவன் அவரைச் சீறித் தகர்முகி தனது கையை
ஈனமில் ஒருவன் வாளால் எறிதல்கண் டிருந்தீர் என்றே
ஊனமார் சிறையிற் சேர்த்தி ஒற்றரைத் தரணி காக்கும்
மானவர் தம்மைக்கொண்டு வம்மினென் றுரைத்தான் மன்னே. 127

எண்டவிர் அவரையுய்ப்ப எங்கைதன் செங்கை துண்டம்
கண்டனன் ஒருவன் நீவிர் காத்தவா நன்றென்(று) ஓதித்
துண்டமா மதனைத் தானைத் தோளினைத் துணிப்பித் தின்ன
தண்டமங் கியற்றிச் சூரன் தவிசினும் எழுந்தான் அன்றே. 128

எழுந்துதன் மருங்கு நின்ற இனையனை விடுத்துச் செந்தேன்
பொழிந்திடு கமலத் தோனைப் போகெனச் சிறையாந் துன்பத்
தழுந்துவா னவரை விட்டிங் கருளென இரப்ப விட்டுச்
செழுந்துதி அனைய ரெல்லாஞ் செய்திடப் பணித்தான்[1] தீயோன். 129

அன்னது பின்னர் மைந்தர் அமைச்சர்கள் முனிவ ரானோர்
துன்னுறு படைஞர்க் கெல்லாஞ் சூர்விடை கொடுத்துப் போனான்;

---

126. எம் கண் அம்பரத்தின்மீது சென்றது - எம்முடைய கண்கள் ஆகாயத்தின் மேலே சென்றன. கால்கள் தம்மை - பலவகைக் காற்றுக்களை : கொண்டல், கோடை, வாடை, தென்றல் என நான்காதலின் பன்மையாற் கூறினன்.

127. தகர்முகி - அசமுகி. தரணி காக்கும் மானவர் - பூவுலகைப் பாது காக்கும் அரசர்.

128. எண் தவிர் அவரை - கணக்கில்லாத மன்னரை. துண்டம் கண்டனன் - வெட்டினன். காத்த வா - பாதுகாத்தவாறு. துண்டமாம் அதனை - மூக்கை. தண்டம் - தண்டனை. தவிசினும் - சிங்காதனத்தினின்றும்.

129. மருங்கு - பக்கத்தில் இனையனை - அசமுகியை. கமலத்தோனை - பிரமதேவனை. இரப்ப - யாசிக்க. தீயோன் - கொடியவனுகிய சூரபன்மன்.

130. துன்னுறு - நெருங்கிய. சூர் - சூரபன்மன். கொன்னுறு - பகைவர்கள் அஞ்சத்தக்க.

பா-ம்—1 சென்றிடப் பணித்தான்.

இன்னது நிற்க முன்னர் எழுந்துதன் மனையிற் சென்ற
கொன்னுறு **பானு கோபன்** செயலினைக் கூற லுற்றும். 130

நீடுபல் படைகள் சூழ நெடியதோர் இரதம் ஏறிக்
கூடுதுன் முகத்தாள் காட்டக் குறைவில்சீர்ப் புகலி மேவித்
தேடினன் மகவான் மாதைத் தெரிந்திலன் புவனி யாண்டும்
நாடினன்; காண லுங்கி நாகமேற் சென்றான் அன்றே. 131

சண்டவெங் கிரணப் புத்தேள் தனிச்சிறை பிணித்த தீயோன்
அண்டிய தண்டர் காண அருந்துயர் பொருந்தி ஏங்கி
மண்டுசீர்ச் சயந்தன் முன்போய் மற்றிதை உரைத்த லோடும்
கொண்டலூர் குரிசின் மைந்தன் கொண்டனன் உளத்தில் வாறே. 132

தந்தையும் இல்லை; பெற்ற தாயிலை; குரவ னனை
எந்தையும் இல்லை; செய்வ தென்னென இதயத்(து) உன்னி
முந்தையில் விதியை யாரே முடித்திட வல்லார்? ஈண்டு
வந்தது வருக வென்னு வானவ ரோடும் போனான். 133

வெள்ளேவா ரணத்தின் மீதே விண்ணர சாளும் அண்ணல்
பிள்ளேவா னவர்கள் சூழப் பெருஞ்செருப் புரிவான் எண்ணிக்
கொள்ளேயாம் அவுணர் நேரே குறுகலும் அவுணர் தாமும்
எள்ளில்சீர் இமையோர் தாமும் எதிர்ந்(து) அமர் இயற்றி னரால். 134

மண்டிரு திறத்தி னேரும் வன்சமர் புரிந்த காலை
அண்டர்கள் உடைந்தே ஓட அவுணர்கள் தொடர்ந்து பற்றிப்
புண்டரு கயிற்றுல் அன்னர் புயம்பிணித் தகல ஈது
கண்டனன் வெகுண்டான் வெள்ளேக்கயந்தனிற் சயந்தன் என்பான். 135

---

131. புகலி - சீகாழி. மகவான் மாதை - இந்திராணியை. புவனி யாண்டும் - உலகமெங்கும். நாகமேல் - தேவலோகத்திற்கு.

132. சண்ட வெம் கிரணப் புத்தேள்தனை - வேகமாகச் செல்லும் வெவ்விய கிரணங்களை வீசும் சூரியனை. தீயோன் - பானுகோபன். அண்டியது - வந்ததை. கொண்டல் ஊர் குரிசில் - இந்திரன்.

133. குரவனை எந்தை - பிரகஸ்பதி. முந்தையில் விதியை - முன்பே விதிக்கப் பெற்ற ஊழ்வினையை. வந்தது வருக - வரக்கடவது வரட்டும்.

134. வெள்ளே வாரணம் - ஐராவதம். செரு - போர். கொள்ளே - மிகுதி. எள் இல் - இகழ்தல் இல்லாத. எதிர்ந்து - எதிர்சென்று:

135. சமர் - போர். அண்டர்கள் - தேவர்கள். உடைந்து - தோல்வியடைந்து. புயம் பிணித்து அகல - தோள்களைக் கட்டிக் கைகொண்டு செல்ல. வெள்ளேக்கயம் - ஐராவதம்.

கைத்தனு வளைத்துத் தீய கணையெனு மழைபொ ழிந்து
பத்தின்மேல் தொண்ணூ(று)உற்ற படைவெள்ளம் விள்ளச் சிந்தி
மெத்திய தலைவர் தம்மை வென்றிகொண் டிடச்சூர் மைந்தன்
அத்தொழில் கண்டு நேர்வந்(து) அடுசர மாரி தூர்த்தான். 136

இந்திர குமரன் காணு எண்ணில்கோல் துரந்து நீக்கி
வந்தவன் விசிக மாரி விடவிட அதனுல் மாற்றி
அந்தமில் வன்மை கொண்ட ஆயிரங் கணைகள் சிந்திச்
சிந்தினன் அவுணன் ஏந்துஞ் சிலைப்பெரு நாணி தன்னை. 137

நல்லதோர் நாணி போக நாணியோர் நாணி விற்கொண்(டு)
ஒல்லையா யிரங்கோல் சிந்தி உரந்திகழ் சயந்தன் மீதே
வல்லையில் அழுத்த அன்னுன் வாளிஆ யிரநேர் தூண்டிச்
சில்லியந் தேரும் மாவுஞ் சிதைத்தனன் தேவர் துள்ள. 138

மற்றொரு தேரில் வாவி வஞ்சகன் சிலையைக் கோட்டி
அற்றமில் சுரங்கள் தாம்நூ றுயிரங் கோடி தூண்டி
வெற்றிசேர் மகவான் மைந்தன் மெய்யெலாம் அழுத்த நொந்து
சற்றுமங் கறிவி லாது தந்திமேற் சயந்தன் வீழ்ந்தான். 139

வீறிய மகவான் மைந்தன் வீழ்தலும் வெள்கூத் தந்தி
சீறியொன் னலன்தேர் பாய்ந்து சிதைத்(து)அவன் உரத்தின் மீதே
கோறுநாற் கோட்டி னுலுங் குத்தலுங் கோடு நாலும்
வேறுவே ருடிந்து வல்லே மேதினி விழுந்த அன்றே. 140

---

136. தனு - வில். விள்ள – ஒடும்படியாக. சரமாரி – அம்பாகிய மழையை. தூர்த்தான் - விட்டான்.

137. கோல் துரந்து - அம்புகளை எய்து. நீக்கி - (பானுகோபன் விட்ட அம்புகளை) விலக்கி. விசிகமாரி - அம்பு மழை. மாற்றி - விலக்கி. நாணி தன்னை - கயிற்றை.

138. நாணி ஓர் நாணி வில் கொண்டு - (பானுகோபன்) வெட்கங் கொண்டு வேருெரு நாணேத் தன் வில்லில் ஏற்றிக்கொண்டு. ஒல்லை - விரைவில். கோல் - அம்பு. உரம் - வலிமை. வல்லையில் - விரைவாக. அழுந்த - பதியும்படி செய்ய. சில்லி - சக்கரம். மாவும் – குதிரைகளையும்.

139. வாவி - தாவி ஏறி. வஞ்சகன் சிலையைக் கோட்டி-பானுகோபனுடைய வன் வில்லை வளைத்து. அற்றம் இல் - சோர்வு இல்லாத. தந்தி - யானை.

140. ஒன்னலன் - பகைவன். கோறு நால் கோட்டினுலும் - கொலையைச் செய்கின்ற நான்கு கொம்புகளாலும். கோறு : கொல் என்பதன் அடியாகப் பிறந்த தொழிற் பெயர். ஐராவதம் நான்கு கொம்புகளை உடையது என்க. (அயிராவணம் இரண்டாயிரம் கொம்புகளை உடையது.)

கையுடைத் தவள மேருக் கவுளிடைப் பாணி கொண்டு
வெய்யவன் அடிப்ப நொந்து வீழ்ந்தது ; சயந்தன் றன்னைச்
சையமே யனைய மொய்ம்பில் தானவர் சுற்றிப் பற்றி
மையல்சேர் கயிற்றூற் கட்டி வானவ ரோடுஞ் சேர்த்தார். 141

அங்கது பின்னர் அன்ன ஆடகத் துலகத் துற்ற
மங்கையர் தம்மை ஏனை வானவர் தம்மை யெல்லாம்
பொங்குசீர் அவுணர் பற்றிப் புயங்களைக் கயிற்றூல் வீக்கித்
துங்கவான் நகரைத் தீயாற் சுட்டனர் தூளி யாக. 142

இன்னது நிகழ்ந்த பின்னர் இரவியைத் தளைந்த வெய்யோன்
தன்னுள மகிழ்ச்சி யோடுந் தானவத் தானை யோடும்
மன்னிய புவியின் மேவி மகேந்திர மூதூர் உற்றுக்
கொன்னுறு தந்தை மேவு கோயிலுட் போயி னனால். 143

தந்தையை வணங்கி நின்று சசியெனு மடந்தை யோடும்
இந்திரன் தனையுங் காணேன்; ஏனைய வானோர் தம்மை
உந்துசீர்ச் சயந்தன் தன்னை யொல்லைகொண் டுற்றேன் ஊரைச்
செந்தழற் கிந்தேன் என்னத் திருமகற் றழுவிக் கொண்டான். 144

புல்லியே தங்கை காணப் போந்திடு சயந்த னுதி
எல்லவர் தமக்குந் தண்டம் இயற்றுவித்(து) அவரை யெல்லாம்
வல்லிசேர் சிறைசேர் வித்து மைந்தனை மனையிற் போகென்(று)
ஒல்லையில் விடுத்துச் சூரன் உறையுளிற் சென்றன் அன்றே. 145

ஆலமுங் கால வேலும் அடுங்கொடுங் கணையும் வாளும்
நீலமும் மானும் மானும் நெடுவிழி அரம்பை மாதர்

---

141. கையுடைத் தவள மேரு - துதிக்கையை யுடைய வெள்ளையான மேரு மலையைப் போன்ற ஐராவதத்தின். கவுளிடை - கன்னத்தில். பாணி கொண்டு - கையினால். மொய்ம்பின் - தோளையுடைய. மையல் சேர் - மயக்கத்தை உண்டாக்குகின்ற.

142. ஆடகத்து உலகத்து உற்ற - பொன்னுலகாகிய சுவர்க்க லோகத்தில் இருந்த, வீக்கி - கட்டி. வான் நகரை - அமராவதியை. தூளி - பொடி.

143. இரவியைத் தளைந்த வெய்யோன் - பானுகோபன். கொன் - பெருமை. தந்தை - இங்குச் சூரபன்மன். கோயில் - அரண்மனை.

144. சசி - இந்திராணி. உந்து-மேலாகிய. ஒல்லை - விரைவாக. ஊரை - தேவர்கள் ஊரை. திருமகன் - மூத்த மகனாகிய பானுகோபனை.

145. தங்கை - அசமுகி. தண்டம் இயற்று வித்து - தண்டனை செய்யும் படி செய்து. வல்லி - விலங்கு. உறையுளில் - இருப்பிடத்திற்கு.

சாலவுங் கொடியரான தகுவர்தம் பணிகள் ஆற்றிச்
சீலமுந் தவமும் இல்லாத் தீயசூர் நகரில் உற்றார். 146

இன்னவை நிற்க முன்னம் இரணிய உலகந் தன்னில்
கன்னவில் குவவுத் திண்தோள் கதிர்ப்பகை புடைப்ப வீழ்ந்த
மன்னெடுங் கரிவெண் காட்டு வரதனை அருச்சித் தேத்திப்
பொன்னுறு கோடு நாலும் பொருந்தி யாங்கிருந்த(து) அன்றே. 147

ஈதறிந்(து) இடரின் மூழ்கி இந்திரன் தவஞ்செய் கின்ற(து)
ஆதிய தாக ஆதி அறுமுகன் உதித்த(து) ஈறு
ஓதிய அடைவி னோடும் ஒளிதரு வியாழப் புத்தேள்
கோதிலா அமரர் போற்றுங் குமரவேள் முன்னஞ் சொன்னன். 148

ஆகச் செய்யுள்—348

அசுர காண்டம்

முற்றிற்று

---

146. ஆலமும் – விஷமும். காலவேலும் - யமனது ஆயுதமும். நீலமும் - குவளை மலரும். மானும் நெடுவிழி - ஒக்கும் நீண்ட கண்களையுடைய. பணிகள் - குற்றேவல்களை. சீலம் – ஒழுக்கம்.

147. இரணிய உலகம் - பொன்னுலகம்; தேவலோகம். குவவுத் திண் தோள் - குவிந்த திண்ணிய தோள். கதிர்ப்பகை - பானுகோபன். கரி - ஐராவதம். வெண்காட்டு வரதனை - திருவெண்காடு என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை. பொன் - அழகு. கோடு – தந்தம்.

148. அடைவினோடு - வரிசையாக. வியாழப்புத்தேள் – பிரகஸ்பதி. இந்திரன் தவம் செய்தது முதல் முருகக்கடவுள் திருவவதாரம் செய்தது வரையில் முறையே பிரகஸ்பதி முருகக் கடவுளிடம் சொன்னார் என்க.

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

மூன்றாவது

மகேந்திர காண்டம்

—o—

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

சொன்னவை அணைத்துங் கேட்டுத் துலங்கிய அருளின் நீரால்
ஒன்னலன் தனது மாட்டோர் ஒற்றினை விடுப்பாம் என்றே
மன்னிய புகழ்ச்சி வீர வாகுவை அருளால் நோக்கி
என்னையா ஞடைய செவ்வேள் இனையன விளம்ப லுற்றான். 1

நாட்டிய புகழ்ச்சூர் முன்போய் நாகர்தஞ் சிறையை நீக்கி
வாட்டமில் அறத்தில் வாழ்தி ; மறுத்தியேல் வந்து நாளை
வீட்டுவம் நாமென் றோதி மீள்கென வீர வீரன்
தாட்டுணை பணிந்து வேலோன் றனைவிடை கொண்டு போனான். 2

பெற்றசீர்க் குலிச வேலோன் பின்புபோய் உம்ப ரோடும்
செற்றவெஞ் சூர னாரில் சிறையிடைச் சயந்தன் என்போன்
உற்றனன் ; அவன்பால் எய்தி உளந்தனை உவந்து தேற்றிக்
கொற்றநின் செயலைப் பின்னர்க் குயிற்றுதல் வேண்டு மென்றான். 3

அங்கதற் கிசைவு கொண்டே அவன்றனை நிறுவி வீரம்
பொங்குதம் பியர்கள் தம்மைப் பூதமன் னரைநி றுத்தித்

---

1. அருளின் நீரால் - கருணையாகிய இயல்பினால். இன் : வேண்டாவழிச் சாரியை. ஒன்னலன் - பகைவன் ; சூரபன்மன். ஒற்றன் – தூதன்.

2. சூர் - சூரபன்மன். நாகர்தம் சிறையை நீக்கி - தேவர்களுடைய சிறையை விடுவித்து. அறத்தில் வாழ்தி - அறநெறியிலே செயல் புரிந்து வாழ்வாயாக. வீட்டுவம் - கொல்வேம். வீரவீரன் - வீரவாகுதேவர்.

3. குலிச வேலோன் - வச்சிராயுதத்தையுடைய இந்திரன். பின்பு போய் - வீரவாகுதேவருக்குப் பின்னாலே போய். செற்றம் - கோபம். குயிற்றுதல் – செய்தல்.

4. நிறுவி – நிறுத்தி. பூத மன்னர் - பூதத்தலைவர்கள். தும்கம் - வெற்றி-பலம். ஆழி - கடல் ; இது தென்கடல் என்க.

துங்கவெண் டிரைசேர் ஆழித் தூயதண் கரையின் மேவி
மங்குரு(து) உயர்ந்த கந்த மாதனக் குவடு சேர்ந்தான். 4

அங்கதன் மீதி லேறி அவுணனூர்க்(கு) அடைவான் நீட்சி
தங்குமோர் வடிவங் கொள்ளத் தடவரை பொருது தாழ்ந்து
பொங்குசீர்ப் பிலத்தி னூடு போய(து);எவ் வுலகுஞ் சூரன்
துங்கவாள் நகருங் கண்டான் ; சுடர்விடு வடிவாள் வீரன். 5

அண்டர்சூழ் குமர வேளே அன்புடன் தொழுது போற்றித்
துண்டவெண் பிறையான் மைந்தன் தொல்லுரு அமைந்து சூரம்
கண்டகன் ஊரை நாடிக் ககனமா நெறியூ டேகிப்
பண்டுபோல் எழுதி என்ன எழுந்தது படிந்த குன்றம். 6

சென்றிடு வீரன் சூரன் திருநகர் வடாது பாங்கர்
வன்றிறல் படைத்த யாளி மாமுகத் தவுணன் போற்றும்
வென்றிகொள் இலங்கை யான வியன்நகர்க் கணிய ஞனன் ;
அன்றவன் சூரற் காண அனிகமோ(டு) அகன்றான் அன்றே. 7

அங்கவன் தனது மைந்தன் ஆயிர வெள்ள மான
துங்கவெம் படையி னோடுந் துலங்(கு)அதி வீரன் என்போன்
தங்கினன் வடாது வாசல் தன்னிடை மன்னு வீர
சிங்கன்ஐஞ் ஞூறு வெள்ளச் சேனையோ(டு) இருந்தான் மாதோ. 8

கண்டனன் வீர வாகு ககனமேல் வருதல் சிற்றம்
கொண்டனன் எமது காப்பில் குறுகினன் ; இவன்றன் ஆவி
உண்டிடு வேன்என்(று) எண்ணி உரந்தரு மடங்கற் பேரோன்
மண்டிய படையி னோடும் மாகமேல் வலைந்து கொண்டான். 9

---

5. அடைவான் - செல்லும் பொருட்டு. தடவரை - கந்தமாதன பருவதம். பிலத்தினூடு - பாதலத்திற்குள். வீரன் - வீரவாகுதேவர்.

6. மைந்தன் - வீரவாகுதேவர். சூராம் கண்டகன் - சூரபன்மனுடைய கொடியோன். ககனமா நெறியூடு-ஆகாச மார்க்கமாக. எழுதி - எழுவாய்க. என்ன - என்று வீரவாகுதேவர் சொல்ல.

7. வடாது பாங்கர் - வடபுறத்தில். யாளிமா முகத்து அவுணன் போற்றும் - யாளிமுகன் என்னும் அசுரன் காவல் புரியும். அவன் - அந்த யாளிமுகன். அனிகமோடு - சேனையோடு.

8. அவன் தனது மைந்தன் - அந்த யாளிமுகனுடைய மகன் ; அவன் அதிவீரன் என்பவன்.

9. வீரவாகுதேவர் ஆகாசத்தின் மீது வருவதைக் கண்டு வீரசிங்கன் சினம் கொண்டான். குறுகினன் – அடைந்தான். உரந்தரு மடங்கற் பேரோன் - வீர சிங்கன். மாகமேல் - ஆகாசத்தின் மேல்.

உற்றசிர் வீர வாகு உறைகழித் தொளிர்வாள் கொண்டு
செற்றவெங் கரிக ளூடு சீயமொன்(று)அடைந்த வாபோல்
தற்றி[1]வந் தெதிர்ந்து போர்செய் தண்டமூந் தலைவன் முனும்
அற்றிடக் கடிது லாவி அறுத்தனன் செறுத்து மன்னே. 10

மின்னுலாம் தனிவாள் கொண்டு வீறிவந் தெதிர்ந்து சூழ்ந்த
மன்னிலா எயிற்றுப் பேழ்வாய் வன்மைசேர் அவுணற் செற்ற
பொன்னுலாம் அலங்கல் திண்தோள் பொருவிலா வீரவீரன்
கொன்னுலாம் இலங்கை என்னுங் குன்றின்மேற் குப்புற்றானால். 11

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

குப்புற் றிடுதலும் அதுதன் புடையுறு
கொடுவன் தகுவர்க ளொடுதாமா
உப்புற் றிடுகடல் புகவே அவணுறை
ஒருவா இருவிறல் அதிவீரன்
துப்புற் றிடுபடை யொடுவந் தடலொடு
சூழத் தனதொரு சுடர்வாள்கொண்(டு)
அப்புக் கடலென உதிரம் பெருகிட
அட்டான் ; அவர்தமை அடல்வீரன். 12

பேரா விறல்மலி கடல்மேல் எழும்வகை
பின்விண் ணிடையின் எழுந்தேகிச்
சீரார் சுரர்பகை நகரத் திடைவட
திசைவாய் தலின்உற அதிகோர

---

10. செற்ற - எதிர்த்த. சீயம் - சிங்கம். தற்று - சூழ்ந்து. தண்டமும் - சேனைகளும். செறுத்து - கோபத்துடன்.

11. வீறி - வீரூப்புடன். மன் - உறுதி. பிறையைப் போன்ற பல்லியும் ஆழமான வாயையும் வன்மையையும் உடைய அவுணன் என்க. வீரவீரன் - வீரவாகுதேவர். குப்புற்றான் - குதித்தான்.

12. புடை உறு - பக்கத்தில் இருந்த. கொடு வன் தகுவர்களொடு தாமா - கொடிய வலிய அசுரர்களோடு அழுந்தி. உப்புற்றிடு கடல் - உப்பு நிறைந்த கடல். அப்புக் கடல் என - நீரையுடைய கடலைப் போல. வீரன் - வீரவாகுதேவர்.

13. பேரா - நீங்காத. விறல் - வலிமை. சுரர் பகை நகரத்திடை - தேவர்களுக்குப் பகையாகிய சூரபன்மனுடைய இராசதானியாகிய மகேந்திரபுரியில். வாய்தலின் - வாசலில். அதிகோர வீராதிபன் - அதிகோரன் என்னும் வீரத்தலைவன். கரிமுகன் இளையோன் - முருகன் ; அவனுக்கு இளையவன். வீரவாகுதேவர். பா-ம்—1 தற்று

வீரா திபன்அவண் ஆரு யிரமெனும்
வெள்ளப் படையொடும் உறவேகண்(டு)
ஏரார் கரிமுகன் இளையோன் இளையவன்
இவ்வா(று) உரையது செய்வானுல். 13

வற்ரு துறுகடல் என இங்(கு) அவுணர்கள்
மருவுற் றனர்மிக ; வாய்தற்பால்
உற்ருல் அவர்பொர வருவார் ; அவர்தமை
ஒழியப் பொருதிடில் ஒழியாதே
செற்ருர் வருகுவர் ; அவர்தங் களைஅடல்
செய்தற் கரிதது செய்தாலும்
சுற்ரு நிறைவுறு திறல்வெம் படையொடு
சூரன் சமர்செய வருவானுல். 14

ஆதிக் குகன்அவன் அழியப் பொருதிடல்
அல்லா(து) எவரட வல்லார்என்(று)
ஓதிக் குணதிசை வாய்தற் றனில்வளர்
உரமே வியபுய னுறுபோதில்
மேதிக் கணஞெடும் மாதிக்(கு) அதனிடை
வீரத் தினகரன் வடதிக்கார்
ஏதப் படைநிகர் அனிகஞ் சுலவ
இருந்தார் இருவர் தெரிந்தானே. 15

பேரா வீறலுறு வீரா திபன்அது
பின்தென் றிசைவழி பெயர்போதில்
சூரா னவனது நகர்மேல் வெளிமிசை
தோய்வோன் அமர்புரி தொழில்வல்லோன்

---

14. வாய்தற்பால் - வாசலில். செற்றூர் வருகுவர் - போர் செய்து வருவார்கள். சுற்ரு - சூழ்ந்து.

15. அவன் அழிய ஆதிக் குகன் பொருதிடல் அல்லது என்க. அட - கொல்ல. குணதிசை வாய்தற்றனில் - கீழைவாசலில். உரம் மேவிய புயன் - வீரவாகுதேவர். மேதிக் கண்ணெடு வீரதினகரன் ஆகிய இருவரும் கிழக்கு வாசலில் இருந்தார்கள் என்க. மாதிக்கு-பெரிய திசை. ஏதப்படை-பகைவருக் குத் துன்பத்தைச் செய்யும் சேனை. அனிகம் - படை. சுலவ - சூழ. தெரிந் தான் - பார்த்தான்.

16. பேரா - அகலாத. வீறல் - வீரம். வீராதிபன் - வீரவாகு. அது பின் - அதன் பிறகு. பெயர் போதில் - போகின்ற சமயத்தில். வெளிமிசை

ஓரா யிரமுகம் ஈரா யிரமெனும்
ஒண்கைக் கசமுக வசுரன்தான்
பாரா இவனுயிர் உண்பேன் எனஎதிர்
படவந் தனன்இது பயில்கின்றுன். 16

வீரும் ஒருகிரி பறியா மிடலொடு
விடவே வளர்புய மிசைபட்டே
நீரு யது;தச நூரு மலிவிட
நிமலன் திருவுரு நிலைமேவி
வேருய் அளவறு துகளா யின;கதிர்
மிகுவேல் இறையவன் இனையோன்உட்
சிரு மிளிரொளி வாள்கொண்(டு) அவனெதிர்
சென்றுன் ; அடுதிறல் குன்றுதான். 17

வாள்கொண் டிடுநெடு வாள்கொண்(டு) அவன்முக
வண்கைத் திரளினை வலிமேவும்
தோள்கொண் டிடும்இறை தடியக் குகன்விடு
தூதன் றனைப்பிரு தசநூரும்
நீள்கொண் டிடுகர மேகொண்(டு) அடலுட
னேசுற் றிடஅவை நிலமீதே
வீள்கொண் டிடும்வகை வாள்கொண்(டு) அடலொடு
வெட்டா அழிவுசெய் திட்டானுல். 18

துன்றுங் கரஇரை தரைமேல் விழஅமர்
தோளால் முயறலும் நீள்ஆகத்(து)
ஒன்றும் படியொரு சரணுல் அவனை
உதைத்தே கடிதில் வதைத்தேமுற்

தோய்வோன் - ஆகாசத்தில் தங்குபவன். கசமுகவசுரன் - கசமுகாசுரன். பயில்கின்றுன் - செய்யலானுன்.

17. நீரு யது - தாளாய்விட்டது : வினைமுற்று. தசநூறு - ஆயிரம். நிமலன் - வீரவாகுதேவர். திரு உரு நிலை மேவி - திருமேனியிலே பட்டு. வேல் இறையவன் - முருகன்.

18. வாள்-ஒளி. அவன் முக வண் கைத்திரளினை - கசமுகாசுரனுடைய துதிக்கைக் கூட்டத்தை. வலிமேவும் தோள் கொண்டிடும் இறை - வீரவாகு தேவர். திரளினைத் தடிய என்க. தூதன் - வீரவாகுதேவர். இருதச நூறு - இரண்டாயிரம். வீள் கொண்டிடும் வகை - வீழும்படியாக : எதுகை நோக்கி வீழ் என்பது வீள் என நின்றது.

ஆற்றமெலிந்(து) அரணினினைந் தேத்திஅயர்ந்
திடஅறிந்தங்(கு) அருள்மீக் கொண்டு
சிற்றமுறு வேற்றடக்கைக் குமரன்அவன்
கனவினிடைச் சென்றுன் அன்றே. 22

சிந்தைமகிழ் வோடுதொழு(து) ஐய!நீ
யார்?எனவே திகழும் ஈசன்
தந்தருளும் மைந்தனியாம்; தன்குறைகின்
குறைபுகன்(று)உன் தாதை யான
இந்திரன்வந் தெமைவேண்டத் தாரகனைக்
கதிர்வேல்கொண்டு எறிந்து சாடிச்
செந்தினகர் வந்(து)அதனில் இருந்தனம்இந்
திரன்அயன்மால் தேவர் சூழ. 23

வீரவா(கு) என்னுமொரு தூதுவனை
இங்குவர விடுத்து வீரச்
சூரனும் அவுணன்மகன் ஒருவனெடு
பலஅவுணர் தொலையச் சாடிச்
சிலாம் நகரழித்து வரப்புரிந்து
நாலாயிவண் சேர்ந்து சூர்முற்
போருலாம் அவுணரெலாம் ஐந்திருவை
கலில்மாளப் புரிதும் மாதோ. 24

பின்புனது திருத்தருதும் என்னஅவன்
தனக்குரைத்துப் பெயர்ந்து மோகத்
துன்பினுடன் உறும்அமரர் கனவினிடை
மனமகிழத் தோன்றித் தோன்றி

---

22. கறை - பழி. ஆற்ற - மிகவும். அயர்ந்திட - சோர்வை அடைய; மீக் கொண்டு - மேற்கொண்டு. அவன் கனவினிடை - சயந்தனது கனவினில். சயந்தன் தேவர்களுடன் அவுணர்கள் சிறையிற்செய்யும் துன்பத்திற்கு ஆற்றுமல் சிவபெருமானை நோக்கிப் புலம்புவதைக் கந்தபுராணம்-சயந்தன் புலம்புறுபடலம், 58-79 வரையுள்ள செய்யுட் பகுதிகளில் விரிவாய்க் காண்க.

23. நீ யார் எனவே - நீங்கள் யார் என்று சயந்தன் வினவ. உன் தாதை யான இந்திரன் வந்து தன்குறை நின்குறை புகன்று எமை வேண்ட என்க. சாடி - கொன்று.

24. வரவிடுத்து - வரும்படி விடுத்து. சூரனும் அவுணன் மகன் ஒருவன்- இங்கு வச்சிரவாகு. சாடி - அழித்து. ஐந்திரு வைகலில் - பத்து நாளைக்குள்.

அன்பினெடு சயந்தனுக்குப் புகன்றதுபோல்
புகன்றுபுகன்று அகன்று போக
இன்பமுறு கனவினைவிட்(டு) எழுந்துதுயர்
பொருந்தாமல் இருந்தார் அன்றே. 25

(கலி விருத்தம்)

கொன்பாவு திறல்கொண்ட குமரேசன் அமரர்
முன்பாக வந்தேகும் முறையிங்(கு) உரைத்தாம்;
இன்பான புகழ்கொண்ட எழில்வீர வாகு
பொன்பாவு நகரூடு புரிசெய்கை சொல்வாம். 26

தண்டாத விறல்கொண்டு தருமங்கொல் கொடியோன்
விண்டாவு சிகரத்தின் மிசைனின்(று) இழிந்தே
எண்டான வர்கள்சூழ இமையோர்கள் சிறைசேர்
கண்டார்கள் பயமேவு களமீ(து) அடைந்தான். 27

அங்காரும் அசுரேசர் அதிமோக மாகச்
சிங்கார வேல்மந் திரத்தைச் செபித்தே
மங்காத அமரேசன் மகனெடும் இமையோர்
தங்கா இருந்திட்ட தலமுற்(று) இருந்தான். 28

தண்டாத விறல்கொண்ட தலிவன்றன் மேனி
கண்டான் விருப்போடு கரமுந்து சிரமேற்
கொண்டான் வரத்(து)என்கொல்? கூறென் றுரைத்தான்;
அண்டார்கள் சிறையூ(டு) அழுந்துஞ் சயந்தன். 29

---

25. திரு தருதும் – செல்வத்தைத் தருகின்றோம். மோகத் துன்பினுடன் உறும் - துன்பத்தினுல் மயங்கி யிருக்கின்ற.

26. கொன்பாவு - பெருமை பரவிய. நகர் ஊடு - மகேந்திரபுரிக்குள். புரி - செய்கின்ற. செய்கை - செயலை.

27. தண்டாத - குறையாத. தருமம் கொல் கொடியோன் - தரும கோபன்; இவன் சூரபன்மனின் அமைச்சன் ஆகும். கொடியோனது சிகரம் என்க. எண் - எண்ணும் தொகையுள்ள. தானவர்கள் - அசுரர்கள். சிறை சேர் களம் என்க. களம் - இடம்.

28. அசுரேசர் - அசுரத்தலைவர்கள். சிங்கார வேள் - அழகுடைய முருகன். இவன் மந்திரம் "நமோ குமாராய" என்பது.

29. விறல் கொண்ட தலிவன் - வீரவாகு தேவர். வரத்து என் கொல் - இங்கே வரவின் காரணம் என்ன. அண்டார்கள் - பகைவர்கள்; அசுரர் கள். அழுந்தும் - வருந்துகின்ற.

கால்கொண்ட விசைகொண்ட கழல்வீர வாகு
வேல்கொண்ட முருகேசன் விடுதூதன் நீர்இப்
பால்கொண்ட சிறைவிண்டு பதமெய்த வேவெங்
கோல்கொண்ட சூர்முன்பு கூறற்(கு) அடைந்தேன். 30

இப்பான்மை கேளா(து) இடும்போன் இருக்கின்
தப்பாமல் இவண்வந்து தசநாள்கள் தம்மில்
துப்பாரும் அவுணர்த் தொலைத்(து)உம் பதத்தே
மெய்ப்பாக வைப்பான்; விறல்கொண்ட வேலோன். 31

(கட்டளைக் கலிப்பா)

என்று பற்பல நன்று புகன்றிட
ஏதி லாத சயந்தனும் அண்டரும்
துன்று கைக்கம லங்கள் குவித்துநின்
தூய செய்கை தொடங்குதி; ஐய! என்(று)
ஒன்றும் அன்பொ டுரைத்திட அங்கண்விட்(டு)
ஒல்லை ஏகிஓ ராயிர யோசனைப்
பொன்றி கழ்ந்திடு சூர்அவை மண்டபம்
போகி முன்னுள பொன்னுரு எய்தினன். 32

எய்தி ஆயிரம் யோசனை நீளமும்
எள்ளி டம்புரை வெள்ளிடை இன்றியே
வெய்ய தானவர் சூழ்தர ஈறிலா
வீறு லாவு வளங்கள் விளங்குறத்

---

30. கால் – காற்று. 'வேல் கொண்ட' என்பது முதல் வீரவாகுதேவரின் கூற்று. விண்டு – நீங்கி. பதம் எய்தவே – உங்களுக்குரிய பதவியை அடைவதற்காகவே. வெங்கோல் – கொடுங் கோல்.

31. இப்பான்மை – நான் எடுத்துச் சொல்லும் இந்த இயல்பை; இது சயந்தன் முதலியோரைச் சிறை விடுதலைக் குறித்து நின்றது. இடும்போன் – துன்பங்கொண்டுள்ள சூரபன்மன். தசம் – பத்து. துப்பு – வலிமை.

32. ஏது இலாத – குற்றம் இல்லாத; ஏது: ஏதம் என்பதன் விகாரம். சூர் அவை மண்டபம் போகி – சூரபன்மனது ஆத்தான மண்டபத்தை அடைந்து. பொன் உரு – அழகிய வடிவு.

33. எள் இடம் புரை வெள்ளிடை இன்றியே – எள்ளளவு கூட இடை வெளி இல்லாமல். சூர் – சூரபன்மன். மடங்கல் சுமந்திடும் ஆதனச் சையம் – சிங்காதன மாகிய மஞ்சு. தம்பி – வீரவாகுதேவர்.

துய்ய மாலை இலங்கிய மார்பகச்
சூர்ம டங்கல் சுமந்திடும் ஆதனச்
சைய மீ(து)உறல் கண்டனன் ; அண்டர்சூழ்
சண்மு கற்கினி தாகிய தம்பியே. 33

கண்டு திண்டிறல் கொண்டிடு தோளுடைக்
காளை சூரன் கடுந்திறல் சீயமேல்
கொண்ட ஆதன மீதில் இருந்திடக்
கொற்ற வேலவன் ஒற்றென ஓதியான்
மண்ட லத்திடை நின்றிடல்தீ து) எனு
வள்ளல் தன்னை மனக்கண் நினைத்தலும்
ஒண்டி றல்குகன் மண்(டு)அரு ளாலரோ
ஓர்அ ரித்தவி(சு) அவ்விடை உற்றதே. 34

வந்து மன்னவன் முன்னர் இருந்திட
வாகை கொண்டிடு வாகு மகிழ்ச்சியோ(டு)
எந்தை யாகிய கந்தன் அளித்த(து)ஈது
என்று சென்(று)அதின் எய்திய காலையில்
வெந்தி றல்பெறு சூர்இது கண்டுநீள்
வித்தை செய்பவன் என்று வெகுண்டுரைத்(து)
உந்து சீருள வீரனை யாரைநீ
ஒதுவாய்என ஒதுதல் மேயினன். 35

தேவர் தங்கள் இடுக்கண் அகற்றவே
செந்தில் மேவி இருந்திடு கந்தவேள்
ஓவி லாஅருள் தன்னுடன் எய்னையே
உன்னை மேவி உரங்கிளர் அண்டரைப்

---

34. காளை - வீரவாகு தேவர். கடுந்திறல்-மிக்க பலம் ; வேகமும் பலமும் பொருந்திய எனினுமாம். சீயம் - சிங்கம். மண் தலத்திடை - தரையின்மேல். அரித்தவிசு - சிங்காதனம். வள்ளல் தன்னை – முருகக் கடவுளை. அடியார்கள் வேண்டிய வரங்களைக் கொடுத்தருளுகின்றவர் ஆதலால், இவரை 'வள்ளல்' எனக்கூறினர்.

35. அதின்-முருகன் அருளால் தோன்றிய அச் சிங்காதனத்தில். வித்தை செய்பவன் - ஜால வித்தைகளை இயற்றுபவன். யாரை : ஐ. முன்னிலைக் கண் வந்த சாரியை.

36. உரம் - வலிமை. நீதியின்று – நியாயத்தோடு அமைந்து. ஈது - இக் காரியத்தை. என்னையே அறைந்திட ஏவினன் என்க.

பாவ மார்சிறை விட்டிட எண்ணுதி ;
பாரில் நீதி பயின்(று)அர சாளுதி ;
ஆவ தீது மறுத்திடில் மாள்வைஎன்(று)
அன்பி னோடும் அறைந்திட ஏவினன். 36

என்று கூற மிகுந்த சினத்தினே(டு)
ஈறில் சூரன் எனும்பெயர் பெற்றுளோன்
மன்ற வாள்நகை இன்னும் முளைத்திடா
மைந்த னே?இங் கெனக்கிது செப்புவான் ;
நன்று நன்றிது பேதையன் ஆதலால்
அச்சு றுமொழி நச்சிவந் தோதினாய் ;
இன்று நின்னுயிர் தந்தனன் ; ஏகுதி
என்றி யம்பலும் ஏந்தல் இயம்புவான். 37

ஆதி யாகிப் பரம்பர னாகிய
ஆறு மாமுக அண்ணலைப் பாலன்என்(று)
ஓதி னாய் ;அவன் மேன்மைகள் கேள்எனை
ஒப்பில் மேன்மை உரைத்திட வெய்யசூர்
காதி அங்கவன் மேன்மைகள் பின்னரும்
கட்டு ரைக்குதி என்(று)அயல் துன்றிய
தாது லாவு தொடைப்புயம் ஆயிரம்
தான வர்க்(கு)இது சாற்றுதல் மேயினன். 38

ஒற்ற னாகி அடைந்த இவன்றனை
ஊறு செய்திடல் வீறல ; ஆதலால்
பற்று மின்;சிறை யூடு படுத்துமின்
என்று பாவி பகர்ந்திட ஆயிரம்

---

37. நகை – பல். பேதையன் - நீ அறியாமையை யுடையவன். அச்சுரு மொழி - சிறிதேனும் அஞ்சுதல் இல்லாத இவ்வார்த்தையை : இது கூறுவ தற்கு அஞ்சவேண்டும் என்பது சூரபன்மன் குறிப்பு. நச்சி - விரும்பி. ஏந் தல் – வீரவாகுதேவர்.

38. பரம்பரன் – எல்லாரினும் மேலானவன். காதி - தடுத்து. ' அவன் மேன்மைகள் கேளெனை ஒப்பில் மேன்மை யுரைத்திட ' என்பதனை, '' ஈச னே யவன் ஆடலால் மதலையா யினன்காண், ஆசி லாவவன் அறுமுகத் துண்மை யால் அறிநீ, பேசில் ஆங்கவன் பரனெடு பேதகன் அல்லன், தேசு லாவகல் மணி யிடைக் கதிர்வரு நிறம்போல் '', '' ஆதி யாகிய குடிலையும் ஐவகைப் பொறி யும், வேதம் யாவையும் தந்திரப் பான்மையும் வேரு, ஓத நின்றிடு கலைகளும்

துற்ற தானவர் பற்றிடு வான்அயல்
சூழ வீரன் துலங்கொரு கையினுல்
உற்ற ஒன்னலர் சென்னி பிடித்துமண்
மீ(து)அ டித்திட ஒல்லை இறந்தனர். 39

எந்தை வேலுக்(கு) இனியிரை யாகுதி ;
ஈது திண்ணம் ; இருந்திடு ; போவன் என்(று)
உந்து சீருள வீரன் அகன்றிட
உற்ற ஆதனம் ஒல்லை யெழுந்தனள்
அந்த ரத்தின் மறைந்து படர்ந்ததால் ;
அந்த வேலை அருந்திறல் கொண்டசூர்
வெந்தி றல்புனை யுஞ்சத மாமுக
வீர னோடு விளம்புதல் மேயினன். 40

ஆதி மைந்தன் விடுத்திடு தூதன்இங்(கு)
ஆயி ரத்தரை அட்(டு)அகல் கின்றனன் ;
காதும் அன்னவ னுக்(கு)எதிர் கிட்டிநீ
கட்டி வாவென்று கையன் இசைத்தலும்
நீதி கொன்ற இலக்கர்க ளோடுபோய்
நில்லு நில்லென ஒல்லை இயம்பியே
போதும் வீரன் வெரிந்புடை கிட்டலும்
பொங்கு கோபம் புரிந்து திரும்பினன். 41

செற்ற மோடு திரும்பிய வீரன்நேர்
சென்(று)இ லக்கர் திருந்து கரங்களில்
பற்று பல்படை விட்டிட மொய்ம்பன்மேற்
பட்டு நுண்டுகள் பட்டன ; அண்ணலங்(கு)

அவ்வவற் றுணர்வாம், போதம் யாவையுங் குமரவேள் பொருவிலா உருவம்'' எனவரும் **கந்தபுராணம்** - அவைபுகுபடலச் செய்யுட்களால் அறிக.

39. ஊறு செய்திடல் - துன்புறுத்தல். வீறு - வீரம். சிறையூடு படுத்துமின் - சிறையில் அடையுங்கள். பாவி - சூரபன்மன். துற்ற - நெருங்கிய. பற்றிடுவான் - பிடிக்கும் பொருட்டு.

40. எந்தை - எங்கள் இறைவன் ; முருகக் கடவுள். வீரன் - வீரவாகு தேவர். சதமாமுக வீரன் - நூறு முகங்களைக்கொண்ட சதமுகன் என்னும் அசுரன்.

41. ஆதி மைந்தன் - சிவபெருமானுடைய குமாரராகிய முருகக்கடவுள். அட்டு - கொன்று. காதும் - போர் செய்யும். கையன் - சூரபன்மன். வெரிந் புடை - முதுகுப் பக்கத்தே.

உற்ற சூளிகை யொன்று பறித்துநேர்
ஒன்ன லார்மிசை உந்த விரைந்துபோய்
அற்ற மற்ற இலக்கர் கலக்கமோ(டு)
ஆவி விட்டிட அட்டது கெட்டதே. 42

நூறு கொண்ட பெருந்தலை கொண்டவன்
நூபு ரத்திடை வந்தவர் மைந்தருள்
வீறு கொண்டவன் மீமிசை பல்படை
வீச வீரன் விளங்கொர் சிகரியை
மாறு கொண்டு பறித்து விடுத்திட
வல்லை ஆயிர வாளிகள் தூவியே
நீறு கண்(டு)ஒரு நூறு சரங்கள்தாம்
நேரி லான்மிசை நீசன்எய் தானரோ. 43

விட்ட வாளிகள் பட்டிட மொய்ம்பினன்
வெய்யன் முன்னர் விரைந்து படர்ந்துகைப்
பட்ட வில்லைப் பறித்து முறித்திடப்
பாவி நூறு கரங்கொடு பற்றலும்
மட்டில் வீரப் புயங்கொடு தள்ளியே
மார்ப கத்தை மிதித்(து)ஒரு தாளினல்
ஒட்ட லன்தனி நூறு சிரத்தையும்
ஒல்லை தள்ளி உயிர்கவர்ந் தானரோ. 44

(கூலி விருத்தம்)

அட்டது பின்னர் அரும்புகழ் வீரம்
பட்ட புயங்கள் படைத்துள வள்ளல்

---

42. செற்றம் – கோபம். மொய்ம்பன் - வீரவாகுதேவர். துகள்பட்டன - பொடி ஆயின. சூளிகை - மாளிகையின் மேல்மண்டபம். அட்டது கெட்டது - கொன்று தானும் அழிந்தது.

43. நூபுரம் - சிலம்பு. அம்பிகையினுடைய சிலம்பிலுள்ள நவமணியினின்றும் எழுந்த நவவீரர்களுள் சிறப்பையுடைய வீரவாகு தேவர்என்க. சிகரியை - கோபுரத்தை. நீறு கண்டு - பொடி செய்து. நீசன் - சதமுகன் என்னும் அசுரன்.

44. விட்ட வாளிகள் - (தச முகன்) விட்டபாணங்கள். பாவி - பாவியாகி தசமுகன். ஒட்டலன் - பகைவனுடைய.

45. அட்டது பின்னர் - தச முகனைச் சங்கரித்த பிறகு. வள்ளல் – இங்கு வீரவாகுதேவர். நெட்டு உருவம் - பெரிய வடிவம்.

துட்டர் வெருண்டு தொலைந்திட அங்கோர்
நெட்டுரு வங்கொடு நின்றனன் அன்றே. 45

தேவர் வணங்கு திறற்புய வீரன்
பூவடி வங்கொடு பூமிசை நிற்ப
மேவிய ஐம்பது வெள்ளம தாகும்
காவலர் அன்னது கண்டு வெகுண்டார். 46

வந்து விரைந்து வளைந்து சினந்தே
பந்தி பொருந்து படைக்கலம் உந்தக்
கந்தன் விடுத்திடு காளை கறுத்தே
இந்த வியற்கை இயற்றுதல் உற்றான். 47

அடித்தும் உதைத்தும் அரற்ற எறிந்தும்
பிடித்துட லங்கள் பிசைந்து பிழிந்தும்
வெடிக்குரல் ஐம்பது வெள்ளமும் விள்ள
முடித்தனன்; மொய்ம்புள மொய்ம்புள வீரன். 48

அட்டவ தற்பினர் அங்கொரு வேரம்
தொட்(டு)அறம் விட்டிடு சூரவை மன்றம்
பட்டிட விட்டுழி பட்டது கண்ணுல்
எட்டரு மன்றம் இடிந்தது மன்னே. 49

தீயவர் பண்ணை செறிந்திடு மன்றம்
மாய்வது கண்டு வயம்பெறு சூரன்
ஆயிர மொய்ம்புள ஆயிரர் தம்மைத்
தூயவ னே(டு)அமர் துன்ற விடுத்தான். 50

---

46. திறல் - பலம் பொருந்திய. வீரன் - வீரவாகுதேவர். பூ வடிவம் - பொலிவையுடைய கோலம். அன்னது - அவ்வடிவை.

47. பந்தி - வரிசை. உந்த - எறிய. கந்தன் விடுத்திடு காளை - வீரவாகு தேவர்; காளை: உவமையாகுபெயர். கறுத்து - சினந்து.

48. வெடிக்குரல் - வெடித்தலையுடைய குரலைப் பெற்ற. விள்ள - உடையும்படி. மொய்ம்புள மொய்ம்புள வீரன் - வலிமைபொருந்திய தோள்களையுடைய வீரவாகு தேவர்.

49. வேரம் - கோபுரம். தொட்டு - பிடுங்கி. சூர் அவை மன்றம் பட்டிட - சூரபன்மனுடைய ஆத்தான மண்டபம் இடியும்படியாக. பட்டது - விட்ட மண்டபம் அந்த மண்டபத்தின்மேல் விழுந்தது.

50. தீயவர் பண்ணை - கெட்டவர்களாகிய அசுரர்களது கூட்டம். வயம் - வலிமை. மொய்ம்பு - தோள்.

உந்திடும் ஆயிரம் ஓட்டலர் கிட்ட
வந்திடு முன்னர் வயம்புனை வாகு
சுந்தர மேவிய சூரன(து) ஊரை
அந்தர மாக அழித்திட லுற்றான். 51

மண்டப கோபுரம் வாரி எறிந்தும்
விண்டு மதிற்றிரள் வீழ உதைத்தும்
வண்டுறு தண்டலை வல்லி பிடுங்கி
எண்டிசை யின்கணும் ஏக எறிந்தும். 52

அங்கிவை யாதிஅநேக விதத்தால்
பொங்கு வளங்கொள் புரத்தை அழித்தே
துங்க விறல்பெறு தூயவன் நிற்ப
வெங்குண வாயிர வீரர் தெரிந்தார். 53

நீங்கினர் கண்டு சினந்து வலோந்தே
பாங்குறும் எண்ணில் படைக்கலம் உய்ப்ப
ஓங்கு மராமரம் ஒன்று பறித்தே
ஆங்கவர் தம்மை அடித்து முடித்தான். 54

பாதகர் ஆயிரர் பட்டது கண்டே
தூதுவ ரோடுபு சூரனெ(டு) ஓதக்
காதியி ருப்பவோர் காதல னுன
மாதிறல் வச்சிர வாகு எழுந்தான். 55

பற்றுறு தந்தை பதங்கள் பணிந்தே
ஒற்றுனை வென்(று)இவண் உற்றிடு கின்றேன் ;

---

51. ஓட்டலர் - பகைவர். கிட்ட - நெருங்கி. அந்தரம் ஆக - வெறும் வெளியாகும் படி.

52. விண்டு - பிளந்து, மலையைப் போன்ற எனினுமாம். தண்டலை - சோலையை. வல்லி - விரைந்து.

53. அங்கு - அவ்விடத்தில். புரத்தை - சூரபன்மனது இராசதானி யாகிய மகேந்திரபுரியை. வெம் குணம் - கொடிய இயல்பையுடைய.

54. நீங்கினர் - இங்கு அசுரர்கள். உய்ப்ப - செலுத்த. மராமரம் - ஒருவகை மரம் : அரசு அல்லது கடம்புமாம். முடித்தான் - அழித்தான்.

55. காதி - கோபம் கொண்டு. ஓர் காதலனுன - சூரபன்மனுடைய புத்திரருள் ஒருவனுன. மா - மிகுந்த.

56. பற்று - அன்பு. தாதை - இங்குச் சூரபன்மன். வல்லியில் ஏவுதி என்க. ஏவுதி - அனுப்புங்கள். அற்றம் - சோர்வு.

மற்றெனை ஏவுதி ; வல்லையில் என்ன
அற்றமில் சூரன் விடுத்தனன் அன்றே, 56

தந்தை இருந்திடு சங்கம் அகன்றே
உந்திய தன்மனை யூடு புகுந்தே
அந்த மிலாத அடற்படை கொண்டே
சிந்தை மகிழ்ந்தொரு தேர்மிசை யுற்றான். 57

(கலிநிலைத்துறை)

தேரைஞ் ஞூறு வெள்ளம தாகும் ; திறல்யானை
ஓரைஞ் ஞூறு வெள்ளம தாகும் ; உயர்மாக்கள்
ஈரைஞ் ஞூறு வெள்ளம தாகும் ; எழில்நான்கு
பேரைஞ் ஞூறு வெள்ளம தாகும் பிறசேனை. 58

இவ்வா றுகுஞ் சேனைக ளோடங்(கு) இருமைப்போர்
செய்வான் உன்னித் தன்னிக ராம்வச் சிரவாகு
மைவாழ் கண்டத்(து) அண்டர் பிரானுர் மகன்ஏவும்
செவ்வான் மேனித் தூயவன் நேரே சென்றனனல். 59

செற்றூர் ஆகும் தானவர் ஞானத் திறலோனைச்
சுற்று நின்று படைக்கலம் உந்தத் துகள்இல்லோன்
குற்று நின்றும் உதைத்தும் எறிந்துங் கோபத்தோ(டு)
எற்று நின்றுங் கொன்றனன் ; அம்மா ! இறைதன்னில். 60

(வஞ்சி விருத்தம்)

வேறும் அநேக விதத்தால், சீறி எதிர்ந்திடு சேனை
ஊறு பொருந்திட வூழிச், சூறை புரிந்து தொலைத்தான். 61

---

57. சங்கம் - சபை. உந்திய - உயர்வாகிய. அந்தம் இலாத - முடிவு பெறுத.

58. மாக்கள் - குதிரைகள். மா - விலங்கின் பொது. நான்கு பேர் ஐஞ்ஞூறு - இரண்டாயிரம். பிற சேனை - காலாட் படை.

59. இருமைப் போர் - பெரிய போரை. மை - கருமை ; விஷம். அண்டர் பிரானுர் - சிவபெருமான். செவ்வான் மேனித் தூயவன் - வீரவாகு தேவர்.

60. செற்றூர் - போர் செய்தவர். துகள் இல்லோன் - குற்ற மில்லாத வீரவாகு தேவர். குற்று நின்றும் - காலால் இடித்தும். எற்று நின்றும் - அடித்தும். இறை - கணம்.

61. சீறி - கோபித்து. ஊறு - துன்பம். ஊழிச் சூறை புரிந்து - ஊழிக் காற்றைப் போலச் குறையாடி.

உந்திய சூரன(து) எண்ணமும் ஏனைய வுங்கூறி
இந்திர னோடு சயந்தன் இருப்பும் இசைத்துற்றான். 73

மற்றிது நின்றிட வச்சிர வாகு மடிந்தானென்(று)
ஒற்றர்கள் சொற்றுழி வெற்றிகொள் சூரென வுற்றுள்ளோன்
சற்றல வீறிடர் கொண்டொரு மந்திரி தானெதும்
அற்றமில் புந்தியி னுல்லிடர் சிந்தி அமர்ந்தானுல். 74

அங்கது போதினில் அப்புற வண்ட மதிற்சேரும்
செங்கம லத்தய னீக்கொணர் வித்(து)அடல் சேர்சூரன்
மங்கிய தன்பதி முன்பின் இலங்க வகுப்பித்தே
துங்க விரிஞ்சன்அ கன்றிட அன்பொடு சொற்றுனுல். 75

அன்னது காலையில் முன்னர் விடுத்த அடல்தூதர்
மன்னிய செந்திலில் வந்(து)அரன் மைந்தன் மருங்குள்ள
கொன்னுறு சேனை வினவி அகன்று கொடுஞ்சூரன்
தன்னை அடைந்து பதங்கள் பணிந்(து)இத னைச்சொல்வார். 76

அற்றம(து) அற்றஇ ராயிர வெள்ளம் அடற்பூதர்
மற்றவர் மன்னவர் நூறுடன் எண்மர் வரைத்திண்டோள்
கொற்ற இலக்கரொ(டு) ஒன்பது வீரர் குழாத்தோடும்
வெற்றி தருங்கதிர் வேலவன் ஞாலமிசைச் சேர்ந்தான். 77

அங்குறு தாரகன் ஒண்கிர வுஞ்ச அடற்குன்றம்
மங்குற வெஃகம் எறிந்துயர் செந்திலில் வந்(து)ஓரொற்(று)

என்ற) சூரபன்மனது கருத்தையும். ஏனையவும் - தனக்குத் தடையாக இருந்த அவுணர் முதலியோர்களை அழித்த செயலினையும். இருப்பும் - நீலமையும்.

74. சூரென உற்றுளோன்-சூரபன்மன். சற்றல - சிறிது அல்ல ; மிக்க. வீறு - வெறுப்பு. அற்றம் - சோர்வு.

75. சூரபன்மன் புற அண்டத்திலேயுள்ள பிரமதேவனை அழைப்பித்து மிட்டும் தன்னுடைய நகரத்தைச் சிருட்டிக்கச் செய்தான் என்க. விரிஞ்சன் - பிரமதேவன்.

76. சேனை வினவி - சேனையின் அளவு முதலியவற்றைத் தெரிந்து கொண்டு. பதங்கள் - (அவன்) பாதங்களை.

77. இது தூதர் கூறும் செய்திகள் என்க. அற்றமது அற்ற - சோர்வில்லாத. மற்று அவர் மன்னவர் - பூதபதிகள். நூற்றுடன் எண்மர் - நூற்று எண்மர். ஞாலமிசை - பூலோகத்தில்.

78. வெஃகம் - வேலாயுதத்தை. ஒற்று - தூதன். தலை கொண்டு - தலையையுருட்டி. படர்ந்தான் - சென்றான்.

இங்கு விடுப்ப இலங்கை அழித்(து)இவண் எய்துற்றே
பங்கமில் யாளி முகன்றலை கொண்டு படர்ந்தானுல். 78

தெண்டிரை வாவிநம் மாநக ரூடு திறற்கந்தன்
மண்டனி கத்தொடு வந்தமர் செய்ய மனந்தன்னில்
கொண்டனன் இன்னது மெய்யென வெய்யகொடுஞ்சூரன்
ஒண்டிறல் சேர்தம ரைக்கொணர் வித்(து)உரை செய்கின்றான். 79

(கலிவிருத்தம்)

வானேர் தமைச்சிறையில் வைத்தசெயல் வானேர்
ஆனேர் தமக்(கு)இறைவன் ஆதியுடன் ஓதக்
கோனேர் விறற்பெறு குமாரனே அளித்தெம்
மேனேவு செய்திட விடுத்தருளி ஞனுல். 80

இன்பார் அரன்சுதன் இராயிரவெள் ளஞ்சேர்
அன்பான பூதரும் அலக்கண்இல் இலக்கத்(து)
ஒன்பான் எனப்படும் உரங்கொள்இளே யோரும்
தன்பால் வரக்கடிது தாரணியில் வந்தான். 81

வீறுன தாரகனே வெற்பொடு தடிந்தே
மாறுத செந்தில்நகர் வந்(து)அதில் இருந்தே
ஆறுர் முடிப்பரன் அளித்தருகன் நம்பால்
ஊறுன(து) அற்றிடுமொ ரொற்றனே விடுத்தான். 82

அன்னன் இலங்கையை அழித்திவண் அடைந்(து)என்
முன்ன இருந்தெனே முனிந்தே இகழ்ந்தே

---

79. தெண் திரை வாவி - கடலைக் கடந்து. மண்டு அனிகத்தொடு - செறிந்த படைகளோடு. என - என்று தூதுவர் சொல்ல. தமரை - மந்திரச் சுற்றத்தாரை. அவர்கள் மந்திரி, சேனபதி முதலியோர்.

80. வானேர் ஆனேர் தமக்கு இறைவன் - இந்திரன். ஆதியுடன் - சிவபெருமானுடன். கோன் - தலைவன்; சிவபெருமான். நோவு செய்திட எம்மேல் விடுத்தருளினன் என்க. நோவு - துன்பம்.

81. சுதன் - குமாரன். அலக்கண் இல் - துன்பம் இல்லாத. இலக்கத்து ஒன்பான் இளையோர் - இலக்க வீரரும் நவவீரரும். இளையோர் - தம்பிமார். கடிது - விரைவில். தாரணி - பூமி.

82. வெற்பொடு - கிரவுஞ்சகிரியோடு. செந்தில் நகர் வந்து அதில் இருந்து என்க. ஆறு ஆர் - கங்கை பொருந்திய; கங்கையும் ஆத்திமாலையும் (பொருந்திய). ஊறு ஆனது - அழிவு. ஒற்றனே - வீரவாகு தேவரை.

கொன்னுரும் என்பதி குலத்தே இளஞ்சேய்
தன்னுவி கொண்டுறு சயத்தினெடு சென்றுள். 83

நந்தம் பெரும்பதியில் நாகேஅரன் நல்கும்
மைந்தன் செருப்புரிய வந்திடுவன் என்றே
முந்துந்து தூதுவர் மொழிந்தனர்கள் என்னு
உந்துஞ் செருச்செய உசாவினன் நிசாவில். 84

அப்போது பற்பலர் அநேகவிதம் ஓதக்
கைப்போத மைத்(து)அரி கலந்ததவி சின்கண்
துப்போ டிருந்ததொரு சூரன்முக நேரே
மெய்ப்போடு சிங்கமுக வீரன்இது சொல்வான். 85

விரைத்தார் மிடைந்திடு வியன்புய வமைச்சர்
இரைத்தாடல் செய்திடும் இலங்(கு)அனிக மன்னர்
வரைத்தாசில் மைந்தர்கள் தமக்கியலும் வன்மை
உரைத்தார்ஓர் புந்தியும் உரைத்திலர் உனக்கே. 86

கொன்னுர் புகழ்க்குலவு கொற்றவர் செவிக்கே
மின்னுர் அழற்கணை விடுப்பது கடுப்ப
எந்நாளும் நன்னிலைமை என்னுமது தன்னைச்
சொன்னுர் அமைச்சகர்கள் எனும்பெயர்கொள் தூயோர். 87

---

83. முன்னு இருந்து - நேரே வீற்றிருந்து. கொன் - பெருமை. பதி - இராசதானி நகரம். இளஞ்சேய் - இங்கு வச்சிரவாகு. சயம் - வெற்றி.

84. செருப்புரிய - போர் செய்ய. முந்து உந்து - முன்னே (நான்) அனுப்பிய. உசாவினன் - ஆலோசனை செய்தான். நிசாவில் - இரவில்.

85. கைப்போது அமைத்து - கையாகிய மலரால் அமர்த்தி; கையால் குறிப்பித்து அவர்களைச் சும்மா இருக்கச் செய்து. அரி கலந்த தவிசு - சிங்காதனம். துப்பு - மேன்மை.

86. விரை தார் மிடைந்திடு - மணமுள்ள மாலை செறிந்த. இரைத்து ஆடல் செய்திடு-முழங்கிப் போர் செய்கின்ற. அனிக மன்னர் - சேனுபதிகள். வரைத்து ஆசு இல் மைந்தர்கள் - எல்லைக்குட்பட்ட குற்றமில்லாத புத்திரர்கள். தமக்கியலும் வன்மை - தம்மாலான பலத்தை. புந்தியும் - அறிவுரையும். ஆசில் மைந்தர்கள் தமக்கியலும் வன்மை வரைந்து உரைத்தார் எனவுங் கொள்க. வரைந்து என்பது வரைத்து என வலிந்து நின்றது. எல்லோரும் தம்தம் பலத்தைப்பற்றிப் பேசினர்களே அல்லாமல் உனக்கு இது தக்கது இது தகாது என்று அறிவுரை கூறவில்லை என்க.

87. கொன் - பெருமை. அழற்கணை கடுப்ப - வெம்மையாகிய அம்புகளை ஒப்ப. செவி கைக்கும் சொல்லாயினும் நன்மை பயக்கும் என்பார், "நன்னி

வாலுற்ற தண்புனல் வயங்கிய பயம்பின்
பாலுற் றவாமயிலை[1] பற்றுமிகு முண்டி
போலுற்ற நுண்பொருள் புரித்துபடு மாபோல்
மேலுற் றிடுஞ்செயல் வினவுகிலை ; அந்தோ ! 88

நந்தா வளங்குலவு நாகஉல கோரை
முந்தான காலமதில் மொய்ம்புடன் அலைத்தோர்
சிந்தா குலத்தினெடு சிந்தினர்கள் அல்லா(து)
உய்ந்தார் ஒருத்தரை உரைப்பஇவண் உண்டோ ? 89

மீனஞ் சுமந்துபுகழ் விண்ணவர்க ளெல்லாம்
ஈனம் பொருந்திட இயற்றினை மகத்தின்
கோனந்தண் மாநகர் குலைந்திட முனிந்தாய் ;
ஊனந் தருஞ்சிறையில் உம்பர்களை வைத்தாய். 90

நந்தா வளங்குலவு நாகர்சிறை இன்னும்
அந்தோ ! விடுத்திலை ; அதற்குவடி வேலோன்
வந்தான் அமர்செய ; வரங்கள்தரு நாளில்
மூன்(து)ஆன் உயர்த்தவன் மொழிந்தது மறந்தாய். 91

லைமை என்னு மது" என்றார். தாம் கூறுவது அரசனுக்கு உவப்புத் தருவதன் றுகி அவனுடைய சினத்துக்கு ஆளாக நேரும் காலத்திலும் நன்மையை உரைப்பவர் என்பார், "எந்நாளும்...சொன்னார்" என்றார். "தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும், வெம்மையைத் தாங்கி நீதி விடாது நின்றுரைக்கும் வீரர்" என்பது கம்பராமாயணம் - மந்திரப் படலம், 9.

88. வால்-தூய்மை. பயம்பின் பால் உற்று அவாம் மயிலை பற்றும் - பள் ளத்தினிடத்தே இருந்து மயிலை என்னும் சாதி மீனானது ஆசைப்பட்டு வாயி னாலே கவ்வுகின்ற. மிக்க உணவைப்போல் அமைந்த சிறிதாகிய பொருளை விரும் பித் தூண்டிலில் சிக்கி இறந்து படுவது போல என்க. மயிலை - ஒருவகைமீன்.

89. நந்தா - குறையாத. நாக உலகோரை - தேவரை. முந்தான கால மதில் - முன் காலத்தில். மொய்ம்பு - வலிமை. சிந்தா குலத்தினெடு - மனத் துயரத்தோடு. சிந்தினர்கள் - அழிந்து போனவர்கள். உரைப்ப - உதாரண மாகச் சொல்வதற்கு. உண்டோ, ஓ : எதிர்மறை.

90. புகழ் - உள்ளீப் புகழ்கின்ற ; புகழையுடைய எனலுமாம். ஈனம் - இழிவு. மகத்தின் கோன் - இந்திரன். மாநகர் - அமராவதி. ஊனம் - குறைவு.

91. நாகர் - தேவர்கள். அதற்கு - அச்சிறையை நீக்க ; அதற்கு வடி வேலோன் வந்தான் என்பது பிணிக்கு மருந்து வந்தது என்பது போல நின் றது. மூன்று வரங்கள் தரு நாளில்-முன்பு நீ செய்த தவத்திற்கு இரங்கி வரங் கள்.

பா-ம்—பாலுற்று லாமயிலை,

இக்காலம் நூறிஞெடும் எட்டுகம் இருந்(து)எம்
மெய்க்காசில் சத்தியில் விளிந்திடுதிர் என்ருன் ;
அக்காலம் உற்ற(து)இவண் அப்படியில் அன்ருே ?
மிக்கான தாரகனே வென்ற(து)உயர் வேலே. 92

மின்ஞரை வேதியரை மெய்க்குரவர் தம்மைப்
பொன்ஞ டரைப்பொறை பொருந்துமுனி வோரை
மன்ஞ ! சிறுர்தமை வருத்தியவர் அன்ருே ?
எந்நாளும் வெந்நரகில் எய்தியுழல் வாரே. 93

ஈண்டாகை யால்முருக ஞே(டு)அமர் இயற்ற
வேண்டா ;விண் ணோர்கள்சிறை விட்டிடுவை யாயின்
மீண்(டு)ஆ சறுங்கயிலே வெற்பினிடை நாகம்
பூண்டான் மகன்கடிது போயிடுவன் அன்றே. 94

இன்பான இப்படி இயற்றுகிலே யாகில்
கொன்பாவும் அம்பிகை குமாரன்நமை யெல்லாம்
துன்பாக வேல்கொடு தொலைத்திடுவன் என்றே
மின்பாவு சிங்கமுக வீரன்உரை செய்தான். 95

எவ்றீது சிங்கமுகன் இன்புற இசைப்ப
நன்றீது நன்றென நகைத்துநனி சீறித்
தன்றீதி லாததொரு தம்பிமுக நேரே
ஒன்றீது சூர்முதல் உரைத்திடுதல் உற்ருன். 96

கனே அருளிய காலத்தில். ஆன் உயர்த்தவன் - இடபக் கொடியை ஏந்திய சிவபெருமான். மொழிந்தது : "வீறுநம தானதொரு சத்தியல தும்மை வெல்லுமவர் யார்" (இந்நூல்—அசுரகாண்டம், 34 ஆம் செய்யுள் அடி) என்பதாம்.

92. எம் மெய்க் காசு இல் சத்தியின் - எம்மூடையஉண்மையான குற்ற மற்ற சத்தியினுலே. விளிந்திடுதிர்-இறப்பீர்கள். அக்காலம் - அச்சத்தியினுல் அழியுங்காலம். அப்படியில் அன்ருே - அந்த முறையினுல் அல்லவோ.

93. மின்ஞரை - பெண்கனே. குறவர் - ஆசாரியர். பொன்ஞடரை - தேவரை. பொறை - பொறுமை. மன்ஞ - அரசே : விளி.

94. ஆகையால் ஈண்டு என்க. மீண்டு - (நின்னேடு போர் புரியாமல்) திரும்பி. ஆசு அறும் - குற்றம் நீங்கிய. நாகம் பூண்டான் மகன் - சிவகுமாரன். கடிது - விரைவில்.

95. இன்பு ஆன இப்படி - இன்பத்தைத் தருவதற்குரிய தான இந்த முறையே. துன்பு ஆக - மரணத்துன்பம் விளையும்படி. மின் - ஒளி.

96. இன்பு உற - வருங்காலத்தில் இன்பம் உண்டாகவேண்டு மென்று.

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

இந்திரன் தனக்கும் பூதர்கள் தமக்கும்
இளஞ்சிறு பாலனே(டு) இமையவர் தமக்கும்
உந்துநீ நெஞ்சில் அஞ்சினை போலும்;
உமையொரு பாகனும் ஒப்பிலாக் கடவுள்
நந்தனிச் சத்தி வெல்லுமென் றதுவும்
நாள்முடி(வு) இழைத்ததும் நான்முன்பு கேளேன்;
புந்தியிற் புதிதோன்(று) உன்னியே உரைத்தாய்;
பொய்ம்மொழி சொல்லவும் வல்லையா யினையால். 97

அப்படி உரைத்தா னேனும்அக் கடவுள்
அளித்திடும் வரம்ஆர் அழித்திட வல்லார்?
மெய்ப்புறு சத்தி யழித்திடும் என்னில்
வேறதோ சத்தியும் விமலனும்? அதனால்
இப்பெரு வரங்கள் கொடுத்தவன் அழியான்
எண்ணில்நாள் அமரரை யான்சிறை செயக்கண்(டு)
ஒப்பில்மால் முதலோர் அஞ்சியே இருந்தார்;
ஒருசிறு பாலனே ஒழித்திட வல்லான்? 98

என்னவே குகனைப் பாலனென்(று) எண்ணி
இகழ்ந்துதன் னுயிரை இழந்திடு கின்ற
முன்னவன் இசைப்பப் பின்னவன் பின்னும்
முனியலை; ஒன்றில மொழிவனென்(று) உரைப்பான்;

ன்று: குறிப்பு மொழி. நகைத்து - கோபத்தினால் சிரித்து. தம்பி முகம் நேரே - தம்பியாகிய சிங்கமுகாசுரனின் முகத்தை நேரே பார்த்து. ஈது ஒன்று என்க. சூர்முதல் - சூரபன்மனாகிய அசுரர் தலைவன்.

97. நாள் முடிவு இழைத்ததும் - நமக்குரிய ஆயுளின் எல்லையை வரையறுத்ததும்; "இழைத்த நாளெல்லை கடவா" என்பது **நாலடியார்**. நான் முன்பு கேளேன் - (நீ சொல்லுகின்றதை) அக்காலத்தில் நான் கேட்டிலேன். வல்லையாயினை - ஆற்றல் உடையாய் ஆயினாய்.

98. மெய்ப்பு - உண்மை. சத்தியும் சிவமும் வேறுவரோ; விமலன் - பரிசுத்தன்; சிவன். சிவபிரானது சத்தி அழித்திடும் என்றால், சிவபிரானும் சத்தியும் வேறல்லர்; ஆகவே அருள் செய்த அவனே அதனை மாற்றி அழிப்பான் என்பது பொருந்தாது என்றான். எண் இல் நாள் - கணக்கற்ற நாட்கள். மால் முதலோர் - திருமால் முதலியவர்கள்.

99. இறந்திடுகின்ற: தூணிவுபற்றி எதிர்காலம் நிகழ்காலம் ஆயிற்று. முன்னவன் - தமையனாகிய சூரபன்மன். பின்னவன் - தம்பியாகிய சிங்க

பொன்னுல கமரர் தமைச்சிறை படுத்திப்
புவியினில் நீதி புரிந்திடா அதனைத்
தன்னிக ரான சங்கரன் அறிந்(து)உன்
றன்னைவந்(து) அடுவான் தன்னுளம் நினைந்தான். 99

இன்னல்தீர் வரங்கள் கொடுத்தயாம் அழிப்ப(து)
இயல்பல ; ஆதலால் இருமையே படைத்து
மன்னியே இருந்த சூரனைப் பிறர்க்கும்
வதைப்பரி தெனவே மனத்திடை நினைந்து
பொன்னுறு தனதாம் உருவமாம் ஒருசிர்ப்
புதல்வனுல் புகழுறப் பொருக்கென முடிக்கத்
தன்னுதல் விழியால் ஆறுமா முகத்தோர்
தனிப்பெருங் குமரனைத் தந்தனன் பரனே. 100

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

அற்றமில் உருவ மாகுவன் அருவம்
ஆகுவன் ; அருவுரு வகன்ற
பெற்றிய மாவன் ; மறைகளுந் தெரியாப்
பெரியவன் ; பெரியர்க்கும் பெரியான் ;
துற்றிடும் பொருள்கள் அனைத்துமாய் அலவாய்த்
தோன்றிய தனிப்பெருந் தோன்றல் ;
மற்றவன் றனைநீ பாலனென்(று) அறைந்தாய் ;
வல்லையே மாளுதி[1] மாதோ. 101

முகாசுரன். முனியகே - கோபங் கொள்ளாதே. இன்னம் ஒன்று மொழிவன் என்க. நீதி புரிந்திடா அதனை - நீதியைச் செய்யாமல் அநீதி செய்கின்றதை. அடுவான் - கொல்லும் பொருட்டு.

100. இன்னல் தீர் - துன்பத்தைப் போக்கும். இருமை - பெருமை. பொருக்கென முடிக்க - விரைவிலே சங்காரம் செய்ய. பரன் - சிவன்.

101. அற்றம் - முடிவு. 'உருவமாகுவன் அருவமாகுவன்' என்றதனுல் அருவுருவமாகுவன் என்பதையும் கொள்க. அருவம் - சிவம், சத்தி. நாதம், விந்து. உருவம்-பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசன். அருவுருவம் - சதாசிவம். அருவம்-வடிவில்லது ; நிட்களத் திருமேனி. உருவம்-வடிவுடையது ; சகளத் திருமேனி. அருவுருவம்-வடிவும் வடிவு இல்லதுமாயது ; சகள நிட்களத் திருமேனி. இம்மூத்திற வடிவங்களையும் பெருமான் ஆன்மாக்கள் வழிபடும் பொருட்டே, கொண்டருளினன் என்பதாம். துற்றிடும் - நுகர்கின்ற. வல்லை - விரைவில்.

பாடம்—1 வல்லையிங்கவனுல் மாளுதி.

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

ஆதலால் நீயும் நின்பெருங் கிளையும்
அன்புறு வளத்தோ(டு) அமர்ந்திட வேண்டின்
தீதிலா அமரர் சிறையினை விடுத்தல்
செய்யென வெய்யவன் சிந்தைமேற் சினமுற்(று)
ஊதையால் அலைப்புண்(டு) அங்கியால் சூடுண்(டு)
உயர்சர வணத்(து)அலை யுண்டபா லனையோ ?
சோதியென்(று) உரைத்தாய் ; பேதை!என் றிகழ்ந்து
சொல்லினன் ; வெவ்வுரைச் சூரனும் அவுணன். 102

மூற்றுணர் சிங்க முகத்தினன் நன்மை
மொழிந்ததற்(கு) இழிந்தோன் முனிந்துரைத் திடலும்
சற்றுநம் மொழியுட் கொண்டிலன் ; அந்தோ !
தலையினில் விதியையார் தவிர்த்திட வல்லார் ?
மற்றிவன் மடிதல் திண்ணமாம் அதன்முன்
மடிதலே கடனென மனத்திடை நினைத்துச்
சிற்றறி வுடையேன் சொற்றன பொறுத்தி ;
சேரலார் தமையடச் செல்குவன் என்றான். 103

என்றுவன் நிறல்கொள் மடங்கல்மா முகத்தோன்
இன்புற இசைப்ப இருந்திறற் சூரன்
நன்றுநன் றெனவே மகிழ்ந்தவன் றன்னை
நயமொடு புல்லிப் புகழ்ந்துநின் னகர்போய்

---

102. கிளையும் - சுற்றத்தாரும். வளத்தோடு அமர்ந்திடவேண்டின் - ஐசுவரியத்தோடு வாழ விரும்பினால். வெய்யவன் - சூரபன்மன். ஊதையால் - காற்றால். அங்கியால் சுடுண்டு - தீயால் தகிக்கப் பெற்று. சரவணம் - சரவணப் பொய்கை. அலையுண்ட - அலைந்த. சோதி - கடவுள்.

103. மூற்று உணர்-(முருகனது திருவவதாரம்) மூழுவதையும் உணர்ந்த. இழிந்தோன் - சூரபன்மன். முனிந்து - கோபித்து. திண்ணமாம் - உறுதியாகும். அதன் முன் மடிதலே - அவன் இறப்பதற்கு முன் நாம் இறத்தலே. சொற்றன பொறுத்தி - கூறிய வார்த்தைகளைப் பொறுப்பாயாக. சேரலார் தமை அட - பகைவர்களோடு போர் புரிய.

104. மடங்கல் மா முகத்தோன் - சிங்கமுகாசுரன். புல்லி - தழுவிக் கொண்டு. விளிப்பன்-(உன்னை) அழைப்பேன். தன்புரம் - தன் இராசதானி நகரம். புக்கு - அடைந்து. செலவுரைத்து - போகும்படியாக விடை கொடுத்து அனுப்பி விட்டு. உறையுள் சேர்ந்து - தன் இருக்கையுட் புகுந்து.

ஒன்றுதி ; குகன்ஈண் டடைந்திடில் விளிப்புன் ;
ஒல்லைமே வுதியென்(று) உவப்புடன் விடுப்பச்
சென்றுதன் புரம்புக்(கு) அமர்ந்தனன் ; எவரும்
செலவுரைத்(து) உறையுள் சேர்ந்துசூர் இருந்தான்.104

இன்னவா(று) அவுணர் தொழுங்கழற் கொடுஞ்சூர்
எழிலிவந்(து) எழிலினை(டு) இனிதுகண் படுக்கும்
பொன்னுலாம் புரிசை மகேந்திர புரியில்
புரிந்துவீற் றிருந்தது புகன்றனை மன்னே ;
மன்னுமால் அயன்முன் இமையவர் வணங்க
மடங்கலந் தவிசின்மேல் வனசமா ளிகைமேல்
அன்னம்வாழ் கழனிச் செந்தின்மா நகர்வாழ்
அறுமுகத்(து) இறைசெயல் அறிவுற அறைவாம். 105

ஆகச்செய்யுள்—458

மகேந்திர காண்டம்

முற்றிற்று

---

105. சூர் - சூரபன்மன். எழிலி - மேகம். புரிசை - மதில். இன்னவாறு புரிந்து என்க. மால் அயன் முன் - திருமால் பிரமன் முதலாகிய. மடங்கலந் தவிசு - சிங்காதனம். வனசமாளிகை - தாமரையாகிய மாளிகையில். செந்தில் மாநகரில் தவிசின்மேல் வாழும் அறுமுகத்து இறை என்க.

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

நான்காவது

யுத்த காண்டம்

—o—

முதலுட் பானுகோபன் யுத்தம்

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

மின்னிகர் சடிலத்(து) அவிர்மதி முடித்த
வித்தகன் மத்தக விழிவிழித் தாங்குப்
பொன்னுறும் அருணத் தடமலர் மிடைந்த
பொதும்பர்சூழ் உதயவான் பொருப்பின(து) உம்பர்
துன்னுசெங் கிரணத்(து) இரவிவந் தெழலும்
தோகையோர் மருங்குடைத் தோன்றல் முன்தோன்று
கன்னல்வில் தடக்கைக் கடவுள்மாண் டதுபோல்
க்துமென அழிந்தது காரிருட் கங்குல். 1

இவ்வகை உலகில் துணங்(கு)அறல் அகல
இரவியாம் ஒருவன்வந்(து) இருவிசும்பெழலும்
மொய்வளர் அவுணப் பேரிருள் மடிய
முருகனும் பரிதியும் முரணெடும் எழுந்து
செவ்வொளிக் கனகத் தேரின்மேற் புகுந்து
சேணியோர் வானுளோர் செறிந்துசூழ்ந் தேத்தப்
பௌவநீர் கடந்து சூரல்மூ தூரில்
பாங்குறு வடதிசைப் பாலடைந் தனனே. 2

---

1. சடிலத்து - சடையில். மத்தக விழி விழித்தாங்கு-நெற்றிக் கண்ணைத் திறந்து விழித்தது போல. பொன் - திருமகள். அருணத் தடமலர் - செந் தாமரைப்பூ. பொதும்பர் - சோலை. உம்பர் - மேலே. இரவி - சூரியன். இங்குச் சூரியனுக்கு இறைவனது நெற்றிக்கண் உவமை. தோன்றல் - சிவ பெருமான். கன்னல் வில் - கரும்பாகிய வில்லையுடைய. கடவுள் - மன்மதன். இரவுக்குக் காமன் உவமை. காமனது நிறம் கருமை என்க.

2. துணங்கு அறல் அகல - பிணங்கி நின்ற இருள் நீங்க. விசும்பு - ஆகாயம். பரிதி - சூரியன். முரண் - வலிமை. கனகம் - பொன் (மயமான). பௌவ நீர் - கடல். மூதூர் - மகேந்திரபுரி.

அங்கணவ் வமையத்'து) இமையவர் புனைவன்
ஆறுமா முகமுடை அண்ணல்தன் னருளால்
கொங்கலர் இருங்கர் மருங்குசூழ் ஏம
கூடமாம் பெயருடைக் கோனகர் குயிற்றச்
சங்கரன் மதலை கொடிநெடுந் தடந்தேர்
தணந்துசீர் மந்திரத்(து) அணைந்தது தன்னில்
பொங்கெழில் மடங்கல் சேகரத் திடையே
பொருந்திய அணையின்மேல் பொருந்திவீற் றிருந்தான்.3

(தரவு கொச்சகக் கலிப்பா)

வீறுகொண்ட தானையோடு மேன்மைகொண்ட வேலவன்
ஈறில்பா சறைத்தலத்தில் இந்தவா(று) இருப்பஈ(து)
ஊறிலாத சூரன்முன்னர் உற்றுநா ரதன்சொலச்
சீறிஇன்ன(து) ஒற்றரோடு செற்றமோடு சொற்றனன். 4

வாரிமன் னவற்பிடித்து வாரும்என்ன ஏகியே
கோரமோடு பற்றிமூற் கொணர்ந்திடச் சினந்துநீ
வீரமோடு மாறுகொண்டு வீறுகொண்ட தெவ்வரைச்
சேரஇங்கு விட்ட(து)என்ன செப்புகென்று செப்பினன். 5

அந்தவேலை வேலைமன்னன் அமரரோடு குமரவேள்
உந்துவானின் ஏகினன் ; உயர்ந்தபூதர் என்கணே

---

3. அங்கண் அவ்வமையத்து-அந்தச் சமயத்தில். கொங்கு - நறுமணம். ஏமகூடம் - கதிர்காமம் என்பர். ஏமகூடம் என்னும் பெயரையுடைய உத்தமமான நகரத்தை முருகக் கடவுளுக்காக இயற்ற என்க. குயிற்ற - செய்ய. தணந்து - நீங்கி. மந்திரத்து - கோயிலே. மடங்கல் சேகரம் - சிங்கத்தின் தலை.' அணை -சிங்காதனம்.

4. வீறு - வேறு ஒன்றற் கில்லாத சிறப்பு. தானை - சேனை. பாசறை - பகைவர்மேற் போர் செய்யச் சென்றவர்களிருக்கும் இடம். ஈறு - இச் செய்தியை. ஊறு இலாத - துன்ப மில்லாத. செற்றமோடு - கோபத்தோடு.

5. வாரி மன்னவன் – சமுத்திர ராசனே. கோரமோடு-கொடுமையுடன். மாறு கொண்டு - விரோத எண்ணம் கொண்டு. தெவ்வரை - பகைவரை. சேர - உன்னைக் கடந்து இங்கே வந்து அடையும்படியாக.

6. அந்தவேலை - அச் சமயத்தில். வேலை மன்னன் - சமுத்திர ராசன். வானின் ஏகினன் - ஆகாய வழியே வந்தான். மலங்கினேன் - மயங்கினேன். பந்தி கொண்ட - அணியணியாக வந்த. பரட்டினுக்கு அமைந்திலேன் - கணுக்கால் அளவுக்குக் கூட ஆழம் போதாமல் இருந்தேன்.

வந்திடக் கலங்கினேன் மலங்கினேன் வருந்தினேன் ;
பந்திகொண்ட பூதர்தம் பரட்டினுக்(கு) அமைந்திலேன். 6

ஏழையேன் தடுப்பதெங்ஙன் என்றுகூறி நின்றிடத்
தாழ்விலாத ஒற்றர்வந்து சண்முகக் குமாரவேள்
வாழுநம் பெரும்பதிக்கு வடதிசைக்கண் எய்தினன்
சூழ்பதாதி யோடும்என்று சொல்லஈது சொல்லினன். 7

இரவியைத் தகர்ந்துளாகீன இங்கழைத்திர் என்னலும்
பரவிஏகி ஒற்றர்சொற்ற பானுகோப கீனத்தரச்
சிரமொரைந்தன் மைந்தனோடு சேகீயோரை வென்றுநீ
விரைவில்இங்கு வருதிஎன்று விடைகொடுப்ப ஏகினன். 8

ஆங்குதன் மகீக்கணுற்(று) அடற்படைக் கலங்கள்கொண்(டு)
ஏங்குருத தாகீவெள்ளம் இருபதான ஆயிரம்
பாங்கினோடு பாங்கினில் பரந்(து)இரைந்து சூழவே
தீங்கிலாத விசயஆதி அனிகமன்னர் சேரவே. 9

கந்துகங்கள் முப்பதான ஆயிரங் கலந்ததோர்
சுந்தரஞ் செறிந்திலங்கு துய்யவையம் ஏறியே
வெந்திறல் பெருஞ்சமர்க்கு மேவுகின்ற வாறுகண்(டு)
உந்துநா ரதன்குகன்கண் ஒல்லைவந்து சொல்லினன். 10

எந்தையான கந்தவேள் இலங்குவீர வாகுவாம்
சுந்தரன் றகீனத்தெரிந்து சூரன்இவ் விடத்தியாம்
வந்தவா(று) உணர்ந்துதன் மகன்றகீனப் பதாதியோ(டு)
இந்தவேலை நம்மொடே செருத்தொடங்க ஏவினன். 11

---

7. நம் பெரும் பதிக்கு வடதிசைக்கண் சூழ் பதாதியோடும் எய்தினன் என்க. பதாதியோடு – காலாட் படைகளோடு : உபலட்சணத்தால் மற்றப் படைகளீயும் கொள்க.

8. இரவியைத் தகீர்ந்துளாகீ – பானுகோபகீ. சிரமொர் ஐந்தன் – சிவபெருமான். ஐந்து சிரம் – ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் ஐந்து சிரங்கள்.

9. தாகீ – படை. பரந்து இரைந்து – பரவி முழங்கி. விசயன் ஆதி – விசயன், நேமியன், மாயன் முதலியோர்.

10. கந்துகங்கள் – குதிரைகள். வையம் – தேர். சமர்க்கு – போருக்கு. உந்து – உயர்வு பொருந்திய. ஒல்லை வந்து – விரைவிலே வந்து.

11. எந்தையான – எம் ஐயனை. மகன்றகீ – இங்குப் பானுகோபகீ. இந்த வேலை – இப்போது. செரு – போர்.

சேனையான துன்றஇன்று சென்றுவென்றி யொன்றிலீ
ஊனமின்றி வருதியென்(று) உவப்பினே(டு) உரைத்தலும்
ஆனனங்கள் ஆறுகொண்ட அண்ணலேத் தணந்துபோய்த்
தூநலங்கொள் படைகள்கொண்டு துய்யவையம் ஏறினன். 12

சூந்தரங்கொள் எண்மரும் துலக்கமாம் இலக்கரும்
வெந்திறல்கொள் பத்துநூறு வெள்ளமான பூதரும்
தந்திரங்கொள் சூப்பிராதி தானைமன்ன ருங்குழீஇ
வந்துசூழ ஏகினன் மகிழ்ச்சிவீரவாகுவே. 13

தலைமைகொண்ட பாசறைத் தலத்தினைத் தணந்துபோய்
நிலைமைகொண்ட சூரனூரின் நீள்மதிற் புறத்துறத்
தொலைவில்பூத ருஞ்சினங்கொள் சூரன்மைந்தன் அனிகமும்
பலபடைக்க லஞ்சொரிந்(து) எதிர்ந்துபோர் பயின்றவே. 14

தெண்டிரைக்கு நேரெனத் திரண்டு(இ)ரண்டு சேனையும்
அண்டிஓதை செய்துநின்(று) அடுஞ்செருப் புரிந்திடச்
சண்டமுற்ற அவுணருஞ் சலந்தரித்த பூதரும்
மண்டுசோரி வாரிநேர மட்டிலார்கள் பட்டனர். 15

மேனலங்கொள் பூதர்தாம் வெகுண்டுசென்று மேவலார்
ஆனையோடும் ஆனதன்னை ஆளினோடும் ஆளினைச்
சேனையான தேரினோடு தேரைவாரி மோதலும்
ஊனமுற்ற அவுணர்தாம் உடைந்துவாடி ஓடினர். 16

---

12. சேனை யான - சேனைகள் ஆனவை. துன்ற - உடன் பொருந்த. வென்றியொன்றி - வெற்றி பெற்று. ஊனம் இன்றி - கேடில்லாமல். ஆனனங்கள் - திருமுகங்கள். வையம் - தேர்.

13. எண்மர் - வீரவாகு தேவருடைய தம்பிமார்கள். துலக்கம் - பிரகாசம். திறல் - வலிமை. தந்திரம் - சேனை. சுப்பிராதி தானை மன்னரும் - சுப்பிரன் முதலிய படைத்தலைவர்களும். குழீஇ - கூடி.

14. தணந்து - நீங்கி. தொலைவு இல் - தோல்வி அடையுந்தன்மை இல்லாத. அனிகம் - படை. வீரவாகுதேவரின் படையும் பானுகோபன் படையும் போர் செய்யலாயின.

15. தெண் திரைக்கு நேர் என - கடலுக்கு ஒப்பென்று சொல்லும்படியாக. அண்டி - நெருங்கி. ஓதை - ஒசை. சண்டம் - வேகம்; கொடுமையுமாம். சலம் - பகை; வெற்றியுமாம். சோரி - இரத்தம். வாரி நேர - கடலைப் போலப் பெருகும்படி. மட்டிலார்கள் - கணக்கில்லாதவர்கள்.

16. மேல் நலம் - மேன்மையான நன்மை. மேவலார் - பகைவருடைய. உடைந்து - தோற்று. வாடி - மனந்தளர்ச்சியுற்று.

அற்றவேலை அவுணர்தம்மில் அனலி என்னு மன்னவன்
செற்றமோடு வந்தெதிர்ந்து திலீப பூதர்மேல்
வெற்றிகொண்ட கணைகள்சிந்த வந்திறுத்துகொள் பூதரூ(டு)
உற்றசிங்கன் முனிவினோடும் ஒல்லைசென்று எதிர்ந்தனன்.

மிண்டுகொண்ட அனலிதோளில் விரவினின்ற புரவியைத்
தண்டுகொண்டு மோதலுந் தளர்ந்(து)இறப்ப வெய்யவன்
கண்டுகோல் சொரிந்திடக் கனல்(று)அவன்றன் வையமூற்(று)
அண்டலன்கை விற்பறித்(து) அடற்கொள்சிங்கன் வீசினன். 18

அற்றமற்ற சிங்கன்மீதில் அனலிதண்டின் மோதலும்
வெற்றிகொண்ட சிங்கன்அங்கண் வெய்யன்மார் படித்(து)அவற்
பற்றினின்று சுற்றிநற் படித்தலத்(து) அடித்திடத்
தற்றுகின்ற அவுணரூடு சண்டன்ஈது கண்டனன். 19

கண்டசண்டன் அடுவன்என்று கழறும்வேலை சிங்கன்அவ்
வண்டலன்றன் வையமூற்(று) அவன்தடம் புயத்தின்மேல்
ஒண்டிறல்கொள் கதையின்மோத அவனுமுந்து சிங்கன்மேல்
தண்டின்மோத இருவரும் தளர்ச்சியெய்தி வீழ்ந்தனர். 20

மற்றிவ்வேலை அவுணர்தம்மில் மாயனோடு பூதரில்
செற்றமுற்ற நீலனை நீலன்அங்(கு) எதிர்ந்துநீள்
உற்றதண்ட முந்தமாயன் உந்துமார்பில் வந்துபட்(டு)
இற்றுளான் எனக்கலங்கி இந்தவா(று) இயற்றுவான். 21

நீலன்மீது சூலமொன்று நீசன்விட்டிடப்படச்
சாலவே வருந்தினின்று தக்கமாயன் முன்புபோய்க்

---

17. அற்ற வேலை = தோற்றோடும் சமயத்தில். அனலி என்னும் அசுரனும் சிங்கன் என்னும் பூதத்தலைவனும் போர் புரிந்தனர்.

18. மிண்டு - வலிமை. தண்டு - கதாயுதம். வெய்யவன் - அனலி என்ற அசுரன். கோல் - அம்பை. கனன்று - கோபித்து. அவன் தன் - அனலி என் பவனுடைய. வையம் - தேரை. அண்டலன் - பகைவனது ; அனலியது.

19. அற்றம் - சோர்வு. தண்டின் - கதாயுதத்தால். மார்பு அடித்து அவன் பற்றி னின்று என்க. படித்தலத்து - பூமியின்மேல். தற்றுகின்ற - சூழ்ந்து நிற்கின்ற.

20. அடுவன் - கொல்லுவேன். கழறும்வேலை - சொல்லும்போது. அவ் வண்டலன் - அப்பகைவன் ; சண்டன்.

21. செற்றம் - கோபம். இற்றுளான் என - இறந்தான் என்னும்படி யாக. மாயன் என்னும் அசுரனும் நீலன் என்ற சிலன் என்னும் பூதத்தலை வனும் போர் புரிந்தனர்.

கோலமார்பின் மீதுபாணி கொண்டுமோதி அண்டர்தம்
காலனைப் பிடித்(து)அவன் களத்தினில் கறித்தனன். 22

கண்டமீது விண்டிடக் கடித்(து)இரத்தம் உண்(டு)உயிர்
கொண்டபோது சண்டனோடு கோதில்சிங்கன் அங்கெழுந்(து)
ஒண்டிறல்கொள் தண்டுகொண்(டு) உருத்தெழுந்து சிங்கன்அவ்
வண்டலன் கவுட்கரத்(து) அடித்தனன் முடித்தனன். 23

அன்னகாலை அவுணர்தம்மில் அசமுகத்தன் அணுகவே
மன்னுகின்ற பூதர்தம்மில் மதுஎதிர்க்க வஞ்சகன்
மின்னுனைச் சரங்கள்சிந்த வெய்யன்வைய மீதுபோய்
ஒன்னலன் கலங்கவேலை ஓதைபோல் ஒலித்தனன். 24

ஆர்த்தபோதில் அசமுகத்தன் அயர்வதாக அன்னதைப்
பார்த்துவீரன் அல்லை;உய்ந்து போகெனப் பகர்ந்துநீள்
சீர்த்திகொண்ட மண்ணிடைத் திரும்பவல்லை நில்லெனா
வார்த்தைபேசி வந்தெதிர்ந்து மறிமுகத்தன் இதுசெய்வான். 25

மையிலாத பூதன்மீது வன்சரம் பொழிந்திடக்
கையினில் விலக்கல்செய்து கையன்முன்பு சென்(று)அவன்
கொய்யுனைச் சகட்டினைக் கொதித்(து)எடுத்து வேலையில்
துய்யன்வீச வையமீது துண்ணெனக் குதித்தனன். 26

---

22. நீசன் - நீசனுடைய மாயன். சாலவே - மிகவும். பாணிகொண்டு - கையால். அண்டர் தம் காலன் - தேவர்களுக்கு யமனைப் போன்ற மாயன். களத்தினில் கறித்தனன் - கழுத்திலே கடித்தான்.

23. விண்டிட - பிளவுபட. கழுத்துப் பிளவுபடும்படியாகக் கடித்து என்க. தண்டு - கதாயுதம். உருத்து - கோபித்து. அண்டலன் - பகைவனது. கவுள் கரத்து அடித்தனன் முடித்தனன் - தாடையில் தன்கையால் அடித்துக் கொன்றான்.

24. அசமுகன் என்னும் அசுரனும் மது என்னும் பூதத்தலைவனும் எதிர்த்துப் போரிட்டனர். அசமுகன் - ஆட்டு முகமுள்ளவன். மின் - ஒளியுள்ள. நுனை - கூர்மை. வெய்யன் வையம் மீது - அசமுகனது தேரின்மேல். வேலை ஓதைபோல் - கடல் ஒலிபோல்.

25. அயர்வதாக - மூர்ச்சையடைய. உய்ந்து போக - நீ பிழைத்துப் போவாயாக. தன் முழக்கத்தைக்கேட்ட மாத்திரத்தில் பயந்து மூர்ச்சையான அசமுகனைக் கொல்லாது மது என்பவன் விடுத்தான். இது தழிஞ்சி என்னும் புறத்துறை. மறிமுகத்தன் - அசமுகன்.

26. மை - குற்றம். கையன் - அசமுகன். கொய் உளைச் சகட்டினை - கத்தரிகையால் மட்டஞ் செய்த மயிரையுடைய குதிரைகளைப் பூட்டியதேரை.

குதித்துவந்து பூதன்முன்பு கூடிமற் றெழில்செயப்
பதத்தினுல் உரத்தொ(டு)அம் பரத்தின்மீ(து) எறிந்திடக்
கதித்தபூவில் மேவியே களங்கமற்ற மதுவின்மேற்
கொதித்துமாயை யால்மறைந்து கொடியநேமி விட்டனன். 27

தந்திரங்கொள் மதுவின்மீது தகர்முகத்தன் விட்டிடும்
வெந்திறல்கொள் திகிரிதான் விரைந்துசென்று பூதன்அங்(கு)
உந்துகின்ற படையிலாமல் உறுதலில் திரும்பியே
வந்துதீயன் முடிதடிந்து மாலிடத்(து) அடைந்ததே. 28

ஆயகாலை அவுணர்மன்னர் அனிகமோடும் அணுகலால்
ஏயபூத ருடையவே இலக்கர்மேவு தண்டகன்
போயெதிர்ந்து பல்லவம் பொழிந்தழிப்ப ஈதெலாம்
தீயசூரன் மாமகன் தெரிந்தெதிர்ந்து வந்தனன். 29

வந்தெதிர்ந்த குறளினோர் மடிந்(து)உடைந் திடச்சரம்
சிந்திமுந்தி வந்திடச் சினத்தினோடும் உக்கிரன்
உந்துசூரன் மைந்தன்முன்னர் உற்(று)அவன்ற னுதுதேர்
அந்தரத்தின் மீதுபோக அங்கெடுத்(து) எறிந்தனன். 30

தண்ணுதேரி னோடுபானு நாடுமட்டும் ஏகியே
மண்ணின்மேல் விழுந்துசென்று வன்றிறல்கொள் உக்கிரன்

கொய்யுளை - குதிரை: அன்மொழித்தொகை. கொதித்து - கோபங்கொண்டு, வேலையில் - கடலில். துய்யன் - மது என்னும் பூதத்தலைவன். வையம் மீது - பூமியின் மேல். குதித்தனன் - குதித்தவன் அசமுகன்.

27. மல் தொழில் - மல் யுத்தத்தை. கதித்த - மேலான. பூவில் - பூமியில். நேமி - சக்கராயுதத்தை. மது என்பவன் அசமுகனைக் காலால் வலிமையோடு எடுத்து ஆகாசத்தில் வீசி எறிந்தான்.

28. தந்திரங் கொள் - சேனைகளைத் துணையாகக் கொண்ட. தகர் - ஆடு. தகர் முகத்தன் - அசமுகன். திகிரி - சக்கராயுதம். உந்துகின்ற - ஏவுகின்ற. நீராயுத பாணிமேல் சக்கராயுதம் ஏவியமையின் அவனை ஒன்றும் செய்யாமல் மீண்டு தன்னை விட்ட அசமுகனது தலையையே அறுத்துவிட்டது என்க. தீயன் - அசமுகன். முடிதடிந்து - தலையை அறுத்து. மாலிடத்து - திருமாலிடம்.

29. அனிகம் - சேனை. உடையவே - தோல்வி அடைய. இலக்கர் மேவு தண்டகன் - லக்ஷவீரர்கள் கூட்டத்தில் ஒருவனாக இருந்த தண்டகன் என்பவன். பல்லவம் - அம்புகளை. சூரன் மாமகன் - பானுகோபன்.

30. குறளினோர் - பூதங்கள். சரம் சிந்தி - அம்புகளை எய்து. உக்கிரன் - ஒரு பூதத்தலைவன். அந்தரத்தின் மீது - ஆகாசத்தில்.

திண்ணமுற்ற அங்கமீது செங்கையால் அடித்துநீள்
விண்ணின்மீ(து) எடுத்தெறிந்து வேறுதேரில் ஏறினன். 31

காசிலேழு லோகமுங் கடந்து பின்னர் உக்கிரன்
வீசுசிர்கொள் படியின்மேல் விழுந்தனன் கிடந்தனன் ;
ஏசிலாத தண்டிஃ டிரும்பி ஞகி ஏனையோர்
பூசலான வெந்தொழில் புரிந்(து)இரிந்து போயினர். 32

சதுகண்(டு) இலக்கர்வந்(து) எதிர்ந்துகோல் சொரிந்(து)அவன்
திதுகொண்ட தேரினைச் சிதைப்பவேறு தேரின்மேல்
ஊதைபோல வாவினின்(று) உறுஞ்சரங்கள் கோடிவிட்(டு)
ஏதமற்ற வீரர்வில் இலக்கமுந் துணித்தனன். 33

விற்றுணித்(து) அளப்பில்வாளி வீரர்மேல் அழுத்தலும்
மற்றுரே ரிலாஇலக்கர் வாடியஞ்சி ஓடினர் ;
உற்றவிச் செயற்றெரிந்(து) உரங்கொள்வீர கோளரி
செற்றமோடும் எல்தகாந்த தியன்முன்பு வந்தனன். 34

வந்தளப்பில் கோல்சொரிந்து வஞ்சன்விட்ட கோலெலாம்
சிந்திஆயி ரஞ்சரஞ் செலுத்திவெய்யன் மார்பையங்(கு)
உந்துசா ளரம்படுத்த உள்ளநொந்து மாயவன்
வெந்திறல் படைக்கலத்தை வீரன்மீது விசினன். 35

வீசலுற்ற படைவிரைந்து மேனியுட் பொருந்தலும்
மாசிலாத வீரன்உள் மயங்கியே வீழ்ந்தனன் ;

---

31. பானு நாடுமட்டும் - சூரிய மண்டலம் வரைக்கும். அங்கமீது - உடலின் மேல்.

32. காசு இல் - குற்றம் இல்லாத. படியின்மேல் - பூமியின் மேல், தண்டி, பிணகி - இவர்கள் பூத கணத்தலைவர்கள். பூசல் - போர்.

33. கோல் சொரிந்து - அம்புகளே மிகுதியாக விட்டு. அவன் - பானுகோபனது. ஊதைபோல வாவி - காற்றைப் போலத் தாவி. ஏதம் அற்ற - துன்பமற்ற. லக்ஷ வீரருடைய விற்கள் லக்ஷத்தையும் அறுத்தான் என்க.

34. துணித்து - அறுத்து. அளப்பு இல் வாளி - கணக்கில்லாத அம்புகளை. உரம் - வலிமை. வீரகோளரி – வீரவாகு தேவர் தம்பிகளில் ஒருவர். எல் - சூரியன். எல் தகாந்த தியன் - பானுகோபன்.

35. வீரகோளரி அம்பால் எய்து சன்னல் துவாரம்போலப் பானுகோபன் மார்பைத் துளைக்க என்க. வந்த அளப்பில் – வந்த வீரகோளரி அளவிலாத. வந்த + அளப்பில் = வந்தளப்பில். சாளரம் - பலகணி ; சன்னல். மாயவன் படைக்கலம் – நாராயணாஸ்திரம். வீரன் - வீரகோளரி.

ஏசில்வீர பானுவன்(து) எதிர்ந்துவெய்யன் வையம்உற்(று)
ஓசைநாணி வீற்பறித்(து) ஒடித்தெறிந்த எல்லையின். 36

தூயவீரன் ஆகமீது சோரிநீர் குதித்திட
மாயவஞ்சன் வாளினுல் மனஞ்சினந்து குத்தலும்
தீயன்மீ தணிந்தவச் சிரக்கவசம் அற்றிட
ஓய்வில்வீர பானுவும் உரத்துவாள் செலுத்தினுன். 37

சூரன்மைந்தன் உட்சினந்து தூயன்நெற்றி குத்தலும்
வீரபானு வீழவே வெகுண்டுவீர ராக்கதன்
கோரமோடு வந்தெதிர்ந்து கோல்கள்ஆ யிரங்கள்தூய்
வாரமோடும் அவுணன் இட்ட மவுலிஅங்(கு) அறுத்தனன். 38

வேதன்முன் கொடுத்தவேலை வெய்யன்விட் டிடப்படப்
போதநொந்(து) அயர்ந்தனன் : பொருந்திமற்றை ஐவரும்
தீதினு ணெடும்தனுச் செருப்புரிந்(து) உடைந்திடக்
காதல்வீர வாகுஈது கண்டுசென்(று) எதிர்ந்தனன். 39

தீதில்வீர வாகுவைத் தெரிந்(து)எரிந்து தீயவன்
வேதன் அல்லை ; மாலும்அல்லை ; வேலினுனும் அல்லை ; ஓர்
தூதன்நீயெ னுடுபோர் தொடங்கவல்லை கொல்லென
மாதிறல் பரித்(து)உயர்ந்த வாகுவீது கூறுவான். 40

---

36. வீரன் - வீரகோளரி. - வீரபானு - வீரமார்த்தாண்டன் ; இவன் வீரவாகுதேவர் தம்பிமார்களில் ஒருவன். வெய்யன் வையம் உற்று - பானுகோபனது தேரில் தாவி. ஓசையையுடைய நாணியோடு கூடிய வில்லைப் பறித்து என்க.

37. வீரன் - வீரமார்த்தாண்டன். சோரி நீர் - இரத்தம். வாளினுல் குத்தலும் என்க. தீயன் – பானுகோபன் உரத்து (பானுகோபனது) மார்பில்.

38. பானுகோபன் வீரமார்த்தாண்டன் நெற்றியிலே குத்தினுன் என்க. தூயனுகிய வீரபானு என்க. வீரராக்கதன் - இவன் வீரவாகுதேவர் தம்பிமார்களில் ஒருவன். தூய் - தூவி. வாரம் - விருப்பத்தோடு. அவுணன் - இங்குப் பானுகோபன். மவுலி – கிரீடத்தை.

39. தேவன் - பிரமதேவன். வெய்யன் - பானுகோபன். போத நொந்து அயர்ந்தனன் - மிகவும் துன்புற்று மூர்ச்சை அடைந்தான். மற்றை ஐவர் - வீராக்தகன், வீரமகேச்சுரன், வீரதீரன், வீரமகேந்திரன், வீரபுரந்தரன் என்போர். தனுச் செருப்புரிந்து - வில் யுத்தம் செய்து. உடைந்திட - தேரால் வியடைய.

40. எரிந்து - சீறி. வேதன் அல்லை - நீ பிரமனும் அல்லை. வேலினுனும் - முருகனும். வல்லைகொல் - வல்லவனே. பரித்து - தாங்கி.

வீரம்வீரர் சிறிதுமே விளம்புவார்கொ லோ ?எனச்
சூரன்மைந்தன் முனிவுகொண்டு சோனைமாரி மானவெங்
கோரவாளி தூவலுங் குவட்டைவென்ற மொய்ம்பனும்
ஏருலாவு கணைசொரிந்(து) இருஞ்செருப் புரிந்தனன். 41

மண்ணிலோடும் ; எட்டதான மாதிரத்தி லோடும் ; நீள்
விண்ணிலோடும் ; நீலவேலை மீதிலோடும் ; நேமியின்
கண்ணிலோடும் ; அண்டமுன்பு கடிதிலோடும் ; மீளுமால் ;
எண்ணிலாத வன்மைகொண்ட இருவர்ஏறும் இரதமே. 42

சூரன்மைந்தன் விடுசரங்கள் துய்யவன் தடுத்திடும் ;
வீரவாகு விடுசரங்கள் வெய்யவன் தடுத்திடும் ;
ஆரும்அஞ்ச இந்தவா(று) அருஞ்சரம் பொழிந்துநீள்
திரமேவும் இருவருஞ் செருப்புரிந்(து) உலாவினர். 43

வெந்திறல்கொள் வீரன்விட்ட விசிகமாரி சிந்திவள்
கந்தவாகை வாகுவின் கரத்துவில்லை வல்லைஅங்(கு)
அந்தமற்ற சூரன்மைந்தன் ஆயிரஞ் சரங்களால்
சிந்தவே துணிப்பவீரன் இந்தவாறு செய்குவான். 44

பின்னுமோர் நெடுந்தனுப் பிடித்(து)ஓரா யிரஞ்சரம்
துன்னவே விடுத்தவன் துலங்குவில் துணித்தபோ(து)
அன்னவெய்யன் வேறுவிற்கொ(டு) ஆயிரஞ் சரங்கள்தாம்
மன்னிரும் புகழ்ச்சிவீர வாகுமேல் விடுத்தனன். 45

---

41. வீரர் தம் வீரத்தைத் தாமே சொல்லுவார்களா ? சொல்லார்கள் என்க. விளம்புவார் கொலோ, ஓ : எதிர்மறை. சோனை மாரிமான - பெருமழையை ஒப்ப. கோரவாளி தூவலும் – கொடிய அம்புகளை விடவே. மொய்ம்பன் - தோளை உடையவன் ; வீரவாகுதேவர். இருஞ் செரு - பெரிய போரை.

42. மாதிரத்தில் - திசைகளில். நீல வேலைமீதில் - கரிய கடலில். நேமியின்கண் - சக்கரவாள கிரியின்மேல். அண்ட முன்பு - அண்டகடாகத்தின் மீது. மீளும் - மறுபடியும் திரும்பி வரும்.

43. துய்யவன் - வீரவாகுதேவர். வெய்யவன் - பானுகோபன். திரம் - மனத்துணிவு. செரு - போர்.

44. விசிக மாரி - அம்பு மழை. சிந்தி – அழித்து. வன் கந்த வாகை வாகுவின் - மிக மணம் பொருந்திய வாகைமாலையை அணிந்த வீரவாகுதேவரது. அந்தம் அற்ற - இறுதி இல்லாத.

45. தனு - வில்லை. துன்னவே – பொருந்தும்படி. மன் - நிலையான. வீரவாகுதேவர் பானுகோபனது வில்லை அறுத்தார் என்க.

விட்டபோது வீரவாகு வெஞ்சரங்கள் ஏழினுல்
ஓட்டலன்றன் மௌலிதள்ளி ஒல்லபத்து நூறுகோல்
தொட்டுவெய்யன் அரணமும் துணித்திடத் துலங்கிய
மட்டில்சீர்கொள் பரிதிகண்டு மண்டும் ஓகை கொண்டனன். 46

கோரமான ஆயிரங் கொடும்பெருஞ் சரங்கள்தாம்
வீரவாகு நெற்றிமீது வெய்யன்மைந்தன் எய்யவே
சோரியுண்(டு) அழுந்திடத் துலங்குசெங் கரத்தினுல்
ஈரும்அம் பிணைப்பறித்(து) எறிந்துவீரன் இதுசெய்வான். 47

சித்திரங்கொள் பானுவைச் செயிர்த்தவீறு சேவகன்
வத்திரத்தில் ஆயிரம் வயங்கொள்மார்பில் ஆயிரம்
மெத்துதோளில் ஆயிரம் விறற்கரத்தில் ஆயிரம்
அத்திரங்கள் ஒல்லைசென்(று) அழுந்துறத் துரந்தனன். 48

கந்தன்எந்தை இளவல்விட்ட கடியவாளி கொடியவன்
வெந்திறல்கொள் அங்கமெங்கும் விரவியங்(கு) அழுந்தலால்
வந்துவந்து சோரிமூட வாடிநொந்து கந்துகப்
பந்திகொண்ட தேரின்மீது பானுகோபன் நின்றனன். 49

அன்னபோதில் ஈதுகண்(டு)அ வன்றனுது சேணியோர்
மன்னுவீர வாகுமுன்பு வந்தெதிர்ந்து போர்செயத்
துன்னுவிற்கொள் வாளிகொண்டு துற்றசேனை முற்றவும்
சின்னபின்ன மாகவே செறுத்துநின்(று) அறுத்தனன். 50

பின்புமுன் புடைந்(து)இறந்த பெருகுபூதர் யாவரும்
துன்பிலா இலக்கருந் துலக்கமான எண்மரும்

---

46. ஓட்டலன் - பானுகோபன். அரணமும் - கவசத்தையும். பரிதி கண்டு - சூரியன் கண்டு. மண்டும் - மிகுந்த. ஓகை - மகிழ்ச்சி. தன்னைப் பிணித்த பகைஞன் ஆதலின் அவன் சோர்வு கண்டு சூரியன் மகிழ்ந்தான் என்க.

47. சோரியுண்டு - இரத்தத்தைக் குடித்து. ஈரும் - பிளக்கின்ற.

48. சித்திரம் - அழகு. பானுவை - சூரியனை. செயிர்த்த - கோபித்த. வத்திரத்தில் – முகத்தில். வய - வலி. துரந்தனன் - எய்தான்.

49. எந்தை இளவல் – வீரவாகுதேவர். கடியவாளி – வேகமாகிய அம்பு. சோரி – இரத்தம். கந்துகப் பந்தி - குதிரை வரிசை.

50. துன்னு – பொருந்திய. துற்ற - நெருங்கிய. செறுத்து - அழித்து.

51. முன்பு உடைந்து – முன்னே தோல்வியடைந்து. ஈடு - பெருமை. இறந்துபட்டபூதர்களும், எஞ்சி வீரர்களும், எட்டு வீரர்களும் மீண்டும் உயிர் பெற்று எழுந்து வந்தனர் என்க.

இன்பமா மகிழ்ச்சியோடும் ஈடினேடு கூடியே
மன்பெரும் புகழ்ச்சிவீர வாகுவின்கண் ஏகினர். 51

துற்றசோபம் அற்றபின்னர் சூரன்மைந்தன் வீரன்நேர்
செற்றமோ(டு) எதிர்ந்துநூறு நூறுகோல் செலுத்தியே
வெற்றிமொய்ம்பன் ஏறுகின்ற வீறுதேரை நூறலும்
மற்றுமோர் சகட்டில்வீர வாகுவல்லி வாவினன். 52

வாவிநூறு நூறுகோலில் வஞ்சகன்கை வில்லுடன்
மேவுகின்ற தேரழிப்ப வேறுதேரில் ஏறிவெம்
பாவிமற்று மோர்தனுப் பரித்(து)இரா யிரஞ்சரம்
தூவிவீரன் ஆகமீது தோயஅங்(கு) அழுத்தினன். 53

ஆகமீது பகழிவந்(து) அழுந்தவீர வாகுவும்
சோகம்அங்(கு) உணர்ந்(து)இரேழு துங்கவாளி தூவியே
மாகர்தெவ்வன் வில்லொடித்து வாளிஆ யிரங்கள்தாம்
ஏகவிட்டு வெய்யன்ஏறும் இரதமுங் கெடுத்தனன். 54

மற்றுநூறு வாளிகொண்டு மார்பைவாயில் செய்யஓர்
வெற்றிவையம் வெய்யன்ஏற வீரவீரன் விசிகமங்(கு)
உற்றஆ யிரந்துரந்(து) உரந்திறந்த நெறியினுல்
துற்றிடுஞ்சி லீமுகங்கொள் தூணியங்(கு) அறுத்தனன். 55

இந்தவாறு கண்டுவில்லின் இவனேவெல்வ(து) அரிதெனு
முந்துபாணு வைத்தலேந்த மொய்ம்பன்வீர மொய்ம்புசேர்

---

52. துற்றசோபம் – அடைந்த சோர்வு. நூறு நூறுகோல்-பதினாயிரம் அம்புகள். வெற்றி மொய்ம்பன் - வீரவாகுதேவர். சகட்டில் - தேரில். வாவினன் - ஏறினன்.

53. வஞ்சகன், பாவி - பானுகோபன். தனுப்பரித்து - வில்லேத்தாங்கி. வீரன் - வீரவாகு தேவர். அங்கு; அசை.

54. ஆகம் - திருமேனி. சோகம் - சோர்வு. சுர்ஏழு - பதினேன்கு. மாகர் தெவ்வன் - தேவருக்குப் பகைவனுகிய பானுகோபன்.

55. வாயில் செய்ய - துளைக்க. வையம் - தேர். விசிகம் - அம்பு. உரம் திறந்த நெறியினுல் - மார்பிலே உண்டான துவாரத்தின் வழியே. துற்றிடும் - நெருங்கிச்செல்லும். சிலீமுகங்கொள் தூணி - அம்பருத்தூணி; சிலீமுகம் - அம்பு. பானுகோபனது மார்பிலே துவாரஞ்செய்து அதன் வழியே அம்பைச்செலுத்தி அவனது முதுகிலுள்ள அம்பருத்தூணியை வீரவாகு தேவர் அறுத்தார் என்க.

56. பானுகோபன் மோகவேற் படையினே வீட்டான் என்க. முந்து - முன்னே. பானுவைத் தாங்கிய மொய்ம்பன் - பானுகோபன். வீரமொய்ம்பு

அந்தவீர ஞதியூான ஆரும்மோக மாகவே
வெந்திறல்கொள் மோகமான வேல்விடுத்து நின்றனன். 56

வந்தவந்த வேலினுன் மயங்கிவீறு பூதரும்
மூந்துசீர் இலக்கரும்.முரண்பொருந்தும் எண்மரும்
கந்தன்ஏவு தூதனுந் தளர்ந்துகந்தின் நிற்றலும்
அந்தமற்ற கணிகள்சிந்தி அவர்உருத் துளைத்தனன். 57

ஆயகாலை முருகன்ஈ தறிந்(து)அமோக வேல்விடுத்(து)
ஏயுமோக வேல்அழிப்ப ஏருலாவு வீரரோ(டு)
ஓய்வில்வென்றி மொய்ம்பனங்(கு) உளந்தெளிந்து தானவன்
சேயின்மீதில் ஆநிவேல் செலுத்துமா(று) எடுத்தனன். 58

கண்ணுதற் பரன்படைக் கலந்தொடுக்கின் மாய்வுறப்
பண்ணுமந்த உந்துவேல் பரித்துவந்தி லேன்எனு
எண்ணிமாய மாய்ஒளித்(து) இருக்கைவெய்யன் ஏகலும்
விண்ணின்நின்(று)அ கன்(று)அருக்கன் மேல்கடற் படிந்தனன். 59

நண்ணலன் கரந்துபோன செய்கைதன்னை நாடியே
திண்ணமுற்ற தண்டமோடு திண்டிறல் புயத்தினேன்
துண்ணெனத் திரும்பியே துலங்குவெற்(பு) எறிந்தவேற்
பண்ணவன்றன் முன்பணிந்து பாசறைக்கண் மேவினுன். 60

சேர் அந்த வீரன் - வீரவாகுதேவர். மோகமான வேல் - மோகவேற் படை.

57. வீறு - வீறுகொண்ட -- வலிமையோடு எழுந்த. முரண் - வலிமை. தூதனும் - வீரவாகுதேவரும். கந்தின் - கம்பத்தைப்போல. உரு -- உடம்பை.

58. அமோக வேலை முருகக்கடவுள் விட்டு மோகவேலைத் துணித்தார் என்க. வென்றி மொய்ம்பன் - வீரவாகுதேவர். தானவன் சேய் - பானு கோபன். ஆநி வேல் - சிவபிரானது ஆயுதம்: சிவப் படைக்கலம். (வேல், படைக்கலத்தின் பொதுப் பெயர்.)

59. சிவபெருமானது அஸ்திரத்தை இவன் தொடுத்தால் அது நம்மைக் கொல்லும்; அதை மாற்றுவதற்கு நாம் சிவபிரான் படையைக் கொண்டு வரவில்லையே என்று பானுகோபன் எண்ணி மாயமாய் ஒளித்தான். பரித்து - தாங்கி. இருக்கை - தன் இருப்பிடத்திற்கு. அருக்கன் - சூரியன்.

60. பானுகோபன் மறைந்ததை உணர்ந்து வீரவாகுதேவரும் பாச றைக்குச் சென்றார். நண்ணலன் - பகைவன்; பானுகோபன். கரந்து - மறைந்து. தண்டமோடு - சேனையோடு. புயத்தினேன் - வீரவாகுதேவர். வெற்பு - கிரவுஞ்சமலை. வேற் பண்ணவன் - முருகக்கடவுள். பாசறை - பாடிவீடு - பகைமேற் சென்றோர் உறைவிடம்; இங்கு ஏமகூடம்.

(கலி தீலைத்துறை)

இந்த வா(று) இவண் நின்றிட இரவியம் பகைஞன்
புந்தி தன்னிடை அளவிலாப் பெருந்துயர் பொருந்த
நொந்தி ருந்தனன் ; இவையெலாம் ஓற்றர்போய் நுவல
அந்த வேலையில் அறிந்தனன் சூரனும் அவுணன். 61

அறிந்த தானவன் நாகீயான் படையொடும் அணுகிச்
செறிந்த சேனையும் பெருங்கிர வுஞ்சமாஞ் சிலம்பை
எறிந்த வேற்படைக் குமரனுஞ் சமரில்வந்(து) எதிர்ந்து
மறிந்தி டும்படி பொருவன்என்(று) உன்னியே வதிந்தான். 62

வண்டு லாவரும் வண்துழாய் மிலைச்சிய மௌலித்
திண்டி றல்பெறும் அரியுரத்(து) இலங்கிய திருப்போல்
எண்ட விர்ந்தவெண் சிகரச் சாகரத் திடையே
சண்ட வெங்கதிர் பரப்பிவந்(து) எழுந்தனன் தபனன். 63

கந்த மாமலர்ப் பொதும்பர்சூழ் கமலமா நகர்வாழ்
எந்தை ஞானசம் பந்ததே சிகன்றனை எதிர்ந்தார்
பந்த ஆணவப் படலம்வின் டிரிந்திடும் படிபோல்
அந்த ரம்புவி மறைத்தபே ரிருள்அகன் றதுவே. 64

---

61. இரவி அம் பகைஞன் – பானுகோபன். நொந்து - வருந்தி. நுவல - சூரபன்மனுக்குச் சொல்ல.

62. சூரபன்மன், நாகீக்கு நான் போர் செய்வேன் என்று எண்ணி இருந்தனன் என்க. தானவன் - சூரபன்மன். மறிந்திடும்படி – இறக்கும்படி : மெலித்தல் விகாரம். வதிந்தனன் - தங்கினன்.

63. மிலைச்சிய - முடித்த. அரி உரத்து - திருமாலின் திருமார்பில். சிகரச் சாகரத்திடையே - நீர்த்துளிகளையுடைய மேற்கடலில் : சாகரம் - சகரால் தோண்டப் பெற்றது : கடல். சண்ட வெம் கதிர் - மிக்க வெம்மையையுடைய கிரணங்களை. தபனன் - சூரியன். கருமை நிறமுள்ள கடலில் உதயமான சூரியன் திருமால் மார்பிலிருக்கும் திருமகள்போல் இருக்கின்றான் என்க. இச்செய்யுள் **உவமையணி** ஆகும்

64. கந்தம் - நறுமணம். பொதும்பர் - சோலை. கமலமாநகர் - திருவாரூர். ஞானசம்பந்த தேசிகன் - தருமையாதீனத்து முதல் ஞானகிரியராகிய ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிகர் ; இந்நூலாசிரியரின் ஞானகிரியராகிய ஸ்ரீ திருஞானசம்பந்ததேசிகருமாம். பந்த ஆணவப்படலம் விண்டு இரிந்திடும் படிபோல் - பாசமாகிய ஆணவமலத்தின் பரப்பு நீங்கிக் கெடுதல்போல. அந்தரத்தையும் புவியையும் மறைத்த ; அந்தரம் - வானம். இச்செய்யுள் **உவமையணி** ஆகும்.

இரண்டாநாட் சூரபன்மன் யுத்தம்

— o —

(கலிநிலைத்துறை)

அன்ன காலையில் இலக்கவெள் ளம்படை அணுகத்
துன்னு சீர்அசு ரேந்திர னுடன்அதி சூரன்
என்ன நின்றிடு தம்பியர் மைந்தராம் இருவர்
மன்னி டும்படைத் தலைவராய் இரதமேல் வரவே. 65

சீர்பு ரிந்திடும் ஒருபெருந் தேரின்மேல் திறல்சூர்
ஊர்பி ரிந்துபோர் புரிந்திட வருதல்கண்(டு) ஓடிக்
கூர்பு ரிந்திடு குலிசவேற் கரத்தினன் கூற ,
ஏர்பு ரிந்திடு குமரவேள் அறிந்தனன் இதனை. 66

அறிந்து மாருதச் சாரதி இயற்றுதேர் அணுகிச்
சிறந்த சீருள இளையவர் இரதமேற் செல்லப்
புறந்த ராதஈ ராயிர வெள்ளமாம் பூதர்
செறிந்து சூழ்ந்திடத் தானவன் படைக்கெதிர் சேர்ந்தான். 67

சேர்ந்த காலையில் பூதரும் அவுணருஞ் சினங்கொண்(டு)
ஆர்ந்த பற்பல படைக்கலஞ் சொரிந்துகின்(று) ஆர்த்து
நேர்ந்து கிட்டியங்(கு) இருஞ்செருப் புரிந்தனர் ; நெடுஞ்சீர்
சார்ந்த சாரதர் இன்னன பின்னர்செய் தனரே. 68

ஆயி ரம்பெருந் தேரினைக் கரங்களால் அள்ளி
ஆயி ரங்கரி கெட்டிட மோதுவர் அதற்பின்

---

65. தாரகாசுரனுடைய புதல்வனுகிய அசுரேந்திரனும், சிங்கமுகாசுர னுடைய புதல்வனுகிய அதிசூரனும் சூரபன்மனுடன் படைத்தலைவர்களாக வந்தனர் என்க. தம்பியர் – சூரபன்மனின் தம்பிமார்கள்.

66. ஊர்பிரிந்து - நகரத்தைவிட்டு. குலிசவேல் கரத்தினன் - இந்திரன். இதனை - சூரபன்மன் போருக்கு வருவதை.

67. மாருதச் சாரதி - வாயுதேவனுகிய தேர்ப்பாகன். இயற்று தேர் - அலங்கரித்த தேரை. புறந்தராத - முதுகு காட்டாத. தானவன் படைக்கு எதிர் - சூரபன்மனது சேனைக்கு எதிரே. (முருகன்) சேர்ந்தான் என்க.

68. ஆர்த்து - ஆரவாரித்து. நேர்ந்து - எதிர்வந்து. கிட்டி - நெருங்கி. சாரதர் - பூதகணத்தினர்.

69. அள்ளி - வாரி எடுத்து. கெட்டிட - அழிய. பாணிகொண்டு எற் றியே - கையால் மோதி.

ஆயி ரங்கரி பாணிகொண்(டு) எற்றியே அடற்பத்
தாயி ரம்பரி அழிவுறப் புரிகுவர் அடலால். 69

கோடி வெம்பரி பாணிகொண்(டு) ஆயிரங் குலவும்
கோடி யாகிய அவுணரை அடித்துயிர் குடித்தார் ;
வாடு முவிறல் தகுவரும் பூதரை வகூவுற்(று)
ஈடு சேர்ந்திடு பற்பல படையினுல் இறுத்தார். 70

வீறி வந்திடு தானவ ரானவர் வெகுண்டு
சீறு சாரதர் உடல்பதை பதைத்திடச் சிதைத்தல்
ஈறி லாவிறல் பூதமன் னவர்தெரிந்(து) எதிர்போய்
மாறு றும்படி தானவர் தானையை வதைத்தார். 71

பிணங்கள் சோரிவெற்(பு) ஆறுபோல் மேவுறப் பெருஞ்சீர்க்
கணங்கள் தானவர் கணங்களை அடுதிறங் காணுஉ
இணங்கு சீர்அநி சூரன்வந்(து) அறுமுகன் இருதாள்
வணங்கு பூதர்மேற் பொழிந்தனன் ; பகழியா மாரி. 72

அந்த வேலையில் பூதரில் உக்கிரன் அணுகித்
தந்தி மாமுகன் முன்னவன் சுதன்மிசைத் தண்டோன்(று)
உந்த உந்துமக் கதைஅதி சூரன(து) உரத்து
வந்து சாலிகை சிந்திய(து) அவுணர்கண் மயங்க. 73

மூடு சாலிகை சிந்தலுஞ் சிந்தையுள் முனிந்து
பாடில் உக்கிரன் மீதுநூ றுயிரம் பகழி

---

70. ஆயிரங்குலவும் கோடி - ஆயிரங்கோடி. தகுவர் - அசுரர்கள். ஈடு - பெருமை. இறுத்தார் - கொன்றனர்.

71. வீறி - வெறுப்புக் கொண்டு. பூதமன்னர் - பூதத்தலைவர்கள். மாறு உறும்படி - அவர்கள் செய்ததற்கு எதிர் வினையை அடையும்படியாக.

72. பிணங்கள் வெற்பைப்போலவும் இரத்தம் ஆற்றைப் போலவும் பொருந்த என்க. சோரி - இரத்தம். கணங்கள் - பூதர். தானவர் கணங்களை - அசுரத்தொகுதிகளை. காணுஉ - கண்டு. பகழியா மாரி - அம்பாகிய மழை யினை. பகழி - அம்பு.

73. தந்தி மாமுகன் - தாரகாசுரன் ; அவனுக்கு முன்னவன் சிங்கமுகாசுரன் : அவன் சுதன் அதிசூரன். தண்டு - கதாயுதம். உரத்து - மார்பில். சாலிகை சிந்தியது - கவசத்தை உடைத்துக் கீழே விழச் செய்தது.

74. பாடு இல் - அழிவு இல்லாத. பகழி - அம்புகளை. கூட - ஒருங்கே. விட்டுழி - எய்தபோது. ஈடு - பெருமை, பலமுமாம். உக்கிரன் என்னும் பூதன் ஒரு மலையை எடுத்து வீசி அதிசூரனது தேரை அழித்தான் என்க.

கூட விட்டுழிக் குருதிநீர் எழுந்தது; கொதித்தோர்
ஈடு வெற்புவிட்(டு) அவுணர்கோன் தேரினை இறுத்தான். 74

மற்றெதிர் வையமேற் பாய்தலும் உக்கிர வலியோன்
செற்ற மோடுதேர்ப் பரிகளை உதைத்திடத் தீயோன்
தற்று நூறுகோல் விடுத்தலும் நெடியகைத் தடியால்
இற்றி டும்படி விலக்கவே(று) இரதம்ஏ றினனே. 75

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

ஏறி நின்றஅதி சூரன் உக்கிரனை
ஈறு செய்வன்என எண்ணியே
சீற னற்படை அரும்பு னற்படை
திறல்ச மன்றனது திண்படை
வீறு கின்றதொரு காலின் உந்துபடை
மின்ப டைத்தவிதி தன்படை
மாறன் ஒண்படை விடப்பி டித்(து)உடல்
வருந்து ரு(து)அவை அருந்தினன். 76

விட்ட விட்டபடை முற்று முற்றுதிறல்
மிக்க உக்கிரன் விழுங்கலும்
துட்ட னைஅதி சூரன் ஆதிபடை
தொட்டி டப்பரனை உக்கிரன்

---

75. வையம் - தேர். செற்றம் - கோபம். தேர்ப்பரிகளை - தேரில் பூட்டியகுதிரைகளை. தியோன் - அதிசூரன். தற்று - செறியச் செய்து. உக்கிரன் விலக்கினன் என்க.

76. ஈறு - அழிவு. சீறு அனல்படை - கொதித்து வருகின்ற ஆக்கினேயாஸ்திரம். புனற்படை - வருணாஸ்திரம். சமன் தனது திண்படை - யமதர்மாஸ்திரம். காலின் உந்துபடை, வாயுவாஸ்திரம். கால் - காற்று. மின் - மின்னுதல். விதிதன் படை - பிரமாஸ்திரம். மால்தன் ஒண்படை - நாராயணாஸ்திரம். அதிசூரன் விட்ட அஸ்திரங்களையெல்லாம் உக்கிரன் பிடித்து விழுங்கினன் என்க. பல அஸ்திரங்களை விழுங்கின உக்கிரனின் பெருமையினைக் கந்தபுராணம் - இரண்டாம்நாட் சூரபன்மன் யுத்தபடலம், 72-78 வரையுள்ள செய்யுட்களில் காண்க.

77. ஆதிபடை தொட்டிட - பாசுபதாஸ்திரத்தை எய்யவே. அஞ்செழுத்தினை இயம்பி - பஞ்சாட்சரத்தைச் செபித்து. நெட்டிரும்படை - நீண்ட பெரிய படை; பாசுபதாஸ்திரம். உக்கிரன் ஆய்தம் எடாமல் பஞ்சாட்சர மந்திரம் ஓதி நிற்க, நிராயுதபாணிமேல் செல்லாத பாசுபதாஸ்திரம் மீண்டு சிவபெருமானிடமே போயிற்று என்க.

இட்ட மோடுதொழு(து) அஞ்செ ழுத்தினை
இயம்பி நின்றிடலும் எந்தைதன்
நெட்டி ரும்படை திரும்பி முக்கணுடை
நின்ம லன்புடை அடைந்ததால். 77

சது கண்(டு)அரி முகத்தன் மாமகன்
இலங்கு தேரினும் இறங்கியே
கோது செய்யும்ஒரு தண்டு கொண்டுமிகு
கூளி மன்னன்எதிர் கூடிவண்
போது கொண்டதொடை கொண்ட தோள்மிசை
புடைப்ப அக்கதை பறித்(து)அவன்
நீது கொண்டஉர மீ(து)அடித்துழி
சிறந்த தொல்லுயிர் துறந்தனன். 78

இன்ன வாறது தெரிந்து நெஞ்சகம்
எரிந்து தானவர்கள் இந்திரன்
மன்னு பூதர்கள் பதைத்து மாளும்வகை
வாளி சிந்திஎதிர் வந்தபோ(து)
இன்ன லற்றகுறள் மன்ன னில்கனகன்
என்னும் அன்னவன் எதிர்ந்துசின்(று)
அன்ன வஞ்சனெடு போர்புரிந் திடலும்
ஆயி ரங்கணை விடுத்தனன். 79

சிவபெருமான் அதிசூரனுக்குத் தன் படையாகிய பாசுபதாஸ்திரத்தை அருளிய காலை, "ஆயுதமில்லாதவர்கள்மேல் நீ பிரயோகித்தால் அவர்களிடம் இது செல்லாது; நம்பக்கமே வந்து சேரும்" என்று அருளிச்செய்திருந்தமையால், நிராயுதபாணியாக நின்ற உக்கிரனை பாசுபதாஸ்திரம் ஊறுசெய்யாது திரும்பிச் சென்றது என்பதாம்.

78. அரிமுகத்தன் மாமகன் – அதிசூரன், கோது - குற்றம்; இங்கே, கொலை. கூளிமன்னன் - பூதர்களுக்கு தலைவனாகிய உக்கிரன். தொடை - மாலை. அதிசூரன் அடித்த அக்கதையைப் பிடுங்கி உக்கிரன் அதிசூரன் மார்பின் மீதே திருப்பி அடித்தான்; அதனால் அதிசூரன் இறந்தான் என்க.

79. இன்னவாறது - இத்தகைய செய்தியை; அதிசூரன் இறந்த செய்தியை. தானவர்கள் இந்திரன் - அசுரேந்திரன். குறள் மன்னரில் கனகன் - பூதத்தலைவர்களுள் ஒருவனாகிய கனகன் என்பவன். வஞ்சகன் – அசுரேந்திரன்.

மெத்தும் அத்திரம் உருத்த னில்பட
மெலிந்த னன்;கடிது வீறுமுன்
மத்தன் என்பவன் எதிர்ந்து போர்புரிய
வஞ்சன் எண்ணில்பல வாளி தூஉய்
எய்த்தி டும்படி இழைப்ப **மந்தன்**எதிர்
எய்தி வெய்யசமர் செய்திடப்
பத்து நூறுகணை சிந்தி மந்தனும்
அயர்ந்தி டக்கடிது பண்ணினன். 80

வீறு **சிங்கன்** அதுபின்பு முன்பணுகி
வெஞ்செ ருப்புரிய வஞ்சகன்
நூறு வெங்கணை விடுப்ப அன்னவனும்
நொந்து நின்றிடலும் முந்துசீர்
ஏறு சாரதர்கள் மன்னர் பின்னுள
ரியாவ ரும்பொரு(து) இகழ்த்திடச்
சீறி வந்தனன் ; இலக்கர் தம்மில்உயர்
திண்டி றல்குலவு **தண்டகன்.** 81

தூர கன்றன்மகன் வத்தி ரத்தில்உயர்
தண்ட கன்கணைகள் ஆயிரம்
வீர மோடுவிட நொந்து தந்திதரு
வெய்யன் எண்கணைகள் எய்யவே

---

80. மெத்தும் அத்திரம் - மிக்க வலிமையை உடைய அம்புகள். உருத்தனில் - உடம்பில். மெலிந்தனன் - கனகன் தளர்ச்சியை அடைந்தான். கடிது வீறுமுன் - விரைவிலே ஊக்கம் பெற்று எழுவதற்கு முன்னே. மத்தன் என்பவன் - உன்மத்தன் என்னும் பூதன். தூஉய் - தூவி. எய்திடும்படி இழைப்ப - மத்தன் என்பவனும் தளர்வடையும்படி செய்ய. மந்தன் - மந்தன் என்னும் பூதன். அயர்ந்திட - மூர்ச்சிக்கும் படியாக. கனகன், உன்மத்தன், மந்தன் என்னும் மூன்று பூதரும் அசுரேந்திரன் விட்டபாணத்தால் தளர்ச்சியுற்றனர் என்க.

81. சிங்கன் - சிங்கன் என்னும் பூதன். அதுபின்பு - அதன்பிறகு - வஞ்சகன் - அசுரேந்திரன். முந்துசீர் ஏறு - முதன்மையான சிறப்புப் பொருந்திய. சாரதர்கள் மன்னர் - பூதத்தலைவர்கள். சிங்கன் என்பவனும் பூதத்தலைவர்கள் பிறரும் எதிர்த்துத் தளர்ச்சியடைந்தனர் ; அப்பால் லக்ஷ வீரர்களுள் சிறந்த தண்டகன் என்பவன் போர் செய்ய வந்தான் என்க.

82. வத்திரத்தில் - முகத்தில். தந்தி தருவெய்யன் - அசுரேந்திரன். தண்டகன் என்னும் பூதனும் இகழ்புற, சோமுகன் என்னும் பூதன் வந்து அசுரேந்திரன் தேரை அழித்தான் என்க.

சீரு லாநுதல் படப்பெ ருந்துயர்
செறிந்தி டக்கடிது சோமுகன்
கோர மோ(டு)அணுகி ஆயி ரங்கணைகள்
கொண்டு தேர்அழிவு கண்டனன். 82

தேர ழிந்திடலும் ஆனை மாமதலை
சீறி வே(று)இரதம் ஏறியே
வீர மோடுவரு சோமு கன்றன்மிசை
வென்றி யோர்படை விடுப்பஅங்(கு)
ஏரு லாவும்அவ னும்த ளர்ந்தனன் ;
இலங்கு சீர்விசயன் வந்துநீள்
தார கன்றன்மகன் வில்லை வல்லைகணை
ஆயி ரங்கொடு தடிந்தனன். 83

கொண்ட வில்லழிய வந்(து)எ திர்ந்துபொரு
கொற்ற வீரன்விறல் பற்றலன்
கண்டு தண்டது விடப்ப டத்தளர்
கலக்க முற்றனன் ; இலக்கரில்
அண்டும் ஏனையர் அடைந்து விற்சமர்
புரிந்(து)உ டைந்திடலும் ஆசிலா
மண்டு வீரமுள கந்த னுக்(கு)இளவல்
வந்து வெய்யனெ(டு) எதிர்ந்தனன். 84

கைத்த னுத்தனை வளைத்து மெத்திய
கடுஞ்ச ரஞ்சிதறி வெய்யவன்
மைத்த னுத்தனை மறைப்ப அன்னவனும்
மன்னும் ஆயிரநல் வாளிதான்

---

83. ஆனைமா மதலை - தாரகாசுரனுடைய புதல்வனுகிய அசுரேந்திரன். வென்றி ஓர்படை - வெற்றிதரும் ஒரு பாணத்தை. அங்கு - அப்போது. அவனும் - சோமுகனும். விசயன் - விசயன் என்னும் பூதன். சோமுகனும் தளரவே விசயன் என்பான் வந்து அசுரேந்திரனது வில்லை அறுத்தான்.

84. கொற்றவீரன் விறல் - விசயனது வீரத்தை. பற்றலன் - பகைவனுகிய அசுரேந்திரன். தண்டு - கதாயுதம். பட - அதுபடவே. அண்டும் - பொருந்திய உடைந்திடலும் - தோல்வியடையவே. விசயன் தளர, அவனுக்குப் பின் லக்ஷ வீரர்களுள் எஞ்சியவர் ஒருவர்பின் ஒருவராக வந்து எதிர்த்துத் தோல்வி யுற்றனர் ; பிறகு வீரவாகுதேவர் போர் புரிய வந்தார்.

85. கைத்தனுத்தனை - கையிலே பிடித்த வில்லை. மெத்திய-மிகுதியான. வெய்யவன் - அசுரேந்திரன். மை தனு தனை - கரிய உடலில். சுத்தன் - வீர

சுத்தன் மீதுபட விட்(டு)ஓர் ஏழுகணை
தொட்டு வில்தடிய விற்கொளாப்
பத்து நூறுகணை சிந்தி வெய்யன்உறு
தேரை வில்லொடு படுத்தனன். 85

வேறு தேர்அவுணன் ஏறி விற்கொ(டு)உயர்
வீர வாகுஉறு தேரினை
நூறு கோலதனில் நூறு காலதனில்
நூபு ரத்துவரு சேவகன்
மாறி லாவிறல்கொள் பாவி தேரினிடை
வாவி மேவுதிறல் வாளினால்
பேற தாம்ஒரு கரந்து ணித்துழி
பிடித்த தண்டுகொ(டு) அடித்தனன். 86

ஊறில் வீரன்அவு ணன்சி ரத்திடை
உதைத்து மீளுதலும் ஒன்னலன்
சீறி வாள்கொடு தொடர்ந்து வந்துழி
திரும்பி அங்கவணை வாளினால்
நூறி னான்;அவுணர் அஞ்சி யோடினர்;
நுவன்றி டற்(கு)அரிய சீரினால்
வீறு சூரன்இது கண்டு பூதர்குழு
மீது வெம்மையொடும் மேவினான். 87

முந்தி வந்(து)உயர் தனுக்கு னித்தனன்
முழங்கு நாணொலி வழங்கலும்
சிந்தி னார்சிலர்; இரிந்து ளார்சிலர்;
திகைத்து ளார்சிலர் செகத்தின்மேல்;

வாகுதேவர். தொட்டு-எய்து. வில் தடிய-வீரவாகுதேவரின் வில்லை அறுக்க. வில் கொளா - வேறொரு வில்லை எடுத்துக் கொண்டு. பத்துநூறு - ஆயிரம். படுத்தனன் - அழித்தனன்.

86. நூறு கோலதனில் நூறு காலதனில் - நூறு அம்புகளால் அழித்த சமயத்தில். (நூறுதல் - அழித்தல்.) நூபுரத்து வரு சேவகன் - அம்பிகையின் திருவடிச் சிலம்பினின்றும் உதித்த வீரவாகுதேவர். பாவி தேரினிடை வாவி - அசுரேந்திரனுடைய தேரிலே தாவி. அசுரேந்திரனது கை ஒன்றை வீரவாகுதேவர் வெட்ட, அவன் தண்டாயுதத்தால் அடித்தான் என்க.

87. ஊறு - துன்பம். ஒன்னலன் - பகைவன். நூறினான் - வெட்டிக் கொன்றான். வீறு - பெருமிதங் கொண்டிருந்த. பூதர் குழு மீது - பூதப்படையினரின் மேல்.

இந்த வாறுமித பூதர் நொந்தனர்கள் ;
யாண்டு பத்துடன் இரண்டுதான்
அந்த நாணெலி ஒழிந்த தில்லையெனில்
ஆர்அ வன்றன்விறல் கூறுவார் ? 88

இன்ன செய்கைதனை மன்னு சாரத
இராசர் கண்(டு)அவண் எதிர்ந்தபோ(து)
அன்ன வஞ்சன்ஒரு பத்து நூறுதொடர்
ஆயி ரந்தழுவு கோடியாய்
இன்னல் வெங்கணை பொழிந்த போ(து)அவர்
அழிந்த போதுநல் வீலக்கராம்
வெங்கி டாதவிறல் வீரர் வந்தணுகி
வெந்தி றற்கணைகள் சிந்தினர். 89

ஆடல் கொண்(டு)அவர் உரக்க ரத்தனு
அனைத்தை யுங்கணைகள் ஆயிரம்
கோடி சிந்திஅவை சிந்திஅத் தொகைகொள்
கோல்வி டுத்(து)அவர்கள் தேர்எலாம்
பாடு றும்படி புரிந்(து)இ லக்கமொடு
பத்து நூறுசெறி பல்லவம்
ஈடி னே(டு)உதவி வீரர் மேனிகள்
இனைத்தி டும்படி துளைத்தனன். 90

ஈது கண்டுதிறல் எண்மர் தங்களில்
இருந்தி றற்பெறு திவாகரன்
நீதி லாதகணை சிந்தி வந்திடலும்
நூறு நூறுகணை சிந்தியே

---

88. முந்தி வந்து - (பூதர்களுக்கு) முன்னே வந்து. தனு குனித்தனன் - வில்லை வளைத்தனன். சிந்தினர் - இறந்தார். அவன்தன் – அச் சூரபன்மனுடைய. நாணெலியைக் கேட்ட அளவிலே சிலபூதர் இறந்தனர்; சிலர் ஓடினர்; சிலர் மயங்கினர். அந்த நாணெலி 12-ஆண்டு வரையில் நீங்காமல் ஒலித்தது.

89. சாரத இராசர் - பூதத்தலைவர்கள். பத்து நூறு தொடர் ஆயிரம் தழுவு கோடியாய் - பத்துலட்சங்கோடி எண் உள்ளனவாக. வெங் இடாத - புறமுதுகு காட்டாத. நல் இலக்கராம் வீரர் என்க.

90. ஆடல்கொண்டு – வெற்றிகொண்டு. உரக் கரத் தனு - வலிமையையுடைய கை வில்கள். சிந்தி - ஏவி. பாடுறும்படி - அழியுமாறு. பல்லவம் - அம்புகள். ஈடு - பெருமை. வீரர் – லக்ஷ வீரர்.

ஒது வீரனது வில்து ணித்(து)அவன்
உரம்பி ளந்துழி விழுந்தனன்;
கோதி லாவிறல் அரக்கன் வந்(து);அவுணர்
கோவின் முன்புகணை தூவினன். 91

தூவி யங்கதனில் வென்றி இன்றிமிடல்
துன்று வாளினெடு சூர்கோன்
மேவு தேர்அணுகி வில்லை வெட்டஅவன்
வில்லொ டிந்ததிலை; வல்லையே
ஓவி லாதகதிர் வாளொ டிந்த(து);அடல்
உந்(து)அ ரக்கனையொர் தாளினுல்
பாவி அண்டமிசை செல்ல உந்தலும்
விழுந்த னன்கடிது பாரின்மேல். 92

வீழும் அன்னதை வெகுண்டு கண்டுமிகு
வெற்றி பெற்றிடு மகேந்திரன்
தாழ்வி லாவிறல்கொள் சூரன் முன்புபல
சாய கஞ்சிதற வெய்யவன்
சூழும் நூறுகணை தூயன் அங்கமிசை
தோய விட்டுழி விழுந்தனன்;
வாழ்வு கொண்டபுகழ் வீர னீரன்எதிர்
வந்து பல்கணைகள் சிந்தினன். 93

சடு சேரவரு வீர னீரன்மிசை
ஏழி னை(டு)அவுணன் ஏழுகோல்
கூட விட்டுழி விழுந்த னன்கடிது;
கொற்ற முற்றிடு மகேசனும்

---

91. இரும் - பெரிய. திவாகரன் - வீரமார்த்தாண்டன். உரம் - மார்பை. விறல் அரக்கன் - வீரராக்கதன். அவுணர் கோவின் - சூரபன்மனின்.

92. வீரராக்கதன் விற்போரில் வெற்றி இல்லாமையால் வாளை எடுத்தான் என்க. மிடல் துன்று - வலிமைபொருந்திய. அடல் உந்து அரக்கனை - வீரராக்கதனை. பாவி - சூரபன்மன். உந்தலும் - உதைக்கவே. பார் - பூமி.

93. மகேந்திரன் - வீரமகேந்திரன். சாயகம் - அம்பு. சூழும் - கூட்டமாகிய. தூயன் - வீரமகேந்திரன். அங்கமிசை தோய் - உடலிற் பதியவே. விழுந்தனன் - மூர்ச்சையாய் விழுந்தனன். வீரமகேந்திரன் மூர்ச்சையடையவே, வீரநீரன் சூரபன்மனெடு போர் செய்ய வந்தான் என்க.

நீடு சூரன்எதிர் வந்(து)எ திர்ந்தொரு
நெடும்ப டைக்கலம் வீடுப்பவே
பீடு கொண்டஉர மீது பட்டுமிகு
தூளி பட்டது ; பிறங்குவேல். 94

வந்து பட்டகதிர் வேல்அ ழிந்திடலும்
மன்னு தானவர்கள் மன்னவன்
உந்து கின்றகணை ஏழு விட்டிட
உரம்பொ ருந்திய மகேசன்நீள்
கந்(து)உ றழ்ந்திடு புயங்க லந்(து)உடல்
கலேப்ப மொய்ம்பது துலேப்பவே
சிந்தை நொந்தனன் ; நிகழ்ந்த இச்செயலை
வீர கோளரி தெரிந்தனன். 95

கண்டி(து) அண்டர்புகழ் வீர கேசரி
கடுஞ்ச ரஞ்சிதறி வந்துபின்(பு)
அண்ட லன்றனது வையம் உற்றுரம்
அடிக்க வேகரம் வெடிக்கவே
மண்டு சூரன்ஒரு கையி னுல்இவனை
மாலு றுங்கடலில் வெஞ்சினம்
கொண்(டு)எ றிந்திட விழுந்து பின்னரும்
எழுந்து சேனையொடு கூடினன். 96

மால்ப டைத்தவிறல் இந்தி ரன்குறுகி
வன்ச மன்படை விடுத்தலும்
பால்ப டைத்தமொழி மாயை மைந்தன்மிசை
பட்டு மட்டில்துக ளாகவெம்

---

94. ஈடு - ஒப்பு. கூட – ஒருங்கே. வீரதீரன் விழவே, பிறகு வீரமகேசன் வந்து ஒரு வேலே விட அது சூரபன்மன் மார்பில்பட்டுப் பொடியாகி விட்டது என்க. மகேசன்-வீரமகேசன். நெடும்படைக்கலம்-வேல். பிறங்கு - பிரகாசிக்கின்ற.

95. வீரமகேசனும் கலேப்புற்று விழ, வீரகேசரி கண்டான் என்க. தானவர்கள் மன்னவன் – சூரபன்மன். கந்து உறழ்ந்திடு - கட்டுத்தறியை ஒத்த. மொய்ம்பது - தோள். அது; பகுதிப்பொருள் விகுதி. வீரகோளரி - வீரகேசரி.

96. இது கண்டு - இதனேக்கண்டு. அண்டர் - தேவர். அண்டலன் தனது - பகைவனது ; சூரனது. வீரகேசரி சூரபன்மன் தேரில் பாய்ந்து

கோல்ப டைத்தவன்நூ றுயி ரங்குலவு
கோடி வெங்கணைகள் தூவலும்
கால்ப டைத்தவிசை போல மேவிஅ
கலந்து னைத்திட இனைத்தனன். 97

மன்னு வெற்றிபுனை அந்த கன்கடிது
வந்து பல்கணைகள் சிந்தலும்
அன்ன வன்கணை விலக்கி வெந்தகுவன்
ஆயி ரங்கணைக ளால்அவன்
மின்னு தேரினெடு வில்து ணித்துமரு
மம்பி ளந்திட வீழ்ந்தனன் ;
வெந்நி டாதவிறல் கொண்ட அண்டர்புகழ்
வீர வாகுஇது கண்டனன். 98

கனத்த தேரினெடு வந்(து)எ திர்ப்பஅது
கண்டு மாயைதரு கண்டகன்
மனத்தில் ஒற்றன்என உன்னி இன்னமும்என்
முன்னர் ஒற்றன்என வந்தியேல்

அவன் மார்பில் தன் கையால் அடிக்கவே அக் கை பிளந்தது என்க. உரம் - மார்பு. மால் உறும் கடலில் - திருமால் பள்ளிகொண்டருளும் திருப்பாற் கடலில். வீரகேசரி திருப்பாற்கடலினின்று எழுந்துவந்து தன் பூதப் படை யுடன் சேர்ந்தான் என்க.

97. மால் - பெருமை. விறல் இந்திரன் - வீரபுரந்தரன். சமன்படை - யமதர்மாஸ்திரம். மாயை மைந்தன் - சூரபன்மன். மட்டில் துகள் ஆக - கணக்கில்லாத துண்டங்களாகிவிட. வெம்கோல் படைத்தவன் - கொடுங் கோல் பெற்ற சூரபன்மன். கால்-காற்று. விசை - வேகம். அகலம் துளைத்திட இளைத்தனன் - (வீரபுரந்தரனது) மார்பைத் துளைக்கவே அவன் சோர்ந்து வீழ்ந்தான்.

98. வெற்றி புனை அந்தகன் - வீராந்தகன். வெம் தகுவன் - கொடிய சூரபன்மன். மருமம் பிளந்திட - மார்பைப் பிளக்க. வெந் இடாத - போரிலே புறமுதுகுகாட்டாத.

99. வந்து எதிர்ப்ப - (வீரவாகுதேவர்) வந்து எதிர்க்க. மாயை தரு கண்டகன் - சூரபன்மன் ; கண்டகன் - முள்போல் போன்றவன். ஒற்றன் என உன்னி - முன்பு வந்த தூதன் என்று எண்ணி. வந்தியேல் - வருவை யாஞல். அனந்தம் எய்திலை - மரணத்தை அடைய மாட்டாய். தனுப் பிடிக் கின் - வில்லைப்பிடித்துப் போர்செய்வதாக இருந்தால். பாவி மகன் - சூரபன் மனின் மகனுகிய வச்சிரவாகு. திறலான் - இங்கு, வீரவாகுதேவர் ; இவர் தூது வந்த காலத்து வச்சிரவாகுவின் உயிரைப் போக்கினர் என்பதாம்.

அனத்த மெய்திலே ; தனுப்பி டிக்கின்உன(து)
ஆவி கொண்டிடுவன் என்னவே
சினத்த பாவிமகன் ஆவி கொண்டதிற
லாளன் இன்னமொழி செப்புவான். 99

உற்ற தூதனும் அமைச்சும் ஆகுவன் ;
உரங்கொள் தெவ்வர்மிசை செல்குவன் ;
வெற்றி வேலுடைய கந்தன் எந்தையருள்
வேறு முள்ளபணி செய்குவன் ;
முற்றும் வல்லவனி யான்அ மர்புரிதி
என்ன ஒன்னலன் முனிந்துநீள்
கொற்ற வாளிகள் ஓராயி ரங்குலவு
கோடி வீரன்எதிர் தூவினன். 100

வீர வாகுவும் அளப்பில் வெங்கணை
விடுத்து வெய்யன்விடு வெய்யகோல்
சேர நூறிஒரு நூறு கோல்நுதல்
செறித்தி டக்கணை சிதைந்திட
மூரி சேர்அவுணன் எட்டு வெங்கணைகள்
மொய்ம்பன் மொய்ம்பிடை அழுத்தலும்
சோரி யுண்டுபிடர் தன்னை அன்னவை
துளைத்த உம்பர்கள் துளங்கவே. 101

வென்றி கொண்டபுய அண்ணல் பின்புபல[1]
வெய்ய கோல்அவுணன் வையமேல்
துன்றி யொன்றுபல பாகர்அங்கமிசை
சோரி கண்டிட அழுத்தல்கண்(டு)

---

100. உரம் - பலம். தெவ்வர் - பகைவர். ஒன்னலன் – பகைவனாகிய சூரபன்மன். ஓர் ஆயிரம் குலவுகோடி - ஆயிரங்கோடி. வீரன் - வீரவாகு தேவர்.

101. சேர நூறி - ஒருங்கே அழித்து. நூறு அம்புகளைச் சூரபன்மனது நெற்றியில் எய்ய, அவை முறிந்து போயின என்க. மூரி - வலிமை. மொய்ம்பன் மொய்ம்பிடை - வீரவாகுதேவரின் தோளில். சோரி - இரத்தத்தை. பிடர் தன்னைத் துளைத்த - தோளின் பின்பகுதியைத் துளைத்தன. அன்னவை சோரி யுண்டு என்க.

102. அண்ணல் - வீரவாகுதேவர். அவுணன் - சூரபன்மன். வையம் - தேர். துன்றி யொன்று - பொருந்தியிருக்கும். பலபாகர் - பல சாரதிகளின்.

பா—ம் - 1 பின்னர் பல.

அன்று காசிபன் அளித்த தானவன்ஓர்
ஐம்ப(து) ஒண்கணியின் மொய்ம்பினுல்
நின்ற தேர்அதனே நூற வேறுமொரு
நீடு தேரின்மிசை கூடினுன். 102

கூடி வாயுவொடு தேயு வின்படை
கொடுஞ்ச மன்கதிர் நெடும்படை
ஈடு சேர்வருணன் வாடு முருதி
இந்தி ரன்படை இலங்குசீர்
சூடு வேதனெடு மாத வன்படை
தொடுத்து மொய்ம்பினன் விடுத்திடப்
பாடில் சூரன்மிசை வந்து வந்தவைகள்
பட்டு மட்டில்துகள் பட்டவே. 103

மட்டு லாவுதொடை அண்ணல் அங்கதுபின்
மங்கை பங்குடைய வள்ளல்தன்
நெட்டி ரும்படை விடுப்ப அன்னபடை
நேரி லாவிறல்கொள் சூரனும்
விட்டு மொய்ம்பொடு விலக்கி ஆறினெடு
வீறும் ஒன்பது விறற்சரம்
தொட்டு வீரனது கைத்த லச்சிலை
துணித்த னன்தகுவர் துள்ளவே. 104

அன்று-முன்னுள். காசிபன் அளித்த தானவன் - சூரபன்மன். நூற - பொடிபடுத்த.

103. வீரவாகுதேவர் விட்ட பாணங்களெல்லாம் சூரபன்மன் மேலே பட்டுப் பொடியாயின என்க. தேயுவின் படை - ஆக்கினேயாஸ்திரம். சமன் படை - யமாஸ்திரம். கதிர் நெடும்படை - சூரியாஸ்திரம். மாதவன் படை - நாராயணாஸ்திரம். மொய்ம்பினன் - வீரவாகுதேவர். பாடு இல் - அழிவு இல்லாத. மட்டில் - அளவில்லாத.

104. மட்டு - தேன். அண்ணல் - வீரவாகுதேவர். மங்கை பங்குடைய வள்ளல் தன் நெட்டிரும்படை - சிவபெருமானது அஸ்திரம். மொய்ம்பொடு - பலத்தோடு. தொட்டு - தொடுத்து. தகுவர் - அசுரர்.

வீரவாகு தேவர், தாம் விடுத்த தேவாஸ்திரங்களெல்லாம் சூரபன்மனிடம் பயன்படவில்லையே என்று கருதியபோது, சூரபன்மன் நகைத்து "சிவபெருமான் தந்த வர பலத்தால் எந்தத் தேவாஸ்திரங்களும் என்னைவெல்லா; அவைகளை ஒரு பொருளாகவும் மதியேன்; அவைகளின் ஆற்றல் எனக்குத் தெரியும்" என்று பற்பல வீரமொழிகளைப் பேசினுன் எனக் கந்த புராணம் கூறும்.

மூண்ட கோபமொடு மொய்ம்பன் அங்கொரு
முரண்கொள் வேலினை விடுத்தலும்
ஆண்டு சூரன்மிசை பட்டு வல்லியில்
அழிந்து போகுதலும் அன்னவன்
பூண்ட வன்மைஒரு தண்டம் உந்தஅது
வந்து மார்பிடை புகுந்திட
வீண்ட சோரியொடு நீண்ட தேரின்மிசை
வீர வீரனும் விழுந்தனன். 105

செய்கை இன்னது தெரிந்து தேரினெடு
சீரு றுஞ்சர வணப்பெயர்ப்
பொய்கை தன்னிடை வளர்ந்த நங்கடவுள்
போயெ திர்ந்திட வழுத்தினர்க்(கு)
உய்கை தந்தருள் குமார வேள்வடிவம்
உற்று நோக்கிமிகு செற்றமாய்
நைகை கொண்டதொழில் கொண்ட வஞ்சன்இது
நம்பி ராணெடு விளம்புவான். 106

உன்ற னேடுவரு சேனை யானவர்
ஒழிந்து போயினர் ; உவர்க்கெலாம்
வென்றி கொண்டஇறை யாகி வந்தவனும்
வெந்து யர்க்கொடு விழுந்தனன் ;
நின்றி ளங்குமர னென நீகொல்? அமர்
என்னெ டேபுரிய வல்லை ;நின்
வன்றி றல்தனை அழிப்பன் இங்(கு) ஒரு
கணத்தின் என்றனன் மறத்தினன். 107

---

105. மொய்ம்பன் - வீரவாகு தேவர். தண்டம் உந்த - தண்டாயுதத்தை விட. வீண்ட - விழுந்த. வீரவீரன் - வீரவாகுதேவர்.

106. சரவணப்பெயர்ப் பொய்கை - சரவணப் பொய்கை; நீலநிறத்தையுடைய தருப்பை வளர்ந்த பொய்கை. கடவுள் - முருகக் கடவுள். வழுத்தினர்க்கு - துதிப்பவர்க்கு. மிகு செற்றமாய் - மிக்க கோபத்தோடு. நைகை கொண்ட தொழில் - பிறரை நலிவுறுத்தலையே தன் தொழிலாகக் கொண்ட. இது - பின்வரும் வார்த்தைகளை.

107. சேனையானவர் - சேனையாக வீளங்கியவர் எல்லாம். உவர்க்கு எலாம் - அப்படை வீரர்களுக்கு எல்லாம். இறையாகி வந்தவன் - இங்கு, வீரவாகு தேவர். வல்லை - வன்மையுடையவன். மறத்தினன் - பாவி; சூரபன்மன்.

வஞ்சன் ஈதுசொல வேள்உ ரைப்பன்:இள
மைந்தன் என்றெமை மதித்தனை ;
நஞ்சு லாவிய களத்தன் நெற்றிவிழி
நண்ணு கின்றபொறி யொன்றுகாண்
விஞ்சு கின்றவுல கங்கெ டுப்பது ;
விவேக மற்றஒரு பேதைநீ
அஞ்சு ருதுதிறல் வீரர் பாலர்பெரி
யோர்கள் என்றுமதி யார்கள்காண். 108

யாவ ரேனும்அமர் செய்ய வந்திடில்
எதிர்ந்து போர்புரிவர் ; இங்கினிச்
சேவ கத்தொடு பெருத்த நின்வலி
சிறுத்த நம்பெரிய திண்மையால்
ஓவ ரும்படி கெடுப்பம் என்றிட
உருத்(து)அ ளப்பிலகணை ஒன்னலன்
தூவ வேலவனும் எண்ணில் வெங்கணை
தொடுத்து விட்டவை தடுத்தனன். 109

தடுத்து வேல்முருகன் ஏழி ரண்டுகணை
தான வன்தனது தோளின்மேல்
விடுத்த போதுகணை பட்டொ டிந்துவிழ
வேறும் ஆயிரம் விறற்சரம்
தொடுத்(து)அ வன்சில துணிப்ப வஞ்சன்ஒரு
துங்க வேல்விடவும் ஏழொடேழ்
வடித்த வெங்கணையில் அந்த வேலையுற
வந்த வேலியெதிர் சிந்தினன். 110

---

108. வேள் - முருகக்கடவுள். களத்தன் - கழுத்தினையுடைய சிவபெருமானது. நெற்றிக்கண்ணிலிருந்துவரும் ஒரு பொறியே உருவால் சிறியதுபோல் இருந்தாலும் உலகங்களையெல்லாம் அழிக்கும் வன்மையை உடையது. தாம் பொறியினின்று அவதாரம்செய்தமையைக் குறிப்பித்தபடி என்க. அஞ்சுருத-போருக்குப் பயப்படாத. திறல் வீரர் - சுத்த வீரர்.

109. சேவகத்தோடு-வீரத்தோடு. பெருத்த - உருவாலும் பெருமையை உடைய. சிறுத்த - சிறிய உருவத்தையுடைய. ஓ வரும்படி - ஓழிதல் உண்டாகும்படியாக. உருத்து - கோபித்து. ஒன்னலன் - பகைவன்; சூரபன்மன்.

110. வேறும் - மறுபடியும். அவன் சில துணிப்ப - சூரபன்மனது வில்லை அறுக்க. அந்தவேலை - அந்தச்சமயத்தில். உற - மேலே பட.

வீறு கின்றதொரு வில்லெ டுத்(து)அவுணன்
வேலன் விட்டபல கோலெலாம்
நூறி ஏழ்கணை புயத்தில் எய்யஅவை
நுண்து கள்படலும் வேலவன்
சீறி ஐயிரு சரத்(து)அ வன்சிலை
சிதைத்தொ ராயிரநல் வாளியால்
ஏறு தேரழிய நூறி வேறுமவன்
ஏறு தேர்கள்அற எய்தனன். 111

வண்மை கொண்டசிலை வையம் அற்றிடலும்
வைய முற்(று)அவுணர் மன்னவன்
திண்மை கொண்டதொரு முத்த லைப்படை
செலுத்த ஈரிரு சரங்கள்விட்(டு)
உண்மை கொண்டகுகன் அன்ன தைக்கடி(து)
உருத்(து)அ றுத்துமிகு கோல்கள் தூய்த்
தண்மை கொண்டதொழில் கொண்ட வன்புணை
மதாணி யானவை தடிந்தனன். 112

ஈது கண்(டு)அவுண ராரும் அங்(கு)அணுகி
எந்தை கந்தனை வளைந்துனின்(று)
ஓது போர்புரிய ஆழி வேலன்விட
உற்ற சேனையவை முற்றவும்
கோது றும்படி கெடுத்து மற்(று)அது
குமார வேள்கையுற வெய்யசூர்
வேதன் மால்படை விடுப்ப வேல்அவை
விழுங்க ஆதிபடை விட்டனன். 113

---

111. வீறு - பெருமை. கோல் - அம்பு. நூறி - பொடியாக்கி. நுண் - நுட்பமாகிய. சரத்து - அம்பிலுல். வேறும் அவன் ஏறு தேர்கள் - ஒன்று கெட மற்றொன்றுக அடுத்தடுத்து வேறுவேறுக அச்சூரபனமன் ஏறிய தேர்களை.

112. வண்மை - வளம்; பெருமை. சிலை. வையம் - வில்லும் தேரும். வையம்உற்று - பூமியின்மேல் வந்து. முத்தலைப்படை - சூலம். உண்மை கொண்ட குகன் -மெய்த்தன்மையுடைய முருகக்கடவுள். உருத்து-கோபித்து. தண்மைகொண்ட தொழில் கொண்டவன் - தாழ்வாகிய செயல்களையுடைய சூரபன்மன்; தண்மை - தாழ்வு. மதாணி - மார்பில் அணியும் பதக்கம்.

113. ஓது - சொல்லத்தக்க. ஆழி - சக்கராயுதத்தை. கோதுஉறும்படி - மரணம் அடையும்படி. மற்று அது அது - சக்கராயுதம். பிரமாஸ்திரத்தை

விட்ட வெம்படை குமார வேள்ஒரு
விறற்க ரங்கொடு பிடித்(து)அவன்
கெட்டி டாதவகை புந்தி சிற்சில
கிளத்த அங்(கு)அதை மதித்திலன்
மட்டில் சேனையொடு பின்பு சேர்தும்என
மாய மாகிமனை யேகலும்
பட்ட சோகமொ(டு) அயர்ந்த யாவரும்
எழுந்து வேலன்அயல் பரவினர். 114

மற்றிவ் வேலைமிகு பூதர் சூர்நகர்
வடாது வாசல்தனில் ஏகியங்(கு)
உற்றி ருந்தஅதி கோர னை*ப்படை
யொடும்கெ டுத்(து)எயில் உடைத்துவிண்
தற்(று)இ ருந்ததொரு கோபு ரங்கடிது
தொட்டு வேலையிடை இட்(டு)அவ்வூர்[1]
சற்(று)அ ழித்தனர் திரும்பி னர்கடிது
சண்மு கத்தன்அயல் கூடினர். 115

யும் நாராயணஸ்திரத்தையும் சூரபன்மன் விட, அவற்றை முருகக்கடவுளின் வேலாயுதம் விழுங்கிவிட்டது என்க. ஆதிபடை - சிவாஸ்திரம்.

114. புந்தி - அறிவுரை. சிவாஸ்திரத்தை முருகக்கடவுள் தம் திருக்கரத்தால் பற்றிக்கொண்டு சூரபன்மனுக்குச் சிற்சில அறிவுரைகளைக்கூறினர்; அவை வருமாறு "சயந்தன் முதலிய தேவர்களை நீண்டகாலம் சிறையில் அடைத்து இழிதொழில் பல புரியும்படி செய்தனை; அதற்காக உன்னிடம் ஒரு தூதனை அனுப்பினேம்; அவன் சொற்களைக் கேட்டுத் தேவர்களை விடுதலை செய்தாயில்லை; அதன்பொருட்டு நாம் இங்கு வந்தோம்: தாரகனைக் கொன்ற வேல் உன்னையும் கொல்ல இருக்கின்றது; நீ இப்போது தேவர்களைச் சிறையினின்று விட்டுவிட்டால் கொல்லாமல் விட்டுவிடுவோம்: இல்லையானால் உன்னை விரைவில் நாம் அழிப்போம்" (கந்தபுராணம் - இரண்டாம் நாள், சூரபன்மன் யுத்தபடலம், 313 - 317.) என்பதாம்.

சூரபன்மன் முருகக்கடவுள் அறிவுரையை மதிக்காமல் மாயமாய் மறைந்து தன் அரண்மனை சென்றான். சேர்தும் - வருவேம். அயல் - அருகில்வந்து. பரவினர் - துதித்தார்கள்.

115. இவ்வேலை - இந்தச்சமயத்தில். சூர் நகர் - சூரபன்மனது இராசதானியாகிய மகேந்திரபுரியின். அதிகோரன் - இவன் மகேந்திரபுரியின் வடக்குக் கோட்டை வாசல் காவலாளி. கெடுத்து - அழித்து. எயில் உடைத்து - மதிலை இடித்து. விண் தற்று இருந்த - ஆகாயத்தை அளாவி உயர்ந்து நின்ற.

* இங்கு அதிசூரனை என்ற பாடம் தவறு. பா - ம் — 1 இட்டவூர்.

வெந்தி றல்கொள்மிகு சார தக்குழுவும்
வீர ரும்புடையில் மேவவே
எந்தை கந்தன்உயர் பாச றைப்பதியில்
ஏகி மந்திரம(து) எய்தியே
சிந்து ரப்பகை சுமந்து நீடொளி
திருந்தி டுந்தவி(சு) இருந்தனன் ;
அந்த ரம்படி இருண்டி டும்படி
அருக்கன் மேல்கடல் அடைந்தனன். 116

நலந்தி ருந்தும்அரு ணக்க திர்க்கமல
நாய கன்கடிது வந்(து)எணிக்
கலந்தி ருந்(து)அவன் அகன்று போனசெயல்
கண்டும் நீதிமுறை கொண்டிடா(து)
உலம்பு ரைந்தபுயம் இந்து என்னஉற
உன்னி வந்தனன் எனுநினைந்(து)
இலங்கும் அம்பர மடந்தை நக்கென
எழுந்த தாரகை இனங்களே. 117

ஓடி யுற்றசெயல் ஒற்றர் சொற்றிட
உணர்ந்து பானுவை முனிந்துளான்
நீடு தந்தையிடை வந்து முற்பகல்
நிகழ்ந்த அச்செயல் நிகழ்த்தி இன்(று)

தொட்டு - தோண்டி. வேலியிடை இட்டு - கடலிலே போகவிட்டு. அவ்வூர் - அந்த நகரத்தை. சற்று - சிறிதளவு.

116. சாரதக்குழுவும் - பூதகணங்களும். புடையில் - பக்கத்தில். மந்திரம் அது - கோயில்; அது; பகுதிப்பொருள் விகுதி. சிந்துரப்பகை - சிங்கம்; (சிந்துரம் - யானை.) தவிசு - சிங்காதனம். அந்தரம்படி - வானமும் பூமியும்: உம்மைத்தொகை. அருக்கன் - சூரியன்.

117. நலம் திருந்தும் அருணக் கதிர்க் கமல நாயகன் - நன்மை பொருந்திய சிவந்த கிரணங்களையுடைய தாமரைக்கு நாயகனாகிய சூரியன். நீதி முறை கொண்டிடாது - நீதியின் முறைமையை மேற்கொள்ளாமல்; அநியாயமாக. உலம் புரைந்த - திரண்ட கல்லியொத்த. இந்து - சந்திரன். அம்பரமடந்தை - வானமாகிய பெண்: உருவகம். நக்கென - சிரித்தாற்போல. தாரகை - நட்சத்திரம். இச்செய்யுள் தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

118. பானுவை முனிந்துளான் - பானுகோபன். சூடுகொண்டவரை - பெருமை அடைந்தவர்களை. என்ன - என்று (பானுகோபன்) சொல்ல. அன்னவன் - சூரபன்மன். வைகறை - விடியற்காலத்தில்.

ஈடு கொண்டவரை நாளே வென்றிடுவன்
என்ன அன்னவன் விடுப்பநீள்
மாட மாளிகைகொள் வீட டைந்(து)அதனில்
வைகி வைகறை எழுந்தனன். 118

மூன்றாம் நாட் பகல் பானுகோபன் யுத்தம்

—o—

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

எழுந்து மாயைதனை முன்ன முன்னணுகி
ஏது வேண்டும்என ஓதலும்
இழிந்த வன்புதல்வன் முன்னம் என்னெ(டு)அமர்
எய்தி வென்றவனை இன்றுநான்
அழிந்தி டும்பரிசு வெல்ல ஓர்படை
அளித்தி என்றிடலும் ஆர்வமே
பொழிந்த மாயையொரு மாய வெம்படை
கொடுத்து விண்ணினிடை போயினள். 119

அன்ன வஞ்சல்அது பின்னர் பின்னுள
அடற்ப டைக்குலம் எடுத்துநீள்
மின்னு தேரணுகி ஐம்ப தாயிரமென்
வெள்ள மானபடை சூழவே
மன்னும் அப்பதி மதிற்பு றத்தணுகி
மாவின் மாமுகமொ ராயிரம்
துன்னு தூதன்வத னந்தெ ரிந்(து)இனைய
வாச கங்கடிது சொல்லுவான். 120

---

119. மாயை - சூரபன்மன் தாய்; பானுகோபனின் பாட்டியார். முன்ன - நினைக்க. ஓதுதலும் - கேட்டவுடன். இழிந்தவன் புதல்வன் - பானுகோபன். வென்றவனை - வீரவாகு தேவரை. படை - ஆயுதம். ஆர்வம் - ஆசை. ஒரு மாயவெம்படை - மாயையினை செய்யவல்ல ஒரு ஆயுதம்.

120. பின்உள - (வில்லும்) மற்றுமுள்ள. ஐம்பதாயிரம் என்று கணக்கிடும்; என்-என்னும். மாலின் மாமுகம் - குதிரைமுகம். தூதன் - இத் தூதன் பானுகோபனின் தூதன். வதனம் தெரிந்து - முகத்தைப்பார்த்து. வாசகம் - வார்த்தைகளை. கடிந்து - விரைவில்.

வீர வாகுஎதிர் சென்றி யான்இவண்
விரைந்(து)அ டைந்தது விளம்பியே
போரி யற்றஅவன் வந்தி டும்படி
புகன்று மீள்கென அகன்றுபோய்ச்
சீரு லாவிவளர் பாச றைப்பதி
செறிந்து வீரனை அறிந்துகண்(டு)
ஈர மற்றிடு மனத்து வெய்யவன்
இசைத்த வாசகம் இசைத்தனன். 121

இயம்பு போதுகதி ரைத்த னேந்தவனை
இன்று கொல்லவரு வேன்எனப்
பயம்பொ ருந்துவகை தூத னே(டு)இவை
பகர்ந்து விட்(டு)இளைய ரோடுமீள்
வயம்பொ ருந்துகும ரேசன் முன்(பு)அணுகி
வந்த னைத்தொழில் புரிந்துபின்
நயம்பொ ருந்துவிடை கொண்டு சென்றுகவின்
நண்ணு தேரின்மிசை நண்ணினான். 122

கொன்னு றுந்தனது சேனை யோ(டு)அணிகொள்
கோதில் பாசறை அகன்றுபோய்
பன்ன ரும்புகழ்கொள் தெவ்வன் நின்றிடு
பறந்த லைக்களம் அடைந்திட
இன்னல் அற்றமிகு பூதர் தானவர்
எதிர்ந்து வெஞ்சமர் இயற்றினர்;
மன்னு பூதரொடு வெய்ய தானவர்கள்
வல்லை சிற்சிலர் மடிந்தனர். 123

---

121. மீள்க என - திரும்பி வா எனறு (பானுகோபன் ஆயிரம் குதிரை முகமுடைய தூதனிடம்) சொல்ல. பாசறைப்பதி - ஏமகூடம் என்னும் பாச றைப்பதியிடத்தில். வீரனை - வீரவாகுதேவரை. ஈரம் - அன்பு. வெய்யவன். பானுகோபன்.

122. கதிரைத்தனைந்தவனை - பானுகோபனை. பயம் - அச்சம். வயம் - வலிமை. வந்தனைத்தொழில் புரிந்து - வணங்கி. நயம் - அன்பு. விடை - உத்தரவு. கவின் - அழகு.

123. கொன் - பெருமை. அணிகொள் - அலங்காரமுள்ள; படைவகுப்பைக்கொண்ட எனினுமாம். தெவ்வன் - பகைவன்; பானுகோபன். பறந்தலைக்களம் - போர்க்களம். மிகுபூதர் தானவர் - மிகுந்த பூதர்களும் அசுரர்களும். சமர் - போர். பூதர்களிலும் அசுரர்களிலும் சிலர் விரைவில் இறந்தனர்.

தான வத்தலைவ ராரும் வீரமுறு
சார தத்தலைவர் யாவரும்
ஈனம் அற்றிடும் இலக்கர் எண்மரும்
எதிர்ந்து வெஞ்சமர் இயற்றவே
ஊனம் உற்றவர் இறக்க எற்பகைவன்
உந்து தேரினொடு வந்திட
மானம் உற்றதிறல் மொய்ம்ப னுங்கடிது
வந்து தேரினொடு எதிர்ந்தனன். 124

அற்ற வேலினில் உற்ற வில்லினை
வளைத்(து)இ லங்குபிறை ஆசுகம்
வெற்றி மேகமென நாகர் தெவ்வன்விட
வீறு கொண்டதொரு வில்லினை
மற்று நேரில்கும ரன்பதத்தினை
வணங்கு வீரனும் வணக்கியே
துற்றி டும்பிறை நெடுஞ்ச ரம்பல
தொடுத்து நேருற விடுத்தனன். 125

காரில் ஏகுவன ; விண்ணில் ஏகுவன ;
கஞ்ச னொடு(டு)அரி கலந்துவாழ்
ஊரில் ஏகுவன ; பாரி லேகுவன :
உந்து சிகர மூலாவுமுந்

---

124. தானவத்தலைவர் - அசுரத்தலைவர். சாரதத் தலைவர் - பூதத்தலைவர். ஈனம் - இழிவு. இலக்கர் எண்மர் - லக்ஷத்துஎட்டு வீரர். ஊனம் உற்றவர் - நீமையுற்றவர்; அசுரர். எல் - சூரியன். எல்பகைவன் - பானுகோபன். உந்து - மேன்மையுடைய. மானம் - பெருமை. திறல் மொய்ம்பன் - வீரவாகுதேவர்.

125. அற்று அவேலினில் - அத்தகைய சமயத்தில். உற்ற - (கையில் இருக்கும். பிறை ஆசுகம் - அர்த்தசந்திர பாணம். மேகம்என - மேகம் மழை பொழிவதைப்போல. நாகர் தெவ்வன் - தேவர்களுக்குப் பகைவனுகிய பானுகோபன். வீரனும் - வீரவாகுதேவரும். வணக்கி - வளைத்து. துற்றிடும் - பொருந்திய.

126. கஞ்சனொடு அரிகலந்து வாழ்ஊர் - பிரமன் வாழும் சத்தியலோகத்திலும், திருமால் வாழும் வைகுந்தத்திலும். சிகரம் உலாவும் முந்நீரில் - துளிகள் பரவுகின்ற கடலில். முந்நீர் - படைத்தல், காத்தல், அழித்தல் என்னும். மூன்று தன்மைகளையுடையது; கடல். அண்டமுன் - அண்டகடாகத்தின் மேலே. தூயவன் - வீரவாகுதேவர். தீயவன் - பானுகோபன்.

நீரில் ஏகுவன ; வெற்பில் ஏகுவன :
நீள்வு கொண்டபுக முண்டமுன்
சீரில் ஏகுவன ; தூய வன்றணெடு
தீய வன்றன தது செய்யதேர். 126

சைய மொத்தஅவர் வையம் இந்தவகை
சாரி வட்டம(து) உலாவலும்
வெய்யன் ஆயிர நெடுஞ்ச ரஞ்சிதறி
வீரன் மார்பிடை அழுத்திடத்
துய்யன் ஆயிரமெ னும்பெ ருங்கணைகள்
தூவி வென்றியுறு சூர்மகன்
செய்ய தேரதனை நூற வேறுமொரு
தேரின் மீமிசை செறிந்தனன். 127

செறிந்து வில்லினை வளைக்கு முன்னர்உமை
செம்ம லுக்(கு)இளைய சேவகன்
முறிந்தி டாதகணை ஆயி ரங்கொ(டு)அவன்
மொய்ம்(பு) உரம்துளை படுத்தலும்
பிறிந்தி டாதவிறல் உம்பர் வேல்கொடு
பெருந்தி றல்புனை திருந்தலன்
மறிந்தி டும்பரிசு வெல்வன் என்(று)அவுணன்
வாரு ணப்படை விடுத்தனன். 128

மேயும் அப்படையை வீரன் அங்கிபடை
விட்(டு)அ றித்திடலும் ஒட்டலன்
வாயு வின்படை விடுப்ப மொய்ம்பன்ஒரு
மாசு ணப்படை விடுப்பவே

---

127. சையம் ஒத்த - மலையை ஒத்த. வையம் - தேர்கள். சாரி வட்டமது உலாவலும் - வலசாரி இடசாரியாக வட்டமிட்டு உலாவவே. துய்யன் - வீரவாகுதேவர். நூற - அழிக்க. மீமிசை - மிக மேலே: ஒரு பொருட்பன் மொழி.

128. உமை செம்மல் - முருகக்கடவுள். அவருக்கு இளைய சேவகன் - வீரவாகுதேவர். (சேவகன் - வீரன்) மொய்ம்பு உரம் துளைபடுத்தலும் - தோளையும் மார்பையும் துளைக்கவே. உம்பர்வேல் கொடு - தேவர்களுக்குரிய படைகளோடு. (வேல் - ஆயுதப்பொது.) திருந்தலன் மறிந்திடும் பரிசு - பகைவன் இறக்குமாறு. வாருணப் படை - வாருணாஸ்திரம்.

129. மேயும் - வந்த. அங்கிப்படை விட்டு - ஆக்கினேயாஸ்திரத்தை எய்து. ஒட்டலன் - பகைவன்: பானுகோபன். வாயுவாஸ்திரத்திற்கு எதிர்

போயு ரத்துவரு வாயு வின்படையை
உண்டு வஞ்சன்எதிர் போதலும்
மாயன் ஊர்திபடை தீயன் உந்தஎதிர்
வந்த வெம்படை முறிந்ததே. 129

உந்து நந்திபடை பின்பு மொய்ம்பன்விட
ஊதை போலது விரைந்துபோய்
வந்த காருட நெடும்ப டைத்திறலை
வல்லை சிந்துதலும் வஞ்சகன்
அந்த கன்படை விடுப்ப வங்கதையும்
அட்ட(து) ஓட்டலன் அயன்படை
வெந்தி றல்கொள விடுப்ப நந்திபடை
முன்பு வந்(து)அது விளிந்ததே. 130

மிக்க எற்பகைவன் மாய வன்படை
விடுப்ப நந்திபடை முன்புவந்(து)
அக்க ணம்பொரலும் ஆடல் மொய்ம்புடைய
அண்ணல் அங்கது தெரிந்துபின்
தக்கன் வேள்வியை அழித்த வன்படை
விடுப்ப மால்படை தகர்ந்திட
நக்க னுர்படை யெடுத்து வெந்தகுவன்
நண்ண லார்வெருவ விட்டனன். 131

முரண்த ரும்புயனும் நம்பன் வெம்படையை
மொய்ம்பி னேடுவிட அங்கெதிர்ந்(து)
இரண்டு வெம்படையும் நீள்பெ ருஞ்சமர்
இயற்றி விட்டவரை எய்தவே

நாகாஸ்திரம் விட்டார்; மாசுணப்படை - நாகாஸ்திரம். மாயன் ஊர்தி படை - கருடாஸ்திரம். நாகாஸ்திரத்தைக் கருடாஸ்திரம் அழித்தது.

130. உந்து - மேன்மையுள்ள. நந்திபடை - நந்தியாஸ்திரம். ஊதை - பெருங்காற்று. காருட நெடும்படை - கருடாஸ்திரம். அந்தகன் - யமன். அது - அப்பிரமாஸ்திரம். நந்தியாஸ்திரத்தை வீரவாகுதேவர் விட அது கருடாஸ்திரத்தை அழித்தது. பானுகோபன் யமாஸ்திரத்தை விட நந்தியஸ்திரம் அதை அழித்துப் பின்வந்த பிரமாஸ்திரத்தையும் அழித்தது என்க.

131. பானுகோபன் நாராயணஸ்திரத்தை விட, அது நந்தியஸ்திரத்தோடு போராடிக்கொண்டிருக்கையில் வீரவாகுதேவர் வீரபத்திராஸ்திரத்தை விடவே நாராயணஸ்திரம் மறைந்தது என்க. உடனே பானுகோபன் சிவாஸ்திரத்தை எடுத்து விட்டான். எல் பகைவன் - பானுகோபன்

திரண்ட கந்திணை புரைந்த தோளுடைய
தி ய சூரன்அருள் தீயவன்
அரண்த ருந்தனது மாயை யால்இலகும்
அம்ப ரத்திடை ஒளித்தனன். 132

ஆய போதுகதி ரோன்ம றைந்தனன் ;
அருந்தி றல்குலவு தானவன்
மாயை தன்படை விடுப்ப வள்ளல்முத
லான சேனையை வளைந்துமால்
ஏய வேகடிது கட்டி ஏகியினி
தாய நீர்க்கடலில் இட்டிடத்
தீய ரிற்பெரிய தீயன் அங்கது
தெரிந்து நெஞ்சகம் மகிழ்ந்தனன். 133

மகிழ்ந்து தாதையுறு கோயில் நண்ணியவன்
வண்ண ஒண்கழல் வணங்கியே
நிகழ்ந்த வாறுதனை ஓத அன்னவன்
றிறைந்த ஆர்வம(து) உறைந்திடப்
புகழ்ந்து மைந்தனை அவன்ற ஞதுமனை
புக்கி ருந்திட விடுத்தனன் ;
இகழ்ந்தி டாநெறிகொள் நாத னுகுமா
வேள்முன் உற்(று)இவை இசைத்தனன். 134

மாயவன் படை - நாராயணஸ்திரம். ஆடல் - வெற்றி. தக்கன் வேள்வியை அழித்தவன் - வீரபத்திரன். மால்படை - நாராயணஸ்திரம். நக்கனார் படை - சிவாஸ்திரம். நண்ணலார் - பகைவர்.

132. வீரவாகுதேவரும் சிவாஸ்திரத்தை விடவே இரண்டும் போரிட்டு மீண்டும் விட்டவர்களிடத்தே அடைந்தன. உடனே பானுகோபன் மாயத் திறத்தால் ஆகாசத்தில் மறைந்து போனன் என்க. முரண்தருபுயன் - வீரவாகுதேவர். நம்பன் வெம்படை - சிவாஸ்திரம். கந்து இணை புரைந்த - இரண்டு கட்டுத்தறிக்கு ஒப்பாகிய. தீயவன் - பானுகோபன். அரண்தரும் - பாதுகாப்பைத் தருகின்ற. அம்பரத்திடை - ஆகாசத்தில்.

133. பானுகோபன் மாயாஸ்திரத்தை விட்டு வீரவாகுதேவர் முதலிய வர்களைக் கட்டிக் கடலில் இடச்செய்தான் என்க. தானவன் - பானுகோபன். மாயை தன் படை - இது மாயையால் அளிக்கப்பட்ட படை. வள்ளல் - வீரவாகுதேவர். மால் ஏய - மயக்கம் பொருந்த. தீயன் - பானுகோபன்.

134. தாதை - சூரபன்பன். வண்ணம் - அழகு. ஒண் - ஒளி. ஆர்வம் - ஆசை. மைந்தனை - பானுகோபனை. நெறி - தவநெறி.

அற்ற வேலிதனில் ஆறு மாமுகன்
அடல்கொள் வேல்விட அளக்கர்வாய்
வெற்றி வேல்கடிதில் உற்று மாயையை
விலக்கி யேகஅடல் வீரனும்
துற்ற யாவரும் எழுந்து வந்(து)அணிகொள்
சூரன் ஊரைஎதிர் கண்டபின்
கொற்ற மேவுகும ரேச னுக்(கு)இனைய
காளை இன்னமொழி கூறுவான். 135

கரந்து மாயைகொடு வென்று சென்றதொரு
கள்வ னீதத்தலை அறுத்தலால்
உரந்த ருங்குமர வேள்முன் ஏகிலன்;
உரைத்த ஈதுமுடி யாதெனில்
இருந்தி டேன்எனது வில்லும் நானும்எரி
எய்து வேன்என இயம்பியே
விரிந்த சேனையொடு சூரன் ஊர்அரண
மேலை வாசலிடை மேவினன். 136

அங்கி ருந்தபுலி மாமு கன்பொரு(து)
அழிந்தி டக்கனலின் வாயுவின்
துங்க வெம்படை செலுத்தி வாணகர்
தொலைப்ப உம்பரை அலைப்பவன்
மங்குல் ஏழையும் விடுப்ப அங்கவைகள்
வந்து மாமழை சொரிந்துநீள்
வெங்க னல்தணி அழிப்ப அன்னசெயல்
வீர வாகுஎதிர் கண்டனன். 137

---

135. அற்ற வேலிதனில் - அந்தச்சமயத்தில். அளக்கர்வாய் - கடலினிடத்தே. மாயையை விலக்கி - மாயையின் வலியை நீக்கி. ஏக - (முருகக் கடவுளிடம்) போய்ச்சேர. அடல் வீரன், காளை - வீரவாகுதேவர்.

136. இது வீரவாகுதேவரின் சபத மொழி. கரந்து - மறைந்து நின்று. மாயை கொடுவென்று - மாயாஸ்திரத்தால் வென்று. கள்வன் - பானுகோபன். தலை அறுத்தலால் - தலை அறுத்தல்லது. அரணம் - மதில்.

137. ஆக்கினேயாஸ்திரத்தையும் வாயுவாஸ்திரத்தையும் வீரவாகுதேவர் விட்டுச் சூரபன்மனது நகரை அழித்தார். சூரபன்மன் ஏழுமேகங்களையும் விட்டு அத்தி அவியும்படி செய்தான் என்க. புலிமாமுகன் - புலி முகமுடைய அரக்கன்; இவன் மேற்குவாசல் காவலாளி. வாள் + நகர்; வாழ் + நகர் - வானகர். வாள் - ஒளி. வாழ் - அரக்கர் வாழ்கின்ற. மங்குல் - மேகம்

மூன்றாம் இரவு இரணியன் யுத்தம்

—o—

(கலி நிலைத்துறை)

கண்டான் வெகுண்டான் வடவைப்படை விட்ட காலை
விண்டான் நிறைந்த புயல்நீர்தனை உண்ண வீழ்ந்து
தண்டா முகில்கள் கடலோடிய ; ஈது தன்னை
அண்டார் புகழும் திறல்தூ தர்சு ரோ(டு)அறைந்தார். 138

அப்போது சிறி அமர்க்கேகுவன் என்ன அங்கண்
துப்போ(டு) இலங்கு மறையாயிரம் ஓர்ந்த தூயன்
மெய்ப்பான சூரன் மகன்ஆடகன் என்னு மேலோன்
இப்போது கேள்என்(று) அவன்தாள் பணிந்(து) ஈதி சைப்பான். 139

வில்லார் கனகத் திருநா(டு)அதின் உற்ற விண்ணோர்
பல்லோர் தமையாஞ் சிறைசெய்தது வீறு பாவம்
அல்லாது நன்றி படுமோ ?அவர் தம்மை வென்ற(து)
எல்லார் நயனப் பெருமான்வரம் அன்றி யாதே ? 140

ஏறுற்ற தேவ னெடுமாறுகொண் டார்க ளெல்லாம்
ஊறுற்(று) இறந்தார் இருந்தார்தமை ஓத வுண்டோ ?

---

138. வடவைப்படை - வடவாமுகாக்கினி அஸ்திரம். அது ஆகாசத்தில் இருந்த மேகங்களின் நீரைக்குடித்தது என்க. விண்தான் நிறைந்த - ஆகாயத்தில் நிறைந்திருந்த. தண்டா - குறையாத. ஓடிய - ஓடின ; வினைமுற்று. அண்டார் - பகைவர்.

139. துப்பு - வலிமை. ஓர்ந்த - உணர்ந்த. மெய்ப்பு ஆன மேலோன் - உண்மை நெறியுள்ள மேன்மையன். ஆடகன் என்னும் சூரன் மகன் - சூரபன்மனின் மகனுகிய இரணியன். தூயன் மேலோன் ஆகிய ஆடகன் என்க. அவன் - சூரபன்மன். ஈது - இதனை.

140. வில் ஆர் - ஒளிபொருந்திய. கனகத்திரு நாடு - சுவர்க்க லோகம். வீறுபாவம் - மிக்க பாவம். அல்லாது - அல்லது. நன்றி படுமோ - புண்ணியச் செயலாகுமோ. எல் ஆர் நயனப் பெருமான் - விளக்கத்தையுடைய மூன்று சுடர்களையும் விழியாகக்கொண்ட சிவபெருமான். வரம் அன்றி - வரத்தினுல் அன்றி. யாது - வேறு எதனுல் வென்றேரும்.

141. ஏறு - இடபம். ஏறு உற்ற தேவனெடு மாறு கொண்டார்கள் - சிவபெருமானைப் பகைத்தவர்கள். ஊறு - இடையூறு. மாறு அற்ற - மாறுபாடு இல்லாத. செல்வம் அளித்தோன் - சிவபெருமான். மாறு ஆம் ஆறு அற்று - எதிராக உள்ள பகைத்திறத்தை விட்டு. அவனை - அம்முருகனை.

மாறற்ற செல்வம் அளித்தோன்மகன் மேவின் மாரும்
ஆறற் றவனேப் பணியா(து)அமர் செய்ய லாமோ ? 141

மன்னு ! குகன்நம் பிழையால்அமர் செய்ய வந்தான் ;
பொன்னுட்(டு) அமரர் சிறைவிட்(டு)அவன் முன்பு போந்தங்(கு)
என்னு யகனே ! கொடியோம்பிழை எண்ணல் என்றே
சொன்னுல் அறுமா முகன்மீண்டிடும் என்று சொற்றுன். 142

ஈங்(கு)ஈது பால னுரைசெய்திடும் போ(து)இ டும்போன்
தீங்கான கோப முடனேசில வார்த்தை செப்ப
ஆங்காதல் மைந்தன் அறியேன்பிழை எண்ணல் ;அண்டார்
நீங்கா இறப்ப அமர்செய்குவன் என்று நின்ருன். 143

இன்பாகி வெய்யோன் அனையான்றனே ஏவ ஏகிக்
கொன்பாவு தன்இல் அணுகிப்படை யான கொண்டு
மின்பாவு நாலா யிரவெள்ளவெஞ் சேனை மேவப்
பொன்பாவு பூதர் உறுசெம்புல முன்பு போனுன். 144

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

மூச்சிர முள்ளவன் வச்சிர முள்ளவன்
மொய்ம்பினன் முன்பினன் முரணுறும் இரணியன்
அச்சமில் சேனைவெள் ளத்தைநாற் றிக்கினும்
ஆயிரம் ஆயிர மாகவே ஏகவிட்(டு)

---

142. மன்னு - அரசே; வீளி. குகன் - முருகக் கடவுள். எண்ணல் - திருவுள்ளத்தில் கொள்ளாதே. மீண்டிடும் - போர் செய்யாமல் திரும்பிப்போய் விடுவர்.

143. ஈங்கு - இவ்விடத்தில். ஈது - இதனே. பாலன் - இரணியன். இடும்போன் - கர்வத்தையுடைய சூரபன்மன். ஆம் : அசை. காதல் மைந்தன் - அன்புள்ள மகனுகிய இரணியன். அறியேன் - (தந்தையை நோக்கி ஐயனே!) சிறியேன். அண்டார் - பகைவர். நீங்கா இறப்ப - உயிர்நீங்கி இறந்துபட.

144. இன்பாகி - மகிழ்ந்து. கொன் பாவு தன் இல் - பெருமை பரவிய தன் வீட்டை. மேவ - பொருந்திவர. பொன் - பொலிவு. செம்புலம் - இரத்தத்தால் சிவந்த போர்க்களம்.

145. மூன்று தலையையுடையவனும், வச்சிரத்தன்மை பொருந்திய வலிய தோளையுடைய வச்சிரவாகுவினுக்குத் தமையனும் ஆகிய இரணியன் என்க. வன் மொய்ம்பினன் - வலிய தோளையுடையவன். எச்சம் இல் - குறைவில்லாத. குடதிசை - மேற்றிசை. ஈடு - பெருமை. வீரனும் - வீரவாகு தேவரும். அவுணர்கோன் - இரணியன்.

எச்சமில் குடதிசைச் சேனையோ டேகினுன் ;
ஈடுசேர் வீரனும் நால்வகைத் திக்கினும்
மெச்சுதன் சேனையைப் பொரவிடுத்(து) அவுணர்கோன்
மேவுறும் திக்கிலே மேவினன் தானுமே. 145

சாரதத் தானையும் தானவத் தானையும்
தங்களில் போர்செயச் சண்முகற்(கு) இளையவன்
நீரமுற்(று) இரணியன் தன்னெடும் வந்தவெஞ்
சேனையில் பல்லவச் சோனையைச் சிந்தியே
கோரமுற்(று) அடுதலும் தகுவர்கோன் ஆயிரம்
கோல்விடுத்(து) ஆயிரங் கோடியாய் நீடிய
பாரிடச் சேனையைப் பாரிடத் தேயடப்
பாங்குறும் பூதர்தாம் ஏங்கியே ஓடினுர். 146

சாரதற்(கு) இறையவன் நீலனும் போரினுன்
தான்அவன் முன்புபோய்த் தானவன் மேவிய
தேரெடுத்(து) அம்பரத்(து) எறியவே தேரொடும்
சென்றுமீண் டிடுதலும் சிலனும் நீலனும்
நேருறச் சினமொடே மாகமேல் வேகமாய்
நில்லுநில் லென்றுபோய் நீசன்மா மைந்தனைப்
பாரமெய்த் தாளினுல் உருளவே உதையவே
பாரின்மேல் வீழ்த்தலும் பாய்ந்தனன் மேனிமேல். 147

நன்பதத் தால்அவன் றனைமிதித் திடுதலும்
தாழ்ந்திடும் வீறலினன் வீழ்ந்திடுஞ் சோரியன்
துன்புடைத் தாகியோர் மேனிதன் போலவே
துஞ்சுரு விஞ்சையால் தோன்றுவித் திடுதலும்

---

146. சாரதத்தானை - பூதப்படை. தானவத் தானை - அசுரர் படை. நீரம் - மனத்தைரியம். பல்லவச் சோனையை - அம்பாகிய மழையை: உருவகம். தகுவர்கோன் - இரணியன். பாரிடச்சேனையை - பூதப்படையை. பாரிடத்தே - பூமியில். அட - கொல்லுதலினுல். பாங்குஉறும் - அங்கிருந்த. ஏங்கி - பயந்து.

147. தான்அவன், தான்: அசை. அவன் - இரணியன். தானவன் - இரணியன. அம்பரத்து - ஆகாசத்தில். நீலன் என்னும் பூதத்தலைவன் இரணியன் தேரை எடுத்து ஆகாசத்தில் வீசினுன் என்க. சீலம் - ஒழுக்கமுள்ள. மாகமேல் போய் - ஆகாசத்திலே போய். நீசன் மா மைந்தனை - இரணியனை. பாரமெய்த் தாளினுல் - பெரிய காலினுல். இரணியனை உதைத்துக் கீழே விழச்செய்து அவன்மேலே நீலன் பாய்ந்தான் என்க.

நன்புகழ்ப் பூதனுங் கண்(டு)அதைச் சாடவே
நணிதொடர்ந்(து) இருபதம் நலியவே மெலியவே
மன்புகழ்த் தேர்மிசைத் துயர்அகன்(று) ஏறினன்
வாளிபூ தன்மிசை வஞ்சனுஞ் சிந்தினன். 148

மண்டுதீ வாளிதான் வந்துபட் டிடுதலும்
வாடிவெம் பூதனும் மண்ணின்மேல் நின்றிடக்
கண்டனன் வீரன்நற் றேரொடுங் குறுகியே
கையன்மா யத்தினைக் கையினில் கவினுறக்
கொண்டதேர்ர் ஞானவே லால்அழித் திடுதலும்
கொடியன்ஓர் ஆயிரங் கோல்விடுத் திடவிரைந்(து)
ஒண்டிறற் புயமுடைக் காளைதன் மார்பகத்(து)
உந்துகோல் வந்துபட்(டு) ஒல்லைதூள் உற்றவே[1]. 149

மாணுறுந் திறலுடைக் காளைபின்(பு) ஆயிர
வன்சரஞ் சிந்தியே மன்னவன் பின்னுறும்
தூணியும் தூணிசேர் வாளியும் வாளிசேர்
தூவிலும் தூவிலார் துங்கவன் தேரையும்
நாணுறும் படிகெடுத்(து) அவன்உரம் பஃறுளை
நண்ணவே செய்துபின் நண்ணலன் நண்ணிய
சேணிருந் தேரெலாம் நூறுநூ(று) அம்பினல்
தேவர்கொண் டாடவே சிந்தினன் ருனரோ. 150

---

148. அவன்தனை - இரணியனை. தாழ்ந்திடும் பிறவினன் - குறைந்த வலி மையையுடையவனாகி. இரணியன் தன் கூப்போலவே தோன்றும்படி வேரூர் உடலை மாயையால் உண்டுபண்ண, நீலன் அவ்வுருவத்தைத் தொடர்ந்து சென்று, மெலிவடைய, இரணியன் மூர்ச்சை தெளிந்து தேரில் ஏறி யுத்தம் செய்யத்தொடங்கினன் என்க. விஞ்சையால் - வித்தையினால். பூதன் - நீலன். இருபதம் நலியவே மெலியவே – இரண்டு கால்களும் வருந்தி மெலிவடைய.

149. தீ வாளி - அக்கினி மயமான பாணம். பூதன் - நீலன். வீரன் - வீரவாகுதேவர். கையன் மாயத்தினை - இரணியன் செய்த மாயத்தை. (கையன் - வஞ்சகன்.) காளை - வீரவாகுதேவர். அவர் மார்பில் பட்ட பாணங்கள் பொடிப்பட்டன.

150. மாண் - மாட்சிமை. காளை - வீரவாகுதேவர். வன் சரம் – கொடிய பாணம். மன்னவன் - இரணியன். தூணி - அம்புப் புட்டில். தூ வில்லும் - தூய வில்லும். தூ வில் ஆர் ; வில் - ஒளி. துங்க - பரிசுத்த முள்ள. வன் - வலிய. அவன் உரம் பல் துளை நண்ண - அவன் மார்பிலே

பா-ம்—1 உற்றதே.

இச்செயல் கண்டுபின் எண்ணலான் எண்ணுவான் :
ஈங்கியான் முடிகுவன் ; எந்தையும் முடிகுவன் :
நிச்சயம் பிறர்களு முடிகுவர் ; முடிவரேல்
நீள்கடன் செய்யவோர் நிருதர் இங்(கு) இல்லையால் ;
அச்செயல் புரியநான் உறுவன்என்(று) உன்னியே
அருவமாய் மீனமாய் ஆழியுட் போயினன் ;
பச்சிமத் திசைதனக்(கு) எதிர்படுந் திசைதனில்
பானுவந் தான்இருட் பந்தியைச் சிந்தியே. 151

ஆனவிச் செயலினீ ஒற்றர்கண்(டு) ஏகியே
அடலுடைச் சூரன்முன்(பு) அணுகியங்(கு) அறையவே
ஈனமுற் றிடுகொடுஞ் சூரன்மா மைந்தன்அங்(கு)
எரிமுகன் கடிதுவந்(து) எனினவிடுத் திடுதியான்
ஊனமுற் றழிவுறத் தெவ்வரைச் சீறியிங்(கு)
ஒல்லைவந் திடுவன்என்(று) உரைசெயா நின்றிட
மானமுற் றிடுவிறல் புதல்வ! போய் வென்றுபின்
வருதிஎன்(று) ஓதினன்; மன்னர்தம் மன்னவன். 152

பல துவாரங்கள் உண்டாகும்படியாக. நண்ணலன் - பகைவன் : இரணியன். சேண் - உயர்ந்த. இரும் - பெரிய. சிந்தி - அழித்து.

151. எண்ணலான் - பகைவன் ; இரணியன். நீள் கடன் செய்ய - இறந்தவர்களுக்கு உரிய ஈமக்கடன்களைச் செய்ய. நான் உறுவன் - நான் உயிரோடு வாழ்வேன். (இங்கு மகனின் கடமையை. "மைந்தனைப்பெறுகின்றதும் மாசிலாப், புந்தியன்பொடு போற்றி வளர்ப்பதும், தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்றிட, அந்த மில்கடன் ஆற்றுதற் கேயன்றே ?" எனவரும் கந்தபுராணம் – இரணியன் யுத்த படலம் 126-ம் செய்யுளால் அறிக.) ஆழியுள் - கடலுக்குள். பச்சிமத்திசை - மேற்குத்திக்கு. எதிர் படுந்திசை - கிழக்கு. பானு - சூரியன். பந்தி – வரிசை.

152. எரிமுகன் - அக்கினிமுகாசுரன் ; இவன் இரண்டு தலைகளையுடையவன் ; இளமையில் திருமாலின் வாகனமாகிய கருடனையும், பிரமதேவனின் வாகனமாகிய அன்னத்தையும் பிடித்துவந்து விளையாடியவன் ; தன் தமையனைப் போல ஆகவேண்டும் என்றே சூரியனுக்குப் பதிலாகச் சந்திரனைச் சிறைப்படுத்தியவன் ; மிக்க பலமுடையவன் ; வஞ்சனைகளிலும் மாயங்களிலும் மிக வல்லவன் ; எவ்வித ஆயுதங்களையும் அழிக்கும் வன்மை படைத்தவன் ; பரம துஷ்டன். தெவ்வரைச் சீறி - பகைவரை அழித்து. புதல்வ - மகனே ! விரி. மன்னர்தம் மன்னவன் - சூரபன்மன்.

நாலாநாட் பகல் அக்கினிமுகாசுரன் வதை

—o—

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

என்றுசொற் றிடுதலும் புறமதிற் கடிதுவந்(து)
ஏருலா வும்பெருந் தேரின்மீ(து) ஏறியே
துன்றிமொய்த் திடும்அடற் சேனையோர் எண்ணிலார்
சூழவந் தேகியே தூயவெம் பூதர்சேர்
வென்றியுற் றிடுநெடுஞ் செம்புலத்(து) அணுகலும்
வீறுசா ரதர்களும் விறலுலாம் நிருதரும்
நின்றுபற் பலபடைக் கலம்எறிந்(து) எதிருரு
நீடுவெஞ் சமரமாம் நிலைமைசெய் தாரரோ. 153

அந்தவே லையில்விறல் வியர்வில்வந் துதயமாம்
அரியசீர் வீரர்போய் அவுணர்தஞ் சேனையில்
பந்திகொண் டிடுநெடுஞ் சாயகஞ் சிந்தியே
பாடுகண் டிடுதலும் பதகர்அங்(கு) ஓடினர்
நிந்தைதீர் மேகனே சோமனே யாதியாம்
நிருதமன் னவர்செருப் பொருதஅவ் வாறுகண்(டு)
உந்துசீர் எண்மரில் திறலுடைச் சதமகன்
ஒல்லைசென்(று) எய்திஞன்; ஒன்னலார் தங்கள்நேர். 154

போர்புரிந்(து) எதிர்பொருந்(து) இந்துகண் டகனையும்
புயலினன் தன்னையும் பொன்றுறப் புரிதலும்
ஏர்புரிந் திடுமுரத்(து) ஏனையோர் ஓடினர்;
எரிமுகன் இதுதெரிந்(து) எரிமுக ஞகியே

---

153. மதிற்புறத்தில் விரைவில் வந்து என்க. ஏர் – அழகு. எண் இலார் - அளவற்றவர். செம்புலம் – போர்க்களம். நிருதர் - அசுரர். சமர மாம் நிலை செய்தார் - யுத்தமாகிய செயலைச் செய்தார்கள்.

154. வியர்வில் வந்து உதயம் ஆம் – வேர்வையிலே உதித்த. வீரர் - லக்ஷ வீரர். பந்தி - வரிசை. சாயகம் - அம்பு. பாடு கண்டிடுதலும் - பகைவருக்கு அழிவைச் செய்யவே. பதகர் - பாதகராகிய அரக்கர். திறலுடைச் சதமகன் - வீர புரந்தரன்.

155. இந்துகண்டகன் - சோமன். புயலினன் - மேகன்; இவ்விருவரும் அக்கினிமுகாசுரனுக்கு உதவியாக வந்த அசுரர்கள். பொன்றுஉற - இறக்கும் படியாக. உரத்து - வலிமையையுடைய. எரிமுகன் - அக்கினிமுகாசுரன். எரி முகனுகியே - கோபத்தால் கொதிக்கும் முகத்தையுடையவனுகி. கொள்கை -

கூர்புரிந் திடுநெடுங் கணைசொரிந்(து) அடலொடும்
கொள்ளவெம் பூதரைக் கொன்றுநேர் நின்றிடச்
சீர்புரிந் திடுதிறல் சதமகன் கண்டனன்
சீற்றமேல் கொண்டனன் சிலைகுனித் தானரோ. 155

வெய்யனுக்(கு) எதிரணைந்(து) அடுசரம் பொழிதலும்
விறலுடைத் தகுவனும் மிகுசரஞ் சிதறியே
சையமொத் திடுபுயத் திறலுடைச் சதமகன்
தனுவையுந் தேரையுஞ் சாபவண் தூணியும்
வையகம் புகழவே நூறிஓர் நூறுகோல்
மார்பிடைச் சிந்தலும் வன்மைபோய் நிற்பஅ(து)
ஒய்யெனக் கண்டவன் துணைவராம் எழுவரும்
ஓல்லைசென்(று) எய்திஞர் ஒன்னலான் முன்னரே. 156

சிலைவலைத்(து) அளவிலாக் கணைதமைச்[1] சொரிதலும்
திறலுடைத் தகுவனுஞ் சிலசரத் தினைஅவர்
மலையினைப் பொருபுயத் தெய்யவே அவர்அவன்
மாமுகத் தாயிரம் மார்பில்அத் தொகைபுயம்
தலையிடத்(து) ஆயிரம் கையிடத்(து) ஆயிரம்
சாயகந் தொட்(டு)அவன் தேரையும் தடிதலும்
கொலையுடைக் கொடியனேர் தேரின்மீ(து) ஏறினன்
கோல்விடுத்(து) அதனையும் கூறுசெய் தாரரோ. 157

தேரழித்(து) அவனுடல் துளைபடுத் திடலும்ஓர்
தேரின்மீ(து) ஏறியே சிவனருட் படையினைச்
சிரமுடைத் தகுவர்கோன் எழுவர்மேல் விடுதலும்
தீநெடும் படைஎனச் சிந்தைமீ(து) எண்ணியே

மிகுதி. திறல் சதமகன் - (நவவீரரில் ஒருவனுகிய) வீரபுரந்தரன். குனித்தான் - வளைத்தான்.

156. வெய்யனுக்கு - அக்கினிமுகாசுரனுக்கு. தகுவனும் - அக்கினிமுகாசுரனும். சையம் - மலை. சதமகன் தனுவையும் - வீரபுரந்தரனது வில்லையும். சாபவண் தூணியும் - அம்பருத் தூணியையும். (சாபம் - வில்.) கோல் - அம்பு. வன்மை போய் நிற்ப - வீரபுரந்தரன் மெலிவடைந்து நிற்க. எழுவரும் - வீரவாகுதேவர், வீரபுரந்தரன் அல்லாத ஏனைய ஏழுபேரும்.

157. தகுவன் - அக்கினிமுகாசுரன். அவர் புயத்து எய்யவே என்க. அவர் அவனுடைய முகம், மார்பு, புயம், தலை, கை ஆகிய அங்கங்களில் ஆயிரம் ஆயிரம் அம்புகளை எய்தனர் என்க. சாயகம் தொட்டு - அம்புகளை எய்து.

பா—ம்- 1 கணைதனைச்.

வீரமுற் றிடுபுனற் படைவிடச் சோதிவேல்
விரைவின்உண்(டு) அணுகிஏழ் வீரரைக் கொன்றதால்
வாரியிற் பொலிதரும் பூதர்ஆ னவரெலாம்
வாய்புடைத்(து) அலறினர் வாடினர் ஓடினர். 158

சுதெலாங் கண்டனன் பூதரைக் கையமைத்(து)
இங்குநீர் அஞ்சல்மின் என்னஅங்(கு) ஓதியே
ஆதிகண் தனில்வருங் குமரனுக்(கு) இளையவன்
அனல்முகக் கொடியன்முன்(பு) அணுகவே இருவரும்
சோதிவெங் கணைகள்தூய் அமர்புரிந் தார்கள்;பின்
சூர்மகன் பரன்மகன் தூயமுண் டத்திடைத்
தீதுறுங் கணைகள்ஓர் ஆயிரந் தொடுதலும்
செய்யவன் சிறியிச் செய்கைபின் செய்குவான். 159

ஆயிரங் கணைகள்தூய் அவுணர்கோன் இரதமும்
அங்கையிற் சாபமும் அழிவுசெய் திடுதலும்
வேயுறுந் தோளுடைப் பதுமைதன் பாலகன்
வேறுதேர் ஏறியோர் வீறுதண்(டு) உந்தஅச்
சேயிருந் திறலுடைக் கதையையோர் கணையினற்
சிதைவுசெய் திடுதலுஞ் சிலைபிடித்(து) அவுணர்கோன்
வாயுவின் படைசமன் படைகதிர்ப் படைவிட
மற்றவப் படைவிடஇ மாற்றினன் வீரனே. 160

158. அக்கினிமுகனுடைய தேரை அழித்து அவன் உடம்பையும்துணித் தார்கள். சிவன் அருட்படை - சிவாஸ்திரம். அவர்கள் சிவாஸ்திரத்தை ஆக்கினேயாஸ்திரம் என்று எண்ணினன்க. வருணஸ்திரத்தை அக்கினியாஸ் திரம் என்று விடவே, சிவாஸ்திரம் அவ்வெழுவரையும் கொன்றது. தீ நெடும் படை – ஆக்கினேயாஸ்திரம். புனற்படை - வாருணாஸ்திரம். சோதிவேல் - சிவாஸ்திரம். 'உண்டு - விழுங்கி. வாரியின் - கடலிலப்போல.

159. அஞ்சல்மின் - பயப்படாதிர்கள். ஆதி - சிவபெருமான். இளை யவன் - வீரவாகுதேவர். அனல்முகக் கொடியவன் - அக்கினிமுகாசுரன். பரன் மகன் - வீரவாகுதேவருடைய. முண்டத்திடை - நெற்றியில். தொடு தலும் - எய்யவே. செய்யவன் - வீரவாகுதேவர்.

160. தூய் - தூவி. சாபமும் - வில்லும். வேயுறும் தோள் - மூங் கிலைப் போன்ற தோளையுடைய. பதுமை - பதுமகோமளை : இவள் சூர பன்மனின் மனைவி. தண்டு உந்த – கதாயுதத்தை ஏவ. அச்சேய் - அவ் வீரவாகு தேவர். அக்கினிமுகன் வாயுவாஸ்திரம், யமாஸ்திரம், சூரியா ஸ்திரம் என்பவற்றை விட, வீரவாகுதேவர் அந்த அஸ்திரங்களுக்கே எதிராகவிட்டு அவற்றைத் தடுத்தார் என்க.

ஆனைதன் பின்னவன் பின்னவன் பின்னரும்
அனல்முகத் தவன்உரத்(து) அம்புநூ(று) உய்ப்பவே
ஈனமற் றிடுமணித் தேரின்மீ தேவிழுந்(து)
எருவைநீர் பெருகஅங்(கு) எரிமுகன் துயர்உறீஇத்
தான்முனம் வழிபடுந் தன்னகர்க் **காளியைத்**
தன்னகத்(து) உன்னலும் தானையோ(டு) எய்தினுள்
மானமுற் றிடுதிறல் தெவ்வரைக் கொல்லுவன்
மைந்த !அந்த் சேல்எனு வந்தனள் பூதர்மேல். 161

ஆங்கவெம் பூதர்மேற் சூலமொன்(று) உந்தஅச்
சூலம்அங்(கு) ஆலமே போலவந் திடுதலும்
சங்கரன் மாமகன் பின்னவன் சீறியேழ்
சாயகங் கொண்டதைத் தடிதலுஞ் சண்டிகை
வெங்கொடுஞ் சினமொடே பின்பும்ஓர் சூலவேல்
விடுதலும் ஆயிரம் வெஞ்சரந் தூண்டியே
அங்கது தன்னையும் மங்குவித் திடுதலும்
அண்ணல்சேர் தேரின்மீ(து) ஆர்த்துவந்(து) எய்தினுள். 162

பாங்குறுங் காளிஎண் கையுமோர் கையினுல்
பற்றியே மார்பகத்(து) எற்றியே நிற்றலும்
ஏங்கியே சோகமாய் எருவைநீர் விழுவிழுந்(து)
இடரகன் றிடஎழுந்(து) ஏத்தினுள் வாழ்த்தினுள்
ஆங்குநின் றிலள்விரைந்(து) ஏகினுள் ; ஈதுகண்(டு)
அங்கிமா முகல்எழுந்(து) அடல்பெறுஞ் சிலைபிடித்(து)
ஓங்குநூ(று) அம்பினுல் மொய்ம்பினன் தேரறுத்(து)
ஊதியம் ஆயதென்(று) ஊதினன் சங்கமே. 163

---

161. ஆனை - யானை: விநாயகர்; அவருக்குப் பின்னவன் முருகக்கடவுள்; அவருக்குப் பின்னவன், வீரவாகுதேவர். உரத்து – மார்பில். உய்ப்ப - விட. எருவை நீர் - இரத்தம். துயர் உறீஇ - துன்பமுற்று. அகத்து உன்னலும் - மனத்தில் தியானித்தவுடன். தானையோடு - சேனையோடு. மைந்த : விளி. பூதர்மேல் வந்தனள் என்க. வந்தனள் - சென்றாள்.

162. ஆலமே போல - விஷத்தைப் போல. பின்னவன் - வீரவாகு தேவர். சாயகம் - அம்புகள். சண்டிகை - காளி. மங்குதல் – கெடுதல். அண்ணல் - வீரவாகுதேவர்.

163. எண் கையும் - எட்டுக் கைகளையும். எற்றி - (மற்றொரு கையினுல்) குத்தி. சோகமாய் - (காளி) மூர்ச்சையாகி. எருவைநீர் - இரத்தம். மொய்ம்பினன் - வீரவாகுதேவரது. ஊதியம் ஆயது – வெற்றி உண்டாயிற்று.

நீதிலா வீரன்ஈ ரேழுகோல் கொண்டுபின்
தீமுகத் தியவன் சிலையறுத் திடஅவன்
வேதனுர் படைதனைக் கடவலும் திறலினுன்
வீரபத் திரன்படை விடுதலும் கடிதுபோய்ப்
போதனுர் படைதனைச் சிந்திவெந் தழல்முகன்
பொன்றவே முடிகளைந்(து) அண்ணல்கைப் புக்கதால் ;
ஆதரச் சுரரெலாம் மொய்ம்பன்மேல் மலர்சொரிந்(து)
ஆடினுர் உவகையால் அவசமே ஆயினுர். 164

வன்னிசேர் மாமுகன் பட்டதைக் கண்(டு)அவன்
மட்டிலாச் சேனையோர் மானமும் வீரமும்
துன்னவந்(து) எய்தியே பலபடைக் கலமெலாம்
தூவிவெம் போர்செயத் தூயவன் சீறியே
மன்னிடும் புயலெனக் கணைசொரிந் திடுதலும்
வாடினுர் ஓடினுர் மாண்டுளா ராயினுர் ;
அன்னதன் பின்னர்எண் பூதரும் எழுவர்அல்
லாததம் பியரும்அந்(கு) அருகுவந்(து) எய்தினுர். 165

அன்னபோ(து) எழுவராந் துணைவரைக் கண்டிலான்
யாவ(து)ஆ னுர்கொலோ ? ஆவிபோ னுர்கொலோ ?
என்னவே உக்கிரன் கனல்முகன் படையினுல்
எழுவரும் பொன்றினுர் என்றுகூ றிடுதலும்

---

164. வீரன் - வீரவாகுதேவர். ஈரேழு கோல்கொண்டு - பதினான்கு அம்பை எடுத்து. தீமுகத் தியவன் - அக்கினிமுகாசுரன். வேதனுர்படை - பிரமாஸ்திரம். கடவலும்—எய்தவுடன். திறலினுன் –வீரவாகுதேவர். போதனுர் படை - பிரமாஸ்திரம். தழல்முகன் பொன்ற - அக்கினிமுகாசுரன் இறக்கும்படி. முடிகளைந்து - தலையை அறுத்து. ஆதரம் - அன்பு. சுரர் - தேவர். மொய்ம்பன்மேல் - வீரவாகுதேவரின்மேல். அவசமே ஆயினுர் - தம்மைமறந்த நிலையை அடைந்தனர்.

165. வன்னிசேர் மாமுகன் – அக்கினிமுகாசுரன். துன்ன - பொருந்த. தூயவன் - வீரவாகுதேவர். புயல் என - மேகத்தைப்போல. வாடி ஓடி மாண்டனர் என்க. எண்பூதரும் - யாவரும் மதிக்கும் பூதகணத்தினரும். எழுவர் அல்லாத தம்பியர் - இங்கு வீரபுரந்தரன் என்பவன்.

166. எழுவர் - வீரபுரந்தரனே ஒழிந்த ஏனைய எழுவராகிய. துணைவர். தம்பிமார்களை. என்னவே - என்று கேட்க உக்கிரன் என்னும் பூதகணன்கூறிடுதலும் என்க. கனல்முகன் - அக்கினிமுகாசுரன். பொன்றினுர் - இறந்தனர். கிடந்துழி அடைந்து - இறந்துகிடந்த இடத்தை அணுகி. நனி - மிகுதி.

இன்னுயிர்த் துணைவராம் அவர்கிடந் துழியடைந்(து)
இருகணீர் சொரியஅங்(கு) எதிர்விழுந்(து) அலறினன்
நன்னயத் தம்பிமீர்! தம்பிமீர்! என்றனன்
நனிபுலம் புற்றனன் ஆடருந் திறலினன். 166

(கலி நீலத்துறை)

இன்ன பான்மையின் துயருழந்(து) அறுமுகன் இளையோன்பின்
மன்னி ருந்திறல் துணைவரை எழுப்புவான் மனங்கொண்டு
பின்னு றுங்கணைத் தூணியின் ஒருகணை பிடுங்காஅங்(கு)
அன்ன தன்றலி[1] உகிரினுல் எழுதுவான் அடலோடும். 167

வெற்றி வேலுடைக் குமரனுக்(கு) இளையவன் விடுத்திட்டேன்
உற்ற அந்தகன் காண்க;என் தம்பியர் உயிர்கொண்டாய்;
நற்றி றங்கொலோ? விடுமதி கடிதென நனிதிட்டிச்
செற்ற மோடுதன் சிலையிடைப் பூட்டியே செலவுய்த்தான். 168

மாற்ற ருங்கடல் ஏழையுங் கடந்துபோய் வயமேவும்
கூற்றன் முன்னரே வீழ்தலுந் தெரிந்தனன் குறித்(து) உள்ளத்(து)
ஆற்ற வஞ்சினன் தேடினன் கயிலையின் அடைந்திட்டான்
வீற்றி ருந்தனர் அவ்விடை எழுவராம் விறலோரும். 169

பூண்ட போரிடை இறந்தவெங் கணமெலாம் புடைசூழ
ஆண்டி ருந்தனர் அந்தகன் தொழுதனன் அடன்மேவி

ஆடு அரும் திறலினன் - வெற்றியையும் அரிய வலிமையினையும் உடைய வீரவாகுதேவர்.

167. துயர்உழந்து - வருந்தி. அறுமுகன் இளையோன் - வீரவாகுதேவர். எழுப்புவான் - உயிரோடு எழுப்ப. அன்னதன் தலை—அந்தப் பாணத்தின் நுனியில். உகிரினுல் - நகத்தினுல்.

168. இளையவன் - தம்பி. விடுத்திட்டேன் - இதை அனுப்பினேன். அந்தகன் காண்க - யமன் இதைப் பார்ப்பானுக. நல் திறம் கொலோ - நல்ல நீதியோ. கடிது விடுமதி - விரைவில் விடுவாயாக; மதி: முன்னிலை அசைச்சொல். நீட்டி - எழுதி. செற்றமோடு - கோபத்தோடு. சிலை - வில்.

169. வய - வலிமை. கூற்றன் முன்னர் - யமனுக்கு முன்னுலே. வீழ்தலும் - வீரவாகுதேவர் எழுதிவிட்ட கணையானது சென்று வீழ. உள்ளத்துக் குறித்து - மனத்தில் வீரவாகுதேவரின் கட்டளையை நினைந்து. ஆற்ற - மிகுதியாக. ஏழு வீரர்களும் யமலோகத்தில் இல்லாமல் கைலாசத்தில் இருந்தனர் என்க.

பா-ம் 1 அன்ன தின்றலி.

நீண்ட தோளினுன் தேடினன் வம்மென நிகழ்(வு)ஓத
ஈண்டு தானையோ(டு) எழுவரும் அமர்க்களத் திடைவந்தார். 170

இலங்கு தத்தம(து) உருவினில் புகுந்தனர் எழுந்தேபின்
நலங்கொள் வீரனே வணங்கலும் அனையவன் நயமோடும்
அலங்கல் மார்புறத் தழுவினன் மகிழ்ந்தனன் அதுபோதில்
விலங்கு முவிறல் அந்தகன் வந்தனன் விறலோன்முன். 171

தொழுது வீர!நீ என்றனே முனிந்தனே ; துணையோரைப்
பழுது செய்வனே ? அவர்பெருங் கயிலையிற் படர்ந்தாரென்(று)
எழுது வாசகங் கண்டபின் இயற்றிய(து) எழிலோன்முன்
முழுதும் ஓதினன் முனியல் என்(று) ஏகினன் முரட்காலன். 172

ஈதெ லாந்திறல் ஒற்றர்கண்(டு) ஏகியே இருஞ்சூரன்
பாதம் வந்தனே புரிந்தனர் எரிமுகன் பட்டான்என்(று)
ஓதி னுர்அவன் அரற்றினன் புலம்பினன் உறுபோதில்
காதல் மைந்தர்மூ வாயிரர் வந்தனர் கடியோன்முன். 173

மூவாயிரம் பிள்ளைகள் வதை

—o—

(கலி நீலத்துறை)

வந்து தந்தைவெந் துயர்அறச் சிலமொழி வருத்தோதி
வெந்தி றற்சமர்க்(கு) ஏகுதும் யாம்என விடைகொண்டு

---

170. பூண்ட - நேரிட்ட. வெம் கணம் எலாம் - வலிய பூத கணத்தினர் அனைவரும். அந்தகன் - யமன். அடல் மேவி நீண்ட தோளினுன் - வீரவாகு தேவர். வம் என - வாருங்கள் என்று. ஈண்டு தானையோடு - பிக்க சேனையோடு. அமர்க்களத்திடை - போர்க்களத்திற்கு.

171. உருவினில் - பிணமாகக் கிடந்த உடல்களில். வீரனே - வீரவாகு தேவரை. நயம் - அன்பு. அலங்கல் - பூமாலே. விலங்குமு - தடுக்கமுடியாத. அந்தகன் - யமன். விறலோன் முன் - வீரவாகு தேவரின் முன்னே.

172. வீர : வினி. என்றனே முனிந்தனே - என்னைக் கோபித்தாய். துணையோரை - நின்தம்பியருக்கு. பழுது - தீமை. படர்ந்தார் - சென்றார். வீரவாகு தேவர் எழுதிய கட்டளையுரையைக் கண்டவுடன் தான் செய்த காரியங்கள் எல்லாவற்றையும் யமன் அவரிடம் சொன்னன் என்க. முரண் - வலிமைபொருந்திய.

173. ஒற்றர் - சூரபன்மனுடைய தூதர்கள். எரிமுகன் - அக்கினி முகாசுரன். பட்டான் - இறந்தான். உறுபோதில் - அப்போது. மூவா

பந்தி கொண்டதேர் ஏறியங்(கு)அளவிலாப் படைசூழ
உந்து வீரனும் படைஞரும் உறுகளத் துற்றாரால். 174

மாய மேசெயும் அவுணரும் பூதரும் மலைவாகி
ஓய்வில் பற்பல படைக்கலஞ் சொரிந்(து)அம ருறுபோதில்
தியர் சேனையும் பூதர்தஞ் சேனையுஞ் சிலமாளப்
போயெ திர்ந்தனர் கடிதுமூ வாயிரம் புகழ்வீரர். 175

கதிர்கொள் வாளிதூய்ப் பூதரை அடுதலுங் கணமன்னர்
எதிர்பு குந்(து)அமர் இழைத்திட அவரிவர் எழின்மெய்யில்
பதிவு றும்படி கணைவிட இடரொடும் படிநின்றூர்
அதிர்த ருங்கழல் இலக்கரில் ஆயிரர் அதுகண்டார். 176

கண்டு வீரனைத் தொழுதனர் விடைகொடு கடிதேகி
எண்ட ரும்புகழ் விசயனே யாகிஆ யிரவீரர்
மண்டு கோல்மழை சொரிதலும் அவரும்அம் மழைதூவ
அண்டி ருந்திறல் இருவகைக் கணையும்நேர்ந்(து) அமர்செய்த. 177

ஆய காலைமூ வாயிரர் ஆயிரத் தவர்தேரைச்
சாய கங்கொடு சிதைத்தலுந் தூயவர் சரந்தூண்டித்
தியர் தேரையுந் தனுவையுந் துணித்தனர் தேர்புக்கார் ;
மாய வந்தவர் சீறியே ஈறிலா வரைஉய்த்தார். 178

வீறு வெற்பெலாங் கணையினுல் சிதறியே விறல்கோல்தூய்ச்
சிறி வெய்யர்மெய் துளைத்திட அவுணரில் சிலர்இன்னேர்

யிரர் - மூவாயிரம் பிள்ளைகள் ; இவர்கள் சூரபன்மனின் பதுமகோமளை யல்லாத ஏனைய மனைவிமார்களின் புதல்வர்கள்.

174. ஏகுதும் - போவேம். பந்தி - வரிசை. வீரனும் படைஞரும் உறுகளத்து - வீரவாகு தேவரும் அவருடைய படை வீரர்களும் இருந்த போர்க்களத்தை. மூவாயிரம் பிள்ளைகள் போர்க்களத்தை அடைந்தார்கள் என்க.

175. மாயம் - மாயவித்தை. மலைவாகி - போர்செய்யத் தொடங்கி.

176. தூய் - தூவி. கணமன்னர் - பூதத்தலைவர்கள். இடரொடும் - துன்பத்தோடு. படிநின்றூர் - பூமியில் பூதர்நின்றனர்.

177. வீரனை - வீரவாகுதேவரை. மண்டு - மிகுதியான. அவரும் - மூவாயிரம் பிள்ளைகளும். அண்டு - நெருங்கிய. நேர்ந்து - ஒன்றதனை ஒன்று எதிரிட்டு.

178. ஆயிரத்தவர் - விசயன் முதலாகிய ஆயிரவீரர்களுடைய. சாயகம் கொடு - அம்பினுல். தூயவர் - ஆயிரவீரர். தனுவையும் - வில்லையும். மாய வந்தவர் - போர் செய்து இறக்கத்துணிந்து வந்த மூவாயிரர். வரை உய்த்தார் - மலைகளைப் பிடுங்கி எறிந்தார்கள்.

ஏறு தேரெடுத்(து) உவரிமேல் எறிந்திட எழில்வீரர்
மாறில் பூமிசைப் பாய்ந்தனர் பின்னரும் வந்துற்றார். 179

செற்ற வெங்கணை சொரிதலும் அவுணரில் சிலர் இன்னோர்
உற்ற கைச்சிலை பறித்தொடித் திடஅவர் உரமீதே
எற்றி னர்அவர் தாமும்அங்(கு) எற்றினர் இகல்கூடி
மற்றெ ழில்தனைப் புரிந்தனர் இருவகை வலியோரும். 180

ஈது செய்தலும் விசயனே அன்றிமற் றெல்லோரும்
போத நொந்தனர் அவுணருக்(கு) உடைந்தனர் புறந்தந்தார்;
தாது லாந்தொடை விசயனுட் பீறியே சரஞ்சிந்தித்
தீது லாவுசூர் மைந்தரைத் துணித்தனன் சிதைத்திட்டான். 181

இறந்த பேர்களும் துணிந்துள பேர்களும் எழுந்தேபின்
மறந்த ருஞ்செருப் புரிந்திட வியந்தனன் மனநொந்தே
சிறந்த வேலனே நினைத்தலும் ககனமேல் செவ்வேள்வந்(து)
உறைந்து நின்றுதன் தாள்தொழு விசயனுக்(கு) உரைசெய்வான். 182

மாய்ந்த வஞ்சகர் அறுவதும் எழுவதும் மலரோன்முன்
ஈந்த நல்வரம் அவர்இனிக் கெடஇதை எறிகென்றே

---

179. மலைகளை அம்புகளால் பொடியாக்கி அசுரர் மெய்யைத்துளைத்தனர். வெய்யர் - அசுரர். அவுணர் - அசுரர். உவரிமேல் - கடலில். பூமிசை - பூமியில்.

180. செற்றம் - கோபம். அவர் உரமீதே - அசுரர்களின் மார்பின் மேல். எற்றினர் - அடித்தார். இகல்கூடி - பகை மிகுந்து. மல் தொழில்தனை - மல்யுத்தத்தை. இருவகை வலியோர் - பூதரும் அசுரரும்.

181. விசயனே அன்றி - விசயனைத் தவிர. போத - மிகவும். நொந்தனர் – வருந்தி; முற்றெச்சம். உடைந்தனர் புறந்தந்தார் - தோல்வியுற்று முதுகுகாட்டி ஓடினர். தாது - பூந்தாது. தொடை - மாலை, சூர் மைந்தரை - மூவாயிரவரை. துணித்தனன் - சிலரை வெட்டினான். சிதைத்திட்டான் - சிலரைக் கொன்றான்.

182. துணிந்துள பேர்களும் - துண்டுபட்டுக் கிடந்த அசுரர்களும். மறம் - வீரம். செரு – போர். ககன மேல் - ஆகாயத்தின் மீது. செவ்வேள் – முருகக்கடவுள்.

183. அறுவதும் எழுவதும் - இறப்பதும் மீண்டும் உயிர்பெற்று எழுவதும். மலரோன் – பிரமதேவன். இதை எறிக - இந்த ஆயுதத்தை விடுவாயாக. காய்ந்த வெஞ்சினம் - மிக்க கோபம். காரி வேல் - வயிரவாஸ்திரம். காரி - வயிரவன். உன்மத்தனும் அசுரேசன் - உன்மத்தன் என்னும் பெயரையுடைய அசுரர் தலைவன்; இவன் மூவாயிரவருள் ஒருவன்.

காய்ந்த வெஞ்சினக் காரிவேல்;அருளினன் கரந்திட்டான்;
ஆய்ந்(து)உ ணர்ந்தனன் இதனீஉன் மத்தனும் அசுரேசன். 183

மிக்க மாயவள்[1] படையினீ விடுத்தலும் விசயன்தான்
அக்க ணந்தனில் காரிதன் படைவிட அதுபோந்து
புக்க மாயவள் படையழித்(து) அவுணர்கோன் புகழ்மைந்தர்
தக்க மும்மைஆ யிரரையும் கொன்றது சயமாக. 184

மும்மை ஆயிரம் புதல்வர்கள் முடிந்ததை முரண்ஒற்றர்
மம்ம ரோடுகண்(டு) ஓடினர் சூரன்முன் மருவுற்றீ(து)
அம்ம! ஓதலும் அரற்றினன் புலம்பினன் அதுபோதில்
வெம்மை கொண்டசெங் கதிரவன் அடைந்தனன் மேல்வேலை. 185

எண்ட ரும்புகழ் மதுரையே கதிர்விசும்(பு) இருண்மேவும்
கொண்டல் மண்(டு)அமண் குண்டரே தாரகைக் குலமெல்லாம்
அண்டர் நாயகர் அடியரே செக்கரே அழல்திங்கள்
துண்டம் வாதில்வே கா(து)எழும் ஏ(டு)எனத் துலங்கிற்றே. 186

---

184. மாயவள் படை - மாயாஸ்திரம்: மாயை அளித்த ஆயுதமுமாம். காரிதன் படை – வயிரவாஸ்திரம். போந்து - போய். புக்க - (எதிரில்) வந்த. தக்க - சொல்லத் தக்க. சயம் ஆக – வெற்றியுண்டாகும்படி.

185. முரண் - வலிமை. மம்மர் - மயக்கம். ஈது - மூவாயிரம் பிள்ளைகள் இறந்த செய்தியினை. கதிரவன் - சூரியன். மேல் வேலை - மேற்குத் திக்கிலுள்ள கடலில். சூரியன் மறைந்தான் என்க. அம்ம: அசைநிலை.

186. இச்செய்யுள் சந்திரோதய வருணனை ஆகும். திருஞான சம்பந்தர் மதுரையில் சமணர்களோடு வாது செய்த காலத்தில் நெருப்பிட்ட ஏடு சந்திரனுக்கு உவமை. எனஎன்பதை மதுரை, குண்டர், அடியர், செக்கர் முதலியவற்றோடும் கூட்டுக. வானத்துக்கு மதுரையும், மேகத்துக்குச் சமணரும், நட்சத்திரத்திற்குச் சிவனடியார்களும், செவ்வானத்திற்குத் தீயும், பிறைக்கு ஏடும் உவமைகள்.

கதிர் விசும்பு – சூரிய சந்திரர் உலாவும் வானம். அமண்குண்டர் - கீழ்மக்களாகிய சமணர்கள். தாரகைக் குலம் - நட்சத்திரக் கூட்டம். அண்டர்நாயகன் - சிவபெருமான். செக்கர் - செவ்வானம். திங்கள் துண்டம் – பிறைச்சந்திரன். வாதில் - திருஞான சம்பந்தர் சமணர்களோடு செய்த வாதத்தில். ஏடு - "போகமார்த்த பூண்முலையாள்" என்று தொடங்கும் திருநள்ளாற்றுத் திருப்பதிகம் எழுதிய ஏடு.

பா-ம்—1 மாயவன்.

நாலாநாள் இரவு தருமகோபன் வதை

—o—

(கலி நிலைத்துறை)

இன்ன பான்மையில் கங்குல்வந் திடுதலும் இருஞ்சூரன்
தன்னை வந்தடைந்(து) அறப்பகை புந்திசிற் சிலசாற்றி
ஒன்ன லார்தம(து) உயிர்குடித்(து) ஒல்லைஈண் டுறுவேனென்(று)
அன்ன வன்றனை விடைகொடு புறந்தனில் அடைந்திட்டான். 187

புண்ட ரீகமா மாதிரப் போதகப் பிடர்புக்கே
அண்டர் அஞ்சுற எண்ணிலாப் பெரும்படை அயல்சூழ
மண்டி ருந்திறல் பூதர்சூழ் பறந்தலை வந்திட்டான் ;
சண்ட மூற்றிடும் அவுணரும் பூதருஞ் சமர்செய்தார். 188

இருதி றத்தரும் எண்ணிலாப் படைஎறிந்(து) இகல் கொண்டு
பொருதி றஞ்செய அவுணரில் அமைச்சரும் புகழ்வேர்வில்
வருதி றத்தரும் எதிர்ந்தனர் சமர்த்தொழில் மருவுற்றார் ;
திருமி குத்திடும் அவுணரும் பூதருஞ் சிலர்மாண்டார். 189

இலக்க வீரரும் வன்மைபோய் நொந்தனர்; இதுகண்டு
விலக்க ரும்புகழ் வீரமார்த் தாண்டனும் விறலோன்சென்(று)
அலக்க ணுற்றிடக் கணைசொரிந்(து)அமைச்சரை அடல்நோக்கித்
தலக்க னின்றிடுந் தானவர் எதிர்ந்தனர் சமர்செய்தார். 190

ஓங்கு பூதர்கள் பலமலை விடுதலும் உடைந்தார்கள் ;
தீங்கு லாவிய அறப்பகை கண்(டு)இது சினமேவித்

---

187. கங்குல் - இரவு. அறப்பகை - தருமகோபன் என்னும் அசுரன் ; இவன் சூரபன்மனின் அமைச்சன் ஆம். ஒல்லை – விரைவில்.

188. புண்டரீகம் என்ற தென்கீழ்த் திக்கு யானையின் கழுத்தின் மேல் ஏறிக்கொண்டு என்க. மாதிரம் - திக்கு. போதகம் - யானை. அண்டர் - தேவர்.. பறந்தலை - போர்க்களம். சண்டம் - கொடுமை ; வேகமுமாம்.

189. இகல் - பகை. பொருதிறம் செய - யுத்தம் செய்ய. வேர்வில் வரு திறத்தரும் – லக்ஷ வீரர்களும். திரு - செல்வம்.

190. நொந்தனர் - வருந்தினர். அலக்கண் - துன்பம். அமைச்சரை - அசுர மந்திரிகளை. தலக்கண் நின்றிடும் தானவர் - பூமியின்மேல் நின்ற அசுரப் படைஞர்.

191. உடைந்தார்கள் - தோல்வியுற்றார்கள். அறப்பகை - தருமகோபன். மெலிந்தனர் - பூதர்கள் தளர்ச்சி அடைந்தார்கள். அடல் - வலிமை. பூதர் அடல் நீங்கி மெலிந்தனர் என்க.

தாங்கி ரும்புகழ்ப் பூதர்மீ(து) அளவிலாச் சரஞ்சிந்த
ஆங்கு மேனிமேற் படுதலும் மெலிந்தனர் அடல்நீங்கி. 191

காலிற் கொன்றிடும் ; மருப்பினுற் கொன்றிடும் ; கவின்மேவும்
வாலிற் கொன்றிடும் ; கரத்தினுற் கொன்றிடும்; வயப்பூதக்
கோலச் சேனையை இவ்வகை கொடியவன் கொடுவேழம்
சாலக் கோறலும் சாரதர் ஓடினர் தரைமீதே. 192

கண்டு வென்றிசேர் கதிரவன் கடிதுபல் கணைசிந்திப்
புண்ட ரீகமீ(து) அழுத்தலும் அயர்ந்தது;பொலிசீற்றத்(து)
அண்டர் மாற்றலன் சீறியே நூறுகோ லவைஏவிக்
கொண்ட சோரிநீர் எழுந்திட அழுத்தினன் குளமீது. 193

உதிர மோடுதன் தேருறத் தியவன் ஒருவேலை
எதிர்வி டுத்தலும் வீரமா புரந்தரன் என்போன்நால்
கதிர்நெ டுங்கணை விடுத்(து)அது தடுத்துவெங் கணைமாரி
துதிபொ ருந்திய அவுணன்மேல் பொழிந்தனன் சுரர்போற்ற.194

தரும கோபன்ஏ வால்அவை விலக்கிஓர் தண்(டு)உந்த
மருமம் மீதது வந்துபட் டிடுதலும் மயக்குற்றான் ;
கருமம் மீதுகண்(டு) அடல்பெறுந் தோளினன் கடி(து)ஏக
வருமம் வன்றன்மேல் பொழிந்தனன் இழிந்தவன் மழைவாளி. 195

விட்ட வாளிபட்(டு) ஒடிந்திட வீரனோர் வீறல்வேலை
ஒட்ட லன்தன்மேல் விடுத்திடச் சென்(று)அவன் உரத்தூடே

192. மருப்பினுல் - தந்தத்தினுல். கவின் - அழகு. வய - வலிமை. கோலம் - வடிவு. கொடியவன் - தருமகோபன். கொடு - கொண்டுள்ள. சால - மிகுதி. சாரதர் - பூதர்கள்.

193. வென்றிசேர் கதிரவன் - வீரமார்த்தாண்டன். புண்டரீகம் - தருமகோபன் ஏறிவந்த யானை. அயர்ந்தது - தளர்ச்சியை அடைந்தது. அண்டர் மாற்றலன் - தருமகோபன். சோரிநீர் - இரத்தம். குளமீது - நெற்றியில்.

194. இரத்தமானது ஓடுகின்ற தன் தேரில் இருக்கும்போது அடிக்க என்க. தியவன் - தருமகோபன். நால் கணை விடுத்து - நான்கு அம்புகளை எய்து. அது - அவ்வேலை. துதி - யாணைத்தோட்டி; அங்குசம். அவுணன் - பானுகோபன். சுரர் - தேவர்.

195. ஏ வால் அவை விலக்கி - அம்பினால் அந்த நான்கு அம்புகளையும் தடுத்து. (ஏ - அம்பு) தண்டு - தண்டாயுதம். மருமம் - மார்பு. மயக்குற்றான் - வீரபுரந்தரன் மயங்கி விழுந்தான். அடல் பெருந்தோளினன் - வீரவாகுதேவர். ஏக வரும் அவன்தன்மேல் என்க. இழிந்தவன் - தருமகோபன். மழைவாளி - அம்பாகிய மழையினை ; உருவகம்.

பட்டு வெங்கிடைப் பறிதலும் உளம்பதை பதைப்புற்று
மட்டில் சோரியோ(டு) இருந்தனன் கரிமிசை மயல்ஆகி. 196

அந்த வேலியில் அவன்கரி மனஞ்சினந்(து) அடல்மேவும்
தந்தி மாமுகற்(கு) இளையவற் கிளையவன் தடந்தேரை
உந்து நாற்பெருங் கோட்டினுல் தாக்கியே உயர்பாகன்
சிந்து றும்படி புடைத்தது கரத்தினுல் திறலோடும். 197

ஆன காலியில் வேறுதேர் ஏறியே அடல்வீரன்
கான மாமலைக் கரிகரம் பிடித்தனன் கவுள்மோதி
ஈன முற்றிட அப்புறத் துலகிடை எறியப்போய்த்
தான வர்க்(கு)உளந் துணுக்குற விழுந்தது தரைமீது. 198

விழுந்து மண்மிசைத் துன்பொடு கிடத்தலும் விறல்வெய்யோன்
எழுந்து தண்டமொன்(று) உந்தினுன் அன்னதை எழில்வீரன்
செழுந்த னிச்சுடர் வாளினுல் சிதைப்பவச் சிரம்உய்த்தான்
அழுந்து சீருள வச்சிரங் குறுகிய(து); அடலோன்முன். 199

வந்த வச்சிரம் பாணியில் பிடித்துவஞ் சகன்மீதே
உந்த அங்கது படுதலும் பதைபதைத் துடன்வீழச்

---

196. வீரவாகுதேவரின்மேல் விட்ட அம்புகள் ஒடிந்து போயின. அவர் ஒருவேலைத் தருமகோபன் மேல்விட அது மார்பிலே பட்டு உருவி முதுகு வழியாகச் செல்லவே தருமகோபன் யானையின்மேல் மயக்க மடைந்தான் என்க. ஒட்டலன் - பகைவன் : தருமகோபன். உரத்தூடே - மார்பினுள்ளே. வெங் கிடைப் பறிதலும் - முதுகு வழியே வெளிப்பட. சோரியோடு - இரத்தத் தோடு. மயல்ஆகி - மயக்கம் அடைந்து.

197. அவன் கரி - தருமகோபனது புண்டரீகமென்னும் திக்கு யானை. தந்தி மா முகற்கு இளையவன் - முருகக்கடவுள் : அவர்க்கு இளையவன் - வீரவாகு தேவர். கோட்டினுல் - தந்தத்தினுல். சிந்துறும்படி - இறக்கும்படி.

198. அடல் வீரன் - வீரவாகுதேவர். கான மா மலைக் கரிகரம் - காடுகளையுடைய பெரிய மலையைப்போன்ற யானையின் துதிக்கையை. கவுள் மோதி - கன்னத்தில் அறைந்து. தானவர்க்கு - அசுரர்களுக்கு. துணுக்கு உற - அச்சம் உண்டாகும்படி.

199. விறல் வெய்யோன் - தருமகோபன். வீரன் - வீரவாகுதேவர். தருமகோபன் விட்ட தண்டாயுதத்தை வீரவாகுதேவர் வாளினுல் வெட்டினுர் என்க. வச்சிரம் உய்த்தான் - அசுரன் வச்சிராயுதத்தை விட்டான். அழுந்து - உறுதியான.

200. வீரவாகுதேவர் வச்சிராயுதத்தைக் கையால் பற்றித் தருமகோபன் மேலே திருப்பிவிட்டார் ; அதுபடவே, அவன் பதைபதைத்து விழ

அறைந்து போர்க்(கு) அவன் றனி விடை கொண்(டு) அவண் அகன்றபின்
குறைந்தி டாப்பெருந் தேர்மிசை ஏறினன் குழுவாகி
நிறைந்த எண்ணிலாச் சேனைகள் சூழ்தர நெடுங்கூளிப்
பறந்த லைக்களஞ் சென்றனன் இரவிதன் பகையானான். 208

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

அந்த வேலையில் பூத வீரரும்
அவுண வீரரும் அடலி னெடுத்(து)
உந்து போர்செயத் தூசி யாகிமுன்(பு)
உற்ற பூதர்அங்(கு) உடைவ தாயினர் ;
வந்து பின்(பு) உறும் பூதர் தானவர்
மாறு மாறுமா ருன போர்செயச்
சுந்த ரந்தருஞ் சூரன் மாமகன்
தூவி னன்கணை தூய பூதர்மேல். 209

வாளி பட்டிடப் பூத ராயினோர்
வாடி ஓடினர் ; மங்கை பாலகன்
தாளின் அன்புறுந் திறல்கொள் மொய்ம்பினன்
தான வப்பெருந் தானை யானதைத்
தூளி யாகவெங் கணைபொ ழிந்திடச்
சூரன் மாமகன் தூயன் முன்புபோய்க்
கோளி ருங்கரச் சிலைவ ளைத்தனன்
கோர ஆயிரங் கோல்வி டுத்தனன். 210

ஆயி ரஞ்சரம் அகலம் மூழ்கிவெந்
அகல வேயக லாத மொய்ம்பினன்
தியல் துன்பமோ(டு) ஆயி ரஞ்சரம்
தியன் மொய்ம்பிடைச் செலவி டுத்தலும்

---

208. அறைந்து - (மகிழ்ச்சியுண்டாகும்படி) சொல்லி. குழுவாகி - கூட்டமாகக்கூடி. கூளிப் பறந்தலை - பூதர்கள் இருந்த போர்க்களத்திற்கு. இரவிதன் பகை ஆனான் - பானுகோபன்.

209. அந்த வேலையில் - அச்சமயத்தில். தூசி ஆகி - முன்னே உள்ள படையாகி. உடைவது ஆயினர் - தோல்வியுற்றனர். மாறுமாறு - போரை விட்டுவிட்டுப் போகுமாறு. மாறு ஆன - எதிரான. மாமகன் - பானுகோபன்.

210. மங்கை பாலகன் - முருகக் கடவுள். மொய்ம்பினன் - வீரவாகு தேவர். தூளி ஆக - பொடியாகும்படி. கோள் இரும் கரச்சிலை - கொலை

நோயு முந்துபின்(பு) அண்ணல் வில்லிஓர்
நூறு கோலினுல் நூறி நிற்கஓர்
மாய்வில் வேலினைத் தீயன் நெற்றியுள்
மன்ன உய்த்தனன் வாகை வாகினுன். 211

பெருகு சோரிநீர் மிகள முந்திடப்
பெருகு துன்பமாய்ப் பின்தெ ளிந்தனன்;
முருகு கொண்டிடுந் தொடையல் வீரன்ஓர்
மூரி வெஞ்சிலை முரணெ டும்பிடித்(து)
அருகு நின்றிடும் தகுவர் அஞ்சவே
அனில மன்படை அங்கி யின்படை
கருகு மெய்யுடைக் கொடியன் நேர்விடக்
கடிய னும்மவை கடவி மாற்றினுன். 212

மாற்றி வஞ்சகன் கதிர வன்படை
மலரி னன்படை மால்பெ ரும்படை
சிற்ற மாகியே விடனும் அன்னவை
செலுத்தி வீரனுந் தடுத்து நின்றிட

செய்வதற்குரிய பெரிய கைவில்லை. ஆயிரம் கோரக்கோல் என்க. கோல் - அம்பு.

211. அகலம் மூழ்கி-வீரவாகுதேவர் மார்பிலே பதிந்து. வெங் அகலவே-முதுகின் வழியே ஊடுருவிச் செல்ல. அகலாத மொய்ம்பினன் - அழியாத வலிமையையுடைய வீரவாகுதேவர். மொய்ம்பிடை - தோளில். நூறி - அழித்து. ஓர் - ஒருவராலும். மாய்வு இல் - அழிதல் இல்லாத. தீயன் நெற்றியுள் மன்ன - பானுகோபனது நெற்றியிலே பதியும்படி. வாகை வாகினுன் - வெற்றி பொருந்திய தோளையுடைய வீரவாகுதேவர். (வாகு - தோள்.)

212. சோரி நீர் - இரத்தம். பெருகு துன்பமாய்ப் பின் தெளிந்தனன் - மிக்க துன்பமடைந்து செயலற்றுப் பிறகு தெளிவடைந்தான். முருகு - நறுமணம். தொடையல் - மாலை. மூரி - வலிமை. முரண் - பலம். தகுவர் - அசுரர். அனிலமன்படை - வாயுவாஸ்திரம், அங்கியின்படை - ஆக்கினேயாஸ்திரம். கொடியன் நேர் விட - பானுகோபனுக்கு எதிரே விட. அவனும் அத்தகைய பாணங்களையே எய்து அவற்றைத்தடுத்தான் என்க. கடவி-எய்து.

213. பானுகோபன் சூரியாஸ்திரம், பிரமாஸ்திரம், நாராயணாஸ்திரம் ஆகிய இவற்றை விட வீரவாகுதேவரும் அவற்றையே விட்டுத் தடுத்தார். பிறகு பானுகோபன் மாயத்தால் மறைந்து பாணங்களைச் சொரிந்தான் என்க. வஞ்சகன் - பானுகோபன். மலரினன்படை - பிரமாஸ்திரம். அம்பரத்தினில் - ஆகாசத்தினில். இறுதிமாரிபோல் - ஊழிக்காலத்து மழையைப் போல. வீரன்மேல் சரம் தூவினன் என்க.

ஆற்றல் கொண்டிடுந் தனது மாயையால்
அரிய தேரினே(டு) அம்ப ரத்தினில்
தோற்றி டா(து)ஒளித்(து) இறுதி மாரிபோல்
தூவி னஞ்சரம் தூய வீரன்மேல். 213

கள்ள வஞ்சகன் முன்பு பின்புமாய்க்
கணைசொ ரிந்திடக் காமர் மெய்யெலாம்
வெள்ள மானசெங் குருதி ஓடவே
வீர வாகுவும் வெகுளி கொண்டுபின்
தள்ள ரும்புகழ்ப் போத கப்படை
தனைவி டுத்தலும் தகுவன் மாயம்அங்(கு)
எள்ளி யாவரும் நகைசெ யும்படி
இரிய விண்ணிடைத் தெரிய நின்றனன். 214

மற்ற வன்றனைக் கண்டு சிறியே
வஞ்ச கா! இனி எங்கண் ஏகுதி ;
நிற்றி நிற்றியென்(று) அம்ப ரத்தின்மேல்
நெடிய தேரொடுந் கடிதின் எய்தியே
கற்று ணைப்புயன் கொண்ட லாம்எனக்
கணைசொ ரிந்திடக் கண்டு மண்டுகோல்
எற்ற லோந்தசூர் மைந்தன் உந்தஅங்(கு)
இந்த வாறுபோர் இயற்றி னாரோ. 215

கிட்ட வந்திடும் ; சேணில் ஏகுறும் ;
கிளரும் ஒன்றையங் கொன்று சென்றுநேர்
முட்டும் ; எட்டதாம் மாதி ரத்தினும்
மூரி வானினும் முடுகி யேகுறும் ;

---

214. காமர் - அழகு. செங்குருதி - இரத்தம். போதகப் படை - ஞானஸ் திரம். தகுவன் - அசுரன். அங்கு - அப்போது. எள்ளி - இகழ்ச்சிசெய்து. இரிய - கெட்டுநீங்க. மாயம் இரியத் தெரிய நின்றனன் என்க.

215. வஞ்சகா - வஞ்சகனே: விளி. நிற்றி நிற்றி-நில் நில் நில்: அடுக்குத் தொடர். அம்பரத்தின் மேல் - ஆகாசத்தின்மேல். கற்றுணைப்புயன் - கல் தூணையொத்த தோளையுடைய வீரவாகுதேவர். கொண்டலாம் என - மேகம் பொழிவதுபோல. மண்டுகோல் - மிக்க அம்புகளை. எல் தகுந்த சூர் மைந்தன் - பானுகோபன். உந்த - நெருங்கி. அங்கு - அவ்விடத்தில் ; ஆகாயத்தில்.

இட்ட மானதேர் இருமை வீரரும்
இகழு வார்செருப் புகழு வார்சரம்
தொட்டு வால்விறல் சங்கம் ஊதுவார் ;
சூள் இ யம்புவார் ; சூழு வாரரோ. 216

வரையி லோடும்;மா முகிலி லோடும்;மேல்
வான மோடும்;நீர் வளமு லாவுதெண்
திரையி லோடும்;மூ தண்ட மோடும்;எண்
திசையி லோடும்;அத் திசைகள் சூழுமித்
தரையி லோடும்;நீள் பிலத்தி லோடும்;மெய்த்
தான வர்க்கெலாம் அரச னுகிய
விரையு லாந்தொடைப் பானு கோபனும்
வீர வாகுவும் விடுச ரங்களே. 217

பாங்கு கொண்டுநூ ருயி ரந்தொகைப்
பல்ல வங்களால் பல்ல வம்புரிந்(து)
ஓங்கு சூர்மகன் வீரன் ஏறுதேர்
ஒழிவு செய்யஓ ராயி ரஞ்சரத்(து)
ஆங்கு வெய்யவன் தேரை வீரனும்
அழிவு செய்யவில் அமர்பு ரிந்தபின்
தீங்கில் வாள்பிடித்(து) இருமை வீரரும்
சென்(று)எதிர்ந்துநேர் நின்று போர்செய்தார். 218

மன்னி டும்புகழ்ச் சூரன் மாமகன்
வள்ளல் மாமகள் வாள்வி லக்கியே
கொன்னு றுந்திருத் தோளில் வெட்டிடக்
குருதி வீழ்தரக் குமர வேள்பதம்

---

216. இட்ட - அருகில். சேணில் - நெடுந்தூரத்தில். மாநிரத்தினும் - திசைகளினும். மூரி - வலிமை. முடுகி - வேகமாக. வால் விறல் சங்கம் - வெள்ளையாகிய வெற்றிச் சங்கை. சூள் - வஞ்சினங்களை.

217. வரையில் - மலைமேல். முகிலில் - மேகத்தில். திரையில் - கடலில். பிலத்தில் - பாதாள உலகத்தில். விரை உலாம் தொடை - மணம் வீசும் மாலையை அணிந்த.

218. ஒருவர் தேரை மற்றொருவர் அழித்துவிட்டு இருவரும் வாட்போர் செய்யலாயினர் என்க. பாங்குகொண்டு - தக்க தருணத்தை மேற்கொண்டு. பல்லவங்களால் - அம்புகளால். பல் அவம் புரிந்து - பல தீங்குகளைச்செய்து. ஒழிவுசெய்ய - அழிக்க. ஆங்கு - அப்பொழுதே. இருமை - இரண்டு.

உன்னி வீரரில் தலைமை பெற்றுளான்
ஒன்ன லன்வலத் தோளை ஒல்லையின்
மின்னு அன்னதாய் மின்னு வாளினுல்
வீழ்வு றும்படி வெட்டி னனரோ. 219

சீரு லாவுதன் வலது கைத்தலம்
சிதைவ தாகவே தியன் மாமகன்
ஏரு லாவுறும் இடது கைத்தலத்(து)
இலகு வாள்பிடித்(து) எதிர வீரனும்
கோர வாளினுல் வாம பாணியைக்
குறைவு செய்(து)அவன் கொடுமை உன்னவே
சூரன் மாமகன் தலையை விண்ணுளார்
துள்ளி ஆடவே தள்ளி னனரோ. 220

(கலிவிருத்தம்)

மான்மகன் மகன்மகன் மகன்ம டிந்திட
லான்மக பதிமுதல் அமரர் துள்ளினுர்;
வேல்மகி பனைநினை வீர வாகுவும்
தான்மன மகிழ்ந்தனன் சபத முற்றியே. 221

உற்றசீர் முடியற ஒளிகொள் பானுவின்
பற்றலன் மடிதலும் பாரின் மேவியே

---

219. வள்ளல் மாமகன் - சிவபெருமானின் புதல்வராகிய வீரவாகு தேவர். கொன் - பெருமை. திருத்தோளில்-வீரவாகுவின் அழகிய தோளில். உன்னி - நினைத்து. பெற்றுளான்-பெற்றவன். வீரவாகுதேவர், ஒன்னலன்-பகைவனது. மின்னுவாளினுல் - மின்னலைப்போல மின்னுகின்ற வாளால்.

220. தியன் மாமகன்-பானுகோபன். எதிர - எதிர்த்துப் போர் புரிய. வாம பாணியை- இடக்கரத்தை. குறைவுசெய்து - வெட்டி. அவன்கொடுமை உன்னவே - பானுகோபனின் கொடுஞ்செயலை நினைக்கவே; இங்குக் கொடுஞ் செயல், பானுகோபன் மாயாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்யக் கருதினதை என்று கந்தபுராணம் கூறும்.

221. மால் - திருமால்; மால் மகன் பிரமதேவன்; அவன் மகன் காசிபன்; அவன் மகன் சூரபன்மன்; அவன் மகன் பானுகோபன். மகபதி - இந்திரன். வேல்மகிபனை - முருகக்கடவுளை. சபதம் - பானுகோபனைக் கொன்று லன்றித் திரும்புவதில்லை என்ற சபதம்; இந்நூல்-யுத்த காண்டம் – 136-ஆம் செய்யுளைக் காண்க.

222. சீர்உற்ற - சிறப்புப் பொருந்திய. முடி - தலை. பானுவின்பற்றலன் - பானுகோபன். பாரின்மேவியே - (ஆகாயத்தை விட்டு) பூமியில் வந்து. வேலன் - முருகக் கடவுள்.

சுற்றிய படையெலாஞ் சூழ வேலன்முன்
வெற்றியோ(டு) அணைந்தனன் வீர வாகுவே. 222

இன்புறு முருகனே இறைஞ்சி நிற்றலும்
துன்பொடு வருந்துநீ[1] சூரன் மைந்தனைக்
கொன்புனை புயத்தினாய் ! கொன்று வந்தனை ;
அன்பொடு வேண்டிய(து) அறைதி என்றனன். 223

என்றிவை குமரவேள் இசைப்பக் கேட்டலும்
உன்றனை அலதியான் ஓர்செ யற்கையும்
இன்றுசெய் ததுசிறி(து) இல்லை யாயினும்
ஒன்றொரு வரந்தனை உதவ வேண்டுமால். 224

அண்டர்பொய் வாழ்வையும் அயன்பொய் வாழ்வையும்
விண்டுவின் வாழ்வையும் வெஃகி லேனியான்
தண்டைகள் அணிந்தநின் சரணத்(து) அன்பையே
கொண்டிட வேண்டுவன் என்று கூறினன். 225

என்றுழி அளித்தனம் என்று வேலவன்
துன்றிய புகழுடைத் துணைவர் தம்மொடும்
வென்றிகொள் இருக்கையில் வீர வாகுவைச்
சென்றிட விடுப்பஅவ் விருக்கை சேர்ந்தனன். 226

பானுவின் மாற்றலன் பதைத்து வீழ்ந்துயிர்
போனதை நாடியே போந்தங்(கு) ஒற்றர்தாம்

---

223. இன்பு உறு - நித்தியானந்தராகிய. கொன் - பெருமை. வந்தனை - வந்தாய். அறைதி - கேட்பாயாக.

224. உன்றனை அலது - உன்னை அன்றி. ஓர் செயற்கையும் - ஒரு செயலும். சிறிது இல்லை - கொஞ்சமும் இல்லை.

225. அண்டர் - தேவர். அயன் - பிரமதேவன். விண்டு - திருமால். வெஃகிலேன் - விரும்பவில்லை. தண்டை - ஒருவகைக் காலணி -சரணத்து - திருவடிகளில். வேண்டுவன் - விரும்புகின்றேன்.

அழிவில்லாத சிவபோகம் நுகரும் மெய்யன்பர்களால் அழியும் தன்மையுடைய இந்திராதியோர் போகங்கள் அருவருத்துத் தள்ளப்படும் செல்வம் என்பதும், சகல வாழ்வையும் பெற இறைவன் திருவடிக்கே அன்பு கொண்டிட வேண்டும் என்பதும் இச்செய்யுளின் உட்பொருளாகும்.

226. என்றுழி-என்று விண்ணப்பம் செய்துகொண்டபோது. துன்றிய-(நீங்காது) பொருந்திய. துணைவர் தம்முடன் - நவவீரராகிய தம்பிமார்களோடு.

தானவன் தனக்கிது சாற்றக் கேசரி
மேனிமீர் தவிசினும் வீழ்ந்(து) அ ரற்றினன். 227

அன்னதோர் காலையில் அமர்க்க ளத்திடைச்
சின்னம தாகிய சேயைத் தானவர்
முன்னமே கொடுவர முகில்பு ரைந்திடு
வன்னமே ஆனவன் வருந்தல் மேயினன். 228

சிரத்தினைக் கரத்தினைத் திருந்து மார்பினைப்
பொருத்திடும் பார்த்திடும்; புரளும்; சோர்வுறும்;
அருத்திகொள் வாய்புடைத் தலறும்; அன்(று)அவன்
பரித்திடுந் துயரையார் பகர வல்லரே? 229

மற்றிதைப் பதுமகோ மளையென் பாள்அறிந்(து)
இற்றிடு மைந்தன்முன்(பு) எய்தி மேல்விழுந்(து)
அற்றமில் துன்பொடும் அரற்றி னள்;நகர்
முற்றினும் அழுகுரல் முதிர்ந்த(து) அந்தநாள். 230

ஆறாநாள் சிங்கமுகாசுரன் வதை

—o—

(கலி விருத்தம்)

தீயவன் அன்னபின் சிலரை நோக்கியே
மாயநம் பகைஞரை மடிவு செய்துபின்

---

227. பானுவின் மாற்றலன் - பானுகோபன். தானவன் தனக்கு - சூரபன்பனுக்கு. கேசரி - சிங்கம். கேசரிமேல் நீமிர் தவிசினும் வீழ்ந்து - சிங்காதனத்திலிருந்து விழுந்து.

228. அன்னதோர் காலையில் - அவ்வாறு புலம்பி அழும்போது. சின்ன மது ஆகிய சேயை - துண்டமாய் விழுந்த பிள்ளையை. முகில் புரைந்திடு வன்னமே ஆனவன் - மேகத்தையொத்த கரிய நிறத்தை உடைய சூரபன்மன்.

229. பொருத்திடும் - உடலோடு பொருத்தி. வாய் புடைத்து - வாயில் அடித்துக்கொண்டு. பரித்திடும் - தாங்கிய. யார் - எவர். பகர - சொல்ல.

230. இதை - பானுகோபன் இறந்த செய்தியை. பதுமகோமளை - சூரபன்மன் மனைவி. இற்றிடும் - இறந்துபட்ட. அற்றம் இல் - இறுதி இல்லாத. நகர் - மகேந்திரபுரி.

231. தீயவன் - சூரபன்மன். ஒரு மகம் செய்து எழுப்புவன் - யாகம் ஒன்று பண்ணி உயிர்ப்பிப்பேன். காயம் - பானுகோபன் உடல்.

சேயினை ஒருமகஞ் செய்(து)எ ழுப்புவன் ;
காயமிங்(கு) ஒருபுடை காத்திர் என்றனன். 231

ஓங்கிய இதுபுகன்(று) உற்ற ஒற்றரைத்
தீங்கினன் நோக்கிய சென்னி யாயிரம்
தாங்கிய எம்பியைத் தருதிர் என்னலும்
ஆங்கவர் வடதிசை அளக்கர் மேவினர். 232

ஓவிலா அதனிடை உயர்ந்த விண்ணுளார்
பூவினர் புகழ்தரு புரத்துட் கோயில்போய்
மேவினர் நிகழ்ந்தன விளம்பி னர்உணக்
கூவினன் சூர்எனக் கூறி னரரோ. 233

என்றலும் அரிமுகன் எழுந்து சேனையோ(டு)
ஒன்றுசீர் மகேந்திரம் அணுகி உம்பரை
வென்றவன் அடிமிசை வீழ்ந்தெ ழுந்துநீ
என்றனைக் கூவிய(து) என்னை என்னவே. 234

முந்துற நிகழ்ந்தன முறையில் கூறியே
கந்தனும் முருகவேள் கருதிப் போர்செய
வந்தனன் ; அவனைநீ வல்லை ஏகிவென்(று)
உந்துசீர் படைத்(து)இவண் உறுதி என்றனன். 235

---

232. தீங்கினன் - நல்லோருக்குத் தீங்கு புரியும் சூரபன்மன். சென்னி யாயிரம் தாங்கிய எம்பி - சிங்கமுகாசுரன். எம்பி - என் தம்பி : மரூஉ பெயர். இஃது அன்பு பற்றிய சொல். தருதிர் - அழைத்து வாருங்கள், வட திசை அளக்கர் - வடகடல். மேவினர் - அடைந்தனர்.

233. ஓ இலா - குறைதல் இல்லாத. பூவினர் - பூமியில் உள்ளவர்கள். புரத்துள் - ஆசுரம் என்னும் நகரில்உள்ள. கோயில் போய் - அரண்மனைக் குள் சென்று.

234. அரிமுகன் - சிங்கமுகாசுரன். உம்பரை வென்றவன் - சூரபன்மன். கூவியது - அழைத்தது. என்னை - என்ன காரணம்.

235. முந்துற நிகழ்ந்தன - அதற்குமுன் நடந்தவற்றை. வல்லை - விரை வில். இவண் - இவ்விடம். உறுதி - வருவாயாக.

தமையன் கூறியதைக் கேட்ட சிங்கமுகன், அவனை வணங்கி, " ஐயனே ! இப்போது புத்திரர் முதலியோரை இழந்துவிட்டனை ; முருகக்கடவுளைப் பாலன் என்று கருதினை ; என் வார்த்தைகள் உமக்கு விஷம்போல் உள் ளனவே, மேனுள் விதியை வெல்ல வல்லவர் யார் உளர் ? கந்தனை வெல்வது அரிது ; இனி நான் உன்னை வந்து காண்பதும் அரிது ; உன் கருத்துப்படி

தானவன் விடுத்தலும் தன(து)இல் மேவிஊன்
போனகம் உண்டுதேர் புகுந்(து)இ லக்கமாம்
சேனைவெள் ளப்படை சேர ஏகினன் ;
வானவர் இதுதெரீ இ வாடி ஓடினர். 236

எங்கணா யகன்எதிர் இறைஞ்சி நின்றரோ
துங்கமார் அரிமுகன் சூரன் பின்னவன் ;
அங்கவன் தனிலும்வீ(று) ஆற்றல் பெற்றவன் ;
இங்கமர் புரிந்திட எய்தி னன்என. 237

இன்னதை அறிந்துபோர்க் கெழுநி னைத்தலும்
அன்னதை அறிந்துசென்(று) ஆடல் மொய்ம்பினன்
பன்னிரு புயத்தனைப் பணிந்(து) எழுந்துநான்
ஒன்னலன் தனைஅழித் துறுகின் றேன்என. 238

அன்பொடு விடுத்தலும் அகன்(று)அ கன்றிடாக்
கொன்புனை படைக்கலங் கொண்டு தேரின்மீ(து)
இன்புடன் ஏறியே எழில்கொள் மொய்ம்பினன்
தன்பெரும் படையொடும் தகுவர்ச் சேர்ந்தனன். 239

ஆயிர மியோசனை யான மெய்யுடைச்
சீயமா முகத்தவன் சேனை யானதும்
போயெதிர் மலைந்திடும் பூதர் சேனையும்
ஆயிடை எதிர்ந்துநின்(று) அமர்பு ரிந்தவால்[1]. 240

செய்யக்கடவை" என்று கூறிவிட்டுத் தன் இருப்பிடத்திற்குச் சென்றான் என்று கந்தபுராணம் கூறும்.

236. தானவன் - சூரபன்மன். தனது இல் - தன்னிருப்பிடம். ஊன் போனகம் - மாமிச உணவை. தெரீஇ - தெரிந்து.

237. எங்கள் நாயகன் - எங்கள் நாதனாகிய முருகக்கடவுள். துங்கம் ஆர் - பலம் பொருந்திய. சூரபன்மன் தம்பியாகிய சிங்கமுகாசுரன் என்க. வீறு - மேலான.

238. இன்னதை (சிங்கமுகாசுரன்) வருவதை. ஆடல் மொய்ம்பினன் - வீரவாகுதேவர். ஒன்னலன்தனை - பகைவனை.

239. அகன்று - நீங்கி, கொன்புனை - பெருமை பொருந்திய. எழில் கொள் மொய்ம்பினன் - வீரவாகுதேவர். தகுவர் - அசுரர்களை.

240. சீயம்மா முகத்தவன் - சிங்கமுகாசுரன் ; இவன் ஆயிரம் யோசனை அளவுள்ள சரீரம் உடையவன் என்க. ஆயிடை - அவ்விடத்தில். புரிந்த - செய்தன.

பா-ம்—1 அமர் புரிந்ததால்.

திண்டிறல் படைக்கலஞ் சிதறிப் போர்செய
அண்டிய வீரரும் அவுண வீரரும்
மண்டனில் சிலர்சிலர் மாயத் தானவர்
தண்டமன் னவர்எதிர் சார்ந்து போர்செய்தார். 241

(எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்)

அன்ன காலையில் பூதர்கள் உடைய
அடல்கொள் பூதரில் சிங்கன் என்றுருவன்
தன்னெ டுங்கையில் தண்டிஞல் அவுணர்
தலைகள் சிந்திடச் சாடிஎ குதலும்
முன்னர் நின்றிடும் அவுணர்கள் தம்மின்
முரண்கொ ளும்தச முகன்எனுங் கொடியோன்
பொன்னெ டுஞ்சிலை பிடித்துவந்(து) எதிர்ந்து
புங்க வம்பல சிங்கன்மேல் பொழிந்தான். 242

வீறி வந்திடுங் கணையெலாங் கதையால்
விறல்க ணத்திறை விலக்கலுங் கொடியோன்
சீறி யோர்பெருங் கதையினை விடுப்பச்
சிங்கன் மார்பகஞ் செறிந்(து)ஒடிந் திடலும்
மாறி லாஒரு மழுப்படை விடுப்ப
வரங்கொள் சாரதன் மற்றதைக் கதையால்
ஊறு செய்திடக் குந்தமொன்(று) எறிந்தான் ;
உந்தும் ஆழிஒன்(று) உந்தினன் இவனும். 243

குந்த வேலினை ஆழிபோய் அறுப்பக்
கொடிய னேர்கதை குறிப்பொடு விடுத்தான் ;
உந்து சிங்கன(து) உரத்தின்வந்(து) அழுந்த
உதிர மேல்விழுந் தோடஅங்(கு) ஓடி

---

241. திண்திறல் - மிக்கபலமுள்ள. அண்டிய - நெருங்கிய. மண்டனில் - பூமியில். தண்டமன்னவர் - சேனாதிபதிகள்.

242. பூதர்கள் உடைய - பூதப்படையினர் தோல்வியடைய. சாடி - அடித்து. தசமுகன் - இவன் சிங்கமுகாசுரனின் சேனைத்தலைவன். புங்கவம் - அம்புகள்.

243. கணத்திறை - பூதத்தலைவனாகிய சிங்கன். கொடியோன் - தச முகன் என்னும் அசுரன். வரம் - மேன்மை. சாரதன் - சாரதியும் பூதத்தலை வனும் ஆகிய சிங்கன். ஊறுசெய்திட - அழிக்க. குந்தம் - வேல். ஆழி - சக்க ராயுதம்.

வெந்தி றல்தச முகன்உரத் தடிப்ப
விழுந்து வெய்யவன் வீந்திட அதுகண்(டு)
அந்த மற்றிடுந் தகுவர்கள் எவரும்
அமர்பு ரிந்திட அடலொடும் அடைந்தார். 244

அன்ன காலியில் இலக்கர்தங் குழுவில்
ஆற்றல் பெற்றுள அனகனும் ஒருவன்
மன்னு தானவர் தானைமுன்(பு) அணுகி
வாளி கொண்(டு)அவர் மாளவே அழிப்பத்
துன்னு தானவர் ஓடினர் அவரில்
துன்மு கத்தினன் துண்ணென எதிர்ந்து
கொன்னு றும்படி பலபல வடிவம்
கொண்டு பூதர்முன் கொடுஞ்செருப் புரிந்தான். 245

ஆய காலியில் வாகையங் கதிரோன்
அதுதெ ரிந்தனன் அறிவெனும் படையால்
மாய மானதை அழித்தலுந் தனித்து
வஞ்சன் ஆயிரம் வாளிகள் விடுப்ப
ஆயி ரங்கணை விடுத்தவை தடுத்தங்(கு)
அவன்உ டம்பினில் அழுந்திட அளவில்
சாய கந்தொட விழுந்தயர்ந்(து) அருவாய்த்
தகுவன் ஓடினன் சாரதர் மகிழ். 246

அந்த வேலியில் இந்தவா(று) அறிந்தான்
அரிமு கத்தினன் எரிமுக மானுன்
வந்தெ திர்ந்தனன் ; எதிர்தலும் பூதர்
மரக்கு லங்களும் வரைகளும் விடுப்ப

---

244. குந்தவேல் - சிறியவேல். உரத்தின - மார்பில். வெய்யவன் வீந்திட - தசமுகன் மரணம் அடைய. அந்தம் அற்றிடு - அளவற்ற.

245. அனகன் - இவன் லக்ஷ வீரர்களுள் ஒருவன். தானவர் தானைமுன்பு - அசுரசேனைக்கு முன்னுலே. துண்ணென - நடுங்க. துன்முகன் - இவன் அசுரர்களில் ஒருவன்.

246. வாகை அம் கதிரோன் - வீரமார்த்தாண்டன். அறிவு எனும் படையால் - ஞானஸ்திரத்தால். சாயகம் - அம்பு. அருவாய் - உருவம் மறைந்து அரூபியாகி.

247. அரிமுகத்தினன் - சிங்கமுகாசுரன். எரிமுகன் ஆனுன் - கோபத்தால் எரிகின்ற முகத்தை உடையவன் ஆனுன். வரை - மலே. அன்னவன்

முந்தும் அன்னவன் நாசியில் உயிர்ப்பால்
முரிந்து போயின ; முனிந்துவெம் பூதர்
மந்த ரங்களும் மரங்களும் பிறவும்
மாகர் தெவ்வன்மேல் வலியொடு விடுத்தார். 247

விட்ட இன்னவை மாகமேல் நிறைந்து
வேக மோடுபோய் விறல்அரி மூகனும்
ஓட்ட லன்றன்மேற் பட்டன ; படலும்
ஊறு செய்திலை ; உடைந்திலை ; விழுந்த ;
அட்டி டும்படி கரியினந் தனிலோர்
அரிபு குந்தென அடற்கணக் குழுவின்
வட்ட மானதன் தேரினும் இறங்கி
வந்து புக்கனன் மாயைதன் புதல்வன். 248

பற்றி னன்சில பூதர்கள் தம்மைப்
பதைத்தி டும்படி பாரஅண் டத்தில்
எற்றி னன்சில பூதர்கள் தம்மை
எயிறு துன்றிய விடிக்குரல் வாயிற்
குற்றி னன்சில பூதர்கள் தம்மைக்
குறைத்த னன்சில பூதர்கள் தம்மைச்
சுற்றி னன்சில பூதர்கள் தம்மைத்
துவைத்த னன்சில பூதர்கள் தம்மை. 249

வேதன் ஊரினில் சிலவரை வீசும் ;
விரிக டல்களில் சிலவரை வீசும் ;
மாதி ரங்களில் சிலவரை வீசும் ;
மறலி ஊரினில் சிலவரை வீசும் ;

நாசியில் உயிர்ப்பால் - சிங்கமுகாசுரன் மூக்கிலிருந்து விடுத்த மூச்சுக்காற்றினால். மந்தரங்களும் - மலைகளையும். மாகர் தெவ்வன்மேல் - சிங்கமுகாசுரன் மேல். மாகர் - தேவர்.

248. மாகமேல் நிறைந்து - ஆகாசத்தில் நிரம்பி. ஓட்டலன் - பகைவன். அட்டிடும்படி - கொல்வதற்காக. அரி புகுந்தென - சிங்கம் புகுந்தாற் போல. கணக்குழுவின் - பூதப்படைக்குள்ளே. மாயை தன் புதல்வன் - சிங்கமுகாசுரன்.

249. பார அண்டத்தில் - கனமுடைய அண்ட முகட்டில். எற்றினன் - அடித்தான். இடிக்குரலையுடைய வாயில். குற்றினன் - இடித்தான். குறைத்தனன் - வெட்டினன். துவைத்தனன் - காலால் மிதித்தான்.

ஈது போலவே அமர்பல இயற்ற
எருவை நீர்விரிந்(து) இருங்கடல் புகுதப்
பூத லந்தனில் பூதர்கள் பல்லோர்
பொன்றி னார்;அவன் புகுந்தனன் தேர்மேல். 250

ஈது கண்டனன் பூதர்மன் னவரில்
எரிகொள் கண்ணினன் எதிரணைந்(து) அவுணன்
மீது தண்டமொன்(று) எறிந்திட அதுபோய்
வெய்யன் வையமேல் மேவுதேர் வலவன்
தீது கொண்டிடு சிரந்தனைக் கீளாயச்
சிங்க மாமுகன் சிறியே ஒருதண்(டு)
ஆதி மாமகன் பூதமன் னவன்மேல்
அழுந்த விட்டுழி அயர்ந்துநின் றனனே. 251

தேரின் மீது)ஒரு பாகனை நிறுவிச்
சிங்க மாமுகன் சிறிவந்(து) அணுகப்
பாரி னோர்புகழ் சுமாலி என் பவன்ஓர்
பருப்ப தந்தனைப் பறித்துநேர் விடுப்பச்
சிரு லாவுதன் கரத்தினுல் பிடித்துத்
தீதில் பூதன்மேல் திரும்பவிட் டிடலும்
வீர முற்றிடு சுமாலிதன் உரத்தில்
விரைந்து பட்டிட மெலிந்தனன் விழுந்தான். 252

அணைய காலையில் தண்டிஎன் றிருவன்
அவுணன் வையமுற்(று) அவன்றனை(து) உரத்தில்
கனமு றுங்கரக் கதையினுல் அடிப்பக்
கதைஒ டிந்தது; கரங்கொடு புடைத்தான் ;

---

250. வேதன் ஊர் – சத்தியலோகம். மாதிரங்களில் - திசைகளில். மற லியூரினில் - யமபுரியில். எருவைநீர் - இரத்தம். இருங்கடல் - பெரியகடல். பொன்றினர் - இறந்தனர்.

251. எரிகொள் கண்ணினன் - அக்கினிக்கண்ணன். தண்டம் - தண்டா யுதம். வையம் - தேர். வலவன் - தேர்ப்பாகன். ஆதி மாமகன் - முருகக்கடவு ளுக்குரிய. அயர்ந்து நின்றனன் - (அக்கினிக் கண்ணன் என்ற பூதத்தலைவன்) மயங்கி நின்றான்.

252. சுமாலி - இவன் பூதப்படையைச் சார்ந்தவன். பருப்பதம் - மலை. பூதன்மேல் – சுமாலிமேல். உரம் - மார்பு.

253. தண்டி என்னும் பூதன். அசுரன் மார்பிலே கதாயுதத்தால் அடிக்க அக் கதை ஒடிந்தது. வையம் உற்று - தேரின்மேல் தாவி. அவன்

தனது தாளினுல் அவுணனங்(கு) இவனைத்
தள்ள வீழ்ந்துபின் தண்டிவிண் ணெழுந்து
சினம தாயவன் தோளின்மேற் பாய்ந்து
செய்ய தாளினுல் திறலொடும் துவைத்தான். 253

செறிந்த தோள்களில் கரத்தினில் சிரத்தில்
சென்று சென்றுவன் திறலொடுந் துவைப்ப
அறிந்தி லான்அதை அரிமுகத்(து) அவுணன்
ஆக மீதிலோர் ஈகொல்என்(று) எண்ணிச்
சொறிந்து கையினுல் துடைப்பநொந்(து) இரிந்தான் ;
துலக்க எண்மரும் இலக்கரும் எதிர்ந்(து)எண்
இறந்த வாளிகள் சொரிந்திடப் படிமேல்
இழிந்து வந்தனன் இழிதொழில் பயின்றுரூன். 254

எடுத்தெ றிந்தனன் சிலவர்தந் தேரை ;
இலங்கும் ஒன்றினை(டு) ஒன்றுதாக் குறவே
அடித்தல் செய்தனன் சிலவர்தந் தேரை ;
அங்கை யால்சில தேர்தமை யள்ளி
ஒடித்த னன்;சில தேர்களை உதைத்தான்
உரைத்த இப்படி அநேகமங்(கு) இயற்றப்
படித்த லம்புகழ் வீரர்கள் இரிந்தார் ;
பரிந்து தேரில்அப் பதகன்ஏ றினனே. 255

(கலி நீலத்துறை)

காரிலகு பூதரொடு தம்பியர் உடைந்தசெயல் கண்டான்
வீரமுரு கற்(கு)இளைய நாதன்உள மீதினில் வெகுண்டான்
கோரமொ(டு)இருந்ததொரு கைச்சிலை தணிக்குனிவு கொண்டான்
ஓரிறையின் முன்கணை சொரிந்(து)அவுணர் தானை உயிர் உண்டான். 256

தோளின்மேல் - சிங்கமுகாசுரனது தோள்மேலே. துவைத்தான் - (மரற்றி மாற்றி) மிதித்தான்.

254. ஆகமீதில் - நம் உடம்பில். ஓர் ஈகொல் என்று எண்ணி - ஈ ஒன்று வந்து மொய்க்கிறதோ என்று நினைந்து. நொந்து - வருந்தி. இரிந்தான் - ஓடினன். எண் - அளவு. இறந்த - கடந்த. படிமேல் இழிந்து - பூமியில் இறங்கி. இழிதொழில் பயின்றுரூன் - சிங்கமுகாசுரன்.

255. சிலவர் - சிலர். அம் கையால் - அழகிய கையால். படித்தலம் - பூமியிலுள்ளோர். பரிந்து - விரும்பி. பதகன் - சிங்கமுகாசுரன்.

256. கார் இலகு - மேகம்போல விளங்குகின்ற. உடைந்த செயல் - தோல்வியுற்ற செய்தியை. இளைய நாதன் - வீரவாகுதேவர். குனிவு கொண்

கரங்களே அறுப்பன ; பதங்களே அறுப்பன ; கவின்தோய்
உரங்களே அறுப்பன ; புயங்களே அறுப்பன ; உரக்கந்
தரங்களே அறுப்பன ; கலன்களே அறுப்பன ; சயஞ்சேர்
வரங்களே மிகப்புனையும் வாளின்மொய்ம் பாளிவிடு வாளி. 257

மாறவுணர் சேனைபல தூளிபட வாளிகொடு வள்ளல்
சீறியமர் செய்தலும் அரிப்பெரு முகன்தனது சேயோர்
நூறெனும் இலக்கமுடை யார்அவ ரெதிர்ந்தனர் நுதிக்கோல்
வீறுமுகி லாமென விடக்கணைகள் விரனும் விடுத்தான். 258

விடுத்தவை தடுத்(து)அவர் எடுத்தசிலை தேரைமிகு வெங்கோல்
தொடுத்(து)அவன் அழித்திட மனத்திடை சினத்தவர்கள் தூவாள்
பிடித்(து)அமர் இயற்றுற விளிக்கஅ விரப்படை பிடித்தே
படித்தல மதிப்பொடு குதித்தவர் தமக்கெதிர் படர்ந்தான். 259

வாளது பிடித்துவரும் அண்ணல்எதிர் வந்தனர் வளைந்தார்
தோளிடை உரத்திடை கரத்திடை எறிந்தனர்கள் தூயோள்
கோளுருவில் ஊறிலது கண்டனர்பிடித்தனர் கொதித்தே
ஆளரி முகன்குமரர் சிந்திவிழ வாள்விசிறி அட்டான். 260

டான் - வகைத்தான். ஓர் இறையின்முன் - ஒரு கணத்திற்குள்ளே. அவுணன் - சிங்கமுகாசுரன்.

257. பதங்களே - கால்களே. கவின் தோய் - அழகு பரவிய. உரங்களே - மார்புகளே. உரம் கந்தரங்களே - வலியையுடைய கழுத்துக்களே. (கந்தரம் - கழுத்து.) கலன்களே - ஆபரணங்களே. வாளின் மொய்ம்பாளி - வாள் வலியையுடைய வீரவாகுதேவர்.

258. மாறு - பகை. வள்ளல் - வீரவாகுதேவர். அரிப்பெருமுகன் - சிங்கமுகாசுரன். சேயோர் - பிள்ளைகள் ; இவர்கள் நூறு என்னும் எண்ணிக் கையையுடையவர்கள். நுதிக்கோல் - கூரிய நுனியையுடைய அம்புகளே. வீறு - மேன்மை. முகிலாம் என விட - மேகம் மழையைச் சொரிவதைப் போல எய்ய.

259. தடுத்து, அவர் எடுத்த சிலையையும் தேரையும். சினத்து, சினந்து - கோபித்து. விளிக்க - அழைக்க. நவிரப்படை - வாளாயுதம். படித்தலம் - நிலத்தில்.

260. அண்ணல் எதிர் - வீரவாகுதேவருக்கு எதிரே. உரத்திடை - மார்பில். கோள் உருவில் - விரதத்தால் வலிபெற்ற திருமேனியில், கோள் - மேற்கோள் ; விரதம். ஊறிலது - தாங்கள் வெட்டியதால் புண்படாமல் இருப்பதை. ஆளி முகன் - சிங்கமுகாசுரன். விசிறி - வீசி. அட்டான் - கொன்றான்.

அங்குலவும் ஐம்பதுடன் ஐம்பதெனும் மைந்தர்தமை அட்டே
துங்கமுறு வீரர்கள் தனில்தலைமை பெற்றதொரு தூயோன்
பொங்குமிமை யோர்புகழ வையமுறும் வையமிசை புக்கான் ;
சிங்கனிது கண்டுளம் வெகுண்டணுகி மொய்ம்பனெடு செப்பும். 261

சனமில்கு மாரன்அலை ; எண்மர்களி லோ?அல(து) இலக்க
மானவரி லோ?அல(து);எம் மூரினிடை தூதுவரு வானே ?
ஆனவிவர் தங்களிலி யார்எனலும் வீரமுறும் அண்ணல்
வானவர் குலத்தினை அலைத்தகொடி யோனெடும் வகுப்பான். 262

ஆதியரு ளுங்குமர நாயகன் அடிக்கடிமை யானேன் ;
தூதனென வந்(து)உமது நற்பதியை முற்பகல் தொலைத்தேன் ;
நீதமறும் உம்மையட லின்றனனி யான்என நிகழ்த்திக்
கோதறுத னுதுபெயர் ஓதினன் மிகுத்தவிறல் கொண்டான். 263

என்றிடலும் உன்றனை உனக்கிறை தனைக்கடி(து) இறைக்குள்
வென்றிடுவன் என்றிட வெகுண்டுபதி னென்கணை விடுத்தான் ;
சென்றவன் உரத்திடை செறிந்தது முறிந்த(து)ஒரு தண்டம்
துன்(று)அரி முகத்தன்விட நாலுகணை கொண்டது துணித்தான். 264

(பதினொருசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

தீதில் வீரன் ஆயி ரஞ்ச ரத்தி னைப்ப கைத்தவன்
சிரத்தி னில்செ லுத்தவே செறிந்தொ டிந்து போயதால் ;
ஏத மான சிங்கன் அங்கொர் சூல வேல்வி டுப்பவே
இராயி ரஞ்சி லீமு கங்கள் இளைய வீரன் எய்யஅச்

---

261. ஐம்பதுடன் ஐம்பது என்னும் மைந்தர் – நூறு பிள்ளைகள் : இவர்கள் சிங்கமுகாசுரன் பிள்ளைகள். தூயோன் - வீரவாகுதேவர். இமையோர் - தேவர். வையமுறும் வையமிசை – பூமியின்மேல் இருந்த தேர்மேல். சிங்கன் - சிங்கமுகாசுரன். மொய்ம்பனெடு - வீரவாகுதேவரோடு.

262. குமாரன் அலை - நீ முருகக் கடவுள் அல்லை. தூது வருவானே - தூது வந்தவனே. வீரமுறும் அண்ணல் - வீரவாகுதேவர். கொடியோன் - சிங்கமுகாசுரன்.

263. ஆதி - சிவபெருமான். நற்பதியை - மகேந்திரபுரியை. முற்பகல் - முன் ஒரு நாள். நீதம் அறும் - நீதி அற்ற. அட - கொல்ல. தனது - தன்னுடைய.

264. இறைக்குள் - கண நேரத்தில். பதினெட்டு அம்புகளை வீரவாகுதேவர் எய்தார். முறிந்தது : தொகுதி ஒருமை. அரிமுகத்தன் - சிங்கமுகாசுரன்.

சோதி கொண்ட சூல மச்ச ரத்தை நூறி வந்திடத்
தூய வீரன் வாள்கொ டேதுணித்த னன்து ணித்தபின்(பு)
ஆதிதன் படைக்கலத்தை அவுணன் மீதில் ஏவினான்;
அவனும் அன்ன(து) ஏவினன் அமர்புரிந்த(து) இருமையும்.265

வீறுகின்ற படைகள்பின்பு விட்டு ளாரை மேவவே
வீரவாகு நெஞ்சமேல் வியந்துபத்தின் மீதில்நால்
ஏறுகின்ற கணைகள்தூவி அரிமுகத்தன் இரதமேல்
இலகுபாகன் முடியறுப்ப இருமை கொண்ட தண்டமொன்(று)
ஊறி லாத சிங்கன்உந்த உந்து மார்பில் வந்துபட்(டு)
ஒல்லைதாள் பொருந்தவே ஓராயிரஞ் சரங்கணீச்
சூறை யென்ன விட்டு வெய்யன் ஏறு தேரை நூறவே
தூய பூதர் கண்டு சென்று சுற்றி னார்கள் அவுணனை. 266

அந்த தேலை சிறி வெய்யன் வேறுதேரில் ஏறியே
ஆயி ரந்த னுப்பிடித்(து) அருஞ்சரம் பொழிந்துநேர்
வந்தெதிர்ந்த பூதரைப் பிணம்படுத்தி எங்கணும்
வாளியான் மறைப்ப வீரன் வாளியால் அறுத்(து)அவன்
சிந்து கோல்வி லக்கி நிற்ப ஆயி ரத்தி ரட்டிகோல்
தீயன்விட்டு வள்ளல்தன் திருத்தனுத் தனைத்துணித்(து)
உந்து வீரன் விற்பிடிக்கும் முன்னர் நூறு கோடிகோல்
உரத்(து)அழுத்த வீறுசோரி உததிபோல் எழுந்ததே. 267

வெய்ய சூர்த னுதும்பி வெம்பி விட்ட கோலெலாம்
வேலவன் தனுதும்பி விற்சரத்(து) அறுத்(து)அவன்
செய்ய தேரை ஆயிரஞ் சரத்தினுல் அழிக்கவே
சிங்க மாமு கத்தன்வேறு தேரின் மீதில் ஏறினான்;

---

265. பகைத்தவன் - சிரத்தினில் - சிங்கமுகாசுரனுடைய தலைகளின்மேல். இராயிரம் சிலீமுகங்கள் - இரண்டாயிரம் அம்புகளை. இகிய வீரன் - வீரவாகுதேவர். நூறி - அழித்து. துணித்தனன் - சூலாயுதத்தை வெட்டினான். ஆதிதன் படைக்கலத்தை - சிவாஸ்திரத்தை. அன்னது - அந்தச் சிவாஸ்திரத்தையே. இருமையும் - இரண்டு அஸ்திரங்களும்.

266. படைகள் - சிவாஸ்திரங்கள். வீரவாகுதேவர் பதினான்கு கணைகள் விட்டுச் சிங்கமுகனது தேர்ப்பாகன் தலையை அறுத்தார். இருமை - பெருமை. சூறை என்ன - சூறாவளியைப் போல. வெய்யன் - சிங்கமுகாசுரன்.

267. தன் அம்புகளால் எவ்விடத்தையும் சிங்கமுகாசுரன் மறைக்க, அவற்றை வீரவாகுதேவர் அம்புகளை விட்டு அறுத்தார். உததி - கடல்.

கையன் உந்து கையிலுற்ற பத்து நூறு வில்லையும்
கந்தன்அன்பன் எண்ணி லாத கணைசொரிந்(து) அழித்திட
வையமுற்ற வானமுற்ற சாரதக் குழாங்களும்
வானவக் குழாங்களும் மகிழ்ந்தொ லித்து நின்றவே. 268

மற்றிவ்வேலை வெகுளிகொண்டு சிங்கமா முகத்தினேன்
மாய மான பாசம் வீச மாசி லாத பூதரைக்
கொற்றமுற்ற எண்மரைத் துலக்கமாம் இலக்கரைக்
கோளுறும் புயத்தணைக் கொதித்துவந்து கட்டியே
வெற்றிகொண்டு விண்ணெழுந்து துண்ணெனப் படர்ந்துபால்
வேலைதன்னில் உதயமான வெற்பிலிட்(டு) இருந்ததால்
உற்ற தேவர் ஈது கண்டு வாடி னர்கள் ஓடினர்;
உலவை சென்று முருகனே(டு) உரைப்பஅங்(கு) எழுந்தனன். 269

மிக்க தேரின் மீதி லேறி வீறுபூதர் ஆயிரம்
வெள்ளமும் பரந்துசூழ விண்ணுளார் புகழ்ந்திடத்
தக்கபல்லி யந்தழங்க மன்னுசின்னம் ஊதிடத்
தானவன்த னுதுமுன்பு சண்முகத்தன் அணுகவே
மைக்கருங் கடற்புரைந்த அவுணர்சேனை வெள்ளமும்
வள்ளலோடு வந்தபூத மன்னர்சேனை வெள்ளமும்
அக்கணம் படைக்கலஞ் சொரிந்துபோர் புரிந்தபோ(து)
அவுணர் மாய வீறுபூத ரவரும் மாய்வ தாயினர். 270

(எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

இப்பான்மை கண்ட அரிமாமு கத்தன்
இகல்கொண்ட பூதர் குழுவைக்
கைப்போது கொண்டு பிகவாரி இன்று
கடி(து)உண்பன் என்று கருதி

---

268. வெம்பி - கோபித்து. கந்தன் அன்பன் - வீரவாகுதேவர். சாரதக் குழாங்கள் - பூதக் கூட்டங்கள்.

269. மாயமான பாசம் - மாயம் செய்யும் இயல்பையுடைய பாசக் கயிற்றை; மாயாபாசம். எண்மர் - வீரவாகுதேவர் தம்பிமார்கள்; இலக்கர் - லக்ஷ வீரர்கள். கோளுறும் புயத்தனை - வலிமையுடைய வீரவாகுதேவரை. பால் வேலை தன்னில் உதயமான வெற்பில் - பாற்கடலினிடையே உள்ள உதய கிரியில். உலவை - வாயுதேவன்.

270. பல்லியம் தழங்க - வாத்தியம் முழங்க. சின்னம் ஊதிட - திருச்சின்னம் ஊத. வள்ளலோடு - முருகக் கடவுளோடு.

மெய்ப்பான அண்ட முடிவைச் சிரங்கள்
விறலோடு சென்று தொடவே
துப்போடும் அங்கண் ஒருமேனி கொண்டு
சுரர்அஞ்ச ஈது புரிவான். 271

கல்லா மனத்தன் இருபத்து நூறு
கரமும் செலுத்தி விறல்சேர்
சல்லாப மோடு குகனோடு வந்த
தசநூறு வெள்ள அனிகம்
எல்லாம் அகட்டி னிடைசேர வாரி
இனிதாய் விழுங்க எழில்சேர்
அல்லார் களத்தன் எமையாள நல்கும்
அமலன் தனித்த ருளினான். 272

இவ்வேலை தன்னில் மிகும்ஒற்றர் ஏகி
இறையான சூர னுடனே
செவ்வே நிகழ்ந்த சொலவே மகிழ்ந்து
சிகரத்தின் உச்சி மிசைபோய்
அவ்வேலை தம்பி சமர்கண்(டு) இருப்ப
அவன்ஏவல் கொண்டு திறல்சேர்
மைவேலை என்ன மிகுசேனை பின்னும்
மருவிற்று யுத்த களமே. 273

---

271. அரிமா முகத்தன் - சிங்கமுகாசுரன். இகல் - பகை. கைப்போது கொண்டு - கைகளைக் கொண்டு. கடிது உண்பன் - விரைவாக உண்ணுவேன். மெய்ப்பான - உண்மைப் புகழுடைய. அண்டமுடிவை - அண்டமுகட்டை. துப்போடும் - வன்மையோடும். சுரர் அஞ்ச - தேவர்கள் பயப்படும்படியாக.

272. கல் ஆம் மனத்தன் - கல்லைப்போல் இருக்கும் மனமுள்ள சிங்கமுகாசுரன். இருபத்து நூறு கரம் - இரண்டாயிரம் கைகள். சல்லாபமோடு - சந்தோஷமான பேச்சோடு. அனிகம் - படை. அகட்டினிடை சேர - வயிற்றுக்குள்ளே போக. அல்லார் களத்தன் - நீலகண்டப் பெருமான். அமலன் - முருகவேள். படைகளை யெல்லாம் அசுரன் விழுங்க, முருகக் கடவுள் மாத்திரம் தனித்து நின்றார் என்க.

273. செவ்வே - நன்றாக. நிகழ்ந்த - நடந்த காரியங்களை. சிகரத்தின் உச்சி மிசை போய் - கோபுரத்தின் உச்சியில் ஏறிச் சென்று. சமர் - போரை. அவன் - சூரபன்மன். மைவேலை என்ன - கருங்கடலைப் போல. மருவிற்று - அடைந்தது.

ஈடான சிங்கன் எதிராக வீறும்
எழிலாக வேலன் அணுகக்
கூடா நிறைந்த அவுணப் பதாதி
குகன்முன்(பு) அணைந்து படைதூய்
வாடா விறல்கொள் முருகேசன் வில்லின்
வலியான நாணின் ஒலியால்
வீடா அழிந்த(து) ; அதுகண்டு தீயன்
விறலோடு வந்து மொழிவான். 274

பொன்னுடர் எங்கள் பகையாதல் கண்டு
புலவோரை இன்னல் புரிவோம் ;
அன்னரில் அல்லை ; பகைஅல்லை ; என்கொல் ?
அமர்செய்ய வந்த வகையென்(று)
ஒன்னன் இசைப்ப எளியாரை மொய்ம்பர்
உறுகண் குயிற்றில் அவரைப்
பன்னளும் நூறி அரசாள்வம் அன்ன
பரிசால் அடைந்த னமரோ. 275

என்றீ(து) உரைப்ப வலியாளன் நீயும்
எளியார்கள் எங்கள் இனமும்
நன்றீது வல்லை அமர்செய்தி என்ன
நலமார் குமாரன் ஒருகோல்
முன்றீய வன்தன் மருமத்(து)அழுத்த
முதுகில் பறிந்த ததனுல்
வன்றீ நிகர்த்த கொடியோன் உடம்பில்
மலிசோரி வந்த(து) அவணே. 276

---

274. ஈடு - பெருமை, பலம். வீறும் எழில் ஆகம் வேலன் - மிக்க அழகையுடைய திருமேனியைப் படைத்த முருகக் கடவுள். கூடா - கூடி. அவுணப் பதாதி - அசுரர்படைகள். வாடா - வாடாத. வீடா - இறந்து.

275. பொன்னுடர் - சுவர்க்க வாசிகளாகிய தேவர்கள். புலவோரை - தேவரை. இன்னல் - துன்பம். அன்னரில் அல்லை - அவர்களுக்குச் சேர்ந்தவன் நீ அல்லை. ஒன்னன் - பகைவன், சிங்கமுகாசுரன். எளியாரை வலியார் துன்புறுத்தினுல் அவ்வலியாரை அழித்து அருள் செய்வோம் என்க. உறுகண் குயிற்றின் - துன்பம் செய்தால். நூறி - அழித்து. அன்ன பரிசால் - அந்த முறைபற்றி.

276. வலியாளன் நீயும் என்றது இகழ்ச்சிக் குறிப்பு. அமர் செய்தி - போர் புரிவாயாக. மருமத்து - மார்பில். முதுகில் பறிந்தது - முதுகு வழி

உள்ளுற்ற பூதர் அதுபோதில் வேலன்
ஒருகோல் துளைத்த வழியால்
மெள்ளத் தலத்தின் இழியச் சினந்து
வெளியைக் கரங்கொ(டு) அடையாக்
கள்ளுற்ற தொங்கல் முருகேசன் மீது
கதைஒன்(று)உ கைப்ப அமலன்
வள்ளுற்ற நாலு கணைசிந்த ஏகி
வருதண்டை நூறி அவைபோய். 277

மங்காத சிங்கள் நுதல்சென்(று) ஒளிப்ப
மயலோடு வெய்யன் உறவே
சிங்கார மேவும் அவன்முன்(பு) அடைத்த
திறல்கொண்ட பாணி நெகிழ
வெங்காயம் மிஞ்சி உறுகின்ற பூதர்
வீறல்வாளி பட்ட வெளியால்
அங்(கு)ஆய வேலை கடிதே இறங்கி
அமலன்தன் முன்(பு) அணுகினர். 278

அப்போது தன்னில் உதயச் சிலம்பில்
அருள்கொண்ட வேலன் ஒருகோல்
துப்போ(டு)உ கைப்ப அதுசென்று வீரர்
தொகையைத் தனுது மிசையே

யாக ஊடுருவிச் சென்றது. வன் நி - வலியநியை மலி சோரி - மிக்க இரத்தம்.

277. உள் உற்ற - சிங்கமுகாசுரனது வயிற்றுக்குள்ளே இருந்த. தலத்தின் இழிய - தரைமேல் இறங்கிவர. சினந்து - சிங்கமுகாசுரன் கோபித்து. வெளியை - துவாரத்தை. கள் உற்ற தொங்கல் - தேனையுடைய மாலையை அணிந்த. உகைப்ப - செலுத்த. வள் - கூர்மை. நூறி - அழித்து.

278. நுதல் - நெற்றியில். மயலோடு - மயக்கத்தோடு. சிங்காரம் - அழகு. முன்பு அடைத்த - முன்னர் கையால் அடைத்துக்கொண்ட. பாணி நெகிழ - கை தளர. மிஞ்சி வெம்காயம் உறுகின்ற பூதர் - வெளியிலே வாராமல் எஞ்சி அவன் வயிற்றுக்குள் இருந்த பூதர்கள். வாளி பட்ட வெளியால் - அம்பு துளைத்தவாயில் வழியே. அங்கு ஆய வேலை - அந்தச் சமயத்தில்.

279. உதயச் சிலம்பில் - உதய கிரியில். துப்போடு உகைப்ப - வலியோடு எய்ய. மெய்ப்போடு கொண்டு - உண்மையில் தாங்கிக் கொண்டு. மைப்பாவு கண்டன் - நீலகண்டப் பெருமான் ; சிவன். மகிழ்வு உண்டாகும் படி என்க. ஓதினன் - இனிய மொழிகளைச் சொன்னார்.

மெய்ப்போடு கொண்டு கடிதே திரும்பி
விறல்வேலன் முன்பு விடவே
மைப்பாவு கண்டன் மகன்அங்(கு) அவர்க்கு
மகிழ்வாக ஓதி னனரோ. 279

அக்காலை தன்னில் இதுகண்டு சீறி
அரிமா முகத்தன் அணிகம்
மிக்கார்இ லாத குமரேசன் முன்பு
விரைவோடு வந்து வளைய
நக்கான் அளப்பில் கணைமாரி தூவி
நலியத் தொலைப்ப இடரில்
புக்காண்மை இன்றி உறுகின்ற வெய்யன்
இதுகண்(டு) அழன்று புரிவான். 280

நூறுன பத்து நெடுவிற் பிடித்து
நுதிவாளி சிந்தி முருகன்
சீறு விடுத்த கணையைத் தடிந்து
திறல்கொண்ட சிங்க முகவன்
மாறுக வேலன் இரதத்தில் உற்ற
வலவன்தன் மார்பி னிடையே
வீறுயி ரங்கொள் கணைசிந்த நொந்து
மெலிவாய் இருந்த பொழுதின். 281

ஐயன் சினந்து கணைநூறு சிந்த
அரிமா முகங்கொள் அவுணன்
வையங் கெடுப்ப நிலநின்(று) அளப்பில்
வடிவாளி வெய்யன் விடவே

---

280. அரிமா முகத்தன் அனிகம் – சிங்கமுகாசுரனுடைய படை. மிக்கார் இலாத - தமக்கு மேலானவர் ஒருவருமில்லாத. நக்கான் - புன்னகை பூத்து. நலிய தொலைப்ப - வருந்தி அழியும்படி செய்ய. வெய்யன் - சிங்கமுகாசுரன். அழன்று - கோபித்து.

281. சிங்கமுகாசுரன் ஆயிரந் தலைகளும் இரண்டாயிரம் கைகளும் உடையவனுதலின் ஆயிரம் விற்களோப் பிடித்தான் என்க. நுதி - முனை. சீறு - கோபித்து. தடிந்து - அறுத்தெறிந்து. வலவன் -தேர்ப்பாகன். ஆயிரம் வீறு கொள்கணை என்று மாறுக. நொந்து - (தேர்ப்பாகன்) வருந்தி.

282. ஐயன் – முருகக் கடவுள். வையம் கெடுப்ப - தேரை அழிக்க. நிலம் நின்று - பூமியின்மேல் நின்று. அளப்பு இல் - கணக்கு இல்லாத.

கையன் தனுக்கள் தமைஆ யிரங்கொள்
கணையால் ஒடிப்ப அவுணன்
மெய்யன்றன் மீதில் ஒருசூலம் உந்த
விறல்வேலன் ஈது புரிவான். 282

ஈரேழ தான கணைசிந்தி முந்தி
எதிர்சூலம் நூறி அடுகோல்
ஓரா யிரத்தை அவனேர் விடுப்ப
உரமேவு சிங்க முகவன்
சீரான கையில் ஒருதண்டு கொண்டு
சிதறப் புடைத்து வரஅப்
போரார் கரத்தை எழுவாளி கொண்டு
புனிதன் தடிந்த ருளினான். 283

மெய்ப்பாணி பின்பும் எழவெய்யன் வையம்
விழுதண்(டு) எடுத்து விடலும்
துப்பா யிரங்கொள் கணைகொண்டு தண்டு
துணிசெய்து வேலன் உறவே
கைப்பாசம் உந்த இறைபத்து நூறு
கணைகொண்(டு) அழிக்க அதனால்
மைப்பாவி ஆறு முகனைப் பிடிக்க
வலியோடு வந்த னனரோ. 284

ஆறுமு கத்தன் அதுகண்டு வந்த
அவுணன் கரஞ்சி ரமெலாம்
ஊறுகி வீழ இருபத்து நூறெ(டு)
ஒருபத்து நூறு கணையைச்

வடி - கூர்மை. கையன் – சிங்கமுகாசுரன். தனுக்கள்தமை - வில்களை. மெய்யன் - முருகக் கடவுள்.

283. நூறி - அழித்து. உரம் - வலிமை. போர் ஆர் அக்கரத்தை - போர் செய்ய வருகின்ற அக் கையினை. புனிதன் – பரிசுத்தன்; முருகக் கடவுள். தடிந்தருளினான் - அறுத்தருளினார்.

284. மெய்ப்பாணி - தேகத்திலிருந்த கை. வையம் விழு - தரைமேல் விழுந்து கிடந்த. துப்பு - வலிமை. தண்டு துணி செய்து - தண்டாயுதத் தைத் துண்டுபடுத்தி. பாசம் உந்த – பாசத்தை விட. மைப்பாவி - அஞ் ஞானத்தை உடைய பாவியாகிய சிங்கமுகாசுரன். மை - கருநிறம்உடைய எனினுமாம்.

சிரு விடுப்ப அவைபின்(பு) எழுந்து
செறிவாக வெய்யன் வெகுளா
மாருக எண்ணில் வரையைப் பிடுங்கி
வலியோடு வீசு தலுமே. 285

வரையற்று வந்த வரைஅற்று வீழ
வலியற் றிடாத முருகன்
புரையற்ற வாளி மிகவே பொழிந்து
புகழ்மேவு கின்ற அவுணன்
நிரையுற்ற சென்னி உரமுற்ற கைகள்
நிலமுற் றிடத்த டியவே
விரைவுற்று மண்ணில் விழுமுன்பு பின்பு
விறலோ(டு) எழுந்த அவையே. 286

சிங்கார மேவு கரமுஞ் சிரங்கள்
சிதறித் திரும்ப முளீயா(து)
உங்காரம் ஓத இருபாணி யோடும்
ஒருசென்னி யோடும் எதிர்வந்(து)
இங்கார் எனக்கு நிகர்என்(று)ஓர் குன்றம்
இகலிப் பறித்து விடவே
கங்காளன் மைந்தன் ஒருவாளி கொண்டு
கடிதே துணித்த ருளினன். 287

மால்விட்ட உம்பர் சிறைவிட்டி டாது
மறம்உற்ற சூரன் இளையோன்
வேல்விட்டு வென்றி கொளுமாறும் அன்றி
விடுகின்ற தொன்றை விறல்சேர்

---

285. ஆறு ஆம் முகத்தன் - சண்முகக் கடவுள். ஊருகி – காயம்பட்டு. இருபது நூறெடு ஒருபது நூறு - மூவாயிரம். சிரு - கோபித்து. செறிவு ஆக - முன்போலப் பொருந்திக் கொள்ள. வரையை - மலைகளை.

286. வரையற்று வந்த - அளவில்லாமல் வந்த. வரை - மலை. புரை அற்ற - ஒப்பில்லாத ; குற்றமற்ற எனலும் ஆம். நிரையுற்ற சென்னி - வரிசையான தலைகள். உரம் - மார்புகள். சென்னியும் உரமும் கைகளும் நிலம் உற்றிட என்க. விழ விழ மீட்டும் அவை உடம்போடு ஒட்டிக் கொண்டன என்க.

287. சிங்காரம் - அலங்காரம். முளீயாது - முளீயாமல் இருக்கும்படி. உங்காரம் ஓத - ஹுங்கார சப்தத்தை முருகக் கடவுள் செய்ய. இரு பாணி

கோல்விட்(டு)அ ழிக்கும் இதுவேய லாது
குமரா ! பயின்றி லேகொல்என்(று)
ஆலத்தை ஒத்த ஒருதண்டு தன்னை
அடலோடு விட்ட பொழுதின். 288

வீறுன தண்டு வருசெய்கை கண்டு
விறல்கொண்ட கந்தன் வெகுளா
மாறுன வஞ்சன் உயிருண்டு வல்லே
வருகென்று கையில் மருவும்
ஊறுன(து) அற்ற குலிசந் தொடுப்ப
உரனோடு சென்று கதையை
நீறுக நூறி அரிமா முகத்தன்
நெடுமார்பின் உற்ற ததுவே. 289

மார்பிற் பொருந்தி முதுகில் பறிந்து
வலியோடு செல்ல அவுணன்
சோரிப் பெருக்கி னுடனே விழுந்து
துயரத்தி னோடு மடியக்
கூர்பெற்(று)இ லங்கு குலிசம் படர்ந்து
குளிர்வான்ந திக்குள் முழுகிக்
கார்பெற்ற கண்டன் அருள்மைந்தன் உந்து
கரமீது வந்த(து) இறையின். 290

யோடும் - இரண்டு கைகளோடும். இகலி - பகைத்து. கங்காளன் - முழு என்பை அணிந்த சிவபிரான். மைந்தன் - முருகக் கடவுள்.

288. மால் - மயக்கம். உம்பர் சிறை - தேவர்களது சிறையை. மறம் உற்ற - அதர்மத்தையுடைய. இகலோன் - சிங்கமுகாசுரன். வேலே விட்டு வெற்றிகொள்வதும் நான் விடும் ஆயுதத்தை அம்பால் அழிப்பதுமன்றி வேருென்றும் பழகவில்லையோ என்று சிங்கமுகாசுரன் கூறினன் என்க. ஆலத்தை - விடத்தை.

289. வீறுஆன - பெரிய. வெகுளா - கோபித்து. வல்லே - விரைவில். ஊறு - பழுது. குலிசம் - வச்சிராயுதத்தை. உரன் - வலி. நீறு ஆக - பொடியாக.

290. பறிந்து - ஊடுருவிப் போய். சோரிப் பெருக்கினுடனே - இரத்த வெள்ளத்தோடு. படர்ந்து - சென்று. வான் நதிக்குள் - ஆகாச கங்கையில். கார் பெற்ற கண்டன் - நீலகண்டப்பெருமான். உந்து - மேன்மை பொருந்திய. இறையின் - ஒரு கணப்பொழுதில்.

நாகத்தில் உம்பர் மலர்மாரி தூவி
நனிபாடி ஆடி மகிழ
வாகைக் குமாரன் இளையோர்கள் தாமும்
மலிகின்ற பூதர் குழுவும்
ஓகைக்குள் மூழ்கி அயலே பொருந்த
உயர்பா சறைக்(கு)அ ணுகினன் ;
ஆகுற்ற வேலை இதுகண்ட ஒற்றர்
அசுரேச னெ(டு)இ(து) அறைவார். 291

உன்றம்பி யான அரிமா முகத்தன்
உயிர்போய் மடிந்த னன்எனக்
குன்றம் புரைந்த சிகரத் திருந்த
கொடியோன் நிலத்தின் மிசையே
துன்றும் புனல்கொள் முகில்போல் விழுந்து
துயரக் கடற்குள் மூழ்கி
மின்றங்(கு) எயிற்று விறல்வாய் திறந்து
மிகவே புலம்பி அழுதான். 292

---

291. நாகத்தில் - வானத்தில். உம்பர் – தேவர்கள். ஓகை - உவகை. பாசறைக்கு - பாசறையை ; உருபு மயக்கம். ஆகுற்ற வேலை - இவ்வாறான போது. அசுரேசனெடு - சூரபன்மனெடு.

292. அரிமா முகத்தன் - சிங்கமுகாசுரன். சிகரத்து இருந்த - கோபுரத்தின்மேல் இருந்த. மின் தங்கு எயிற்ற - மின்னுதல் பொருந்திய பல்லையுடைய. சிங்கமுகாசுரன் இறந்ததைக் கேட்டுச் சூரபன்மன் வாய்விட்டுப் புலம்பி அழுததை : '' பொன்னி நிலந்தன்னைப் புதல்வர்களை மங்கையரைப், பின்னி யுளபொருளை எல்லாம் பெறலாகும் ; என்னை யுடைய இளையோனே! இப்பிறப்பின் உன்னை இனிப்பெறுவ(து) உண்டோ ? உரையாயே '', '' பொற்றைக்(கு) அயலிருந்த பூட்கைமுகன் துஞ்சியபின், ஒற்றைப் புயம் போய் உளந்தளர்ந்து வைகினன்யான், இற்றைப் பகல்நீ இறந்தாய் அரிமுகனே! மற்றைப்புயமும் இழந்தேன்வறியேனே '' எனவரும் கந்தபுராணம் யுத்தகாண்டம் - சிங்கமுகன் வதைப்படலம் - 469, 473-ம் செய்யுட்களால் அறியலாம்.

ஏழாநாள் முதல் பத்தாநாள் வரை*
சூரபன்மன் வதை

—o—

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

ஓங்குதுயர் நீங்கிஒரு கோடியெனும் ஆயிரமு(று)
ஒற்றர்களீ ஒல்லை விளியாத்
தீங்(கு)அகலும் ஆயிரவொ ரெட்டளவை அண்டமுறு
சேனைகள் அனீத்தும் வரவே
ஆங்குற அணைந்துபுகல் வீரன விரைந்(து)அவர்கள்
அண்டமுள அண்டி அறைய
வாங்கரும் இருந்திறல்கொள் தானவர்கள் தானபல
வந்தஉயர் அண்ட வழியால். 293

வேதனெடு மாதவன் உறும்பதி நிறைந்தன ;
விசும்பிடை நிறைந்த ன;எழில்
பூதலம் நிறைந்தன ; பெருந்திசை நிறைந்தன ;
புகழ்க்கடல் நிறைந்த ன;நெடும்

---

293. ஒருகோடி எனும் ஆயிரம் - ஆயிரங்கோடி. ஒல்லை விளியா - விரைவில் அழைத்து. ஆயிரம் ஓர் எட்டளவை அண்டம் - ஆயிரத்தெட்டு அண்டம். என - என்று சூரபன்மன் ஏவ. அண்டம் உள அண்டி அறைய - உள்ள அண்டங்கள் யாவற்றையும் அடைந்து சொல்ல. வாங்கரும் - நீங்குதற்கரிய. அண்ட வழியால் - அண்ட கோளத்தின் வழியாக.

294. வேதன் பதியிலும் மாதவன் பதியிலும் நிறைந்தன ; மாதவன் - திருமால். தூசி அனிகம் - முற்படை. நூறுபெறு கோடி உறுயோசனை இவ்வண்டம் - பிருதிவி அண்டமாகிய இவ்வண்டம். இறை - கணகேரம்.

* சூரபன்மன் இறுதியாக சண்முகக் கடவுளோடு நான்குநாள் போர் புரிந்து மடிந்தான் என்பதை ''...ஈரிருநாள் வரை துன்னலன் தொலியாது அமர் ஆற்றியே'' எனவரும் கந்தபுராணம் - சூரபன்மன் வதைப்படலம், 409-ம் செய்யுளின் அடிகளாலும், இந்நூல் யுத்தகாண்டம் 32-5-ம் செய்யுளாலும் அறியலாம். மகேந்திரபுரியில் சூரபன்மனுடையோர் சண்முகப் பெருமானுடன் எதிர்த்துப் போர் புரிந்தது பத்து நாட்கள் ஆகும். இதனை, ''சொல்லும் ஐந்திருவைகலின் அவுணர் தம் தொகையும், அல்லல் ஆற்றிய சூரனும் முடிந்திட அடுதும்'' எனவரும் கந்தபுராணம் - சயந்தன் கனவுகாண் படலம், 11-ம் செய்யுள் அடிகளாலும், இந்நூல் மகேந்திர காண்டம்-24, 31-ம் செய்யுட்களாலும் அறியலாம்—இரண்டாம் பதிப்பாசிரியர்.

பாதலம் நிறைந்தன ; யாவையும் நிறைந்தன
பரந்துவரு தூசி அனிகம் ;
ஆதரவின் நூறுபெறு கோடியுறு யோசனையில்
வண்டமும் நிறைந்த இறையின். 294

இன்னபடி தானவர்கள் தாணையுற ஒற்றர்கள்
இருந்திறல் பொருந்தும் அவுணன்
பொன்னடி பணிந்(து)இவை உரைத்திட விருப்பொடு
பொருக்கென இருக்கை யிடைபோய்
மன்னுபுன லாடிஇனி தாம்அடிசில் உண்டுதிரு
நீறுநுதல் வல்லி யில்அணிந்(து)
இன்னல்அக லுங்களபம் மின்னுகல ஞனைவை
இதம்பெற அணிந்த னனரோ. 295

ஆளிகள்இ லக்கெழுப தாயிரம் அரும்பரிகள்
அன்னதொகை அன்ன தொகையே
கூளிகள் இழுத்திடும் இழுக்கில் இரதத்தின்மிசை
கொற்றமொ(டு) அணைந்(து)அ வுணர்கோன்
வாளில(கு) எயிற்(று)அவுணர் சேணைபுடை சூழ்தர
மறந்தரு பறந்த லிதனில்
காளியொடு வாதுநட மாடிமக னே(டு)அமர்
கலந்திட அணைந்த பொழுதின். 296

செங்கமல வேதனுடன் உந்தும்அரி கந்தனது
செம்பதம் இறைஞ்சி அவுணன்
இங்கமர்பு ரிந்திட அணைந்தனன் எனக்குகன்
எழுந்(து)அனில சார திவிடும்

---

295. அவுணன் - சூரபன்மன். பொருக்கென - விரைவாக. அடிசில் - உணவை. சூரபன்மன் சுக்கிரனுடைய வீரோத உபதேசத்தைக் கேட்டு நித்திய கருமானுட்டானங்களை அறவே விட்டவன் என்பார். ''புனலாடி... அடிசில் உண்டு திரு நீறுநுதல்...அணிந்து'' என்றார். களபம் - கலவைச் சந்தனம். மின்னு கலன் - ஒளிவீசுகின்ற ஆபரணங்கள்.

296. ஆளிகள் இலக்கு எழுபதாயிரம்-சிங்கங்களின் எண் எழுபதாயிரம்; இலக்கு - இலக்கம். அன்ன தொகை - அதே அளவு ; எழுபதாயிரம். கூளிகள் - பேய்கள். இழுக்கில் இரதம் - இந்து. இறைவன் அளித்த இந்திர ஞாலத் தேரை ஒத்த பெருமையினை உடையது ; இதனைக் கந்தபுராணம் - சூரபன்மன் வதைப்படலம் - 24, 25-ம் செய்யுட்களில் அறிக. வாள் இலகு - ஒளி வீசுகின்ற. மறந்தரு பறந்தலிதனில் - வீரத்தை வெளிப்

பொங்கணிகொள் தேரணுகி வீரரொடு சாரதர்
புகழ்ந்தயல் பொருந்தி வரவே
தங்(கு)அவுணர் சேனைஎதிர் செல்லமிகு பூதரோடு
தானவர் மலைந்து பொருதார். 297

வீறிவரு தானவர்க ளால்இலகு பூதர்கள்
விளிந்திட இலக்க முடன்எட்(டு)
ஏறுதனி வீரர்கள் அடைந்துடைய மொய்ம்புறும்
இரும்புயன் எதிர்ந்து கணைதூய்ச்
சிறியவ ரில்சிலரை நூறிஅழி யாவது
தெரிந்துமுரு கன்பு டைவரக்
கூறியிடும் இந்தவகை கண்டருளி வெஞ்சிலை
குனித்தனன் அநித்தம் அணையான். 298

மன்னுதனு வில்கணை அளப்பில தொடுத்தருளி
வானமொடு வையக முமாய்த்
துன்னும்அவு ணப்படை பிணக்குவை படும்படி
துலங்குமுரு கன்பு ரியவே
அன்னசெயல் கண்டுமிக அண்டகட கத்தின்மிசை
அப்புறம் இருந்த அனிகம்
முன்னென அணைந்துகும ரேசனை வளைந்திட
முரட்குமரன் ஈது மொழிவான். 299

படுத்தும் போர்க்களத்தில். நடமாடி - சிவபிரான். அவுணர் சேனை மிகுந்து வருவதைக் கண்டு இந்திரன் மனங் கலங்கித் திருமாலை நோக்கி, "சூரபன்மனை வெல்வதும், தேவர் சிறை நீக்குவதும் எக்காலமோ" என்றபோது, திருமால் தேர்தல் கூறியதைக் கந்த புராணத்தில் விரிவாய்க் காண்க.

297. அரி - திருமால். அனிலசாரதி - வாயு தேவனுகிய தேர்ப்பாகன். பொங்கு அணிகொள் தேர் - மிக்க அலங்காரங்களைக் கொண்ட இரதம்.

298. வீறிவரு - மிக்க பலங்கொண்டு எழுந்த. விளிந்திட - இறக்க. உடைய - தோல்வியடைய. மொய்ம்புறும் இரும்புயன் - வீரவாகுதேவர். நூறி - கொன்று. அழியா அது தெரிந்து - அழியாத அந்தத்தன்மையை உணர்ந்துகொண்டு. கண்டருளி - தாமே நேரிற் பார்த்து. அநித்தம் அணையான் - நிலையாமையைப் பொருந்தாதவர்; நித்தர்; முருகக்கடவுள்.

299. தனுவில் - வில்லில். பிணக்குவை - பிணக்குவியல். அண்ட கடகத்தின்மிசை - அண்டச் சுவருக்கு மேலே. அனிகம் - படை. முரண் - வலிமை. ஈது - இதனை.

மையவுணர் சேனையிடை தேரினை விடுத்தினன
மாருதியி னெடு(டு)அ றையவே
ஐயவிது நன்றென நிலத்தினில் விசும்பினில்
அளக்கரில் விடுப்ப முருகன்
பெய்யுமுகில் என்னமிகு வாளிகள் சொரிந்(து)அருள்
பிரிந்தஅவு ணப்ப டையெலாம்
ஒய்யென இறந்(து)உதிர மோடுபிண மாயிட
உலாவிஅமர் செய்த ருளினான். 300

சிகர முலாவும்எழு சாகரமும் மாகமொடு
தேவர்கள் நிறைந்த உலகும்
சூகர நிறத்(து)அவுணர் சேனபிண மாகநனி
துன்றவெழு கின்ற குருதி
வேகமுடன் ஏழ்பிலமும் மண்டலமும் எண்டிசையும்
விண்ணகமும் நண்ணி நிறைய
வாகைமுரு கன்தகுவர் சேனைவரும் அண்டவழி
வாளிகொ(டு) அடைத்த ருளினான். 301

பாலன மொழிக்கௌரி பாலனது பின்புதழல்
பன்னிருக ணும்பொ லியவே
மாலணுகு தானவர் பிணத்தினிடை கண்ணுறலும்
வாரிநிகர் சோரி யதெலாம்
சாலவும் வறந்தது ; நிறைந்திடு பிணக்குவை
தணந்துபொடி யாகி யது;சீர்
மாலயனும் இந்திரனும் உம்பர்களும் வேலனை
வழுத்தினர் மகிழ்ச்சி யுறவே. 302

---

300. மை - கருமைநிறமுள்ள. மாருதியினெடு - வாயு தேவனெடு அளக்கரில் - கடலினிடையே. அருள் பிரிந்த - கருணையினின்றும் நீங்கிய. ஒய்யென - விரைவாக.

301. சிகரம் உலாவும் ஏழு சாகரமும் - துளிகள் பரந்த ஏழு கடல்களும். மாகமொடு - ஆகாசத்தோடு. சூகர நிறத்து - பன்றியைப் போன்ற கரிய நிறமுள்ள. குருதி - இரத்தம். ஏழ் பிலமும் - கீழுலகங்களாகிய ஏழிலும். வாகை - வெற்றி. தகுவர் - அசுரர். அண்டவழி - அண்ட கடாத்திலிருந்து வரும் வழியை.

302. தழல் - கோபாக்கினி. மால் அணுகு - மயக்கத்தை அடைந்த. கண் உறலும் - திருக்கண் பார்வையை ஒட்ட. வாரிநிகர் - கடலையொத்த. சோரி - இரத்தம். வறந்தது - வற்றிப்போயிற்று. வேலனை - முருகனை.

எம்பரமன் இன்னன புரிந்(து)அது தெரிந்துளம்
எரிந்திட விரைந்(து)அ வுணர்கோன்
அம்பகம்இ ராறுடைய நம்பன்எதிர் தோரிஞெடும்
ஆலமென வந்(து)அ ணுகலும்
கும்பமத யானையுரி கொண்டவன் அளித்தருள்
குமாரனும் எதிர்ந்த ருளினன் ;
உம்பர்கள் பெருஞ்சிறை விடாதுயிர் விடுப்பவன்
உருத்(து)இவை உரைத்தி டுவனுல். 303

இன்புறு பரன்தரு வரத்(து)இயல்பில் எப்பொழுதும்
இப்படி இருப்பன் அழியேன் ;
என்பணி புரிந்துழலும் உம்பர்மொழி மெய்ம்மையென
எண்ணிஅம ருக்(கு)அ ணுகினுய் ;
என்படினும்[1] உன்றனை விடுப்பதிலை ; மைந்தன்என
விட்டுவ தில்லை எனவே
வன்புமன வெய்யன்இது கூறஎமை யாளுடைய
வள்ளல்உரை செய்த ருளுவான். 304

உம்பரை அலைத்ததொரு வெங்கயவ ! வம்புரை
உரைத்தனை ; உனு(து)உ ருவினில்
செம்புனல் குதித்திடவி யாம்விடு பெருங்கணைகள்
செப்பிடும் உனக்கு மொழியென்(று)

---

303. எம் பரமன் - முருகக் கடவுள். அவுணர்கோன் – சூரபன்மன். அம்பகம் இராறு உடைய நம்பன் - பன்னிரண்டு கண்களையுடைய முருக வேள். ஆலமென - விடத்தைப்போல. கும்ப மத யானை - மத்தகத்தினின்றும் பிறக்கும் மதத்தையுடைய யானையினது. உரி – தோலை. கொண்டவன் - ஆடையாக உடைய சிவபிரான். உயிர் விடுப்பவன் - உயிர்விட வந்திருக்கும் சூரபன்மன். உருத்து - கோபித்து.

304. இன்பு உறு பரன் - ஆனந்தமாக உள்ள சிவபெருமான். பணி - ஏவல். உம்பர் மொழி - தேவர்கள் பின்பால் கூறிய வார்த்தைகளை. என் படினும் - என்ன விளைந்தாலும். மைந்தன் என - சிறு பிள்ளையென்று நினைத்து. வன்பு - கொடுமை, வெய்யன் - சூரபன்மன். வள்ளல் - முருகக்கடவுள்.

305. அலைத்ததொரு வெங்கயவ - துன்புறுத்தின கொடிய இழிதகவுடையோய்: வினி. வம்புரை - வீண் வார்த்தைகளை. செம்புனல் - இரத்தம். குதித்திட யாம்என்க : உனக்கு மொழி செப்பிடும் ; மொழி - விடை. சிலை-வில்லை. வெம்பி - கோபித்து. மெய்ப்பட உடைந்தனர்-உடம்பிலே படவே தோற்று ஓடினர்.

பா-ம்—வெந்படினும்.

எம்பரமன் ஓதலும் நெடுஞ்சிலை வகைத்தனன் ;
இருந்திறல்கொள் பூத ரெவரும்
வெம்பிஅவு ணன்தனை வகைந்(து)அவன் விடுங்கணைகள்
மெய்ப்பட உடைந்த னரரோ. 305

இன்னசெயல் கண்டுதிறல் மொய்ம்பனுடன் எண்மரும்
இலக்கரும் எதிர்ந்(து)அ வுணன்மேல்
மின்னுகணை மாரியின் விடுப்பமிசை பட்டவை
விரைந்(து)அவண் ஓடிந்து விழலும்
மன்னவுணன் நூறுபெறு கோடிகணை சிந்திஅவர்
வையமொடு வில்லி னையறுத்(து)
அந்நிலையின் நான்குபெறும் ஆயிர நெடுங்கணையை
அங்கமிசை விட்ட னனரோ. 306

எண்மரில் இலக்கர்கள் கலக்கமொ(டு) இரிந்தனர் ;
இருந்திறல்கொள் வாகு அவுணன்
திண்மையுள தேர்அணுகி வாள்கொ(டு)அவன் நீள்சிலை
சிதைக்கஅனை யோனை அவுணன்
வண்மையுறு மார்பிடை அடித்துழி விழுந்(து)அயர
வான்மிசை எறிந்த னல்அறிந்(து)
உண்மையுறு கந்தன்அயல் மேவஅவு ணன்சிலைகொ(டு)
ஒல்லைகுகன் முன்கு றுகினன். 307

வெந்திறல்கொள் வேலனைடு விற்சமர் புரிந்(து)அவன்
விடுங்கணை விலக்கி விறல்சேர்
கந்தன்இர தத்துறு விறற்கொடி அறுத்துழி
கறுத்(து)அவன் விடுங்க ணையெலாம்
சிந்தும்வகை செய்துகணை ஏழுகொடு சூரனுறு
தேரினில் உறுங்கொ டியறுத்(து)
உந்துதிரை வேலைதனில் இட்டருள வானமுறும்
உம்பர்கள் ஒலித்த னரரோ. 308

306. திறல் மொய்ம்பன் - வீரவாகுதேவர். கணையை மாரியைப்போல விடுப்ப என்க. வையம் - தேர். அங்கமிசை - உடம்பின் மேல்.

307. எண்மரோடு இலக்கர்களும் என்க. இரிந்தனர் - தளர்ந்து ஓடினர்கள். திறல்கொள் வாகு - வீரவாகுதேவர். சிலை சிதைக்க - வில்லை ஒடிக்க. வண்மை - அழகு. அயர - மயங்க. ஒல்லை - விரைவில்.

308. விறல் கொடி அறுத்துழி - வெற்றித் துவசத்தை அறுத்தபோது. கறுத்து - (முருகவேள்) கோபித்து. அவன் - சூரபன்மன்.

அன்னவர் ஒலித்தலும் அழன்(று)இரத மோ(டு)அவுணர்
அண்ணல்உயர் விண்ணி டையடைந்(து)
இன்னலுற உம்பர்மிசை வெம்பகழி தூவலும்
இளங்குமரன் நின்று புவிமேல்
துன்னுகணை விட்(டு)அவை அறுத்திலகு வையமொடு
துய்யகக னத்தின் மிசைபோய்
ஒன்னல னெடும்கணை பொழிந்(து)அமர் புரிந்தனன் ;
உமைக்(கு)இனிமை யான புதல்வன். 309

பிலத்தினிடை போவன ; நிலத்தினிடை மேவுவன ;
பேசரிய ஆசை களெனும்
தலத்தினிடை ஓடுவன ; நீடுகடல் கூடுவன ;
சையமிசை எய்து வன ; சீர்
மலர்த்தவி(சு) அயன்புவியின் அண்டுவன ; மண்டுகடல்
வாளகிரி தாவி அழியா
நலத்தொடுறும் அண்டமுனம் ஏகுவன ; மீளுவன ;
நண்ணும்அவர் வண்ண இரதம். 310

இன்னபரி(சு) அன்னவர்கள் ஏறும்இரு வீ(று)இரதம்
எங்கணும் உலாவு பொழுதில்
மன்னவுணர் மன்அளவில் வெம்படை விடுப்பஅவை
வாளிகொடு தூளி புரியா
இன்னமுத மானமுரு கக்கடவுள் ஏழினுடன்
ஏழுகணை விட்(டு)அ வுணர்கோன்
பொன்னிரதம் நீறுபட நூறுதலும் வில்லினெடு
பூமிசை அடைந்த னனரோ. 311

---

309. அழன்று - கோபித்து. அவுணர் அண்ணல் - சூரபன்மன். பகழி - அம்பு. வையமொடு - தேரோடு. கனத்தின்மிசை போய் - ஆகாசத்திலே சென்று. ஒன்னலன் – பகைவன் ; சூரபன்மன். உமை - உமாதேவியார்.

310. பிலத்தினிடை - பாதலத்திற்குள்ளே. ஆசைகள் - திசைகள். சைய மிசை - மலைகளின் மீது. மலர் தவிசு அயன் புவியின் - தாமரையை ஆசன மாகவுடைய பிரமனது உலகத்தில். மண்டு கடல் - நீர் நிறைந்துள்ள பெரும்புறக் கடலிலும். வாளகிரி - சக்கரவாளகிரியிலும். அவர் வண்ண இரதம் - சூரபன்மன், முருகன் இருவர்களின் அழகிய தேர்கள்.

311. மன் - நிலைபெற்ற (வரங்களைக் கொண்ட). இரு வீறு இரதம் - இரண்டு வேறு பெருமை பொருந்திய தேர்களும். அவுணர் மன் - சூரபன்மன். தூளி புரியா - பொடிபடுத்தி. நூறுதலும் - அழிக்கவே.

வையமிசை வந்ததொரு சூரன்மிகு வாளிவிட
வாளிகொ(டு) அறுத்த ருளியே
ஐயன்எதிர் சூரனது வீரமுறு தோளின்மிசை
ஆயிர நெடுங்க ணைகள்தான்
எய்யஅவை பட்(டு)அவண் ஓடிந்துவிழ வெய்யவன்
இராயிரம் நெடுங்க ணைவிடத்
துய்யகுகன் மொய்ம்பினிடை வாளிகள் பொருந்திமிகு
தூளிகள் பொருந்தி னவரோ. 312

பின்னுமவு ணன்சொரி சரங்களை விளக்குபு
பெருங்கணைகள் ஆயி ரம்விடுத்(து)
அன்னவன் அடல்தனு ஒடித்திடலும் மற்றுமொர்
அருஞ்சிலை பிடித்(து)அ வுணர்கோன்
மின்னுறு விசும்பினில் எழக்கடிது வேலவனும்
விண்ணிடை எழுந்து பொரவே
மன்னவுணன் மண்ணின்மிசை பின்னும்வர நம்பரனும்
வந்(து)அமர் புரிந்(து)அ ருளினன். 313

காசினியில் நின்றவன் அளக்கரிடை திக்கிடை
கவின்தரு பிலத்தி னிடைசீர்
வீசுபுகழ் மேருவிடை மாயனுல கத்தினிடை
மேவஅவை தோறும் அணுகிப்
பூசல்முரு கன்புரிய அண்டமுறு வாயிலிடை
போகஅவ ணும்குறுகியே
நீசனெ(டு) எதிர்ந்துவிறல் பட்டகணை விட்டவுணன்
நெட்(டு)இரதம் அட்ட ருளினன். 314

---

312. வையமிசை - நிலத்தின் மேல். ஐயன் - முருகக்கடவுள். அவண் - அவ்விடத்திலே. துய்ய குகன் - நிருமல மூர்த்தியாகிய முருகக்கடவுள். மொய்ம்பினிடை - தோள்களின்மேல்.

313.. அடல் தனு - பலமுடைய வில்லை. மின்உறு - ஒளிவிடுகின்ற. அவுணன் மன் என்க. நம் பரனும் - முருகக் கடவுளும்.

314. காசினியில் - பூமியின் மேல். அளக்கரிடை - கடலினிடையே. கவின் - அழகு. பிலத்தினிடை - பாதாள உலகத்தில். மாயன் உலகத்தினிடை - வைகுந்தத்தில். முருகன் பூசல் புரிய ; பூசல் - போர். அண்டமுறு வாசல் - அண்டகோளத்தின் முகட்டிலுள்ள வாயில். நீசனெடு - குரபன்மனெடு. நெடு இரதம் - உயர்ந்த தேரை.

தேரழிய மூன்புரி மகத்தினிடை ஆதியருள்
செய்தமன வேக மதுவாம்
வீரமுறு தேரைநீன யக்கடிது வந்திட
விளங்கதனில் ஏறி அருளே
ஆருமுரு கன்கணைகொ(டு) அண்டமுறு வாயிலை
அடைத்தகத வைக்க ணைகள் தூய்
வீரமொ(டு) அறுத்திடலும் அப்புறம் இருந்தபடை
மேவியது வேலன் அயலே. 315

வந்தபடை கந்தன்விழி பட்டிடலும் வல்லியின்
மடிந்த(து)அயல் அண்ட மருவும்
உந்துபடை வந்திட உரப்பினன் உரப்பலும்
உடைந்த(து)அயல் அண்ட மருவும்
வெந்திற லுறும்படை வரக்கரம்உ(று) ஐம்படையை
வேலவன் விடுப்ப அவைபோய்
நந்தில்பல அண்டமுறு சூர்படை அணைத்தையும்
நடுக்குற அடர்த்த உலவி. 316

தந்திர முறும்படை கெடப்பரன் அளித்ததொரு
சக்கரம் எடுத்(து)அ வுணர்கோன்
கந்தன்மிசை விட்டிட அதைக்குமர வேள்ஒரு
கரங்கொடு பிடிப்ப அதுகண்(டு)
அந்தமில் உருக்கொ(டு)அம ராடமுரு கேசன்அறி
வானபடை விட்(டு)அ டையலான்
வெந்திறல்கொள் மாயம(து) அறுத்துழி ஒருத்தன்என
மேவினன் மிகுத்த கொடியோன். 317

---

315. மகத்தினிடை - யாகத்தில். ஆதி - சிவபெருமான். மனோவேகத்தை யுடைய இந்திரஜால இரதத்தை என்க. அருளே ஆரும் - கருணை நிறைந்த. அம்புகளால் அண்டவாசலை முருகவேள் அடைத்தபோது அவ் வம்புக் கதவைச் சூரபன்மன் அழித்தான் என்க.

316. அயல் அண்டம் - வேறு அண்டங்களில் இருக்கும். உரப்பினன் - உங்காரம் (கர்ச்சனை) புரிந்தருளினர். அவ்வொலி கேட்டு மேல்வந்த படைகள் அழிந்தன. ஐம்படை - பஞ்சாயுதம்; அவை, சங்கு, சக்கரம், வாள், வில், கதை என்பன. நந்து இல் - குறைதல் இல்லாத. உலவி அடர்த்த - எங்கும் பரந்து சென்று அழித்தன.

317. தந்திரம் - போர் செய்தற்குரிய விரகுகள். பரன் - சிவபிரான். அந்தமில் உருக்கொடு - சூரன் மாயையால் முடிவில்லாத பல பல உருவங்

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

அப்போதினில் மிகுதானவர் அர(சு)ஆயிர கோடி
அண்டத்தினும் அண்டக்கடி(து) அண்டிக்கும ரேசன்
மெய்ப்(பு)ஆர்அம ராடப்பினும் இப்பாரிடை வந்தே
மிகநொந்து மனத்(து)ஆயை நினைத்தான்அது போதின்
ஒப்பாரறும் அவள்வந்திட நிகழ்வானவை அவளோ(டு)
ஓதிப்படை யிற்பட்டவர் உய்ந்தேயெழு மாறு
செப்பாய்எனப் புறவேலியின் ஒருசாருறும் அமுதத்
திருவெற்பது வரிலாம்எனச்[1]செப்பிக்கரந்திட்டாள்.318

இன்பாகிய அவுணன்றன(து) இரதத்தினை ஒருவி
இறைவன்தரு சிங்கத்தின் எருத்தத்தின் அணைந்தே
கொன்பாவிய[2] அமுதந்திகழ் குன்றந்தனைச் சென்றே
கொடுவாவெனத்தேர்போயதுகொடுவந்தது;படையின்
முன்பாடுறும் அரிமாமுகன் இரவிப்பகை முதலா
முடிவற்றிடு படைமுற்றவும் முன்போலெழு(து) ஈண்டப்
பொன்பாவிய உலகத்தவர் வெம்பூதர்கள் கண்டே
புலிகண்டிடு புல்வாயது போலத்தளர்(வு) உற்றார். 319

கண்டான்இது மண்(டு)ஆறிரு கண்தானுடை வள்ளல்
கடுவண்டவன்நெடுவெம்படை கைக்கொண்டு விடுப்பத்
தண்டாவிறல் அவுணப்படை முற்றுங்கடி(து) அட்டத்
தாணுப்படை வேலன்புடை சாரக்கொடுஞ் சூரன்

கனை எடுத்துக்கொண்டு. அமர் ஆட - போர் செய்ய. அறிவான படை - ஞானஸ்திரம். அடையலான் - பகைவன். ஒருத்தனென - தனி ஒருவனுக.

318. தானவர் அரசு-சூரபன்மன். அண்ட-செல்ல, கடிது அண்டி அவன் போன இடங்களிலெல்லாம் தாமும் விரைவாகச் சென்று என்க. மனத்து ஆயை நினைத்தான் - மனத்தில் மாயையாகிய தன் தாயை நினைத்தான். புறவேலியின் - பெரும் புறக் கடலில். அமுதத் திருவெற்பு - அமிர்தகிரி. வரில் ஆம் - இங்கே வந்தால் இறந்துபட்ட படைகள் எழும். கரந்திட்டாள் - மறைந்தாள்.

319. இன்பு ஆகிய - சந்தோஷத்தை அடைந்த. ஒருவி - நீங்கி. எருத்தத்தின் - கழுத்தின்மேல். கொன் பாவிய - பெருமை பரவிய. கொடுவா என - கொண்டு வருவாயாக என்று தேரை நோக்கிச் சூரன் கூற. முன் பாடு உறு - முன்னே இறந்துபட்ட. அரிமாமுகன் - சிங்கமுகாசுரன். இரவிப்பகை - பானுகோபன். ஈண்ட - அடைய. பொன்பாவிய உலகத்தவர் - தேவர். புல்வாய் - மான்.

பா-ம்—1. வரினுமெனச். 2. கொன்பாகிய.

அண்டாசிடர் கொண்டான்; இடர் விண்டார்இமை யோர்கள்
அல்லற்புரி சூர்பின்னர் அருந்தேரை விடுப்பக்
கொண்டாடு நெடுந்தேரது கண்டார்கள் நடுக்கம்
கொள்ளும்படிபொள்ளென்றுகொதித்(து) ஏகியதம்மா. 320

ஏகித்திறல் வாகுத்தனே வாகுற்ற இலக்கத்(து)
எட்டான திறத்தோரை இரும்பூதரை எல்லாம்
மோகத்தொடு சோகப்பட வாரிக்கடி(து) அண்ட
முகடுற்றது; முருகேசன் முனிந்(து)ஓர் கணைவிட்டான்;
வாகைக்கணை சென்(று)இந்திர ஞாலச்சக டத்தை
வையத்திடை கொடுவந்திட வாகுத்தனே முதலோர்
சோகத்தினை அற்றுர்;குகன் இரதத்தினை நிற்பச்
சொற்றுன்அஃ'து) அவண்நின்றது சுர்கண்டு வெகுண்டு 321

மூதண்டம் அளாவுற்றிடு கோதண்டம் வலீத்தேழ்
முரண்அம்பு சொரிந்தான்;அறு முகனும்கணை தூவித்
தீதண்டிய சூர்வாளி விலக்கித்தச நூறு
திண்மைக்கணை சிந்திச்சமர் சிந்தித்திடு சூர்கைப்
போதண்டிய வில்லைத்துணி கண்டான்;அது போதில்
பொருமூவிலை வேல்கொண்டு புகழ்ச்சிக்கும ரேசன்
மீதண்ட விடுத்தான்;அது கண்(டு)ஆயிர கோடி
வெவ்வாளி சொரிந்தான்;அருள் வீசும்முரு கேசன். 322

---

320. மண்டு ஆறு இரு கண் தான்உடை வள்ளல் - நெருங்கிய பன்னிரண்டு கண்களை உடைய முருகவேள். கடுவுண்டவன் - சிவபிரான். அவன் படை, பாசுபதாஸ்திரம். முற்றும் கடிது அட்டு - முழுவதையும் விரைவிலே அழித்து. அத் தானுப்படை - அந்தப் பாசுபதாஸ்திரம். அண்டு ஆசு இடர் கொண்டான் - குற்றமுடைய துன்பத்தை அடைந்தான். இமையோர்கள் இடர் விண்டார் என்க. கொதித்து - கோபம் கொண்டு. பொள்ளென - விரைவுடன்.

321. திறல் வாகுத்தனே - வீரவாகுவையும். திறத்தோரை - பூதரையும் மோகத்தொடு சோகப்பட வாரி - மயக்கத்தோடு துக்கத்தை அடையும் படி எடுத்துக்கொண்டு. அண்ட முகடு உற்றது - அண்டத்தின் உச்சியை அடைந்தது. இந்திர ஞாலச் சகடத்தை - மனோவேகமென்னும் இந்திரஞால ரதத்தை. வையத்திடை - பூமிக்கு. வாகுத்தனே முதலோர் - வீரவாகுதேவர் முதலியவர். இரதத்தினை நிற்பச் சொற்றுன் - இந்திர ஞாலத்தேரை நிற்கும் படி ஏவியருளினர்.

322. மூது அண்டம் - பழமையான அண்டத்தை. கோதண்டம் - வில்லை. முரண் – வலிமை. தீது அண்டிய - தீங்கையுடைய. கைப்போது

வேலன்சொரி கோல்முற்ற விறல்சூல மறுத்தே
விரைவோ(டு)எதிர் வரவச்சிரம் விட்டான்;அது சென்றே
சூலத்தலை கவ்விக்கும ரன்பாணி பொருந்தச்
சுடர்வேலவன் ஈராயிரந் தூவாளிகள் தூவி
ஆலக்கொடி யோன்உற்றிடு சிங்கத்தை வதைப்ப
அங்(கு)அத்துணை வஞ்சத்தொடும்[1] அடலேமிகு கடலே
போலப்பொலி வெம்பூதர் வருந்தும்படி நேமிப்
புள்ளாய்உருவங்கொண்(டு)எதிர்பொருதான்நெறி கருதான்.

துண்டங்கொடு கொத்திச்சிறை தன்னல்மிக மோதித்
துங்கம்பெறு வெம்பூதரைத் துயர்செய்(து)அது திரிய
மண்டும்புகழ் அறுமாமுகன் மகவான்மயில் வடிவாய்
வரஉன்னலும் அவன்அப்படி வந்தான்அவன் மிசையே
சண்டன்றனை யுதைசெய்தவன் அருள்மாமகன்ஏறிச்
சயமோடு துரந்தேகொடி தாயுற்றிடு புள்ளைக்
கண்டம்பட வாள்கொண்டு துணித்தான்;அது போதில்
கடலுற்றிடு விடமொத்திடு கடியோன்இது புரிவான். 324

மண்ணுகியும் புனலாகியும் அனலாகியும் வங்கூழ்
வடிவாகியும் அண்டந்தொட வளர்ந்தேயவண் உறலும்
விண்ணோர் வணங்(கு)ஆறிரு கண்ணுர்முரு கேசன்
வீ(று)ஆயவை மாருகிய வெங்கோல்கள் விடுத்தே

அண்டிய வில்லை - கையில் இருந்த வில்லை. துணி கண்டான் - ஓடித்தார். மூவிலை வேல் - சூலாயுதம். அண்ட - விழும்படி.

323. கோல் முற்ற – அம்புகள் முழுவதையும். வச்சிரம் - வச்சிராயுதத்தை. பாணி - திருக்கரத்தை. ஆலக்கொடியோன் - விடம் போன்ற கொடுமையை உடைய சூரபன்மன். அத்துணை - அவ்வளவில். வஞ்சத்தொடும் - வஞ்சகத்தோடும். அடல் மிகுந்த கடலைப்போல என்க. நேமிப் புள்ளாய் - சக்கரவாகப் பட்சியாகி. நெறி கருதான் - நல்ல நீதியை நினையாத சூரபன்மன்.

324. துண்டம் கொடு - அலகினால். சிறை தன்னல் - இறகுகளால். துயர் செய்து அது திரிய என்க. மகவான் மயில் வடிவாய் வர - இந்திரன் மயிலுருவத்தோடு வரும்படியாக. அறுமாமுகன் உன்னலும் - முருகக் கடவுள் நினைத்தலும். சண்டன்தனை உதை செய்தவன் - சிவபிரான். (சண்டன் - யமன்.) துரந்தே - செலுத்தி. புள்ளை - சக்கரவாகப் பறவையை. கண்டம் பட - துண்டாகும்படி. கடியோன் – சூரபன்மன். சூரபன்மன் பறவை வடிவாய்ப் போர்புரியும்போது தாம்இரதத்திலிருந்து போர்

பா-ம்—1. வெஞ்சத்தொடும்.

எண்ணை னது மாயத்துரு மாயும்படி செய்தான் ;
இப்பான்மையில் இருநாளுடன் இருநாள்வரை அவுணன்
பெண்ணைரும் மருங்(கு)அண்ணல் பெருங்கண்ணிடை வந்த
பெருமா னெடுபொரு தேயிவை பின்னுஞ் செயலுற்றான். 325

கூற்றுமென ஒருபால்வரும்; ஒருபால் வரும்இருள்போல் ;
குவடாமென ஒருபால்வரும்; ஒருபால் வருங்குறள்போல்;
காற்றுமென ஒருபால்வரும்; ஒருபால்வரும் அனல்போல் ;
கடலாமென ஒருபால்வரும்; ஒருபால்வருங்கடிபோல்;
மாற்றுவிறல் இலையோரென ஒருபால்வரும்; ஒருபால்
வயமைந்தர்கள் எனவேவரும்; மைவேலையின் முன்னம்
தோற்றுவரு விடமாமென ஒருபால்வரும்; ஒருபால்
துன்னும்படை என்னும்படி சூழ்வுற்றிடுஞ் சூரன். 326

இப்பான்மையில் அவுணர்க்கிறை எங்கெங்கும் நிறைந்தே
இரும்போர் செயவரும் போதினில் இருள்கொண்டிடு கண்டத்
துப்பார்கனல் விழியோன்அருள் சுதன்ஆயிர கோடி
தூவாளிகள் தூவாஅவை தொலையும்படி புரியா
மெய்ப்பார்கட லேழும்புவி யேழும்பிற யாவும்
வீறொன்றிய தான்அல்லது வே(று)ஒன்றிலை என்ன
ஒப்பாகிய(து) இல்லாஒரு வடிவங்கொடு நின்றான் ;
ஒன்னுன் இரு நயனங்களும் உளமெங்களும் உருக. 327

புரியலாகாது என்று இந்திரனே மயிலாக வரும்படி முருகப்பெருமான் கருதினர் என்க.

325. வங்கூம் - காற்று. அண்டம் தொட - அண்டத்தைத் தொடும்படியாக. வளர்ந்தே: வளர்ந்தவன் சூரபன்மன். வீறு ஆயவை மாறு ஆகிய - வேறு வேறு உருவங் கொண்டுவந்த அவற்றிற்குப் பகையாக உள்ள. எண்ணை னது - பகைவனுடைய. (எண்ணுன் - பகைவன்.) மாயத்து உரு - மாயையினல் எடுத்துக்கொண்ட பல உருவங்கள். நான்கு நாள் சூரபன்மன் இவ்வாறு போர் செய்தான் என்க. பெண் ஆரும் மருங்கு அண்ணல் - உமாதேவியார் தங்கும் வாமபாகத்தையுடைய சிவபெருமான். அவருடைய நெற்றிக் கண்ணிலிருந்து வந்த பெருமான், முருகக்கடவுள் என்க.

326. கூற்று ஆம் என - யமன் என்று சொல்லும்படியாக. குவடாமென - மலையைப்போல. குறள் போல் - பூதம் போல. கடி போல் - பேயைப்போல. மாற்று - மாற்றக்கூடாத. வய - வலி. மைவேலை - கரிய கடல். படை என்னும்படி - ஆயுதங்களைப்போல.

327. இருள்கொண்டிடு கண்டம் - நீலகண்டம். துப்பு ஆர் - செந்நிறம் பொருந்திய. சுதன் - குமாரன். தூவா - எய்து. அவை தொலையும்படி - சூர

எங்குந்தன(து) உருவாகி இருக்கின்ற சொரூபம்
எய்திக்குகன் நிற்கும்பொழு(து) இன்னல்புரி சூரன்
பொங்கும்புகழ் அன்போடு மதித்தேயது மாறப்
பொள்ளென்று சினந்(து)அண்டர் புலம்பும்படி மாயம்
தங்கும்பல வடிவங்கொடு சமர்ஆடலும் முருகன்
தனிவேலை விடுத்தான்அது தகுவர்க்(கு)[1] இறை கண்டே
சங்குந்திய வேலைப்புடை தடமாமர மாகிச்
சாரக்கதிர் வேல்சென்று தடிந்திட்டது மாதோ. 328

சங்கத்தியின் மேல்நின்றிடு மாவைக்கதிர் வேல்போய்ச்
சாயும்படி செய்திட்டுழி தகுவர்க்(கு)[2] இறை கண்டே
துங்கத்தன(து) உருவங்கொடு பொரவேவரை மார்பைத்
துண்ணென்று பிளந்(து)அண்டர்கள் துள்ளும்படி தன்னி
மங்குற்பொலி வானத்துறு கங்கைப்புன லாடி
வந்தேகும ரன்பாணி புகுந்தேகதிர் வைவேல்
அங்குற்றது ; வெஞ்சூரன் இரண்டான பிளப்பும்
அடல்மாமயி லொடுகுக்குட மாகிப்பொர வந்தான். 329

பன்மன் எடுத்த மாய உருவங்கள் அழியும் வண்ணம். ஒரு வடிவங்கொடு - வீசுவரூபத்தை எடுத்துக்கொண்டு. ஒன்னன் – பகைவன் : சூரபன்மன்.

328. இன்னல் - துன்பத்தை. அன்போடு மதித்தே – முதலில் அந்த உருவத்தினிடத்தே கருத்துச் செல்ல நன்மதிப்பைக் கொண்டு. அது மாற – அந்த அன்பு மாற. பொள்ளென்று சினந்து - திடீரென்று கோபித்து. அண்டர் புலம்பும்படி - தேவர் கதறும்படி. மாயம் தங்கும் பல வடிவம் - மாயம் பொருந்திய பற்பல வடிவம். இவற்றுள், சூரபன்மன் மேகவடிவு கொண்டு வந்தபோது தேவர்கள் மிகக் கலங்கி முருகனை அடைந்தனர் என்க. தனி வேல் - ஒப்பற்ற வேலாயுதத்தை. தகுவர்க்கு இறை - அசுரருக்குத் தலைவனாகிய சூரபன்மன். சங்கு உந்திய வேலைப்புடை - சங்குகளைத் தள்ளிய கடலினிடையே. தட மாமரமாகி - விசாலமான மாமர உருவத்தை எடுத்துக்கொண்டு. தடிந்திட்டது - (இருபிளவாகும்படி) பிளந்தது.

329. சங்கு அத்தியின்மேல்-சங்குகளையுடைய கடலின் மேல். மாவை-மாமரத்தை. சாயும்படி செய்திட்டுழி - விழும்படியாகச் செய்தபொழுது. தகுவர்க்கு இறை - சூரபன்மன். தனது உருவம் கொடு - தன் இயல்பான உருவத்தை எடுத்துக்கொண்டு. வரை மார்பை - சூரபன்மனது மலைபோன்ற மார்பை. அண்டர்கள் துள்ளும்படி - தேவர்கள் மகிழ்ச்சியினால் கூத்தாடும் படி. மங்குல் - மேகம். பாணி - திருக்கரத்தில். இரண்டு ஆன பிளப்பு - வேலால் பிளக்கப்பட்டு இரண்டான துண்டுகள். குக்குடம் - கோழி. பொர - போர் செய்ய. பா-ம்—1, 2. தகுவற்கு.

ஆறுந்திய முடிகொண்டவன் அதுகண்(டு)அசு ரேசன்
அமராடி இகீகக்குஞ்செய லால்அங்கவன் மீதே
ஏறுஞ்செயல் போலப்பொலி நீலச்சிகி மேலே
ஏறிக்கொடி தானுக இருஞ்சேவல் உயர்த்தான் ;
வீறுண்டர்கள் கண்டேஅறு முகனீப்பர வற்றூர் ;
வெஞ்சூர்முதல் பட்டானென விட்டாள்உயிர் தேவி
சீறின்றிய வேலேப்புடை மீனும்இர ணியன்அங்(கு)
இதுகண்டு புலம்பிப்புகர் என்பானை அடைந்தான். 330

அனைவர்க்கும் அவற்கொண்டு சடங்கானது செய்தான் ;
அறுமாமுகன் அடல்வாகுவை அருளோடு தெரிந்தே
மனமுற்றிடு துயரத்தொடு சிறையின்புடை வாழும்
மகவான்மகன் முதலாகிய வானோர்களை நந்தம்
முனமுய்க்குதி எனமுன்புற உய்த்தான்அவர் தொழுதே
மொய்த்தார்மிகு சூர்ஊரினை முந்நீர்கொள நல்கிச்
சினமெத்திய பூதப்படை விண்ணோர்புடை சூழச்
செந்திற்பதி வந்தான் ;அருள்சிந் தித்திடு கந்தன். 331

ஆகச் செய்யுள் 784

யுத்த காண்டம்

முற்றிற்று.

---

330. ஆறு உந்திய - ஆறு என்ற தொகையுள்ள மேன்மை பொருந்திய. அமராடி இகீகக்கும் செயலால் - போர்புரிந்து தோல்வியுறும் செய்கையால் தோல்வியுற்றூர் மேல் வென்றூர் ஏறுதல் ஒரு மரபு. பொலி நீலச் சிகிமேலே - விளங்குகின்ற நீலமயிலின் மீதே. இருஞ்சேவலைக்கொடி தான் ஆக உயர்த்தான் என்க. தேவி உயிர்விட்டாள் - சூரபன்மன் தேவியாகிய பதுமகோமளை உயிரை நீத்தாள் ; இவள் மிக்க கற்புடையவள் ஆதலால் தன்னுயகன் இறந்ததைக் கேட்டு உயிர்விட்டாள் என்க. மீன் ஆம் இரணியன் - மீனுகக் கடலில் ஒளிந்திருந்த இரணியன் ; இவன் சூரபன்மன் தம்பி ; யாவரும் இறந்தால் அவர்களுக்கு ஈமக்கடன் புரிய ஒருவன் வேண்டுமென்று கருதி மீனுகிக் கடலில் இருந்தவன் ; இந்நூல் யுத்த காண்டம் - 151-ம் செய்யுளைப் பார்க்க. புகர் என்பானை - சுக்கிரனை.

331. அவன் கொண்டு - இரணியனைக் கொண்டு. சடங்கானது - ஈமக்கடன்களை. மகவான் மகன் - இந்திரன் மகனுகிய சயந்தன். உய்க்குதி - அழைத்து வந்து விடுக. மொய்த்தார் - முருகக் கடவுளைச் சூழ்ந்தார்கள். சூர் ஊரினை - மகேந்திரபுரியை. முந்நீர்கொள நல்கி - கடல் கொள்ளும்படி வழங்கியருளி. சினம் மெத்திய - கோபம் மிக்க. பூதப்படையும் விண்ணோரும் சூழ. அருள் சிந்தித்திடு - எப்போதும் ஆன்மாக்கள் உய்யும்படி அருளுதலையே திருவுள்ளத்தில் நினைந்துகொண்டிருக்கும். கந்தன் - முருகக்கடவுள்.

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

ஐந்தாவது

தேவ காண்டம்

—o—

வண்மை தங்கு மயூரம் இழிந்தே
மந்தி ரத்திடை வந்து புகுந்தே
திண்மை தங்கு மடங்கல் அணைக்கண்
தேவர் அஞ்சலி செய்ய இருந்தான் ;
விண்மை தங்கு துணங்(கு)அறல் கொள்ள
வெள்ளை வண்திரை வேலையி னூடே
ஒண்மை தங்கு கனற்கதிர் வெய்யோன்
ஒய்யெ னப்படி வுற்று மறைந்தான். 1

ஆசை கொண்(டு)உயர் அண்டர்க ளெல்லாம்
ஆறு மாமுக அண்ணல் மலர்த்தாள்
பூசை செய்து பராவினர் நிற்பப்
பொற்(பு)உ லாவு புகழ்த்தனி வேலோன்
நேச மூற்(று)அம ரர்க்கருள் செய்தான் ;
நீடு கங்குல் நெடுந்திறல் வெஞ்சூர்
மாச றும்படி மாய்வுற வேல்போல்
வந்தெ ழுந்தனன் வண்மை அருக்கன். 2

---

1. மயூரம் இழிந்தே - மயில் வாகனத்திலிருந்து இறங்கி. மந்திரத் திடை - திருக்கோயிலுக்குள். மடங்கல் அணைக்கண் - சிங்காதனத்தின் மீது. அஞ்சலிசெய்ய - கும்பிட. விண் மை தங்கு துணங்கு அறல் கொள்ள - ஆகாயத்தில் கருமை நிறைந்து கலந்த இருள் வர. திரை வேலையினூடே - அலைகளையுடைய கடலின்மேல். வெய்யோன் - சூரியன். படிவுற்று - அமிழ்ந்து.

2. பராவினர் - தோத்திரம் செய்து. பொற்பு - பெருமை. கங்குல் - இரவு ; அது சூரபன்மனைப்போல மடிய, சூரியன் வேலைப்போல உதயமானான். அருக்கன் - சூரியன்.

மற்றவ் வேலியில் வேலியில் வேலை
வல்லி ஏவிய வண்கும ரேசன்
புற்ற ராவினம் நண்ணிய சென்னிப்
புண்ணி யன்கழல் பூசை புரிந்தே
வெற்றி மஞ்ஞையின் மீது புகுந்தே
வீறு பூதர் மிடைந்தயல் சூழ
அற்றம் அற்ற எழில்கொள் பரங்குன்
றத்தின் மேவினன் அண்டர் வழுத்த. 3

அண்டர் கம்மியன் அன்ன வரைப்பால்
ஆல யத்துடன் ஆடக மாடம்
கொண்ட வீதி இமைப்பில் அமைப்பக்
கோல மஞ்ஞையின் நின்றும் அகன்றே
மண்டு சுந்தர மந்திரம் உற்றே
வண்மை கொண்ட மடங்கல் அணைக்கண்
எண்ட விர்ந்த உயிர்க்குயி ராகி
இருக்கும் நாதன் இருந்தனன் மன்னோ. 4

துன்னு வானவர் தம்மை விடுத்தே
துங்க வீரர் சுலாவ இருப்ப
அன்ன போது பராசரன் நல்கும்
ஆறு மைந்தரும் ஆறு முகேசன்
பொன்னு லாவிய புண்டரி கத்தாள்
பூசை செய்து புகழ்ந்திட லோடும்
நன்ன லம்பெற அன்னவர் தம்பால்
ஞான போதகம் நல்கி இருந்தான். 5

---

3. அவ்வேலியில் - அப்போது. வேலியில் வேலை - கடலில் வேலாயுதத்தை. புற்று அரா இனம் - புற்றில் வாழும் பாம்புக்கூட்டங்கள்; இறைவன் அணிந்த நாகங்கள் புற்றில் வாழ்வன அல்லவாதலின், இது சாதிபற்றி வந்த அடை என்க. புண்ணியன் - சிவபெருமான். மிடைந்து - நெருங்கி. அற்றம் - இறுதி. அண்டர் - தேவர். வழுத்த - துதிக்க.

4. அண்டர் கம்மியின் - தேவதச்சனுகிய விசுவகன்மா. அன்ன வரைப்பால் - அந்த மலையினிடத்தில். ஆடக மாடம் - பொன் மாளிகை. இமைப்பில் - இமைப்பொழுதில். சுந்தர மந்திரம் - அழகிய ஆலயத்தை. மடங்கல் அணை - சிங்காதனம். நாதன் - முருகக்கடவுள்.

5. சுலாவ - சூழ. புண்டரிகத் தாள் - தாமரை மலரைப்போன்ற திருவடிகளை. ஞான போதகம் நல்கி - ஞான உபதேசம் வழங்கி.

சது நின்றிட வீண்ணவர் அண்ணல்
இன்ப முற்ற எழில்தெய்வ யானை
மாதெ னுந்தன(து) ஒண்மகள் தன்னை
மன்னி ருந்திறல் வண்கும ரேசற்(கு)
ஆத ரத்தொடு நல்குவன் என்றே
ஆழி மாலொடும் அம்புய னோடும்
ஓதி னன்;அவர் சென்றிது சன்(று)இங்(கு)
ஒல்லை செய்குதி என்ன உரைத்தார். 6

உம்பர் மன்னவன் உள்ளம் உவந்(து)ஓர்
ஒற்றன் மாமுகம் ஒல்லை தெரிந்தே
செம்பொன் மால்வரை மீது பொருந்(து)என்
தேவி தன்னொடு சீர்மகள் தன்னை
இம்பர் நீகொடு வாவென ஓத
ஏகி இன்ன(து) இசைத்திட அன்னர்
கும்ப மாமத வாரணம் ஏறித்
குன்று சூழ்பரங் குன்றம் அடைந்தார். 7

இந்தி ரன்றன் இருக்கையில் மாதோ(டு)
இந்தி ராணி இருந்தனள்; அங்கண்
உந்து சூருள சூரன(து) ஊரில்
உற்றி டுஞ்சிறை அற்றிடு மாதர்
வந்(து)இ றைஞ்ச உவந்(து)அருள் செய்தே
மைந்த னைத்தழு வுற்று மகிழ்ந்தாள்;
அந்த வேலை வரைச்சிறை கொய்தோன்
ஆறு மாமுகன் ஆலயம் உற்றான். 8

---

6. வீண்ணவர் அண்ணல் - இந்திரன். ஆதரத்தொடு - அன்போடு. ஆழி - சக்கரப்படையை யுடைய; திருப்பாற்கடலில் எழுந்தருளிய எனலும் ஆம். அம்புயன் - பிரமதேவன். ஒல்லை - விரைவில்.

7. தெரிந்து - பார்த்து. செம்பொன் மால் வரை - மேருமலை. என் தேவி என்றது இந்திராணியை. மகள் - தெய்வயானை. இம்பர் - இவ்வுலகத்துக்கு. ஏகி - ஒற்றர்கள் போய். கும்பம் - மத்தகம். மதவாரணமென்றது இங்கே வெள்ளை யானையை. பரங்குன்றம் - திருப்பரங்குன்றம்.

8. சூரனது ஊரில் - மகேந்திரபுரியில். மாதர் - தேவமகளிர். இறைஞ்ச - இந்திராணியை வணங்கவே. உவந்து - மகிழ்ந்து. மைந்தனை - சயந்தனை. வரைச் சிறை கொய்தோன் - மலைகளின் சிறகை அறுத்த இந்திரன்.

சென்னி ஆறுள தேவன் அளித்த
சென்னி ஆறுள தேவை வணங்கி
என்னே யாளுடை நாயக! நீயிங்(கு)
இன்ன குன்றிடை என்றிரு மாதை
மன்ன மன்றல் புரிந்தருள் என்ன
வாகை வேலுள மன்னவன் நாளை
அன்ன பான்மை இயற்றுதும் என்ன
அண்டர் அண்ணல் அகத்துள் மகிழ்ந்தான். 9

அற்றம் அற்ற மகிழ்ச்சி அடைந்தே
ஆல யத்தின் அகன்கடை வந்தே
கொற்ற ஒற்றர் முகங்கள் தெரிந்தே
கோதி லாமுரு குந்தனும் அல்லா
வெற்றி மன்னரும் உம்பரும் இங்ஙன்
மேவு மாறு விளங்கிய வைவேல்
நற்றி றல்திரு நாயகன் மன்றல்
நாளை என்று நவின்றிடும் என்றான். 10

எண்ணில் ஒற்றர் விரைந்து படர்ந்தார்;
ஈது நிற்க எழிற்குலி சக்கைக்
கண்ணெ ராயிரம் விண்ணிறை தெய்வக்
கம்மி யற்கொடு கந்தம் உலாவும்
வண்ண நீப நெடுந்தொடை மார்பன்
மன்றல் செய்திட மண்டபம் மன்றம்
விண்ணு லாவிய சோலைக ளெல்லாம்
வீரெ ழும்புரி வித்தனன் அன்றே. 11

---

9. சிரத்தின் கண்ணே கங்கா நதியுடைய சிவபெருமானால் பெறப்பட்ட ஆறு திருச்சிரங்களையுடைய முருகக்கடவுளே வணங்கி என்க. ஆறு - கங்கை. என். தே - கடவுள். இன்ன குன்றிடை - இந்தத் திருப்பரங்குன்றத்தில். மன்ன - நிலையாக. மன்றல் - திருமணம். அன்ன பான்மை இயற்றுதும் - அப்படியே திருமணம் செய்து கொள்கிறோம். அண்டர் அண்ணல் - இந்திரன்.

10. அற்றம் அற்ற - முடிவில்லாத. கடை - தலைவாசலில். முருகுந்த சக்கரவர்த்தியும் வேறு அரசர்களும் தேவர்களும் இங்கே வரும்படி என்க. மன்றல் - திருமணம். மேவுமாறு நவின்றிடும் என்க.

11. குலிசம் - வச்சிராயுதம். விண் இறை - இந்திரன். தெய்வக் கம்மியன் - விசுவகர்மா. கந்தம் - நறுமணம். நீப நெடுந் தொடை - கடப்பம் பூ மாலை. மண்டபமும் மன்றமும் சோலைகளும் என்க.

மிக்க இன்னது நின்றிட முன்னம்
வெள்ளி விண்டுவில் விண்தொடு காவில்
இக்கு வேகூ எரித்த நுதற்கண்
எம்பி ரான்உமை யோடும் இருப்ப
அக்க ணத்தின் முசுக்கலை ஒன்றங்(கு)
ஆதி மீதினும் ஆரியை மீதும்
தக்க வில்லுவ நல்லிலை சிந்தத்
தையல் சிறலும் ஐயன் விலக்கி. 12

கூவி கூத்தழை கொண்(டு)எமை இங்ஙன்
கோதில் பூசை குயிற்றிய பண்பால்
நீவ கூந்திட வேலை சுலாவும்
நீள்பு விக்(கு)அர(சு) ஆகுதி என்றே
மாவ கூக்கை இடத்தன் இசைப்ப
வைய கத்திடை வந்து பிறந்தே
காவ கூத்த வயற்கரு வூர்வாழ்
காமர் சேர்முசு குந்தன் இடத்தின். 13

மேக வாகனன் ஒற்றர் படர்ந்தே
வென்றி வேலவன் மன்றல் விளம்ப
ஓகை எய்தி எழுந்(து)அனி கத்தோ(டு)
உம்பர் நாதன் உறுங்கிரி உற்றான் ;

---

12. வெள்ளி விண்டுவில் - வெள்ளி மலையில் ; கயிலாச மலையில். விண் தொடு காவில் - ஆகாயத்தை அளாவிய சோலையில். இக்கு வேகூ - கருப்பு வில்லையுடைய மன்மதகூ. முசுக்கலை - ஆண் குரங்கு. முசு - ஒருவகை சாதிக்குரங்கு. ஆதி மீதினும் - சிவபிரான் மேலும். ஆரியை - அம்பிகை. வில்லுவ நல் இலை - வில்வ மரத்தின் இலைகளை. தையல் - உமாதேவியார். ஐயன் - சிவபிரான்.

13. கூவிளத் தழை - வில்வபத்திரம். இஃது எல்லாப் பத்திரங்களிலும் மிகச் சிறந்தது : "வில்வத்தின் மிக்க விசிட்டமிலை ; பத்திரத்துள். இல்லிலை அலர் விதத்தும் ஈங்கு" என்பது சோமவார விரதசுற்பம். குயிற்றிய - செய்த. நீ என்றது அந்தக் குரங்கை நோக்கிச் சொன்னது. வேலை சுலாவும் - கடல் சூழ்ந்த. அரசு ஆகுதி - அரசன் ஆவாயாக. மா வனக்கை இடத்தன் - உமாதேவியாரை இடப்பாகத்தில் உடைய சிவபிரான். கா வனத்த - சோலைகள் சூழ்ந்த. காமர் - விருப்பம் ; அழகுமாம். அந்தக் குரங்கு முசுகுந்தனுகப் பிறந்தது. என்றே இசைப்பப் பிறந்து வாழ் முசு முகுந்தன் என்க.

சிக ரஞ்செறி சாகர மண்ணில்
சேரு மன்னவர் யாரும் அடைந்தார் ;
மாக நேரிடை மாதர்கள் மைந்தர்
வாவி காவில் உலாவி மகிழ்ந்தார். 14

ஆன காலையில் ஆர்கலி யூடே
ஆழி யொன்றுள ஆடக வையப்
பானு மூழ்கினன் ; வந்தது கங்குல் ;
பங்க மற்ற பரங்கிரி மீதே
வேனில் வேள்முசு குந்தனும் அல்லா
வீறு மன்னரும் ஏறுபு வேள்விக்
கோனை வந்தனை செய்திட அன்னன்
கோதி லாமுக மன்கள் புகன்றான். 15

அன்ன போதினில் ஆதவ னுதி
அண்டர் மாதவர் ஆரும் அடைந்தார் ;
மன்னு வேல்விழி மங்கைய ரெல்லாம்
வார ணத்திரு மாதை அடைந்தே
பொன்னு லாம்அணி செய்தனர் ; அன்ன
போது கோபதி போதினன் மாயோன்
மின்னு வேலவன் ஆலயம் உற்றே
மிக்க அன்பொடு முன்பு வணங்கி. 16

வார ணத்திரு மாமகள் தன்னை
மன்றல் செய்திட வந்தருள் என்ன
ஆர ணப்பொரு ளாகிய புத்தேள்
அங்(கு)எ ழுந்து மயூரம் அடைந்தே

---

14. மேகவாகனன் - இந்திரன். ஓகை – மகிழ்ச்சி. அனிகத்தோடு - படையோடு. உம்பர்நாதன் - இந்திரன். கிரி - திருப்பரங்குன்றம். சீகரம் செறி சாகரம் மண்ணில் - துளிகள் நிறைந்த கடல் சூழ்ந்த பூவுலகத்தில். மாகம் நேர் இடை - ஆகாயத்தை ஒத்த உருத்தெரியாத இடையை உடைய. வாவியிலும் காவிலும் ; வாவி - பொய்கை. கா - சோலை.

15. ஆர்கலி - கடல். ஆழி ஒன்றுள - ஒற்றைச் சக்கரத்தைக்கொண்ட. ஆடக வையப் பானு–பொற்றேரையுடைய சூரியன். கங்குல் வந்தது என்க. வேனில் வேள் - மன்மதனைப்போன்ற. ஏறுபு - ஏறி. வேள்விக்கோனை - இந்திரனை. முகமன்கள் - உபசார வார்த்தைகள்.

16. ஆதவன் - சூரியன். மாதவர் - முனிவர்கள். வாரணத் திருமாதை - தெய்வயானையை. பொன் உலாம் அணி செய்தனர் - பொன்னுலாகிய ஆபர

தோர ணத்திரு வீதி புகுந்தே
துன்று வானவர் தூமலர் தூவப்
பூர ணக்கவின் மாதர் நடிப்பப்
பொங்கு பல்லியம் எங்கும் முழங்க. 17

இன்ன போல வளங்கள் விளங்க
எம்பி ரான்இனி(து) ஏகி மணஞ்செய்
கொன்னு லாவிய சாலைமுன் நீலக்
குன்ற மஞ்ஞையின் நின்றும் அகன்றான் ;
அன்ன போது புலோமசை பால்கொண்(டு)
அண்ணல் தாளை விளக்கி அகன்றாள் ;
மன்னு வேலவன் மன்றல் நிலம்போய்
வாள்அ ரித்தவி(சு) உற்றனன் மன்னோ. 18

வேலன் ஏவலின் மால்முதல் விண்ணோர்
வீறு தங்க இருப்ப இருப்பக்
கோல மாமுசு குந்தனும் மற்றைக்
கொற்ற மானவ ரும்[1]கும ரேசன்
பாலடைந்து பணிந்தனர் ; அங்கண்
பாரி டங்கள் பரிந்தயல் சூழ
ஆல முண்ட பிடற்றினன் மாதோ(டு)
அந்த ரத்திடை வந்தனன் அம்மா. 19

ணங்களே அணிந்தார்கள். கோபதி - வானத்து அரசன் ; இந்திரன். போதினன் - பிரமதேவன்.

17. வாரணத் திருமாமகள் - தெய்வயானை. ஆரணப்பொருள் - வேதத்தினுற் குறிக்கப்பெறும் பொருள். புத்தேள் - கடவுள் ; முருகவேள். மயூரம் - மயில் வாகனத்தை. பூரணக்கவின் - முற்றிய அழகையுடைய. மாதர் - அரம்பை முதலிய மாதர். பல்லியம் - பல வாத்தியங்கள்.

18. மணம் செய் சாலைமுன் - கல்யாணக் கூடத்திற்கு முன்பு. நீலக் குன்ற மஞ்ஞை - நீல மலைபோன்ற மயில். புலோமசை பால் கொண்டு அண்ணல் தாளை விளக்கி - இந்திராணி காமதேனுவின் பாலைக்கொண்டு முருகவேளின் திருவடிகளை விளக்கி ; இது மணமகனுக்குச் செய்வது மரபு. மன்றல் நிலம் - கல்யாண மண்டபம். வாள் அரித்தவிசு - சிங்காதனத்தில்.

19. வீறு - புகழ். கொற்றம் - வெற்றியுடைய. மானவர் - அரசர்கள். பாரிடங்கள் - பூதங்கள். பரிந்து - அன்புகொண்டு. ஆலமுண்ட பிடற்றினன் - சிவபிரான். மாதோடு - உமாதேவியாரோடு. அத்தரத்திடை - ஆகாசத்தின் வழியே.

பா—ம் 1 வானவரும்.

மங்கை தன்னெடு மானம் இழிந்தே
மன்றல் எல்லியில் வந்திட வென்றி
தங்கு வேலன் மகிழ்ந்தெதிர் சென்றே
தந்தை தன்னெடு தாயை வணங்க
உங்(கு)எ டுத்தனர் புல்லினர் அன்போ(டு)
உச்சி மோந்தனர் ; மால்முதல் உம்பர்
மங்குல் கண்ட மயூரம(து) என்ன
வந்து வந்து வணங்கி மகிழ்ந்தார். 20

பூம ணம்புரி சாலியுள் வேலன்
பூவை யோ(டு)இறை வற்கொடு போக
மாம லிந்த அரித்தவீ(சு) ஒன்று
வள்ளல் ஆணையின் வந்(து)அவண் மேவக்
காமர் கொண்ட அதன்கண் இருந்தே
கந்த னேத்தம கைகொ(டு) எடுத்தே
தூம ருங்கில் இருத்தினர் ; வேதன்
சூர்ம டிந்தது முற்றும் உரைத்தான். 21

எந்தை அன்னை விழவி மகிழ்ந்தே
இங்கு மன்றல் இயற்றுக என்ன
அந்த ரத்(து)இறை ஏகி மகட்கொண்(டு)
அங்கண் வந்திட வந்த மடந்தை
நந்தியோ(டு)உமை யாளை வணங்க
நாரி முற்படு நற்றவி சின்கண்
கந்த னே(டு)அவள் தன்னை இருத்தக்
கண்டு கண்கள் களித்தனரி யாரும். 22

---

20. மானம் இழிந்தே - விமானத்தினின்றும் இறங்கி. மன்றல் எல்லியில் - விவாக சாலியில். உங்கு - அங்கே. மால்முதல் - திருமால் முதலிய. மங்குல் கண்ட மயூரமது என்ன – மேகத்தைக் கண்ட மயில்களைப்போல.

21. பூ-பொலிவு. மணம் - திருமணம். பூவையோடு - உமாதேவியாரோடு. இறை - சிவபிரானை. மா மலிந்த - பெருமை மிக்க. அரித்தவீசு - சிங்காதனம். வள்ளல் ஆணையின் - சிவபிரானது கட்டளையினால். தம - தங்களுடைய. தம் + அ. அ : ஆறனுருபு. தூ மருங்கில் - பரிசுத்தமான தம் பக்கத்தில். வேதன் - பிரமன். சூர் - சூரபன்மன் முதலியோர். உரைத்தான் – சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் கூறினன்.

22. எந்தை அன்னை - சிவபிரானும் உமாதேவியாரும். மன்றல் - திருமணத்தை. அந்தரத்து இறை - இந்திரன். நந்தியோடு - சிவபெருமானோடு.

கற்பெ ருஞ்சிறை கொய்தவன் அங்கண்
கன்னல் ஒண்புனல் பன்னி விடுப்பப்
பொற்பு வேல்இறை தாள்கள் விளக்கிப்
பூசை செய்து புராரி குமாரன்
நற்க ரத்து மடந்தையை நல்கி
நல்கி னேன்என நாரம் உகுப்ப
அற்கன் மான விளங்கிய செவ்வேள்
அங்கை தன்னிடை அங்(கு)அது கொண்டான். 23

அண்டர் போற்(று)அயன் அங்கு விதித்த
ஆசில் மங்கல நாணினை அன்னாள்
கண்ட மீது தரித்(து)அள கத்தோர்
கந்த நீடு கவின்தொடை சூடா
ஒண்டி றல்பெறு வன்னி வலங்கொண்(டு)
உம்பல் மாதின(து) ஓதிமம் உட்க
மண்டு சீர்நடை தந்திடு தாளை
வல்லி யில்சில மீமிசை வைத்தான். 24

இன்ன தன்மையின் மன்றல் இயற்றி
ஈச னேடுமை யாளை வணங்க
நன்ன லம்பெறு பேரருள் செய்தே
நாரி தன்னெடு நாதன் அகன்றான் ;

நாரி - உமாதேவியார். முற்படு - முன்னே உள்ள. அவள் தன்னை - தெய்வ யானையை.

23. கல் பெருஞ்சிறை கொய்தவன் - மலைகளின் சிறகை அரிந்த இந்திரன். கன்னல் ஒண் புனல் - கரகத்தினின்றும் வரும் நீரை. (கன்னல் - குண்டிகை.) பன்னி விடுப்ப - தன் மனைவியாகிய இந்திராணி வார்க்க. வேல் இறை - வேலாயுதக் கடவுளுடைய. புராரி குமாரன் - முருகவேளுடைய. நாரம் உகுப்ப - தாரை வார்க்க. (நாரம் - நீர்.) அற்கன் = அர்க்கன் - சூரியனை. அது - தாரை நீரை.

24. அண்டர் - தேவர். அயன் - பிரமதேவன். விதித்த - மந்திர விதியோடு அளித்த. ஆசில் மங்கல நாண் - குற்றமற்ற திருமங்கல நாண். கண்டமீது தரித்து - திருக்கழுத்தில் பூட்டி. அளகத்து ஓர் கந்தம் நீடு கவின் தொடை சூடா - கூந்தலில் மணம் பரவிய அழகிய மாலை ஒன்றை அணிந்து. வன்னி வலம் கொண்டு - அக்கினியை வலமாக வந்து. உம்பல் மாதினது தாளை - தெய்வயானையின் திருவடியை. ஓதிமம் உட்க - அன்னம் அஞ்ச. சிலமீமிசை - அம்மிமீது.

மன்னு வேலவன் அங்(கு)ஒரு வித்தன்
மந்தி ரத்திடை மாதொடு வந்தே
பொன்னின் நாடுள ஆதியை ஆதிப்
போக வானவர் போக உரைத்தான். 25

விண்ணு லாம்இமை யோரை விடுத்தே
வீரர் வாயிலின் மேவ இருத்தி
எண்ணி லாஎழில் கொண்ட இருக்கை
எம்பி ராட்டியொ(டு) எய்தி அதன்கண்
தண்ணி லாவிய மஞ்சம் அணைந்தே
தையல் தன்னொடு தன்னிகர் பெம்மான்
உண்ணி லாவு விருப்பொடு வையம்
உய்ய நற்கல வித்தொழில் உற்றான். 26

(கலிவிருத்தம்)

நாவில் உம்பர்கள் தத்தம் இருக்கையின்
மேவி னர்அடல் வேல்முரு குந்தனும்
ஓவின் மன்னரும் உந்(து)அனி கத்தொடு
பூவி லுள்ள புரங்களில் போயினர். 27

மன்னு வெற்பில் வரைஅகல் வைகல்எம்
அன்னை யோடும் அமலன் அமர்ந்தரோ

---

25. மன்றல் இயற்றி - திருமணம் புரிந்து. நாரி - உமாதேவியார். நாதன் - சிவபிரான். அங்கு ஒருவி - அவ்விடத்தைவிட்டு அகன்று. மந்திரத்திடை - திருக்கோயிலில். மாதொடு - தெய்வயானையோடு. பொன்னின் நாடுள ஆதியை ஆதி - சுவர்க்கலோகாதிபதியாகிய இந்திரன் முதலாக உள்ள. போகவானவர் - சுவர்க்க போகத்தை உடைய தேவர். போக - தம் இருப்பிடங்களுக்குப் போகும்படியாக.

26. இமையோரை - தேவர்களை. வீரர்களை வாயிலில் காவலாக இருக்கும்படி செய்து என்க. எழில்கொண்ட இருக்கை - அழகுபெற்ற கடிமண இல்லத்தில். மஞ்சம் - அணை. தையல் - இங்கு தெய்வயானை. தன் நிகர் - தமக்குத் தாமே ஒப்பாகிய.

27. நா இல் - கேடில்லாத. ஓ இல் - நீங்குதல் இல்லாத. உந்து - மேன்மை பொருந்திய. அனிகத்தோடு - படையோடு. புரங்களில் - நகரங்களுக்கு.

28. வெற்பில் - திருப்பரங்குன்றில். வரை அகல் வைகல் - கணக்கற்ற நாட்கள். எம் அன்னையோடும் - தெய்வயானையம்மையாரோடும். அமலன் -

பின்னர் ஓர்பகல் பீடுவிண் ணோர்தொழக்
கொன்னு லாம்அக் குவட்டினை நீங்கினன். 28

தவள நித்திலச் சங்கம் உலாவிய
உவள கப்பரங் குன்றை ஒருவியே
பவள வார்சடைப் பண்ணவன் மைந்தனும்
துவள மேவு துறக்கம் அடைந்தனன். 29

அன்ன காலை அமரர்கள் கம்மியன்
தன்னை இன்ன தலத்திடை முன்புபோல்
நன்ன லங்கொள் நகர்புரி வாய்எனத்
தொன்மை போலத் துறக்கம் இயற்றினன். 30

அந்த நாகத்(து) அரசு புரிந்திட
இந்தி ரற்(கு)அங்(கு) எழில்முடி சூடுவித்(து)
அந்தி வான்மதி ஆனன மாதொடும்
எந்தை அங்ஙன் இருந்தனன் எண்ணில்நாள். 31

தேனு லாந்தொடைத் தேர்மிசை ஏறியே
வான மேல்மக வாகன இருத்தியே
சேனை வீரருந் தேவியுந் தானுமாய்க்
கான மேவு கயிலையின் மேவினன். 32

மங்கை ஈசன் மகிழப் பணிந்தெழுந்(து)
அங்கண் நின்றும் அருள்விடை கொண்டுசிர்

முருகவேள். அரோ : அசைநிலை. பீடு - பெருமை பொருந்திய. கொன் - மேன்மை. அக்குவட்டினை - அந்த மலையை.

29. தவள நித்திலச் சங்கம் - வெள்ளிய முத்துக்களை ஈனும் சங்குகள். உவளகம் - பொய்கை. ஒருவியே - நீங்கி. பவளம்போன்ற நீண்ட சடையையுடைய கடவுள் ; சிவபிரான் என்க. துவளம் மேவு துறக்கம் - வாட்டத்தை அடைந்திருக்கும் சுவர்க்க லோகத்தை ; சூரபன்மன் முதலியவர்களால் அடைந்த வாட்டம்.

30. அமரர்கள் கம்மியன் - விசுவகன்மா. எனை - என்று முருகவேள் ஏவ. துறக்கம் - சுவர்க்கலோகத்தை.

31. நாகத்து - தேவலோகத்தில். அந்தி வால் மதி ஆனனம் மாதொடும் - மாலையில் தோன்றும் தூய சந்திரனைப்போன்ற திருமுகத்தையுடைய தெய்வயானையோடும். எந்தை - முருகக்கடவுள். என் இல் நாள் இருந்தனன் என்க.

32. தொடை - மாலை. வானமேல் - தேவலோகத்தில். மகவான - இந்திரனே. சேனைவீரர் - நவவீராதியோர். கானம் - சோலை ; பாட்டுமாம். இங்குத் தேர்ச்சாரதியாக வீரவாகுதேவர் இருந்தார் என்க.

பொங்கு கந்தப் பொருப்பினின் மேவினன் ;
துங்க வீரருந் தொன்மையில் வைகினர். 33

இன்ன பான்மை இருந்திட உம்பர்கோன்
பொன்னின் நாடு புரந்(து)அர(சு) ஆற்றுழி
மன்னில் மின்னிகர் வாழ்க்கை துறந்திடாத்
தன்னை நேர்கதி சார்ந்திட எண்ணினன். 34

துறக்க ஏந்தல் துறக்க நினைந்ததைச்
சிறக்கும் உம்பர்கள் தேசிகன் ஓர்ந்துவந்(து)
அறக்க ருத்(து)உல காயத மாமதத்(து)
உறத் திருப்பினன் ஊழ்வினை போலவே. 35

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

அன்னவன் உரைத்த பொய்யைமெய் யெனக்கொண்(டு)
அறிவிலா மகபதி சயந்தன்
தன்வச மாக அரசினை நிறுவிச்
சசியொடு கலந்துவீற் றிருப்ப
மன்னர(சு) இயற்றும் சயந்தன்அங்(கு) ஒருநாள்
வானவர் குருவினை நோக்கி
இன்னநாள் அளவும் சூரனல் மெலிந்த(து)
என்கொல்?யாம் எனஅவன் இசைப்பான். 36

ஆகச் செய்யுள்—820

தேவ காண்டம்

முற்றிற்று

---

33. மங்கையும் சசனும் மகிழும்படி என்க. கந்தப் பொருப்பினில் - முருகக்கடவுளுக்குரிய கந்தகிரியில். தொன்மையின் - பழமையைப்போல.

34. உம்பர்கோன் – இந்திரன். புரந்து - பாதுகாத்து. அரசு ஆற்றுழி - அரசாட்சி செய்யும் காலத்தில். மன் இல் - நீங்கியில்லாத. மின் நிகர் வாழ்வை மின்னலைப்போன்ற போக வாழ்வை, தன்னை நேர் கதி - முத்தி.

35. துறக்க ஏந்தல் - இந்திரன். உம்பர்கள் தேசிகன் - பிருகஸ்பதி. ஓர்ந்து - நினைந்து. அற கருத்து - முழு மனமும். உலகாயதமாம் மதத்து உற என்க. உலகாயதம் - இது புறச்சமயம் ஆறில் ஒன்று ; இம்மதத்தின் முக்கிய கோட்பாடு மாதர்களிடம் அனுபவிக்கும் இன்பமே முத்தி என்பதாம். இத னைச் சிவஞானசித்தியார் - பரபக்கம் 31-ம் செய்யுளால் அறியலாம். ஊழ் வினை மதியைத் திருப்புவதுபோலத் திருப்பினன் என்க.

36. அன்னவன் - பிருகஸ்பதி. இந்திரன் சயந்தனிடம் அரசாட்சியை ஒப்பித்து இந்திராணியோடு அளவளாவி இன்புற்றிருந்தான் என்க.

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

ஆறுவது

தக்ஷ காண்டம்

—o—

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

முன்பொரு பகலில் இமையவர் பரவ
முளரியந் தவிசிடை முதல்வன்
இன்புற விளங்குஞ் சத்திய வுலகத்(து)
இருந்தனன்; இருந்திடும் ஏல்வைக்
கொன்பொலி அனேயான் தனேயர்ஓர் பதின்மர்
குழுவினில் தக்கனுங் குரிசில்
மின்பொலி நுசுப்பு வாணிசேர் புயத்தோன்
வியன்முக நோக்கியே வினவும். 1

மொய்வளர் அமரர்க்(கு) இறையவ னுகி
மூவரில் உயர்ந்தவ னுகி
எவ்வகை உயிர்க்கும் உயிரென இருக்கும்
இயல்பினேன் யாவன்என்(று) இசைப்ப
மைவளர் உருவக் குரிசிலும் யானும்
மாறுகொண் டுழிஅழல் வடிவாய்ச்
செவ்வொளி பரப்பி எழுந்துவான் நிமிர்ந்த
தேவனே அதிகமாம் தேவன். 2

---

1. ஒரு பகலில் - ஒருநாளில். முளரி அம் தவிசிடை முதல்வன் - பிரம தேவன். சத்தியவுலகம் - பிரமலோகம். ஏல்வை - சமயத்தில். அனே யான் தனேயர் - பிரமபுத்திரர்கள். குரிசில் - பிள்ளே. வாணி - கலைமகள். வாணி புயத்தோன் - பிரமன். வினவும் - கேட்கலானன்.

2. மைவளர் உருவக் குரிசிலும்-கரிய திருமேனியை உடைய திருமாலும். மாறு கொண்டுழி - நானே பெரியவன் என்று வாதம் செய்தபொழுது. அழல் வடிவாய் – நெருப்பு உருவமாகி. தேவனே - சிவபிரானே. அதிகம் ஆம் – எல்லாரிலும் உயர்வாகிய. தேவன் - கடவுள்.

என்(று)அயன் இசைப்ப ஒருதொழில் புரிவான்
இருதொழில் செயும்நுமக்(கு) இறையாய்
வன்றிறல் படைத்த(து) என்கொலோ? எனலும்
மைந்த! கேள்: எங்களீச் சுரரைத்
துன்றுபல் லுயிரை ஈற்றின்மாய்த் திடலால்
தோற்றுவித் தவன்அவன் அன்றே?
அன்றியும் அவனே எங்கள்பால் இருந்(து)ஈண்(டு)
அளித்தலும் புரத்தலும் அருள்வான். 3

எம்மொடும் ஒருவ னுகிஓர் கிரியை
இயற்றுவான் போலவும் இயற்றும்;
பொம்மல(து) அடைந்த உயிர்தொறும் அலரில்
பொருந்தியவிரை எனப் பொருந்தும்;
செம்மைகொள் அவனே மறைமுதற் கலைகள்
தெரிந்(து)எமக் குணர்த்தலால் தெளிந்தேம்;
மம்மர்கொள் மனத்துப் பேதையா யினீயோ?
அவனீஎம் போலநீ மதித்தாய். 4

எனவிதி புகல அவன்மகன் நவில்வான்:
இறையவன் அருளிய மறைகள்
அனைவரும் அனைத்தும் பிரமம்என்(று) இயம்பிற்(று);
ஐய!ஈ(து) என்கொல்என்(று) அறையத்

---

3. ஒரு தொழில் புரிவான் - அழித்தலாகிய ஒரு காரியத்தைச் செய்பவன். இறையாய் - தலைவனுய். திறல் - வலிமை. மைந்த - புத்திரனே; தக்கன் பிரமதேவனுக்குப் புத்திரன். இறுதியின் மாய்ப்பவர் எவரோ அவர்தாமே மீண்டும் உண்டாக்கவேண்டும்? "அந்த மாதி என்மனுர் புலவர்" (சிவஞானபோதம்.) அளித்தலும் புரத்தலும் - படைத்தலையும் காத்தலையும்.

4. கிரியை - தொழில். பொம்மலது - வளப்பத்தை. விரை என - மணத்தைப்போல. மறைமுதல் கலைகள் தெரிந்து உணர்த்தலால் - வேதம் முதலிய சாத்திரங்களை இவருக்கு இது தகுமென்று ஆராய்ந்து தெளிவித்தலால். மம்மர் - மயக்கம்.

5. விதி - பிரமன். அவன் மகன் - தக்கன். யாவரையும் எப்பொருளையும் வேதங்கள் பிரமம் என்று சொல்லும் என்க. இந்த முரண்பாட்டுக்குக் காரணம் யாது? தினகரச் செழுங்கண் பகவனை - சூரியனைக் கண்ணுகவுடைய சிவபிரானை. திண்ணம் - உண்மை. முகமன் - உபசார வழக்கு. அந்தணரை யான் எனவே கழறுதல்போல - பிராமணர்களை யான்என்று (பிரமதேவனென்று) உபசாரமாகச் சொல்வது போல.

தினகரச் செழுங்கட் பகவனைப் புகழ்தல்

திண்ணம்;மற் றவையெலாம் முகமன்
கனைகடற் புவிஅந் தணரையான் எனவே
கழறுதல் போலநீ காண்டி. 5

ஆதலால் அவனே பதியெனுங் கடவுள்
அருந்தனை பொருந்திய அணுஞாம்;
காதலால் அவன(து) அருள்பெ.றும் அடியர்
கருதில்வா ராததொன்(று) இல்லை;
சூதலா னைய முலைகுழல் அகட்டுத்
தோகையோர் மருங்கினில் துலங்கும்
கோதிலா அரனை அடைதிநீ என்றான்;
குளிர்மலர்ப் பொகுட்டில்வாழ் குரிசில். 6

அல்லிமா மலர்மேல் இருந்தவன் மொழிந்த
அமுதவா சகஞ்செவி புகுதச்
செல்லுறழ் மிடற்றோன் இறையென எவர்க்கும்
தெளிந்துமா னதத்தடத்(து) அடைந்து
மல்லல்பெற் றிடுவான் பரமனைக் கருதி
வருடம்ஆ யிரந்தவம் புரிய
வில்லன புருவத்(து) உமையொடும் விடைமேல்
மேவினன் இணையிலா விமலன். 7

அன்னது தெரிந்து தக்கன்எம் மடிகள்
அடிகளை வணங்கினின்(று) ஏத்த
உன்னது கருத்தில் அருத்திஎ(து) அனைய(து)
உரைத்தியென்(று) உரைத்திட உரைப்பான்:

---

6. பதி எனும் கடவுள் - மேலாந் தலைவன் என்பதற்குரிய தெய்வம். தனை - பாசம். அணு - உயிர். சூது அனைய முலையும் அல் அனைய குழலும் ஆல் அனைய அகடும் உடைய தோகை; உமாதேவியார்; சூது - சூதாடுங் காய்கள்; அல் - இருள். ஆல் - ஆலிலை. அகடு - வயிறு. மருங்கினில் - வாம பாகத்தில். மலர்ப்பொகுட்டில் - தாமரைக்கொட்டையில். குரிசில்-பிரமன்.

7. அல்லி - அகவிதழ்களையுடைய. அமுதவாசகம் - அமுதம் போன்ற இனிய வார்த்தைகள். செல் உறழ் மிடற்றோன் - மேகத்தை ஒத்த நீல கண்டப் பெருமான். எவர்க்கும் இறை என என்க. மானதத் தடத்து - மானச வாவியை. மல்லல் - வளம். விமலன் - சிவபிரான்.

8. எம் அடிகள் அடிகளை-எம்முடைய சுவாமியான சிவபெருமானுடைய திருவடிகளை. அருத்தி ஏது - விருப்பம் யாது? ஆர்கலி - கடல். மலரயன்

மன்னும்ஆர் கவிசூழ் உலகும்வா னுலகும்
மலரயன் உலகும்மால் உலகும்
என்னதா ணையின்நின் றிடவும்நிற் புகழ்வோர்
எவரும்வந்(து) எணைப்புகழ்ந் திடவும். 8

எந்தைநின் னிடத்தில் இருந்திடும் உமையாள்
எனதுமா மகள்என வரவும்
அந்தணன் வடிவாய் அணைந்துநீ மணஞ்செய்(து)
அருளவும் வேண்டுமென்(று) அறையக்
கந்தரங் கடுத்த கந்தரக் கடவுள்
கருணையால் இவைஅளித்(து) ஒளித்தான்;
உந்துசீர் படைத்த சிறுவிதி மனத்தில்
ஓதிம வூர்தியை நினைத்தான். 9

அன்னவா கனத்தோன் அன்னவா(று) அறிந்தாங்(கு)
அடைந்துநின்(று) ஆசிகள் அறையப்
பொன்னுலாம் புரிசைப் புரிஎனக்(கு) இவண்நீ
புரிஎனத் தக்கமா புரிஎன்(று)
இன்னல்தீர் பதியொன்(று) இயற்றஅங்(கு) அதிற்போய்
எழில்அரித் தவிசின்மேல் இருந்து
தன்னேவா னவர்கோன் முதலினோர் பரவத்
தனிஅர(சு) ஆற்றினன் தக்கன். 10

மற்றவன் மணிவி ஆயினுள் வேத
வல்லியாம் பெயருடை மடந்தை
கற்றைவார் அளகத் தவள்தணை மலரோன்
காதலன் காதலாற் கலந்து

உலகும் - பிரமலோகமும். நிற்புகழ்வோர் எவரும் - உன்னைத் துதிப்பவர்கள் யாவரும்.

9. உமாதேவியார் என் மகளாக வரவேண்டும் என்க. கந்தரம் கடுத்த - மேகத்தை ஒத்த. கந்தரக் கடவுள் - கரிய கழுத்தை உடைய சிவபிரான். சிறுவிதி - தக்ஷப்பிரசாபதி (தக்கன்). ஓதிம ஊர்தியை - அன்னவாகன ருடிய பிரமதேவனை.

10. ஆசிகள் - ஆசீர்வாதங்களை. புரிசைப்புரி - மதிலையுடைய நகரம் ஒன்றை. தக்கமாபுரி - தக்கமா நகரம். இன்னல் தீர் - துன்பம் அற்ற. பதி ஒன்று இயற்ற - ஒரு நரகத்தைப் பிரமதேவன் சிருட்டிக்க. அரித் தவிசின் மேல் - சிங்காதனத்தின் மேல். வானவர் கோன் - இந்திரன். பரவ - புகழும் படி. தனி அரசு - ஒப்பற்ற ஆட்சியினை.

முற்றவந் தனில்ஆ யிரஞ்சிறுர்ப் பயந்து
முப்புரி நூல்விதி முடித்துக்
குற்றமில் மறையும் அணியவர்க்(கு) உதவி
இணையன வாசகங் கூறும். 11

நீவிர்கள் எவரும் உயிர்தொகை படைப்பான்
நிமலனை நினைந்துமா னதத்தின்
மேவிநோற்(று) உளத்தின் விழைந்தது பொருந்தி
மீள்திரால் இவ்வண்ண வீடுப்பப்
பூவில்வண் டினங்கள் இரைக்கும்அத் தடத்துப்
பொருந்திஆண்(டு) அருந்தவம் புரிந்தார் ;
ஓவில்சிர் படைத்த நாரதன் அவண்சேர்ந்(து)
உயர்தவம் நோக்கிஈ(து) உரைப்பான். 12

மெய்த்தவம் புரிவீர் ; ஏதுகா ரணம்?நீர்
வெஃகிய இயல்(பு)என வினவ
உத்தம முனி!கேள்: படைப்பது பொருட்டால்
உழந்தனம் ஈதெனு உரைப்ப
முத்தியைக் கருதா(து) அவத்தொழில் புரிவான்
முன்னினீர் ; பவம்இதென்(று) அவர்தம்
புத்தியைத் திருப்பி உண்மைவீ(டு) அளித்தான் ;
பொருவில்நா ரதன்எனும் புகழோன். 13

11: தக்கன் வேதவல்லியை மணந்து ஆயிரம் குமாரர்களைப் பெற்றான் என்க. வேதவல்லி பிரமதேவனுடைய பாதத்தில் உற்பத்தியானவள் எனக் கந்தபுராணம் கூறும். கற்றை வார் அளகத்தவள் தனை - கற்றையாகிய நீண்ட கூந்தலையுடையவனை. மலரோன் காதலன் - பிரமபுத்திரனாகிய தக்கன். முன் தவந்தனில் - முன்செய்த தவத்தால். பயந்து – பெற்று. முப்புரிநூல் விதி - உபநயனம். மறையும் – வேத வித்தையையும். வாசகம் - வார்த்தையை.

12. படைப்பான் - சிருட்டி செய்வதற்காக. நிமலனை – சிவபிரானை. மானதத்தின் மேவி - மானச வாவியை அடைந்து. நோற்று - தவம்புரிந்து. மீள்திரால் - திரும்பி வருவீர்களாக. இரைக்கும் - முரலும். ஓவில்சீர் - நீங்குதல் இல்லாத சீர். ஈது - இதனை.

13. வெஃகிய இயல்பு - விரும்பிய இயல்புக்கு. உழந்தனம் - முயன்றோம். அவத்தொழில் புரிவான் - வீணான காரியத்தைச் செய்யும்பொருட்டு, முன்னினீர் - கருதினீர்கள். பவம் இது - இது நீங்கள் செய்த பாவம். உண்மை வீடு - உண்மையான முத்தியை.

சேயினோர் கதியில் புகுந்தவா(று) உளத்தால்
சிறுவிதி அறிந்துநோய் செறிந்(து)ஆங்(கு)
ஆயிரங் குமரர்ப் பயந்(து)அவர் தமக்கும்
அவர்க்குமுன் னவர்க்குரைத் ததுபோல்
நேயமோ(டு) இயம்ப அவரும் மானதம்போய்
நிகரிலா அருந்தவம் புரிந்து
தூயநா ரதனுல் முன்புவீ(டு) அடைந்த
துணைவர்போல் இன்பவீ(டு) அடைந்தார். 14

ஈதையும் அறிந்து வெகுண்டுநா ரதனை
எங்களுஞ் சுழல்கஎன்(று) இசைத்து
மேதகு புகழ்சேர் தக்கன்ஓர் இருபான்
மேலுமூன் றுகிய வேற்கண்
மாதரை உதவித் தருமனே முதலாம்
மாதவர்க்(கு) அளித்(து)இரு பான்ஏழ்
கோதையர் தமைஈன்(று) அவரைமா மதிக்குக்
கொடுத்(து)இது சசியொடுங் கூறும். 15

எல்லவர் இடத்தும் அருத்திஓர் படித்தாய்
இருத்திஎன்(று) இசைத்தனன் விடுப்ப
வல்லிவாள் மதியக் கடவுள்வான் அணுகி
வளரொளி இரலியே முதலாய்ச்

---

14. சேயினோர் - ஆயிரம் குமாரர்களும். கதியில் - முத்தியில். சிறுவிதி - தக்கன். நோய் - வருத்தம். பின்னும் ஆயிரம் பிள்ளைகளைப் பெற்று முன்னே தன் புத்திரர்களுக்குச் சொன்னதுபோலத் தவம் புரியச் சொன்னன் என்க. மானதம் போய் - மானத வாவியை அடைந்து, துணைவர் போல் - சகோதரர்களைப்போல.

15. சுழல்க என்று இசைத்து - திரிவாயாக என்று சாபம் இட்டு. தருமனே முதலாம்-தருமன், பிருகு, மரீசி, புலத்தியன், ஆங்கிரசு, புலகன், வசிஷ்டன், அத்திரி என்போர். இருபத்து மூன்று பெண்களைப்பெற்றுத் தருமன் முதலிய முனிவர்களுக்கு மணம் செய்து அளித்துப் பிறகு இருபத்தேழு பெண்களைப்பெற்றுச் சந்திரனுக்கு மணம்செய்து வழங்கி அவனேடு சொல்லலானன். மதி, சசி - சந்திரன்.

16. இருபத்தேழு பெண்களிடத்தும் ஒரேவிதமான அன்புடன் இருக்க வேண்டும் என்க. ஓர் படித்தாய் - ஒரே அளவாக. மதியக் கடவுள் - சந்திரன். இரலி - அசுவினி. இருபான் ஏழுவராம் மடவார் - இருபத்தேழு நக்ஷத்திரங்களாகிய பெண்களை மல்லல் - பெருமை. கலவியாகிய அரிய அமுதத்தை என்க.

சொல்லிய இருபான் எழுவராம் மடவார்
துணைமுலைக் கிரிமேல் தோய்ந்து
மல்லலங் கலவி ஆரமு(து) ஆருந்தி
வாழுநாள் ஊழ்வினை வலியால். 16

ஆரல்மா தினையும் அவள்தனக்(கு) இகோய
அணிகொள்மா தினையுமே அவாவில்
சேருதல் புரிந்து துறந்தனன் ஒழிந்த
தேவிமார் தமை ;அவர் சினம்பூத்(து)
ஏருலாம் புகழ்தோய் தந்தைமாட்(டு) அணுகி
இந்தவா(று) இயம்பலும் அனையான்
நேரிலாச் சசிதன் கலையெலாங் கலைய
நிகழ்த்தினன் கொடியசூள் நிலையே. 17

ஐந்துடன் ஒருபான் கலைகள்ஓர் பகற்கொன்(று)
ஆகியே அழியஓர் கலையோ(டு)
இந்திரன் புடைபோய் நிகழ்ந்தன விளம்பி
என்செய்கேன் ! இதற்(கு)என இசைப்பச்
சுந்தரக் கமலத் தயனெ(டு)ஈ(து) உரைக்கில்
சொற்றரு தனயனை இரந்(து)உன்
வெந்துயர்ப் பெருஞ்சூள் அகற்றுமென்(று) அவன்பால்
விடுத்தனன் ; குலிசவேல் விடலை. 18

சீதள கிரணத்(து) அவிர்மதிக் கடவுள்
திசைமுகத்(து) ஒருவனைச் சேர்ந்தாங்(கு)
ஓதினன் நிகழ்ந்த உனதுகான் முளைக்(கு)ஈ(து)
உணர்த்திநோய் ஒழித்தியென்(று) உரைப்பப்

17. ஆரல் மாதினையும்-கார்த்திகையையும். அவள் தனக்கு இகோயவள், உரோகிணி. அவாவின் - ஆசையோடு. ஒழிந்த - எஞ்சிய. தேவிமார் தமைத் துறந்தனன். சினம் பூத்து - அந்த இருபத்தைந்து பெண்களும் கோபம்கொண்டு. தந்தை மாட்டு - தக்கன்பால். நேரிலாச் சசி - ஒப்பில் லாத சந்திரன். கலையெலாம் கலைய - கலைகளெல்லாம் போகும்படி. சூள்நிலை - சாபத்தை.

18. தினத்துக்கு ஒன்றுகப் பதினைந்து கலைகள் அழிந்துபோக, ஒற்றைக் கலையோடு இந்திரனிடத்திற் சென்றான். பிரமாவிடம் சொன்னால் அவன் தன் மகனிடம் வேண்டிச் சாபத்தை விடுவிப்பான் என்று அவன் கூறினன். தனயனை - மகனுடைய தக்கனை. சூள் - சாபத்தை. குலிசவேல் விடலை - வச்சிராயுதத்தையுடைய இந்திரன்.

போதமில் கொடியன் எனதுரை மதியான் ;
புகலில்வெஞ் சீற்றமே புரியும் ;
மாதுபா கனீநீ அடைதியென்(று) அறைய
மருவினன் கயிலைமால் வரையில். 19

நந்தியெம் பெருமான் அருளினல் விடுப்ப
நாதனீ வணங்கினின்(று) அயன்சேய்
தந்தசூள் அதனல் மெலிந்தனன் ; இதனைத்
தவிர்த்திளென்(று) உரைத்தலும் சடைமேல்
இந்துவின் அழியாக் கலைதனைத் தரித்தே
இதனைநாம் அணிந்ததால் இதுதான்
நின்தனை பொருந்த அழிந்திடா(து) இதனின்
நீடுநின் கலையெலாங் கூடும். 20

ஐந்துடன் ஒருபான் பகலெலாம் வளரும் ;
அன்னநாட் பின்னரே சுருங்கும் ;
இந்தவா(று) ஒழுகும் எனவிடை கொடுப்ப
எழில்மதி நிறைந்துவான் எழலும்
சந்தனி நெடுந்தோள் தக்கன்ஈ(து) உணர்ந்து
தனதுரை தடுத்தலால் பரனைப்
புந்தியின் முனிந்து புலகனும் முனிசொல்
புந்தியால் சினம்ஓரீ இ யிருந்தான். 21

---

19. சீதளகிரணத்து - குளிர்ந்த கதிர்களையுடைய. அவிர் - விளங்கு கின்ற. நிசைமுகத்து ஒருவனை - பிரமதேவனை. நிகழ்ந்த ஓதினன் என்க. கான்முளைக்கு - புதல்வனுகிய தக்கனுக்கு, நோய் ஒழித்தி - துன்பத்தை நீக்குவாயாக. போதம் இல் கொடியன் - அறிவில்லாத கொடியவன். சீற் றமே புரியும் - கோபிப்பான். மாதுபாகனீ - சிவபிரானே. அறைய - பிரமன் கூற.

20. விடுப்ப - உள்ளே விட. நாதனீ - சிவபிரானே. அயன் சேய் - தக்கன். சூள் அதனல் - சாபத்தால். மெலிந்தனன் - வாட்டத்தை அடைந் தேன். இந்துவின் அழியாக் கலைதனைத் தரித்தே - சந்திரனது அழியாத ஓற்றைக் கலையை அணிந்து. இதனின் - இந்த ஒரு கலையால். கலையெலாம் கூடும் - மற்றக் கலைகளெல்லாம் வந்துசேரும்.

21. பதினைந்து நாட்கள் கலைகள் வளரும் ; அதன் பிறகு பதினைந்து நாட்கள் தேயும். சந்து - சந்தனம். தனது உரை தடுத்தலால் - தன் னுடைய சாபத்தை மாற்றியதால். பரனை முனிந்து - சிவபிரானைக் கோபித்து. புலகன் என்னும் ரிஷி கூறிய அறிவுரையால் கோபம் நீங்கி இருந்தான் என்க.

(கலி விருத்தம்)

நின்றிட இனையது நிமலன திடைசேர்
குன்றென வளரிரு குவிமுலை உமையாள்
வென்றிய துறுசிறு விதிமகள் எனவே
வன்றவ நிலைமையில் வருசெயல் மொழிவாம். 22

விண்டொடு கயிலையின் மிசைஅரி யணைமேல்
அண்டர்கள் அழஎழும் அழல்விடம் அமுதா
உண்டவன் உறைபொழு(து) உமையவள் பணியா
மண்டிய உனதுமெய் வகைபுகல் எனவே. 23

செயல்குணம் உருஇவை செறிகிலம் ; எவணும்
மயலற நிறைகுவம் ; மருவரு வுருஎன்(று)
இயல்பொடு பலவடி(வு) இசைகுவம் எனவண்
கயல்விழி உமையொடு கழறினன் நிமலன். 24

ஈதிறை புகறலும் இவணுரு இலையென்(று)
ஓதினை பலவடி வுளதெனும் இயல்பிற்(று)
ஏதென அவை எம(து) அருள்வடி வெனஇங்(கு)
ஆதலின் எனதுயர் வடி(வு)அவை எனலும். 25

---

22. இனையது நின்றிட - இது நிற்க. நிமலன் - சிவபிரான். வென்றியது உறு - வெற்றி பொருந்திய. சிறுவிதி மகள் எனவே - தக்கனுடைய மக ளாக. தவநிலைமையில் - தக்கன் செய்த தவத்தால்.

23. விண் தொடு - ஆகாசத்தை அளாவிய. அரியணை - சிங்காதனம். தேவர்கள் அழும்படியாக எழுந்த நீயைப்போன்ற ஆலகாலவிடத்தைத் திரு வமுதாக உண்ட சிவபிரான் எழுந்தருளியிருந்தபொழுது என்க. மெய்வகை- உண்மையை. எனவே - என்று உமாதேவியார் வேண்ட.

24. செயலும் குணமும் உருவமும் நாம் பொருந்திலோம் என்க. எவணும்- எவ்விடத்தும். மருவு அரு உரு என்று. இங்கு, ''மைப்படிந்த கண்ணுஞ் தானுங் கச்சி'' எனவரும் அப்பர் தேவாரத் திருப்பாடலையும், ''எண்ணில் பல்கோடி சேவடி'' எனவரும் திருவிசைப்பா திருப்பாடலையும் ஒப்புநோக்குக.

25. இறை புகறலும் - சிவபிரான் திருவாய் மலர்ந்தருள. இவண் - இங்கே. உருவம் இல்லையென்று சொல்லிவிட்டுப் பல உருவங்களுண்டென்று சொல்லும் முரண்பாடு எங்ஙனம் பொருந்தும் என்று உமாதேவியார் கேட்க, அவை எம்முடைய அருளின் வடிவம் என்று சிவபிரான் கூற. அப்படியானால் அவ்வருளன்றி வேறல்லா என் வடிவங்களே அவை என்று உமாதேவியார் கூறினர். இங்குச் சிவஞான சித்தியார் - சுபக்கம் 61, 82, 238—ம் செய் யுட்களை ஒப்புநோக்குக.

(பதின்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

உன்னீ நம்மெதிர் மனந்தனில் வியந்தனீ நயந்தாய் ;
உனதி டத்தினும் உனீயலா(து) அனீவர்கள் உள்ளும்
மன்னி யாமிருந்(து) இயற்றுவம் இயற்றுதல் தவிர்ந்தால்
மதியெ லாம்ஓரீ இ மருவுவர் சடமதாய் மாதோ ;
அன்ன வாறுநீ தெரிதிஎன்(று) அவனியுண் டவன்முன்
ஞான வானவ ராதனவர் ஏனீயோர் அகத்துள்
துன்னி யாங்குணர்(வு) அளித்திடும் இயற்கையை விடுத்தான்
தோன்றல் பொன்றுதல் இன்றிவாழ் கின்றநந் தோன்றல். 26

எங்கள் நாயகன் கணப்பொழு(து) இனீயவா(று) இருப்ப
ஏனீ யோர்க்கெலாம் எண்ணிலா உகமதாய் எவரும்
தங்கள் செய்கட ஞகிய முறையெலாந் தவறிச்
சடம தாகியே சார்தலுங் கௌரியாந் தலீவி
கங்கை வார்சடைக் கருணையங் கடல்அடி பணிந்து
கடிய னேன்புரி பெரும்பிழை கருத்தினில் கருதேல்
எங்கள் நாத இங் கருள்சுரந்(து) எவரையும் எழுப்பென்(று)
அறைந்தி ரந்திட எழுப்பினன் உருத்திரர் அவரை. 27

ஒன்று மேவிய பதின்மராம் உருத்திரர் எழுந்தே
உவரி வாரணஞ் சுலவுபூ வுலகில்வந்(து) உலவாப்
பொன்ற யங்கிய கொன்றையந் தொடைநெடுஞ் சடிலப்
புனித நாதனீ அருச்சனீ அருச்சுனப் புவிமாட்(டு)

---

26. இயற்றுவம் - அவரவர் செய்கையைச் செய்விக்கின்றோம். அவ் வாறு நாம் புக்கு இயற்றுதலே நீங்களுல் யாவரும் அறிவற்ற சடங்களாகி விடுவர். ஓரீஇ - நீங்கி. அவனி உண்டவன் - திருமால். உணர்வு அளித் திடும் இயற்கையை - அறிவை அளிக்கும் திறத்தை. விடுத்தான் - நீங்கி னீன்றார். தோன்றல் பொன்றுதல் இன்றி - ஜனன மரணம் இல்லாமல். தோன்றல் - தலீவர்.

27. இனீயவாறு இருப்ப-ஜீவர்களிடத்தில் புகுந்து அறிவு வழங்காமல் அவற்றைச் சடமாகச் செய்து வீற்றிருக்க. கடியனேன் - கடுமையையுடைய நான். உருத்திரரை எழுப்பினன் என்க.

28. பதினேரு உருத்திரர்கள் என்க. உவரி வாரணம் சுலவு - உப்புக் கடல் சூழ்ந்த. உலவா - உலவீ. பொன் தயங்கிய - பொன்னீப்போன்ற நிறத்தை உடைய. சடிலம் - சடை. நாதனீ - சிவபெருமானீ. அருச் சுனப் புவிமாட்டு - திருவிடைமருதூரென்னும் தலத்தில். அருச்சுனம் - மருதமரம். அனந்தன் - திருமால். வால்நிறம் - வெண்ணிறம்.

அன்று செய்தலால் பரம்பொருள் எவரையும் எழுப்ப
அனந்த ஞதியோர் மனந்தெளிந்(து) எழுந்தனர் அதற்பின்
சென்று வால்நிறக் கயிலையஞ் சயிலமேல் மருவித்
திரிபு ராரியை வணங்கினின்(று) இவைஉரை செய்வார். 28

எண்ணி கந்தநாள் அறிவெலாம் ஒருவியே சடமாய்
எங்கள் தம்கடன் மறந்(து)அள விறந்ததி(து) இசைந்தேம் ;
அண்ண லே ! அவை தீரஒன்(று) அருள்தியென்று அறைய
அனைய தீமைகள் உமையவள் தன(து)இடத் தாகும்
நண்ணு நும்பதத்(து) எனவிடை கொடுத்தனன் அதற்பின்
நக்கன் நாரியைத் தக்கன்மா மகள்என நணுகி
மண்ணில் வாழுதி வந்தியாம் மணத்தும் என்(று) இசைப்ப
வணங்கி ஞள்விடை கொண்டனள் கருணைசேர்வல்லி. 29

அணியும் இந்துவின் இளநிலா எறிப்பது கடுப்ப
அறல்ப ரந்தசெஞ் சடைமுடிக் கடவுளே அகன்று
மணியும் ஆரமுங் கரைகளில் திரைகள்வந்(து) இறைப்ப
மருவு காளிந்தி வனசமேல் வலம்புரி வடிவாய்ப்
பணிசு வார்பிறப் பறுத்தருள் பரம்பொருள் நாமம்
பன்னி அன்னவன் பன்னிஅங்(கு) இருந்தனள் பன்னுள் ;
தணிவி லாப்புகழ் மாசிமா மகப்புன லாடத்
தக்கன் என்பவன் மறைக்கொடி யொடும்அவண் சார்ந்தான்.30

---

29. ஒருவியே - நீங்கி. கடன் மறந்து - செய்யவேண்டிய காரியங்களை மறந்து. தீது இசைந்தேம் - பாவத்தைக் கொண்டோம். ஒன்று அருள்தி - ஒரு பரிகாரத்தை உரைத்தருள்வாயாக. அந்தப் பாவம் உமையைச் சாரும். நும் பதத்து - உங்கள் உலகத்துக்கு. நக்கன் - சிவபிரான். நாரியை-உமா தேவியாரை. மணத்தும் - திருமணம் புரிந்துகொள்கின்றேம். கருணைசேர் வல்லி - உமாதேவியார்.

30. இந்துவின் - சந்திரனது. கடுப்ப - ஒப்ப. அறல் பரந்த - நீர் பரவிய. கங்கை வெண்ணிறமுடையதாதலின் அதன் நீருக்கு நீலவு உவமை யாயிற்று. ஆரமும் - முத்துக்களையும். காளிந்தி வனசமேல் . யமுனை நதி யில் உண்டான தாமரை மலரின்மேல். வலம்புரி வடிவாய் - வலம்புரிச் சங்க உருவத்தை உடையவளாகி. இடம்புரிச்சங்கு ஆயிரம் சூழ்ந்து அதன் நடுவிலே திகழும் சங்கு வலம்புரிச்சங்கு ஆகும். பரம்பொருள் நாமம் பன்னி - சிவபிரானுடைய திருநாமத்தைச் செபித்துக்கொண்டு. அன்னவன் பன்னி - அவன் தேவியாகிய உமாதேவியார். மறைக்கொடியோடும் - தன் மகளி யாகிய வேதவல்லியோடும்.

அண்டர் சூழ்தர மேவிய தக்கன்அந் நதிநீர்
ஆடி மீள்பொழு(து) ஆங்கொரு பாங்கரின் அலர்மேல்
எண்ட விர்ந்திடும் உயிர்க்கெலாம் உயிரென இருப்போன்
இடம்பு ரிந்தவள்[1] வலம்புரி யாகிவீற் றிருத்தல்
கண்டெ டுத்துழிக் குழவியா யினள்அவன் வியந்தே
கவுரிஎம்மக ளாகிவந் தனள்எனக் களித்து
மண்டு சீருள மறைக்கொடி தளிர்க்கரத்(து) அளித்து
மன்னு தன்னகர் அன்னவன் அடைந்தனன் மன்னோ. 31

காதல் மீக்கொளக் கௌரியை மறைக்கொடி வளர்த்தாள்
கருணை வாள்முக ஐயைஐ யாண்(டு)அவண் கடப்பச்
சித வாள்மதி அணிந்தருள் பரம்பொருள் வதுவை
செய்ய வேதவஞ் செய்வல்என்(று) உமையுரை செய்யப்
போத நீடிய தந்தைதாய் உளந்தனில் மகிழ்ந்து
பொருவி லாஒரு மாடம்அப் புரிக்(கு)அயல் புரிவித்(து)
ஆத ரம்பெறு கன்னிமா ரெர்டும்அதில் விடப்போய்
ஆண்டு சென்றிருந்(து)அருந்தவம் புரிந்தனள் அமலை. 32

பத்தின் மேலும்அங்(கு) ஓரிரண் டாகிய பருவம்
பருவ ரல்பிறப்(பு) அறுத்தருள் பராபரை படைப்பத்
தத்து வார்திரைக் கடற்கடு அடக்கிய மிடற்றோன்
தக்கன் மாபுரத்(து) உமையவள் இருந்திடுந் தலத்து

---

31. அண்டர் - தேவர். பாங்கரின் – பக்கத்தில். இடம் புரிந்தவள் – வாமபாகத்தை விரும்பித் தங்கிய உமாதேவியார். எடுத்துழி - அந்த வலம் புரிச் சங்கை எடுத்தபோது. குழவி ஆயினள் - பெண் குழந்தையானாள். மறைக்கொடி - வேதவல்லி.

32. ஐயை - ஆரியை ; உமாதேவியார். ஐயாண்டு அவண் கடப்ப - ஐந்து பிராயம் ஆக. பரம்பொருள் - சிவபிரான். வதுவை செய்ய-என்னை மணம்புரிந்து கொள்ளும்படி. செய்வல் - செய்வேன். போதம் - அறிவு. பொரு இலா - ஒப்பில்லாத. அப் புரிக்கு அயல் - அந்த நகரத்துக்கு அருகில். ஆதரம் - அன்பு. அமலை - உமாதேவியார்.

33. உமாதேவியார் பன்னிரண்டு பிராயத்தை அடைய. பருவம் - பிராயம். பருவரல் - துன்பம். பராபரை - சத்தி. தத்து - துள்ளுகின்ற. கடு - விடத்தை. தக்கன் மாபுரம் - தக்கனுடைய நகரம். ஏத்துபு - துதித்து. அறமெலாம் வளர்ப்பாள் - முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்கும் உமாதேவியார். இதன் வரலாறு காஞ்சிப் புராணத்தில் காண்க.

பா-ம்—1. இடம் பிரிந்தவள்.

மெத்து சீர்ஒரு மறையவன் போலவந்(து) அணுக
மிகவும் எம்பிராற்(கு) அன்பரிங்(கு) இவரென விருப்பு
வைத்த சிந்தைய ளாகிஆங்(கு) எழுந்தெதிர் நடந்து
வணங்கி ஏத்துபு ஙின்றனள் அறமெலாம் வளர்ப்பாள். 33

எம்பி ராட்டியை எம்பிரான் தெரிந்(து)ஒரு பொருள்வேட்(டு)
ஈண்டு வந்தனம் ; தருதியேல் உரைப்பம்என்(று) இசைப்ப
ஙம்ப ! கேட்டிஎற் கிசையுமேல் தருகுவன் ; அதனை
நவில்தி நீயென உணிமணம் புரிந்திடு நயப்பால்
இம்பர் மேவினம் அதற்(கு)இவண் மறுத்தி(து)இனி உரையேல்
என்று கூறலும் இடர்நெடுங் கடலில்வீழ்ந்(து) எழில்தோய்
கும்ப மாமுலை செவித்துணை கரத்தினுல் அடைத்துக்
குமுத வாய்திறந்(து) அமுதவா சகம்இவை கூறும். 34

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

பெய்தேன் இதழித் தொடையும் பிறையும் புனைவோன் வதுவை
செய்தே அருளத் தவமே செய்வே னுடன்ஈ(து) இசைத்தாய் ;
பொய்தோய் மனத்தோய் ! கடிதே போபோ என்னப் புகன்று
வைதே ஒருபால் அகன்ருள் மறுவில் கற்பின் மடவாள். 35

இவ்வா(று) அமலை அகல எவருந் தெரியா வண்ணம்
மைவாழ் களகங் கடவுள் வளர்தன் னுருவம் மருவச்
செவ்வாய்க் கருங்கண் உமையாள் தெரியா விழிநீர்சொரியா
ஒவ்வா அன்பில் தொழலும் உயர்கன் னியர்ஈ(து) உரைப்பார். 36

---

34. வேட்டு - விரும்பி. ஙம்ப - பெரியோய் : விளி. எற்கு இசையுமேல் – கொடுப்பதற்கு என்னுல் முடியுமானுல். நவில்தி - கூறுவாயாக. நயப்பால் - விருப்பத்தால். இம்பர் - இங்கே. இடர் - துன்பம். அமுத வாசகம் - அமுதத்தைப் போன்ற வார்த்தைகள்.

35. இதழித்தொடையும் - கொன்றை மாலையையும். வதுவை - திருமணம். ஈது இசைத்தாய் என்க. மெய்யடியாரானுல் இவ்வாறு சொல்லார் என்பது பற்றி, "பொய்த்தோய் மனத்தோய்" என்ருள். கடிதே-விரைவாக. ஒருபால் அகன்ருள் - வேருெரு பக்கத்தே சென்ருள். கற்பின் மடவாள் - தாக்ஷாயணி ; (உமை.) தக்கன் மகள் தாக்ஷாயணி என்பதாம்.

36. அமலை - உமாதேவியார். மை வாழ் களம் நம் கடவுள் – நீலகண்டப் பெருமான். தன் உருவம் மருவ - தமக்கு இயல்பான திருவுருவத்தை எடுத்து நிற்க. ஒவ்வா - ஒப்பு வேறு இல்லாத. கன்னியர் - தோழியர்கள்.

மன்னுங் காதல் மறையோன் மாயம் வல்லன் கொல்லோ ?
என்னே இதுதான் ? கன்னி எம்மை நோக்கி லாளென்(று)
அன்ன நடையார் தம்மில் அங்கண் சிலவர் ஓடித்
துன்னும் புகழ்சேர் தக்கன் முன்னர் இதனைச் சொன்னார். 37

அந்த வேலை அவனும் அறிவால் அரன்என்(று) அறிந்தே
சிந்தை மகிழ்ந்து பரன்முன் சென்றே போற்றி நின்றே
எந்தை ! எனது நகரின் எய்த வேண்டும் என்றே
கொந்தார் குழலா ளொடுதன் கொடிமா ளிகையுட் கொணர்ந்தான். 38

ஆதி முதல்வன் அங்(கு)ஓர் அரியா தனமீ(து) அமர
மாது தன்னை வேத வல்லி புல்லி மகிழ்ந்தே
சோதி நன்னீர்ஆட்டித் துலங்கு கலன்கள் சூட்டிக்
கோதில் உயிர்கட் குயிராங் குழகன் பாங்கர் விடுத்தாள். 39

கருந்தாழ் அளகக் கொளரி கருணைக் கடலின் புடைவந்(து)
இருந்தாள்; இருந்த அமையத்(து) இமையோர் அயன்மால்குறுகிப்
பொருந்(து)ஆ தரவின் பணிந்தே புரைதீர் இதழி பிரசம்
சொரிந்தார் சடையான் அயலே சூழ்ந்தார் நெஞ்சம் வாழ்ந்தார். 40

(கலி நிலைத்துறை)

தக்கன் அப்பொழு(து) எழுந்தனன் மறைக்கொ டிதளிர்க்
கைக்கண் உற்றகர கப்புனல் [1]விடக்க வினுலாம்
செக்கர் பெற்றகம லக்கழல் விளக்கி நுதல்சேர்
அக்கம் நக்கனை அருச்சனை புரிந்த னனரோ. 41

---

37. மறையோன் - அந்தணவடிவாகவந்த சிவபெருமான். மாயம் – மாயையில். கன்னி - உமாதேவி. சிலவர் - சில தோழிகள்.

38. அவனும் - தக்கனும். பரன் - சிவபிரான். கொந்து - கொத்து. குழலாள் - தாக்ஷாயணி, உமை.

39. அரியாதனம் - சிங்காசனம். புல்லி - அணைத்துக்கொண்டு. சோதி- ஒளியையுடைய. கலன்கள் - ஆபரணங்களை. குழகன் - சிவபிரான்.

40. கரிய பின்தாழ்ந்த கூந்தலையுடைய கௌரி என்க. கருணைக்கடல் – சிவபிரான். குறுகி - அடைந்து. பொருந்து ஆதரவின் - இசைந்த அன்பினால். புரை – குற்றம். இதழி பிரசம் சொரிந்து ஆர் சடையான் – கொன்றையானது தேனைச் சொரிந்துகொண்டு அமைந்த சடையையுடைய சிவபெருமான். வாழ்ந்தார் - மகிழ்ந்தனர்.

41. மறைக்கொடி - வேதவல்லி. கரகப் புனல் விட - கமண்டலத்தில் உள்ள நீரை வார்க்க. கவின் - அழகு. செக்கர் - செந்நிறம். நுதல் சேர் அக்கம் நக்கனை - நெற்றிக் கண்ணையுடைய சிவபிரானை ; அக்கம் - கண்.

பா-ம் 1 உற்றசிரகப்புனல்.

அருத்தி தன்னுடன் அருச்சனை புரிந்த பின்அரன்
கரத்தில் அம்பிகை கரத்தினை அளித்(து)எ னதுகண்
வரத்தில் வந்துமக ளானஉமை யாளை மறையின்
சிரத்தில் நிற்கும்இறை! நிற்(கு)உதவல் செய்த னனியான். 42

என்று கூறிஉத கத்தினை விடுப்ப இமையோர்
வென்றி அன்பொடு புகழ்ந்தனர் மகிழ்ந்த னர்;விரைக்
கொன்றை வேணியன் மறைந்தனன்; நிறைந்த துயர்கொண்(டு)
அன்று சங்கரி வருந்திய(து) உரைப்ப(து) அரிதால். 43

மன்னு தக்கன் இவை கண்(டு)அழல் எனச்சி னம்மீ இ
நன்ன லம்பெறு கரத்துணை புடைத்த னல்நகைத்(து)
என்னை எண்ணலன் மறைந்துவசை தந்த னன்எனை
முன்ன வன்றனை மொழிந்தனன் இகழ்ச்சி மொழியே. 44

பண்டு போலஉமை மாடம(து) அடைந்து பரிவால்
மண்டு நற்றவம் இயற்றினள் இயற்ற மகிழ்வாய்
விண்டு அன்னதன மங்கைஎதிர் வந்து விடைமேல்
கொண்டு போயினன் எழிற்கயிலை மீது குழகன். 45

கன்னி மார்இது தெரிந்(து)அயன் மகன்பு டைகலந்(து)
இன்ன செய்கையுரை செய்யஇறை வன்த னைஇகழ்ந்(து)

---

42. அருத்தி - அன்பு. எனது கண் - என்னிடத்தில். வரத்தின் - நான் பெற்ற வரத்தினால். மறையின் சிரத்தில் - வேத முடிவில். இறைவனுகிய னைக்கு மணம்செய்து கொடுத்தேன்.

43. உதகத்தினை விடுப்ப - தாரை வார்க்க. விரை - நறுமணம். வேணி - சடை. சங்கரி - தாக்ஷாயணி ; உமை. உரைப்பது - இன்னபடி என்று சொல்லுவது. அரிது - மிக அரியதாம்.

44. சினம் மீஇ - கோபம் கொண்டு. கரத்துணை புடைத்தனன் நகைத்து - இரண்டு கைகளையும் கொட்டிச் சிரித்து. எண்ணலன் - மதியானுகி. வசை தந்தனன் - அவமதிப்பை உண்டாக்கினன். முன்னவன்றனை - சிவபிரானை. இகழ்ச்சி மொழி மொழிந்தனன் என்க.

45. மாடமது - தவச் சாலை. பரிவால் - அன்பினால். விண்டு அன்ன தனம் - மலையைப்போன்ற முலைகளையுடைய. குழகன் - இளமையையுடைய சிவபிரான்.

46. கன்னிமார் - தாக்ஷாயணியின் தோழியர்களாகிய கன்னிப் பெண்கள். அயன் மகன்புடை கலந்து - தக்கனிடம் சென்று. அன்ன நாள் முதல் - அன்றுமுதல். மதித்திலன் இருப்ப - மதியாமல் இருக்க. துன்னு - நீலபெற்ற. அறைகுவர் - தங்களுக்குள் பேசிக் கொள்வர்.

அன்ன நாண்முதல் மதித்திலன் இருப்ப அதனைத்
துன்னு வானவர் அறிந்(து)அறைகு வார்இ னையசொல். 46

தக்கன் நக்கனை மதிக்கிலன் இறத்தல் சரதம் ;
மிக்க அன்னவன் இடும்பணியில் நிற்கும் வினையால்
ஒக்க யாமும்அழி வாகவரும் என்(று)அ வன்உறும்
பொக்கில் மாநகர் அடைந்(து)அவனை(டு) இன்ன புகல்வார். 47

(வஞ்சி விருத்தம்)

பெற்றந்தனில் ஏறுபி ரானையும்ஏர்
உற்றுந்(து)உமை தன்னையும் உன்னலரீ ;
குற்றங்கள் தெரிந்து குறித்திடின்நற்
சுற்றம்பெறு வார்எவர் ? சொல்லுதியால். 48

என்றேபல புந்தி இசைத்திடலும்
நன்றேயென உன்னி நயந்(து)அதனுக்(கு)
இன்(று)ஏது? குயிற்றுவ(து) என்றிடலும்
நின்றேயிது தன்னை நிகழ்த்தினரே. 49

விண்டோய்கயி லைக்கிரி மீ(து)அணுகித்
தண்டேன்மொழி யாளொடு சங்கரனைக்
கண்டேவரு கென்று கதித்தபுகழ்
கொண்டேசெறி உம்பர்கள் கூறினரால். 50

இவ்வா(று)இமை யோர்கள் இசைப்பஇசைந்(து)
அவ்வானவர் அங்கண் அமர்ந்திடவைத்(து)

---

47. நக்கனை - சிவபிரானை. இறத்தல் சரதம் - தக்கன் அழிதல் திண்ணம். அந்தத் தக்கன் ஏவும் ஏவல்களில் சுடுபட்டு நிற்கும் பாவத்தால் யாமும் ஒருங்கே அழியும்படியாக நேரும் என்க. பொக்கு இல் - குற்றம் இல்லாத.

48. பெற்றம் - இடபவாகனம். உற்று உந்து உமை என்க. உன்னலீ - மதிக்கவில்லீ. 'குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை' என்று தேவர் கூறினர். குறித்திடின் - உளங்கொண்டால். சுற்றம் - நன்மை தீமைகளில் சூழ்ந்து இருப்பவர் ; உறவினர்.

49. புந்தி - அறிவுரை. இன்று குயிற்றுவது ஏது என்க. குயிற்றுவது - செய்வது. இதுதன்னை - இதனை.

50. விண் தோய் - ஆகாயத்தை அளாவிய. தண் தேன் - குளிர்ச்சி பொருந்திய தேன்போல. மொழியாள் - உமாதேவியார். சங்கரன் - சுகத்தைச் செய்பவன் ; சிவபெருமான். வருக என்று என்க கதித்த - மிக்க. தேவர்கள் தக்கனுக்குக் கூறினர்கள் என்க.

ஒவ்வாரசி தக்கிரி உற்றனனுல்
செவ்வாய்மறை வல்லி திருக்கொழுகன். 51

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

சின்ம யத்தன்உ வந்(து)இ ருந்த
திருந்தும் அன்ன சிலம்பின்மேல்
பொன்ம லிந்திடு மந்தி ரத்திடை
முன்பு வாசல் புகுந்திட
நன்மை தங்குற அங்(கு)உ றுங்கண
நாதர் நாதனே எள்ளிய
புன்மை யாய்!எம(து) ஈச னுக்(கு)எதிர்
போகல் என்று தடுத்தனர். 52

சீறு பூதர் தடுத்தல் கண்டு
சினம்பு ரிந்து திரும்பியே
வீறு தன்னகர் தன்னில் வந்(து)இது
விண்ண வர்க்(கு)உரை செய்துபின்
ஏற(து) ஏறிய சங்க ரன்றனே
இந்த நாள்முத லாகநீர்
மாறு கொண்டு மதித்தி டா(து) இரும்
என இ சைந்தனர் வானுளோர். 53

என்சொல் கேன்!இதை என்சொல் கேன்!எம(து)
ஈசன் மேன்மை அறிந்தும்அப்
பொன்செய் அஞ்சடை யானே எள்ளிய
புல்லர் பட்டது கண்டும்நீள்

---

51. இசைந்து - இணங்கி. ஒவ்வா ரதிதக் கிரி - பிற மலைகள் இணை ஒவ்வாத வெள்ளி மலையை. மறைவல்லி - வேதவல்லியின். கொழுகன் - தக்கன்.

52. சின்மயத்தன் - ஞானமே திருவுருவாக உடைய சிவபிரான். உவந்து இருந்த - மகிழ்ந்து இருந்த. சிலம்பு - மலை. மந்திரம் - திருக் கோயில். முன்பு வாசல் - தலைவாசல். இறைவனே இகழ்ந்த காரணத்தால் கணநாதர் தடுத்தனர் என்க. தடுத்த கணநாதரை நோக்கித் தக்கன் தன் ஆற்றலை எடுத்துப்பேசி, உங்கள் கடவுளை யாவரும் வணங்காமல் இகழும்படி செய்கிறேன் என்று கூறித் தன் பதிசேர்ந்தான் என்பதைக் கந்தபுராணத்தில் விரிவாய்க் காண்க.

53. சினம் புரிந்து - தக்கன் கோபங்கொண்டு. மாறுகொண்டு - விரோதித்து. மாறுகொண்டு இரும், மதித்திடாது இரும் என்க. இசைந்தனர் - இணங்கினர்கள்.

கொன்செ யுந்துயர் மாய வாழ்வு
குறித்(து)இ தற்கும் இசைந்தனர் ;
மின்செய் வானவர் ஆத லால்வினை
வெல்ல வல்லவர் இல்லையே. 54

அன்ன போ(து)இசை வான வானவர்
ஆரும் ஏக அறைந்தரோ
இன்ன பான்மை இருக்கு நாளில்
இருக்கு நான்முகன் ஓர்மகந்
தன்னை அங்கண் இயற்ற உன்னுபு
தன்ன(து) ஏவல்செய் தனயரை
மன்னு மால்முதல் உம்ப ரைக்கொடு
வம்மின் என்று விடுத்தனன். 55

மூளுகின்ற சினங்கொள் தன்மகன்
முன்னி சைத்ததும் உன்னியான்
மாள வேவரு மேனும் அன்னது
வருக என்று மனந்துணிந்(து)
ஆளும் நாயகன் வெள்ளி வெற்பில்
அடைந்து நந்தி விடுத்திடக்
காள கண்டனை முன்ப ணிந்(து)இரு
கைகு வித்(து)உரை செய்குவான். 56

எந்தை ! கேள்:ஒரு வேள்வி யானதை
யான்இ யற்றுவன் ; அங்கண்நீ
வந்(து)எ னக்கருள் செய்தி என்ன
மகிழ்ந்து நம்முரு வானசீர்

---

54. பொன் செய் அம் சடையான் - பொன்னைப் போன்ற அழகிய சடையையுடையவனை. எள்ளிய புல்லர் – அவமதித்த நீசர்கள். பட்டது கண்டும் – அழிந்து போனதைப் பார்த்தும். மாய வாழ்வு குறித்து - தக்கனால் வரும் பெருமையையுடைய பொய் வாழ்க்கையை நினைந்து. வானவர் இசைந்தனர் என்க.

55. மகம் - யாகம். இருக்கு - இருக்கு முதலிய வேதங்களில் வல்ல. உன்னுபு - எண்ணி. தன்னது - தன்னுடைய. தனயரை - புத்திரர்களை. தனயரை விடுத்தனன் என்க.

56. பிரமன் செயல். தன் மகன் என்றது தக்கனை. யான் மாளவே வரு மேனும் - நான் இறக்கும்படி நேர்ந்தாலும். ஆளும் நாயகன் - சிவபிரானது.

நந்தி தன்னை விடுப்பம் ; ஏ(கு)என
நான்மு கன்தொழு(து) ஏகியே
மைந்த னுக்கும் உரைத்து நீதி
மனுவை நிப்புடை உற்றனன். 57

மிக்க வேள்வி அவன் தொடங்கலும்
வீறு மால்முதல் விண்ணுளோர்
தக்க னுடும் அடைந்து வேள்விசெய்
சாலை யின்புடை சார்தலும்
செக்கர் வேணியர் நூறு கோடியர்
சீறு சாரதர் சூழவே
அக்க ணந்தனில் நந்தி வந்தனன்
ஆதி தேவன(து) ஏவலால். 58

எந்தை வந்தது கண்டு வேதன்
எழுந்து கைப்பது மங்குவித்(து)
உந்தும் ஆதன மீ(து)இ ருத்த
உவந்தி ருந்தனன் ஈதுகண்(டு)
அந்தம் அற்ற பவங்கொள் தக்கன்
அழைத்து ளார்எவர் ? என்றுதன்
சிந்தை யூடு குறித்(து) உணர்ந்து
செயிர்த்து வேதனை(டு) ஓதுவான். 59

சோதி முன்னர் அடைந்து வேள்வி
தொடங்கு கின்றது சொற்றனை ;
ஆதி உந்திய நந்தி யைத்தொழுது
அன்பின் என்முன் இருத்தினை ;

வெள்ளி வெற்பில் - கைலாச மலையை. காளகண்டனை – நீலகண்டப் பெருமானை. உரைசெய்குவான் - சொல்லுகின்றான்.

57. வேள்வியானதை - யாகத்தை. விடுப்பம் - அனுப்புவோம். மைந்தனுக்கும் - தக்கனுக்கும். மனுவை - பிரமன் வாழும் நகரம்.

58. மால் முதல் - திருமால் முதலாகிய. செக்கர் வேணியர் - சிவந்த சுகிலமயிரையுடையவராகிய. சாரதர் - பூதர். ஆதிதேவனது ஏவலால் - சிவ பிரானது கட்டளையினால்.

59. எந்தை - நந்தி தேவர். வேதன் - பிரமன். ஆதனம் மீது இருத்த என்க. பவம் கொள் - பாவங்களைக் கொண்ட. அழைத்துளார் எவர் - நந்தி தேவரை அழைத்தவர் யார். செயிர்த்து - கோபித்து.

வேத! கேள்மதி : தாதை ஆதலின்
வெட்டி டா(து)உனை விட்டனன் ;
நீதி யோ?இது செய்த(து) என்று
புகன்று பின்னும் நிகழ்த்துவான். 60

எள்ளு நீர்மைகொள் பித்த னுகி
இருக்கும் ஈசன் மகத்(து)அவி
கொள்ளு தற்(கு)உரி யன்கொல்? ஈது
குறித்தி டாது கொடுத்தனர் ;
தள்ளு மற்றதை ; வீண்டு வேஉயர்
தாணு என்ன மதித்துநற்
கள்ளு றுங்கம லத்த ! முன்(பு)அவி
காதல் தன்னெடும் ஈதிநீ. 61

மற்றெ வர்க்கும் அளித்தி என்ன லும்
மன்னு நந்தி மனஞ்சினந்(து)
உற்ற தக்கன் முகந்தெ ரிந்(து)உணர்
வோடு நீதியில் பேதைநீ
பெற்ற மேல்அம லற்ப ழித்துரை
பேசி னுய்அவன் அன்றியே
கொற்ற வேள்வி குயிற்று வோர்முடி
போக என்(று)உரை கூறியே. 62

---

60. சோதி முன்னர் அடைந்து - சிவனிடம் போய். ஆதி - சிவபிரான். உந்திய - விடுத்த. என் முன் இருத்தினை - எனக்கு முன்னுலே வீற்றிருக்கச் செய்தாய். கேள் - கேட்பாயாக. மதி : முன்னிலையசை. தாதை ஆதலின் - நீ என் தகப்பனுக இருத்தலினல்.

61. எள்ளும் நீர்மைகொள் - இகழ்வதற்குரிய இயல்பையுடைய, மகத்து அவி கொள்ளுதற்கு உரியன்கொல் - யாகத்தில் அவிர்ப்பாகத்தைக் கொள்ளுவதற்கு உரியவனே? இந்த விஷயத்தைத் தெரிந்துகொள்ளாமல் அவனுக்கு அவிர்ப்பாகம் கொடுத்தார்கள் ; இனித் திருமாலையே முதற் கடவுளாகக் கொண்டு கொடுக்கவேண்டுமென்று தக்கன் உரைத்தான் என்க. தள்ளு : ஏவல் வினை. வீண்டுவே - திருமாலே. உயர் தாணு - உயர்ந்த கடவுள். அவி - அவிர்ப்பாகத்தை. ஈதி - கொடுப்பாயாக.

62. திருமாலுக்கு, முதலில் அளித்துவிட்டுப் பிறகு மற்ற யாவருக்கும் அளிப்பாயாக என்க. நந்தி – நந்திதேவர். உணர்வு - அறிவு. நீதி - தருமம். பெற்றம் - இடபம். அமலன் - சிவன். பழித்து-இகழ்ந்து. கொற்றவேள்வி-வெற்றியைத்தரும் யாகத்தை. குயிற்றுவோர் - செய்வோர். முடி. போக-தலே அறுவனவாக. உரை - சாபம்.

சிறி எம்பெரு மானை எள்ளிய
தியை நின்தலை போகளன்(று)
ஈறி லாத பரம்ப ரன்றனை
எள்ளு நின்னெ(டு) இருந்திடும்
வீறு மால்முதல் உம்பர் யாவரும்
வீர மேவிய சூரனுல்
மாற ருந்துய ரத்து மூழ்கி
வருந்த என்று சபித்தனன். 63

இந்த வாறு புகன்று நந்தி
எழுந்து சாரதர் சூழவே
அந்தண் மாமதி வேணி யானை
அடைந்(து)அ னைத்தும் அறைந்துபின்
மைந்து றுங்குண வாசல் மேவினன்;
மன்னு வேதன் மகங்குலைந்(து)
உந்தி டுந்துயர் கொண்டு தத்தம்
இடத்தி யாவரும் உற்றனர். 64

சொற்ற ரும்புகழ் நந்தி முன்பு
சுளிந்து கூறிய சூளினுல்
அற்றை நாள்முதல் யாரும் வேள்வி
இயற்ற வஞ்சி அமர்ந்தனர்;
மற்றை யோர்பகல் தக்கன் என்பவன்
மாம கஞ்செய உன்னியே
கொற்ற நற்றெழில் கற்ற உம்பர்கள்
கம்மி யற்(கு)இது கூறுவான். 65

---

63. எள்ளிய - இகழ்ந்த. வீறு - பெருமை. மால்முதல் - திருமால் முதலிய. மாறு அரும் - பரிகாரம் இல்லாத. போகவென்றும் வருந்தவென்றும் சபித்தனன் என்க

64. சாரதர் - பூதப்படையினர். மதிவேணியானை - சிவபிரானை. அறைந்து - சொல்லி. மைந்து உறும் - வலிமை பொருந்திய. குணவாசல் - கிழக்கோபுர வாசல். வேதன் - பிரமன். மகம் குலைந்து - யாகம் அழிய. உந்திடும் - மேலிடும்.

65. சுளிந்து - கோபித்து. சூளினுல் - சாபத்தால். மற்றை ஓர் பகல் - வேறு ஒருநாள். மகம் செய - யாகம் செய்ய. உன்னி - நினைத்து. உம்பர்கள் கம்பியற்கு - விசுவகன்மாவுக்கு.

மகம்பு ரிந்திடு சாலை ஒன்று
வகுத்தி என்னலும் அன்னவன்
திகழ்ந்த கங்கை மருங்(கு)அ டைந்து
திருந்தும் ஆயிர யோசனை
அகன்ற சாலைய(து) ஒன்(று)இ யற்றலும்
அங்கண் ஏகி அயன்சுதன்
சகம்பு கழ்ந்திடு காமர் கண்டு
தனு(து)உ ளங்களி கொண்டனன். 66

பின்னர் ஒற்றர் முகந்தெ ரிந்து
பிறைக்கொ ழுந்து மிலைச்சிய
மின்னி ருஞ்சடை அண்ணல் அல்லது
வேறு தேவர்கள் யாரையும்
மன்னும் இவ்விடை உய்த்திர் என்னலும்
வல்லை ஏகி அவர்க்கெலாம்
சொன்ன போ(து)அரி ஆதி வானவர்
யாரும் வந்தனர் துன்னியே. 67

வந்து தக்கன தியாக சாலையில்
மாய னும்கம லத்தனும்
இந்தி ரன்முத லான தேவர்கள்
யாரும் அங்கண் இருந்தபோ(து)
உந்தி டும்புகழ் மாத வத்தர்
உவந்து சூழ்தர வந்தனன் ;
தந்தி ரம்புரி மாலை வென்(று)அடல்
மாலை கொண்ட தறிகியே. 68

---

66. வகுத்தி - அமைப்பாயாக. அன்னவன் - அந்த விசுவகன்மா. அயன் சுதன் - தக்கன். காமர் கண்டு - யாசகசாலையின் அழகைப் பார்த்து.

67. மிலைச்சிய - அணிந்த. அண்ணல் அல்லது - சிவபிரானைத் தவிர. உய்த்திர் - அழைத்து வருவீர்களாக. அரி ஆதி வானவர் - திருமால் முதலிய தேவர்கள்.

68. கமலத்தனும் - பிரமதேவனும். மாதவத்தர் - முனிவர்கள். தந்திரம் புரி மாலை வென்று - குபன் என்னும் அரசனுக்குத் துணையாக வந்து பல தந்திரங்களைச் செய்து போர்செய்த திருமாலை வென்று ; இதன் விரிவைக் காஞ்சிப்புராணம்- இட்ட சித்தீச்சரப் படலத்தில் காண்க. அடல் மாலை - வெற்றிமாலை.

நன்றி கொன்றிடு தக்கன் மாமுனி
நண்ணு கின்றது கண்டரோ
இன்(று)எ னக்கிவன் அஞ்சி வந்தனன்
என்று சிந்தையில் எண்ணியே
வென்றி மாதவ! வருக என்(று)ஒரு
வீறும் ஆதனம் ஈதலும்
துன்று மாதவ ரோ(டு)இ ருந்(து)இது
சொல்லு வான்:விசை வெல்லுவான். 69

எம்மை இங்ஙன் அழைத்த காரணம்
என்ன என்னலும் ஈசன்எம்
அம்மை தன்னை மணந்த தற்பின்
நிகழ்ந்த யாவும் அறைந்தரோ
மைம்ம லிந்திடு கண்ட னுக்(கு)அவி
மாற்று வான்மகம் ஆற்றுவேன்;
உம்மை இங்கு விளித்த தன்மையும்
இன்(று)இ தற்கென ஓதினன். 70

ஊற கன்ற ததீசி தக்கன்
உரைத்த பான்மை வினவியே
வீறு கொண்ட பராப ரன்தனி
மேன்மை தன்னை விளம்பியே
ஏறு தங்கு பதாகை அண்ணல்
எவர்க்கும் ஈசன் அவற்குநீ
மாறு கொண்டு மகஞ்செ யேல்என
மாசி லான்இது பேசினன். 71

---

69. மாமுனி - ததீசி முனிவர். எண்ணியே - தக்கன் நினைத்து. சொல்லுவான் - ததீசி முனிவர் சொல்லலாயினர்.

70. மை மலிந்திடு கண்டனுக்கு - நீலகண்டமுடைய சிவபிரானுக்கு. அவி மாற்று வான் மகம் ஆற்றுவேன் - அவிர்ப்பாகத்தைக் கொடாமல் மறுக்கும் பெரிய யாகத்தைச் செய்வேன். உம்மை - உங்களை. தக்கன் ஓதினன் என்க.

71. ஊறு - துன்பம். தனி மேன்மை - ஒருவருக்கும் இல்லாத சிறப்பான பெருமைகளை; பரத்துவத்தை. ஏறு தங்கு பதாகை அண்ணல் - இடபக்கொடியையுடைய சிவபிரான். ஈசன் - கடவுள். மாறு கொண்டு - விரோதம் கொண்டு. மகம் செயேல் - யாகத்தைச் செய்யாதே. மாசிலான் - ததீசி முனிவர்.

மாசு(று) என்பு புணர்ந்து சேகர
மாலை யானது பூணுமோ ?
தேசு நீறது பூசு மோ?தசை
தீர்ந்த தீயுடல் ஏந்துமோ ?
கேச முங்கரு மாம ருப்பொடு
கேடு(று) ஆமையின் ஓடுமே
நேச மோடு தரிக்கு மோ?பரம்
ஆகி நின்றிடு நின்மலன். 72

கோல ஞாலமொ(டு) உயிர்கள் செற்றல்
குயிற்று மோ?புலி தந்தியின்
தோலொ(டு) அங்கி கணிச்சி தாவுழை
சூலம் இன்ன சுமக்குமோ ?
சால வும்பலி கொள்ளு மோ?நடம்
ஆடு மோ?மிகு சாரதர்
சில மேவிய படையெ னும்படி
திரியு மோ?உயர் தேவனே. 73

நஞ்செ யிற்(று)அடல் நாகம் வெண்டலை
நவைஎ னுது தரிக்குமோ ?
விஞ்சு கின்றதன் மேனி அல்லது
வேறு மோர்தனு மேவுமோ ?
எஞ்சு ரு(து)அ விருந்தி றல்பெறும்
ஏறு தன்மிசை ஏறுமோ ?
அஞ்சும் ஆலம் அருந்து மோ?நிகர்
அன்றி நின்றிடும் அண்ணலே. 74

---

72. தக்கன் கூற்று. மாசு றுன்பு என்க. சேகர மாலை - தலை மாலை. தசை நீர்ந்த நீ உடல் - ஊன் நீங்கிய நிய உடலாகிய முழு என்பை ; இதற்குக் கங்காளம் என்று பெயர். கேசமும் - மயிரையும். கருமா மருப்பு - பன்றிக்கொம்பு. கேடுறு ஆமையின் ஓடு என்க. பரமாகி - எல்லோருக்கும் மேலாகி.

73. செற்றல் குயிற்றுமோ - அழித்தலைச் செய்வானோ. புலி தந்தியின் தோலொடு - புலித்தோலையும் யானைத்தோலையும். கணிச்சி - மழுவினையும். தாவு உழை - தாவுகின்ற மானையும். பலி - பிசை. சாரதர் - பூதர். உயர் தேவன் - எல்லோருக்கும் மேலாகிய தேவன்.

74. விடத்தையுடைய பல்லையும் வலியையும் பெற்ற பாம்புகளை. வெண் டலை - தசை நீங்கிய தலை. நவை - குற்றம். வேறும் ஓர் தனு - வேறொரு

ஈமம் ஆடல் ஒருத்தி யைத்தலை
எய்த வைத்தல் ஒருத்தியை
வாம மீதினில் வைத்தல் பிள்ளை
மகிழ்ந்து பெற்றிடல் வெங்குணம்
காமர் அண்ணல் படைக்கு மோ?என
ஏது வாகிய காதைகள்
தாம மார்புள தக்க னுரைத்
ததீசி மாமுனி பேசுவான். 75

வேதன் மால்முத லோரை நம்பன்
விதித்(து)அ ழித்திடு போதெலாம்
தீதில் அங்கவர் என்(பு)அ ணிந்து
சிரங்கள் கேசம் அணிந்துநீள்
கோதி லா(து)ஒளிர் சூல மீ(து)உடல்
கொண்டு நீறது கண்டுபின்
மீது பூசு மியாவ ருந்தனை
மேவி உய்ந்திட வேண்டியே. 76

சது ரின்றிட ஆட கக்கணன்
என்ப வன்புவி யுண்டுமுன்
பாத லந்தனில் ஏக மால்ஒரு
பார ஏனம(து) ஆகியே

திருமேனியை. எஞ்சுறுது அவிரும் திறல் - குறைவுபடாத மிகுந்த வலிமை யுள்ள. ஏறு தன்மிசை - இடபத்தின் மேல். அஞ்சும் ஆலம் - யாவரும் அணுக அஞ்சும் விடத்தை. அண்ணல் - கடவுள்.

75. ஈமம் ஆடல் - மயானத்தில் தாண்டவம் புரிதல். தலையில் எய்தும் படி வைத்தல் என்க. ஒருத்தி - கங்கை. வாம மீதினில் - இடப்பாகத்தில். வெங்குணம் - தாமதகுணம். அண்ணல் - தலைவனான கடவுள். என-என்று தக்கன் கேட்க. ஏது ஆகிய காதைகள் - இவற்றிற்குக் காரணமாகிய வரலாறுகளை. காதை - நடந்தவற்றையே கூறுவது. தாமம் - மாலை.

76. பிரமன், திருமால் முதலியவர்களை. விதித்து அழித்திடு போதெலாம் - உண்டாக்கிப் பின் சங்காரம் செய்யும் காலத்தில். கேசம் - மயிர். உடல்கொண்டு - அவர் உடல்களைக் கொண்டு. நீறது கண்டு - எரித்துப் பொடியாக்கி. மீது பூசும் - அந்தப் பொடியைத் தம்மேல் பூசிக்கொள்வார்.

77. பன்றிக்கொம்பை அணிவதற்குரிய காரணத்தைக் கூறுகின்றார். ஆடகக்கணன் - பொன் கண்ணன் என்னும் அரக்கன்; இரணியாட்சன். மால் - திருமால். பார ஏனமது ஆகியே - பெரிய வராக உருவம் எடுத்துக் கொண்டு. ஏனம் - பன்றி. கோதினனை - இரணியாட்சனை.

கோதி ணீனை மருப்பி னீக்கொடு
கொன்று முன்(பு)என ஒன்றவே
பூத லந்தனீ வைத்(து)அ கந்தை
பொருந்தி மண்ணீ அழித்தனன். 77

அந்த வேலையில் வேலை நஞ்சம்
அயின்ற நம்பன் அவன்றன்நேர்
வந்தொர் கோடு பறிப்ப முன்புலன்
வந்து வந்தனீ செய்திட
எந்தை ஏன மருப்(பு)அ ணிந்தனன் ;
எண்ணில் வானவ ரானவர்
உந்தும் ஆழி கடைந்த வேலையில்
மந்த ரந்தளர் வுற்றதே. 78

மால வன்கம டத்(து)உ ருக்கொடு
மந்த ரத்தை வெரிந்தனில்
சால அன்று பரித்த னன்;கடல்
தந்த(து) அங்(கு)அமு தந்தனீ ;
நீல மாயன் அகந்தை கொண்டு
நிறைந்த வேலை உழக்கவே
ஆல முண்டவன் வந்து பற்றி
அவன்றன் வன்மை அழித்தனன். 79

மருப்பினீக்கொடு - கொம்பினுல். முன்பென - முன்புபோல. அகந்தை பொருந்தி - கர்வத்தை அடைந்து. மண்ணீ - பூவுலகத்தை,

78. வேலை நஞ்சம் - கடலில் உண்டான ஆலகால விடத்தை. நம்பன் - சிவபிரான். கோடு - கொம்பை. முன் புலன் வந்து - முன்னைய அறிவு வரப்பெற்று. ஏன மருப்பு அணிந்தனன் - அந்தப் பன்றிக் கொம்பைத் திருமார்பில் தரித்தார். இனி, ஆமையோடு தரித்த காரணத்தைச் சொல் கிறார். ஆழி - பாற்கடலில். வேலையில் - சமயத்தில். மந்தரம் - மத்தாக உதவிய மந்தரகிரி.

79. கமடத்து உருக்கொடு - ஆமையின் உருவத்தை எடுத்துக்கொண்டு. வெரிந்தனில் - முதுகின்மேல். சால - நன்றாக. பரித்தனன் - தாங்கினன். அங்கு அமுதந்தனீக் கடல் தந்தது என்க. நீலமாயன் - கரியநிறங் கொண்ட திருமால். வேலை உழக்க - கடலைக்கலக்க. ஆலம் உண்டவன் - சிவபிரான். (ஆலம் - விஷம்.) அவன்றன் வன்மை - ஆமையாக இருந்த திருமாலின் வலிமையை.

உற்ற முன்னுணர்(வு) எய்தி மாயன்
உவப்பி னோடு புகழ்ந்திட
அற்றை நாள்அவ னோடு மார்பில்
அணிந்த னன்;அது நின்றிட
முற்று வேள்விய தேத ரும்பர
முத்தி என்(று)உயர் புத்தியில்
சற்றும் எம்பெரு மானை எண்ணலர்
தாரு காவன மாதவர். 80

இன்ன பான்மை அறிந்து நம்பன்
இலங்கு சீருள மாலொடு
மன்னி டுங்கயி லாய வெற்பினை
வல்லை தன்னில் அகன்றுபோய்த்
தன்னை உன்னலர் துன்னி வாழ்வுறு
தாரு காவனந் தன்னில்நற்
கன்னி யாகி நடந்தி டும்படி
கண்ண னுக்(கு)அருள் செய்தனன். 81

மார வேளை அளித்த பச்சுரு
மாயன் மாதுரு வங்கொளாச்
சாரு நீ(டு)எழில் அவ்வ னத்துறு
தாப தர்க்கெதிர் போகவிட்(டு)
ஏரி னோ(டு)அவர் பன்னி மார்கள்
இருந்த வீதியில் எம்பிரான்
வார மோடு பலிக்(கு) அடைந்திடு
வார்கள் என்ன அணைந்தனன். 82

---

80. முன் உணர்வு எய்தி – முன்னைய அறிவை அடைந்து. அவன் ஒடு – கூர்மாவதாரமெடுத்த திருமாலின் ஓட்டை புலித்தோல் முதலியவற்றை அணிந்த காரணத்தை இனிக் கூறுகின்றார். யாகமே மேலான முத்தியைத் தரும் என்று எண்ணிச் சிவபிரானை எண்ணமல் தாருகாவனத்து முனிவர் இருந்தனர் என்க.

81. நம்பன் - சிவபிரான். நம்பன் அகன்று என்க. உன்னலர் - நினையாதவர்களாகிய தாருகாவன முனிவர்கள். கன்னியாகி - பெண்ணாகி; மோகினியாகி. கண்ணனுக்கு - திருமாலுக்கு.

82. மாரவேளை அளித்த - மன்மதனைப்பெற்ற. பச்சுரு - பச்சைநிறத் திருமேனியையுடைய. மாது உருவம் கொளா - மோகினியின் உருவத்தை எடுத்துக்கொண்டு. தாபதர்க்கு - முனிவர்களுக்கு. ஏரினோடு - எழுச்சி

மாலே சேர்குழல் மாலே நோக்கினர்
மாலே எய்தினர் மாதவர்;
சால எம்பெரு மானே மானினே
மானு கின்ற தடங்கணார்
கோல மோ(டு)எதிர் கண்டு மாமயல்
கொண்டு கொண்ட கலன்கள்போய்ச்
சூல பாணி தனது பின்துய
ரத்தி னேடு தொடர்ந்தனர். 83

அந்த வேலையில் இந்து தாரி
அநேக மேனிய னுகியே
வந்து மங்கையர் எண்ணு மாறு
மகிழ்ந்து செய்திட மாதரார்
எந்தை யால்அவண் நாலு பத்துடன்
எண்ணு கின்றவெண் ணூயிரம்
மைந்த ரைத்தர வந்த மைந்தர்கள்
வள்ளல் தன்னே வணங்கினர். 84

சங்க ரன்நமை உன்னி நீவிர்
தவம்பு ரிந்திடும் என்னவே
அங்கண் நின்றிடும் மைந்தர் ஏகினர்;
அந்த வேலை முகுந்தனும்

யோடு. அவர் பன்னிமார்கள் - அந்த முனிவர்களுடைய பத்தினிகள். வாரம் -- அன்பு. பலிக்கு அடைந்திடுவார்கள் என்ன - பிசைக்கு வருபவர் கனேப்போல.

83. மாலே சேர் - பூமாலையை அணிந்த. மாலே நோக்கினர் - மோகினி உருவங்கொண்ட திருமாலேப்பார்த்து. மாதவர் மாலே எய்தினர்; மாலே - காம மயக்கத்தை. மானினே மானுகின்ற தடங்கணார் - மானே ஒத்த விசாலமாகிய கண்களேயுடைய ரிஷி பத்தினிகள். கொண்ட கலன்கள் போய் - தாம் அணிந்துகொண்ட ஆபரணங்கள் கழல. சூலபாணி - சிவ பிரான்.

84. இந்து தாரி - சந்திரனேத் தரித்த சிவபிரான். எண்ணு மாறு செய்திட என்க. நாலுபத்துடன் எண்ணுகின்ற எண்ணூயிரம் - நாற்பத் தெண்ணூயிரம். மைந்தரை - பிள்ளேகளே. தர - பெற. வள்ளல் தன்னே - சிவபிரானே.

85. அந்த வேலே - அப்பொழுது. முகுந்தனும் மங்கை - திருமாலாகிய மோகினி. மாதவத்தர் - தாருகாவன ரிஷிகள். பங்கம் உற்று - அழிந்து.

மங்கை வந்திட மாத வத்தர்
தொடர்ந்து வந்துதம் மாதரார்
பங்கம் உற்றுயர் கற்ப முிந்திடு
பான்மை கண்டு சினந்தனர். 85

தீதில் மாதர்கள் கற்ப முித்தவ
னீசச்செ குத்திடு வோம்எனு
மாதழல்கொள் மகம்பு ரிந்(து)அதின்
வந்து வந்து பிறந்திடும்
காது வெம்புலி பரசு நவ்வி
கடும்ப ணித்திரள் பூதர்கள்
மோது வெண்டலை திண்டி றல்துடி
முயல கன்தமை [1]ஏவினர். 86

வேங்கை தன்னை உரித்(து)உ டுத்தனன்;
மிக்க சாரதர் தாளையாய்ப்
பாங்கு றும்படி ஓதி னன்;ஒரு
பாத வண்கம லத்தினல்
ஏங்கு றும்படி முயல கன்தனை
ஈடி னோடு மிதித்தனன்;
வாங்க ருங்கவி னுற்ற மேனியில்
மற்றை யாவும் அணிந்தனன். 87

ஈடு கொண்டிடு விண்ணு ளார்தொழ
எந்தை நாடகம் ஆடினன்;
வீடி னரென மாத வத்தர்
வீழுந்து பின்னும் எழுந்(து)அவம்

---

86. செகுத்திடுவோம் - கொல்வோம். மா தழல்கொள் மகம் புரிந்து- பெரிய அக்கினியை உடைய யாகத்தைச் செய்து. காது - கொல்லும். பரசு - மழு. நவ்வி - மான். பணி - பாம்பு. வெண்டலை - தசை யில்லாத தலை. துடி - உடுக்கை. முயலகன் - ஒரு பூதன்.

87. வேங்கைதன்னை - புலியை. சாரதர் - பூதர்களை. தாளையாய் பாங்கு உறும்படி - படையாகித் தம் பக்கத்திலே இருக்கும்படி. ஈடினோடு- பெருமையோடு. வாங்கு அரும் கவின் - மாற்றுதற்கரிய அழகை.

88. ஈடு - பெருமை. நாடகம் - நடனம். வீடினர் என - இறந்தவர் களைப்போல. அவம் கூடும் எங்கள் - வீண் செயலைக் கூடிய எங்களுடைய. கொள்ளல் - திருவுள்ளத்தில் எண்ணற்க. வழுத்த - துதிக்க. அன்பை அருள்செய்து என்க. பா-ம்—1 முயலகன்தனை.

கூடும் எங்கள் கொடும்பெ ரும்பிழை
கொள்ளல் என்று வழுத்தவே
நாடி அன்(பு)அருள் செய்து பின்கயி
லாய மாமலை நண்ணினன். 88

ஈது நின்றிட ஆனை மேனியொ(டு)
ஈடு கொண்ட கயாசுரன்
வேதன் நல்கு வரத்தி னுல்உயர்
விண்ணும் மண்ணும் மலைக்கவே
மாத வத்தினர் ஆரும் அஞ்சி
வளங்கொள் காசியில் ஓடினர்;
பாத கன்அவ ரைத்தொ டர்ந்து
படர்ந்து காசி அடைந்தனன். 89

கண்டு மாதவர் காசி யின்மணி
கன்னி யாகிய ஆலயத்(து)
அண்ட நாதன் அருட்ப தத்தில்
அடைக்க லம்புக அங்கணன்
ஒண்டி றற்கரி முன்னர் ஏகி
உரித்து மேனி தரித்தனன்;
துண்ட வாள்மதி போல்நு தற்பெறு
தோகை யும்பய மாகவே. 90

மற்றி வா(று)இவண் நிற்ப முற்பகல்
மாயன் அந்தணன் மேருமேல்
உற்ற கால்முனி வோர்கள் உம்பர்
உவந்து வந்து பணிந்துநீள்

---

89. யானைத்தோல் போர்த்ததன் காரணம் கூறுகின்றார். ஈடு - பெருமை. வேதன் - பிரமன். அலைக்க - துன்புறுத்த. பாதகன் - கயாசுரன்,

90. காசிப்பதியில் திகழும் மணி கர்ணிகையென்னும் திருக்கோயிலில் எழுந்தருளிய சிவபிரானிடம். அங்கணன் - சிவபிரான். கரிமுன்னர் ஏகி - கயாசுரனுக்கு எதிரே சென்று. யானையை உரித்து அந்தத் தோலை உமாதேவியாரும் அஞ்சும்படி போர்த்துக்கொண்டார். துண்ட வாள்மதி-பிறை. தோகை - உமாதேவியார். பயம் ஆக - அஞ்சும்படி.

91. முற்பகல் - முன் ஒரு காலத்தில். மாயன் அந்தணன் - திருமாலும் பிரமதேவனும். உற்றகால் - அடைந்தபோது. முனிவோர்களும் தேவர்

வென்றி சேர்அய னுர்பெ ருஞ்சிர
மீதில் ஏற்றனன் ; நூறுநூ(று)
என்று கூறிடும் ஆண்டு செல்ல
இனைத்து மாயன் விழுந்தனன். 94

நீடு கைத்தலை பாதி யேனும்
நிறைந்த(து) இல்லை ; அவன்றனைப்
பீடு மேவிய காரி அன்பொடு
பின்(பு)எ ழுப்பி நிறுத்தியே
ஈடு கொண்டு பொருந்தி மேலுல(கு)
எய்தி அண்ட மியாவையும்
நாடி அங்கண் அளித்தி ருந்தனன்
நாத னுர்அரு ளாலரோ. 95

பகர்ந்த இன்னது நிற்ப முற்பகல்
பண்ண வர்க்(கு)இறை யானவன்
அகந்தை கொண்ட மனத்தொ டுங்கயி
லாய மந்திர முன்புற
உகந்து சாரதர் போல எண்குணன்
உற்ற னன்;குலி சத்தினுன்
மிகுந்த பூத!அரன்ற னக்(கு)என
வேஇ என்று விளைவினுன்[1]. 96

---

94. உன் தலையின் இரத்தத்தைச் சொரிவாயாக என்க. தன் தன் நெற்றி - தனது நெற்றியை. பிளந்து - கீறி. நம்பிரான் அயனுர் பெருஞ் சிரமீதில் ஏற்றனன் - பைரவர் கிள்ளிய பிரமனது கபாலத்தில் ஏற்றுக் கொண்டார். பதினுயிரம் வருஷம் செல்லவே திருமால் தளர்ந்து மூர்ச்சித்து விழுந்தார் என்க.

95. திருமாலின் இரத்தத்தால் பைரவர் கையில் இருந்த கபாலத்தின் ஒரு பாதிகூட நிறையவில்லை. காரி - பைரவர். அவன்றனை எழுப்பி என்க. அளித்திருந்தனன் - காவல் செய்திருந்தார்.

96. பண்ணவர்க்கு இறை - இந்திரன். கயிலாய மந்திரம் முன்புஉற - கயிலாயத்தில் சிவபிரான் திருக்கோயிலுக்கு முன்பே வர. சாரதர் போல - பூதகணம்போல. எண்குணன் - சிவபிரான். எண்குணம் - தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல் பாகவே பாசங்களினின்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பன. குலிசத்தினுன் - இந்திரன். பூத : விளி. என்ன வேஇ - என்ன சமயம். பார-ம்—1 விளம்பினுன்.

வேலை கேட்டுழி வேலை வென்றவன்
வெஞ்சி னங்கொடு நின்றிடக்
கோளு(று) இந்திர னும்சி னந்(து)உயர்
குலிச வேலினை எறியவே
ஆளும் எம்பெரு மானை மேவி
அருந்து கள்படு அங்கணன்
நீளு ருத்திர மேனி கொண்டு
நெடுஞ்சி னங்கொடு நின்றனன். 97

அன்ன காலையில் உன்றன் மாயம்
அறிந்தி லேன்அறி வற்றயான்
என்னி ரும்பிழை எண்ணல் என்ன
இறைஞ்சி நிற்க விடுத்தரோ
மின்னு தன்சின மான தீயினை,
மேலை வேலையில் வீசலும்
மன்னு கின்ற சலந்த ரப்பெயர்
மைந்த னுகி வளர்ந்தனன். 98

வளர்ந்த பின்(பு)அவு ணக்கு லத்தொடு
மண்ணி லுற்(று)உயர் விண்ணு ளோர்
தளர்ந்தி டும்படி செய்(து)இ ரண்டு
சதங்கொள் ஆயிரம் வற்சரம்
வலைந்து மாலொடு போர்பு ரிந்திட
மால்பு கழ்ந்து படர்ந்தனன் ;
இளந்த உம்பர்கள் ஓடி னர்கயி
லாய மாகிய கிரியின்மேல். 99

---

97. வேலை வென்றவன் - காமாரியாகிய சிவபிரான். கோள் உறு இந்திரன் - கொள்கையை உடைய இந்திரன். குலிசவேலினை - வச்சிராயுதத்தை. துகள்பட - பொடியாக. அங்கணன் - சிவபிரான். உருத்திர மேனிகொண்டு - உருத்திர ரூபத்தை எடுத்துக்கொண்டு.

98. மாயம் - மறைந்திருந்த லீலையை. சினமான தீயினை - கோபமாகிய அக்கினியை. மேலை வேலையில் - மேற்குக் கடலில். சலந்தரப் பெயர் மைந்தனுகி - அந்த அக்கினியானது சலந்தரன் என்னும் பெயருள்ள வலிமையை உடையவனுகி.

99. அவுணக்குலத்தோடு - அசுரர் கூட்டத்தோடு. இரண்டு சதங்கொள் ஆயிரம் வற்சரம் - இருநூறுயிர வருடம். சலந்தரன் அசுரர்களோடு வந்து திருமாலோடு போர் செய்யத் திருமால் ஆற்றராகி அவனைப் புகழ்ந்து விட்டுப் போனர் என்க.

வெள்ளி வெற்பிடை விண்ணு ளாரவர்
மேவி உற்ற(து) அறிந்துபின்
தள்ளு தற்கரு மொய்ம்பு கொண்ட
சலந்த ரன்படை சூழவே
எள்ளரும்புகழ் மேவு றுங்கயி
லாய விண்டுவில் ஏகலும்
வள்ளல் வாசவன் வேண்ட வேதியன்
வடிவு கொண்(டு)அவண் வந்தனன். 100

எங்கள் நாயகன் எங்கண் ஏகுதி
என்று கூற அரன்றனே(டு)
இங்(கு)அ மர்செய மேவி னேன்என
ஈண்டு நின்வலி காண்டும் என்(று)
அங்கண் மண்ணிலொ ராழி தாளின்
அமைத்(து)எ டுக்குதி என்னவே
மங்கு தன்கிர மீ(து)எடுப்ப
உடல்கி ழிந்து மடிந்தனன். 101

வீறும் இன்னது நிற்க மாயன்
விளிந்து யாவும் அழிந்தபோ(து)
ஊறி லாமல் இருக்க நச்சி
உரந்த ருந்தரு மத்(து)இறை

---

100. விண்ணுளாரவர் - தேவர். மொய்ம்பு - வலிமை. விண்டு வில் - மலையில். தள்ளல் - சிவபிரான். வாசவன் - இந்திரன். வேதியன் வடிவு கொண்டு-ஓர் அந்தணனப்போன்ற வடிவத்தை எடுத்துக்கொண்டு, அவண் - அவ்விடம்.

101. எங்கண் ஏகுதி - எங்கே போகிறாய். கூற - சிவபிரான் சொல்ல. சிவபிரானோடு போரிட வந்தேன் என்று சலந்தரன் சொன்னான் என்க. காண்டும் - பார்ப்போம். நிலத்தின்மேல் காலால் ஒரு சக்கரத்தைக் கீறி அதை எடுப்பாயாக என்று பிராமண வடிவங்கொண்ட சிவபிரான் சொல்ல, அதை அவன் எடுக்க, அவன் உடம்பை அஃது அறுக்கவே அவன் இறந்தான் என்க. இதனால் சிவபிரான் சலந்தராரி எனப்பெயர் பெற்றார்.

சலந்திரன் இறந்தபிறகு அவன் மனைவியாகிய விருந்தையுடன் திருமால் வஞ்சனையாகப் பலகாலம் கூடியிருந்து பின்பு, சாபம் பெற்ற வரலாற்றைக் கந்தபுராணத்தில் விரிவாய்க் காண்க.

102. ஊறு - துன்பம். நச்சி - விரும்பி. தருமத்து இறை - தரும தேவதை. ஏறதாம் உரு எய்தி - இடப ரூபம் கொண்டு. தருமதேவதை

ஏற தாம்உரு எய்தி நாதன்முன்
ஏகி வந்தனை செய்துசீர்
கூறி இங்(கு)எனை ஊர்தி கொண்டருள்
என்ன அப்படி கொண்டனன். 102

உற்ற இன்னது நிற்க ஒற்கமில்
உந்து பாலுறு வேலையில்
வற்றி டாவழு தம்பெ றும்படி
மந்த ரந்தனை மத்(து)எனக்
கொற்ற வெம்பணி நாண்ள னும்படி
கொண்டு மால்முதல் அண்டரும்
துற்ற தானவ ருங்க டைந்தனர்
தொன்மை வைகலின் வன்மையால் 103

நாக வாயினும் ஆழி வாயினும்
நஞ்(சு)எ ழுந்து தொடர்ந்திட
மேகமேனிய னுதி யாகிய
விண்ணு ளார்கள் வெரீ இயிரிந்(து)
ஏக நாயகன் வாழ்பெ ருங்கயி
லாய விண்டுவில் ஏகியே
சோக மோ(டு)அர னைப்ப ணிந்(து)உறு
துக்கம் நக்கனெ(டு) ஓதினர். 104

அந்த வேலையில் விண்ணு ளார்களும்
ஆரும் உய்ய இரங்கியே
உந்து மேவல்செய் சுந்த ரன்றனை
ஒல்லை சென்று விடங்கொடே

இடபமாக அதனைச் சிவபிரான் வாகனமாக ஏற்று அருளினர். ஊர்தி-வாகன மாக. அப்படி - அவ்வாறே வாகனமாக.

103. ஒற்கம் இல் - தளர்ச்சியில்லாத. பாலுறு வேலையில் - பாற் கடலில். மந்தரமலையை மத்தாகவும் வாசுகியாகிய பாம்பைக் கயிறுகவும் கொண்டு தேவரும் அசுரரும் பாற்கடலைக் கடைந்தனர் என்க. நாண் - கடைகயிறு. அண்டர் - தேவர். துற்ற - நெருங்கிய. தானதரும் - அசுர ரும். தொன்மை வைகலின் - ஆதிகாலத்தில்.

104. நாகவாயினும் - வாசுகியென்னும் பாம்பின் வாயிலிருந்தும். ஆழிவாயினும் - பாற்கடலிலிருந்தும். மேகமேனியன் - திருமால். வெரீஇ - அஞ்சி. இரிந்து - கெட்டு ஓடி. ஏகநாயகன் - சிவபிரான். விண்டு - மலை. நக்கனெடு - சிவபிரானோடு. இரிந்து ஏகியே ஓதினர் என்க.

வந்தி(டு) என்ன நடந்து கைக்கொடு
வந்(து)அ ரன்கையில் உய்ப்பஅங்(கு)
எந்தை யுண்டனன் உண்டி லான்எனின்
யாவர் பின்னர் இருப்பவர்? 105

முக்கண் நாயகன் மிகுமு யிர்தொகை
அகிலம் யாவும் முடித்தபோ(து)
அக்க ணந்தனில் ஈம மாயிடும்
அன்ன தாகிய ஈமமேல்
மைக்க ருங்கண் மடந்தை பங்குள
வள்ளல் ஆடும்; இ தன்றியும்
தக்க கங்கையை ஓங்கு மாமுடி
தாங்கு கின்றது சாற்றுவாம். 106

முன்னர் ஓர்பகல் அம்மை நம்பன்
முரண்த ரும்விழி பொத்தலும்
அன்ன காலையில் எங்கும் முச்சுடர்
அற்று வீ(று)இருள் ஆகவே
மின்னு நெற்றியில் உற்ற கண்ணை
விழிப்ப எங்கும் விளங்கியே
தொன்மை போலுற அஞ்சி வஞ்சி
துணைக்க ரத்தை விடுத்தனள். 107

அம்மை தன்கர அங்கு லிப்புடை
அங்கு வேர்வை எழுந்துபின்
செம்மை கொண்டிடு பத்த(து)ஆன
திருந்து கங்கைகள் ஆகியே

---

105. உய்ய - உயிர் பிழைக்க. சுந்தரன் - சுந்தரமூர்த்தி. இவர் சிவபிரான் கட்டளைப்படி விஷம் கொண்டுவந்து சிவபெருமானிடம் கொடுத்ததால், ஆலால சுந்தரர் எனப் பெயர்பெற்றார் என நூல் கூறும். உய்ப்ப - கொடுக்க. எந்தை - சிவன்.

106. அகிலம் யாவும் முடித்தபோது - சர்வலோகங்களையும் சங்காரம் செய்த காலத்தில். ஈமம் ஆயிடும் - எல்லா உலகங்களும் மயானமாகிவிடும். மடந்தை - உமாதேவியார். வள்ளல் - சிவபெருமான். ஆடும் - நடனமாடுவர்.

107. முரண் தரும் - ஒன்றுக்கு ஒன்று மாறுபடும். முச்சுடர் அற்று - சூரிய சந்திர அக்கினிகள் ஒளிதருதலை நீங்கி. அஞ்சி வஞ்சி - உமாதேவியார் பயந்து. துணைக்கரம் - இரண்டு கைகள்.

வெம்மை யோடுல கங்கள் கொண்டிட
மேவ மால்முதல் விண்ணுளோர்
எம்மை யாளுடை அண்ணல் வாழ்கயி
லாய வண்குவ(டு) எய்தினர். 108

கண்ணு தற்பர மற்ப ணிந்(து)உல
கங்கள் கொண்டிடு கங்கையை
அண்ண லேயிவண் நீஅ ணிந்(து)எமை
ஆள்தி என்று வழுத்தலும்
விண்ணு லாவிய கங்கை தன்னை
விளித்(து)ஒ ளித்திரு வேணியில்
தண்ணி லாஒரு ரோம மீது
தரித்த னன்தனை நேர்இலான். 109

இன்ன(து) அல்லது தொல்லை நாளில்
இலங்கு பங்கய வாழ்வினன்
மன்னு கின்ற படைத்தி டுந்தொழில்
மாறி வீறிய மாயவன்
முன்னர் ஏகி மொழிந்த போ(து)அவன்
மூண்ட கத்திறை தன்னொடு
மின்னி ருங்கயி லாயம் உற்(று)அர
னைப்ப ணிந்து விளம்புவான். 110

ஆதி!நின்னரு ளால்வி தித்தும்
அயன் தொழில்சிதை வாய(து);ஆல்
ஈதி என்றிட மால்அ யன்றனை
எங்கள் நாயகன் நோக்கிஅப்

---

108. கர அங்குலிப்புடை - கைவிரல்களில். பத்து விரல்களிலும் உண்டான வேர்வை பத்துக் கங்கைகள் ஆயின என்க. குவடு - மலை.

109. அணிந்து - தரித்து. ஒளி திருவேணியில் - ஒளியையுடைய திருமுடியில். தண் மீலா ஒரு ரோமமீது - குளிர்ச்சியையுடைய ஒரு மயிரில்: ஒரு சடையில் என்றும் கூறுவதுண்டு. தனை நேர் இலான் - தமக்கு ஒப்பார் ஒருவரும் இல்லாதவர்.

110. தொல்லை நாளில் - முன்னாளில். பங்கய வாழ்வினன் - பிரமதேவன். மூண்டகத்து இறை - பிரமன்.

111. அயன் - பிரமனது. சிதைவாயது - கெட்டது. ஈதி - அதைச் செவ்வனே தருவாயாக. மாலியும் அயனையும். நீறது கண்டு - எரித்து

போது நீறது கண்(டு)இ டங்கொள்
புயந்த ரித்தனன் ; அவ்விடை
மாது தோன்றினள் பின்(பு)எ ழுப்பி
வரங்கொ டுத்து விடுத்தனன். 111

சொற்ற இன்னது நிற்க முற்பகல்
தோன்மூ கம்பெறு தானவன்
நற்ற வம்பல நாள்பு ரிந்(து)அரன்
நல்(கு)உ யர்ந்த வரத்தினுல்
உற்ற சீர்இமை யோர்கள் வந்துதல்
ஏவல் செய்ய உறைந்தனன் ;
மற்றும் ஓர்பணி இந்தி ராதியர்
வந்து செய்திட ஓதினுன். 112

இங்கு நம்முன் அடைந்து நுங்கள்
இருஞ்சி ரங்களின் மும்முறை
செங்க ரங்கொடு தாக்கி யேயிரு
செவிக ளூடு செழுங்கரம்
தங்க நின்று நிலத்தில் அன்பொடு
தாழ்ந்(து)எ ழுந்திடும் என்றிடப்
பங்க முற்றிடும் அன்ன புன்றொழில்
பற்ப கல்புரிந் தாரரோ. 113

புரிந்(து)அ யர்ந்(து)அயன் மாலினே(டு)இது
புகல வானவ ரைக்கொடே
திருந்தி டுங்கயி லாய மேவிய
சிற்ப ரன்றனை நண்ணியே

சீருக்கி. இடம் கொள் புயம் தரித்தனன் - இடது தோளில் அணிந்து கொண்டார். அவ்விடை - அந்த இடப்பாகத்தில். மாது - ஒரு சத்தி. தோன்றினள் - உண்டானுள். எழுப்பி - எரித்த திருமால் முதலியவர்களை மீட்டும் உயிர்ப்பித்து.

112. தோல் முகம் பெறு தானவன் - யானை முகத்தைப் பெற்ற அசுரன்; கஜமுகாசுரன். இவன் மாகத முனிவருக்கும் விபுதை என்னும் அசுரகுலப் பெண்ணுக்கும் பிறந்தவன் என்க. மற்றும் ஓர் பணி - வேறு ஒரு குற்றேவல்.

113. உங்கள் தலைகளில் மூன்று தடவை குட்டிக்கொண்டு இரண்டு காதுகளையும் கையால் பிடித்துக்கொண்டு வணங்கவேண்டும் என்றுன். பங்கம் - அவமானம். புன்தொழில் - அற்பத்தொழில்.

பரிந்(து)இ றைஞ்சினர் உம்பர் இன்னல்
பகர்ந்த போ(து)ஒரு பாலகீ
விரைந்த ளித்(து)அவு ணன்ற கீக்கொல
விடுவம் என்று விளம்பினன். 114

என்ற பின்(பு)அரன் மாதி ணேடும்
இலங்கு சோலையுள் மேவவே
குன்று மூத பெரும்பு கழ்பெறு
குடிலை தான்இரு தந்தியாய்
அன்று நற்கல வித்தொ ழில்செய
ஐங்க ரத்தன் உதித்துநீள்
வன்றி றல்பர ணேடு மாதை
வணங்க மார்பில் அணைத்தனர். 115

அந்த வேலையில் ஆதி நோக்கி
அருந்தி றல்பெறு தோல்முகன்
சிந்த வேபொரு(து) உம்பர் தந்துயர்
தீர்த்தி என்றருள் செய்திடத்
தந்தி மாமுக ணேடு வெய்ய
சமர்ப்பு ரிந்(து)அவ கீக்கொலா
வந்த னன்கயி லாய வெற்பினில்
வாணு ளார்கள் வணங்கினர். 116

சீறு தோல்முகன் மாள வேயமர்
செய்த நிற்(கு)அடி யேங்கள்கைம்
மாறு செய்வதென் என்று தாம்அவன்
முன்பு நிந்திடு வன்பணி

---

114. அயர்ந்து-தளர்ச்சியை அடைந்து. அயன் - பிரமன். பரிந்து - அன்பு செய்து. இன்னல்-துன்பங்களை. பகர்ந்தபோது-(பிரம விஷ்ணுக்கள்) கூறியபோது. ஒரு புத்திரனை அளித்துக் கஜமுகாசுரனை அழிக்கச் செய்வோம் என்று சிவபிரான் திருவாய் மொழிந்தருளினர் என்க. அவுணன் - கஜமுகாசுரன்.

115. குன்றுமூத-அழிவுபடாத. குடிலைதான்-பிரணவம். இரு தந்தியாய் - இரண்டு யானைகளாக. ஐங்கரத்தன் - விநாயகர்.

116. ஆதி - சிவபிரான், தோல் முகன் சிந்தவே பொருது - கஜமுகாசுரன் அழியும்படி அவனோடு போர் செய்து. தீர்த்தி - போக்குவாயாக. கொலா - கொன்று. ஐங்கரன் - தன் கொம்புகளில் ஒன்றை ஒடித்து அதனால் கயமுகனை அழித்தார் என்பதாம்.

ஈறில் ஐங்கரன் முன்பு ரிந்(து)அவன்
ஏவ வானகர் ஏகினர்
ஊறி லாத பரன்கண் ஓர்குணம்
உற்ற தன்மை உணர்த்துவாம். 117

மரும லிந்திடு பங்க யத்தனே
மாய வன்றனே நல்கியே
திரும லிந்திடு சாத்தி கத்தொடு
சீர்இ ராசத மாகிய
இருமை கொண்ட குணங்கொ டுத்தபின்
ஈத லோடு புரத்தலும்
தருவன் யாவும் அழித்தி டுஞ்செயல்
தன்ன(து) என்று தரிக்குமே. 118

ஏத மற்றிடு தான லா(து)அவ
ராலும் மற்ற(து) இயற்றெணு(து)
ஆத லால்அது செய்வன் அன்னதில்
அன்ன வன்புடை தாமதம்
ஓது வார்அல(து) அங்(கு)அ வன்கண்
உறைந்தி டுங்குண மன்றரோ ;
வேத மானவை சிற்கு ணத்தினன்
விமலன் என்று விளம்புமால். 119

என்று பற்பல வாச கங்கள்
இருந்த தீசி இயம்பலும்
வென்றி நான்மறை நான்மு கன்தரு
வெய்ய தக்கன் வினவியே

---

117. தோல் முகன் - கஜமுகாசுரன். கைம்மாறு - பிரதி உபகாரம். தாம் - தேவர்கள். அவன்முன் புரிந்திடு வன்பணி - அந்த அசுரன் முன்பு செய்துவந்த பணியாகிய, குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போடுதல். புரிந்து அவன் ஏவ என்க. பரன்கண் - சிவபிரானிடம். ஓர் குணம் - தாமத குணம்.

118. மரு - நறுமணம். சாத்திகம் - சாத்துவிகம். பிரமதேவனையும் திருமாலையும் உற்பத்தி செய்து அவர்களுக்குச் சாத்துவிகமும் இராசதமு மாகிய குணங்களைக் கொடுத்துப் படைத்தல் காத்தல் என்னும் தொழில்களைத் தந்தார் என்க.

119. தான லாது–சிவபிரானையல்லாமல். மற்று அது இயற்ற லெணு என்க தாமதம் ஓதுவார்-தாமத குணம் உண்டென்று சொல்வர். அது அவனிடம்

பொன்று காலம் அடுத்த லால்அவை
புந்தி என்று நினைந்திலன்
குன்ற வில்லி பதத்தில் அன்புறு
கோதி லானெ(டு)இ(து)ஒதுவான். 120

பெண்ணி னுக்(கு)உரு நல்கும் உங்கள்
பிரான்எ வர்க்கும் உயர்ந்தசீர்
அண்ண லாயினும் ஆக ; இங்(கு)அவி
அன்ன வற்(கு)உத வேனியான் ;
எண்ணி யாதும் இயம்பு ரு(து)இனி
ஏகு வாய்என ஓதலும்
துண்ணெ னச்சினம் உற்றெ ழுந்(து)இது
சொல்லு வான்வினை வெல்லுவான். 121

இந்து லாவும் நெடுஞ்ச டாடவி
எம்பி ரானை விலக்கிஇங்(கு)
உந்து சீரொ(டு) இயற்றும் இம்மகம்
ஒல்லை யின்அழி வாகுக ;
புந்தி அற்றிடும் உன்ற னைநெ டு
பொருந்தும் உம்பரும் இவ்விடை
அந்த மேவுக என்று பின்னிஃ(து)
அந்த ணர்க்கும் உரைத்தனன். 122

வீறு தங்கிய நுங்கு லத்தின்
இயற்கை தன்னை விடுத்துநீர்
ஆறு தங்கிய சென்னி யாரையும்
அன்ன வற்(கு)அடி யாரையும்

நிலையாக உள்ள குணமன்று. சிற்குணத்தினன் - ஞானமாகிய குணத்தையுடையவன். விமலன் - மலமற்றவன்.

120. இரும் தபோதி - தவத்தினாற் பெரிய தபோதி முனிவர். பொன்று காலம் அடுத்தவரால் - அழியுங் காலம் வந்தமையால். அவை - தபோதி கூறிய வற்றை. புந்தி என்று - அறிவுரை என்று. குன்ற வில்லி - சிவபிரான்.

121. உரு நல்கும் - தம் உடம்பின் ஒரு பகுதியைக் கொடுக்கும். இங்கு அன்னவற்கு யான் அவி உதவேன் என்க. துண்ணென - விரைவில். வினை வெல்லுவான் - தபோதி முனிவர்.

122. இந்து - சந்திரன். சடாடவி - காடு போன்ற சடை. மகம் - யாகம். ஒல்லையின் - விரைவில். அந்தம் மேவுக - முடிவை அடைவார்களாக. அந்தணர்க்கும் - இங்கு யாகம் செய்யவந்த பிராமணர்க்கும்.

நீறு கண்டிகை மாலை தம்மையும்[1]
நீங்கி வெந்துயர் தாங்கியே
பேறு தங்கிய வீ(டு)உ ருது
பிறந்(து)இ றந்திடும் என்றனன். 123

இன்னல் கொண்டிட இன்ன சாபம்
எவர்க்கும் அங்கண் இசைத்தபின்
மன்னு நன்னெறி மாத வத்தர்
மருங்(கு)இ ரண்டு நெருங்கவே
தன்னி ருக்கையில் ஏகி ஞன்;உயர்
சங்கு தங்கு கரத்தினை
முன்னர் வெந்தது கண்ட வன்பிறை
மூடிய வன்தன(து) அடியவன். 124

(தரவு கொச்சகக்கலிப்பா)

மாசில் பெரும்புகழ்சேர் மாமுனிவன் போனதற்பின்
ஆசில் அயினிஅளித்(து) ஆடகமும் ஆடைகளும்
நேசம் உறைய நிறைய மறையோர்பால்
வீசி விதிபுதல்வன் வேள்வி புரிந்தனனே. 125

அவ்வாறு கண்டான் அகல்வான் தனில்திரியும்
செவ்வார் சடிலத் திருநா ரதமுனிவன்
மைவாழ் பெருங்குவட்டு வண்மைக் கயிலையிற்போய்ப்
பைவாழுந் துத்திப் பணியான் பதம்பணிந்து. 126

நின்றுன் ; பரன்பாரா நிள்புவியில் ஏதுநிகழ்(வு)
என்றுன் எனலும் இறைவ!அமரரொடு

---

123. ஆறு தங்கிய சென்னியானையும் – கங்காதரராகிய சிவபிரானையும். நீற்றையும் கண்டிகை மாலையையும் ; கண்டிகை - உருத்திராட்சம். வீடு உறுது - முத்தியை அடையாமல்.

124. அங்கண் - அங்கே. நல் நெறி மாதவத்தர் - நல்ல நெறியில் ஒழுகும் முனிவர்கள். சங்கு தங்கு கரத்தினை - திருமாலை. வெந் அது கண்டவன் - புறங்காட்டி ஓடச்செய்த தக்கிசி முனிவர்.

125. அயினி - உணவு. ஆடகம் - பொன். வீசி - அளித்து. விதி புதல்வன் - தக்கன்.

126. செ வார் சடிலம் - சிவந்த நீண்ட சடை குவட்டு வண்மைக்கயிலையில் - மலையாகிய வளம் மிக்க கைலாசத்திற்கு. பை - படம். துத்தி - படப்பொறி. பணியான் - சர்ப்பாபரணரர்கிய சிவபிரான்.

மென்ரு மரைமேல் விதிபுதல்வன் வேள்விபுரி
கின்ரு ரன எழுந்தாள் கெண்டையங்கட் காரிகையே. 127

எழுந்தாள் பரமன் எழிற்கமலத் தாள்முன்
விழுந்தாள் மகந்தெரிந்து மீள்வன்[1] எனு மாற்றம்
அழுந்(து)ஆ தரவால் அவள்புகலப் பின்னர்ச்
செழுந்தா தகிச்சடிலத் தேவன் விடைகொடுத்தான். 128

பொன்ருங்கு[2] மானம் புகுந்தாள் புகழ்மாதர்
துன்ரு அயலே சுலவத்தன் தாதையிடைச்
சென்ருள் அணையான் தெரிந்(து) இகழ்ந்து போதிகடி(து)
என்ரு ன் ; பலநிந்தை ஈசனையும் பேசினனே. 129

நக்கன் தனைப்பழிக்க நாரி அதுகேளா
மிக்க சினம்படைத்து வெள்ளிப் பொருப்படைந்து
முக்கட் பரன்பாத முன்பணிந்(து) உன் றன்னையெண்ணித்
தக்கனது வேள்வி தனைஅழிக்க வேண்டும்என. 130

அம்மை பணிந்(து) இரப்ப அன்ன செயல் முடிப்பான்
எம்மை இனி தாளும் இறையோன் நினைத்திடலும்
செம்மை நுதல்விழியில் சென்னிகள்ஓர் ஆயிரத்தோ(டு)
இம்மெனவே வந்தான் எழில்வீர பத்திரனே. 131

---

127. ஏது நிகழ்வு - என்ன நடப்பது. இறைவ - இறைவனே : விளி. விதி புதல்வன் - தக்கன். கெண்டை அம் கண் காரிகை - உமாதேவியார்.

128. மகம் தெரிந்து - யாகத்தைப் பார்த்துவிட்டு. தாதகிச் சடிலத் தேவன் - ஆத்தி மாலையை அணிந்த சடையையுடைய சிவபிரான். (தாதகி - ஆத்தி மலர்.)

129. பொன் தாங்கு மானம் - பொன்னாலாகிய விமானம். சுலவ - சூழ. தன் தாதையிடை - தன் தந்தையாகிய தக்கனிடத்தில். போதி கடிது - விரைவில் இவ்விடத்தை விட்டுப் போவாயாக. நிந்தை - நிந்திப்பு.

130. நக்கன் - திகம்பரராகிய சிவபிரான். நாரி - உமாதேவியார். வெள்ளிப் பொருப்பு - கைலாசமலை. இங்கு உமாதேவியார் கயிலாசத்திற்குத் திரும்புமுன் தக்கனை நோக்கிக் கூறிய மொழிகளைக் கந்தபுராணம் - உமை வருபடலம் 48 முதல் 58 வரை காண்க.

131. முடிப்பான் - நிறைவேற்றும் பொருட்டு. இம்மெனவே - விரைவில். சிவபிரான் நெற்றிக் கண்ணிலிருந்து ஆயிரம் சிரமுள்ள வீரபத்திரர் தோன்றினர் என்க.

பா-ம்—1. மீள்வேன். 2. பொன் தங்கு.

அப்போது தன்னில்லை(து) அன்னை பெருஞ்சினத்தால்
கைப்போ(து)இ ராயிரமும் காமர்முகம் ஆயிரமும்
துப்போ(டு) இலங்கத் துலங்குவிறல் காளிஉதித்(து)
ஒப்போரில் வீரன்பால் தேவியர்ய் உற்றனளே. 132

அன்ன பொழு(து)அரனை அன்னநடை அம்பிகையைப்
பன்னருஞ்சீர் வீரன் பணிந்தே பணிஅடியேற்(கு)
என்னை என லும் எமையெண்ணுத் தக்கன்மகம்
தன்னை மருவிஅவி தந்திடெனச் சாற்றுதியால். 133

தந்தால் இவண்வருதி; தாரானேல் அக்கொடியோன்
சிந்தா குலஞ்சேரச் சென்னிதடிந்(து) ஆங்கிருந்தோர்
உந்தாவி கொண்டுமகம் ஒல்லை அழித்திடுதி;
மைந்தா! யாமும் வருகின்றும் என்றனனே. 134

என்ன விடைகொண்(டு) எழில்மேவு காளியொடும்
தன்னுருவில் வந்துதித்த சாரதர்கள் சேனையொடும்
மன்னுபுகழ்த் தக்கன் மகச்சாலை வந்(து)அணுகிப்
பொன்னிலகு செஞ்சடிலப் பூதர்க்(கு) இதுபுகல்வான். 135

ஆலமிடற்(று) எம்மானை அன்றிமகஞ் செய்யும்இந்தச்
சாலையில் வாசல் தனைக்காவல் கொண்மின்எனச்

---

132. உமாதேவியாருடைய கோபத்தீயிலிருந்து ஈராயிரம் கைகளும், ஆயிரம் திருமுகங்களும் உடைய காளி தோன்றி வீரபத்திரருக்குத் தேவியாகச் சேர்ந்தாள் என்க. துப்பு - வலிமை. வீரன் - வீரபத்திரர்.

133. அன்ன நடை - அன்னத்தைப் போன்ற நடையையுடைய. அரனையும் அம்பிகையையும். வீரன் – வீரபத்திரர். பணி - ஏவல். என்னை - ஏது. அலி தந்திடு என - நமக்கு உரிய அவிர்ப்பாகத்தைத் தருவாயாக என்று. சாற்றுதி – சொல்வாயாக.

134. தந்தால் இவண் வருதி - தக்கன் அவிர்ப்பாகத்தைக் கொடுத்தால் அதைப் பெற்றுக்கொண்டு இங்கே வா. சிந்தாகுலம் சேர - மனத்துயரம் அடையும்படி. சென்னி தடிந்து - தலையைக் கொய்து. ஆங்கு இருந்தோருடைய ஆவியைக் கொண்டு மகத்தை அழித்திடுதி என்க. மைந்தா : விளி.

135. சாரதர்கள் - பூதப்படையினர். பொன் இலகு - பொன் போல விளங்குகின்ற. மகச்சாலை - யாகசாலை. செஞ்சடிலம் - சிவந்த சடையையுடைய.

136. ஆலமிடற்று எம்மானை அன்றி - நீலகண்டப்பெருமானாகிய சிவபிரானை விரோதித்து; அவனை அல்லாமல் எனலுமாம். எயில் வாசல்தனை -

சிலமிகும் பூதர் சிலவர் சுலவளழில்
வேலனகட் காளியொடு வேள்விக் களம்புகுந்தான். 136

தண்டா மரையான் தனயன் மகம்புரிதல்
கண்டான் ; வெகுண்டான் உருமே(று) எனக்கலித்தான்
வண்டார் நெடுந்தார் வயக்கொம் பினைக்குறித்(து)ஆங்(கு)
அண்டார் வெருவ அடலோடு நின்றனனே. 137

ஈடுசேர் வீரன் இசைத்த இசைகேளா
வாடினர் ; சிந்தை வருந்தினர் ; வல்லியெழுந்(து)
ஓடினர் ; மீண்டார் ; உலைந்தார் உறுதுயரம்
கூடினர் ; விண்ணோர் கொடியோன் இதுதெரிந்தான். 138

வீரன் றனைநோக்கி வேதன் தருங்கொடியோன்
ஆரை ? இவண்நீ அடைந்ததெவன் என்றிடலும்
காரிலகு கண்டக் கடவுள்விட வந்தடைந்தேன்
நேரில் அவன்அவிநீ நேர்வாய் எனஉரைத்தான். 139

காவி நயனக் கலசமுலைக் காளியெனும்
தேவியொடு நின்ற திறலாளன் ஈ(து)இசைப்பக்
கோவின் மிசையேறுங் கோவை இகழ்ந்துமொழிந்(து)
ஆவி கொடுப்பான் அவிகொடேன் என்றனனே. 140

தன்னை மதித்தகொடுந் தக்கன்இது சாற்றுதலும்
மன்னு திறல்வீரன் வானோர் தமைநோக்கி

மதில் வாசலை. சிலவர் சுலவ - சிலபேர் காவலாகச் சூழ. வேல் அன்ன கண் - வேலை ஒத்த கண்களையுடைய. வேள்விக் களம் - யாகசாலை.

137. தண் தாமரையான் - பிரமன் ; அவன் தனயன், தக்கன். உரும் ஏறு என கலித்தான் - இடியைப்போலக் கர்ச்சித்தான். வண்டு ஆர்-வண்டுகள் மொய்க்கின்ற. வயக்கொம்பினைக் குறித்து - வெற்றியைக் குறிக்கும் ஊதுகொம்பை முழக்கி. அண்டார் - பகைவர். வெருவ - அஞ்ச.

138. வீரன் - வீரபத்திரர். உலைந்தார் - தளர்ச்சி அடைந்தார். விண்ணோர் : எழுவாய். விண்ணோர் கேளா என்க. கொடியோன்-தக்கன்.

139. வேதன் தரும் கொடியோன் - தக்கன். ஆரை - நீ யார். எவன்-என்ன காரணம். காரிலகு கண்டக் கடவுள் - நீலகண்டப் பெருமான். அவன் அவி - அவருக்குரிய அவிர்ப்பாகத்தை. நேர்வாய் - அளிப்பாயாக.

140. காவி நயனம் - நீலோற்பல மலரைப் போன்ற கண்கள். திறலாளன் - வீரபத்திரன். கோவின் மிசை ஏறும் கோவை - இடப வாகனத்தின் மேல் எழுந்தருளும் சிவபிரானை. ஆவி கொடுப்பான் - உயிரைக் கொடுக்க நின்ற தக்கன்.

இன்ன(து) உமக்கும் இசைவோ எனஇயம்பப்
உன்னிஒன்றும் ஓதாமல் ஊமர்போல் உற்றனரே. 141

(வஞ்சி விருத்தம்)

இவ்வாறு வானவர் இருப்பச்
செவ்வாய் திறந்துநகை செய்தே
மைவாழ் களத்தன்அருள் மைந்தன்
அவ்வாய் இயற்றும்இவை அம்மா. 142

தண்டா வீறல்குலவு தண்டால்
வண்டார் நறுந்துளவ மாலைப்
புண்டா னுறும்படி புடைப்ப
விண்டான் எனப்படி விழுந்தான். 143

மட்டுறு விரைக்கமல மன்முன்
கிட்டிநளி னத்(து)எழில் கெடுத்துக்
கட்டழகு தங்கிய கரத்தால்
குட்டினன் முடித்திரள் குலுங்க. 144

(கலி விருத்தம்)

விழுந்தான் வேதனும் வெண்மை மாமதி
எழுந்தான் ஓடலும் ஈசன் மாமகன்
செழுந்தாள் கொண்(டு)உடல் தேயு மாறுசெய்(து)
ஒழிந்தார் தம்மையும் ஊ(று)இ யற்றினன். 145

அறந்தான் ஓவிய அண்டர் யாவரும்
இறந்தா ராயும் இலங்(கு) உணர்ச்சிகள்

---

141. தன்னே மதித்த - தன்னையே பேராற்றல் உடையவனாக மதித்த. இன்னது உமக்கும் இசைவோ - இவன் சொல்வது உங்களுக்கும் சம்மதமோ. ஊமர்போல் - ஊமைகளைப்போல.

142. மை வாழ் களத்தன் - நீலகண்டப்பெருமான். மைந்தன் - வீரபத்திரர். அவ்வாய் - அவ்விடத்தில்.

143. வீறல் - பலம். தண்டால் - கதாயுதத்தால். வண்டு ஆர் - துளவத்தை அணிந்த திருமால். விண்டான் என - இறந்துபட்டான் என்று சொல்லும்படியாக. படி - பூமியின்மேல்.

144. மட்டு - தேன். கமல மன் - பிரமன். கிட்டி - சென்று. நளினத்து எழில் - தாமரையின் அழகை.

145. மதி - சந்திரன். அவனைக் காலால் தேய்த்தார். ஒழிந்தார் தம்மையும் - மற்றவர்களையும். ஊறு இயற்றினன் - பங்கம் செய்தார்.

மறந்தா ராயும் மகக்க ளத்தின்வாய்
உறைந்தார் ஆடல் உகந்த வீரனுல். 146

கண்டான் ஈது கலங்கி வெந்துயர்
கொண்டான் நெஞ்சு குலைந்து மொய்ம்பினில்
தண்டார் கொண்டுள தக்கன் நிற்றலும்
அண்டார் கூற்(று)இஃ(து) ஆற்று வானரோ. 147

செறுத்(து) ஆன்ஏறிய தேவை எள்ளிய
மறுத்தான் நெஞ்சுடை வஞ்சன் மாமுடி
அறுத்தான் அங்கி அருந்த நல்கினன்;
வெறித்தார் மொய்ம்புள வீர வீரனே. 148

மாலே தங்கிய வஞ்சன் மாய்தலும்
வேலே அன்னகண் வேத வல்லிதன்
பாலே மாதர் பரம்பி வந்திடக்
காலே போன்று கடிதின் மேவினுள். 149

துன்பங் கொண்டு துளங்கி வந்துளாள்
முன்(பு)அங்(கு) எய்தி முரண்கொள் காளிதன்
அன்பன் நேர அணங்கின் வார்குழை
மின்கொள் கேள்வி அறுப்ப வீழ்ந்ததே. 150

பிடித்தாள் மற்றுள பேதை மாதரைக்
கடித்தார் கொண்ட கவின்கு ழல்தலை

---

146. அறந்தான் ஓவிய - தர்ம மார்க்கத்தை விட்டு நீங்கின. அண்டர் - தேவர். மகக்களத்தின் வாய் - யாகசாலையில், ஆடல் உகந்த - போரை மேற்கொண்ட. வீரனுல் - வீரபத்திரரால்.

147. மொய்ம்பினில் - தோளில். அண்டார் கூற்று - பகைவர்களுக்கு யமனைப் போன்ற வீரபத்திரர்.

148. ஆன் ஏறிய தேவை செறுத்து - இடபவாகனராகிய சிவபிரானைப் பகைத்து. மறு தாம் நெஞ்சுடை வஞ்சன் - குற்றம் பரவிய நெஞ்சையுடைய பாவியாகிய தக்கன். முடி அறுத்தான் - தலையை வெட்டி. அங்கி அருந்த - அங்கே இருந்த ஹோமாக்கினி உண்ணும்படியாக. வெறி தார் - மணமிக்க மாலையை அணிந்த. மொய்ம்பு - தோள்.

149. மால் - மயக்கம். வஞ்சன் - இங்குத் தக்கன். வேதவல்லி - தக்கனுடைய மனைவி. பரம்பி - பரந்து. காலே போன்று - காற்றைப்போல.

150. முரண் - வலிமை. தன் அன்பன் நேர - தன் கணவராகிய வீரபத்திரரைப்போல. அணங்கின் - வேதவல்லியின். குழை மின்கொள் கேள்வி - குழைமின்னுகின்ற காதை. காளி அறுப்ப என்க.

வடித்தார் வாள்கொடு வல்லி கொய்துபுந்(து)
அடித்தாள் எம்மை அளிக்கும் அண்ணலே. 151

(வேறு)

வீரன் ஏவலின் விரைந்(து)எயில் உடைத்தே
தாரு ணாவுமகச் சாலையை அழித்தே
கோர மோடுபல் கொடுந்தொழில் புரிந்தார்;
போரெ னில்களி பொருந்தியிடு பூதர். 152

முந்து நொந்திடு முகுந்தன்எ னும்மேலோன்
சிந்தை வெந்துயர் தெளிந்திவை தெரிந்தே
உந்து கின்றஉவ ணத்தின்மிசை உற்றே
மைந்து கொண்டகலி மாரிகள் சொரிந்தான். 153

நின்ற பூதரும் நெருப்(பு)எழ விழித்தே
துன்று வாளிகள் சொரிந்(து)அமர் புரிந்தார்;
வென்றி கொண்டபுய வீரன்இது கண்டே
சென்று மாலொடு செருச்செய நினைந்தான். 154

அன்ன போதில்எம(து) அண்ணல்அரு ளால்ஓர்
மின்னு தேர்அணுக வேதன்அதன் மீதே
துன்னு வீரன்எதிர் சூதன்என வந்தே
இன்ன வையமிசை ஏ(று)என இரப்ப. 155

வீறு காளியொடு வீரன்அதன் மீதே
ஏறி நான்முகன் இலங்(கு)இரதம் உய்ப்ப

---

151. கடிதார் - மணமுள்ள மாலை. குழல்தலை - கூந்தலையுடைய தலைகளை. வடித்து ஆர் வாள்கொடு - நன்றாகச் செய்யப்பட்டுள்ள வாளால்; வடி தார் - கூர்மையையும் மாலையையும் உடைய எனலும் ஆம். அண்ணே - காளி.

152. எயில் உடைத்தே - மதிலை இடித்து. மகச்சாலையை - யாகசாலையை, கோரமோடு - கொடுமையோடு. களி - மகிழ்ச்சி.

153. முகுந்தன் - திருமால். உவணத்தின்மிசை - கருட வாகனத்தின் மேல். மைந்து - வலிமை. திருமால் அம்புகளை எய்தார் என்க.

154. வாளிகள் - அம்புகளை. வீரன் - வீரபத்திரர். செருசெய - போர் செய்ய.

155. எமது அண்ணல் - சிவபிரான். வேதன் - பிரமன். சூதன் என - தேர்ப்பாகனாக. வையமிசை - தேரின்மேல். இரப்ப - பிரமன் பணிந்து கூற.

156. இரதம் உய்ப்ப - தேரைச் செலுத்த. மாறு - பகை. முராரி - திருமால்.

மாறு கொண்டுபொரு மாயன்எதிர் வல்லே
சேற லோடும்இவை.செப்புவன் முராரி. 156

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

தன்னிகர் அண்ணலே எள்ளும்
தக்கனே அட்டிடல் அல்லால்
மன்னிய விண்ணவ ரெல்லாம்
மாள இயற்றிய(து) என்னே ?
என்னலும் அக்கொடி யோனே(டு)
எய்துதல் கண்(டு)உயிர் கொண்டோம் ;
உன்னையும் இன்னுயிர் இன்னே
உண்குவம் என்ன உரைத்தான். 157

வண்டு படிந்த நெடுந்தார்
மார்பில் மிடைந்த வனீக்கைக்
கொண்டல் வெகுண்டு கரத்தே
கொண்ட நெடுஞ்சிலே கோட்டித்
திண்டிறல் நாணெலி காட்டித்
தீய சரம்பல பூட்டிப்
புண்டரு வெய்ய படைக்கைப்
பூதர்கண் மீது பொழிந்தான். 158

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

கண்டனன் இருண்ட கண்டன்மகன் உந்து
கார்முக மிசைச்சி லீமுகம் இசைத்து
வண்டுளம் மகிழ்ந்த வண்டுள(வு) அலங்கல்
மாயவன் விடுத்த வாளிகள் முருக்கி

---

157. அண்ணலே - சிவபிரானே. அட்டிடல் அல்லால் - கொல்லுதலே யன்றி. அக்கொடியோனேடு - தக்கனேடு. உன்னையும் என்றது விஷ்ணுவையும்.

158. வனீக்கைக் கொண்டல் - சங்கபாணியாகிய மேக நீறம் பெற்ற திருமால். நெடுஞ்சிலே கோட்டி - நீண்ட வில்லே வனீத்து. சரம் - அம்புகள். புண்தரு - புண் உண்டாகும்படி செய்யத்தக்க.

159. இருண்ட கண்டன் மகன் - வீரபத்திரர். கார்முகம் மிசை சிலீமுகம் இசைத்து - வில்லில் அம்புகளே வைத்து. வண்டு உளம் மகிழ்ந்த வண் துளவு - வண்டுகள் மனமகிழும் வளமுள்ள துளவமாலே. துளவு - துழாய். முருக்கி - அழித்து. விண்டு நுதலின்கண் - விஷ்ணுவின் நெற்றியில். ஓகை

ஒண்டிறல் பொருந்த வீண்டுநு தலிகண்
ஓர்கணை அழுத்த ஓகையில் இடுக்கண்
அண்டினன் அகன்று மொய்ம்பன் எதிர்பின்பும்
ஆசுகம் அளப்பி லாதன உகைப்ப. 159

உத்தமனும் மெத்தும் அத்திரம் உரத்தொ(டு)
உந்திபரி[1] யுந்து முந்துகணை சிந்தி
நத்துறு கரத்தன் நற்றனுவை ஒற்றை
நன்கணை துரந்து நந்திடல் புரிந்து
கொத்தும்உவ ணத்(து)அ டல்சிறகை மிக்க
கொல்கணை இரண்டு கொண்(டு)அரிதல் கண்டு
மைத்திரு நிறத்தன் மற்றிகிரி உய்ப்ப
வந்தது விரைந்து மண்டலம் நடுங்க. 160

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

அங்காழிப் படைவருதல் தெரிந்தான்
அடல்வீரன் கடிதுபிடித்(து) அயின்முன் ;
கொங்காரும் நறுந்துளவ நெடியோன்
கொடுவாள்கொண்(டு) இறையோன்முன் குறுக
உங்காரஞ் செய்தனன்எம் பெருமான்
ஓவியம்போல் மாயவனுங் குறைந்தான் ;
மங்காத பெருஞ்சினம்என் நிணைந்தோ
மருவினுன் நுதல்விழியான் மதலை. 161

இல் இடுக்கண் அண்டினன் - மகிழ்ச்சி நீங்கிய துன்பத்தை அடைந்து. மொய்ம்பன் எதிர் – வீரபத்திரருக்கு எதிரே. ஆசுகம் - அம்புகள். உகைப்ப - எய்ய.

160. மெத்தும் அத்திரம் - மிகுதியான அம்புகளை. உரத்தொடு உந்தி – வேகத்தோடு எய்து. பரி - அயக்கிரீவன் ; திருமால். கணை சிந்தி - அம்புகளை வீழ்த்தி. நத்துறுகரத்தன் - சங்கைக் கரத்திலே கொண்ட திருமால். நல் தனுவை ஒரு கணை எய்து அறுத்து ; நந்திடல் - கெடுத்தல். உவணத்து அடல் சிறகை - கருடனது பலம் பொருந்திய இறகுகளை. சிறகை அரிதல் கண்டு. மைத்திரு நிறத்தன் - மேக வண்ணனாகிய திருமால். மல் திகிரி – வளமுடைய - சக்கராயுதத்தை. மண்டலம் - பூமி.

161. ஆழிப்படை - சக்கராயுதம். அதை விரைவிலே பற்றி விழுங்கினர் என்க. கொங்கு - நறுமணம். நெடியோன் - திருமால். கொடுவாள் கொண்டு - கொடிய வாளாயுதத்தைக் கைக்கொண்டு. இறையோன் முன் - வீரபத்திரருக்கு முன்பு. உங்காரம் செய்தனன் - ஹுங்கார

பா-ம் – 1. உந்தி அரி.

எம்பெருமான் சினந்திடலுஞ் சினவேல்
எனவிசும்பில் வாசகம்ஒன்(று) இசைப்ப
உம்பர்பிரான் தனதுசுத னதுகேட்(டு)
உள்ளெழுவெஞ் சினம்அகன்(று) ஆங்(கு)உறலும்
செம்பதுமத்(து) அணங்குரத்தோன் புகழ்ந்தே
சிதடனேன் புரிந்தபிழை செழுந்தீ
அம்பகநா யகன்புதல்வ! பொறுத்(து)ஈண்(டு)
அளித்திஎன அருள்புரிந்தான் அமலன். 162

அவ்வேலை வேலைவிடம் அருந்தி
அமரர்தம(து) உயிர்காத்த அமலன்
வைவேலை முனிந்தநெடுந் தடங்கண்
மாலைடு வான்மீது வரலும்
செவ்வேணித் திறல்வீரன் தொழுதான்
திருமாலும் அயனும்அமர் செய்யும்
கைவேழ முரித்தபிரான் திருத்தாட்
கமலமலர் எதிர்பணிந்து களித்தார். 163

ஓங்குமகக் களத்தினிடை மடிந்தே
உறுகின்றேர் தமைஎமையாள் உமைகண்(டு)
ஈங்கிவர்கள் எனதுபொருட்(டு) இறந்தார்
இறைவ!பிழை பொறுத்(து)எழுப்(பு)என் றிரப்ப

முழக்கம் செய்தார். ஓவியம்போல் - சித்திரத்தைப் போலச் செயலற்று. குறைந்தான் - மெலிவடைந்தான். என் நீகொன்றோ - எதனையோ எண்ணி. சினத்தை மருவினன் என்க. நுதல்விழியான் மதலை - வீரபத்திரர்.

162. சினவேல் என - நீ கோபம் கொள்ளற்க என்று. விசும்பில் வாசகம் ஒன்று இசைப்ப - ஆகாசத்தில் ஓர் அசரீரி உண்டாக. சுதன் - வீரபத்திரர். செம் பதுமத்து அணங்கு உரத்தோன் - திருமகளைத் திருமார்பிலே கொண்ட திருமால். சிதடனேன். அறிவில்லாத யான். செழுந்தீ அம்பக நாயகன் - அக்கினியை நெற்றி விழியாக உடைய சிவபிரான். அளித்தி என - பாதுகாப்பாயாக என்று திருமால் வேண்ட. அமலன் - வீரபத்திரர்.

163. அவ்வேலை - அப்போது. வேலை விடம் - பாற்கடலில் எழுந்த ஆலகால விடத்தை. அமலன் - சிவபிரான். தடங்கண் மாலைடு - உமாதேவியாரோடு. செவ்வேணித் திறல் வீரன் - சிவந்த சடையையும் பலத்தையும் உடைய வீரபத்திரர். கைவேழம் உரித்த பிரான் - சிவபிரான்.

164. மகக்களத்தினிடை - யாகசாலையில். எழுப்பு - உயிர்ப்பித்தருள்க. சுதனுல் - வீரபத்திரரைக் கொண்டு. எழுந்தென - எழுந்தாலென.

நீங்கருந்திண் திறல்புனைதன் சுதனுல்
நிமலன்எவ ரையும்எழுப்ப நிலமேல்
தூங்கிஎழுந் தெனஎழுந்தார் ; மறையோர்
துகள்தீரும் முனிவரொடு சுரர்கள். 164

உஞ்செழுந்த அமரர்மா விடைமேல்
உயர்வீசும்பில் இறைவனைமா தொடுங்கண்(டு)
அஞ்சிமிக நடுங்குதலும் மதிசூ(டு)
அருளாளன் அஞ்சவிர்என்(று) அருள
நெஞ்சமகிழ்ந்(து) அடிபணிந்தார் புகழ்ந்தார்
நெடுமலரோன் மகற்காணு நிமலன்
கஞ்சமலர்க் கழல்பணிந்(து)என் மகனும்
கயவன்எழுந் திலன்எனவே கழறி. 165

ஐயஅவன் உய்யஅருள் செய்யென்(று)
அயன்இரப்ப உமைபாகன் அருளால்
சையநிகர் புயவீரன் கடிதே
தக்கன்உடல் மீதுமறித் தலையொன்(று)
உய்யவிசைத்(து) எழுதிஎன எழுந்தாங்(கு)
உளநாணி வெருவவிடம் உமிழும்
வெய்யபணிச் சடையாளன் தக்க !
வெருவேல்என்(று) அருள்புரிந்தான் மிகவும். 166

ஆசறுநல் லறி(வு)ஒருவி மையாம்
அறிவுறலால் ஆனனமும் அனைத்தாய்க்
காசினியில் லெழுந்தவன்நம் பெருமான்
கழல்பணிந்து புகழந்திடலுங் கருணை

---

165. உஞ்சு எழுந்த-பிழைத்து எழுந்த. விடைமேல்-இடபவாகனத்தின் மேல். மதி சூடு அருளாளன்-சந்திரசேகரராகிய திருபையையுடைய சிவபிரான். அஞ்சவிர் - நீவிர் அஞ்சுதலை ஒழிக. மகன் காணுன் - தன் மகனுகிய தக்கனைக் காணுதவனுகி. நிமலன் - சிவபிரானது. கயவன் - கீழ்மகன்.

166. அயன் இரப்ப - பிரமன் வேண்ட. வீரபத்திரர் தக்கன் தலையில் ஆட்டுத்தலை ஒன்றைப் பொருத்தி எழுப்பினுர். மறி - ஆடு. வெருவ - அஞ்சி நிற்க. சடையாளன் - சிவபிரான். தக்க - தக்கனே ; விளி. வெருவேல்—நீ பயப்படாதே.

167. நல் அறிவு ஒருவி - நல்ல ஆறிவை நீங்கி. மை ஆம் - அறிவு - அஞ்ஞானம். ஆனனமும் அனைத்தாய் - முகமும் மையாகி ; மை - ஆடு. எழுந்தவன், தக்கன். வீரனெடு - வீரபத்திரரோடு.

நேசமொடு புரிந்தருளி அமர்க்கு
நிகரிலா வீரனெடு நிமலன்
வீசுபுகழ்க் கயிலையடைந்(து) அடல்சேர்
வீரனுக்(கு)ஓர் உலகளித்து விடுத்தான். 167

(கலி விருத்தம்)

மற்றிது நிற்க மகக்களத்தி னூடே
உற்றிடும் உம்பரில் உந்துமலர் வேதன்
பெற்றிடு மைந்தன் முகந்தெரிந்து பேதாய்!
எற்றையி யற்றினை என்(று)இனைய கூறும். 168

ஈசனை எள்ளிய இன்னபிழை தீர
ஆசறும் அன்பொ(டு) அவன்தன்து பொற்றுள்
பூசனை புரிந்து புகழ்ந்திடுதி என்றே
பேசுவன் இவ்வகை பின்னும்மல ரோனே. 169

தேனமர் கொன்றைச் செழுஞ்சடை முடித்த
வானவன் மேன்மை மறந்(து)ஒரு பகற்கண்
நானிறை என்றனன் நாரணன் எவர்க்கும்
தானிறை என்று தருக்குடன் உரைத்தான். 170

வெஞ்சமர் செய்குதும் ; வென்றவர் எவர்க்கும்
தஞ்சம் எனப்படு தாணுவென ஓதிக்
கஞ்ச மடக்கொடி காதலனும் யானும்
நெஞ்சம் முனிந்து நெடுஞ்செரு இழைத்தோம். 171

அந்தரி தங்கிய அங்கன்எமை ஆள்வான்
வந்தெரி யாகியும் மண்ணும் விண்ணும் ஒன்றுய்

---

168. மகக்களத்தினூடே - யாகசாலைக்குள். மைந்தன் - தக்கன். எற்றை - எத்தகைய காரியத்தை. பிரமதேவன் தக்கனை நோக்கிக் கூறுகின்றான் என்க.

169. எள்ளிய - இகழ்ந்துரைத்த. பொற்றுள் - அழகிய திருவடிகளை. மலரோன் - பிரமதேவன்.

170. சடைமுடித்த வானவன் - சிவபெருமானின். நான் இறை என்றனன் - நானே முழுமுதற் கடவுள் என்று நான் கூறினேன். தருக்குடன் - அகந்தையோடு.

171. தஞ்சம் எனப்படு தாணு - புகலென்று சொல்வதற்குரிய கடவுள். கஞ்ச மடக்கொடி காதலனும் - திருமகள் கணவனுகிய திருமாலும். செரு இழைத்தோம் - போர் செய்தோம்.

உந்துபு நின்றிட ஒல்லையது கண்டே
வெந்திறல் ஆடல் விளைப்பது விடுத்தேம். 172

திண்டிறல் இன்ன சிலம்பினடி சென்னி
கண்டவ ரேயுயர் காரணர் எனச்சீர்
கொண்ட பதத்தொடு கோதில்முடி தேடிக்
கண்டிலம் வன்மை கழிந்(து)அகந்தை விட்டேம். 173

சம்புவை அன்பொடு தாழ்ந்தடி பணிந்தேம்
எம்பிழை எண்ணலன் இன்னருள் புரிந்தான் ;
அம்புவி யின்புடை அன்னவனீ நீயும்
நம்பி வணங்குதி நல்கும்அருள் என்றான். 174

இன்ன இசைப்ப இசைந்தடி பணிந்தே
கன்னல் நெருங்கிய காசிநகர் உற்றே
மன்னிய ஆயிரம் வற்சரம் அரன்தாள்
நன்னெறி அர்ச்சனை செய்திடலும் நம்பன். 175

வந்துக ணப்படை மன்னவன் எனுஞ்சீர்
தந்தனன் உம்பர்கள் தத்தமிடை உற்றே
இந்து நெடுஞ்சடை எந்தைபெரு மானைப்
புந்தியில் அன்பொடு பூசனை புரிந்தார். 176

என்றிவை யாவும் இருங்குலிச வேலால்
குன்றின் நெடுஞ்சிறை கொய்தவன் மகற்கு

---

172. அந்தரி தங்கிய அங்கன் - உமாதேவியார் ஒரு பாகத்தில் வீற்றிருக்கும் திருமேனியையுடைய சிவபிரான். வந்து எரியாகி - அக்கினி மலையாகத் தோன்றி. ஆடல் விளைப்பது - போர் செய்தலை.

173. இன்ன சிலம்பின் அடி சென்னி - இந்த மலையின் அடியையும் முடியையும். என - என்று சிவபிரான் சொல்ல. கண்டிலம் - யாம் கண்டோம் இல்லை. கழிந்து அகந்தை விட்டேம் என்க.

174. சம்புவை - சிவபெருமானை. எண்ணலன் - எண்ணுமல். இன்னருள் - இனிய அருளை. நம்பி - உறுதியாகக் கொண்டு. அருள்நல்கும் என்க.

175. கன்னல் - கரும்பு. வற்சரம் - வருடங்கள். நன்னெறி – சிவாகமப்படி. நம்பன் - சிவபிரான்.

176. கணப்படை மன்னவன் எனும் சீர் தந்தனன் – கணநாதனென்னும் சிறப்பை அருளினர். தத்தம் இடை உற்றே - தங்கள் தங்கள் பதத்தை டைந்து. இந்து - சந்திரன்.

வென்றி பொருந்து வியாழம்எனும் மேலோன்
ஒன்றெழி யாமல் உவப்புடன் உரைத்தான். 177

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)
கூறிது கின்றிட வேறெரு நாள்முரு
குந்த னெனுந்தலைவன்
மாறுதல் அற்ற விசிட்டம் அடைந்த
வசிட்டனை வந்துபணிந்(து)
ஆறு முடித்த அருட்கடல் நல்கிய
ஆறு முடிப்பெருமான்
வீறு புகழ்ப்பெறு விரதம் உரைத்தருள்
என்று விளம்புதலும். 178

வெள்ளியெ னுந்தினம் ஆரல்அ தன்றியும்
வென்றி யுறுந்துலையாம்
ஒள்ளிய திங்களில் இந்து வளர்ந்திட
ஓங்குமுன் வைகல்முனு
எள்ளரி தாம்அறு நாளும் எழிற்பர(சு)
ஏந்திய ஏந்தல்தரும்
வள்ளல் மகிழ்ந்தருள் விரதம் எனப்புகழ்
மாதவன் ஓதியரோ. 179

அன்ன(து)இ யற்றலும் அன்னது தன்னில்
அருத்தி பொருத்திமுடித்(து)
உன்னரு மேன்மை அடைந்தவர் தம்மையும்
ஓதினன் ஓதுதலும்

---

177. குலிச வேலால் - வச்சிராயுதத்தால். சிறை - சிறகுகளை. கொய்தவன் - இந்திரன். மகற்கு - சயந்தனுக்கு. வியாழம் எனும் மேலோன் - பிருகஸ்பதி பகவான்.

178. விசிட்டம் - மேன்மை. முருகக்கடவுளுக்குரிய விரதங்களைச் சொல்லவேண்டுமென்று வசிட்டரை முசுகுந்தன் கேட்டான் என்க.

179. வெள்ளிக்கிழமையும், கார்த்திகை நக்ஷத்திரமும், ஐப்பசி மாதத்தில் வரும் கந்தசஷ்டியும் முருகக் கடவுளுக்குரிய விரதங்கள் என்க. ஆரல் - கிருத்திகை. துலையாம் ஒள்ளிய திங்களில் - ஐப்பசி மாதத்தில். இந்து வளர்ந்திட ஓங்குமுன் வைகல் முன்னு - சுக்கில பக்ஷப் பிரதமை முதலாக. அறு நாளும் — சஷ்டியீறுகிய ஆறு நாட்களும். பரசு - மழு. பரசுஏந்திய ஏந்தல் தரும் வள்ளல் - முருகக் கடவுள்.

இன்னலின் மன்னவன் அப்படி பற்பகல்
இப்புவி யிற்புரியா
ஒன்னலர் வந்து பணிந்திட வையம்
உவந்து புரந்தனனே. 180

மேவொரு நாள்தனில் மண்ணுல கத்தினும்
விண்ணுல கத்(து)அணுகித்
தேவர் வணங்குறு கோவை வருத்து
திருக்(கு)அவு ணப்படைவென்(று)
ஓவில் பெரும்புகழ் ஏழு விடங்கரை
ஒண்புவி மீதுகொணர்ந்(து)
ஏவரும் அன்பொடு காண இருத்தி
இருங்கதி உற்றனனே. 181

சொற்றிடும் இன்ன(து) இருக்க விருப்பொடு
தொண்டைநன் னாடதனில்
மற்றிரு வெற்பிடை பொற்புறு கற்சிவ
மாமுனி மேவியகால்

---

180. இயற்றலும் - மேற்கொள்ளும் முறையையும். அருத்தி பொருத்தி முடித்து - அன்புகூடி நிறைவேற்றி. கந்தப்பெருமான் விரதத்தைச் சாதித்தவர்கள் பரீதன். நாரதர். திரிசங்கு முதலிய அரசர்கள், தேவர்கள் முதலியோர் ஆகும். பகீரதன் சுக்கிரவார விரதம் மூன்று வருடம் அனுட்டித்துப் பகைவென்று அரசுரிமை பெற்றான்; நாரதர் கார்த்திகை விரதம் பன்னிரண்டு வருடம் அனுட்டித்துச் சப்த ரிஷிகளில் முதன்மை பெற்றார்; திரிசங்கு இவ்விரதத்தை அனுஷ்டித்துப் பெறும் பேறு அடைந்தனன்; ஒரு வேடனும் அந்தணனும் இவ்விரதத்தை அனுட்டித்து அரசர்களாகப் பிறந்து பெருமதிப்புப் பெற்றனர். தேவர்கள் முதலியோர் கந்தசஷ்டி விரதத்தை அனுட்டித்து மேன்மையுற்றார் என்க; இவற்றின் விரிவைக் கந்தபுராணம் - கந்தவிரதப் படலத்தில் காண்க. இன்னல் இல் மன்னவன் முசுகுந்தன் என்க. ஒன்னலர் - பகைவர். வையம் - உலகத்தை.

181. முசுகுந்தன் செயல். கோவை - இந்திரனை. திருக்கு அவுணப்படை வென்று - மயக்கத்தையுடைய அசுரர் சேனையை வென்று. இங்கு அவுணர் படை வலாசுரன் என்னும் அவுணன் படை. சப்தவிடங்க மூர்த்திகளைக் கொணர்ந்து பூவுலகத்தில் பிரதிஷ்டைசெய்து சிவகதியை அடைந்தான். முசுகுந்தன் தேவலோகத்தினின்று சப்தவிடங்கரைக் கொணர்ந்து பூசித்த வரலாற்றைக் கந்தபுராணம் - கந்தவிரதப் படலம். செய்யுள் - 49 முதல் 119 வரை காண்க.

நற்றிற நவ்வி அடைந்திட அன்னதை
நச்சினன் நச்சியதே
உற்றிடும் ஓர்கரு வாயது நவ்வி
உலாய(து)அம் மால்வரைமேல். 182

குன்றவர் வள்ளியின் மூல மெடுத்த
குழிப்புடை வந்தணுகா
நன்றி பெறுந்திரு மங்கையை அங்கதில்
நல்குபு தன்ன(து)இனம்
அன்றி இருந்தது கண்டு வெருண்(டு)அது
அகன்ற(து) அகன்றிடலும்
வன்றிறல் கொண்ட கிராதர் பெருந்தகை
வந்து தெரிந்தனனே. 183

தெரிந்து மகிழ்ந்து கரங்கொ(டு) எடுத்துயர்
செல்வ மனைப்புடையுற்(று)
இருந்திறல் கொண்ட விருத்தர்கள் வள்ளி
எனப்பெயர் சொற்றிடவே
பரிந்து சிறப்பொடு குன்றவர் மன்அது
பாரில் வளர்த்திடுநாள்
திருந்திய யாணர் இளங்குயில் ஆ(று)இரு,
திருவய(து) உற்றனளால். 184

திருவாரூர், நாகபட்டினம், திருநள்ளாறு, திருக்காரூயல், திருக்கோளரியூர், திருவாய்மியூர், திருமறைக்காடு என்னும் ஏழு தலங்களிலும் விடங்கரைத் தாபித்தான்.

182. மேவியகால் - இருந்தபொழுது. நவ்வி - ஒருமான். அன்னதை நச்சினன் - அதன்பால் விருப்பம் கொண்டான். அங்ஙனம் விரும்பியது காரணமாக அதன் வயிற்றில் கருப்பம் உண்டாயிற்று.

183. குன்றவர் - வேடர்கள். வள்ளியின் மூலம் எடுத்த குழிப்புடை - வள்ளிக்கிழங்கைத் தோண்டிய குழியினிடத்தே. திருமங்கையை அங்கு அதின் நல்குபு - ஓர் அழகிய பெண் குழந்தையை அந்தக் குழியில் சென்று. தன்னது இனம் - மான் இனம். வெகுண்டு அது அகன்றிடலும். கிராதர் பெருந்தகை - வேடர்க்கு அரசன்; நம்பிராசன்.

184. மனைப்புடை உற்று - வீட்டை அடைந்து. விருத்தர்கள் - மூதிய வர்கள். குன்றவர் மன் - வேடர்களுக்கு அரசன். யாணர் - புதுமை. இளங்குயில் - வள்ளி. பன்னிரண்டு பிராயம் அடைந்தாள் என்க.

ஏவை முனிந்தொளிர் எஃக நெடும்படை
என்ன விளங்கியகட்[1]
பூவையை வேடுவ ரானவர் ஏனல்
புரந்திட வைத்திடலும்
காவல் புரிந்(து)இத ணத்துறு நாள்உயர்
கந்த விலங்கல்ஓரீ இச்
சேவல் நெடுங்கொடி அண்ணல் பெருத்த
செருத்தணி உற்றனனே. 185

வந்து செருத்தணி அற்புத வெற்பிடை
வள்ளல் இருந்தருளச்
சுந்தர வள்ளியை நாரத னுகிய
தொன்மைகொள் மாமுனிகண்(டு)
எந்தை குகன்கண் இணங்கி வணங்கி
இசைத்திட மாமயல்கொண்(டு)
உந்திய வேலவன் வேடுவர் போல
உருக்கொடு சென்றனனே. 186

விண்டொடு வள்ளி விலங்கலின் ஏகி
விலங்கல் இலாஎழிலோ(டு)
அண்டரி தாம்இத ணத்தில் இருந்த
அருங்குற மாதுதனைக்
கண்டனன் மாமயல் கொண்(டு)இடர் கொண்ட
கருத்தொடு நின்றுபுகழ்ந்(து)
ஒண்டிற லோன்விர கத்(து)உரை பற்பல
ஓதினன் மாதினெடும். 187

---

185. ஏவை - அம்பை. எஃகம் நெடும்படை என்ன - வேலைப்போல. பூவையை - வள்ளியை. ஏனல் புரந்திட - தினைப்புனத்தைக் காக்க. இத ணத்து – பரணில். கந்த விலங்கல் ஓரீஇ - கந்த கிரியை நீங்கி. அண்ணல் - முருகக்கடவுள். செருத்தணி - தணிகை மலையை.

186. அற்புதம் – வியப்பையுடைய. நாரதமுனிவர் வள்ளியைக்கண்டு. இசைத்திட - வள்ளியின் பேரழகைச் சொல்ல. மயல் - காதல்.

187. விண் தொடு-ஆகாசத்தை அளாவிய. வள்ளி விலங்கலின் – வள்ளி மலைக்கு. விலங்கல் இலா - மாறுத. அண்ட அரிது ஆம் இதணத்தில் - சேர்தற்கு அரிய பரணில். இதண் - பரண். இடர் கொண்ட – காம மயக் கத்தை அடைந்த. ஒண் திறலோன் - முருகவேள். விரகத்து உரை - பிரி வால் உண்டாகும் வார்த்தைகளை. பா–ம்—1 இலங்கியகட்

ஆங்கது காலையில் வேடுவ ரோ(டு)அவள்
அத்தன் அடைந்திடலும்
வேங்கை உரித்த பரம்பரன் மாமகன்
வேங்கை யுருக்கொளவே
வாங்கில் புகழ்பெறு கானவ ரானவர்
வந்து வணங்குசினங்(து)
ஈங்கிது வல்லி பறித்து முறித்திடும்
என்று புகன்றனரே. 188

அன்னவர் தம்மை விலக்கி அவர்க்(கு)இறை
அன்பு மகள்தெரியா
இன்னதி யாதென ஏதும் அறிந்திலன்
என்று புகன்றிடலும்
மன்னிய இன்னது நின்றுணை யாகி
வளர்ந்(து)இவண் நிற்கஎனு
அந்நில தன்னில் அகன்றனன் முன்(பு)என
அண்ணலும் நின்றனனே. 189

இன்பொடு நின்றவன் உன்றனை யன்றி
எனக்(கு)ஒரு தஞ்சமிலை;
அன்புடன் ஆளுதி என்றனை என்(று)எம(து)
அன்னையொ(டு) ஓதலுமே
பின்பும் இருங்குற வர்க்(கு)இறை யான
பெருந்தகை வந்திடவே
பொன்புனை சைவ விருத்தன் எனும்படி
போயினன் அங்(கு)அவன்நேர். 190

---

188. அவள் அத்தன் - வள்ளியம்மையின் தந்தையாகிய வேடராசன். வேங்கை - புலி. பரம்பரன் – சிவபிரான். வேங்கை உரு - வேங்கை மர மான உருவம். வாங்கு இல் - மறைதல் இல்லாத. கானவர் - வேடர். இது - இந்த மரத்தை. பறித்து - பிடுங்கி.

189. இறை - அரசன். அன்பு மகள் தெரியா – அன்புள்ள மகனைப் பார்த்து. முன்பு என – முன்போல வேடனது உருவத்தோடு. அண்ணல் - முருகவேள்.

190. தஞ்சம் - புகலிடம். என்றனை ஆளுதி என்க. அன்னையொடு - வள்ளியம்மையோடு. பொன் - பொலிவு. சைவ விருத்தன் - சிவ வேடம் கொண்ட முதியவன். அவன் நேர் - வேடராசனுக்கு எதிரில்.

ஆதர வின்திரு நீறு கொடுத்தனன்
ஆசி புகன்றிடலும்
ஏதமில் கொற்றவன் நச்சின(து) ஏ(து)என
இவ்வரை யில்குமரி
தீதற ஆடுற வந்தனம் என்(று)அருள்
செய்யஅ(து) ஆடுபுகம்
மாதினெ டுந்துணை யாய்இரும் என்(று)அவண்
வைத்(து)அகல் வுற்றனனே. 191

வள்ளியை நோக்கி விருத்தன் எனும்படி
வந்திடும் எந்தைபிரான்
உள்ளுறு நீரில் விடாயுடை யேன்என
ஓதஅதற்(கு) ஒருசார்
எள்ளில் புகழ்க்கொடி நற்சுனை யின்கரை
எய்த மெலிந்தவர்போல்
அள்ளி அரும்புனல் உண்(டு)எமை யாளுடை
அண்ணல் அறைந்தருள்வான். 192

ஏதமில் நீரின் விடாயை அகற்றினை ;
என்னை இனித்தழுவிக்
காதல் அகற்றுதி என்று புகன்(று)இரு
கைகள் குவித்திடலும்

---

191. ஆதரவின் - அன்பினோடு. ஆசி - ஆசீர்வாத மொழி. ஏதம் - குற்றம். கொற்றவன் - வேட்டுவ அரசன். நச்சினது - நீர் விரும்பியது. குமரி நீது அற ஆடுற - குமரித் தீர்த்தத்தின்கண் பாவம் நீங்க நீராட ; கன்னிகையோடு துயர் நீங்க இன்புற என்ற பொருளும் தொனித்தது. ஆடுபுநீராடி. மாதினெடும் - மகளாகிய வள்ளிக்கு. அவண் - அவ்விடத்தில்.

இங்கு வேடராசன் தன் சேரிக்குச் சென்றபின் முருகக்கடவுள் வள்ளியம்மையை நோக்கிக் கூறியவைகளையும் அவைகட்கு அம்மையார் கூறிய வற்றையும் கந்தபுராணம் - வள்ளியம்மை திருமணப் படலம் - 83 முதல் 91-ம் செய்யுள் வரை காண்க.

192. விருத்தன் - முதியவன். எந்தைபிரான் – முருகவேள். நீரில் விடாய் - தண்ணீர்த்தாகம். ஓத - வள்ளி யெம்பிராட்டியிடம் சொல்ல. அதற்கு ஒருசார் - அம்மலைக்கு ஒருபுறத்தில். எள் இல் - இகழ்ச்சியற்ற. கொடி – வள்ளி. எய்த - முதியவரோடு அடைய.

193. நீரின் விடாயை - நீர் வேட்கையை. காதல் - காமத்தை. அத்தியின் வத்திரனை - யானைமுகக் கடவுளை. ஆதரவோடு - அன்போடு. ஆனைய

மாது சினந்து படர்ந்தனள் அத்தியின்
வத்தி ரனைக்குமரன்
ஆதர வோடு நினைப்ப எதிர்ந்தனன்
ஆனைய தாய்எதிரே. 193

கண்டனள் வள்ளி வெருண்டு திரும்பினள்
கந்தனை வந்துதழீஇக்
கொண்டனள் உம்பல் அகற்றிடின் நீர்நசை
கொண்டது செய்வன்எனு
அண்டர் பிரான்இரு கைகள் குவித்தனன்
அத்த! எழுந்தருள் என்(று)
ஒண்டிறல் வேழமொ(டு) ஓதலும் அன்ன(து)
உவப்பொடு சென்றதுவே. 194

அன்னது பின்(பு)அறு மாமுகன் வள்ளியை
ஆசையொடும் புணராப்
பன்னிரு கையொ(டு) இருந்திட மங்கை
பணிந்து புகழ்ந்திடலும்
மன்னு தினைப்புனம் ஏகுதி யாம்அவண்
வந்திடு வோம்எனவே
துன்னிய ஏனல் உறும்படி உற்றனள்
தோழியும் எய்தினளே. 195

ஏனல் அழிந்திட எங்ஙனம் ஏகினை?
என்று விளம்புதலும்
பூநறு மென்சுனை ஆடி வரும்படி
போயினன் என்றிடவே

தாய் எதிர்ந்தனன் என்க. இங்கு, 'காதல் அகற்றுதி' என்று கூறிய முருகக் கடவுளுக்கு வள்ளியம்மையார் கூறியவற்றைக் கந்தபுராணம்-வள்ளியம்மை திருமணப் படலம், 105 முதல் 110-ம் செய்யுள் வரை காண்க.

194. வெருண்டு - அஞ்சி. உம்பல் அகற்றிடின் - யானையை ஓட்டினால். நீர் நசைகொண்டது - நீர் விரும்பிய காரியத்தை. அண்டர் பிரான் - முருகவேள். அத்த எழுந்தருள் - அப்பனே, இனி நீ சொல்வாயாக. வேழமொடு - யானையாக வந்த விநாயகரோடு. அன்னது - அந்த யானை. உவப்பு - மகிழ்ச்சி.

195. அவண் - அத்தினைப்புனத்தில். ஏனல் - தினைப்புனத்தை. உறும்படி - முன்னே இருந்ததுபோலவே.

மேனி வியர்ப்ப முலைத்துணை விம்ம
வெளுத்திட வாய்புரியும்
ஊனமில் தண்சுனை எவ்விடை உற்றுள(து) ?
ஓ(து)என ஓதினளே. 196

நன்றிது நன்றி(து) எனக்குமொர் குற்றம்
நவின்றனை என்றுவெகுண்(டு)
ஒன்றி இருந்துழி வேலவன் வேட்டர்
உருக்கொடு வெய்யமதம்
துன்று விறல்கரி ஒன்(று)எனது அம்பொடு
சோரி சொரிந்திடவே
இன்(று)இவண் வந்துள தோவென ஓதினன்
ஏகமில் மாதர்கள்முன். 197

அவ்விடை யில்குகன் மங்கை புணர்ந்ததை
அங்கவர் பார்வையினுல்
மைவிழி நண்பி அறிந்து பிறிந்(து)அயல்
வன்புன மீதுறஊல்
கவ்விய வேலவன் அன்னவள் முன்பு
கலந்(து)எழில் வள்ளியைஎற்(கு)
இவ்விடை ஈகுதி அல்லதி யான்மடல்
ஏறுவன் என்றனனே. 198

என்னலும் அன்னவள் வள்ளியை எய்தி
இணங்குறு மா(று)உரையா
மன்னிய வேல னிடைக்கொடு வந்திட
வள்ளியும் வேலனும்

---

196. ஏனல் அழிந்திட - தினைப்புனமானது காவல் செய்வாரில்லாமல் கேடுற. விளம்புதலும் - தோழி கேட்க. வரும்படி - வருமாறு. மேனி வியர்த்தல் முதலியன புணர்ச்சி இன்பத்தால் வந்த வேற்றுபாடுகள். வாய் வெளுத்திட என்க. புரியும் - செய்யும். எவ்விடை - எவ்விடத்தில். இஃது அகத்திணையில் சுனைவியந்துரைத்தல் என்னும் துறையின்பாற்படும்.

197. ஒன்றி - பின்பு மனம் பொருந்தி. கரி ஒன்று எனது அம்பொடு என்க. சோரி - இரத்தம். மாதர்கள் - வள்ளியும் தோழியும். இது வேழம் வினுதல் என்னும் துறை.

198. அவ்விடையில் - அப்போது. நண்பி - தோழி. அயல் வன் புன மீது உற - அருகிலே உள்ள தினைக்கொல்லையைச் சார. அன்னவள் முன்பு கலந்து - அத்தோழியின் முன் சென்று. எற்கு இவ்விடை - எனக்கு இங்கே.

இன்னல் அறுங்கல வித்தொழில் செய்துபின்
ஏனல் புரந்திடவே
பொன்னுறு வேலன் விடுத்தலும் எம்மனை
போயினள் சேடியொடும். 199

வென்றிகொள் குன்றவர் ஏனல் தடிந்திட
மேவினர் மாதினையிற்
சென்றி(டு)என தத்துணை மாதொடு வீடு
செறிந்து வருந்திஉறப்
பொன்றிகழ் வள்ளியை நாடி மெலிந்து
புலம்பி இருட்பொழுதின்
வன்றிறல் வேலவன் மங்கை இருந்த
மனைப்புறம் உற்றனனே. 200

வேலனை அன்போடு கண்டனள் சேடி
விருப்புறு வள்ளிதனைக்
கோலமொ டுங்கொடு வந்தனள் பாணி
கொடுத்தனள் இன்னவளைச்
சாலவும் அன்பொடு காத்தருள் என்(று)உரை
சாற்றலும் நம்மிடைநீ
மாலை நறுங்குழல் ! வைத்திடும் அன்பு
மறக்கிலம் என்றனனே. 201

என்று புகன்(று)அவ ணின்றும் அகன்(று)எழில்
எய்திய மாதினெடும்
சென்றொரு காவில் இருந்தனன் ; வைகறை
சேர்த்தலும் வள்ளிதனைத்

மடல் ஏறுவேன் – பனைமடலால் செய்த குதிரைமீது ஏறுவேன் ; காதல் நிறைவேறுதவர் மட லேறுவேன் என்று கூறுதல் மரபு.

199. அன்னவள் - தோழி. இணங்குறுமாறு - முருகவேளுடைய விருப்பத்துக்கு இசையும்படி. ஏனல் புரந்திட - வள்ளியம்மை தினைப்புனத்தைக் காவல் செய்ய. எம் அனை - வள்ளியம்மை. சேடி - தோழி.

200. குன்றவர் - குறவர். ஏனல் தடிந்திட - தினையை அறுக்க. மாதினை இல் சென்றிடு என என்க. துணைமாதொடு - தோழியோடு. வீடு செறிந்து - இற்செறிப்புற்று ; தங்கள் வீட்டை அடைந்து. இருட் பொழுதின் - இராக்காலத்தில். இஃது இரவுக்குறி என்ற துறை.

201. சேடி – தோழி. பாணி கொடுத்தனள் - கையிலே அடைக்கலமாகக் கொடுத்தாள். மாலை நறுங்குழல் : இது பாங்கியை நோக்கிய விளி.

துன்றெயி னர்க்கிறை கண்டிலன் மண்டிய
சுற்றமொ டுங்குழுமிப்
பொன்றி லடிச்சுவ(டு) ஒற்றி நடந்து
பொழிற்புடை உற்றனனே. 202

கண்டனள் வள்ளி வெருண்டனள் அன்பொடு
கந்தணை வந்தணைசெய்(து)
அண்டினர் வேடுவர் என்செய்வ(து) என்றிட
அன்றெதிர் சூர்உயிரைக்
கொண்டிடும் எஃகம் இருந்துள(து); அஞ்சலை
கொல்லுதும்[1] யாமெனவே
மண்டிய வேடுவர் வந்து வணங்கு
வடிக்கணை வீசினரே. 203

மாரி யெனும்படி வாளி சொரிந்திட
வள்ளல் தனு(து)அருளால்
சீரிய கையில் உறுங்கொடி யாகிய
சேவல் ஒலித்திடவே
ஆரும் இறந்தனர்; வேலவன் அங்கண்
அகன்று நடந்திடலும்
சோர்வில் எழில்பெறு குன்றவர் மாது
தொடர்ந்து படர்ந்தனளே. 204

மேதகு நாரதன் அவ்விடை வந்தனன்
வேலவ னைப்பணியா
ஓதுதி இங்ஙன் இயற்றிய(து) என்ன
உவப்புறு வள்ளிபொருட்(டு)

---

202. அவணின்றும் அகன்று அவ்விடத்தை விட்டு அகன்று. காவில் - சோலையில். வைகறை சேர்தலும் - விடிந்தவுடன். எயினர்க்கு இறை - வேட்டுவ அரசன். குழுமி - கூடி. அடிச்சுவடு ஒற்றி நடந்து - தாள் பதிந்த அடையாளத்தைக் கவனித்துச் சென்று. பொழிற்புடை - முருகன் வள்ளியம்மையோடு இருந்த சோலையை.

203. வந்தணை செய்து - வணங்கி. வேடுவர் அண்டினர் என்க. சூர் - சூரபன்மன் எஃகம் – வேல். அஞ்சலை - நீ பயப்படாதே. வடிக்கணை - கூர்மையான அம்புகளை.

204. வாளி - அம்பு. வள்ளல் - முருகவேள். அங்கண் அகன்று - அவ்விடத்தை விட்டு நீங்கி. குன்றவர் மாது - குறமகளாகிய வள்ளி.

பா - ம் 1 கொள்ளுதும்.

ஏதமில் வேலவன் இங்ஙன் இயற்றிய
யாவும் அறைந்திடவே
நீதறு நாரத ஞகிய பேருள
சீர்முனி கூறுவனுல். 205

எம்பெரு மான்! இவண் வேடுவர் யாரும்
இறப்ப இயற்றினையிக்
கொம்பினை வவ்வி அகன்றிடல் நீதி
கொலோ? என ஓதுதலும்
உம்பர் இடுக்கண் அகற்றிய வேலன்
உவந்து திரும்பியரோ
வம்புறு சோலையின் வந்தனன் மாதவன்
வள்ளி யொடுங்கடிதே. 206

ஓல்லையில் வேலவன் வள்ளி மடந்தையொ(டு)
உன்றமர் உய்ந்தெழவே
சொல்லுதி என்னலும் அன்னையும் அவ்வகை
சொற்றனள் சொற்றிடலும்
வல்லை எழுந்தனர் ஆறு முகம்பெறு
வள்ளலை அன்பொடுகண்(டு)
எல்லை யிலாத வெருக்கொ(டு) இறைஞ்சி
இசைத்திடு வார்இவையே. 207

எங்கள் பிரான்! இனி எம்மனை யுற்(று)எழில்
எம்மனை தன்னைமணந்(து)
அங்கொளும் நின்பதி ஏகுதி என்னலும்
அன்ன செயற்(கு)இசையா

---

205. பணியா - பணிந்து. இங்ஙன் இயற்றியதை ஓதுதி எள்க. ஏதம் இல் - குற்றம் இல்லாத.

206. இவர்களை இறக்கும்படி செய்து வள்ளியை அழைத்துச் செல்லுதல் நியாயமோ. கொம்பினை - வள்ளியை. இடுக்கண் - துன்பத்தை. வம்பு - நறுமணம். சோலையின் - முன்பு தாம் இருந்த சோலையினிடத்தே. மாதவன் - நாரதனேடும்.

207. உன் தமர் உய்ந்து எழவே - உன் சுற்றத்தார் பிழைத்து எழ. அன்னை - வள்ளி. வல்லை - விரைவில். வெருக்கொடு - பயம்கொண்டு.

208. எம் மனை உற்று - எங்கள் இல்லத்தை அடைந்து. எம் அனை தன்னை - வள்ளியெம்பிராட்டியை. அம் கொளும் - அழகை உடைய.

மங்குல் நெருங்கிய குன்றுறை கானவர்
மன்னவன் இற்குறுகித்
துங்க நெடும்புலி ஆதன மீது
துலங்க இருந்தனனே. 208

அங்கது காலையில் வள்ளியை அன்பினெ(டு)
அண்ணல் தெரிந்திடலும்
கொங்கு நறுந்தொடை வேடுவர் மாதர்
குயிற்றிய கோலம்ஓரீ இ
மங்கில் வளம்பெறு தெய்வ வனப்புடன்
மன்னினள்; இன்னதுகண்(டு)
இங்கிவள் எம்புடை வந்தது நந்தம்
இருந்தவம் என்றனரே. 209

கொற்றம(து) உற்றிடு கானவ ரானவர்
கொற்றவன் மூற்(று)எழிலால்
மற்றிணை அற்(று)உயர் வள்ளி கரத்தினை
வள்ளல் கரத்தினில்வைத்(து)
உற்றிடும் என்மக ளைக்கும ரேச!
உனக்(கு)அருள் செய்தனன்என்(று)
அற்றமில் அன்பொ(டு) அறைந்து சிறந்த
அரும்புனல் உய்த்தனனே. 210

அன்னது காலையில் எஃக நெடுங்கர
அண்ணல்த ஞ(து)அருளால்
தன்னிகர் நாரதன் மன்றலின் உள்ள
சடங்கு புரிந்திடலும்

இசையா - முருகன் இணங்கி. மங்குல் - மேகம். கானவர் மன்னவனுடைய இல்லைக் குறுகி என்க. புலி ஆதனமீது - புலித்தோலாசனத்தின் மேல்.

209. தெரிந்திடலும் - பார்த்தவுடன். வேடுவர் மாதர் குயிற்றிய கோலம் ஓரீஇ - குறமகளிர் புனைந்த திருக்கோலம் நீங்கி. தெய்வ வனப் புடன் - தெய்வ மகளுக்குரிய பேரழகுடன். என்றனர் - என்று குறவர்கள் கூறினர்.

210. கானவரானவர் கொற்றவன் - வேட்டுவ அரசன். இணையற்று உயர் - தனக்கு ஒப்பில்லாமல் உயர்ந்து விளங்கும். உனக்கு அருள் செய் தனன் - உனக்கு மகளாக வழங்கினேன். அற்றம் இல் - சோர்வில்லாத. அரும் புனல் உய்த்தனன் - தாரைவார்த்தான்.

துன்னிய விண்ணவர் கண்ணன்அ யன்புடை
சுற்றி வழுத்திடவே
கன்னி மடந்தையொ(டு) அந்தர மீ(து)இருள்
கந்தரன் வந்தனனே. 211

தந்தையும் அன்னையும் வந்தது கண்டொரு
தந்தி முகற்(கு)இளவல்
சிந்தை களித்(து)எவ ரும்மூண ராவகை
செய்ய கரங்கள்குவித்(து)
உந்து பெரும்புகழ் உம்பர் தமக்கும்
உவந்தருள் செய்திடலும்
புந்தி மகிழ்ந்துயர் விண்ணவ ரோடு
புராந்தகன் ஏகினனே. 212

சம்பு அகன்றுழி நாரதன் ஆற்று
சடங்கு முடிந்திடலும்
அம்பு நெடுஞ்சிலை வேடுவர் மாதர்கள்
ஆசி புகன்றிடவே
வம்பு பொருந்து கடம்பு தடம்புயன்
மங்கையொ(டு) அங்கண்எழுந்(து)
உம்பர் புகழ்ந்திடு குன்றவர் மன்னெ(டு)
உரைத்திடு வான்இவையே. 213

அருத்தி பொருந்திய உன்றன் இயற்கை
அனைத்தும் இயற்றுபு இங்(கு)
இருத்தி எனக்கடி(து) அங்கண் நிறுத்தி
இலங்(கு)எழில் வள்ளியொடும்

---

211. எஃகம் நெடுங்கர அண்ணல் – வேலாயுதக் கடவுள். மன்றலின் உள்ள சடங்கு - திருமணத்துக்கு உரிய சடங்குகளே. கண்ணன் அயன் - திருமாலும் பிரமனும். கன்னி மடந்தையொடு – உமாதேவியாரோடு. அந்தரமீது - ஆகாசத்தில். இருள் கந்தரன் - இருண்ட கழுத்தையுடைய சிவபிரான்.

212. தந்திமுகற்கு இளவல் - விநாயகருக்குத் தம்பியாகிய முருகவேள். யாரும் உணராமல் தாய் தந்தையரை வணங்கினர் என்க. புராந்தகன் – சிவபிரான்.

213. சம்பு – சிவபெருமான். ஆற்று சடங்கு - செய்யவேண்டிய திருமணச் சடங்குகளே. சிலை - வில்லையுடைய. வேடுவரும் அவர் மாதரும். ஆசி - வாழ்த்து. வம்பு - வாசனை. கடம்பு தடம் புயன் - கடப்ப மாலையை அணிந்த

பெருத்திடு அன்ன சிலம்பை அகன்று
பிறங்கு வளங்குலவும்
செருத்தணி மால்வரை வந்தனன் உந்திய
சேவல் உயர்த்தபிரான். 214

அண்டர்கள் கம்மியன் அன்னதின் முன்னர்
அமைத்திடும் ஆலயமுற்(று)
ஒண்டொடி யோடும் இருத்தலும் மங்கை
உவந்து வணங்கிளழில்
கொண்டிடும் இன்ன சிலம்பின் இயற்கைகள்
கூறுதி என்றிடலும்
மண்டிய அக்கிரி மேன்மை அனைத்தையும்
வள்ளல் புகன்றனனே. 215

உய்வகை தந்திடு கந்தன் அதற்பின்
உரக்கிரி வில்லுடையோன்
ஐவகை மேனியில் ஓர்வடி(வு) அங்கண்
அமைத்(து)அமை யாமகிழ்வால்
மெய்வகை அர்ச்சனை செய்(து)அதில் நாள்பல
மேவிவிளங்(கு) எழில்சேர்
மைவிழி மாதொடு கந்த விலங்கலில்
மந்திரம் உற்றனனே. 216

விசாலமான தோள்களையுடைய முருகவேள். குன்றவர் மன்னனுடன் - வேட்டுவ அரசனுடன்.

214. அருத்தி - அன்பு. இயற்கை - கடமைகள். அங்கண் நிறுத்தி - அவ்விடத்திலேயே இருக்கச்செய்து. சிலம்பை - மலையை. பிறங்கு - விளங்குகின்ற. செருத்தணி மால்வரை - திருத்தணி மலையை.

215. அண்டர்கள் கம்மியன் - தேவதச்சனாகிய விசுவகன்மா. அன்னதில் - அவ்விடத்தில். முன்னர் - முன்பே. திருத்தணிகையின் பெருமையை முருகவேள் வள்ளியம்மைக்குக் கூறியருளினார் என்க: இதனைக் கந்தபுராணம் - வள்ளியம்மை திருமணப்படலம், 215 முதல் 229ம் செய்யுள் வரை காண்க.

216. உரக்கிரி வில்லுடையோன் - வன்மையுடைய மேரு மலையாகிய வில்லையுடைய சிவபிரான். ஐவகை மேனியில் ஓர் வடிவு - சிவசாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம், கர்ம சாதாக்கியம் என்னும் ஐந்து வடிவங்களில் ஒன்றான கர்மசாதாக்கியமாகிய சிவலிங்கத்தை. அமையா மகிழ்வால் - அடங்காத உவகையோடு. அதில் நாள்பல - அங்குப் பலநாட்கள். கந்த விலங்களில் மந்திரம் - கந்தகிரியில் உள்ள தம் ஆலயத்தை.

(கலி நிலைத்துறை)

வண்டார் தொடைக்குழல் மருத்துவன் அளித்த திருமங்கை
கண்டாள் எழுந்தெதிர் நடந்தாள் பணிந்தனள் கரத்தால் ;
அண்டார் தமக்(கு)அரி எடுத்தே உரத்திடை அணைத்தான்
விண்டான் உறழ்ந்த இடை வள்ளிஅவள் தாள்மிசை விழுந்தான். 217

சூரன(து) அற்றபுகழ் யாணர்உள வள்ளியை எடுத்தே
மாரு நெடுங்கிரி இரண்டுடன் இரண்டுபொரு மாபோல்
வீரூன கொங்கையொடு கொங்கைகள் நெருங்க உரமீதே
பாரூன் நிகர்த்தமொழி புல்லிமுக மன்பல பகர்ந்தாள். 218

மின்னு நுசுப்(பு)அனைய மாதரொ(டு) அரித்தவிசின் மீதே
ஒன்னுர் உடம்(பு)இடி உடம்பிடி பிடித்தவன் உறைந்தான் ;
பொன்னு டன்மங்கை இவள்வந்த பரி(சு)என்ன புகல்என்ன
அன்னுள் தனக்கிவை உரைக்கும் எமையாளுடைய அண்ணல்.219.

முன்னுள் முகுந்தனிடை வந்தீர்எமைத் தழுவ முன்னிப்
பன்னுள் நெடுஞ்சர வணத்தே தவத்தொழில் பயின்றீர் ;
அந்நாளில் நும்புடை அடைந்தே மகத்திறை அகத்தும்
மின்னுர் படைப்புளினர் கண்ணும் வளர்வீர்என விடுத்தாம். 220

மருந்தான இன்பமொழி ! இந்திர னிடத்துமக ளாய்நீ
இருந்தாய் ; இருந்துழி மணந்தாம் உனக்(கு)இனைய இன்னுள்

---

217. தொடை - மாலை. மருத்துவன் - இந்திரன். திருமங்கை - தேவயானை. அண்டார் தமக்கு அரி - பகைவர்களுக்குச் சிங்கம் போன்ற முருகவேள். உரத்திடை - திருமார்பில். விண்தான் உறழ்ந்த இடை - ஆகாசத்தை ஒத்த இடையை உடைய. அவன் தாள் மிசை - தெய்வயானையின் திருவடியில்.

218. யாணர் - புதுமையழகு. பால்தான் நிகர்த்த மொழி - தெய்வயானை. புல்லி - தழுவி. பல முகமன் - பற்பல உபசார மொழிகளை.

219. மின் ஆம் நுசுப்பு - மின்னலைப் போன்ற இடையையுடைய- அரித்தவிசு - சிங்காதனம். ஒன்னுர் உடம்பு இடி உடம்பிடி பிடித்தவன். பகைவருடைய தேகங்களை அழிக்கும் வேலாயுதத்தை ஏந்தியவன். (உடம்பிடி - வேல்.) பொன்நாடன் மங்கை – தெய்வயானை. பரிசு - வகை.

220. நீங்கள் இருவரும் திருமாலுக்குப் புத்திரிகளாக உதித்தீர்கள். நும்புடை - உங்களிடத்தில். மகத்து இறை யகத்தும் - இந்திரனிடத்திலும். புளினர்கண்ணும் - வேடர்பாலும்.

221. மருந்து - அமுதம். மொழி : விளி. மணந்தாம் - உன்னை மணம் செய்துகொண்டோம். எயினர்பால் - வேடர்களிடையே. பல செய்து - பற்பல திருவிளையாடல்களைச் செய்து. வதுவை - திருமணம்.

திருந்தார் வணங்(கு)எயினர் பால்வளர யாமினிதுசென்றே
பொருந்(து)ஆசையோடு பலசெய்துவ துவைத்தொழில் புரிந்தாம். 221

செந்தேன் நறும்பொழில் மருத்தரு செருத்தணி வரைக்கண்
பந்தே பொருந்திய கரத்தாய்! இருந்தொளி பரப்பும்
இந்தே புரிந்தமுகம் இன்னமட மங்கையொடும் இங்ஙன்
வந்தே மியாம்என மகிழ்ந்தாள் மருத்துவன் மடந்தை. 222

சீரார் அடற்குலிச பாணிமக ளானதிரு மாதும்
வாரார் முலைக்குறவர் மாதும்இரு பாலினும் வயங்கப்
போரார் அரித்தவிசின் மீமிசை இளம்பரிதி போல
ஏரார் அடற்குமர நாயகன் உவப்புடன் இருந்தான். 223

மைந்துற்ற சேவலும் இருந்தகரும் ஒண்பணியை வவ்விச்
சிந்துற் றிடுந்திறல் மயூரமொடு வேலும்உயர் தேரும்
எந்தைக்கு நாடொறும் இடும்பணி புரிந்(து)அவண் இருந்த;
கந்த புராணச் சுருக்கமும் நிறைந்தது களிப்பால். 224

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

வேல்வாழி; மயில்வாழி; சேவல் வாழி;
வேறுமுள படைவாழி; விளங்கு தண்டைக்
கால்வாழி; அருள்பொழியும் விழிகள் வாழி;
கவின்குலவும் ஈராறு கரங்கள் வாழி;

---

222. மருதரு – வாசனை வீசுகின்ற. பந்தே பொருந்திய கரத்தாய் – பந்துகள் அமைந்த கைகளை உடையவளே; பந்துபோலத் திரண்டநுனி விரலுள்ள கரங்களை உடையவளே என்பாரும் உளர். இந்து – சந்திரனை. மருத்துவன் மடந்தை – இந்திரன் மகளாகிய தெய்வயானை.

223. குலிசபாணி – இந்திரன். குறவர் மாது – வள்ளி. இரு பாலினும் – (தெய்வயானை வள்ளியம்மை இவர்கள் முறையே) இடம் வலம் என்ற இரு பக்கத்திலும். வயங்க – விளங்க. அரித்தவிசின் மீமிசை – சிங்காதனத்தின் மேல். இளம்பரிதி போல – பால சூரியனைப்போல.

224. மைந்து – வலிமை. சேவலும் – சேவற்கொடியும். இரும் தகரும் – கரிய ஆட்டுக்கிடாயாகிய வாகனமும். பணியை – பாம்பை. சிந்துற்றிடும் – துண்டஞ் செய்யும். மயூரம் – மயில். எந்தைக்கு – முருகக்கடவுளுக்கு. பணி புரிந்து – ஏவலைச் செய்துகொண்டு. இருந்த – இருந்தன.

225. வேறும் உள படை – வேலொழிந்த மற்றப் பதினோராயுதங்களும். மால் வாழ்த்தும் முருகன் என்க. மகிழ்ந்த – தம் இருக்கையாகக் கொண்டு மகிழ்ச்சியுற்ற. ஆறுபால் வாழி – ஆறு படைவீடுகள் வாழ்க. ஆறு படைவீடுகள் – திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவே

மால்வாழி வாழிஎனப் பணிந்து வாழ்த்தும்
மலைமாது தருமுருகன் மகிழ்ந்த ஆறு
பால்வாழி ; எனையாளுங் கருணை வாழி ;
பங்கிருந்த மங்கையர்தம் பதங்கள் வாழி. 225

(கலி விருத்தம்)

ஆதி வாழிய ; அஞ்செழுத் தோடுவெண்
பூதி வாழிய ; புண்ணியர் வாழிய ;
நீதி வாழிய ; நீள்புவி வாழிய ;
கோதில் சைவக் குலமிக வாழியே. 226

மெத்து இன்ப வியாபக மாகிய
முத்தி தந்தெனை யாட்கொண்ட முன்னவன்
பத்தர் மொய்த்தசம் பந்தன் கமலைவாழ்
அத்தன் வாழி ; அடியவர் வாழியே. 227

வீர வேற்கை விமலன் மகிழ்ந்திடப்
பாரி னோர்கள் பரிந்து புகழ்ந்திடச்
சீரு லாவிய செந்தில் நகரிடை
ஏரி னே(டு)அரங் கேற்றி ய(து)இந்நூல். 228

ஆகச் செய்யுள் 1048

தக்ஷ காண்டம்

முற்றிற்று.

கந்தபுராணச் சுருக்கம் முற்றுப்பெற்றது.
திருச்சிற்றம்பலம்

ரகம், குன்றுதோறுடல், பழமுதிர்சோலை என்பன. (திருவேரகம் - சுவாமிமலை; மலைநாட்டகத்து ஒரு திருப்பதியுமாம். பழமுதிர்சோலை - அழகர்மலை) பங்கிருந்த மங்கையர் - முருகக்கடவுளின் இடம் வலம் எழுந்தருளிய தேவயானையும் வள்ளியம்மையும்.

226. ஆதி - சிவபிரான். வெண்பூதி - திருநீறு. புண்ணியர் - சிவபுண்ணியம் செய்யும் சிவனடியார்.

227. இன்ப வியாபகம் ஆகிய - இன்பமே நிறைந்த. முன்னவன் - தலைவர். சம்பந்தன் - தருபுர ஆதீன ஞானசிரியராகிய குருஞானசம்பந்தர். கமலை - திருவாரூர். சம்பந்தனுகிய அத்தன்.

228. வீரம் வேற்கை விமலன் - முருகன். இந்நூல் திருச்செந்தூரில் அரங்கேற்றியதாகும் என்க.

வாழ்த்து *

—o—

துய்யதார் மறைக ளாலுந்
துதித்திட அரிய தான
செய்யவேள் அடிகள்[1] வாழ்க;
சேவலும் மயிலும் வாழ்க ;
வெய்யசூர் மார்பு கீண்ட
வேற்படை வாழ்க ; அன்னான்
பொய்யில்சீர் அடியார் வாழ்க ;
வாழ்கஇப் புவனம் எல்லாம்.

---

* இந்த இறுதி வாழ்த்துச் செய்யுள் கந்த புராணம்—தேவ காண்டம்—கந்த வெற்புறு படலம், 6-ம் செய்யுளாகத் திகழ்கின்றது ; ஆகவே, இது கந்தபுராணச் சுருக்கத்தைச் சேர்ந்தது அன்று. பல அச்சுப் பிரதிகளின் நற்றில், இச்செய்யுள் காணப்படுவதால், தனியே அமைக்கப்பெற்றது—இரண்டாம் பதிப்பாசிரியர்.

செய்யவேள்-சிவந்த திருமேனியையுடைய முருகக் கடவுள். சூர் மார்பு கீண்ட - சூரபன்மனது மார்பைப் பிளந்த.

பா - ம் 1 துய்யதோர் மறைக ளாலும் துதித்திடற் கரிய செவ்வேள் செய்ய பேரடிகள்.

உ

செந்திலாண்டவன் துணை

கந்தபுராணச் சுருக்கத்தின்

சிற்குராய்ச்சி*

[எண்-காண்டத்தின் என்]

—o—

1. அசுரரும் அசுரரைச் சார்ந்தவர்களும்

அக்கினிமுகா சுரன் (சூரன்-பதுமகோமளை மைந்தன்) அசு-70, மகேந்-21, யுத்த-152, 155, 160, 164, 166, 173.

அசமுகன் (ஷி.) யுத்த-24, 25, 28.

அசுரேந்திரன் (தாரகன் மைந்தன்) உற்ப-145, அசுர-71, யுத்த-65 79, 82, 87.

அதிகோரன் (மகேந்திரபுரி வடதிசைக் காவலன்) மகேந்-13, யுத்த 115.

அதிசூரன் (சிங்கமுகாசுரன் மைந்தன்) அசுர-71, யுத்த-65, 72, 73, 76, 78.

அதிவீரன் (யாளி முகன் மைந்தன்) மகேந்-8, 12.

அமோகன் (சூரன் அமைச்சருள் ஒருவன்) உற்ப-149.

அனலி (பானுகோபனது சேனைவீரரில் ஒருவன்) யுத்த-17, 19.

இந்து கண்டகன் (சோமன் பார்க்க)

இரணியன் (சூரன்-பதுமகோமளை மைந்தன், மூன்று தலை யுள்ளவன்) அசுர-70, மகேந்-21, யுத்த-139, 145, 146, 151, 330, 331.

இரணியாக்ஷன்-தக்ஷ-77.

கசமுகன் (மகேந்திரபுரி மேல்வெளிக் காவலன், ஆயிரமுகம்; ஈராயிரம் கை)–மகேந்-16.

கசமுகாசுரன் (வரலாறும்-கணபதியால் அடக்கப்பட்டதும்)-தக்ஷ-112, 116.

---

* இது, தணிகைமணி இராவ்பகதூர் திரு.வ.சு. செங்கல்வராய பிள்ளை M.A., அவர்களால் தொகுக்கப்பெற்றது.

கயாசுரன் (வதமும். தோல் சிவபெருமானுக்குப் போர்வையானதும்)-தக்ஷ-89,90.
கிரவுஞ்சன்–(கிரவுஞ்சகிரி) உற்ப-118, 138, அசுர-81, மகேந்-78.
சகத்திர வாகுகள் (வதை) மகேந்-50,54.
சண்டன் (பானுகோபனது சேனை வீரன்) யுத்த–19, 20, 23.
சதமுகன் (சூரன் சபையிலிருந்த வீரன்-வீரவாகுவால் மாண்டவன்)-மகேந்-40,44.
சலந்தராசுரன் வரலாறு-தக்ஷ-98,101.
சிங்கமுகாசுரன்-அசுர-6 (தோற்றம்) 29, 71, 80. மகேந்-85, 96. 99, 103, 104, யுத்த–232, 237, 240, 247, 248, 251, 252, 261, 264, 265, 268, 269, 271, 274, 292.
சுக்கிரன்–(அசுரகுரு) அசுர-1, 29, 35, 36, 38, 47, 55, யுத்த-330
சூரன்-அசுர-6 (தோற்றம்), முருகவேளுடன் போர்-யுத்த-106, 114, 303, 330.
சோமகண்டகன் (சோமன்-பார்க்க)
சோமன் (அக்கினிமுகாசுரனுக்கு உதவிய அசுர மன்னன்)-யுத்த-154, 155.
தசமுகன் (சிங்கமுகாசுரன் போரிற் சிங்கனுடன் பொருதவன்)–யுத்த-242, 244.
தருமகோபன் (சூரனது அமைச்சன்)–மகேந்–21, யுத்த-187, 195, 200.
தாரகாசுரன்-உற்ப-102, 104, 106, 111, 124. 138, அசுர-7தோற்றம்)–29, 80-மகேந்-23, 78, 82, 92, யுத்த-82.
தின்முகத்தினன் (சிங்கமுகாசுரன் போரில் அனகனோடு பொருதவன்)–யுத்த-245.
நூற்றுவர் (சிங்கமுகாசுரன் பிள்ளைகள்)–அசுர-71, யுத்த-258, 261.
பரிமுகன் (பானுகோபனுடைய தூதன், குதிரை முகம் ஆயிரங் கொண்டவன்)–யுத்த-120.
பானுகோபன் (சூரன்-பதுமகோமளை முதல் மைந்தன்)-அசுர-67, 69, 122, 130, 140, மகேந்-21. யுத்த-8, 29, 61, 118, 204, 208, 217, 222, 227.
புலிமுகன்-(மகேந்திரபுரி மேலிவாயில் காவலன்)-யுத்த-137.
மாயன் (பானுகோபனது சேனை வீரருள் ஒருவன்)-யுத்த–21, 22.

மூவாயிரர் (சூரன்-பிறமகீனவியர் மைந்தர்கள்)-அசுர-70, மகேந்-21, யுத்த-173, 174, 178, 185.

மேகன்-(அக்கினி முகாசுரனுக்கு உதவிய அசுர மன்னன்) யுத்த -154, 155.

மேதிக் கண்ணன் (மகேந்திரபுரிகீழ்த்திசைக்காவலன்) மகேந்-15.

யாளிமுகன் (இலங்கை வடவாயில் காப்போன்) மகேந்-7,70, 72, 78.

வச்சிரவாகு (சூரன்-பதுமகோமகீ மைந்தன்) அசுர-70, மகேந்-21, 24, 55, 59, 63, 66 (பத்துத்தலை*), 68, 74, 83, யுத்த-145.

வாதாவி-(அசமுகி-துர்வாசர் மைந்தன்-வில்வலனது தம்பி) அசுர-71, 86, 90.

விசயன்-(பானுகோபனது சேகீனத் தலைவரில் ஒருவன்)-யுத்த-9.

வில்வலன் (அசமுகி-துர்வாசர் மைந்தன்-வாதாவியின் அண்ணன்)-அசுர-71, 86, 90.

வீரசிங்கன் (இலங்கை வடவாயில் சேகீனத் தலைவன்) மகேந்-8.

வீர தினகரன் (வீரபானு)-(மகேந்திரபுரி கீழ்த்திசைக் காவலருள் ஒருவன் -மகேந்-15.

---

2. அடுக்குச் சொற்றொடர்

என் சொல்கேன் இதை என் சொல்கேன்-தக்ஷ-54.

தம்பிமீர் தம்பிமீர்-யுத்த-166.

தோன்றித் தோன்றி-மகேந்-25.

நன்றிது நன்றிது-தக்ஷ-197.

நன்றிது நன்று-தேவ-6,

நன்றிது நன்று-மகேந்-96.

நன்று நன்று-மகேந்-37, 104.

நில்லு நில்-மகேந்-41. யுத்த-147.

நிற்றி நிற்றி-யுத்த-215.

நூறு நூறு-யுத்த-52, 91, 150. தக்ஷ-94.

புகன்று புகன்று-மகேந்-25.

போ போ-தக்ஷ-35.

---

* "மூச்சிர முண்டு இரணியனுக்கு, இருசிர முண்டு அந்தவன்னிமுகற்கு, மற்றை வச்சிரவாகுவுக்கு ஒரு பான் சிரமுண்டே" கந்தபுராணம்-அசமுகி புலம்புறுபடலம்-9.

போதி போதி–உற்ப-25.
வந்து வந்து–தேவ-20.

---

3. அணிகள்—வருணனைகள்

1. உருவகம் :
   ஞானப்ரகாசர்-சூரியன்-பாயி-8.
   கச்சியப்பர்-மேகம்-பாயி-10.
   முருகவேள்-சூரியன்-பாயி-5.
2. உவமையணி :
   அசுர-85. மகேந்-88. யுத்த-1, 63, 64, 202, 203, 248, 319; தேவ-2, 20, 23; தக்ஷ-5, 223.
   -அபூத உவமை (இல் பொருள் உவமை)-தக்ஷ 218.
   -வீரி உவமை-யுத்த-186.
3. சொற்பின் வருநிலையணி : பாயி-3 (ஈற்றடி)
4. தற்குறிப் பேற்ற அணி : யுத்த-117.
5. முரண் அணி :
   பெரியோன் காதை சிறியோமிங் கறிய உரை செய்வாய்–புராண-6.
   பெருத்த நின்வலி . . . சிறுத்த நம்-திண்மையால் . . . கெடுப்பம்-யுத்த-109.
   விலங்கலிடை விலங்காப் புள்–உற்ப–21.
6. சந்திரோதய வருணனை-யுத்த-186.
   சூரியோதய வருணனை-யுத்த-63, 203, தேவ-2.

---

4. அருமை அடிகள்

[சொல்லழகு, பொருளழகு, வழி எதுகை வாய்ந்தன]

அஞ்சலி செய் தேத்துதலும் அஞ்சலிரென் றருள் கூர்ந்து-உற்ப–77.
அசத்தியம் அகன்றிடும் உசத்தியன்-அசுர-16.
அத்தம்பதி ஞென்றுடன் ஒன்றுடையான்-உற்ப-99.
அத்திதனைப் பத்தி செய்து முத்தி சேர்வாம்-பாயி-4.
அந்த வேலை வேலை மன்னன்-யுத்த-6.

அல்லின் பகைவனவன் பகைவனவன் பகைவனனேன்-
பாயி-6.
ஆயிரஞ்சரம் அகல மூழ்கி வெந் அகலவே அகலாத மொய்ம்
பினன்-யுத்த 211.
ஆவி கொடுப்பான் ஆவிகொடேன் என்றனனே-தக்ஷ-140.
ஆனிதன் பின்னவன் பின்னவன் பின்னரும்-யுத்த-161.
இப்படி இப்படி-உற்ப-12.
இருந்தவரா யிருந்தவர்கள்-உற்ப-24.
இன்னலானவை நவைக ளெவையும் போக்கும்-புரா-7.
உடம்பிடி உடம்பிடி பிடித்தவன்-தக்ஷ-219.
உமையாள் செம்பொற் காற்கமலம் தலைக்கமலம் பொருந்
தத் தாங்கிக் கைக்கமலம்
குவித்தருந்துங் கமலந் தீர்வாம்-பாயிர-3.
எம்பெருமானி மானினி மானுகின்ற தடங்கணார்...
எதிர் கண்டு-தக்ஷ-83.
எம்மனியுற் றெழில் எம்மனி தன்னி மணந்து-தக்ஷ-208.
எமையாள் உமையாள்-உற்ப-47.
எரிமுகன் இது தெரிந் தெரிமுகன் ஆகியே-யுத்த-155.
எல்லாருந் தழனுதற்கட் பெருமான் விண்ணோர்
எல்லாரும் பரவ-உற்ப-5.
எனக்கும் இக்கதைக்கும் நாடின் எத்தனி தூரமாமால்-
பாயி-14.
கண்டனன் இருண்ட கண்டன் மகன்-தக்ஷ-159.
கண்டானிது மண்டாறிரு கண்டானுடை வள்ளல்-யுத்த-320
கந்தரங் கடுத்த கந்தரக் கடவுள்-தக்ஷ-9.
கந்தன புயங்களுள கந்தன் முரு கேசன்-உற்ப-129.
கந்தனி வந்தனி செய்தார் (செய்து)-உற்ப-66. தக்ஷ-203.
காகத்தை நேரான ஆகத்தினுள்-அசுர-113.
கானவரானவர்-தக்ஷ-188, 210.
கொங்குப் பொழிற்குலவு கொங்கிற் பெருந்தவர்கள்-
அசுர-91.
கோவின் மிசை ஏறுங் கோவை யிகழ்ந்து-தக்ஷ-140.
சூரன் அண்டாசிடர் கொண்டான்-இடர்
விண்டார் இமையோர்கள்-யுத்த-320.

செம்பொற் கோதண்ட வேதண்டங் கூடி–உற்ப–13.
சென்னி யாறுள தேவ னளித்த சென்னி
யாறுள தேவு–தேவ–9.
சொல்லுவான் வீணை வெல்லுவான்–தக்ஷ–121.
தன் மனைவி பொன் மனைவி தன்பால் வைத்து–உற்ப–15.
தானவரானவர்-உற்ப–54. ; யுத்த–71.
தானவன் முன்புபோய்த் தானவன் மேவிய தேர் எடுத்து
—எறியவே–யுத்த 147.
துறக்க ஏந்தல் துறக்க நினைந்ததை–தேவ–35.
தூய கமலத் திருந்து திருந்து வேதன்–உற்ப–16.
தேயுவை வாயுவை நோக்கி–உற்ப–55.
தேரினை நூறு கோலதனில் நூறு காலதனில்–யுத்த–86.
தொன்மை போலுற வஞ்சி வஞ்சி துணைக்கரத்தை விடுத்
தனள்–தக்ஷ–107.
தோன்றல் முன் தோன்று–யுத்த-1.
நரசிங்கக் குட்டிதலைக் குட்டி யுதைத்து–உற்ப–90.
நல்லன விலக்கி யவை யல்லன உரைத்தான்–அசுர-38.
நாமம் பன்னி யன்னவன் பன்னியங் கிருந்தனள்–தக்ஷ-30.
நீலமும் மானும் மானும் நெடுவிழி–அசுர-146.
பல்லவங்களால் பல்லவம் புரிந்து-யுத்த–218.
பாலவிழித் தனிக்கடவுள் பாலனை–புராண–6.
பாலனமொழிக் கவுரி பாலன்–யுத்த–302.
பிறைமுடியவன் தன தடியவன்–தக்ஷ–124.
பூவடியாம் இருபோது மூன்று போதும் பூசை புரிந்து–
பாயிர–5.
மகவேந்தன் வேண்ட வுமை மக வேந்தல் தம் பொருட்டால்
–உற்ப–80.
மற்றவ் வேலையில் வேலையில் வேலை வல்லை யேயிய வண்
குமரேசன்-தேவ–3.
மாலை சேர்குழல் மாலை நோக்கினர் மாலை எய்தினர் மாதவர்
–தக்ஷ–83.
மாறு மாறு மாரூன போர் செய-யுத்த–209.
மான் மகன் மகன் மகன் மகன் மடிந்திட–யுத்த–221.
முச்சிர முள்ளவன் வச்சிர முள்ளவன் மொய்ம்பினன் முன்
பினன்–யுத்த–145.

முன்னுக மது கொண்டு முன்னுக வருபோது–அசுர–89.
மைம்மலிந்திடு கண்டனுக்கு அவி மாற்றுவான் மக மாற்று வேன்–தக்ஷ–70.
மையாம் அறிவுறலால் ஆனனமும் அணைத்தாய்–தக்ஷ–167.
மொய்ம்புள மொய்ம்புள வீரன்–மகேந்–48.
வந்திடக் கலங்கினேன், மலங்கினேன், வருந்தினேன்–யுத்த–6.
வரையற்று வந்த வரை யற்று வீழ–யுத்த–286.
வாதாவி கோதாவி அழிவற்றது–அசுர–88.
வாய்புடைத் தலறினர், வாடினர், ஓடினர்–யுத்த–158.
வானவர்க ளானவர்கள்–உற்ப–126.
வானவரானவர்–உற்ப–61; தக்ஷ–26.
விடையை யுதவி விடையை யிழிந்து–உற்ப–49.
விண்ணுளோர் துள்ளி யாடவே தள்ளினனோ–யுத்த–220.
விறல்பட்ட கணை விட்டவுணன் நெட்டிரதம் அட்டருளினன்–யுத்த–314.
வீறுதங்க விருப்ப விருப்பக் கோலமா முசுகுந்தனும்–தேவ–19.
வெங்குருவிற் சற்குருவா யுதித்து–பாயிர–7.
வேளை எரித்த விழியாளன் வேளையறிந்து–உற்ப–51.
வேளை கேட்டுழி வேளை வென்றவன்–தக்ஷ–97.
வையம் அற்றிடலும் வையம் உற்று–யுத்த–112.
வையமிசை யோர்வெருவ வையமிசை நின்றே–உற்ப–128
வையமுறு வையமிசை புக்கான்–யுத்த–261.

---

5. அருமைச் சொற் பிரயோகங்கள்

அருந்துங்கம்–துங்கம்இன்மை-(அருமை இன்மைப்பொருள்). பாயி–3.
அற்கன் (அருக்கன்)–தேவ–23.
இடும்போன் (இடும்பு – கொடுஞ்செயல் – அகந்தை–அதை மேற்கொண்டவன்)–மகேந்–31. யுத்த–143.
உங்கு (உவ்விடம்–அங்கு)–தேவ–20
கேள்வி (காது) குழை கொள் கேள்வி அறுப்ப வீழ்ந்ததே–தக்ஷ–150.

சிலவர் (சிலர்)-உற்ப-27, அசுர-47, யுத்த-250, 255, தக்ஷ-37, 136.
சின்னபின்னமாக-யுத்த-50.
நண்பி (நண்பன்-என்பதின் பெண்பால்)-தக்ஷ-198.
நற்கு (நன்மை)-புராண-8.
மஞ்ச (மைந்த)-யுத்த-207.
வரத்து (வரவு)-மகேந்-29.
வீள் கொண்டிட (வீழ் கொண்டிட)-மகேந்-18.
வேழக் கூற்றின் தலிசு-(வேழக்கூற்று-சிங்கம்) (சிங்காதனம்)-புராண-18.

---

6. ஊர், நாடு, ஆறு, மலை முதலியன

அநாமய வனம்-அசுர-15.
அரிபுரம்-அசுர-21.
ஆசுரம் (வட கடலிடை)-சிங்கமுகாசுரன் ஊர்-உற்ப-145; அசுர-56, யுத்த-233.
இமயக்கிரி-உற்ப-141.
இலங்கை-மகேந்-7.
இலங்கைக் குன்று-மகேந்-11.
உதயகிரி-யுத்த-269, 279.
ஏம கூடம்(கதிர்காமம்)-யுத்த-3.
கங்கை-அசுர-4.
கச்சி (காஞ்சி பார்க்க)
கடகம்-அசுர-11.
கந்தமாதனக் குவடு-மகேந்-4.
கந்த வெற்பு (கந்தகிரி)-உற்ப-82, 90, 93, 96; தேவ-33; தக்ஷ-185, 216.
கருவூர்-தேவ-13.
கலிங்க நாடு-அசுர-21.
காசி-உற்ப-153; அசுர-27; தக்ஷ-89, 90, 175.
காஞ்சி (தடமாட நெடுவீதித் தமிழ் சேர் காஞ்சி)-புராண-1. உற்ப-154.
காவிரி-உற்ப-156; அசுர-80.

புகலி–சிகாழி–பார்க்க.
பொதியம்-மலயம்–பார்க்க
மகேந்திரம் (சூரன் நகர்–தென் கடலிடை இருந்தது)–
உற்ப–5, 146; அசுர-56, 58, 143; மகேந்-20, 105;
யுத்த-234.
மண்ணியாறு–உற்ப-156.
மணிகன்னிகை–(காசியில்)–தக்ஷ–90.
மதுரை–யுத்த–186.
மயிலாடுதுறை–உற்ப–162.
மலயம் (பொதியமலை)–உற்ப-42; அசுர–80, 95.
மஞ்ஞைவதி (பிரமன் ஊர்)–தக்ஷ–57.
மாயநகர் (மாயாபுரி–நாவலந் தீவில்–தார்காசுரனது ஊர்)–
உற்ப–104, 106, 108; அசுர–58, 80.
மானஸ வாவி–தக்ஷ–7, 12, 14.
வள்ளிமலை–தக்ஷ–187, 214.
விந்தமலை–அசுர–78, 79, 80, 84, 85.
விருத்தாசலம் (திருமுது குன்று)பார்க்க.
ஸ்ரீ சைலம் (பருப்பதம் பார்க்க)

---

7. ஒப்புமைப் பகுதி

உற்ப–49.

**உன்னற் கரிய அரியணைமேல் உமையோடிருப்ப, உயிரனைத்தும்
இன்னல் அகல இருங்காம இன்ப மேவி இருந்தனவே.**

'பெண்பா லுகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ'.

—திருவாசகம்.

'போகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப் புரிதல்ஓரார்'

—சித்தியார்-70.

'போக மீன்ற புண்ணியன்'—சிந்தாமணி 362.

[தான் சத்தியும் சிவனுமாய் உலகத்துக்கெல்லாம்
போகத்தை உண்டாக்கின... நச்சி-1 உரை]

உற்ப–141.

இமயக்கிரியின் எல்லையது தீர்ந்தான்.

'இமகிரி எல்லை தீர்ந்தான்'—

கந்த புராணம்–தேவகிரிப்படலம். க. மகேந்–102.

ஊதையால் அலைப்புண்(டு) அங்கியாற் சூடுண்(டு)
உயர்சர வணத்(து)அலை யுண்ட பாலனையோ ?
சோதியென்று உரைத்தாய்.

"காற்றிற் றள்ளுண்டு நெருப்பினிற் சூடுண்டு கங்கை
யாற்றிற் முக்குண்டு சரவணம் புக்கலை யுண்டு
வேற்றுப் பேர்முலை யுண்டழு தேவிலை யாடு
நேற்றைப் பாலனையோ பரம்பொருளென நினைந்தாய்"

—கந்த புராணம்-சூரனமைச்சியற்படலம் (144)

யுத்த–225.

அண்டர் பெய் வாழ்வையும் அயன் பொய் வாழ்வையும்
விண்டுவின் வாழ்வையும் வெஃகி லேனியான்
தண்டைகள் அணிந்தநின் சரணத் தன்பையே
கொண்டிட வேண்டுவன் என்று கூறினன்—

'கோல நீடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன்
மேலை இந்திரன் அரசினைக் கனவினும் வெஃகேன்
மால யன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சால நின்பதத் தன்பையே வேண்டுவன் தமியேன்—

—கந்த புராணம்–பானுகோபன் வதை-(154)

தக்ஷ–3.

பல்லுயிரை யீற்றின் மாய்த்திடலால்
தோற்றுவித்தவன் அவனன்றே
அன்றியும் அவனே எங்கள் பாலிருந்தீண்(டு)
அளித்தலும் புரத்தலும் அருள்வான்.

'அந்தம் ஆதி என்மனார் புலவர்'-சிவஞானபோதகம்

'பவமலி தொழிலது நினைவொடு பதுமநன்
மலரது மருவிய சிவன்'–சம்பந்தர் : (சிவபுரம்)

'உலகுகள் நிலைபெறுவகை . . அரியுரு வியல்பரன்—' மேடி

'உயிரவை யவை . . அழிவகை நினைவொடு
முதலுரு வியல் பரன்' . . . மேடி

'அரியாகிக் காப்பான் அயனுய்ப் படைப்பான்
அரனு யழிப்பவனுந் தானே'-ஞானவுலா.

தக்ஷ-48.

குற்றங்கள் தெரிந்து குறித்திடினற்
சுற்றம் பெறுவார் எவர் சொல்லுதியால்.
'குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை'-கொன்றைவேந்தன்
'குருகுலத்தோர் போரேறே! குற்றமது பார்க்குங்காற்
சுற்றமில்லை'-வில்லிபாரதம்-திருட்டினன் தூது (17)

தக்ஷ-109.

கங்கைதன்னை வேணியில் தண்ணிலா
ஒரு ரோம மீது தரித்தனன்.
'தாழ்தரு புன்சடை ஒன்றினை வாங்கித்
தண்மதியம் அயலே ததும்ப
வீழ்தரு கங்கை கரந்தார்-சம்பந்தர்-திருவேட்களம் (8)
'சடையொன்றிற் கங்கையையுந் தரித்துக்
கொண்டார்'. அப்பர்-தனித்திருத்தாண்டகம் (10)

---

8. கந்தபுராணச் சுருக்க வகை

	கந்த புராணத்திற் செய்யுள்எண்	கந்த புராணச் சுருக்கத்திற் செய்யுள்எண்
கடவுள் வாழ்த்து, பாயிரம் முதலிய ...	352	32
1. உற்பத்தி காண்டம் ...	1,431	168
2. அசுர காண்டம் ...	1,929	148
3. மகேந்திர காண்டம் ...	1,178	105
4. யுத்த காண்டம் ...	2,968	331
5. தேவ காண்டம் ...	421	36
6. தக்ஷ காண்டம் ...	2,067	228
ஆக	10,346	1,048

9. தேவரும்—தேவரைச் சார்ந்தவரும்

அக்கினி–உற்ப-73 ; அசுர–61.
அமரர் கம்மியன்–உற்ப–31, 157, 165 ; அசுர 55, 57, யுத்த–3 ; தேவ–4, 11, 30; தக்ஷ 65, 215.
அழற் கண்ணன் பூதரில் ஒருவன்–சிங்கமுகனோடு பொரு தவன்)-யுத்த–251.
அனகன் (இலக்கருள் ஒருவன்)–யுத்த–245.
இந்திரன்–உற்ப–12, 16, 17, 46, 71, 80, அசுர–64, 78, 144, யுத்த–324 ; தேவ-6, 34, 36,
இயமன்–உற்ப–73, அசுர–19, 25, 62. (காலன் பார்க்க)
இலக்கத் தொன்பதின்மர்–உற்ப–66, 84, 98.
இலக்கர்–உற்ப–59, 61 ; யுத்த–33, 34, 179,
உக்கிரன் (பூதரில் ஒருவன்) யுத்த–30, 32, 73, 75, 78, 166.
உக்கிரன் பெருமை–யுத்த–76, 77.
ஐயனர்–அசுர–103, 110, 113.
கணபதி–பாயிர–1, உற்ப–77 ; அசுர-92, 93, 94 ; தக்ஷ-115, 117, 193.
கணபதி வரலாறு–தக்ஷ 114, 115.
கனகன்-(பூத மன்னரில் ஒருவன் ; அசுரேந்திரனுடன் பொரு தவன்)–யுத்த–79.
காமன்–உற்ப–8, 17, 20, 22, 47, 48, 49, அசுர–49 ; யுத்த-1; தேவ–12 ; தக்ஷ 82
காரி (பைரவர்)-யுத்த–183 ; தக்ஷ–93, 95.
காலன் (இயமன் பார்க்க)–யுத்த-168, 172.
காலாக்கினி உருத்திரர்–உற்ப–34.
சந்திரன்–அசுர–60, 61 ; தக்ஷ–15, 21.
சயந்தன் (இந்திரன் மகன்)-உற்ப-13, அசுர–76, 132, 135, 138, 141, 144, 145, மகேந்–3, 22, 25, 29, 32, 73 ; யுத்த–331 ; தேவ–8, 36,
சிங்கன்–(பூதத் தலைவன்–அசுரேந்திரனுடன் பொருதவன்)–யுத்த–17, 20, 23, 81, 242, 244.
சுந்தரன்–தக்ஷ–105.
சுப்பிரன்–(வீரவாகுதேவரின் சேனை மன்னருள் ஒருவன்)–யுத்த–13.

சுமாலி (பூதரில் ஒருவன்-சிங்கமுகனோடு பொருதவன்) யுத்த-252.

சூரியன்-அசுர-59, 60.

சோமுகன் (இலக்கருள் ஒருவன்)-அசுரேந்திரனுடன் பொருதவன்-யுத்த-82, 83.

தக்கன்-(பிரமனின் மகன்) உற்ப-2; தக்ஷ-1, 8, 10, 29, 30, 31. 33, 37, 44, 47 58, 59, 62, 65, 66, 69, 71, 75, 120, 130, 133, 135, 141, 147, 157.

தண்டகன்-(இலக்கருள் ஒருவன்-அசுரேந்திரனுடன் பொருதவன்)-யுத்த-29, 81, 82.

தண்டி-(பூதகணத் தலைவன்-சிங்கமுகனோடு பொருதவன்)-யுத்த-32, 253.

தந்தி-புராண-9, 12; உற்ப-6, 8, 21, 33, 35, 51, 91, 97; அசுர-1; தக்ஷ-20, 56, 57, 58, 60, 62, 64, 65.

நவவீரர்-உற்ப-60.

நீலன்-(பூதருள் ஒருவன்)-யுத்த-21, 22, 147.

பிரகஸ்பதி-(தேவகுரு)உற்ப-75, 168; அசுர-148; தேவ-35, 36; தக்ஷ-177.

பிங்கி-(பூதகணத் தலைவன்)-யுத்த-32.

பொன்-(பிரகஸ்பதி)-பார்க்க

மத்தன்(அசுரேந்திரனுடன் பொருதவன்)-யுத்த-80.

மது(பூதத்தலைவன்) (அசமுகனோடு பொருதவன்)-யுத்த-24 25, 27, 28.

மந்தன் (அசுரேந்திரனுடன் பொருதவன்) யுத்த-80.

மன்மதன்-(காமன்)-பார்க்க.

மாகாளர்-(வீரமாகாளர்)-பார்க்க.

ருத்திரர்-உற்ப-34, 38.

வருணன்-உற்ப-73; அசுர-63.

வாயு-அசுர-63.

வாரிமன்னன் (சமுத்திர ராஜன்)-யுத்த-5.

விசயன்-(இலக்கருள் ஒருவன்-அசுரேந்திரனுடன் பொருதவன்-மூவாயிரவரை வதைத்தவன்) யுத்த-83, 177, 181, 184.

விசுவகர்மா–அமரர் கம்மியன்–பார்க்க.
வீரகேசரி (வீரகோளரி) உற்ப–60, 112; யுத்த–34, 95, 96.
வீரதீரன்–உற்ப; 60; யுத்த 93.
வீரபத்திரன்–உற்ப–118; யுத்த–164; தக்ஷ–131.138, 141, 146, 163, 166, 167.
வீரபுரந்தரன்–உற்ப–60; யுத்த–97, 154, 156, 194.
வீரமகேச்சுரன்–உற்ப–60; யுத்த–94, 95.
வீரமாகாளர்–(ஐயனரின் ஆள்) அசுர–113, 116, 119.
வீரமார்த்தாண்டன் (வீரபாணு) உற்ப–60; யுத்த–36, 38, 91, 190, 193, 246.
வீர ராக்கதன்–உற்ப–60; யுத்த–38, 91, 92.
வீரவாகு–உற்ப–60, 86, 106, 113, 139, 140; மகேந்–24, 26, 30; யுத்த–11, 13, 39, 84, 98, 105, 137, 210, 221, 222, 226, 238, 239, 331.
வீராந்தகன்–உற்ப–60; யுத்த–98.

---

9 A—பிறபேர்கள்

இமயமலை வேந்தன்–உற்ப–2, 3.
ஐராவதம்–உற்ப–72, அசுர–64, 134, 135, 140, 141, 147; தேவ–7.
கச்சியப்ப சிவாசாரியர்–பாயிர–10, 11.
ஞானசம்பந்த தேசிகர்–பாயிர–9, 14; யுத்த–64; தக்ஷ–227.
ஞானப்ரகாச தேசிகர்–பாயிர–8.
தருமதத்தன் (தேவதத்தன் மகன்)–அசுர–21.
தேவதத்தன் (ஒரு வணிகன்) அசுர–21.
நால்வர்–பாயிர–7.
புண்டரீகம் (தருமகோபனுடைய யானை; தென்கீழ்த் திசைக்கு உரிய யானை; வீரவாகுவுடன் போர் செய்து தோற்றது)–யுத்த, 188, 192.
மூசுகுந்தன்–தேவ–10, 13, 15, 19, 27, 178.
வெள்ளை யானை–(ஐராவதம்)–பார்க்க.

---

10. தொகைவகை, எண்வகை

2. இருவர் (தும்புரு–நாரதர்)–உற்ப–44.
3. ஆகமத்தின் பொருள்மூன்று–உற்ப–8.
5. ஐங்கணை–உற்ப–22.
   ஐந்தொழில்–பாயிர–3.
   ஐம்படை–அசுர–69.
7. ஏழுபிலம் (கீழுலகம் 7) யுத்த-301.
   ஏழுமுனிவர்–உற்ப–27.
   ஏழுலோகம்–யுத்த–32.
   கடல் ஏழு–யுத்த–169, 301.
8. எட்டுமாதிரம் (எட்டுத் திசை) யுத்த–42, 301.
9. நவவீரர் (ஒன்பானெனும் உத்தமர்) உற்ப–59, 98, 101.
10 –பத்து கங்கை–தக்ஷ-108.
   பத்து திக்கு–உற்ப–56.
11 –பதினெரு ருத்திரர்–உற்ப-98, அசுர–52, 53, தக்ஷ-28,
18 –புராணம்–புரா–12,
108 –பூதத் தலைவர்–உற்ப–99,
   இலக்கர்கள்–உற்ப–59, 61, 98, 101,
11 கோடி–உருத்திரர்–அசுர–48, 54.
66 கோடி அவுணர்–அசுர-1
2,000 வெள்ளம் பூதர்கள்–உற்ப-99.
30,000 வெள்ளம் அவுணர் (சூரனுக்குப் பின் பிறந்தோர்) –அசுர–6.
40,000 வெள்ளம் அவுணர் (சிங்கமுகாசுரனுக்குப்பின் பிறந்தோர்)-அசுர–7.
40,000 வெள்ளம் அவுணர் (தாரகனுக்குப் பின் பிறந்தோர்) –அசுர–7.
30,000 வெள்ளம் அவுணர் (அசமுகிக்குப் பின் பிறந்தோர்) –அசுர–8.
60,000 வெள்ளம் அவுணர் (பின்னும் பிறந்தோர்)-அசுர–8.

11. பழமொழிகள்–உண்மைகள்—நீதிகள்

1. அஞ்சுறுத திறல் வீரர் பாலர் பெரியோர்களென்று
மதியார்கள் காண், யாவரேனும் அமர்
செய்ய வந்திடின் எதிர்ந்து போர் புரிவர்.
யுத்த–108, 109.
2. எளியாரை மொய்ம்பர் உறுகண் குயிற்றின்
அவரைப் பன்னுளும் நூறியரசாள்வம்–யுத்த–275.
3. குற்றங்கள் தெரிந்து குறித்திடினற்
சுற்றம் பெறுவார் எவர் சொல்லுதியால்–தக்ஷ–48.
4. கொற்றவர் செவிக்கே–அழற்கணே கடுப்ப
எந்நாளும் நன்னிலைமை . . சொன்னர்
அமைச்சர்களெனும் பெயர் கொள்தூயோர்–
மகேந்-87.
5. தலையினில் விதியையார் தவிர்த்திட வல்லார்-மகேந்-103.
6. புலி கண்டிடு புல்வாயது போலத் தளர்வுற்றார்
–யுத்த–319.
7. மங்குல் கண்ண மயூரம தென்ன–தேவ–20.
8. மின்னுரை வேதியரை மெய்க்குரவர் தம்மைப்
பொன்னு டரைப்பொறை பொருந்து முனிவோரை
மன்னு சிறுர்தமை வருந்தியவ ரன்றே
எந்நாளும் வெந்நரகில் எய்தியுழல் வாரே–மகேந்–93.
9. மூந்தையில் விதியை யாரே மூடித்திட வல்லார்
–அசுர–133.
10. யாரெனினும் முன்னைவினை போமோ–அசுர–3.
11. வந்தது வருக–அசுர–133.
12. வினைவெல்ல வல்லவர் இல்லையே–தக்ஷ–54.
13. வீரம் வீரர் சிறிதுமே விளம்புவார் கொலோ–யுத்த–41.
14. வெண்ணீறுடி யன்பரொடு வன்யெய்திணர்
நிரைய நெறி வீழ்தல் . . . அசுர–85.

---

12. பெண்பாலார்

அசமுகி–அசுர–8, 71, 111–114, 120, 121, 125, 127.
அமுதவல்லி . . உற்ப–95.
அயிராணி–சசி பார்க்க

இந்திராணி–(சசி)–பார்க்க
இலக்குமி–அசுர–11, 15.
ஒன்பது மங்கையர்–உற்ப–58.
கலைமாது–(வாணி–பார்க்க)
காளி–அசுர–24; யுத்த–296; தக்ஷ–132, 135, 136, 140, 150, 156; (சூரன் நகர்க்காளி–யுத்த–161, 163.
சசி–உற்ப–12, 15, 160, அசுர, 73, 75, 99, 101, 102, 111, 115, 118, 121, 122, 144; தேவ–8, 18, 36.
சவுரி (தாரகாசுரன் மனைவி)–உற்ப–143; அசுர 65.
சுந்தரி (சுந்தரவல்லி)–உற்ப–95.
சுரசை (அவுணர் அரசன் மகள்–மாயை–பார்க்க)–அசுர–1.
துன்முகி (அசமுகியின் தோழி)–அசுர–111, 114, 116, 124, 131.
தேவசேனை-புராண–18; தேவ–6, 16, 17, 24, 31; தக்ஷ-217 221–223.
நீலி–(காளி)–பார்க்க
பதும கோமளை (சூரன் மனைவி)–அசுர–65, 67, 70, யுத்த-160 230, 330.
புலோமசை–(சசி)-பார்க்க.
மங்கல கேசி (மாயையின் தாய்)–அசுர–57.
மங்கலை (உசத்திய முனிவர் மனைவி)-அசுர–17.
மருத்துவதி (முற்கல முனிவர் மகள்; மிருகண்டுவின் மனைவி) அசுர–26.
மாயை–(மாயவள்)-அசுர-1, 5, 9, 27, 28, 30, 57, 68, 98; யுத்த–97, 99, 119, 248, 318.
மேனை (இமயவேந்தன் மனைவி)–உற்ப–3, 40, 43.
யோசன கந்தி–புராண–14.
ரதி–உற்ப–20, 22, 23, 47, 48.
வள்ளி–புராண–18; தக்ஷ–184, 186, 192, 194, 195, 199, 203, 205, 207, 210, 214, 217, 218, 223,
வாணி–புரா–8, 13, உற்ப–17, 87; தக்ஷ–1.
விசயை (உமையின் தோழி)–உற்ப-25.
விபுதை–(சிங்கமுகாசுரன் மனைவி)–அசுர–65.

விருத்தை (உசத்திய முனிவர் மகள்–மிருகண்டுயர் மனைவி) அசுர–17, 18, 26.
வேதவல்லி (தக்கன் மனைவி)–தக்ஷ–11, 30, 32, 39, 41, 51. 149.

---

13. முனிவர்கள்

அகத்தியர்–உற்ப–12, 94 ; அசுர–79, 83, 87, 90, 92–95.
உசத்திய முனிவர்–அசுர–15, 16.
கவுச்சிக முனிவர் (குச்சக முனிவர் மகன்)–அசுர–11 (மிருக கண்டுயன்)–பார்க்க.
காசிபன்–(வீரமன்–மகன்) அசுர–1, 3, 5, 7, 9, 35 ; யுத்த–102, 204.
குச்சக முனிவர்–அசுர–11, 16, 18,
குறுமுனி–அகத்தியர்–பார்க்க,
சனகாதி முனிவர்–உற்ப–6, 24.
சனற் குமரன்–புராண–12, 15.
சிவமுனி–தக்ஷ–182.
சூத முனிவர்–பாயிர–11 ; புராண–5, 7.
ததீசி–தக்ஷ–68, 71, 75, 120, 124.
தருமன்–(தக்கன் மருமகன்)–தக்ஷ–15.
தாருகாவன மாதவர்–தக்ஷ–80.
திருவாசர்–அசுர–71, 90.
நாரதர்–உற்ப–75. 83, 103, 121 ; அசுர–78, 91 ; 119 ; யுத்த–4, 10, 134 ; தக்ஷ–12, 13, 15, 126, 186, 205, 211, 213.
நைமிச முனிவர்–பாயி–11.
பதஞ்சலி–உற்ப–155.
பராசரர்–புரா–14, உற்ப–65.
பராசரர் மைந்தர்–உற்ப–64, 65 ; தேவ–5.
புலகன்–தக்ஷ–21.
மார்க்கண்டன் (மிருகண்டுவின் மகன்)–அசுர–27.
மிருககண்டுயன்–(கவுச்சிக முனிவரின் காரணப் பெயர்) அசுர–12.
மிருகண்டு (மிருககண்டுயரின் மகன்)–அசுர–26.

முற்கல முனிவர்–அசுர–26.
வசிட்டர்–தக்ஷ-178.
வியாக்கிர பாதர்–உற்ப–155.
வியாதன் (வியாசர்) (வாதராயணன்) புராண–11, 17.

---

14. விஷய ஆராய்ச்சி :

(முக்கியமானவைகளே கூறப்பட்டுள.)

அக்கினிமுகாசுரன் நகர்க்காளியைப் போருக்கு அனுப்புவது யுத்த–161.
அக்கினிமுகாசுரன் விட்ட சிவன் படையால் நவவீரருள் எழுவர் மாள்வது . . யுத்த–158.
அக்கினிமுகாசுரன் வீரவாகு ஏவிய வீரபத்திரப் படையால் மாள்வது . . யுத்த–164.
அகத்தியர்–காவிரி நீரைக் குண்டிகையிற் கொணர்ந்ததும், குண்டிகையைக் கணேசர் கவிழ்த்ததும்-அசுர-93.
,, –கிரவுஞ்சனைச் சபித்தது–அசுர–84,
,, –குற்றாலத்தில் திருமாலைச் சிவமாக்கியது-அசுர-95
,, –பார்வதி திருமணத்தின் போது தென்பால் உயர்ந்து வடபால் தாழச் சிவபிரான் அனுப்பத் தெற்கே மலயத்துக்குச் செல்லுதல்-உற்ப-42.
,, –பிரணவ உபதேசம் முருகவேளிடம் பெற்றது உற்ப–94.
,, முனிமைந்தர்களான வில்வலன் வாதாவியை அட்ட பாபம் தீர ஈசனைப் பூசித்து வினை நீங்கப் பெற்றது, . அசுர–90.
,, –விந்த மலையை அடக்கியது- அசுர–79, 85.
,, –வில்வலன் வாதாவியை அட்டது–அசுர–86, 89.
அசமுகி காண சயந்தனுதியரைச் சூரன் தண்டித்தது–அசுர –145.
அசமுகி–துன்முகி மாகாளரால் தண்டிக்கப்பட்டது–அசுர-116.
அசமுகியின் அறுபட்ட கையைப் பிரமன் சீர்ப்படுத்தியது. அசுர–123.

அசுரரை அழித்தல்–10 நாளில்–மகேந்-24, 31.
அசுரேந்திரன் வீரவாகுவுடன் பொருதலும், வீரவாகுவால் மாய்தலும்-யுத்த–84, 87.
அடிமுடி தேடியது (அயனும் மாலும்-சிவனது உருவில்) தக்ஷ–170-174.
அதிசூரன் வதை (உக்கிரனுல் மாண்டது)–யுத்த–78.
அந்தணர்க்குத் ததீசி யிட்ட சாபம்-தக்ஷ-123.
அமுதவல்லி–சுந்தரவல்லி தவம் செய்வதும் முருகவேள் அருள் புரிவதும்–உற்ப–95.
அமைச்சர் கடமை–மகேந்–87.
அரங்கேற்றம்–கந்தபுராணச் சுருக்கம்-திருச்செந்தூரில்–தக்ஷ–228.
ஆறுமுகப் பெருமான் தோற்றம்–உற்ப–56, 63.
இந்திரஞாலத்தேர் இறந்தோரை எழுப்பும் அமிர்தகிரியைக் கொண்டு வருவது-யுத்த–319.
இந்திரன்–குயிலாய் மறைந்தது-அசுர–44.
,, –சசியின் பிரிவை ஆற்றுணுமை–உற்ப–160,
,, –மயில்வாகனமானது யுத்த–324.
மகேயின் சிறகறுத்தவன் உற்ப–12, தேவ–8, 23 ; தக்ஷ–177.
,, –விநாயகரை வழிபட்டது–அசுர–92.
,, –வேணுவாய் (மூங்கிலாய்) சீகாழியில் தவஞ் செய்தது–அசுர–77.
இந்திரனுக்குத் தேவகுரு (பிரகஸ்பதி) உலகாயத மதக் கொள்கைகளை உபதேசித்து அவை தமைக் கொள்ளும் படிச் செய்தல்–தேவ-35, 36.
இந்திரனைச் சிவபிரான் நடுங்க வைத்தது–தக்ஷ–96, 98.
இரணியன் ஈமக் கடன்களைச் சுக்கிரனைக் கொண்டு செய்தல் யுத்த-330, 331.
இரணியன் சூரனுக்கு அறவுரை கூறுதல்–139–142.
இரணியன் பெருமை–யுத்த–139 (மறையாயிரம் ஓர்ந்த தூயன்).
இரணியன் மீனுகக் கடலில் ஒளித்தல்–யுத்த–151.
இரணியன்–வீரவாகு போர்–யுத்த–149–151.
இலக்கவீரர் தோற்றம்–உற்ப–59.

இறைவன் உணர்ந்த உயிர்கள் உணர்வது-தக்ஷ-26.
உக்கிரன்-அதிசூரனை அட்டது; அதிசூரன் விட்ட படைகளை உக்கிரன் விழுங்குதல்-யுத்த-73-78.
உக்கிரன் பெருமை-யுத்த-77.
உருத்திரர் வரலாறு-அசுர-52-54.
ஐயனுர் (மகாசாத்தான்) வரலாறு-அசுர-109-110.
ஐராவதத்தை முருகவேள் அட்ட திருவிளையாடல்-உற்ப-72
ஐராவதம் பானுகோபனுடன் போர்-ஐராவதம் நொந்து வீழ்தல்-அசுர-140-141.
ஐராவதம் வெண்காட்டிற் பூசித்து இழந்த தந்தங்களைப் பெற்றது-அசுர-147.
கங்கை-பத்து-தக்ஷ-108.
கச்சபாலயம்-திருமால் கச்சபமாய் (ஆமையாய்க் காஞ்சியிற் பூசித்த திருக்கோயில்-புராண-2.
கணபதி கஜமுகாசுரனை அடக்கியது-தக்ஷ-116.
கணபதியை வணங்கும் முறை-தக்ஷ-117.
கணபதி வரலாறு-தக்ஷ-115.
கந்தபுராணக் கதையின் மூலம்-புராண-17.
கந்தபுராணக் கதையின் விசேடம்-புராண-7.
கந்தபுராணச் சுருக்கம்-அரங்கேற்றம்-தக்ஷ-228.
கந்த விரதங்கள் :—
ஐப்பசி (சுக்கில) சஷ்டி விரதம்
கிருத்திகை விரதம்
சுக்கிரவார விரதம்
} தக்ஷ-179.
கந்தவெற்பு-பெயர்க்காரணம்-உற்ப-82.
கஜமுகாசுரனைத் தேவர்கள் வணங்கிய முறை-தக்ஷ-113.
காசியில் தக்கன் தவஞ்செய்து கணநாதன் ஆனது-தக்ஷ-175-176.
காஞ்சியின் பெருமை-புராண-2.
காவிரியை விநாயகர் தந்தது-அசுர-93.
காளியின் தோற்றம்-தக்ஷ-132.
காளி-வீரபத்திரருக்குத் தேவி-தக்ஷ-132.
குச்சக முனிவர் தமது ஒருநாள் தவத்தை வழங்கி மதயானையின் சாபத்தைப் போக்கி அதைத் தேவனுக்கியது-அசுர-25.

குச்சக முனிவர் யமனை நோக்கித் தவஞ் செய்து இறந்த விருத்தையை உயிர்ப்பித்தது-அசுர-25-26.
சசி-ஐயனுர் காவலில் வைக்கப்பட்டது-அசுர-110.
சந்திரனுக்குத் தக்கன் இட்ட சாபம்-தக்ஷ-17.
சந்திரனைச் சிவபிரான் சூடியது-தக்ஷ-20-21.
சம்பந்தர்-அனலில் இட்டஏடு வேகாதெழுந்தது-யுத்த-186
சயந்தன் கனவு காண்பது-மகேந்-25-26.
சயந்தனுக்குத் தேவகுரு தேவர்களுக்குத் துன்பம் வந்த காரணத்தை எடுத்துரைப்பது-தேவ-36 ; தக்ஷ-177.
சலந்தராசுரன் வரலாறு-தக்ஷ-98-101.
சிங்கமுகாசுரன் சூரனுக்கு அறவுரை கூறுதல்-மகேந்-85, 95, 99, 10:.
சிங்கமுகாசுரன் செய்த போரைச் சூரன் மலை உச்சியினின்று பார்ப்பது-யுத்த-273.
சிங்கமுகாசுரன் பிறப்பு-அசுர-6.
சிங்கமுகாசுரன்-முருகவேள் போர்-யுத்த-270-290.
சிங்கமுகாசுரன் வதை-யுத்த-290.
சிங்கமுகாசுரன்-வீரவாகு போர்-யுத்த-261-269.
,, -வீரவாகு முதலியோரைப் பாசத்தாற் கட்டி அடக்குதல்-யுத்த-269.
சிங்கமுகாசுரனுடைய அறுபட்ட தலைகள் பின்னும் முளைத்து எழாதபடி முருகவேள் உங்காரஞ் செய்தல்-யுத்த-287.
சிவபிரான்-ஆமை ஓட்டை அணிந்தது-தக்ஷ-79-80.
,, இந்திரனை நடுங்க வைத்தது-தக்ஷ-96-98.
,, இருவருக்கு (மால் அயனுக்கு) அரியராய் நின்றது-தக்ஷ-91, 92, 170, 173.
,, எலும்பணிந்தது-தக்ஷ-76.
,, ஏனத்தை அடக்கியதும் ஏனமருப்பணிந்ததும்-தக்ஷ-77, 78.
,, கங்கை சூடியது-தக்ஷ-107-109.
,, சந்திரனுக்கு அருளியது, சூடியது-தக்ஷ-20, 21.
,, சலந்தரனை அட்டது-தக்ஷ-101.
,, சிற்குணத்தினன்-தக்ஷ-119.

சிவபிரான்–சுடலையில் ஆடுவது–தக்ஷ–106.
,, தன்மை–தக்ஷ–24, 26.
,, தாருகாவனத்து முனிவர்களை அடக்கியது–தக்ஷ–80–88.
,, திருமணத்தில் பாம்புகளை ஆபரணமாக மாறினது–உற்ப–37.
,, நஞ்சு உண்டது–தக்ஷ–103–105.
,, நீறு பூசியது–தக்ஷ–76.
,, பிரமன் சிரத்தைப் பைரவரால் கொய்வித்தது–தக்ஷ–93.
,, புலி, மழு, மான், பாம்பு, வெண்டலை, துடி, பூதங்கள், முயலகன்–இவைகளை அடக்கிக் கொண்டது–தக்ஷ–86, 87.
,, பெருமை–தக்ஷ–2–6.
,, மால்–அயனை நீருக்கியதும் எழுப்பினதும்–தக்ஷ–111.
,, மூவர்கோ என்பது–தக்ஷ–2–6.
,, யானைத் தோலை உமை அஞ்சப் போர்த்தது–தக்ஷ–90.
,, யோகத் திருத்தல்–உற்ப–6–11.
சிவபிரானும் தேவியும் பொருளும் சொல்லும் ஆவர்–பாயிர–13.
சிவபிரானே முருகவேள் என்பது–உற்ப–56.
சிவனுக்குத் தாமத குணமும் அழித்தல் தொழிலும் ஏன் என்பது–தக்ஷ–117–119.
சுந்தரர் விடத்தை ஏந்தி வந்து சிவபிரானிடம் தந்தது–தக்ஷ–105.
சுந்தரவல்லி, அமுதவல்லி தவம் வரலாறு–உற்ப–95.
சூரன் அரசாட்சி–அசுர–59–64.
சூரன் இந்திரஞாலத் தேரை அனுப்பி வரவழைத்த அமுத கிரியால் இறந்தோரை எழுப்புதல்–யுத்த–318.
சூரன் இந்திரஞாலத் தேரை ஏவ, அது வீரவாகு முதலானோரை மயக்கிக் கட்டிக்கொண்டு போனது–யுத்த–321.

சூரன் இறைவன் தந்த சிங்கத்தின் மேல் ஏறிப் போர் புரிதல்–யுத்த–319.
சூரன் இறைவன் தந்த தேரில் ஏறிப் போர் புரிதல்–யுத்த–315.
சூரன் தனது தாய் மாயையின் உதவியை நாடி வர வழைத்தல்–யுத்த–318.
சூரன் திருநீறிட்டுப் போருக்கெழுதல்–யுத்த–295.
சூரன் தேவர்களுக்கு இட்ட கட்டளை–அசுர–59–64.
சூரன் பிறப்பு–அசுர–6.
சூரன் மனைவி பதுமகோமளை இறத்தல்–யுத்த–330.
சூரன் மாமரமாய்க் கடலிடை நிற்க வேல் அட்டது–யுத்த–328.
சூரன்–முருகவேள் போர்–யுத்த–106–114, 298–330.
சூரன் வேலால் பிளப்புண்டு மயில் சேவல் ஆனதும், மயில் வாகனமானதும், சேவல் கொடியானதும்–யுத்த–329, 330.
சூரன் வேள்வி செய்தது–அசுர–30.
சூரனது ஊரைக் கடலுக்கு இரையாக்கியது–யுத்த–331.
சூரனுக்கு இரணியன் அறவுரை கூறியது–யுத்த–139–142.
சூரனுக்குச் சிங்கமுகாசுரன் அறவுரை உரைத்தது–மகேந்–85–95, 99–102.
சூரனுக்குப் பானுகோபன் அறவுரை கூறியது–யுத்த–206.
சூராதியர்க்குக் காசிபர் உபதேசமும் மார்க்கண்டர்சரித்திரம் கூறுதலும்–அசுர–9, 10–27.
சூராதியர்க்குச் சுக்கிரன் உபதேசம்–அசுர–29, 37, 38.
சூராதியர்க்கு மாயை உபதேசம்–அசுர–27.
சூராதியர் திக்கு விஜயம்–அசுர–39–47.
சூராதியர் வரம் பெற்றது–அசுர–32–34.
சேய்ஞலூரில் முருகவேள் சிவபூஜை செய்தது–உற்ப–161.
சேவலின் ஒலியால் வேடர்கள் மாய்ந்தது–தக்ஷ–204.
சோழ நாட்டின் வளம்–அசுர–15.
தக்கன்–ஆட்டுத்தலைப் பெற்றது–தக்ஷ–166.
,, ஆட்டுத்தலை பெற்றபின் சிவபிரானை வணங்கிப் பணிதல்–தக்ஷ–167.

தக்கன்–இறையவனை மதியாமை–தக்ஷ–47.
,, காசியில் தவஞ் செய்து கணநாதன் ஆனது–தக்ஷ–175, 176.
,, சந்திரனுக்குச் சாபமிட்டது–தக்ஷ–17.
,, சிவபிரானை மதிக்கலாகாதென்று தேவர்களுக்குப் போதித்தல்–தக்ஷ–53.
,, தவஞ் செய்து வரம் பெறுதல்–தக்ஷ–7–9.
,, நாரதருக்குச் சாபமிட்டது–தக்ஷ–15.
தக்கனது பெண்கள் 23-பேர் முனிவர்களை மணந்தது–தக்ஷ–15.
தக்கனது பெண்கள் 27-பேர் சந்திரனை மணந்தது–தக்ஷ–15.
தக்கனது மக்கள் தவஞ்செய்து முத்தி பெற்றது–தக்ஷ–13, 14.
தக்கனது யாகத்தில் உயிர் இழந்தவர்களைத் (தேவி வேண்டச்) சிவபிரான் எழுப்புதல்–தக்ஷ–164.
தக்கனது யாகத்தில் தண்டனை பெற்றவர்கள் :—
கருடன் சிறகு அறுபட்டது–தக்ஷ–160.
தக்கன் தலை இழந்தது–தக்ஷ–148.
திங்கள் வீரபத்திரரது தாளின் கீழ்த் தேய்க்கப்பட்டது–தக்ஷ–145.
திருமால் அடியுண்டது–தக்ஷ–143.
பிரமன் குட்டுப்பட்டது–தக்ஷ–144.
வேதவல்லியின் (தக்கன் மனைவியின்) காது போனது–தக்ஷ–150.
தக்கனது யாகத்தில் திருமால்–வீரபத்திரர் போர்–திருமால் பணிதல்–தக்ஷ–153–162.
தக்கனது யாகத்தில் தேவி இகழ்ந்து பேசப்படுதல்–தக்ஷ–129–130.
தக்கனுக்கு நந்தியிட்ட சாபம்–தக்ஷ–62–63.
தணிகை மலையின் பெருமையை முருகவேள் வள்ளிக்கு உரைப்பது–தக்ஷ–215.
தணிகையில் முருகவேள் சிவபிரானைப் பூசிப்பது (குமார லிங்கம்)–தக்ஷ–216.

ததீசி முனிவர்–அந்தணர்க்கு இட்ட சாபம்–தக்ஷ–123.
,, தக்கனுக்குச் சிவனது பெருமையை விளக்குதல்–தக்ஷ–71, 76–119.
,, தக்கனுக்கும் தேவர்களுக்கும் இட்ட சாபம்–தக்ஷ–122.
,, திருமாலே வென்றவர் என்பது–தக்ஷ–68, 124.
தருமகோபனது யானை (புண்டரிகம்) செய்த போர்–யுத்த–192, 193, 197, 198, 201.
தருமகோபனை வீரவாகுதேவர் அட்டது–யுத்த–200.
தக்ஷிணமூர்த்தி–யோகநிலை–உற்ப–9.
தாரகன்–திருமால் போர்–அசுர–40–43.
தாரகன் பிறப்பு–அசுர–7.
தாரகன் வதம்–உற்ப–138.
தாரகனுக்குத் திருமாலின் சக்கரம் கழுத்தணி ஆனது–அசுர–43.
தாருகாவனத்து முனிவர்களைச் சிவபிரான் அடக்கியது–தக்ஷ–88.
தாக்ஷாயணி வரலாறும் திருமணமும்–தக்ஷ–22–45.
திருச்செந்தூரில் முருகவேள் சிவபூஜை செய்தது–தேவ–3.
திருத்தணிகையின் மேன்மையை முருகவேள் வள்ளிக்கு உரைப்பது–தக்ஷ–215.
திருமால் ஆமையாகச் சிவனைப் பூசித்தது. கச்சபாலயம்: புராண–2.
திருவிடைமருதூரில் பதினெரு ருத்திரர் சிவனைப் பூசித்தது–தக்ஷ–28.
திருவெண்காட்டில் ஐராவதம் பூசித்து இழந்த தந்தங்களைப் பெற்றது–அசுர–147.
தேவசேனை திருமணம்–தேவ–6–26.
தேவசேனையின் திருமணம் காணச் சிவபிரான் தேவியுடன் வருதல்–தேவ–19–25.
தேவசேனையும் வள்ளியும் கூடுதல்–தக்ஷ–217–218.
தேவசேனை வரலாறு–தக்ஷ–220–221.

தேவர்களுக்குத் துன்பம் வந்த காரணம்–உற்ப–14.
தேவர்களுக்குத் துன்பம் வந்த காரணத்தைச் சயந்தன் கேட்கத் தேவகுரு கூறுதல்–தேவ–36–தக்ஷ–177.
தேவர்களுக்கு நந்தி சாபமிட்டது–தக்ஷ–62–63.
தேவி இமயவேந்தன் மகளாக வருதல்–உற்ப–2, 3.
தேவி ஐந்தொழிற்கும் வித்து–பாயிர–3.
தேவி தக்கன் மகளாக வருதல்–தக்ஷ–29.
நந்தி–தக்கனுக்கு இட்ட சாபம்–தக்ஷ–62–63.
நந்தி–தேவர்களுக்கு இட்ட சாபம்–தக்ஷ–62–63,
நவவீரர் தோற்றம், பெயர் முதலியன–உற்ப–59, 60.
நவவீரருள் எழுவர் சிவன் படையால் மாய்தல்–யுத்த–158.
நாரதர்–வள்ளி திருமணத்தில் சடங்கியற்றல்–தக்ஷ–211, 213.
நாரதருக்குத் தக்கன் இட்ட சாபம்–தக்ஷ–15.
நூலின் பெயர்–கந்தபுராணச் சுருக்கம்–தக்ஷ–224.
நூற்றுவர்–சிங்கமுகாசுரன் மக்கள்–வீரவாகுவால் மாய்தல் யுத்த–260, 261.
நைமிசாரணியம்–பெயர்க் காரணம்–புராண–4.
பதி பசு பாச இலக்கண விளக்கம் காட்டியது–உற்ப–8, 9.
பதினெண் புராணங்களின் வரலாறும் அவை இவை என்பதும்–புராண12, 15–17.
பதுமகோமளை சூரன் பட்டவுடன் உயிர் விட்டது–யுத்த–330.
பராசர முனிவரின் புத்திரர்கள்–
–சரவணத்திற் பாலுண்டு பழைய உருவம் அடைதல்–உற்ப–64, 65.
–பரங்கிரியில் முருக வேளின் அருள் பெற்றது–உற்ப–164.
–பரங்கிரியில் ஞானோபதேசம் முருகவேளிடம் பெற்றது–தேவ–5.
பார்வதி–இமய மலையிற் குழவியாய்த் தோன்றுதல்–உற்ப–3.
,, தவம், திருமணம் (பங்குனி உத்திரத்தில்)–உற்ப–4, 32–47.

பாற்கடல் கடைந்த வரலாறு–அசுர–105; தக்ஷ–103.
பானுகோபன்–ஐராவதம் போர்–அசுர–140, 141.
பானுகோபன்–சயந்தன் போர்–அசுர–134-139.
பானுகோபன் சூரனுக்கு அறவுரை கூறியது–யுத்த–206.
பானுகோபன் மாயையின் உதவியை நாடி மாயப் படை பெற்றது–யுத்த–119.
பானுகோபன் வீரம் (சூரியனைப் பிடித்தது, திருமாலை வென்றது) அசுர–69.
பானுகோபன்-வீரவாகு போர்–யுத்த-40-60, 121-133, 210-220.
பானுகோபன்-வீரவாகுவால் மாய்ந்தது-யுத்த-220.
பிரகஸ்பதி சூராதியர் வரலாற்றை முருகவேளுக்கு உரைப்பது-உற்ப-168-அசுர-148.
பிரமம்–உண்மையில் யார் என்பது–தக்ஷ–5.
பிரமன் சிரம் பைரவராற் கொய்யப்பட்டது–தக்ஷ–93.
பிரமன் யாகம் செய்ததும் அது குலைந்ததும்-தக்ஷ-55-64.
பிரமன் வீரபத்திரருக்குத் தேர்ச் சாரதியானது–தக்ஷ–155.
பைரவர் கபாலம் திருமாலின் ரத்தத்தால் நிறையாமை–தக்ஷ-94.
மரங்கள் பலவற்றின் பெயர்–பாயிர–4.
மன்மதன் இரதிக்கு மாத்திரம் உருவாய் அமைதல்–உற்ப-48
மன்மதன் பரி-கிளி ; தேர்-தென்றல் உற்ப–20 வில்–கரும்பு உற்ப-49 ; யுத்த-1.
,, குடை-மதி-அசுர-49.
மனதில் நினைத்த மாத்திரையில் நினைக்கப்பட்டவர் வருதல் -உற்ப–17, 23, 27, 33 ; யுத்த–324 ; தக்ஷ–193.
மாகாளர்–அசமுகி துன்முகியைத் தண்டித்தது–அசுர-116.
மாசிப் புனலாட்டு-தக்ஷ–30.
மாயை (மாயவள்) பெயர்க் காரணம்-அசுர–1.
மார்க்கண்டர் சரித்திரம்–அசுர–11-27.
மிருகண்டுயர் எத்தகைய கன்னியை மணம் புரிவேன் என்றது-அசுர–14–15.

முசுகுந்தர்-ஏழுவிடங்கரை விண்ணினின்று கொண்டு வந்து தாபித்தது-தக்ஷ-181.
-வரலாறு-தேவ-12-13.
முசுகுந்தனுக்கு வசிட்டர் கந்த விரதங்களைக் கூறுவது-தக்ஷ-178-180.
முருகவேள்-அகத்தியருக்குப் பிரணவம் உபதேசித்தது-உற்ப-94.
,, அசுரர் பிணக்குவையைப் பொடியாக்கியது -யுத்த-302.
,, 'அமரர் செய்த புண்ணியம்' உற்ப-121.
,, அமோகவேலால் பானுகோபனது மோகவேலின் செய்கையை மாற்றல்-யுத்த-58.
,, இந்திர ஞாலத் தேரைத் தம்மிடத்தே நிறுத்தியது-யுத்த-321.
,, இந்திரனுக்குப் பொன்னுலகில் முடி சூட்டுவித்தல்-தேவ-31.
,, ஐராவதத்தை அட்டது-உற்ப-72,
,, கிழ வேடம் வள்ளி பொருட்டுப் பூண்டது-தக்ஷ-190,
,, சயந்தனது கனவிற் போந்து அவனுக்கு ஆறுதல் கூறுதல்-மகேந்-22-25.
,, சிங்கமுகனது மாயா பாசத்தினின்று நவ வீரரை ஓரம்பை ஏவி மீட்டது-யுத்த-279.
,, சிங்கமுகனுடன் போர்-யுத்த-270-290.
,, சிங்கமுகனை வதைத்தது-யுத்த-290.
,, சிவபிரானிடம் தேர் பெற்றது உற்ப-99.
,, சிவபிரானிடம் வேற்படை பெற்றது-உற்ப-98.
,, சிவபிரானுக்குப் பிரணவப் பொருள் உரைத்தது-உற்ப-94.
,, சூரனது இந்திர ஞாலத்தேராற் கட்டப்பட்ட வீரவாகு முதலியோரை மீட்டது-யுத்த-321.
,, சூரனது சிங்கத்தை அட்டது-யுத்த-323.

முருகவேள்-சூரனுடன் போர்; சூரனை அட்டது-யுத்த-106, 114. 298, 330.

,, சேய்ஞலூரில் சிவபூஜை செய்து படைக்கலம் பெற்றது-உற்ப-161.

,, தாரகனுடன் போர்-உற்ப-122—138.

,, திருச்செந்தூரில் சிவபூஜை செய்தது-தேவ-3.

,, திருத்தணிகையில் சிவபூஜை செய்தது-தக்ஷ-216

,, தேவசேனை திருமணம்-சிவபிரான் எழுந்தருளி வந்து காணுதல்-தேவ-19-25.

,, தேவர்களின் கனவிற்போந்து ஆறுதல் கூறுதல்-மகேந்-25.

,, தேவர் சிறை மீட்டது-யுத்த-331.

,, நாரதரது யாகத்தில் வந்த ஆட்டை அடக்கியது-உற்ப-83-87,

,, படைப்புத் தொழில் செய்தது-உற்ப-90.

,, பதினெரு ருத்திரரைப் பதினெரு படையாகக் கொண்டது-உற்ப-98.

,, பராசரர் மைந்தர்களுக்கு ஞானோபதேசம் செய்தது-தேவ-5.

,, பானுகோபனது மாயா பாசத்தினின்று வீரவாகுவை மீட்டது-யுத்த-135.

,, பிரமனைச் சிறையிட்டதும், விடுத்ததும்-உற்ப-88-93.

,, வள்ளி திருமணத்தைச் சிவபிரானும்-தேவியும் எழுந்தருளிக் காணுதல்-தக்ஷ-211–212.

,, வள்ளி திருமணம்-தக்ஷ-182-214.

,, வள்ளியோடு லீலை-தக்ஷ-186-195.

,, விசயனுக்குக் கால பயிரவர் படையை அளித்தது யுத்த-183.

,, விசுவரூப தரிசனம் சூரனுக்கு அளித்தது-யுத்த-327-328.

முருகவேள் - விசுவரூப தரிசனம் தேவர்களுக்கு அளித்தது-உற்ப-78.
,, வீரவாகு முதலியோரைப் பானுகோபன் மோக வேலாற் கட்ட அமோகவேலை ஏவி அவர் களை மீட்டல்-யுத்த-58.
,, வேங்கை மரமானது-தக்ஷ-188.
,, ஆறு திருப்பதி-தக்ஷ-225.
,, உங்காரத்தால் சிங்கமுகாசுரனது அறுபட்ட தலைகள் மீண்டும் முளையாமை-யுத்த-287.
,, குலிசாயுதம் சிங்கமுகாசுரனை அடுதல்-யுத்த-289, 290.
,, கொடி சேவல்-தக்ஷ-224.
,, சேவலின் ஒலியால் வேடர்கள் மாய்தல்-தக்ஷ-204.
,, சேனைகளின் விவரம்-2000 வெள்ளம் பூதர்; 108-பூதத் தலைவர்; இலக்கர்; நவ வீரர்-உற்ப-99, மகேந்-77.
,, திருவிளையாடல்கள்-உற்ப-67-80.
,, தேர்ச் சாரதி-வாயு-உற்ப-134, 135, 152; யுத்த 67, 297, 300.
,, படை-வேல்-தக்ஷ-224.
,, பெருமையைச் சிங்கமுகாசுரன் கூறுதல்-மகேந்-101.
,, வாகனம்-மயில், ஆடு, தேர்-தக்ஷ-224.
முருகவேளுக்கு ஆடு வாகனமானது-உற்ப-87.
,, இந்திரன் மயில் வாகனமானது-யுத்த-324.
,, சூரன் மயில் வாகனமானது-யுத்த-330.
,, சூராதியர் வரலாற்றைத் தேவகுரு கூறுவது-உற்ப-168-அசுர-148.
முருகவேளைச் சூரன் பழித்தல்-மகேந்-102.
மூவாயிரவர் விஜயன் ஏவிய கால பயிரவர் படையால் மாள்வது-யுத்த-184.

ரசவாதத்தால் ஏமாறுதல்-அசுர-23-24.
வசிட்டர் முசுகுந்தருக்குக் கந்த விரதங்களைக் கூறுவது-தக்ஷ-178-180.

வழக்கங்கள் :—

அம்மிமீது மணமகள் காலை எடுத்து வைத்தல்-தேவ-24.
மணமகளைத் தத்தஞ் செய்து கொடுத்தல்-உற்ப-44; தேவ-23; தக்ஷ-42, 43, 210.
மாப்பிள்ளையின் காலை (பால்கொண்டு) மாமியார் கழுவுதல்-உற்ப-40; தேவ-18; தக்ஷ-41.
வள்ளி திருமணத்தில்
சிவபெருமான் தேவியுடன் திருமணங் காணுதல்-தக்ஷ-211, 212.
,, நாரதர் சடங்கு புரிந்திடல்-தக்ஷ-211, 213.
வள்ளியம்மை-இறந்த வேடர்களை இறைவன் சொற்படி எழுப்புதல்-தக்ஷ-207.
,, தேவ உரு அடைந்தது-தக்ஷ-209.
,, பிறப்பும், திருமணமும், வரலாறும்-தக்ஷ-182–216, 220.
வள்ளி வரலாற்றை முருகவேள் தேவசேனைக்கு உரைப்பது-தக்ஷ-220-222.
வச்சிரவாகு-வீரவாகுவால் மாய்ந்தது-மகேந்-68.
வாழ்த்துப்பா-தக்ஷ-225-227.
விசயன்-முருகவேள் அளித்த கால பயிரவப் படையால் மூவாயிரவரை அட்டது-யுத்த-183–184.
விடங்கர் எழுவரை முசுகுந்தர் தாபித்தது-தக்ஷ–181.
விநாயகர்-காவிரியைத் தந்தது-அசுர–93.
வியாசர்-திருமாலின் ஒரு கலை-புராண–11, 13.
,, வரலாறும் பெயர்க் காரணமும்-புராண-14, 17.
வில்வத்தால் சிவார்ச்சனை செய்தலின் விசேடம்-தேவ–13.
வில்வலன்-வாதாவி-செய்கையும் அழிவும்-அசுர72, 86, 89.
வீரபத்திரர்–திருமால் போர்; திருமால் பணிதல்-தக்ஷ-153-162.

வீரபத்திரர் தோற்றம்-தக்ஷ-131.
வீரபத்திரருக்குச் சிவபிரான் இட்ட கட்டளை-தக்ஷ-133-134.
வீரபத்திரருக்குப் பிரமன் சாரதி-தக்ஷ-155, 156.
வீரவாகு—
,, அக்கினிமுகாசுரன் ஏவிய காளியை வென்றது-யுத்த-163.
,, அக்கினிமுகாசுரனைப் பொருததும், மாய்த்ததும்-யுத்த-159-164.
,, அசுரேந்திரனைப் பொருததும் மாய்த்ததும்-யுத்த-84-87.
,, அணு உருக்கொடு சூரன் அவைக்குச் செல்லுதல்-மகேந்-20.
,, அதிவீரனை அட்டது-மகேந்-12.
,, இரணியனுடன் பொருதது-யுத்த-149-151.
,, கசமுகனை அட்டது-மகேந்-16-19.
,, சகத்திரவாகுகளை அட்டது-மகேந்-50-54.
,, சதமுகனை அட்டது—மகேந்-40, 44.
,, சபதம் (பானுகோபனைக் கொல்லாது குமரவேள் மூன் ஏகிலேன் என்றது) யுத்த—136, 221.
,, சயந்தனைச் சிறையிற் காண்பது—மகேந்-7—32.
,, சிங்கமுகாசுரனுல் உதயகிரியிற் கட்டியடக்கப்பட்டது-யுத்த-269.
,, சிங்கமுகாசுரனுடைய பிள்ளைகள் நூற்றுவரை அட்டது-யுத்த-260-261.
,, சிங்கமுகாசுரனேடு போர்-யுத்த—238, 261, 269.
,, சூரனது மன்றத்தை அழித்தது-மகேந்—49.
,, சூரனுடன் போர்-யுத்த-98-105, 307.
,, சூரனுடைய சபையில் சிம்மாசனம் வரப்பெற்றது—மகேந்-34, 40.

,, தம்பியர்எழுவர் மாண்டவரை அந்தகனுக்குச் சீட்டு எழுதி மீண்டும் வரப்பெற்றது-யுத்த167–172.
,, தருமகோபனை அட்டது-யுத்த–200.
,, தாருகனுடன் போர்-உற்ப-114-119.
,, தான் யாரெனச் சிங்கமுகாசுரனுக்குக் கூறுவது –யுத்த–263.
,, தான் யாரெனச் சூரனுக்குக் கூறுவது-யுத்த-100.
,, துதி-பாயிர-6
,, தூது சென்றது (சூரனிடம்)-மகேந்-1-173.
,, நாரதர் வேள்வியில் வந்த ஆட்டைப் பிடித்துக் கந்தவேளிடம் விடுதல்-உற்ப-86.
,, நூற்றுவரை அட்டது-யுத்த-260-261.
,, பானுகோபனுடன் போர்-யுத்த-40, 60, 210, 220.
,, பானுகோபனை அட்டது-யுத்த-214–220.
,, முருகவேளிடம் தாரகன் ஏவிய சிவன் படையைப் பெறுதல்-உற்ப-140.
,, முருகவேளிடம் வேண்டின வேண்டுகோள்-யுத்த-225.
,, யாளி முகனை அட்டது-மகேந்-70–72.
,, வச்சிரவாகுவை அட்டது–மகேந்-55-68.
,, வீரசிங்கனை அட்டது-மகேந்–10.
,, வேள் மந்திரம் செபித்துச் சிறை காவலரை மயக்கிச் சயந்தனது சிறைச்சாலையிற் புக்கது-மகேந்-28
வீரவாகு முதலியோர்-
—கிரவுஞ்ச மாயையிற் பட்டதும் மீள்விக்கப் பெற்றதும்–உற்ப-119, 138.
—சிங்கமுகாசுரனுடைய மாயா பாசத்திற் கட்டுண்டதும், மீட்கப்பட்டதும்-யுத்த-269, 279.
—சூரனது இந்திர ஞாலத் தேரால் கட்டப் பெற்றதும் மீட்கப் பெற்றதும்-யுத்த-321.
—பானுகோபனது மாயா பாசத்திற் பட்டதும் மீள்விக்கப்பெற்றதும்-யுத்த–133–135.

வெண்காட்டில் ஐராவதம் பூசித்ததும்-அற்ற தந்தங்களைப் பெற்றதும்-அசுர–147.

வேடர்கள் சேவல் ஒலி செய மாண்டது-தக்ஷ-204.

வேல்–

கிரவுஞ்சத்தை அட்டது-உற்ப–138.

சூரனை அட்டது-யுத்த–328-329,

தாரகனை அட்டது-உற்ப-138.

வீரவாகு முதலியோரை கிரவுஞ்சத்தினின்றும் மீட்டது-உற்ப–138.

வீரவாகுவை–பானுகோபனது மாயா பாசத்தினின்றும் மீட்டது–யுத்த–135

வேலின் செய்கை-உற்ப-138 ; யுத்த-329.

—o—

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
51	20	தோல்முன்	தோல்முகன்
67	34	படத்தால்	படலத்தால்
71	30	அடங்	அடங்க
90	28	திருவச	திருவாச
97	5	அலர்வது	உலர்வது
101	4	துண்ணன்று	துண்ணென்று
115	26	கவகமா	ககனமா
127	27	வெடிக்குறல்	வெடிக்குரல்
168	30	தொழில்	தொழில் கொண்ட
178	19	தன்குமா	தன்குமர
180	33	அம்முருக	அம்முருகக்
183	34	துணை	துளை
210	20	மஞ்ழ	மஞ்ழ
213	24	ஓரிறையின்	ஓரிறையின்
216	13	அந்த தேகி	அந்த வேகி
233	8	விளக்குபு	விலக்குபு
242	30	கம்மியின்	கம்மியன்
243	15	ஏறித்	ஏறிக்
257	5	உயிர்தொகை	உயிர்த்தொகை
265	3	சிந்வைய	சிந்தைய
..	9	மறுத்தி(து)	மறுதி(து)
288	5	உயிர்தொகை	உயிர்த்தொகை
302	1	நுதலிகண்	நுதலின்கண்

க

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

செய்யுள் முதற்குறிப்பகராதி

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
அக்காலேதன்னி	221	அங்கொருபூங்	17	அந்தவமையங்	60
அக்காலே வேழ	97	அடித்தகரங்	131	அந்தவேலேசீறி	216
அங்கணவ்	142	அடித்தும்	127	அந்தவேலே	266
அங்கணிது	80	அட்டதுபின்னர்	126	அந்தவேலேயில்	197
அங்கண்	30	அட்டவதற்	127	அந்தவேலேயில்ஆ	291
அங்கண்இறங்	130	அணியார்முரு	45	அந்தவேலேயில்	210
அங்கதற்கி	114	அணியுமிந்து	263	அந்தவேலேயில்	280
அங்கதன்மீ	115	அண்டர்கம்மியன்	320	அந்தவேலேயில்	287
அங்கதுகாலேயில்	318	அண்டர்கள்	242	அந்தவேலேயில்	185
அங்கதுசூரன்	108	அண்டர்சூழ்	115	அந்தவேலேயிற்	156
அங்கதுபின்	112	அண்டர்சூழ்தார	264	அந்தவேலேயிற்பூ	200
அங்கதுபின்	45	அண்டர்புகழ	61	அந்தவேலேயில்	142
அங்கதுபோ	132	அண்டர்பொய்	205	அந்தவேலேயில்	278
அங்கதைவிஞ்சி	52	அண்டர்போற்ற	249	அந்நகரிலுள்	58
அங்கவர்கள்	66	அண்டர்வெரு	131	அந்நாளில்	92
அங்கவன்	66	அண்ணல்நினைந்	24	அந்நிலேதன்	34
அங்கவன்	80	அத்தகரைப்பரி	44	அந்நேரத்தினி	40
அங்கவன்	115	அத்தநினே	41	அப்படிஉரைத்	137
அங்கவன்	131	அத்தமுஞ்	7	அப்பான்மை	47
அங்காரும	121	அந்தணனுக்	45	அப்பொழுது	55
அங்காழிப்பவடை	302	அந்தராகத்து	251	அப்பொழுது	65
அங்கிருந்த	179	அந்தமகலோக	80	அப்பொழுது	79
அங்கிவையாதி	128	அந்தமில்வளங்	62	அப்போதினில்	46
அங்குலவும்	215	அந்தரமீதுறும்	39	அப்போதினிஅ	235
அங்குளகடன்	57	அந்தரிதங்கிய	305	அப்போதுசீறி	180
அங்குறு	132	அந்தரியோடு	38	அப்போதுமக	108
அங்குற்றபேர்	107	அந்தவமையத்	57		

அப்போதுமற் 134
அப்போதுமா 106
அப்போதுதன் 220
அப்போதுதன் 296
அம்புவி அழுந் 49
அம்மைஎடுத்துழி 37
அம்மைதன் 288
அம்மைபணிந் 295
அம்மொழிவழங் 68
அரிமுகன்ஆதி 89
அருத்திதன்னு 267
அருத்திபொருந் 319
அருந்தவன் 72
அருந்திறல் 62
அருமறையின் 18
அல்லிமாமலர் 255
அல்லோடுநிகர் 101
அவ்வாறுகண் 303
அவ்விடையில் 314
அவ்விடையின் 81
அவ்வேலையோர் 98
அவ்வேலைவேலை 303
அறந்தான்ஒவிய 298
அறிந்தானதன் 154
அறிந்தமாருத 155
அறைகின்ற 103
அறைந்துபோர் 200
அற்றமது 132
அற்றமறு 64
அற்றமறும் 78
அற்றமற்ற 145
அற்றமற்றமகிழ் 244
அற்றயில் 138
அற்றவேதனில் 179
அற்றவேலைஅவு 145
அற்றவேலைதனி 175
அற்றவேலையிற் 199
அனையசின 9
அனையகாலையி 212
அனைவர்க்கும்அ 240
அன்பிலொடு 70
அன்பொடுமற் 42
அன்பொடுவிடுத் 208
அன்னகாலைஅமர 251
அன்னகாலைஅவு 146
அன்னகாலையில் 154
அன்னகாலையில் 210
அன்னகாலையில் 285
அன்னகாலையில் 209
அன்னசெயல் 58
அன்னதியற்றலு 307
அன்னதுகாலையி 288
அன்னதுகா 132
அன்னதுதெரிந் 255
அன்னதுபின்பு 313
அன்னதுபின்னர் 109
அன்னதோர்கா 206
அன்னபொருள் 72
அன்னபொழுது 296
அன்னபோதிசை 270
அன்னபோதில் 151
அன்னபோதில் 300
அன்னபோதினி 246
அன்னபோது 189
அன்னமாத 26
அன்னமைந்தர் 90
அன்னவஞ்சன் 173
அன்னவர்ஒவித் 232
அன்னவர்தம்மை 311
அன்னவனுரை 252
அன்னவனை 119
அன்னவாகனத் 256
அன்னன்இலங் 133
ஆகமீது 152
ஆங்கதற்கிடை 84
ஆங்கதுகாலையில் 311
ஆங்கதுபின் 13
ஆங்கமலன் 21
ஆங்குதன்மனை 143
ஆசறு நல்லறிவு 304
ஆசிவருள் 57
ஆசிலாமகுட 28
ஆசைகொண்டுய 241
ஆடல்கொண்டு 162
ஆடானமுக 107
ஆண்டுற்ற 99
ஆதரவின்திருமீ 312
ஆதலால்அவனை 255
ஆதலால்மீயும் 139
ஆதிக்குகன் 117
ஆதிநின்னருளா 289
ஆதிமுதல்வன் 266
ஆதிமைந்தன் 125
ஆதியருளுங்கும 215
ஆதியாகிப் 124
ஆதிவாழிய 323
ஆயகாலைஅவுண 147
ஆயகாலைமுருக 153
ஆயகாலைமூ 192
ஆயகாலையில் 210
ஆயதொருவேலை 61
ஆயபோதுகதி 178
ஆயவடன் 65
ஆயிரங்கணை 187
ஆயிரஞ்சர 200
ஆயிரம்பெருந் 155
ஆயிரம்யோசனை 208
ஆரல்மாதினையும் 259

ஆர்த்தபோதில் 146
ஆலமிடற்றுஎம் 296
ஆலமும்காலவே 112
ஆலயத்தின் 44
ஆலவனமாதிய 59
ஆவியென 77
ஆளிகளில 227
ஆறுமுகத்தன் 222
ஆறுந்தியமுடி 240
ஆறுலாவு 29
ஆனகாலையில்ஆர் 246
ஆனகாலையில்வே 197
ஆனவிச்செய 184
ஆனைதன்பின்ன 188
இக்காலம்நூறி 136
இங்குநம்முன் 290
இங்குநீஎன 42
இங்குநீஎமை 83
இச்செயல்கண் 184
இதுநிற்க 98
இத்தன்மைநிகழ் 47
இந்தமொழிகேட் 45
இந்தவகைவிற் 54
இந்தவாறுஇவன் 154
இந்தவாறுகண் 152
இந்தவாறுபுகன் 273
இந்திரகுமரன் 111
இந்திரற்பிடித் 90
இந்திரன் தனக் 137
இந்திரன்றன்இ 243
இந்துலாவுநெடு 293
இப்படியிப் 20
இப்பணியை 12
இப்பான்மைகண் 217
இப்பான்மைகே 122
இப்பான்மையில 238
இயம்புபோது 174
இரவியைத்தனே 143
இருங்கிள்ளைப் 23
இருதிறத்தரு 195
இருந்தகாலையில் 204
இலக்கவீரரும் 195
இலங்குதந்தம் 191
இவ்வகைஉல 141
இவ்வாறமலை 265
இவ்வாறுருகுஞ் 129
இவ்வாறிமையோ 268
இவ்வாறுகொடுத் 47
இவ்வாறுவானவ 298
இவ்வேலைதன் 218
இவ்வேலையிந்தி 81
இறந்தபேர்களுக் 193
இறந்தமிகு 56
இற்றவரை 16
இன்பாகியஅவு 235
இன்பாகியவெய் 181
இன்பார்அரன் 133
இன்பானஅமுத 95
இன்பானஇப்படி 136
இன்பானகயி 104
இன்புறுபரன்த 230
இன்புறுமுருக 205
இன்பொடுநின்ற 311
இன்னஇசைப்ப 306
இன்னசெயல்க 231
இன்னசெய்கை 162
இன்னதல்லது 298
இன்னதனமையி 249
இன்னதுநிகழ் 112
இன்னதையறிந் 208
இன்னபடிதான 227
இன்னபரி 8
இன்னபரிசன்ன 232
இன்னபான்மை 90
இன்னபான்மை 190
இன்னபான்மை 279
இன்னபான்மை 252
இன்னபான்மை 195
இன்னபோல 247
இன்னமொழி 24
இன்னருள்அரன் 76
இன்னல்கொண் 294
இன்னல்தீர 138
இன்னவாசகங் 84
இன்னவாள்நகர் 86
இன்னவாறது 158
இன்னவாறு 140
இன்னவை 113
ஈங்குஈது 181
ஈசனேஎள்ளிய 305
ஈடானஇங்கன் 219
ஈடுகொண்டிடு 281
ஈடுசெறி 52
ஈடுசேரவரு 163
ஈடுசேர்வீரன் 297
ஈண்டாகையால் 136
ஈதறிந்து 113
ஈதன்மைஇசை 48
ஈதிறைபுகறது 261
ஈதுகண்டவன் 198
ஈதுகண்டனன் 212
ஈதுகண்டுஅரி 158
ஈதுகண்டுஇலக் 148
ஈதுகண்டுதிற 162
ஈதுகண்டு 170
ஈதுசூறிந்து 91
ஈதுசெய்தலும் 193
ஈதுநின்றிட 27

ஈதுநின்றிட 243
ஈதுநின்றிட 277
ஈதுநின்றிட 282
ஈதுபுரிந்து 31
ஈதெலாங்கண் 187
ஈதெலாந்திறல் 191
ஈதையுமறிந்து 258
ஈமமாடல் 277
ஈரேழதான 222
ஈருனதற்ற 321
ஈனமில்குமரன் 215
உஞ்செழுந்தமம 304
உஞ்செழுந்தஇ 42
உதிரமோடுதன் 196
உத்தமனும்எத் 302
உத்திடும்ஆயி 128
உத்துநந்தி 177
உத்துற்ற 105
உம்பரை அலைத் 230
உம்பர்மன்னவன் 243
உய்வகைதந்திடு 320
உள்ளுற்றபூதர் 220
உற்றஇன்னது 287
உற்றகிரியி 49
உற்றசீர்முடி 204
உற்றசீர்வீர 116
உற்றதூதனும் 165
உற்றபொழுதிலக் 43
உற்றமுன்னுணர் 279
உற்றமைந்தனை 88
உன்தம்பியான 225
உன்தலைப்பரு 283
உன்னைநம்மெதிர் 262
உன்றனுடு 168
உன்னஅக்கினி 27
ஊரில்வீரன் 161
ஊறகன்றதீசி 275
எங்கட்கு 102
எங்கள்நாயன் 262
எங்கள்நாயகன் 208
எங்கள்நாயகன் 286
எங்கள்பிரான் 317
எங்குந்தனது 239
எங்கோனும் 104
எடுத்தெதிர்ந்தன 213
எண்டருங்புகழ் 194
எண்டவிர்அவ 109
எண்ணூர்வழுத் 106
எண்ணிகந்தநா 263
எண்ணிலொற்றர் 244
எண்மர்இலக்கர் 231
எந்தைகேள்ஒரு 270
எந்தைநின்னிட 256
எந்தையங்கு 283
எந்தையன்னை 248
எந்தையான 143
எந்தைவந்தது 271
எந்தைவேலுக் 125
எம்பரமன்இன் 230
எம்பிராட்டியை 265
எம்பெருமான்இ 317
எம்பெருமான்சி 303
எம்பெருமான்மு 22
எம்மையிங்ஙன் 275
எம்மொடும்ஒருவ 254
எய்திஆயிரம் 122
எல்லவரிடத்தும் 258
எழுந்தான்பரம 295
எழுந்ததந்தைத 199
எழுந்துதன் 109
எழுந்துமாயை 173
எள்ளுநீர்மை 272
எனவிதிபுகல 254
என்சொல்கேன் 269
என்றபின்பு 291
என்றயனிசைப் 254
என்றலும்அரிமு 207
என்றிடஅயனை 108
என்றிடஅனையர் 109
என்றிடலும்இன் 63
என்றிடலுமுன் 215
என்றிடலும்ஙகை 19
என்றிடலும்விசை 25
என்றிவைகுயர 205
என்றிவையாவும் 306
என்றீதுசிங்க 136
என்றீதுரைப்ப 219
என்றுகூற 124
என்றுகூறி 267
என்றுசொற் 185
என்றுபல 53
என்றுபற்பல 122
என்றுபற்பல 292
என்றுபின் 49
என்றுபுகன்றவ 315
என்றுவன்திற 139
என்றுழியளித்த 205
என்றேபலபுத்தி 68
என்னலும்அன் 314
என்னவிடை 296
என்னவிது 49
என்னவேகுகனை 137
ஏகித்திறல் 236
ஏங்குரூவிடை 29
ஏதமற்றிடு 292
ஏதமில்நீரின் 112
ஏதுபுரிவாயென்ன 44
ஏருமும்அருந்தவ 74

ஏவல்செய்குழல் 88
ஏவைமுனிந்தோ 310
ஏழையேன்தடுப் 143
ஏறதேறினன் 28
ஏறிநின்ற 157
ஏறுற்றதேவ 180
ஏனல்அழிந்திட 313
ஐந்துட...க்லே 259
ஐந்துட...பக 260
ஐயஅவனுய்ய 304
ஐயனே இழந்த 69
ஐயன்சினந்து 221
ஒப்பானதற்ற 97
ஒருதருப்பை 9
ஒல்லையில்வேல 317
ஒற்றிதுசொற்றி 49
ஒற்றைஞகிடைந் 124
ஒன்றுபங்குனியில் 27
ஒன்றுமேவிய 262
ஒன்னலார்சோரி 10
ஓங்கியஇதுபுக 207
ஓங்குபூதர்கள் 195
ஓங்குதுயர் 226
ஓங்குமறையுணர் 12
ஓங்குமகக் 303
ஓடியவிண்ணவர் 34
ஓடியுற்றசெயல் 172
ஓதிதுநின்றிட 35
ஓவிலாவதனி 207
கடியதிரி 4
கடைகின்ற 102
கண்டசண்டன் 145
கண்டமீது 146
கண்டனர்வெகு 48
கண்டனன்இரு 301
கண்டனள்வள் 316
கண்டனள்வள் 313
கண்டனன்வீர 115
கண்டான்வெகு 180
கண்டான்இது 225
கண்டான்ஈது 299
கண்டிதுஅண் 164
கண்டுதிண்டிறல் 123
கண்டுமாதவர் 282
கண்டுவீரனே 192
கண்டுவென்றி 196
கண்ணதுபோது 79
கண்ணுதல்அகன் 77
கண்ணுதற்பரமற் 289
கண்ணுதற்பரன் 153
கதிர்கொள்வாளி 192
கந்தமாமலர் 154
கந்தன்இருந்திடு 131
கந்தன்எந்தை 151
கந்துகங்கள் 143
கரங்களோயறுப்ப 214
கரந்தான் 106
கரந்துமாயை 179
கருக்கடல்கடப் 59
கருக்கடல்முருக் 6
கருந்தாழகைக் 266
கல்லாமனத்தன் 218
கள்ளவஞ்சகன் 202
கற்பெருஞ்சிறை 249
கனத்ததேரி 165
கன்மாதுஇடங் 101
கன்னற்சிலே 32
கன்னிமாரிது 267
கன்னியிடம் 54
காசிலேழு 148
காசினியின் 233
காதன்மீக்கொள 264
காரிலகுபூதரொ 213
கார்ில்எகுவன 175
காலிற்கொன்றி 196
கால்கொண்ட 122
காவிநயனக் 297
கிட்டவந்திடுஞ் 202
குதித்துவந்து 147
குந்தவேலினை 209
குப்புற்றிடு 116
குன்றத்தைவென் 95
குன்றவர்வள்ளி 309
குன்றுநின்றவர் 41
கூடரியாயி 78
கூடிவாயு 167
கூவிளைத்தழை 245
கூறிதுநின்றிட 307
கூறுதற்கிசை 26
கூறுபிரம 14
கூற்றும்எனஒரு 238
கேடற்றமுனி 93
கைத்தனுத்த 160
கைத்தனுவினைத் 111
கையன்விடு 53
கொங்குப்பொழி 96
கொண்டவில் 160
கொற்பகட்டிலுற் 86
கொற்றமதற்ற 38
கொற்றமதுற்றி 318
கொற்றமுறு 68
கொன்பாவு 121
கொன்னுர்புகழ் 134
கொன்னுறுந் 174
கோடிகணை 54
கோடிவெம்பரி 156
கோரமான 151

கோலஞாலமொ 276
சுங்கத்தியின் 239
சங்கரன்மை 280
சங்கரன்முன் 18
சங்கோலிடுங் 93
சண்டவெங் 110
சந்தறுமுகத் 54
சம்புவகன்றுழி 319
சம்புவையன்பொ 306
சற்றுந்தகவில் 33
சாரதத்தானை 182
சாரதற்கு 182
சாற்றியிங்கு 119
சிங்காரமேவு 223
சித்திரங்கொள் 151
சிந்தைமகிழ் 120
சிரத்தினைக்காத் 206
சிலைவளைத்து 186
சிறந்தவீரரை 199
சின்மயத்தன்உ 269
சீகரமுலாவும் 229
சீதளகிரணத் 259
சீரணியும்முதலின் 5
சீரார்அடர்குலிச 322
சீரிலெழு 60
சீருலாவுதன் 204
சீர்கொண்டஅயி 100
சீர்கொண்டஆனந் 1
சீர்புரிந்திடும் 155
சீறியெம்பெருமா 273
சீறுதோன்முகன் 291
சீறுபூதர் 269
சூர்தரங்கொள் 144
சூதமுனி 9
சூரன்மைந்தன் 149
சூரன்மைந்தன் 150
செங்கமலவேத 227
செந்தேன்சுறும் 322
செம்மைகொள் 33
செயல்குணம்உ 261
செய்கையின்ன 168
செல்லாரும் 17
செறிந்ததோள்க 213
செறிந்துவில் 176
செறுத்தானேறி 299
செற்றமேவிய 198
செற்றமோடு 125
செற்றவெங்கணை 193
செற்றாராருந் 129
சென்றிடுவீர 115
சென்னிமுடி 50
சென்னியாருள 244
சேயிழைர்கதி 258
சேயெனமுன் 42
சேர்ந்தகாலை 156
சேனையான 144
சையமொத்த 176
சொற்றஇன்ன 290
சொற்றருமக 18
சொற்றரும்புகழ 273
சொற்றவாசகங் 84
சொற்றிடும் 308
சொன்னவை 114
சோதிமுன்னர் 271
சோரியொடுசோப 55
தக்கன்அப்பொ 266
தக்கன்றக்கனை 268
தடந்திகழ் 71
தடுத்துவேல் 169
தண்டருகொண் 40
தண்டருந்தொ 88
தண்டாதகொண் 121
தண்டாதகொண் 121
தண்டாமரையா 297
தண்டாவிறற்குல 298
தந்தம்பெரும் 134
தந்தால்இவண் 296
தந்திரங்கொள் 147
தந்திரமுறும் 234
தந்தைஇருந்திடு 129
தந்தையும்இல் 110
தந்தையுமன்னே 319
தந்தையைவணங் 112
தம்பிமடிவான 58
தருமகோபனே 196
தலைமைகொண் 144
தவளநித்திலச் 251
தற்றவுணர் 79
தனக்கிணை 7
தன்பதத்தால் 182
தன்னிகர்அண் 301
தன்னூருவிற் 101
தன்னைமதித்த 297
தாதார்மலர்க் 95
தாரகன்தன் 159
தாரணியின் 60
தாவிலும்பர் 250
தானவத்தலைவ 175
தானவன்அவரை 109
தானவன்விடுத் 208
தீண்டிறலின்ன 306
தீண்டிறற்படை 209
திருமருவு 16
தீங்கினர்கண்டு 128
தீதிலாவீரன் 189
தீதில்வீரவாகு 149
தீதில்வீரன்ஆயி 215
தீதில்மாதர்கள் 281

தீயவர்பண்ணே 127
தீயவனன்னபி 206
தீயிடைமடைந்த 75
துங்கமுறு 81
துங்கவெம் 188
துண்டங்கொடு 237
துண்டமாமதி 82
துதியார்கடத் 98
துறக்கவேந்தல் 252
தூற்றசோபம் 152
தூன்பங்கொண்டு 299
தூன்பந்தருந் 100
தூன்றேர்வஞக் 99
தூன்னுங்கர 118
தூன்னுவானவர் 242
தூயவீரன் 149
தூவியங்கத 163
தெண்டிரைகடு 50
தெண்டிரைக்கு 144
தெண்டிரைவா 133
தெரிந்தமகிழ்ந் 309
தெரிந்தமகிவ்வா 52
தென்பால்வடபா 29
தென்றிசையின் 56
தேடிமயல் 65
தேரழித்தஅவ 186
தேரழிந்திடலும் 160
தேரழியமுன்புரி 234
தேரழியவேறு 55
தேரிஞேடு 58
தேரின்மீதாரு 212
தேரைஞ்ஞூறு 129
தேரொடுவாளி 130
தேவர்குலப் 3
தேவர்தங்கள் 123
தேவர்வணங்கு 127
தேனமர்கொன் 305
தேனுலாந்தொ 251
தொழுதுவீர 191
நக்கன்தனேப்ப 295
நஞ்செயிற்று 276
நண்ணலன் 153
நண்ணினேய 52
நண்ணுதேரி 147
நத்தா...நாக 135
நத்தா...நாகர் 135
நந்தியெம்பெரு 260
நந்துறுதடப் 71
நலந்திருந்தும் 172
நலனுற்றபுலன் 94
நல்லதோர்நாணி 111
நற்போதம் 12
நற்றருமம் 73
நற்றெழில் 53
நன்புவி 6
நன்றிகொன்றிடு 275
நன்றிதுநன்றிது 314
நாகத்தில்உம்பர் 225
நாகவாயினும் 287
காடுபுகழ் 43
நாட்டியபுகழ் 114
நாயகனும் 25
நாரவெணி 27
நாலம்பால்வரு 41
நிற்கேதுவேண்டு 92
நின்றபூதரும் 300
நின்ருன்பரன் 294
நின்றிடஇனேய 261
நின்றுபுகழ் 11
நீடுகடல்களே 39
நீடுகைத்தலே 284
நீடுபல்படை 120
நீலன்மீது 145
நீவிர்கள்எவரும் 257
நீனிறக்கடமழை 87
நூருனபத்து 221
நூறுகொண்ட 126
நையுடைத்தவள 112
நொந்தனேந்தீர் 43
பகர்ந்தஇன்னது 284
பங்கமுளகொடு 119
பட்டழிஓரிறை 130
பண்டுபோல 267
பண்டெனவடாது 75
பத்தின்மேலுமங் 264
பரித்திவளங்கிள 62
பற்றினன்சில 211
பற்றுறுதந்தை 128
பன்னிருமொய்ம்பு 35
பாகுற்றமொழி 105
பாங்குகொண்டு 203
பாங்குறுங்காளி 188
பாதகர்ஆயிரர் 128
பாருலகமீதிலு 48
பாலனமொழிக் 229
பாலுவின்மாற்ற 205
பிடித்தாள்மற்று 299
பிணங்கள்சோரி 156
பிலத்தினிடை 232
பிள்ளேச்சந்திர 19
பிள்ளேத்தன்மதி 41
பின்புநாவலத் 85
பின்புமுன்பு 151
பின்புனது 120
பின்னரொற்றர் 274
பின்னர்ஒருநாள் 32
பின்னைதன் 96
பின்னிரதிதேற்ற 24

பின்னும்அக்கினி 89
பின்னும்அவுண 223
பின்னுமோர்நெ 150
புண்டரிகக்கடவு 13
புண்டரிகமா 195
புரமூன்றும் 14
புரிந்தயர்ந்தயன் 290
புரிந்திடலும் 21
புல்லியேதங்கை 112
பூசைபுரிந்து 30
பூண்டபோரிடை 190
பூமணம்புரி 248
பெண்ணினிக்கு 293
பெய்தேன்இத 265
பெருகுசோரிநீர் 201
பெற்றசீர்க்குலிச 114
பெற்றந்தனில் 268
பேரன்புபொருந் 46
பேராவிறலுறு 117
பேராவிறல்மலை 116
பொங்குகந்த 1
பொங்குகிரி 4
பொங்குதானை 91
பொற்கசடமீதிலு 51
பொன்முருங்கு 26
பொன்தருங்கும 295
பொன்னுடாஎங் 219
போதமுறு 5
போயமரர்க் 22
போரினில்எதிர் 50
போர்புரிந்து 185
மகம்புரிந்திடு 274
மகவேந்தன் 42
மகிழ்ந்துதாதை 178
மங்கலமொடங் 63
மங்கலில்கங் 34
மங்காதசிங்கன் 220
மங்குல்புரை 64
மங்கைஈசன் 251
மங்கைதன்னெடு 248
மஞ்சநெஞ்சகத் 199
மஞ்சுவாகன 91
மட்டிலாவு 167
மட்டுறுவிரைக் 298
மண்டபகோபுரம் 128
மண்டிருதிறக் 110
மண்டுதீவாளி 183
மண்டுபவக் 23
மண்டெழில்கொள் 74
மண்ணதனில் 76
மண்ணகியும் 237
மண்ணிலுலாவு 39
மண்ணிலோடும் 150
மருந்தானஇன்ப 321
மருமலர்தொடை 87
மருமலிந்திடு 292
மருவார்இதழி 31
மற்றதனைஈர 41
மற்றதின்ஒளி 51
மற்றதுபின்உந்து 56
மற்றதுபின்நான் 66
மற்றதுபின்பின் 10
மற்றவர்தங் 37
மற்றவன்மனைவி 256
மற்றவன்றனைக் 202
மற்றவவேலையில் 242
மற்றிணையில் 58
மற்றிதுநிற்க 305
மற்றிதுநின்றிட 132
மற்றிதைப்பதும 206
மற்றிவாறிவனிற் 282
மற்றிவ்வேலஅ 145
மற்றிவ்வேலைமி 171
மற்றிவ்வேலைவெ 217
மற்றுதூறு 152
மற்றுமுள்ள 85
மற்றெவர்க்கு 272
மற்றொருதேரில் 111
மற்றொருபெருந் 77
மற்றோர்வை 157
மனந்தனில் 69
மன்றல்மாமதுக் 83
மன்றற்சடங்கு 30
மன்னுகுகன் 181
மன்னிடும்புகழ் 203
மன்னியதவம் 68
மன்னியிடு 65
மன்னுகணை 55
மன்னுங்காதன் 266
மன்னுங்குடிலைப் 44
மன்னுதக்கனி 267
மன்னுதனுவிற் 228
மன்னுபற்பகல் 83
மன்னுவெற்பில் 250
மன்னுவெற்றி 165
மாசறும்அன்ன 36
மாசிலிமக்கிரி 37
மாசில்பெரும்புக 294
மாசுறென்பு 276
மாணனைஎழில் 104
மாணுறுந்திற 183
மாதவங்கொள் 26
மாதவம்எழிற் 67
மாதிறல்வச்சி 130
மாயமேசெயும் 192
மாய்ந்தவஞ்சக 193
மாரவேளை 279
மாரிஎனும்படி 316

மாருதவலவன் 59
மார்பிற்பொருந்தி224
மாலவன்கமடத் 278
மாலவன்றனை 85
மாலேதங்கிய 299
மாலைசேர்குழல் 280
மால்விட்டவும்ப 223
மால்படைத்த 164
மாவேலை 3
மாறவுணர்சேனை 214
மாறுகொண்டிரு 283
மாற்கரிய 2
மாற்றருங்கடல் 190
மாற்றிவஞ்சகன் 201
மான்மகன்மகன் 204
மிக்கஎற்பகை 177
மிக்கதோரின் 217
மிக்கமாயவன் 194
மிக்கவின்னது 245
மிக்கவேள்வி 271
மிடல்கொண்ட 99
மிண்டுகொண்ட 145
மின்னுதுசுப்ப 321
மின்னுரைவேதி 136
மின்னிகர்சடில 141
மின்னுலாம்தனி 116
மீனஞ்சுமந்து 135
முக்கண்நாயகன் 288
முச்சிரமுள்ள 181
முடிவானகொடி 96
முந்திவந்து 161
முந்துநொந்திடு 300
முந்துறநிகழ்ந்த 207
முந்தேபொருந் 100
மும்மையாயிரம் 194
மூரண்தரும் 177
மூறித்தபின் 130
மூற்காலத்தரன் 11
மூற்பகல்மணத் 73
மூற்றுணர்சிங்க 139
மூன்பொருபகலி 253
மூன்னமொரு 61
மூன்னமோர்பகல் 82
மூன்னர்ஓர்பகல் 288
மூன்னுள்முருந் 321
மூன்னெனஅட 74
மூசிசாலிகை 156
மூண்டகோப 168
மூதண்டமளாவு 236
மூளுகின்ற 270
மெத்தும்இன்ப 323
மெத்துமுருவத் 51
மெத்தும்அத்திர 159
மெய்த்தவம்புரி 257
மெய்ப்பாணிபின் 222
மேகவாகனன் 245
மேதகும்ஈரதன் 316
மேதகும்அரிக்கும் 53
மேயும்அப்படை 176
மேவுற்றஇதுதன்107
மேவொருநாள் 308
மேனலங்கொள் 144
மைந்துற்றசேவ 322
மையலெதாழிந்தி 55
மையவுணர்சே 228
மையிலாத 146
மையுறுதடங்கண் 57
மொய்ம்புடைய 51
மொய்வளர்அமர 253
யாவரேனும் 169
வஞ்சகன்ஈது 169
வண்டார்தொ 321
வண்டுபடிந்த 301
வண்டுலாவரும் 154
வண்மைதங்கு 241
வந்தசரங்களே 130
வந்தபடைகந்த 234
வந்தமதன் 22
வந்தவச்சிரம் 197
வந்தவந்த 153
வந்தளப்பில் 148
வந்துகணப்படை306
வந்துசிலபுந்தி 71
வந்துசெருத்த 310
வந்துதக்கனது 274
வந்துதக்தை 191
வந்துநந்தி 27
வந்துபட்டகதிர் 164
வந்துபரனேப் 29
வந்துமன்னவன் 123
வந்துவிரைந்து 127
வந்தெதிர்ந்த 147
வந்தெதிர்புகுந் 50
வரையற்றுவந்த 223
வரையிலோடுமா 203
வல்லியமிடற் 60
வளங்குலவு 15
வளருகின்றதுங் 86
வளர்ந்தபின்பு 285
வள்ளியைநோக் 312
வற்றுதுறு 117
வன்புற்ற 105
வன்மைகொண் 170
வன்றவஉசத் 70
வன்னிசேர்மா 189
வாங்கழல்மிடற் 62
வாரணத்திரு 246
வாரணமுகத் 50

வாரிமன்னவற்	142	வீசலுற்ற	148	வெம்பதிஞயி	130
வாலுற்றதண்	135	வீசுபுகழ்	43	வெய்யசூர்	216
வாவிநூறு	152	வீரம்வீரர்	150	வெய்யவதன்	43
வாளதுபிடித்து	214	வீரரில்வீரன்	131	வெய்யனுக்கு	186
வாளிபட்டிடப்	200	வீரவாகுஎதிர்	174	வெவ்வேள்ஆகும்	40
வாள்கொண்டு	118	வீரவாகுஎன்	120	வெள்ளியெனுங்	307
வானகத்தெழும்	89	வீரவாகுவும்	166	வெள்ளிவரை	20
வானேர்தமைக்	133	வீரவேற்கை	323	வெள்ளிவெற்பி	286
விடுத்தவைதடுத்	214	வீரனேவலின்	300	வெள்ளைவாரண	110
விட்டஇன்னவை	211	வீரன்தனைநோக்	297	வெற்றிகொள்	108
விட்டபோது	151	வீழும்அன்ன	163	வெற்றியனிகஞ்	61
விட்டவாளிகள்	126	வீறுமவ்வெற்பி	94	வெற்றிபுற	49
விட்டவாளிபட்	196	வீறும்ஒருகிரி	118	வெற்றிவேலு	190
விட்டவிட்ட	157	வீறுனதண்டு	224	வென்றிகொண்ட	166
விட்டவெம்	171	வீறுனதாரகனை	132	வென்றிகொள்	315
விட்டிடலும்	51	வீறியமகவான்	111	வென்றிபுனை	56
விண்டுஅருள்	23	வீறிவந்திடு	156	வென்றியுறுகுமர	45
விண்டோய்கயி	268	வீறிவந்திடு	209	வென்றியுறுதந்	17
விண்ணவர்கள்	11	வீறிவருதானவர்	228	வேங்கைதன்னை	281
விண்ணுலாம்	250	வீறுகாளியொடு	300	வேதமேவுதிரு	28
விண்ணேர்கள்	103	வீறுகின்றதொ	170	வேதனூரிஞில்	211
விண்தொடுகயி	261	வீறுகின்றபடை	216	வேதனெனுமாத	226
விண்தொடுவள்	310	வீறுகொண்ட	142	வேதன்மான்முத	277
வித்தகமங்கை	36	வீறுசிங்கன்	159	வேதன்முன்	149
வித்தஞ்சினந்து	92	வீறுதங்கிய	293	வேலன்எவலின்	247
விரிகின்றகடற்	8	வீறுமின்னது	286	வேலனையன்பொ	315
விரித்திடும்	87	வீறுபெற்பெலா	192	வேலன்சொரி	237
விரிபதுமத்திரு	20	வீறுறென்று	94	வேல்வாழி	322
விருத்தையுயிர்	73	வெங்கணைகளு	53	வேளைகேட்டுழி	285
விரைத்தார்மி	134	வெங்குருவிற்	4	வேளையெரித்த	32
வில்லார்கன	180	வெஞ்சமர்செய்	305	வேறுதேர்அவு	161
விழுந்தனன்	70	வெந்திறல்கொள்	172	வேறுபதிஞயிர	76
விழுந்தான்வேத	298	வெந்திறல்கொள்	150	வேறும்அநேக	129
விழுந்துமண்மி	197	வெந்திறல்கொள்	56	வைத்துமெய்ப்	28
விற்றுணித்து	148	வெந்திறல்லொள்	231	வையமிசைவந்த	233

உ

செந்திலாண்டவன் துணை.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவராக
எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

தமிழ்க்கல்வி, சைவசித்தாந்தம், தேவாரத் திருமுறைகள் இசைத்தமிழ், அன்னதானம், வைத்தியம் இவற்றின் அபிவிருத்திக்காகவும் பொது மக்களின் அனுகூலத்துக்காகவும் மனமுவந்து அமைத்திருக்கும் பேரறக் கட்டளைகள்

தொடர் எண்	தரும விவரம்	மூலதனம்
		ரூபாய்
1.	சிவஞானசித்தியார் உபன்னியாசக் கட்டளை அண்ணுமலைப் பல்கலைக் கழகம் ...	15,000
2.	கொட்டையூரில் நடுத்தரக் கல்விச்சாலை ஏற்படுத்த	11,500
3.	திருவாங்கூர் மகாராஜா தேவாரப் பரிசு ...	5,000
4.	சேரமான் பெருமாள் தேவாரப் பரிசு ...	5,000
5.	மூவர் தேவாரப் பரிசு ; சிகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள் ...	10,000
6.	ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தப் போதகாசிரியர் நியமிக்க ...	60,000
7.	அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த உபகாரச் சம்பளம் அளிக்க ...	30,000
8.	திருப்பனந்தாளில் தமிழ்க் கல்லூரி நிறுவ ...	1,50,000
9.	இசைத் தமிழ்க் கல்விக்கு ...	1,00,000
10.	திருப்பனந்தாளில் கால்நடை வைத்தியசாலை ஏற்படுத்தவும், குடந்தைக் கல்லூரியில் உபகாரச் சம்பளமளிக்கவும் ...	20,000
11.	ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னதானம் ...	10,000
12.	இராமேசுவரத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னதானம் ...	10,000

13.	திருநள்ளாற்றில் ஆவணி மூல அன்னதானம் ...	3,000
14.	ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம் ...	17,000
15.	திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் உணவு நிதி ...	1,00,000
16.	திருப்பனந்தாளில் ஜன வைத்தியசாலை நிறுவ நிலப்பெருமானம் ...	66,000
17.	திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் கேதாரகட்டம் ...	2,900
18.	திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் அரிச்சந்திர கட்டம் ...	3,300
19.	கும்பகோணத்தில் மணிக்கூண்டு ...	25,000
20.	தஞ்சையில் காச நோய் வைத்தியசாலை ...	28,500
21.	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபரர் நினைவு நாள் அன்னதானம் ...	9,000
22.	மைசூர் மகாராஜா தேவாரப் பரிசு ...	5,000
23.	தருமை ஸ்ரீகுருஞான சம்பந்த சுவாமிகள் நினைவு தேவாரப் பரிசு, மாயூரம் ...	5,000
24.	சென்னை விவேகாநந்தா கல்லூரியில் ராஜாஜி சைவ சித்தாந்தக் கட்டளை ...	10,000
25.	ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சர். எஸ். ராதாகிருஷ்ணன் சைவ சித்தாந்தக் கட்டளை ...	20,000
26.	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, ஸ்ரீவைகுண்டம் ...	5,000
27.	மதுரைத் திருமலை நாயக்கர் தேவாரப் பரிசு ...	10,000
28.	ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் – ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், திருநெல்வேலி மாணவிகட்கு ...	1,00,000
29.	ஸ்ரீ காசியில் மகாத்மா காந்தியடிகள் நினைவு அன்னதானம் ...	5,000
30.	ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் – ஸ்ரீ காசி, மதுரை, குடந்தை மாணவிகட்கு ...	1,50,000
31.	டாக்டர் சுவாமிநாத ஐயர் நினைவுத் திருக்குறட் பரிசு, சென்னை. ...	3,500
32.	குடந்தையில் காந்தியடிகள் பசுப் பரிசு ...	1,000
33.	காந்தியடிகள் நினைவு அரியநாயகிபுரத்தில் ஹரிஜன மாணவ உபகார நிதி ...	3,000

34.	ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நித்திய மகேசுவர பூசை ...	10,000
35.	திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமிக்கு வெள்ளிக் கவசம் ...	4,000
36.	விஷ்ணுபுரத்தில் ஹைஸ்கூல் படிப்பக நிதி ...	1,000
37.	குடந்தையில் ராஜாஜி அபிராமிஅந்தாதிப்பரிசு...	3,500
38.	திருநெல்வேலியில் ஸ்ரீ அரியநாயக முதலியார் நினைவு அபிராமி அந்தாதிப் பரிசு ...	3,500
39.	திருப்பனந்தாளில் அப்பூதி அடிகள் நினைவு தண்ணீர்ப் பந்தல் தருமம் ...	3,500
40.	ஸ்ரீவைகுண்டத்தில் படிப்பக நிதி ...	3,500
41.	சிதம்பரம் உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கு உணவு நிதி ...	35,000
42.	சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை, ஆனி உத்தர நாட்களில் அன்னதானம் ...	12,000
43.	இராமேசுவரத்தில் ஆடி, தை அமாவாசைகளில் அன்னதானம் ...	3,500
44.	ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நூல் நிலையக் கட்டிடம் ...	17,825
45.	பஞ்சாப் அகதிகளுக்கு நன்கொடை ...	5,000
46.	அரியநாயகிபுரத்தில் நூல் நிலைய நிதி ...	3,500
47.	ஸ்ரீ காசி கேதாரீசுவரர் கோயிலில் ஸ்ரீகுமாரசாமி அன்னதானம் ...	5,000
48.	ஸ்ரீ வில்லிப்புத்தூரில் தேவாரப் பரிசு ...	3,500
49.	திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி கோயிலில் மின்சார தீபம் போட ...	7,500
50.	காஞ்சியில் மூவர் தேவாரப் பரிசு ...	5,000
51.	திருவஞ்சைக்களத்தில் சேரமான் பெருமாள் நினைவு அன்னதானம் ...	7,000
52.	28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்-ஸ்ரீவைகுண்டம் உதவி நிதி ...	18,500
53.	30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்-ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்திற்கு மூன்றுண்டு மூலதனம் ...	21,000
54.	28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்-திருச்செந்தூர் உதவி மூலதனம் ...	15,000

55.	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர-சுவாமிகள் படிப் பகப் பராமரிப்புக்காகக் கட்டிடமும் நிலமும் ...	15,000
56.	மாளவியாஜி பெயரால் கல்கத்தா, டெல்லி, அலகபாத், லக்னே, ஆக்ரா, அலிகார் முத லிய பல்கலைக் கழகங்களில் சைவ சித்தாந்த உபன்னியாசக் கட்டளை ...	5,000
57.	ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்–சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர் ...	60,000
58.	திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் சோமேசர் ஸ்நான கட்டம் நிறுவ ...	2,275
59.	ஸ்ரீவைகுண்டத்தில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி நிறுவ ...	45,000
60.	ஸ்ரீவைகுண்டம் தேவார மாணவர்கள் காசி யாத்திரை நிதி ...	5,000
61.	பனசைக் கல்லூரியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பரிசு ...	5,000
62.	(6) ஸ்ரீகாசிப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த நிதிக்கு அதிகப்படியாக அளித்தது ...	16,000
63.	30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்– மதுரை முதலாண்டு உதவி மூலதனம் ...	7,000
64.	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவிகள் ஹாஸ் டல் ஏற்படுத்த நன்செய் நிலக்கிரயம் ...	14,000
65.	28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்– ஸ்ரீவைகுண்டம் வகையரா-திருநெல்வேலி முத லாண்டு உதவி மூலதனம் ...	5,000
66.	30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்– ஸ்ரீ காசி வகையரா-கும்பகோணம் முதலாண்டு உதவி மூலதனம் ...	7,000
67.	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் ஆண் கள் உயர்நிலைப் பள்ளிக்கு நன்கொடை ...	10,000
68.	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் மடத் திற்கு அச்சகம் வாங்க நன்கொடை, கட்டிடம் உள்பட ...	27,975
69.	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் பெண் கள் உயர்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு உபகாரச் சம்பளமளிக்க நெல்லை ஜில்லாபோர்டாரிடம்...	10,000
70.	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்	

	ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு இடம் வாங்க நன்கொடை ...	3,000
71.	ஸ்ரீ காசியில் இந்தியக் குடியரசு தின அன்ன தானம் ...	10,000
72.	ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு மாணவர்கள் உணவு நிதி ...	1,50,000
73.	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்திற்குப் பன்னிரு திருமுறைகள் அச்சிட நிலப் பெறுமானம் ...	50,000
74.	சண்டேசுவர நாயனார் நினைவு தண்ணீர்ப்பந்தல் தருமம் திருவாப்பாடி ...	3,500
75.	காஞ்சீபுரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவு உபகாரச் சம்பள நிதி ...	7,000
76.	திருச்செந்தூரில் ஸ்ரீசெந்திலாண்டவன் தேவாரப் பரிசு நிதி ...	5,000
77.	சென்னையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுத் திருக்குறள் பதிப்பு நிதி ...	35,000
78.	ஸ்ரீவைகுண்டத்தில் மங்கையர்க்கரசியார் நினைவுப் பரிசு நிதி ...	3,500
79.	கும்பகோணம் தாலூகா மேலச் சூரியமூலை கண் டியன் பழவாற்றின்மீது பாலம் கட்ட ...	6,920
80.	ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தண்ணீர்ப்பந்தல் தருமநிதி ...	3,500
81.	பழுத்த தமிழ்ப் புலவர் காசி யாத்திரை நிதி செந்தமிழ்க் கல்லூரி திருப்பனந்தாள் ...	5,000
82.	திருச்செங்கட்டாங்குடியில் சிறுத்தொண்டர் நினைவு அன்னதானம் ...	7,000
83.	திருவஞ்சைக்களத்தில் ஸ்ரீ சேரமான், சுந்தர மூர்த்தி நாயனார் நினைவு வாசகசாலை நிறுவ ...	5,000
84.	திருநாரையூரில் ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகள் நினைவுத் திருமுறை நிதி ...	35,000
85.	இராமநாதபுரத்தில் ஸ்ரீ தாயுமானவர் சன்மார்க்க சங்கநூல் நிலைய நிதி ...	5,000
86.	லால்குடியில் ஸ்ரீ காரைக்கால் அம்மையார் நினைவு மாணவிகள் உபகாரச் சம்பள நிதி ...	15,000
87.	அவிநாசியில் முன்னூல் அணியும் கலியாண நிதி ...	5,000

88.	குடந்தையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு ...	5,000
89.	திருப்பூந்துருத்தியில் அப்பர் நினைவு அன்னம் பாலிப்பு ...	15,000
90.	திருநெல்வேலிஜில்லாவில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தமிழ்ப் பரிசு ...	5,000
91.	ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்தர் நினைவுப்பரிசு, ஸ்ரீவைகுண்டம் ...	3,500
92.	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம், இராமேசுவரம் ...	3,500
93.	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்ன தானம், சென்னபுரி அன்னதான சமாஜம், சென்னை ...	5,000
94.	காசியில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவு அன்னதானம் ...	5,000
95.	திருச்செந்தூரில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம் ...	5,000
96.	திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் நினைவுப் பரிசு நிதி ...	5,000
97.	திருநாரையூரில் ஸ்ரீகுருஞான சம்பந்த சுவாமிகள் நினைவுக் கட்டிடம் நிறுவ ...	3,750
98.	திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீ ஆதி குமரகுருபரசுவா மிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு நிதி ...	5,000
99.	தஞ்சை, கலைக்கூடத்திற்கு நன்கொடை ...	5,000
100.	மணிக்குடியில் கடவூர்க்கலயர் புனற்பந்தர் நிதி	3,500
101.	காசியில் ஸ்ரீமாசிலாமணித் தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் நினைவு அன்னதானம் ...	5,000
102.	திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகத்தில் திருவள் ளுவர் நினைவுப் பரிசு ...	5,000
103.	ஸ்ரீ காசியில் கமலை ஞானப்பிரகாசர் நினைவு அன்னம் பாலிப்பு ...	5,000
104.	திருச்செந்தில் ஐக்கிய வேளாள சங்க நூல் நிலையப் படிப்பக மூலதன நிதி ...	5,000